JL
V21194:19(ZJm)m,
N39
N42
69405

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் மார்ச்சு மீ 7உ [நெ. 85

## சைனா தினக் கொண்டாட்டம்.

இந்தியாவுக்கும் சைனாவுக்கும் ஏற்கனவே இருந்துவரும் சிநேகத்தை முன்னிட்டும், இனிமேலும் இருநாடுகளுக்கு ஓயாத நட்பு இருக்குமென்பதை ஊர்ஜிதப்படுத்தவும் சைனா தினம் இந்தியா பூராவும் இன்று கொண்டாடப்படுகிறது. உயர்வான சீன மக்களுடைய பெருமைக்கும், மகிமைக்கும் உவக்கும்படி எல்லாவித கௌரவங்களுடன் இத்தினம் கொண்டாடப்படும். அதிகமான யந்திர சாதனங்களை உபயோகித்து கொள்ளைத் தொழிலில் ஈடுபட்ட ஜப்பானியர்களை எதிர்த்து சண்டைசெய்து சீன மக்கள், தங்களுடைய நாகரீகத்தையும், புராதனமான கௌரவத்தையும் நிலைநாட்டிக்கொள்ளுகிறார்கள். யாவரும் மெச்சத்தகுந்த விதமாக, கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு அதிக தைரியத்துடன் சண்டை செய்து வருகிறார்கள்.

மேலும் இந்தியாவுக்கும், சைனாவுக்கும், தொண்டுதொட்டு ஒரு கௌரவமான நிலையுண்டு. இவை இரண்டும் மனோநிலையாலும் பயிர்ச்சியாலும் ஆசியா நாடுகளுக்கு இயற்கையான புத்திசாலித்தனம் பெற்றவர்கள் வசிக்கும் நாடுகள். ஆசியாவில் ஜப்பானும்தான் இருக்கிறது. இருந்தாலும் ஜப்பான் நற்குணங்களை இழந்து, "சக்ரவர்த்திதான் பெரியவன், ஷின்டோ

வீதம், பொது க்ஷேமம்" என்ற பயங்கரமான கொள்கைகளைப் பின்பற்றுகிறது. மேலும் கொடுங்கோல், கொடுமை, துரோகம் முதலிய துர்க்குணங்களை அடைந்திருக்கிறது.

இந்தியாவுக்கும் சைனாவுக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையைத் தெரியப்படுத்தவே சமீபத்தில் மேன்மை தங்கிய வைஸிராயும், சேனாதலைவரான சயாங் கை ஷெக்கும் டெல்ஹியில் கூடிப்பேசினார்கள். அட்லாண்டிக்கில் ரூஸ்வெல்ட்—சர்ச்சில், கூடிப்பேசியதையும், மாஸ்கோவில் ஸ்டாலினுடன் பேசியதையும், 26 நேசநாடுகள் ஒன்று சேர்ந்ததையும், 21 அமெரிக்க நாடுகள் ஒன்று கூடியதையும் இதற்கு ஒப்பிடலாம். முடிவான வெற்றியடையும்வரை சண்டைசெய்து எதிரிகளைத் தொலைப்பதற்காகவே இவ்வித கூட்டங்கள் நடைபெற்றன. தர்மத்தை நிலைநாட்டி அதர்மத்தைத் தொலைப்பதற்காக ஆசியா நாடுகள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பூர்வாங்கமாகவே டெல்ஹியில் நடந்த பேச்சுவார்த்தைகளைச் சொல்லலாம்.

ஜப்பான் முதலிய எதிரிகளால் ஏற்படக்கூடிய துன்பங்களை உணர்ந்து அவைகளை நிராகரிக்க சைனா தனது நாட்டை புனருத்தாரணம் செய்திருக்கிறது. சைனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள ஹிமாலய மலையின் வழியாக புதிய ரஸ்தாக்கள் போடப்பட்டு தரை, விமானமூலம் சாமான்கள் அனுப்பப்படுகின்றன. இவ்விதம் இந்த இருநாடுகளுக்கும் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய சம்பந்தத்தின் பயனாக ஆசியாவில் புதுமைக்கு முட்டுக்கட்டையான ஜப்பானை அடியோடு அழிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

சைனா, எவ்வளவோ ரிஷிகளும், வேதாந்திகளும், தேசாபிமானிகளும், வீரர்களும், வசிக்கும் நாடு. அப்பேர்ப்பட்ட நாட்டின் வீரத்தனத்திற்கேற்றவாறு நாமும் நமது தெய்வீக சக்தி, பயிற்சி முதலியவைகளைக் கொண்டு எல்லாவித உ[illegible]ம் செய்வோம்.

JL
Y21194;19(31M)
M,N39
N42
69405

பிரஸங்கம் LXXXV.

# ஜப்பானியரின் கொடுமையும் சீனர்களின் புதிய கிளர்ச்சியும்.

## I

## ஜப்பானியரின் கொடுமை.

(மிஸ்டர் ஜோஸப் கால்மார் எழுதியது).

தங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் நாஸிகள் கையாண்டு வரும் எல்லாவிதமான கொடிய முறைகளையும் இதுவரை கைப்பற்றிய ஆசியா நாடுகளில் ஜப்பானியர்களும் செய்துகொண்டுதான் வருகிறார்கள். ஆனால் அச்சநாட்டுக் கொள்கையில் ஈடுபட்ட ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இம்மூன்று நாடுகளின் திட்டங்களுக்குள் பரஸ்பரம் ஒரே நிலையிருக்கிறதென்று சொல்லக்கூடாது. ஏனென்றால் ஜப்பானுக்கு சாம்ராஜ்ய ஆசை 1868 முதற்கொண்டே இருக்கிறது. அது முதல் இதர நாடுகளைக் கைப்பற்றி கொடுமையாக நடத்துவது, அந்த நாடுகளிலுள்ள பொருள்களை அபகரித்துப் பஞ்சம் விளைவிப்பது என்பது ஜப்பானிய அரசாங்கத்திற்கு சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது.

இப்பழக்கத்தை ஜப்பான் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கற்றுக்கொள்ளவில்லை. முதலில் ஜப்பானியர்தான் ஜாதிக்கொள்கைகளைப் பரவி ஜப்பானியர் உயர்வு என்று சொல்லி மற்றவர்களை அழித்துவந்தனர். இதற்கு வெகுகாலம் கழித்தே நாஸிகள் தங்களுடைய கொள்கைகளை ஏற்படுத்திக்கொண்டு, போலந்து, ஸெக்கோஸ்லாவியா, கிரீஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளிலுள்ளோரை இந்த யுத்தத்தில் நாசம் செய்துவருகின்றனர். ஐரோப்பிய திட்டங்களை நாஸிகள் அமுல்படுத்தி ஜனங்களின் வாழ்க்கையை ஒழித்துவருவதற்கு முன்னாடியே தங்கள் இஷ்டப்படியெல்லாம் ஜப்பானியர் செய்து வந்தனர். உதாரணமாக 15,000 ஏனர் என்ற புராதன ஜாதியார்களை நாட்டை விட்டு விரட்டி ஹோக்கெய்டோ என்ற வட துருவத் தீவுகளில் வசிக்கும்படி செய்தனர். மனித நூற்களைப் பரிசீலனம் செய்கிறவர்களும் (Ethnologists), மற்றவர்களும் இத்தீவுக்குப் போய்வருவதால் இத்தீவு வாசிகள் அவர்களிடமிருந்து சாமான்களை வாங்கிக்கொண்டு பிழைத்திருக்கிறார்கள். மேலும் பணம் வரும்படி வருவதால் ஜப்பானியர் இவர்களை அழிக்கவில்லை.

### பார்மோஸா வாசிகள் உயிர் தப்பக்கூட முடியவில்லை.

டாய்வன் அல்லது பார்மோஸா என்று சொல்லக்கூடிய தீவை ஜப்பானியர் கைப்பற்றியதும் அங்கிருந்தவர்களில் ஒருவர்கூட உயிர் தப்பமுடியவில்லை. இத்தீவு 1895-ல் சீனரிடமிருந்து ஜப்பானியர் பெற்றதும், அங்கிருந்தவர்களை வேட்டையாடுவதுபோல் விரட்டி பக்கத்திலுள்ள மலைக்குப் போகும்படி செய்து மின்சார சக்தியுள்ள முள்கம்பி வேலிக்குள் அடைத்தனர். 1910-ம் வருஷத்திற்குள் எல்லா பார்மோஸா வாசிகளும் மடிந்தனர். ஆனால் பார்மோஸா வாசிகளை அழித்து வேட்டையாடிய ஜப்பானிய அரக்கர்கள், பக்கத்திலிருக்கும் டச்சுக்காரர்களுக்கும், போர்ச்சுகீஸ்காரர்களுக்கும், சீனர்களுக்கும் அப்போது ஒருவித தொந்தரவையும் விளைவிக்கவில்லை.

### கொரியாவில் 50-க்கு ஒருவர் வீதம் சாட்டையடி.

ஜப்பானிய அட்டூழியங்களுக்கு மற்றுமொரு உதாரணத்தைப் பார்ப்போம். ருஷ்ய-ஜப்பான் யுத்தத்தின் முடிவாக ருஷ்யா தோற்றதும் 1905-ல் கொரியா ஜப்பானியரின் ஆளுகைக்கு வந்தது. அது முதல் கொரியாவுக்கு சனியன் பிடித்தது. ஏனென்றால் ஜப்பான் வசப்படுத்திக் கொள்வதற்குமுன் ருஷ்யர்

களுக்கும் ஒரு பங்கு இருந்ததால் அவ்வளவு ஆபத்தில்லாமலிருந்தது.
முதல் கொரியாவில், கொடுமை கொள்ளை, கொலை முதலியவை 1905
துவக்கப்பட்டது. அது முதல் கொரியர்கள் துக்கத்தைத் தெரிவிக்கும் ஜப்பானியரால்
துணிகளை அணிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டனர். வெள்ளைத்
ஜப்பானுடைய ஒரு மாகாணமாகவே சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1910-ல் கொரியா
1918 வரையிலும் 2,94,000 அதாவது 50 பேருக்கு ஒருவர் வீதம் 1913 முதல்
ஜப்பானியப் போலீஸ்காரர்கள் சாட்டையடி அடித்துத் துன்புறுத்தினர். கொரியர்களை
ஸெயிஒல் என்ற இடத்தில் போலீஸ்காரர்கள் ஒரு பெண்ணை நடுவிரலில் கயிரைக்
கட்டித் தூக்கிடுவதுபோல் தொங்கவிட்டார்கள்.

மெதுவான வாசகங்களைச் சொல்லிக்கொண்டே இவ்வளவு கொடுமைகளையும்
செய்து வந்தனர். நாஸிகளும் இப்படியேதான் செய்வது வழக்கம். ஜப்பானியர்
தங்களை, நேரே சூரிய பகவானிடமிருந்து வந்தவர்களென்றும், ஆகையால் ஒசத்தி
யானவர்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். சூரியனுக்கு அமடேரஸு
ஒமிகாமி என்று பெயர் சொல்லப்படுகிறது. உலகத்தில் மற்ற நாடுகளை ஆக்கிர
மித்துக்கொள்ளத் தங்களுக்கு அதிகாரமும் ஸ்வதந்திரமும் இருக்கிறதாம். 1931
முதல் மஞ்சூரியாவில் ஜப்பானியர் கையாண்டு வரும் கொடுமைத் தொழிலுக்கு
எல்லையே கிடையாது. ருஷ்ய எல்லைக்குப் பக்கத்தில் ஜப்பானுக்குச் சொந்தமா
யு[…]ள்ள பிரதேசத்தில் மஞ்சூரியர்களையும், சீனர்களையும் விரட்டி அவர்களுக்குச்
செ[…]ந்தமான வீடுவாசல் முதலியவைகளை ஜப்பானியர் பிடுங்கிக்கொண்டார்கள்.
மஞ்[…]சூரியாவில் ஜப்பானியர்கள் தான் மந்திரி வேலைகளைப் பார்த்துவருகிறார்கள்.
ஜப்பா[…]னியருக்கு ரகசியமாக உதவுகிறவர்கள்கூட கீழ்தர வேலைகளைத்தான்
செய்ய[…]வேண்டும். விளைவு பொருள்களும், வருமானமும் ஜப்பானுக்குக்
கொண்[…]டுபோகப்படுகின்றன. விலைவாசிகளை ஜப்பானியர்கள் கட்டுப்படுத்தியதால்
உள்ளூர்[…] வாசிகளுக்குக் குறைவான ஆகாரப் பொருள்கள் கிடைக்கின்றன.
ஜப்பானி[…]யருக்குப் பொதுமக்கள் வேலைசெய்யும் தருணங்களில் சரியான ஆகாரம்
கூட கிடை[…]டப்பதில்லை. 1936-ல் மங்கோலியாவின் மத்திய பாகத்தை வசப்படுத்திக்
கொண்டபி[…]தும் தொழிற்சாலைகளில் கிடைக்கக்கூடிய சாமான்களையும், கம்பளியை
யும் ஜப்[…]பானியர் பிடுங்கிக்கொண்டு அதற்கு பதிலாக ஒன்றையும் கொடுக்கவில்லை.
விலைவாசி[…]கள் 138 சதவிகிதம் அதிகமாகிவிட்டன. ஆனால் உள்ளூர் விளைவு
சாமான்க[…]ளுக்கு விலை ஏற்றப்படவில்லை.

## "மேலான ஜாதி."

இது [...]ல்லாம்தான் ஜப்பானியரின் 'பொது க்ஷேமத்திட்டத்தின்படி' நடக்கக்
கூடியவை[…]வகள். கொள்ளைத் தொழிலை மறைக்கவே, ருசி ஏற்படக்கூடிய பெயரை
'பொதுப் க்ஷேமம்' என்று வைத்திருக்கின்றனர். தாய்லாந்திலிருந்த மந்திரி
வஞ்சகீ[…]ாயாகத் தாய்லாந்தை ஜப்பானியரிடம் ஒப்படைத்து உடன்படிக்கை
செய்[…]துகொண்டபிறகு, தாய்நாட்டினர் சுரங்கங்களில் கட்டாய வேலை செய்ய
வேண்[…]டும். சைனாவிலும், இந்தோ—சைனாவிலும் இப்படித்தான். மேல்
நா[…]ட்டாரிடம் துவேஷத்தை உண்டுபண்ணவே "ஆசியா, ஆசியா வாசிகளுக்குத்
[…]ான் சொந்தமானது" என்று ஜப்பானியர் சொல்லுகிறார்கள். இவ்விதம்
சொல்லிக்கொண்டு ஆசியாவிலுள்ள இதர நாடுகளுக்குள் ஜப்பானியர் புகுருவதை
அந்தந்த நாட்டினர் விரும்பவில்லை. ஆனால் நேசதேசங்கள் வெற்றியடைந்து
எப்பொழுது நம்மை விடுவிக்கப்போகிறார்கள் என்று நேசதேசங்களின்
வெற்றியையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

# II

# சீனர்களின் புதிய கிளர்ச்சி.

("ஜப்பான் கிரானிகின்" பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந்த
மிஸ்டர் D. J. இவான்ஸ் எழுதியது).

ஐரோப்பிய ஜனநாயகங்கள் சைனாவிலிருந்தும் சில விஷயங்களைத் தெரிந்து
கொண்டிருக்கின்றன. அச்சுநாடுகளை, முக்கியமாக, ஜப்பானை, சைனா எதிர்ப்ப



திற்கு என்ன காரணம்? இவ்விதம் எதிர்ப்பதற்குச் சீனாவுக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது? என்பதைப் பரிசீலனம் செய்தாலேயே ஐரோப்பிய நாடுகள் கற்றுக்கொண்ட விஷயங்கள் என்னவென்று தெரியும். சீனச் சக்ரவர்த்திகள் ராஜ்யம் ஆளும்போதே ஜனநாயகத்தை சீனர்கள் பின்பற்றி வந்திருக்கின்றனர். அரசாங்கத்திலும் பிரதான பட்டணத்திலும் என்ன நடக்கிறதென்பதே ஜனங்களுக்குத் தெரியாது. மேலும் சைனா அதிக விஸ்தாரமான பிரதேசமானதாலும், அதிகப் பணம் பெருத்த நாடில்லாததாலும் சாதாரணமாக யாவரும் தலைநகருக்கு அடிக்கடி போய்வர முடியாது. அப்படிப் போக எல்லாருக்கும் ஆசையும் கிடையாது. ஆயிரக்கணக்கான தொழிலாளிகளும் குடியானவர்களும் ஒன்று சேர்ந்து தங்கள் காரியங்களைத் தாங்களாகவே கவனித்து வந்தார்கள். இவர்கள் வசிக்கும் நகரங்களும் கிராமங்களும் க்ஷேமமாக இருந்தால் போதுமென்று அதையே கவனித்து வந்ததால் தலைநகரில் நடக்கும் சம்பவங்களை அதிகம் கவனிக்கவில்லை. ஆனால் அரசாங்கத்திற்கு வரிப் பணத்தை மாத்திரம் சரியாக செலுத்தி விடுவார்கள். வேறு தொந்தரவு கிடையாது.

## தங்களுடைய அலுவல்களைத் தாங்களே கவனிப்பது.

சீனர்கள் எப்போதும் தங்கள் வேலைகளையே அதிகம் கவனித்து வருகிறவர்கள். உலக வியவகாரங்களில் அதிகம் தலை கொடுப்பதில்லை. அர்த்த சாஸ்திரமான அரசியல் வியவகாரங்களையோ, சமூக அமைப்பைப்பற்றியோ அதிகக் கவலை எடுத்துக்கொள்வதில்லை. மதவேற்றுமைகளும் கிடையாது. ஆகவே ஜனநாயகத்திலேயே அதிக கவனமாக இருந்துவருகிறார்கள். அரசாங்கத்தாரின் உதவியை எதிர்பார்க்காமல் தங்களுக்குத் தேவையானவைகளைத் தாங்களாகவே கவனித்துக்கொள்ளுவார்கள். சைனாவில் பல ஆயிரம் கிராமங்களிருப்பதில் ஒவ்வொன்றும் தேவையான விஷயங்களைத் தனித்தனியாக ஏற்படுத்திக்கொள்ளுகின்றன. "அரசாங்கத்தார் இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்" என்று நடுத்தெருவில் நின்றுகொண்டு கத்தாமல் பரம்பரையாக ஏற்பட்டுள்ள சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள், கிராமத்திலுள்ள பெரியோர்கள், கோவில் அதிகாரிகள் முதலியவர்களைக் கொண்டே வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளுகின்றனர். அரசாங்கத்தாரைக் கேட்டு அவர்கள் செய்யும்வரை இவர்கள் காத்துக் கொண்டிருப்பதில்லை.

இவ்வித பழக்கங்களைக் கொண்டிருப்பதால் தன்னிஷ்டப்படி அரசாங்கம் நடத்தும் அச்சுநாட்டுக் கொடுங்கோல் தலைவர்கள் சொல்படி சீனர்கள் நடக்க விரும்பவில்லை.

## துரோகிகளுக்கு இடமில்லை.

நான்கிங் பட்டணத்தை ஜப்பானியர் பிடித்து ஒரு பொம்மை அரசாங்கத்தை ஸ்தாபித்ததும் சைனா ஜப்பானோடு ஒத்துழைக்க சம்மதித்திருப்பதாக ஜப்பானிய மந்திரி ஜெனரல் டோஜோ அறிவித்தான். இது முழுப்பொய். சில சீனர்களே ரகசியமாக ஜப்பானியருக்கு உதவி வருகிறார்கள். ஆனால் இச்சீனர்களை ஜப்பானியர் நம்புவதும் தவறு. ஏனென்றால் தங்கள் நாட்டிற்கு விரோதமாக நடந்துகொள்ளுகிறவர்கள் மற்றநாடுக்கு உதவுவதாகச் சொல்லுவதை எப்படி நம்புவது. நான்கிங் பட்டணத்தில் சில ஜப்பானிய ஐந்தாம் படையினரைக்கொண்டு காரியங்களை நடத்தக்கூடுமென்று ஜெனரல் டோஜோ நினைப்பதும் முடியாது. லக்ஷக்கணக்கான சீன ஸ்திரீகளும் புருஷர்களும் ஜப்பானோடு ஒருவிதத்திலும் ஒத்துழைக்கத் தயாராக இல்லை. பலதடவைகளில் சீனர்களைக் கொடுமையாக நடத்திவந்த ஜப்பானோடு எவ்விதம் சீனர்கள் உறவு கொண்டாடுவார்கள்.'

சுங்கிங் பட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ள சீன அரசாங்கம், 'இங்கிலீஷ்காரர்களின் நன்மையை உத்தேசித்து, அமைக்கப்பட்டிருப்பதாயும், அவ்விதம் ஆசியாவில் ஆக்கிரமணம் செய்துவரும் பிரிடிஷ்காரர்களை ஆசியாவைவிட்டுவிரட்ட வேண்டுமென்றும் ஜப்பான் சொல்லுவது வீண் அபவாதம். அதோடுஜப்பானுக்கு இப்படிச் சொல்லுவது ஒரு வழக்கம். ஆனால் ஜப்பானுடைய நன்மைகளைத்தான்

# வார யுத்தச் செய்திகள்.

## 27—2—42-லிருந்து 6—3—42-வரை.

**ஜாவா சண்டை.**—பிப்ரவரி மாதம் 27-ம் தேதி 50 ஜப்பானியக் கப்பல்கள் துணைக்கப்பல்களுடன் வடக்கேயிருந்து ஜாவை நோக்கி வந்துகொண்டிருந்தன. ஜாவா கடலிலேயே நேசதேசப் படைகள் அவைகளுடன் போர் செய்தன. மொகமி என்ற ஜப்பானியச் சண்டைக் கப்பலும், மூன்று நாசகாரிகளும் சேதமடைந்தன. போர் முடிவில் எதிரிக்கு ஒரு க்ரூயிஸரும், 15 கப்பல்களும் நாசமாயின. இரண்டு க்ரூயிஸர்களும் மூன்று நாசகாரிகளும் சேதமாயின. நேசதேசத்தார்கள் பலமாகத் தாக்கியபோதிலும், எதிரியைத் துரத்தியடிக்க முடியவில்லை. ஜப்பானியர்கள் (படேவியாவிற்கு மேற்சே) பாண்டம், (படேவியாவிற்கு கிழக்கே) இந்திரமாகோ, (ஸௌரபாயாவுக்கும் ஸெமரங்குக்கும் நடுவில்) ரெம்பாங் என்ற மூன்று இடங்களில் இறங்கிவிட்டார்கள். ஸைகிள் வண்டிகளும், லேசான கவசம்பூண்ட கார்களும் கொண்டு, எதிரிகளின் துருப்புகள் தனித் தனி பகுதிகளாக உள்நாட்டில் பிரவேசித்தன. அவர்கள் லோயபாங்கைக் கைப்பற்றிவிட்டார்கள். அது பண்டோயாங்குக்கு 40 மைல் வடகிழக்கே இருக்கிறது. இப்பொழுது ஜாவாவின் தலைநகரான படேவியாவையும் ராணுவ முகாமான பண்டோயாங்கையும், ஸௌரபாயாவையும் தனியே பிரிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். இதுவரை எதிரிவசமாகாமலிருந்த எண்ணெய் உற்பத்தி செய்யுமிடமான (ட்ஜேபோ) என்றஇடமும் பூதகனமுறைக்கு உள்ளாக்கப்பட்டது. டச்சு அரசாங்கமும் படேவியாவிலிருந்து பண்டோயாங்குக்கு மாற்றப்பட்டிருக்கிறது. பண்டோயாங்கில் ஜப்பானியர்கள் விமானங்களைக்கொண்டு தாக்குகிறார்கள்.

ஜப்பானியர்களை டச்சுக் கிழக்கிந்தியப் படைகள் எல்லாப் பக்கங்களிலும் வீரத்துடன் தாக்குகிறார்கள். சமுத்திரக்கரைக்கு அருகில் ஜப்பானியர்களை டச்சு பாம்பர்களும், நேசதேசத்து பாம்பர்களும் தாக்குகின்றன. இவைகளின பயனாக ஜாவாவிற்குப் பக்கத்தில் 10,000 டன் நிறையுள்ள ஜப்பானியக் கப்பல் ஒன்றும், 8,000 டன் கப்பல் ஒன்றும் நேராகத் தாக்கப்பட்டன. ஒரு டச்சு நீர்மூழ்கிக் கப்பல் பெரிய ஜப்பானிய எண்ணெய்க் கப்பலை மூழ்கடித்தது. ஜாவாவிற்கும் சுமத்திராவக்கும் இடையிலுள்ள சுந்தா ஜலசந்தியில் நேசதேசக் கப்பற்படை இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

**தலைமைப் பதவி மாற்றம்.**—வேவல் தலைமையின் கீழுள்ள A. B. D. A. (அமெரிக்கா, பிரிடிஷ், டச்சு, ஆஸ்திரேலியா), படைகளைப் பிரித்து ஜாவாவை டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் விடப்பட்டிருக்கிறது. மலேயாவையும், சுமத்திராவையும் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்ததிலிருந்து ஜாவாவிற்கும், பர்மாவிற்கும் போக்குவரவு வைத்துக்கொள்ள முடியவில்லை. ஆதலால் A. B. D. A. போர்முனை பிரிந்துவிட்டது. மேலும் தென்மேற்கு பஸிபிக் பிரதேசம் பூராவும் பொதுவாக ஒருவருடைய தலைமையின்கீழ் சண்டையை நடத்துவது அசாத்தியமாகயிருக்கிறது. ரெங்கூன், படேவியா, டார்வின் முதலிய இடங்களிலிருந்தும் ஒருவரே அதிகாரங்களைச் செலுத்தவும் இனிமேல் முடியாது. பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஒரு பாகமும் ஜாவாவும்தான் நேசதேசத்தார்கள் வசமிருக்கின்றன. பர்மாவை ஜப்பானியர்கள் தாக்கியபிறகு, சீனர்களின் உதவியைக்கொண்டு நேசதேசத்தார்கள் இந்தியாவின் தற்காப்பைப்பற்றி கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்தியா, பர்மா, சைனு இவைகளின் யுத்த ஏற்பாடுகளுக்கு இந்தியாவையே தளமாக வைத்துக்கொள்ளலாம். இந்த சமயத்தில் A. B. D. A. படைகளைத் தனித்தனியான தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. இந்தியாவுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் வேவலை இந்தியப் படைகளுக்குத் தலைமை அதிகாரியாக நியமித்திருப்பது ஒரு சாதகமான அம்சம் தான்.



கைவிட்டுவிட்டார்கள் என்றுவது,
ஆனால் நேசதேசத்தார்கள் ஜாவாவைக் கைவிட்டுவிடுவார்கள் என்றுவது நினைக்கக்கூடாது. ஜாவாவிற்கு உதவி செய்வதை நிறுத்திவிடுவார்கள் என்றுவது நினைக்கக்கூடாது. டச்சு அதிகாரத்தின்கீழ் பிரிடிஷாரின் கப்பற்படை, தரைப்படை, விமானப் படை, இவை சண்டை செய்துகொண்டுதானிருக்கின்றன. விமானங்களும் மற்ற யுத்த தளவாடங்களும் ஜாவாவிற்கு இன்னும் அனுப்பப்பட்டு வருகின்றன. இப்பொழுது ஜாவாவில் மட்டும் யுத்தம் நடப்பதினால் டச்சு ஆதிக்கத்தின்கீழ் நேசதேசப் படைகளையும் இருக்கும்படிச்செய்வது சரியான முறையேயாகும்.

**பர்மா யுத்தம்.**—ரெங்கூனைச் சுற்றி நிலைமை அபாயகரமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் சென்ற வாரத்தில் எதிரிக்கு நேர்ந்த விமான நஷ்டத்தினால் ரெங்கூன் நகரத்தின்மேல் ஜப்பானிய விமானத் தாக்குதல் குறைந்திருக்கிறது.

ஜப்பானிய காவல்படை 'ஸிட்டாங்' நதியைத் தாண்டி பெகுவுக்கருகிலுள்ள இருப்புப்பாதையைத் துண்டித்துவிட்டதாகவும், பர்மா ரஸ்தாவிலிருக்கும் வாவ் (Waw) என்ற கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. மேலும் பெகுவுக்குப் பக்கத்திலுள்ள நதியின் கிழக்குக்கரையில் எதிரியின் இரண்டு படைப்பகுதிகள் முற்றிலும் அழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஸிட்டாங் நதியில் 100 மைல் வடக்கே டோங்கு நகரத்திற்கு சமீபத்திலும் பர்மாவுக்கும், தாய்லாந்துக்கும் நடுவிலுள்ள பிரதேசத்தின் மூலமாயும் எதிரிகள் பிரவேசிக்க பிரயத்தனப்படுகிறார்கள். ஷான் ஸமஸ்தானங்களுக்கு பயத்தை உண்டாக்கிக்கொண்டு வடமேற்கு தாய்லாந்தில் ஜப்பானியத் துருப்புகள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

அவர்களைத் தடுக்க பர்மாவில் சீனர்கள் ஐந்து படைப்பகுதிகளை சேகரித்திருக்கிறார்கள். ஒன்று லாஷியோவிலிருக்கிறது. எல்லைப்புறத்தில் மூன்று பகுதிகளும், அதில் 20,000-பேர்கள் மாண்டலேயிலும் இருக்கிறார்கள்.

இந்திய விமானப்படைப் பகுதிகள் மோல்மீன், மார்டாபன், நியின்செயிக், பீலின், இன்னும் பர்மாவில் எதிரி ஆக்கிரமித்த பிரதேசங்கள், தாய்லாந்தில் மேஹாங்குஸான் இந்த இடங்களில் வெற்றிகரமாகத் தாக்குகிறார்கள்.

பர்மா கவர்ன்மெண்டார் வேண்டுகோளின்படி ரெங்கூன் நகரம் ராணுவ அதிகாரிகளின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஸிட்டாங் நதியின் கீழ்பாகத்தில் எதிரியின் தாக்குதல் பலமாய் இருப்பதினால் பர்மா ரஸ்தா இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது.

**பிலிப்பைன்ஸ் தீவுகள்.**—சென்ற வாரத்தில் வெற்றியுடன் முன்னேறிப் பிடித்த ஸ்தானங்களை மாக் ஆர்தரின் துருப்புகள் கைவசப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் வடக்கு லூஸானில் ஆப்ரா நதிபள்ளத்தாக்குப் பிரதேசத்தை ஜப்பானியர்கள் இழக்கும்படி நேரிட்டது. பிலிப்பைன்ஸ் படைகள் மணிலா குடாக்கடலில் அருக்கேயிலிருந்து பாங், மோரான் இவைகளுக்கு நடுவிலுள்ள இடம் வரையில் வியாபித்திருக்கிறார்கள். இப்பொழுது மின்டானோ தீவில் ஸாம் போயங்கா என்ற இடத்தில் எதிரி புதிய துருப்புகளைக் கொண்டுவந்திருக்கிறான். எதிரியின் கப்பற்படைப் பகுதிகள் ஸெபூவில் அநேக இடங்களையும், நீக்ரோஸ், மின்டானோ தீவுகளையும் தாக்குகின்றன.

**சைனு.**—வெயிஸின், வேயி (Weiyi), ஸிங்டு (Tsingtu) இவ்விடங்களிலிருந்து ஜப்பானியத் தாக்குதல்கள் எல்லாம் சிதறடிக்கப்பட்டுவிட்டன. வடமேற்கு சைனுவில் ஷேவானை (Szechwan)ச்சேர்ந்த டான்ஸியில் ஜப்பானியர்கள் தாக்குதல்கள் செய்ததில் அவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். ஸுயன் (Suiyan) பிரதேசத்தில் போர் மீண்டும் நடக்கிறது.

**மற்ற இடங்கள்.**—(1) பிளேர் துறைமுகத்தில் (அந்தமான் தீவுகள்) பிப்ரவரி 24, 26 தேதிகளில் விமானத் தாக்குதல் நடந்தன.

(2) ஆஸ்திரேலியாவின் வடமேற்கு சமுத்திரக்கரையிலுள்ள முத்துசிப்பி
எடுக்கப்படும் ப்ரூம் துறைமுகத்திலும், கால் நடைகள் ஏற்றப்படும் விண்டுஹாம்
(Wyndham) துறைமுகத்திலும், ஸாலமன் தீவுகளிலுள்ள துலஜியாவிலும்
தாக்குதல்கள் நடந்தன.

(3) வட கினியாவில் முக்கியமான தளமான ரபாலி (Rabaul)ன் பேரில்
ஆஸ்திரேலிய பாம்பர் விமானங்கள் வெற்றிகரமாகத் தாக்கின.

(4) ஜில்பர்ட் தீவுகளுக்கு அப்பால் நடந்த கடல் யுத்தத்தில் 18 எதிரி
பாம்பர் விமானங்கள் அமெரிக்கக் கப்பற்படையைத் தாக்கின. அவைகளில் 16
எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

(5) ப்யூர்ட்டோ ரிக்கோவுக்கும், (Puerto Rico) டாமினிகன் தீவுகளுக்கு
நடுவிலுள்ள மோனு (Mona) தீவை எதிரிக் கப்பல் வெடிகுண்டுகளால் தாக்கியது.
அது நீர்மூழ்கிக் கப்பலாகத் தான் இருக்கவேண்டும். அமெரிக்காவுக்குச் சொந்
தமான அட்லாண்டிக் மஹா சமுத்திரக்கரையிலுள்ள இடத்தில் இது தான் முதல்
தாக்குதல்.

(6) ஐக்கிய நேசதேசத்தார்களுடன் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து துருப்
புகளின் தலைமை அதிகாரி எப்பொழுதும் கலந்துயோஜிக்க வேண்டும்,
என்ற ஒப்பந்தம் தயாராகி வருகிறது. லண்டனிலும், வாஷிங்டனிலும் அந்த
ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டவுடன் அமுலுக்குவரும்.

**ருஷ்யா.**—இவ்வாரத்தில் ஸ்டாரா ரூஸா என்னும் இடத்தில் ருஷ்யர்கள்
பெரியதொரு வெற்றியடைந்தனர். இவ்விடத்தில் 16-வது ஜெர்மன் சைனியப்
பகுதி சூழ்ந்துகொள்ளப்பட்டது. எதிரிப்படைகள் அழியும் தருவாயில்
இருக்கின்றன. கடைசி முயற்சியாகப் புதிய உதவிகளை எதிரிகள் கொண்டுவரப்
பிரயத்தனப்படுகின்றனர்.

இதைத் தவிர மற்ற நான்கு இடங்களிலும் எதிரி ஆபத்துக்குள்ளாகியிருக்
கிறான். லெனின்கிராட்டிற்குப் பக்கத்தில் ஷாலூஷெல்பர்க்கிலும், மாஸ்கோ
விற்கு வடமேற்கில் ரிஜெவ்விலும், மாஸ்கோவிற்குத் தென் மேற்கில் ஓரெலிலும்,
டான் நதிப்பிரதேசத்தில் கார்கவ்விலும் எதிரி அவஸ்தைப்படுகிறான்.

பனிக்கட்டிமேல் பலகைகளைப் போட்டுக்கொண்டும், கொரில்லா முறையி
லும், கப்பற்படை உதவியாலும், ருஷ்யத் துருப்புகள் லெனின்கிராட்டிற்குள்
பிரவேசிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. லாகிவியன் போர்முனைக்கு 80 மைல்
தூரத்திலுள்ள நோ-நீவல் இருப்புப்பாதை வரை ருஷ்யத் துருப்புகள் சென்றிருக்
கின்றன. 257-வது 85-வது ஜெர்மன் துப்பாக்கிப் படைப்பகுதிகளை டிமோ
ஷென்கோ நாசம் செய்துவிட்டார். கிரிமியாவில் எதிரிப்படைமேல் ருஷ்யக்
குறுக்கு எதிர்ப்புகளும் செய்யப்பட்டன. ஆகவே இவ்வாரத்தில ருஷ்யர்களுக்கு
அதிக வெற்றிகள் கிடைத்தன.

தெற்குப் போர்முனையில் மழை, மூடுபனி முதலியவை ஆரம்பித்திருக்
கின்றன. ஆகவே சமீபத்தில் வஸந்தகாலம் ஆரம்பிக்கமுடியாது.

மர்மான்ஸ்க் போர்முனையில் ருஷ்யப்படைக்கு உதவியாகச் சென்ற பிரிடிஷ்
ஹரிகேன் பைடர்கள் திரும்பிவந்தன. ஹரிகேன் விமானங்களை உபயோகக்கும்
விதத்தைச் சொல்லிக்கொடுக்கவே தான் இவை சென்றன.

**லிபியா.**—லிபியாவில் இவ்வாரத்தில் விசேஷ சம்பவங்களொன்றுமில்லை.
மணல் கலந்த புயல் காற்றுகள் அடிப்பதால், மும்முரமான சண்டைகளைச்
செய்யமுடியவில்லை. இருந்தாலும் பிரிடிஷ் காவல் வேலை எப்போதும்
போலவே செய்யப்பட்டது. மார்ச்சு 2, 3டீ இரவுகளில் பிரிடிஷ் காவல்படை
டிமிமிக்குத் தெற்கில் எதிரிகளுடன் சிறிது சண்டை செய்தது. ஸூயஸ் கால்வாயை
யும், அலெக்ஸாண்டிரியாவையும் எதிரி விமானங்கள் தாக்கின. அதனால் சேதம்
எதுவுமில்லை. (ஸிஸிலியிலுள்ள) பலேரிமோவையும், பெங்காஸியையும் பிரிடிஷ்

விமானங்கள் தாக்கி சேதத்தை விளைவித்தன. ஞாயிற்றுக்கிழமை மால்டா
எதிரிகளால் மிக்க கடுமையாகத் தாக்கப்பட்டது.

**பிரன்வால்.**—பிரிடிஷ் கப்பற்படை, சைனியம், விமானப்படை ஒன்று
சேர்ந்து வட பிரான்ஸில் லஹாவருக்கு 12 மைல் தூரத்திலுள்ள பிரன்வால்
என்னும் இடத்திலுள்ள ரேடியோ நிலயத்தைத் தாக்கின. அந்த சமயத்தில்
இறங்கிய பிரிடிஷ் குடை விமானிகள் ரேடியோ நிலயக் கருவிகளைப் பாழாக்கினர்.
பிரிடிஷ் படையைச் சேர்ந்த யாவரும் பத்திரமாகத் திரும்பினர். ஐரோப்பாவில்
ஒருவரும் இறங்க முடியாது என்று ஹிட்லர் இனிமேல் சொல்லிக்கொள்ள
முடியாது.

**ரேனல்டு தொழிற்சாலை.**—பாரிஸுக்குப் பக்கத்தில் பில்லன் கோர்டு என்ற
இடத்திலுள்ள ரேனல்டு தொழிற்சாலை, செவ்வாய்க்கிழமை பிரிடிஷ் விமான
ங்களால் தாக்கப்பட்டு அதிக சேதம் உண்டாக்கப்பட்டது. சில நாட்களாக
பிரெஞ்சுத் தொழிற்சாலைகளில் மெஸ்ஸர்ஷ்மிட், பாக்கன்வுல்ப், யூங்கர், டார்மியர்
என்ற விமானங்கள் கட்டப்பட்டு, ஜெர்மனிக்குக் கொடுத்து உதவிவருகின்றன.
ரேனல்டு தொழிற்சாலையில் போக்குவரவு மோட்டார் வண்டிகளும், டாங்கி
களும், விமானங்களும் கட்டப்படுகின்றன. பிரெஞ்சுக்காரர்களுக்கு இதைப்பற்றி
எடுத்துச் சொல்லியும் பயன்படாததால் பிரெஞ்சுத் தொழிற்சாலைகள் தாக்கப்
பட்டன. இப்படிச் செய்தால்தான் ஜெர்மனிக்கு உதவுவதை நிறுத்துவார்கள்.

**ஸ்வதந்திர பிரான்ஸ்.**—லண்டனில் அமைக்கப்பட்ட ஸ்வதந்திரப் பிரெஞ்சு
சங்கத்தை அங்கீகரித்து, நியூ கலிடோனியாவில் ஸ்வதந்திரப் பிரெஞ்சு ஆட்சியை
அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதனால் விஷிக்கு மூக்கு
உடைந்த மாதிரிதான்.

**டச்சு-வெனிஸுலா ஒற்றுமை.**—அருபா, குரகாவோ என்ற டச்சுத் தீவு
களுக்குப் பக்கத்திலுள்ள கடல் பாகத்தை வெனிஸூலா அரசாங்கமும் டச்சுக்
காரர்களுடன் சேர்ந்து காபந்துசெய்யும். இதுவரை அமெரிக்க, அரசாங்கம்
கவனித்துவந்தது.

**ஸாடி அரேபியா** இதாலியுடன் ராஜீய சம்பந்தத்தை முறித்துக்கொண்டு
விட்டது. ஸாடி அரேபியாவிலுள்ள இபன்ஸௌத்திற்கும் பிரிடனுக்கும் உள்ள
நட்பை முறிக்க ஹிட்லர் அனுப்பிய தூதரான டாக்டர் பிரிட்ஸ் கரோபாவைக்
கண்டு பேசவே இபன்ஸௌத் மறுத்துவிட்டான்.

**புது திட்டத்தின் வேலை.**—ஏதோ பாரிஸில் ஒரு ஜெர்மன் சிப்பாய் கொல்லப்
பட்டானென்று காரணம் சொல்லி 40 பிரெஞ்சுக்காரர்களை நாஸிகள் கொன்றனர்.
கடந்த ஏழு மாதகாலமாக பிரான்ஸில் ஜெர்மனிக்கு எதிராக 230 ரகசிய சூழ்ச்சி
கள் செய்யப்பட்டனவாம். இதற்காக 1,200 தடவை படையெடுக்கப்பட்டு,
12,000 பேர்கள் கைதிசெய்யப்பட்டிருக்கின்றனர். கொலை செய்தவர்களுடைய
கணக்கை வெளிப்படுத்தவில்லை.

**அமெரிக்கா தூதுகோஷ்டி** ஒன்று இந்தியாவுக்கு வந்து தொழில்களில்
சாமான்கள் செய்வதை அதிகப்படுத்தும் பிரச்னைகளை விசாரிப்பார்கள்.

**இந்தியா-சைனு ஒற்றுமை.**—இந்தியாவிலும், சைனுவிலும் பரஸ்பரம் பிரதி
நிதிகளை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**இந்தியாவின் யுத்த வரவு செலவின் மூன்றுவது திட்டம்.**—இந்தியத் தற்காப்புக்
காக 1941—42-ன் உபரி வரவு செலவு திட்டத்தில் 102 கோடியும், 1942—43-ன்
வரவு செலவு திட்டத்திற்காக 133 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இப்படிச் செய்வதால் 47 கோடி ரூபாய் அடுத்த வருஷத்திய மொத்தச்
செலவிற்குக்குறைவுபடுமென்றும், அதற்காகவருமானவரி, லாபவரி, உள்நாட்டிற்கு
வரும் சாமான் சுங்க வரி, தபால் தந்தி விகிதத்தில் உயர்வு முதலியவைகளால்
ஈடு செய்யப்படும். போதாததற்குக் கடன் வாங்கப்படும். மேலும், யுத்தக்கடன்
பத்திரங்களையும் ஸர்டிபிகேட்டுகளையும் கொடுத்து அதனால் கிடைக்கும் வரு
மானத்தையும் கொண்டு ஈடு செய்யப்படும்.

இவ்வளவு அதிகமாக இந்தியா தற்காப்பிற்காகச் செலவு செய்தாலும், இங்கிலாந்தில் 8 நாட்களில் ஏற்படும் செலவுக்குச் சமமாகத்தான் ஆகும். இதே கணக்கின்படி பார்த்தால், அமெரிக்காவிற்கு 2 நாட்களின் யுத்தச் செலவுக்குத்தான் சமமாக ஆகும். இந்தியாவில் செலவு செய்வதைத் தவிர இந்தியத் தற்காப்பிற்காக பிரிடனும் மூன்று மடங்கு உபரியாகச் செலவு செய்கிறது. இதைத் தவிர 60 கோடி ரூபாய் பொறுமானமுள்ள விமானங்களையும், வண்டிகளையும், பீரங்கிகளையும் அனுப்பி இந்தியப்படையைப் பலப்படுத்தும்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசகளின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—2—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா(Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—மார்டோபா (Martuba) டெர்னா (Derna). | தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli), பெங்காஸி (Benghazi) ஸிரின் (Cyrene). | | 4 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 13 விமானங்கள். | 23 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் தரைப்படைகள், பீரங்கி ஸ்தானங்கள்.—ஸிட்டாங் (Sittang) நதிக்கரை எங்கும். | | | 4 விமானங்கள். |
| 24—2—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—வெடி கண்ணிகள் பாவுவது விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi), பெர்க்கா (Berka). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | | 3 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள். விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 34 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 24—2—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு**—மக்காஸர் (Macassar)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | 2 பெரிய கப்பல்கள்.—மக்காஸர் (Macassar) ஜலசந்திக்கருகாமையில். | 2 கப்பல்களும் மூழ்கின. | | |
| | **சுமத்திரா (Sumatra)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—பாலம் பாங் (Palembang). | 3 விமானங்கள் கொளுத்தப்பட்டன. | | |
| | **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிப் படைகள்.—ஸிட்டாங் (Sittang) நதிக்கருகாமையில். | | | |
| 25—2—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பற்படை தளம்—கீல் (Kiel). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany)யில். | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi), பெர்கா (Berka). | | | |
| | துறைமுகம், கப்பல்கள், கடல் விமானம் தங்குமிடம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | ராணுவ கட்டடங்கள்.—காஸ்டெர்லோ (Casterlo)க்கு மேற்கில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர்கள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 21 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு**—நியூகினியா (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கட்டடங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—ராபால் (Rabaul). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன | | |
| | **டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸ்தானங்கள், விமான எதிர்ப்பு பீரங்கி ஸ்தானங்கள்.—டிமோர் தீவில். | | | |
| | **மக்காஸர் (Macassar Straits)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—மக்காஸர் ஜலசந்திக் (Macassar) கருகாமையில். | 2 பெரிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | நதியில் செல்லும் ஜப்பானியப் படகுகள்.—மோல்மீனுக் (Moulmein) கருகாமையில். | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **26—2—42.** (வியாழக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| இரவில்.—கப்பற்படை தளம், கப்பல் கட்டுமிடங்கள்—கீல் (Kiel). | | | |
| விமான நிலயங்கள், ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | 3 விமானங்கள். | |
| **லிபியா Libya**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | 1 கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| மோட்டார் போக்குவரத்துக் கூட்டம்.—மெக்கிலி (Mecheli) பிரதேசத்தில். | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் நெடுகிலும். | | 5 விமானங்கள். | 19 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி ஸ்தானங்கள், ஸிட்டாங் போர் முனைகளுக்குப் பின்னால். | | | |
| **27—2—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—கப்பல் துறைகள்—கீல் (Kiel), வில்ஹெல்ம் ஷேவன் (Wilhelmshaven) | | | |
| மற்ற ராணுவ லக்ஷியங்கள்.—ஜெர்மனி (Germany)யின் வடமேற்கில். | | | |
| விமான தளங்கள்.—ஆக்கிரமித்த நாடுகளில். | | 3 பாம்பர் விமானங்கள். | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி மோட்டார் படைகள், மோட்டார் லாரிகள், யுத்த அரங்கத்திலுள்ள விமான நிலயங்கள்.—மெக்கிலி (Mecheli)க்குத் தெற்கேயுள்ள யுத்தப் பிரதேசம். | | | |
| துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 7 விமானங்கள். | 45 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு-நியூ கினியா (New Guinea)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| ஜப்பானிய ஸ்தானங்கள்.—நியூ பிரிடன் (New Britain). | | | |
| விமான நிலயம்.—ராபாலு (Rabaul)க் கருகாமையில். | | | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **27—2—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி பீரங்கி ஸ்தானங்கள், தரைப் படைகள்.—ஸிட்டாங் (Sittang), பிளின் (Blin) நதிகளுக்கு இடையில். | | | |
| **28—2—42.** (சனிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—கப்பல் துறைகள்—ஆஸ்டெண்டு (Ostend). | | 3 விமானங்கள். | |
| இரவில் நடந்த விமான நடமாட்டங்களுக்குத் தகவல் ஒன்றும் தெரியவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| மோட்டார் போக்குவரத்து, விரோதிக்குச் சொந்தமான துருப்புகள்.—ஸிரேனைகா (Cyrenaica). | | | |
| துறைமுகம், ராணுவக் கட்டடங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | 68 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—ஜாவா (Java)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| ஜப்பானியத் துருப்புகளை ஏற்றிச் செல்லும் யுத்தக் கப்பல்கள்.—ஜாவா (Java) சமுத்திரத்தில். | 1 க்ருயிஸர் மூழ்கியது; 4 க்ருயிஸர்கள் சேதமாயிற்று; இன்னும் அநேகம் பழுதுபட்டோ, மூழ்கடிக்கப் பட்டோ விட்டன. | | |
| **தாய்லாந்து (Thailand)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—தாய்லாந்தி (Thailand)ன் வடபாகத்தில். | | | |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| தரையிலுள்ள ஜப்பானிய விமானங்கள்.—மோல்மீனுக் (Moulmein) கருகாமையில். | | | |
| **1—3—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலிலும், இரவிலும் ஏற்பட்ட விமான நடமாட்டத்திற்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| விமானச் சண்டைகள்.—லிபியா (Libya)வில் | | | 2 விமானங்கள்; அநேகம் சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—3—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 8 விமானங்கள். | 77 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—ஜாவா (Java)விற்கு வடகரையில். | | | |
| | மற்றொரு பெரிய ஜப்பானியக் கப்பற் படை.—ஜாவா (Java)க் கடலில், ஜாவா (Java)வுக்கு அருகாமையில். | | | |
| | நியூ கினியா (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—ரபவுல் (Rabaul). | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | முன்னேறிவரும் ஜப்பானியத் துருப்புகள்.—ஸிட்டாங் (Sittang) நதிக்கரைக்கு மேற்கில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 24—2—42. (செவ்வாய்க்கிழமை) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பாண்டோயிங் (Bandoeng). | | | |
| 25—2—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | எங்கும் விமான நாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினியா (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோஸ்பி துறைமுகம் (Port Moresby). | | | |
| | ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நியலங்கள்.—ஜவா (Java). | | 1 விமானம். அநேகம் சேதமாயின. | நஷ்டமில்லை. |
| | ஸௌரப்பாயா (Sourabaya). | | 1 விமானம். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 25—2—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon). | | 30 விமானங்கள்; இன்னும்பல சேதமாயின. | 4 விமானங்கள். |
| 26—2—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | துறைமுகங்கள், விமான நிலயங்கள்.—ஜாவா (Java). | | | |
| | பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் சைனியமிருப்பிடங்கள்.—பர்மா (Burma). | | | |
| 27—2—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டோப்ருக் (Tobruk). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 3 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | அநேக விமானங்கள் சேதமாயின. | | 6 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.-ஜவா (Java)விற்கு வடபாகத்தில். | | | |
| 28—2—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow) விற்குச் சமீபம். | | 7 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| | **தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | துறைமுகம்.—டாண்ட்ஜோங் (Tand-jong). | | 5 விமானங்கள். | |
| | ஒரு விமான நிலயம்.—ஜாவா (Java)விற்கு மேற்கு பாகத்தில். | | | |
| | **பர்மா (Burma)—(ஜப்பானிய, விமானங்களால்).** | | | |
| | பிரிடிஷ் தரைப்படைகள்.—ஸிட்டாங் (Sittang) நதிக்கருகாமையில். | | | |
| **1—3—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—ஸ்காத்லாந்து (Scotland), வடகிழக்கு இங்கிலாந்திலும் (England), தென்மேற்குக் கடற்கரைப் பிரதேசங்களில் சிற்சில விமானங்கள் தோன்றின. | மிகவும் சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—ஜாவா (Java) (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்)** | | | |
| | விமான நிலயங்கள்.-ஜாவாவி(Java)ல். ஸௌரபாயா (Sourabaya). | | | |
| | **நீயூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | மோர்ஸ்பி (Port Moresby) துறைமுகம். | | | |
| **2—3—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு-ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | பாண்டோயிங் (Bandoeng) ஜாவா (Java) விலுள்ள மற்ற இடங்கள். | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | அமெரிக்க சைனியங்களுக்குப் பின்னால் உள்ள அமெரிக்கப் போக்குவரத்து-பாடான் (Batan) தீபகற்பத்தில். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

**சைனு தினம்.** இன்று இந்தியா பூராவும் சைனுதினம் கொண்டாடப்படும். ஏதோ செய்யும் காரியமாக வெளிப்படையாகமட்டும் இது ஆகாது. ஆனல் இருநாடுகளுக்கும் பலநாளாக இருந்துவரும் சிநேகத்தை நிலைநாட்டுவதற்காக பூர்ண மனதுடன் செய்யப்படும் உண்மையான கொண்டாட்டமாகவே ஆகும்.

இதுவரை எவ்வளவோ தேசங்கள் ஸ்வதந்திரம் பெறுவதற்காகப் பாடு
பட்டிருக்கின்றன. ஆனால் சைனு செய்துவரும் முயற்சியைத் தனிப்பட்டதென்றே
சொல்லவேண்டும். ஏனென்றால் ஐரோப்பிய நாடுகளில் நாஸி ஆட்சியை
நிராகரிக்க மற்ற நாடுகள் ஆயுதங்களை உபயோகிக்கின்றன. சைனுவிற்கு
அவ்வித ஆயுத உதவியதிகமில்லாத சமயத்தில் கேவலம் உணர்ச்சியென்ற
ஆயுதத்தை வைத்துக்கொண்டே ஜப்பானியர்களை எதிர்த்து சண்டைசெய்து
வருகிறது.

எவ்வளவோ வருஷங்களாக ஜப்பான் சீன நாடுகளைக் கவருவதற்கு ஏற்
பாடுசெய்திருந்தபோதிலும் முக்டன் சம்பவம்தான் முதல் முதலாக ஜப்பானல்
செய்யப்பட்ட கொடுமையாகும். இது ஒன்பது வருஷங்களுக்கு முன் நடந்தது.
அப்பொழுது மஞ்சுகோவை ஜப்பான் ஆக்கிரமித்துக்கொண்டது. இருந்தாலும்
இனிமேல் ஜப்பான் ஒன்றும் செய்யாது என்று நினைத்து சைனு ஒரு சமாதானம்
செய்துகொண்டது. ஆனல் 1937-ல் மறுபடி சைனு யுத்தத்தை ஜப்பான்
ஆரம்பித்துவிட்டது.

சைனுவால் சமாளிக்கமுடியாதென்றே யாவரும் நினைத்தனர். ஏனென்றால்
சைனுவில் ஜப்பானைப்போல் பணமோ, யந்திரசாலைகளோ, நவீனமான யுத்த
சாமான்களோ கிடையாது. இதற்குள்ளாக நான்கிங் பட்டணத்தையும் ஜப்பான்
பிடித்துக்கொண்டது.

இருந்தாலும் சைனுவில் வியப்பை அளிக்கக்கூடிய மாறுதல் நிகழ்ந்தது.
கொரில்லா, யுத்தம், பூதசன முறை முதலியவைகளைக் கையாண்டு $4\frac{1}{2}$ வருஷ
காலமாக எதிரியைத் தடுத்தே வந்திருக்கிறது. எதிரியோடு சண்டைசெய்யும்
போதே மேற்கு பாகத்தில் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து, ஜனங்களை அமைதி
யாக இருக்கும்படி ஏற்பாடுசெய்து, படிப்பு முதலியவைகளை நடத்திவந்தது.

ஆனதினால்தான் யுத்தத்தால் அதிக சோர்வு பெற்றிருந்தாலும் பூரா
களைக்காமல் சண்டைசெய்துவருகிறது. மேலும் நேசதேசங்களின் உதவியும்,
ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் பழைய பாத்தவ்யம் புதுப்பிக்கப்பட்டது.
இனிமேல் நல்ல காலம்தான். ஏற்கனவே இருந்த பர்மா ரஸ்தாவை எதிரிகள்
மூடிவிட்டாலும் புதிதாக சைனுவிற்கு இந்தியாவிலிருந்து ஒரு ரஸ்தா போடப்
பட்டிருக்கிறது. இனிமேல் சைனு முதலிய நேசநாடுகள் ஒன்றுசேர்ந்து
எதிரிகளை முடிவாகத் தோற்கடிக்கும் சமயம் நெருங்கிவிட்டதென்றே சொல்ல
லாம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானுடைய முதல் நம்பர் எதிரி.** ஹிட்லர் மெயின் காம்ப் என்ற புஸ்தகத்தை எழுதியிருப்பதுபோல டானகாவின் ஞாப
கார்த்தமாக ஜப்பானிலும் ஒரு புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்த
கத்தில், சைனு முதல் ஆரம்பித்து உலகிலுள்ள எல்லா நாடுகளையும் பிடிக்க
வேண்டுமென்று ஒரு திட்டம் காணப்பட்டிருக்கிறது. ஆனல் இந்த திட்டம்
1929-ல் போடப்பட்டது. 10 வருஷங்களுக்குள் முடிந்திருக்கவேண்டும்.

டானகா ஞாபகார்த்தப் புஸ்தகத்தில் சொல்லியபடி ஜப்பானுடைய திட்டங்
களின்படி ஒன்றும் செய்யமுடியவில்லை. சைனுவையே இன்னும் பிடித்த
பாடில்லை. ஆனல் சைனுதான் மேலும் மேலும் பலம் பெறுகிறது. தென்
மேற்குப் பஸிபிக்கில் ஜப்பானுடைய மின்னல் படையெடுப்புகளும் அவ்வளவு
மும்மரமாக ஆகவில்லை. சிங்கப்பூரைத்தான் பிடித்திருக்கிறது. ஜாவா, பர்மா,
பிலிப்பைன்ஸ் முதலிய இடங்களில் ஜப்பானியப் படையெடுப்புகளின் வேகம்
குறைந்துவருகிறது. பிரிடன் பேரில் நாஸி விமானப்படையெடுப்பிற்குத் தடை
யேற்பட்டதாலும், ருஷ்யாவில் தோல்வி ஏற்படுவதாலும் நாஸி திட்டங்கள்
சிதைந்து வருவதுபோல் பல இடங்களில் ஜப்பானியத் திட்டங்களுக்கும் தடை
யேற்பட்டுவருகிறது. இவ்விதத்தடைதான் ஜப்பானுக்கு ஏற்பட்டுள்ள முதல்
நம்பர் விரோதி.

**இரண்டாவது டங்கர்க் சண்டையும்; அதனுல் நேர்ந்த பயனும்.** சில நாட்களுக்கு முன் ஒருவர் நம்மை சில கேள்விகள் கேட்டார். அதாவது சிங்கப்பூர் எதிரி வசமாகி, ஜாவா, பர்மா முதலியவைகளுக்கு அபாயம் நெருங்கி வந்தாலும நாம் ஏன தைரியம் கொள்ள வேண்டுமென்று கேட்டார். ஆனல் அவர் இந்து மஹா சமுத்திரமும், இந்தியா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா மத்தியக்கிழக்கு முதலிய நாடுகளுக்கும் பயம் வந்திருப்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏதோ மறதியாக விட்டுவிட்டார் என்றே வைத்துக்கொள்ளுவோம். இருந்தாலும் நாம் தைரியமாகத்தானிருக்கிறோமென்றே பதில் சொல்லுகிறோம். ஏனென்ருல் முடிவான வெற்றி கிடைக்குமென்ற ஒரே நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் டங்கர்க் சண்டையை ஞாபகப்படுத்துகிறோம். அதாவது டங்கர்க் சண்டையில் நமது படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்ள நேர்ந்தாலும் மறுபடி பிரிடனைப் பலப்படுத்திக் கொள்ளவும் ஆபிரிக்காவில் இதாலிக்குச் சொந்தமான நாடுகளைக் கைப்பற்றவும் முடிந்தது. கிரீட்டிலிருந்த நமது படைகளை அழைத்துக்கொண்டதும் மத்தியக் கிழக்கு நாடுகளான இரான் இராக், ஸிரியா முதலிய நாடுகளைக் காபந்து செய்தோம். இப்போது சிங்கப்பூரிலிருந்து நமது படைகள் வெளிவந்திருக்கின்றன. இனிமேல் ஏதாவது ஒரு விசேஷ சம்பவம் நிச்சயம் நடக்கவேண்டியது தான். பஸிபிக்கில் நேசதேசப் படைகள் அதிக பலத்தை அடையும் என்று சொல்லலாம்.

மேலும் 1757-ல் ஏழு வருஷச் சண்டை ஆரம்பமானதையும், 1803-ல் நெபோலிய யுத்தம் நடந்ததையும் 1917 மஹா யுத்தம் நடந்ததையும் பார்த்தால் பிரிடிஷ் சாம்ராஜ்யமே போய்விடுமென்று நினைக்கப்பட்டது. ஆனல் எப்படியோ சமாளித்துக்கொண்டு வெற்றியுடன் வந்தது. இதையும் அவருக்கு நாம் எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

அந்த சமயங்களிலெல்லாம் சுக்குப்பொடிபோட்டு ஜயம் அடையவில்லை. கேவலம் அதிர்ஷ்டத்தினுலும் ஜயம் வரவில்லை. ஆனல் உண்மையாதென்ல் பிரிடனின் அந்தரங்கமான வலுவும், தீர்க்காலோசனேயும், சமயத்திற்கேற்றயோசனேயும், தைரியமும், முக்கியம, முக்கியமில்லாத விஷயங்களைக் கண்டுபிடிக்கும் சக்தியமே பிரிடனுடைய வெற்றிக்குக் காரணமாக இருந்தன. உலகம் பூரா எக்கண்டமாக நடந்துவரும் இந்த மஹா யுத்தத்தில் சிங்கப்பூர் சண்டை ஒரு ஏகதேசமான விஷயம். எதிரி தோற்றுப் போகும்படி நாம் முன்னேறித்தாக்கும் போது மற்ற இடங்கள் நமது வசமாவதுபோல சிங்கப்பூரும் வந்துவிடும்.

தாரதரம் அறிந்து பிரிடன் நடந்து கொள்ளும். லக்ஷியங்களை மனதில் வைத்துக்கொண்டு அதற்கேற்றவாறு திட்டங்களைப் போட்டுக்கொண்டு அமைதியாக நடந்து கொள்ளுவதென்பது பிரிடிஷ் மந்திரிகளுக்கு இயற்கையான குணம். இப்படி நடந்துகொள்ளும் பிரிடிஷ் மந்திரிகளிடம் நமக்கு நம்பிக்கையிருந்தால் வெற்றிகிடைப்பதும் நிச்சயம். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வெகு நன்ருக இவ் விஷயத்தைச் சொன்ஞர். "ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் ஆவலாக எதிர் பார்த்துக்கொண்டிருக்கும்படியே, புதிதான உலக அமைப்பு ஏற்படுவதற்கான சின்னங்கள் நமக்கு சாதகமாகவே காணப்படுகின்றன".

வி வி வி வி வி வி வி

**வஸந்த கால தாக்குதல்கள்.** வரப்போகும் வஸந்த காலத்தில் நிச்சயமாக அச்சுநாட்டினர் எதிர்ப்பார்கள் என்று வதந்திகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனல் அச்சுநாட்டினர் முன் போலவே மீண்டும் மூர்க்கத்தனமாக எதிர்க்கப்போகிருர்களாவென்றும், நேசதேசத்தார்கள் பலமாகத் திருப்பித் தாக்குவார்களாவென்றும் இப்பொழுது நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. ஜெர்மனி வஸந்த காலத் தாக்குதலுக்கு அவசரம் அவசர [illegible] காலம் செ[illegible] [illegible] துடன் எதிர் பார்த்து[illegible].



நேசதேசத்தார்கள் அதிகமாக ராணுவங்களை சேகரம் செய்வதற்கு முன்பே அவர்களை முறியடிக்கவேண்டும் என்று ஹிட்லரும், அவசரப்படுகிருன்.

அதைப்போலவே டோஜோவும் தடபுடலாகக் காரியங்களைச் சாதிக்க எத்தனிக்கிருன். அவன் துறைமுகங்களை மட்டில் பிடித்திருக்கிருன். ஆனல், கப்பல் தளங்கள் இல்லாததினுல், பழுதுபட்ட கப்பல்களை செப்பனிட வசதியில்லாமல் போய்விட்டது. மேலும் கடலாதிக்கமில்லாமல் டோஜோ துறைமுகங்களை மட்டில் பிடித்ததினுல் அவனுக்கு என்ன பிரயோஜனம். இதுவரையில் அவனுக்கு ஏராளமாகக் கப்பல்கள் நஷ்டம். இன்னும் ஏதாவது தாமதம் ஏற்பட்டால் அமெரிக்க, பிரிடிஷ் கப்பல்கள் ஒன்றுசேர்ந்து தாக்குமென்று பயந்துகொண்டு இருக்கிருன்.

இனி வரப்போகும் வஸந்தகாலத் தாக்குதல்களில், ஏற்கனவே 1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஜெர்மனி, ருஷ்யாவுடன் யுத்தத்தில் இறங்க ஆரம் பித்த சில மாதங்களில் வெற்றிக்குமேல் வெற்றியாக அடைந்துவந்ததுபோல இனிமேல் அவ்விதம் எதிர்பார்ப்பது முடியாத காரியம். ஏனென்றல், அப் பொழுது ஏராளமாக டாங்கிகளும், பீரங்கிகளும், விமானங்களும் இருந்தன. அவைகள் யாவும் இப்பொழுது ருஷ்யச் சமவெளிகளில் பாழாகப்போய்க்கிடக் கின்றன. அவைகளை நடத்திச் சென்ற பல திறமையான ஜெர்மன வீரர்கள் யுத்தரங்கத்தில் இறந்துபோய்விட்டனர். மீதியுள்ளவர்கள் யுத்தத்தில் அடிபட்டு அலுத்துப்போயிருக்கிருர்கள். அநேக யந்திர சாதனங்களும், ஒழுங்காக அமைக் கப்பட்டுள்ள படைகளும் உதவிக்கு இருந்தாலும் யுத்தத்திலீடுபடும் மனிதர் களுக்குப் பொறுமை. தேகவலிவு. ஊக்கம் முதலியவைகளுக்கு ஒரு எல்லையுண்டு. அதைநத்தே ஜெர்மன் சைனியம் தளர்ச்சியடைந்துவிட நேரிட்டுவிட்டது. ஆனல் ருஷ்யர்களோ மாரிகால எதிர்ப்பில் யந்திரங்களுக்குப்பதிலாக குதிரைப் படைகளை வைத்துக்கொண்டு சாமான்களுக்கு அழிவில்லாமல் செய்துவிட்டார்கள். மேலும், அந்த சொற்ப அவகாசத்திற்குள் புதிது புதிதாக யுத்த தளவாடங் களை உற்பத்திசெய்து ஏராளமாகச் சேமித்துவைத்திருக்கின்றனர். மேற் சொல்லிய காரணங்களினுல் வரும்காலத்தில் ஜெர்மன் புதிய எதிர்ப்புகள் தடை பட்டுவிட்டால், 1918-ம் ஆண்டில் ஜெர்மனி தோல்வியடைந்ததுபோலவே இப்பொழுதும் ஜெர்மனியில் கலகம் ஏற்பட்டு ஏற்கனவே அதற்கு ஏற்பட்ட கதிதான் மறுபடியும் நேரிடும்.

வி வி வி வி வி வி

**ருஷ்யாவின் குறை.** சமீபகாலமாக ருஷ்யா அதிக பலத்துடனும், மனுதிடத்துடனும் எதிரிகளை எதிர்த்து வெற்றியடைந்துவருகிறது யாவருக்கும் வியப்பை அளிக்கிறது. ஜெர்மனிக்கு ஏராளமான உதவி இருக்கிறதென்றும், ஆனல் ருஷ்யாமட்டில் தனிமையாக நின்று அதை எதிர்த்து தீரவேண்டியிருக்கிறது என்றும் ஸ்டாலின் ருஷ்யர்கள் முன் னிலையில் செஞ் சேனை வருஷக்கொண்டாட்டத் தினத்தன்று பேசினர். இதே மாதிரியாகவே அவர் சென்ற நவம்பர் மாதத்திலும் ஜெர்மனிக்கு எதிராக மற்ருெர் போர்முனையை பிரிடிஷார் ஐரோப்பாவில் ஏற்படுத்தி ஜெர்மனியின் பலத்தைக் குறைக்க எத்தனிக்கவில்லையென்றும் பேசியிருக்கிருர். ஆனல் பிரிட னுடைய உண்மை நிலையைப்பற்றி நாம் சொல்லுவோம். சில காலத்திற்கு முன் ருஷ்யாவும் ஜெர்மனியுடன் சேர்ந்து தாக்கிவந்த காலங்களிலெல்லாம் பிரிடன் தனிமையிலேயே நின்று வெவ்வேறு போர்முனைகளில் சண்டையிட்டிருக்கிறது. இப்பொழுதும்கூட பிரிடன் எதிரியை வெவ்வேறு போர்முனைகளில் எதிர்த்து பலமாகத் தாக்கிவருகிறது. லிபியாவிலும், ஜெர்மனிக்குச் சொந்தமான தொழிற் சாலைகள், துறைமுகங்கள். போக்குவரத்துகள் இவைகளில் பிரிடன் விமானங் களின் உதவியைக்கொண்டு கடுமையாகக் குண்டுகளை பிரயோகித்து வருகிறது. சமீபத்தில் எதிரிக்கு [illegible] [illegible] [illegible] விஷயம்.

மேலும் தற்போது புதிது புதிதாக போர்முனைகள் ஏற்பட்டு யுத்தம் உலக யுத்தமாக மாறிவரும்பொழுது, நேசநாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் தேசத்தைப் பலப்படுத்தப் பார்க்கின்றது. இம்முயற்சியில் யாவரும் ஒன்று சேர்ந்து பொதுவான யுத்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற விஷயத்தை மறந்துவிட்டார்கள். "இவ்வுலக யுத்தத்தில் எதிரியைத் தோற்கடிப்பதற்கான பொதுவான யுத்த தந்திரங்களைக் கவனித்து, அதற்குத் தகுந்தாற்போல் திட்டங்களை அமைத்துக்கொள்ளவேண்டுமேயல்லாது, எதிரி தாத்காலிகமாகத் தாக்குமிடங்களைக்கொண்டு அவ்விடங்களை மட்டில் பலப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்வது சரியல்ல. ஆகையால், இவ்வுலக யுத்தத்தில் ஈடுபட்ட நேசநாடுகள் யாவும் ஒன்று சேர்ந்து, உலகம் பூராவிலும் ஆங்காங்கு நடக்கும் யுத்தங்களில் எதிரியைத் தோற்கடிக்கப் பொதுவான திட்டங்கள் போடவேண்டும். இந்தக் கொள்கையைக்கொண்டு, நேசநாடுகள் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகத் திட்டங்கள்போட்டு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகின்றனவோ, அவ்வளவு சீக்கிரத்தில் நேசநாடுகளுக்கு வெற்றி கிடைத்துவிடும்" என்று இதற்கு முன் ஆஸ்திரேலிய பிரதம மந்திரியாகயிருந்த, மிஸ்டர் மென்ஸீஸ் ((Menzies) உண்மையை வெளியிட்டிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**மூன்று விதமான பிரச்னைகள்.** விஷி அரசாங்கம் நாஸிகளுக்கு உட்பட்டு நடப்பதால் மூன்று பிரச்னைகள் உண்டாகின்றன:—டாகர், மெடகாஸ்கர், பிரெஞ்சுக் கப்பற்படை. ஸிரியாவையும் இந்தோ-சைனாவையும் விட்டுக்கொடுத்தமாதிரி மடகாஸ்கரையும் விட்டுவிட்டால் தென ஆபிரிக்காவில் நாஸிகளுக்கு நல்ல தளம் கிடைத்துவிடும். டாகரும் நாஸிகளுக்கு உட்பட்டால் தென் அட்லாண்டிக் பிரதேசத்திற்கும் தென் அமெரிக்காவிற்கும் அதிக ஆபத்துதான். 26,500 டன்னுள்ள டங்கர்க்கு என்ற பிரெஞ்சுச் சண்டைக் கப்பலை பெர்ஸ் எல் கபீரிலிருந்து டூலானுக்கு மாற்றியதால் மேற்கு மத்தியதரைக்கடலில் பிரெஞ்சுக் கப்பற்படைக்கு ஆதிக்கம் ஏற்படலாம். பொருளாதார யுத்த மந்திரியாயிருந்த டால்டன் பிரசுரித்ததிலிருந்து ரோமலுக்குப் பிரெஞ்சுக் கப்பல்களில் உதவிபோயிருக்கிறதென்று தெரிகிறது. அமெரிக்கா இதைப்பற்றிக் கேட்டதற்கு இனிமேல் ஒரு உதவியும் செய்வதில்லையென்று பிடேன் பதில் சொல்லியிருக்கிறான். இருந்தாலும் அவன் வார்த்தைகளை நாம் நம்புவதற்கில்லை. ஏதோ அதிகக் கஷ்டப்படுவோமாயம் அதற்காகச் சில சௌகரியங்களைச் செய்துகொள்ளுவதாக விஷி சொல்லுவது உண்மையாகாது. பிரிடிஷ் அமெரிக்க அரசாங்கங்கள் தீவிர நடவடிக்கையெடுத்துக் கொள்ள நினைத்திருக்கின்றன. நியூ கலடோனியாவில் பிர் பிரெஞ்சு ஆட்சியைத்தான் அமெரிக்க அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ராக்ஷஸ தந்திரம்.** மனிதனை முதலில் தூங்கவைத்துப் பிறகு அவனுடைய உடம்பிலிருந்து ரத்தத்தை எடுத்துக் குடிப்பது என்பது ஒரு ராக்ஷஸத் தந்திரம். அதைப்போல நாஸி ராணுவ அதிகாரிகள் சில விஷயங்களைச் சொல்லிவருகின்றனர். அதாவது பெரிய நகரங்கள்மேல் குண்டுகள் வீசுவது பிரயோஜனமில்லையென்றும், பெர்லின் முதலிய ஜெர்மன் நகரங்கள்பேரில் பிரிடிஷ் விமானங்கள் குண்டு போட்டாலும், போடாவிட்டாலும் ஜெர்மானியர் லண்டன் முதலிய நகரங்களில் குண்டுகள் போடப்போவதில்லையென்றும் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லி பிரிடனை விமானப் படையெடுப்புகள் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேதான் நாஸிகள் முயற்சிக்கின்றனர். ஆனால் பிரிடன் ஓயாமல் ஜெர்மன் நகரங்களைத் தாக்கிவருவதோடு பிரிடனின் பாதுகாப்பையும் பலமாக செய்துவிட்டது. ப்ரன்வால், ரோஸ்டக், கீல் முதலிய ஜெர்மன் பட்டணங்களைத் தாக்கிவருகிறது. இந்த மாரிகாலம் முடிந்ததும் ஜெர்மன் தொழிற்சாலைகளையும் விமான மூலம் தாக்கும். ஆகவே விமானப்படையெடுப்பு செய்வதில் பிரிடனுக்கு அதிக நம்பிக்கையிருக்கிறது.

**மூன்று புழுகர்களின் கூட்டம்.** அச்சநாட்டினர் பொய் வதந்திகளை எப்பொழுதும்போலவே பரவி வருகின்றனர். அப்
படிச் செய்தால் நேசநாடுகளின் ஒற்றுமை கெட்டுவிடும் என்று வீண் பிரமை
கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தில் ஏற்படும் ஒவ்வொரு தோல்விக்கும் சர்ச்சில் தான்
காரணம் என்று ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லப்படுகிறது. உதாரணமாக ஸயாம்
குடாவில் ஏற்பட்ட யுத்தக் கப்பல்களின் நஷ்டத்திற்கும், சிங்கப்பூர் விழுந்த
திற்கும், ஜெர்மன் கப்பல்கள் தப்பி ஓடியதற்கும் சர்ச்சில் தான் காரணமாம்.
இன்னும் இதைப்போல் பலவிதமான பொய் வதந்திகளை ஜெர்மன் ரேடியோ
பரவச் செய்கிறது. எப்படியிருந்தாலும் ஒன்றையும் பொருட்படுத்தாமல்
காமன்ஸ் சபையில் யாவரும் சர்ச்சிலிடத்தில் திடமான நம்பிக்கை வைத்திருக்
கிறார்கள். சர்ச்சிலின் கீழ்தான் மந்திரி சபை மறுபடி அமைக்கப்பட்டது.
ஏதோ சில மந்திரிகள் மாற்றப்பட்டார்கள்.

2. பிரெஞ்சுக் கடற்கரையெங்கும் மாஜினோ அரண்களைப்போல் பலமாகக்
காபந்து செய்து எவ்விதமான எதிர்ப்புகளையும் தடுக்கலாமென்று ஹிட்லர் தற்
புகழ்ச்சி கொண்டிருந்தான். ஆனால் ப்ரன்வால் என்ற இடத்தில் பிரிடிஷ் தாக்
குதல் ஏற்பட்ட சம்பவத்திற்குப் பிற்பட்டு எதிரிகளின் எதிர்ப்புகள் நேரக்
கூடியவை தான் என்று இப்பொழுது ஹிட்லர் சமாதானம் சொல்லுகிறான்.

3. "மத்தியதரைக்கடல் இப்பொழுது நம்முடைய ஆதிக்கத்தில் தான்
இருக்கிறது. அங்கு ஒன்று, இரண்டு பிரிடிஷ் கப்பல்களைத்தவிர இதாலியக் கப்
பல்கள் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன" என்று பிப்ரவரி மாதம் 12-ம் தேதி
யில் ரோமிலிருந்து ஒலிபரப்பப்பட்டது. இதற்குத் தகுந்த பதில் பிரிடிஷ் கப்
பற்படை இலாகா பிப்ரவரி 18-ல் ஒரு செய்திவிடுவித்திருக்கிறது. அது பின்
வருமாறு:—

"மத்தியதரைக்கடலின் மத்திய பாகத்திற்கு துணைக் கப்பல்களில் சாமான்
கள் அனுப்புவதற்கு பிரிடிஷ் கப்பல்கள் சென்றபோது எதிரிக்கும் நமக்கும் பல
கப்பற்சண்டைகள் பிப்ரவரி 13-ம் தேதிக்கும் 16-ம் தேதிக்கும் இடையில் ஏற்
பட்டன. எதிரி சிறு சண்டைக் கப்பல்களையும் நாசகாரிகளையும் அனுப்பினான்.
அவைகள் ஒன்று கூட சண்டை செய்ய முடியவில்லை. ஆனால் அவைகள் பலமா
கத்தாக்கப்பட்டன. எதிரியின் 2 க்ரூயிஸர்களும், 1 நாசகாரியும் தாக்கப்பட்டன.
இதாலியக் கப்பற்படை பயந்து ஓடியது. இருந்தாலும் விடாமல் பிரிடிஷ் நீர்
மூழ்கிக் கப்பல் எதிரியின் கப்பல்களை இரண்டு தடவை தாக்கிற்று." இதுவே
இதாலிய பொய் பிரசாரத்திற்குப் பதிலாகும்.

4. ஜெர்மனி, இதாலி இரண்டு நாடுகளையும்விட ஜப்பான் தான் கொஞ்சம்
அதிகத் துணிகரமான வதந்திகளைப்பரவச் செய்கிறது. உதாரணமாக ஆஸ்திரே
லியர்கள், இந்தியர்கள் பிரிடிஷ்காரர்கள் மூவருக்கும் சண்டையை மூட்டும்
விதமாக ஒலிபரப்பிற்று.

(a) ஒலிபரப்பு, பிப்ரவரி 18.—"ஆஸ்திரேலியத் துருப்புகள் இவ்வளவு
சீக்கிரத்தில் பின் வாங்கியதால்தான் சிங்கப்பூர் விழுந்தது என்று ஜப்பானியர்கள்
வசத்திலிருக்கும் சில பிரிடிஷார் குறைசொல்லுகிறார்கள்",

(b) மற்றொரு ஒலிபரப்பு, பிப்ரவரி 18.—"பிரிடிஷ் துருப்புகளிடத்தில்
ஆஸ்திரேலியர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியர்களும்,
இந்தியர்களும்தான் கைதிகளாகியிருக்கிறார்கள்."

(c) ஒலிபரப்பு, பிப்ரவரி 14.—"சிங்கப்பூரைப் பாதுகாத்தவர்கள்
முக்கியமாக அரைமனதுடன் சண்டை செய்த ஆஸ்திரேலியத்துருப்புகளில்
11-வது பகுதியும், இந்தியத் துருப்புகளில் 7-வது பகுதியும்தான்.

5. "இந்தியா, இந்தியர்களுக்கும், ஆசியா நாட்டினருக்கும் மட்டில்தான்".
என்றும், அதற்காகத்தான் ஜப்பான் சண்டையிடுவதாகவும், சமீபத்தில்
ஜப்பான் ஹிந்தி பாஷையில் ஒலிபரப்பியது. இப்பொழுதுதான் இதன் உண்மை
வெளியாயிற்று. ஏனென்றால் ஜப்பானின் அபிப்பிராயப்படி இந்தியர்கள் ஆசியா

நாட்டினரல்லவாம். சைனவை ஆசியா தேசமாக ஜப்பான் கருதவில்லை என்று நமக்கு முன்னமேயே தெரியும். ஆசியா என்ருல் ஜப்பானுக்கு மட்டும்தான் அன்னியக்கு என்ருல் இந்தியாவை ஆசியா நாடாக ஜப்பான் கருதவில்லை. சைனவையும், இந்தியாவையும் கைப்பற்றி ஜப்பானுடைய நாடாகச் செய்துகொள்ளும் எண்ணம்தான் ஜப்பானுக்கு இருக்கிறது. ஆசியா என்ருல் ஜப்பானைத்தான் குறிக்குமென்று சொல்லுவதாலும் இந்தியா, ஆசியா வாசிகளுக்குத்தான் என்று சொல்லுவதாலும் இந்தியா ஜப்பானுக்குட்பட வேண்டுமென்றும் ஆகிறது.

வி வி வி வி வி வி வி

**புதிதாக ஆட்களைப் பொருக்குவது.** மறுபடி நாம் யுத்தத்திற்காக ஆட்கள் பொருக்குவதைப்பற்றி பிரஸ்தாபிக்கிறோம். இப்பத்திரிகையின் மற்ருெரு பாகத்தில் அபேக்ஷகர்களுக்குத் தேவையான படிப்பு முதலியவைகளைப்பற்றிய நிபந்தனைகளைப் பிரசுரித்திருக்கிறோம். அதைப்பார்த்தால் பலவிதமான தொழில்களுக்கு ஆட்கள் தேவையாக இருக்கும் விஷயம் தெரியவரும். ஒவ்வொன்றிற்கும் லாயக்கான சந்தர்ப்பங்கள் அளித்திருப்பதுடன், வரும் காலத்திலும் நல்ல ப்ரமோஷன் முதலியவை கிடைக்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மெகானிக்குகள், குமாஸ்தாக்கள் முதலியோருக்குத் தேவையிருப்பது போல இஞ்ஜினியர்களுக்கும், உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கும் தேவையிருக்கிறது.

ஜெனரல் மாம்ஸ்வொர்த் சொல்லியிருக்கும் விதமாக ஆபீஸர்கள் பிரச்னைதான் சிருக்கலாயாகயிருக்கிறது. வெறும் படிப்புள்ளவனை மாத்திரம் டிரயினிங் அளிக்கும் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களாகப் போட்டு பிரயோஜனமில்லை. ராணுவ வேலைக்கும் மற்ற பொது வேலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. புஸ்தகங்களைப் படித்து பட்டம் பெற்றிருந்தால் மாத்திரம்போதாது. நெருக்கடியான சந்தர்ப்பத்தில், உதாரணமாக தீ விபத்து, தகுந்த விதமாக அறிவை உபயோகிக்கும், சக்தி சரீர திடமும், தயவு, தாக்ஷிண்யம் முதலிய பெரும் குணங்கள் இருந்தால் ஒரு கூட்டத்திற்குத் தலைவனாக முடியும். இவ்வித குணங்கள் நிறைந்தவனாக இருந்தால் தான் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஜனங்களைக் காபந்து செய்து வெற்றி கிடைக்கும் வரை சிரமம் எடுத்துக்கொள்ள முடியும்.

---

## ராணுவ இலாகாவுக்கு ரீஷ்நௌ எப்படியோ, அவ்விதமே ஜெர்மனியின் கைத்தொழிலுக்கு டோட் (Todt).

## திடீரென்று அவருக்கு மரணம் ஏற்பட்டது.

மேஜர் ஜெனரல் பிரிட்ஸ் டோட் என்பவர் ஹிட்லரின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஜெர்மனியிலிருக்கும் தொழிலாளிகளின் தலைவர். அவர் ஸீக்பிரீட் (Siegfried) அரணைக் கட்டியவர். வெடிமருந்தும், யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யும் இலாகாவுக்கும் அவர் மந்திரி. அவர் விமான விபத்தில் இறந்தார். அவர் ஹிட்லருக்கு மிகுந்த சிநேகிதராக இருந்தபோதிலும், யுத்தத்தில் அரிய சேவைகள் செய்திருந்தபோதிலும் சமீபத்தில் வெளிவரும் பிரஸ்தாபங்களிலிருந்து அவருடைய செல்வாக்குக் குறைந்ததாகத் தெரிகிறது. இது விவரம் டெய்லி டெலிகிராப் பத்திரிகை மூலம் வெளியாகிறது. சென்ற வருஷத்தில் ஜெர்மனியில் யுத்த காலத்தில் பொருளாதார இலாகாத் தலைவராகவும், பெருக்கு மாத்திரம் மந்திரியாக இருந்த பங்க் என்பவருக்குப் பதிலாக டோட் நியமிக்கப்பட்டார். பங்க் என்பவர் யுத்தத்திற்கு நீண்டகாலம் திட்டம்போட்டு வேலைசெய்து வந்தார். ஆனால் டோட் என்பவரோ யுத்தம் சிறிது காலம்தான் நீடித்திருக்குமென்று எண்ணி வேலைசெய்துவந்தார். ஆகையால் நீண்டகாலம் யுத்தம் நடந்தால் ஜெர்மன்பால் சமாளிக்க முடியாமல் யுத்த முஸ்தீப்புகள் சீக்கிரம் குறைவுபடும் என்றும். கைத்தொழிலும் சோர்வடையுமென்றும், ஜெர்மன் தொழிற்சாலை முதலாளிகள் கூறிவந்ததை அவர் மதிக்கவில்லை. இப்பால் ஜெர்மனி நீண்டகால யுத்தத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று ஹிட்லருக்குத் தெரிந்த பிறகு டோட் என்பவர் போட்ட கைத்தொழில் திட்டம் இன்னும் சில மாதங்களுக்கு மேல் தாங்காது என்று தெரிந்தவுடன் அவர் செல்வாக்குக் குறைந்துபோய் விட்டது.

### ரீஷ்நௌவுக்குப் பிறகு.

தற்சமயம் ராணுவ இலாகாவில் வான் ரீஷ்நௌவுக்கு என்ன மதிப்போ, ஜெர்மனி கைத்தொழில் விஷயமாக டோட் (Todt) என்பவருக்கும் அதே மதிப்புத்தான் இருந்தது. ரீஷ்நௌ சென்ற மாதத்தில் திடீரென்று இறந்தார். சென்ற சில மாதங்களாக திடீரென்று மரணமோ, கடும் நோயோ ஏற்பட்ட நாஸித் தலைவர்களில் டோட் என்பவர்தான் இதுவரையில் கடைசி. இதைத் தவிர தளகர்த்தர் லீப் என்பவரைக் குறித்தும் பல வதந்திகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர் ஓடிப்போய் விட்டதாகவும், சிறை பட்டிருப்பதாகவும், அவருக்கு கடுமையான டைய்பாய்ட் ஜ்வரம் (Typhoid) பிடித்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றன. தளகர்த்தர் வான் லீஸ்ட் என்பவருக்கு டைபாய்ட் (Typhoid) ஜ்வரம் ஏற்பட்டிருப்பதாகவும், தளகர்த்தர் கூடரியன் என்பவருக்கு நிமோனியா ஜ்வரம் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

### அடிமைத் தொழிலாளிகளின் படை.

ஹிட்லரின் யுத்தப் பிரயத்தனங்களுக்கு டோட் என்பவரின் பிரயாசையினால் ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஸ்தாபனத்தில் ராஜீய கைதிக் கூட்டங்களிலிருந்து பொருக்கப்பட்டவர்களை அடிமைகளாக்கி வேலை வாங்கினார். மேலும் அதில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளிலிருந்து பொருக்கப்பட்டவர்களும், இதர நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட தொழிலாளிகளும், ஏற்கனவேயே நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட ஜெர்மானியர்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனியின் மேற்குச் சுவர் அல்லது ஸீஜபிரட் அரண் மேற்சொல்லிய தொழிலாளிகளால் டோட் மேல்ப்பார்வையின் கீழ் கட்டப்பட்டது. 1939-ம் வருஷத்தில் ஜெர்மன் சைனியம் போலந்தில் போர்செய்து கொண்டிருக்கும் பொழுதே அவசர அவசரமாக இந்த வேலை முடிவு செய்யப்பட்டது. பிற்பட்டு ஐரோப்பாவில் நடந்த யுத்தத்தில் துரிதமாகக் கட்டடங்கள் கட்டுவதோ ரஸ்தாக்கள் பழுதுபார்ப்பதோ, பாலங்கள், விமான நிலயங்கள் ஏற்படுத்துவதோ இன்னும் ஜெர்மனியின் முன் அணி சைனியங்களுக்குப் பின்னால் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்துவதோ எல்லாம் இந்த டோட் ஸ்தாபனத்தின் முக்கியமான வேலையாக இருந்தது. இந்த ஸ்தாபனத்திலிருந்து பகுதிகள் பிரிக்கப்பட்டு யுத்த அரங்கத்திலும் டாங்கிகள், வண்டிகள், பீரங்கிகள், இவற்றைப் பழுதுபார்க்க சாலைகள் ஏற்படுத்திக்கொண்டு ஜெர்மன் துருப்புகளுடன் அந்தப் பகுதிகளும் அனுப்பப்பட்டன. அழிக்கப்பட்ட தொழிற்சாலைகளை ஒழுங்குபடுத்த துருப்புகளுக்குப் பின்னால் இந்த தொழிலாளிகளின் பகுதியையும் அனுப்புவதற்கு டோட் ஏற்பாடு செய்திருந்தார். போலிஷ் படையெடுப்பு முடிந்ததும் ஜெர்மனியின் கிழக்கு எல்லையைப் பலப்படுத்த இந்தப் படையில் ஒரு பகுதியை அனுப்பியிருந்தார் பிறகு இங்கிலீஷ் கால்வாய் கரையோரத்திலும், மேற்கு ஐரோப்பாவில் ஆக்கிரமித்த நாடுகளில் அட்லாண்டிக் சமுத்திரக் கரையில் போர் நடத்துவதற்கு சாதகமாகக் கோட்டைகளும் அவர் கட்டினார்.

---

## ஜெர்மன் மக்களின் சந்தேகங்களும், அக்கரையின்மையும். சைனியத்திற்கும், நாஸிக் கக்ஷிக்கும் உள்ள அபிப்பிராய பேதங்கள்.

## ஜெர்மனியில் உள்நாட்டில் பொதுமக்களின் உத்ஸாகத்தில் குறைவு.

ஜெர்மன் பொதுமக்களிடம் சந்தேகங்களும், உணர்ச்சிக் குறைவும் உண்டாகியிருப்பதாகவும், S. S. உத்தியோகஸ்தர்களும், ராணுவ அதிகாரிகளும் முகான்மையாயிருக்க ரகசியமாக பேட்டி போடுவதையும், ஜெர்மனியில் ஜனங்களின் யுத்தத்

தைப்பற்றிய மனோபாவத்தில் மாறுதலையும் குறித்து பெர்லினிக்கு சமீபத்தில் சென்றிருந்த நடுநிலைமை நாட்டிலிருந்து வந்திருக்கும் நிருபர் எழுதுகிறார்.

ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த நாள்முதல், அங்குள்ள ஆறு கோடி மக்களில் ஒருவரும் அரசாங்க விஷயமாகப் பேசக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவும் இருந்தும்கூட, இப்பொழுது ஹிட்லரின் அரசியலைப்பற்றி ஆங்காங்கு விரோதமாகப் பேசப்படுகிறது.

அடிக்கடி "எங்களுக்கு உண்மையைச் சொல்" என்று ஜெர்மன் மக்களின் கூக்குரல்கள் கேட்கின்றன. பல வருஷங்களாக அவர்களுக்கு அதிகாரம் கிடைக்குமென்று வாக்குறுதிகள் செய்யப்பட்டன. இதற்குமுன் சில மாதங்களில் தொடர்ந்தாற்போல் வெற்றி கிடைத்துவந்தன. அதனால் இவ்வளவு நாள் காத்திருந்தும் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால் ஒன்றும் தோன்றாமல திகைக்கின்றனர். தற்சமயம் அவர்கள் உணர்ச்சியில்லாதவர்களாக ஆகிவிட்டார்கள்.

## சந்தேகம் கொஞ்சம் கொஞ்சமாகத் தோன்றிவருகிறது.

சமீபத்தில் நான் ஜெர்மனியை விட்டுப்புறப்பட்டதும் உள்நாட்டிலிருக்கும் ஒவ்வொரு ஜெர்மானியனும் போரங்கத்திலுள்ள ஒவ்வொருவனைப்போலவே ஜெர்மனி இறுதியில் தோல்வியடைந்தால் இனி அது தலை தூக்கமுடியாமல் போய்விடும் என்று சந்தேகமற தெரிந்துகொண்டிருக்கிறான். அதனால்தான் ஒவ்வொருவரும் யுத்தத்தில் கட்டாயம் வெற்றிபெற தன்னால் முடிந்ததைச் செய்துவருகிறார்கள். இவ்விதம் செய்தாலும்கூட முடிவில் வெற்றிகிடைக்குமோவென்ற சந்தேகம் அவர்களுக்குத்தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

இப்பொழுதும்கூட ஜெர்மனியில் தினசரிப் பத்திரிகைகள் ஏராளமாக வாங்கலாம். அவைகளை ஒருவரும் ஜாஸ்தி வாசிப்பதில்லை. மேலும் அவைகளை வாசித்தாலும் முன் போல் அவைகளில் கண்ட விஷயங்களை நம்புவதும் கிடையாது. ஏனென்றால் பத்திரிகைகளில், நடப்புப்படி விஷயங்களை எழுதப்படவில்லையென்று சந்தேகிக்கிறார்கள்.

## ராணுவத்துக்கும் நாஸிக் கக்ஷிக்கும் உள்ள பேதம் வெளிப்படுகிறது.

இப்பொழுது ஜெர்மன் அரசாங்கத்தில் சைனியத்திற்கும் நாஸீக் கக்ஷிக்கும் வெகுநாளாக ஏற்பட்டிருந்த பிளவு இதுவரை மறைமுகமாக இருந்ததுபோக, இப்பொழுது வெளிப்படையாகத் தெரிகிறது. அதன் முடிவு துரிதமாகவும், கடுமையாகவுமிருக்கும். அவர்களுக்குள் ஏற்பட்ட கக்ஷிபேதங்கள், தெருக்களில் அடிதடி நடக்கக்கூடிய விதமாக இருப்பதுபோல் சொல்லும் கதைகள் எல்லாம் நம்பத்தகுந்தவையில்லை. இந்த பேதத்தை முன்னிட்டு சமீபத்தில் இறந்த படைத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படும் வதந்திகளும் பூராவும் உண்மையல்ல. கிழக்குப் போர்முனையில் ருஷ்ய, ஜெர்மன் சைனியங்கள் வஸந்த காலத்தில் நாஸிகள் தாக்குவார்கள் என்று எதிர்பார்த்து ஜெர்மன் சைனியங்களும், ருஷ்யச் சைனியங்களும் முக்கியமான ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொள்ள போட்டிபோடுகிறார்கள். அதைப்போலவே ஹிட்லரின் சொந்தப் பாதுகாப்புக்காக முதலில் ஏற்பட்டு, பிற்பட்டு விருத்தியடைந்த S. S. உத்தியோகஸ்தர்களும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும், ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் பெரிய பதவிகளுக்காக போட்டிபோடுகிறார்கள். ஆனால், அந்த ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அனுபவமில்லாத ஆடை அழகர்கள்தான். வெளிப்பார்வைக்கு நேசம்போலவும், சந்தோஷமாக இருப்பதுபோலவும் அவர்கள் காணப்பட்டபோதிலும், சமயம் பார்த்துத் தாக்குவதற்கு ரகசியமாக முயற்சிக்கிறார்கள்.

ஜெர்மன் சைனியம் போர் பலம் கொண்டிருப்பதால் அதற்கு அதிக செல்வாக்கு இருப்பதாக பெர்லினில் எண்ணப்படுகிறது. ருஷ்யாவில் 30,00,000 மனி



தர்கள் இறந்து அதிக நஷ்டம் நேர்ந்தபோதிலும் ருஷ்யாவைத் தவிர மற்ற எந்த எதிரியையும் ஜெர்மன் சைனியம் தாக்கி வெற்றியடையக்கூடிய அவ்வளவு பலமுள்ளதாக இன்னுமிருக்கிறது. ஆனபோதிலும் அவர்களுக்கு உணவும், உடையும், ஆயுத முஸ்தீப்புகளும் வேண்டும். அதற்கு ஜெர்மனியில் பயிற்சி பெற்ற தொழிலாளிகள் வேண்டும். ஏராளமான பேர்கள் இருந்து வேலை செய்தால்தான், ஜெர்மன் சைனியம் வெளியூர்களில் பயன்தரக்கூடிய விதமாக சண்டை செய்யலாம். ஆனால் இத்தகைய தொழிலாளிப்படை அங்குயில்லை.

## உற்பத்தியைத் திட்டப்படுத்துவது.

பயிற்சி பெற்ற ஒவ்வொரு தொழிலாளியும் குறிப்பிட்ட காலத்திற்குமேல் உபரியாகவே வேலைசெய்து வருகிறான். ஆக்கிரமித்த நாடுகளில் கட்டாயத் தொழிலுக்கு அதிகக் கூலி கொடுப்பதாக விளம்பரங்கள் செய்து அந்தந்த நாடுகளிலிருந்து யந்திரக் கருவிகள் செய்கிறவர்களும், விமான யந்திரங்கள் செய்கிறவர்களும், மருந்து கலப்பவர்களும் திரட்டப்படுகிறார்கள்.

நான் பெர்லினை விட்டு வரும்பொழுது ருஷ்யா பிரிடன், யுனைடெட் ஸ்டேட்ஸ் இம்மூன்று நாடுகளிலும் உள்ள பொருள் உற்பத்திக்கு சமனாக ஜெர்மனியிலும், உற்பத்தி செய்வதற்கு கக்ஷித் தலைவர்களையும், சைனியத் தலைவர்களையும் தொழில் தலைவர்களையும் லீ (Ley) தலைமையின் கீழுள்ள தொழிலாளர்களையும், பகைக் கக்ஷியைச் சேர்ந்த முதலாளிகளையும் ஒன்று சேர்த்து ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இவ்வித கேள்விகளுக்கு எல்லாம் அவர்களால் ஜெர்மன் பொது மக்களுக்குத் திருப்தியளிக்குமாறு பதில் சொல்லக்கூடுமா? அவர்களால் முடியாது. வெகுநாளாக போர்முனையில் நடக்கும் விஷயங்கள் எப்படி பொது மக்களுக்கு அறிவிக்கப்படவில்லையோ, அதைப் போலவே உள்நாட்டிலிருக்கும் பொதுமக்கள் சஞ்சலப்படுவதை போர்முனையிலிருக்கும் போர்வீரர்கள் தெரிந்து கொள்ளாதபடி எல்லாப் பிரயத்தனமும் செய்யவேண்டுமென்று தாத்காலிகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1918-ம் வருஷத்தில் ஜெர்மனியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு சண்டை செய்கிறவர்களின் குடும்பங்கள் தத்தளித்ததைக் கேட்டவுடன் நடந்த சம்பவங்களை ஜெர்மானியர்கள் மறக்கவில்லை.

## பெட்ரோல் குறைவு.

ஜெர்மன் துருப்புகளில் ஏற்பட்டிருக்கும் சச்சரவுகள் ஸ்மாலன்ஸ்க் பிரதேசத்திற்குத் தெரியாவிட்டாலும்கூட பெர்லினில் உடனே தெரிந்துவிடுகிறது. ருஷ்யப் படையெடுப்பில் உதாரணமாக பெட்ரோல் ஏராளமாக செலவழிக்கப்பட்டது. ஆனால் ஜெர்மன் யுத்தப் பிரயத்தனத்திற்காக ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸில் உள்ள தொழிற்சாலைகளில் வேலைசெய்வதற்கு பெட்ரோல் தேவையென்று கேட்டால் "இல்லை" யென்றும் "திருட்டுத்தனமாக விற்குமிடங்களில் வாங்கிக் கொள்", என்றும் சொல்லுகிறார்கள். அப்படியே கிடைத்தாலும்கூட இப்பொழுது பிரான்ஸில் ஒரு காலன் பெட்ரோல் 25 ஷில்லிங் விலையாக இருக்கிறது.

பெர்லினில் விளக்கணைப்புத் திட்டம் உண்டு. எங்கு பார்த்தாலும் சீர்கெடும் மனத்தளர்ச்சி கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. அங்கு உணவுக்கு அவ்வளவு குறைவில்லை. ஆனால் பானத்திற்கும், புகையிலைக்கும் குறைவிருக்கிறது. ஆனால் தேவையானதை வாங்குவதாய் இருந்தால் அதற்கு சிபார்சு செய்து சாதாரண சாமான்களுக்குக்கூட லஞ்சம் கொடுத்தும் தயவின்பேரில் வாங்கவேண்டியிருக்கிறது. அப்படி வாங்கும்பொழுது அவற்றை இஷ்டமில்லாத மனதுடன் கொடுக்கப்படும். சென்ற இரண்டு வருஷம் ஐந்து மாதங்களாக யுத்தம் நடந்துவருவதில் சாதாரண பெர்லின் வாசியின் மனோநிலை தளர்ச்சி அடைந்திருக்கிறது. ஜனங்களின் மனது நிலையில்லாமலிருப்பதால் ஒருவரையும் சிநேகிதனென்று நிச்சயமாய் நம்பமுடியாமலிருக்கிறது.

## தலைவர்களின்பேரில் அவ நம்பிக்கை.

ருஷ்யாவில் ஏற்பட்ட தோல்வியினால் ஜனங்களுக்கு ஹிட்லரின் பேரிலுள்ள நம்பிக்கைக்குக் குறைவு உண்டானதாகத் தெரியவில்லை. (ஆனால் ருஷ்ய சம்பவங்களைப்பற்றி உண்மையான நடப்புகள் ஜெர்மனியில் சொல்லப்படவில்லை). ஆனால் ஹிட்லரிடம் நம்பிக்கை இருக்குமாதிரி ஹிட்லர் பிரதிநிதிகளின் பேரில் ஜனங்கள் நம்பிக்கை வைக்கவில்லை. ஜெர்மானியர்கள் ஹிம்லரை (Himmler) மனப்பூர்வமாக வெறுக்கிறார்கள். இப்பால் அவனை உள்நாட்டு மந்திரியாக நியமித்ததும், அவன் தன் அதிகாரத்தைக்கொண்டும், தனக்குட்பட்ட கூட்டத்தார்களைக்கொண்டும் ஜனங்களை இன்னும் ஹிம்சை செய்வான் என்று ஜனங்களுக்குப் பயம் உண்டாகியிருக்கிறது.

இந்த யுத்தம் எப்பொழுது முடியும்? எப்படி முடியும்? எந்தக் காரணத்திற்காக இந்த யுத்தம் ஆரம்பித்தது? அது முடிந்தவுடன் ஜெர்மனி எவ்வாறு பாதிக்கப்படும்? என்ற பல கேள்விகள் ஜெர்மானி ஜெர்மானியர்களின் மனதில் உதித்திருக்கின்றன. யாரேனும் ஒருவர் தைரியமாக இந்தக் கேள்விகளைக் கேட்டாலும் ஜெர்மனியில் ஒருவருக்காவது பதில் சொல்லத்தெரியாது.

---

# பிரிடன் பேசுகிறது.

---

(J. B. பிரீஸ்டிலி பி. பி. ஸி.-யில் பேசியது.)

### போலந்து–ஸெக்கோஸ்லாவியா ஒற்றுமை.

இந்த உலக யுத்தம் பிரமாதமாக நடந்துவருவதில் போலந்துக்கும், ஸெக்கோஸ்லாவியாவிற்கும் ஏற்பட்ட ஒற்றுமையைப்பற்றி பலர் கவனித்திருக்கமாட்டார்கள். இந்த இரு நாடுகளும், யுத்தம் முடிந்த பிறகு செய்துகொள்ளவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி இரு நாடுகளின் அந்நிய நாட்டு மந்திரிகளுக்குள் தீர்மானமாகிவிட்டது. இந்த நிபந்தனைகள் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கின்றன. இது சாதாரண மக்களுக்கு ஒரு விசேஷமில்லாததுபோல்தான் காணப்படும். ஆனால், ஐரோப்பிய அரசியல் நிபுணர்களுக்கு சிருங்கலையான பிரச்னையாகவே காணப்படுகிறது.

### ஒரு முக்கிய சம்பவம்.

சமாசாரங்களை நாம் பொதுமக்களுக்கு அறிவிக்கும்போது எது முக்கியம், எது முக்கியமில்லை என்பதை நன்கு விசாரித்துத் தெரிவிப்பதில்லை. ராணுவத்தில் ஸர்வ சாதாரணமான விஷயமும், ஒரு ரஸ்தாவில் சில சாமான் வண்டிகளை யந்திர பீரங்கிகளால் தாக்கியதும், இரண்டு எதிரி விமானங்களை வீழ்த்தியதும், இன்னும் சகஜமாக தினம் நடக்கக்கூடிய சம்பவங்களுமாக இவைகள்தான் பிரமாதமான ஆடம்பரத்துடன் பிரசித்தப்படுத்தப்படுகின்றன. ஆனால் போலந்திற்கும், ஸெக்கோஸ்லாவியாவிற்கும் ஏற்பட்ட ராஜீய ஒற்றுமை ஒரு முக்கிய சம்பவம். இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் கிடைத்த செய்திகளில் இதுவே பிரதானமான செய்தியாகும். இதைப் பற்றி பல நிபுணர்கள் ஏற்கனவேயே பேசியிருக்கலாம். இருந்தாலும் ஐரோப்பிய அரசியல் வியவகாரங்களில் அதிகத் தேர்ச்சியடையாதபோதிலும் நானும் சில அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அதில் அடியைப் பிடிடா பாரதபட்டா என்ற விதமாக ஒரு கதையையும் நான் ஊடுருவிச் சொல்லப்போவதில்லை.

### ஜனநாயகங்களின் பரீக்ஷை.

போலந்திற்கும், ஸெக்கோஸ்லாவியாவிற்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையை மிகவும முக்கியமென்று சொல்லுவதற்கு ஒரு காரணமிருக்கிறது. பொதுவாக மனிதனுக்கு முக்கியமாக வேண்டிய ஆத்ம திருஷ்டியை இவ்வுடன்படிக்கை நிலைநாட்டுகிறதாக இருக்கிறது. அதாவது மனிதனின் ஸ்வதந்திரத்தை சம்பாதித்துத் தருகிறது. இவ்வித ஸ்வதந்திரத்தைக் கட்டுப்படுத்தினால் மனிதனுக்கு சுகம் கிடையாது. இதைத்தான் நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். எதிரிகள் யாவரும் இவ்விதக்கொள்கையை அடிப்படையாகக்கொண்ட ஜனநாயகத்தை அழிக்கப்பார்க்கிறார்கள். எதிரிகளின் இவ்வித முயற்சியை எதிர்த்துத்தான் இந்த உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது.



### மத்திய ஐரோப்பாவில் தேசாபிமானம் ஜாஸ்தி.

மத்திய ஐரோப்பாவில் போலந்தும், ஸெக்கோஸ்லாவியாவும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் இருக்கின்றன என்பது தெரிந்த விஷயம். பால்டிக் கடலிலிருந்து டான்யூப் நதிவரையிலும் இரு நாடுகளும் பரவியிருக்கின்றன. தேசீய விஷயத்திலும், இதர நோக்கங்களிலும் இருநாட்டிலுள்ளோருக்கும் அபிப்பிராய பேதமுண்டு. இருந்தாலும் தங்களுடைய நாட்டை அந்நியரிடம் ஒப்படைக்காமல் இருக்கும் விஷயத்தில் இருநாடுகளும் ஒரேவிதமான மனப்பான்மைகொண்டிருக்கின்றன. இவ்வித தேசாபிமானத்தை ஒருக்காலும் அழிக்கமுடியாது. அந்நியநாட்டு சக்ரவர்த்திகள், ருஷ்ய மன்னர்கள், காலக் ஜாதியார், இன்னும் நாஸிகள் முதலானவர்கள் இந்த இருநாடுகளில் புகுந்து குதிரைப்படை, ரகசியப் போலீஸ், கொலைக்களம், ஜெயில், கொடுமை முதலியவைகளால் ஏராள துன்பங்கள் விளைவித்தும் இந்நாடுகளின் தேசாபிமானத்தைத் தணிக்க முடியவில்லை. எதிரிகளின் துன்பம் அதிகம் ஏற்பட்டாலும், இக்காட்டின் கலை, பயிற்சி முதலியவை குறையவில்லை. கவிகளும், நாடகாசிரியர்களும் தேசிய விஷயங்களைப் பிரதானமாக வைத்துப் புஸ்தகங்களையும், பாட்டுகளையும் தங்கள் பாஷையிலேயே எழுதிவருகின்றனர். யுத்தம் முதலிய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தேசாபிமானம் கொள்ளுவது ஒரு ஆச்சரியமில்லை. சமாதானகாலத்திலேயே ஸெக்கர்களும், போலிஷ்காரர்களும் தேசப்பற்றுதலுடன் இருந்துவருகிறார்கள். உதாரணமாக தேசீயப் பற்றுதலென்பது போலந்தில் ஒரு மதாசாரமாகவே கருதப்பட்டுவருகிறது. அதாவது, போலிஷ்காரர்கள் இறந்த பிறகு மறுபடி தேசசேவை செய்ய போலந்திலேயே மறு பிறப்பெடுக்கிறதாக நம்பப்படுகிறது. தேசாபிமானத்தைக் காண்பிக்க இதைக்காட்டிலும் வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ. இது வரையிலும் யுத்தத்திலீடுபட்ட நான் முதல் ஸெக்கர்களும், போலிஷ்காரர்களும் பின்வாங்காமல் சரண் அடையாமல் நாஸிகளை எதிர்த்துவருகின்றனர்.

### தீர்மானம்.

சென்ற யுத்தத்தின் முடிவில் அமெரிக்க ஜனாதிபதி வில்ஸன் செய்த ஏற்பாட்டின்படி ஐரோப்பாவில் பல நாடுகள் தனித்தனியாக அமைக்கப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட அரசியல் ஸ்தாபனங்களும், பொருளாதாரத் திட்டங்களும் ஏற்பட்டன. இதனால் பல வித தொந்தரவுகள் இல்லாமலிருந்தன. ஆனால் இவ்விதம் தனி நாடுகளாக அமைந்ததின் பயனை தற்சமயம் அடையவில்லை. அப்படி அமைந்த நாடுகளில் நீண்ட சதுரமான போலந்து ஒன்று. இது வடக்கே பால்டிக் கடல் வரையும், தெற்கே ஸெக்கோஸ்லாவியா வரையும் பரவியிருக்கிறது. ஸெக்கோஸ்லாவியாவும் குடியரசுநாடுதான். மவாரிக் என்பவன் இதைமுதல்தரமான நாடாகச் செய்துவிட்டான்.

### சிறு நாடுகளை அமைப்பது பிரயோஜனமில்லை.

ஏனென்றால், 19-வது நூற்றாண்டின் அபிப்பிராயத்தை ஒட்டி நாம் சிறு நாடுகளை அமைத்தோம். ஆனால் 20-வது நூற்றாண்டில் பொருளாதாரம் முதலிய திட்டங்கள் மாறிக்கொண்டேயிருப்பதால், தனியாக நாடுகளையமைப்பது பிரயோஜனப்படாது. இந்த யுத்தத்திலிருந்தும் இவ்விஷயம் வியக்தமாகிவிட்டது. ஏனென்றால், பொருளாதாரத்தில் அதிக சக்திவாய்ந்த நாடுகள்தான் தனித்திருக்க முடிகிறது. இதை நாஸிகள் உணர்ந்துகொண்டு சிறு நாடுகளை அழித்துவருகின்றனர்.

### ஹிட்லரின் புதுதிட்டம் பலிக்காது.

ஹிட்லர் பேசிவரும் வார்த்தைகளைக் கவனித்தால், பொதுமக்களின் அபிப்பிராயத்தை அனுசரித்துப் போகிறவனாகத் தெரியவில்லை. பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கும், சரித்திர நடவடிக்கைக்கும் எதிராக ஹிட்லர் நடக்கிறதாகவே தெரிகிறது. உதாரணமாக நாஸிகளின் புது திட்டமே போதுமானது. இது ஒரு உலகிலும் காணமுடியாத விசித்திரமாக இருக்கிறது. இதன்படி ஜெர்மானியர்கள் உயர்வானவர்களென்றும், மற்றவர்கள் ஜெர்மானியருக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதக் கொள்கை காட்டுமிராண்டி

களுக்கு இடையேதான் காணப்படும். ஏனென்றால், தாங்கள் சொல்லுவதைப் பிறர் கேட்காவிட்டால், முறட்டு சுபாவமுள்ள காட்டுமிருண்டிகள் அடித்துத் துன்புறுத்துவார்கள். இவ்விதம் செய்வதால்தான் நாஸிகளையும் நாம் நிந்திக்கிறோம். நாஸிகளுக்குட்பட்டு போலந்து, ஸெக்கோஸ்லாவியா வாசிகளைப்போல் வேறொருவரும் அவ்வளவு அவஸ்தைப்பட்டதில்லை. ஆனால், இவ்விரு நாட்டினரும் நாஸி முறைகளை எதிர்ப்பதுபோல் வேறொருவரும் செய்யவில்லை.

### புது ஐரோப்பா.

இந்த யுத்த முடிவில் ஜெர்மானியர் பூரா அழிந்ததும் இனிமேல் ஐரோப்பாவில் இம்மாதிரியான சூழ்ச்சிகளும், சண்டைகளும், பஞ்சமும் ஏற்படாமல் செய்யவேண்டும். அவ்விதம் அமைத்து நாஸி முறைகளை ஒழித்தால்தான போலந்தும், ஸெக்கோஸ்லாவியாவும் விரும்பியபடி செய்வதாகும். மறுபடி இம்மாதிரியான சண்டைகளே நேரக்கூடாது. ஆகவே, பிரிடன் முதலிய நேசநாடுகளும் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால், தைரியமாக நாஸிகளை எதிர்த்துவரும் ஸெக்கர்கள், போலிஷ்காரர்கள் இவர்களுடைய எண்ணங்கள் கனவாக ஆகாது. நிச்சயமாக யுத்தத்தில் நாஸிகளைத் தோற்கடித்து தங்கள் நாடுகளைத் திரும்பப் பிடிப்பார்கள்.

### ஸ்வதந்திரத்தை விரும்பும் மக்களின் கூட்டம்.

இந்த இருநாடுகளும் செய்துகொண்ட உடன்படிக்கையிலுள்ள சில ஷரத்துக்களைச் சொல்லுகிறேன்.

"இந்த இருநாடுகளும், யுத்தம் முடிந்த பிறகு, தங்கள் நாடுகளை ஒன்றாக அமைத்துக்கொள்ளும்". இது தான் முதல் ஷரத். மற்ற ஷரத்துகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன. அயல் நாட்டு விஷயங்கள், தற்காப்பு, பொருளாதாரம், பண நிர்வாகம், சமூகப் பிரச்னை, போக்குவரத்து, தபால் தந்தி முதலிய எல்லா விதமான வியவகாரங்களிலும் இரண்டு நாடுகளுக்கும் பொதுவான திட்டங்கள் ஏற்படுத்தப்படும். இருநாடுகளுக்குள் பரஸ்பரம் அனுமதிச் சீட்டு இல்லாமலேயே பிரயாணிகள் சஞ்சரிக்கமுடியும். மேலும், "இந்த உடன்படிக்கையின்படி அமைந்துள்ள ஜனங்களுக்குக் கீழ்கண்ட விசேஷ உரிமைகள் உண்டு:—மனச்சாக்ஷியின்படி நடந்துகொள்ளுவது, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஸ்வதந்திரம், படிப்புரிமை, இஷ்டப்பட்டதைப் பேசுவது, சமூகச் சங்கங்களைத் தோன்றியபடி அமைத்துக்கொள்ளுவது, யாவருக்கும் ஒருவகைப்பட்ட சட்டம், அரசாங்க வியவகாரங்களில் யாவருக்கும் ஒரு பங்கு, நியாயஸ்தலங்களின் தீர்மானங்களில் அரசாங்கத்தார் தலையிடாமலிருப்பது, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கொண்டு அரசாங்கத்தை நடத்துவது முதலிய உரிமைகள் உண்டு." கிரீஸும், யூகோஸ்லாவியாவும் செய்துகொண்ட உடன்படிக்கையைப் போலந்தும், ஸெக்கோஸ்லாவியாவும் அங்கீகரித்தன. ஆகவே பால்டிக்கிலிருந்து ஏஜியன் கடல்வரையிலும் ஒற்றுமை ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவேயிருந்த நாடுகளுக்குள் ஒற்றுமையில்லாததால்தான் சென்ற 20 வருஷகாலமாக அமைதிக்குறைவு ஏற்பட்டுவந்தது.

இதனால் வருங்காலத்தில் க்ஷேமம் ஏற்படுமென்று சொல்லமுடியும். யாவரும் காலத்திற்கேற்றவாறு நடந்துகொண்டுவருகின்றனர். இந்த உடன்படிக்கையைக் கேட்டதும் யாவருக்கும் உத்ஸாகம் ஏற்பட்டிருக்கிறது. ஒற்றுமைதான் தேவை. அப்பொழுதுதான் ஹிட்லரின் திட்டங்களுக்கு நாம் அடிமைகளாகாமல் ஸ்வதந்திரம்பெற்ற நாடுகளாவோம்.

---

## பிரிடனுடைய புதிய பைடர் விமானங்களின் சக்தி.
## ஜெர்மன் லுப்ட்வாபி விமானப் படையைக்காட்டிலும் பிரிடிஷ் விமானங்களுக்குள்ள அதிக சக்தி.
## யுத்த தளவாட உற்பத்தியில் முன்னேற்றம்.
## அமெரிக்கர்களும் சமமாக உற்பத்தி செய்கின்றனர்.

(J. I. வாடிங்டன் எழுதியது.)

தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நடக்கும் விமானச் சண்டைபோல் பிரிடன்பேரில் நடந்த விமானச்சண்டைக்குப்பிறகு பிரிடிஷ் பைடர் விமானங்களின் உற்பத்தியில் அதிக மாறுதல்கள் செய்யப்பட்டன. அந்த சமயத்தில் பிரிடனைப்போல் நான்கு மடங்கு விமானங்களை ஜெர்மனி உபயோகித்தது. ஆனால் பிரிடிஷ் விமானிகளின் தைரியத்தாலும், விமானங்களின் சக்தியாலும் ஜெர்மன் தாக்குதல் பிரயோஜனப்படாமல் போயிற்று.

வெறும் எண்ணிக்கைக்கும், சக்திக்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றி ஒரு கதை ஞாபகம் வருகிறது. 1914-ம் வருஷத்திற்கு முன்பு ஜெர்மன் கெய்சர் ஸ்விட்ஜர்லாந்தின தளகர்த்தரைப் பார்த்து பின்வருமாறு கேட்டானும். 5,00,000 துருப்புகள்கொண்ட ஸ்விட்ஜர்லாந்தின் சைனியத்தை 10,00,000 பேர்கள் உள்ள ஜெர்மன் சைனியம் தாக்கினால் என்னசெய்வாய் என்றதற்கு ஸ்விட்ஜர்லாந்து படைத்தலைவன் "இரண்டுமடங்கு சக்தியுடன் சண்டைசெய்வோம்" என்றானும். இதைப்போலவே தன் பிரிடன்மேல் நடந்த விமானப் போரிலும் அதிக சக்தியுடன் சண்டைசெய்து வெற்றி அடையப்பட்டது.

பிரிடிஷ் ஹரிகேன், ஸ்பிட்பயர் என்ற பைடர் விமானங்கள்தான் அதிக சக்தி வாய்ந்தவைகளாக இருந்தன. இவைகளிலிருந்த ·303 யந்திர பீரங்கிகள் ·311 யந்திர பீரங்கிகள் உள்ள மெஸ்ஸர்ஷ்மிட் என்ற ஜெர்மன விமானங்களைக் காட்டிலும், பிரெஞ்சு மெரேன் விமானங்களைக்காட்டிலும், ·50 பீரங்கிகள் உள்ள அமெரிக்கா, இதாலிய விமானங்களைக் காட்டிலும்கூட அதிக சக்தியுள்ளவை.

### ஒரு நிமிஷத்திற்கு 9,000 குண்டுகள் வீசமுடியும்.

ஆக பிரிடிஷ் பைடர்கள் தனிப்பகுதிகளாக ஆக்கி அவைகளிலுள்ள 8 பீரங்கிகளிலிருந்து ஒரு நிமிஷத்திற்கு 9,000 குண்டுகள் வீதம் சுடமுடிந்தது. ஜெர்மன் பைடர் விமானங்களுடன் சண்டைசெய்து பல எதிரி விமானங்களை வீழ்த்தவும் முடியும்.

1935-ம் வருஷம் முதல்தான் பிரிடிஷ் விமானங்களில் 4 யந்திர பீரங்கிகளை வைத்து அவைகளின் சக்தி அதிகமாக்கப்பட்டது. உதாரணமாக கிளாஸ்டர் விமானங்களில் இம்மாதிரிசெய்யப்பட்டது. இவைகளுடைய சிறகுகள் லேசாக இருந்தால் அதிக பீரங்கிகள் வைக்கமுடியவில்லை. ஆனால் 1938-ல் ஹரிகேன், ஸ்பிட் பயர் விமானங்களை ஏற்பாடு செய்தபிறகு விமானப்படையின் பலம் அதிகமாயிற்று.

### ஜெர்மன் விமானங்களுக்குத் தற்காப்புச் செய்யவேண்டியதாயிற்று.

ஹரிகேன், ஸ்பிட் பயர் விமானங்களின் ஒவ்வொரு சிறகிலும் நான்கு பீரங்கிகள் வைக்கப்பட்டன. இப்படிச்செய்வதால் அவைகளிலுள்ள காற்றுடி சுற்றுவதை ஒத்து குண்டுகள் போடமுடிந்தது. இல்லாவிட்டால் எப்போதும் வைக்கும் இடத்தில் (fuselage) பீரங்கிகளை வைத்திருந்தால் பாய்ந்து தாக்கும்போது அதிகமான குண்டுகள் பீரங்கிகளிலிருந்து அனுப்ப முடியாது.

ஜெர்மன் விமானங்கள் அதிக வேகத்தையும், அதிக குண்டுகள் ஏற்றிச்செல்லும் சக்தியையும் கவனித்து வந்ததால் தங்களைக் காபந்து செய்துகொள்ள முடியவில்லை. பிரிடிஷ் விமானங்களின் சக்தி அதிகரித்தவுடனே ஜெர்மன் விமானங்களுக்கு அதிகக் காபந்து செய்துகொள்ளவேண்டியதாயிற்று.

### பெரிய பீரங்கியுள்ள விமானம்.

ஆகவே நாம் பீரங்கிகளை அதிகம் வைத்து சக்தி அதிகரிக்க அதிகரிக்க எதிரிகள் மேலும் மேலும் தற்காப்பு செய்துகொண்டார்கள். ஆனால் எவ்விதமான எதிரியின் காபந்தையும் பிளக்கக்கூடியதாக 1934-ல் பானடம் (Fantome) என்று சொல்லக்கூடிய 37 m. m. பீரங்கியுடன் கட்டப்பட்டது. இதில் ஹிஸ்பானோ (Hispano) என்ஜின் இருக்கிறது. பிறகு ஸ்பிட் பயர் விமானங்களுக்கும் 20 m. m. பெரிய பீரங்கியும் ·303 யந்திர பீரங்கிகள் நான்கும் வைக்கப்பட்டன. ஹரிகேன் விமானங்களுக்கும் 20 m. m. பீரங்கிகள் நான்கோ அல்லது 12 யந்திர பீரங்கிகளோ வைக்கப்பட்டன.

## புதிய பியூபைடர் (Beaufighter) விமானங்களின் சக்தி.

பீரங்கிகளேற்றக்கூடிய புதிய ஹரிகேன் விமானங்களிலிருந்து 600 பவுண்டு இடையுள்ள குண்டுகள் ஒரு நிமிஷத்திற்கு வெளியே அனுப்பமுடியும். ஸ்பிட்பயர் விமானங்களிலிருந்து 410 பவுண்டு இடையுள்ள குண்டுகள் போட முடியும். ஆனால் பிரிஸ்டல் பியூபைடர் விமானங்களிலிருந்து இன்னும் அதிகமான குண்டுகள் போட முடியும். இதில் இரண்டு என்ஜின்கள் இருக்கின்றன. இருவர் உட்கார முடியும். இரவு காலங்களில் எதிரி நாடுகளில் படையெடுப்புச் செய்வதற்கு லாயக்கானவை. இதில் என்ஜின்கள் கொஞ்சம் வெளியே தள்ளி ட்டு வைக்கப்பட்டிருப்பதால் பீரங்கிகளும் குண்டுகளும் அதிகம் வைக்க முடியும். எப்போதும் வைக்கக்கூடிய (fuselage) மூக்குப்பக்கத்தில் 20 m.m. பீரங்கிகள் நான்கும், சிறகுகளில் ·303 பீரங்கிகள் ஆறும் வைக்கப்பட்டிருப்பதால் ஒரு நிமிஷத்திற்கு 765 பவுண்டு குண்டுகள் போட முடியும். அதிகநேரம் எதிரி நாட்டில் பறந்து குண்டுகள் போட முடியும்.

எதிரிகளுக்கு மெஸ்ஸர்ஷிமிட் 110 என்பவைதான் அதிகப் பெரியவை. அவைகளில் 20 m.m. பீரங்கிகள் இரண்டும், ·311 யந்திர பீரங்கிகள் நான்கும் தானிருக்கின்றன. 375 பவுண்டு குண்டுகள் தான் போடமுடியும். புதிதாக Me. 109 F 2 என்ற விமானங்களும் எதிரிகள் கட்டியிருக்கின்றனர். இதில் 20m.m. பீரங்கி ஒன்றும் ·311 யந்திரபீரங்கிகள் இரண்டு தானிருக்கின்றன.

## அமெரிக்க விமானப்படையும் முன்னேற்றமடைகிறது.

ஆகவே எதிரிகளின் லுப்ட்வாபி படையைக்காட்டிலும் பிரிடிஷ் விமானங்கள் வேகம் மறுகித்தாக்குவது, விமானிகளின் தீரம் முதலியவைகளில் அதிகச் சக்தி வாய்ந்தவை. இவைகளை மேலும் ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டி எதிரி நாடுகளில் சென்று செய்யக்கூடிய படையெடுப்புகளிலும் தனது சக்தியை வர்ஜிதப்படுத்த வேண்டும்.

இந்த யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் அமெரிக்கப் பைடர் விமானங்களில் இரண்டு. 50 யந்திர பீரங்கிகள் தானிருந்தன. ஆனால் பிறகு மோஹாக், டோமஹாக் என்ற அமெரிக்க விமானங்களில் 6 பீரங்கிகளும், அவைகளின் சிறகுகளில் உபரியாக நான்கும் வைக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவிலிருந்து சமீபத்தில் வந்த விமானங்கள் யாவும் பிரிடிஷ் விமானங்களைப் போலவே தானிருக்கின்றன. அமெரிக்க ஏரோ கோப்ரா விமானங்களில் 37 m.m. பீரங்கி இருக்கிறது. இதன் வழியாக வரும் குண்டு 7 மடங்கு அதிகக்கனம் வாய்ந்திருக்கிறது. இம்மாதிரி அமெரிக்கர்களும் பிரிடிஷ்காரர்களைப்போல் அதிகமான அனுபவத்தையடைந்து யுத்த சாமான்களைச் செய்து வருகின்றனர். பிரிடிஷ்காரர்கள் ஆறு வருஷகாலமாகவே முன்னேற்றமடைந்து வந்த அளவு அமெரிக்கர்கள் ஒருவருஷத்திற்குக் குறைவான காலத்தில் முன்னேற்றமடைந்துவந்திருக்கிறார்கள்.

---

# அமெரிக்கப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

---

மில் வாக்கிப் பத்திரிகை, பிப்ரவரி 1.—பெல்ஜியத்திலும், பிரான்ஸிலும் பிரிடனுக்குத் தோல்வி ஏற்பட்டும் மீண்டும் அது விடாது சமாளித்து வருவதைப் பார்க்க நாஸிகளுக்கு பெருத்த வியப்பாக இருக்கிறது. பிளிமவுத், கவெண்ட்ரி, இவ்விடங்களில் பிரிடிஷ் மக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்ட போதிலும் கூட, அவர்கள் எதிரிகளுக்கு இணங்காமல் சமாளித்துவருவது நாஸிகளுக்கு நம்ப முடியாமல் இருக்கிறது. சிற்சில சமயங்களில் பிரிடிஷ் துருப்புகள் எதிரிகளிடம் பெருந்தோல்விகள் ஏற்பட்ட போதிலும் கூட அவர்களுடைய பிரதம மந்திரியை விசுவாசத்துடன் பிரிடிஷ் மக்கள் பின்பற்றுவது நாஸிகளுக்கு ஆச்சரியகரமாய் இருக்கிறது. இவைகளெல்லாம் நாஸிகளுக்குப் புரியவில்லை. பொதுவாக அபிப்பிராய பேதத்திற்கும், ராஜத்துரோகத்திற்கும், சட்ட சபையில் எதிர் கக்ஷிக்கும், துரோகிகளுக்கும் உள்ள வித்தியாசங்களை நாஸிகள் இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. சுயேச்சை மக்களின் முயற்சிகள் தாமதத்தின் பேரில் பலனடைவதாய் இருந்தாலும், அவர்களின் பெருத்த பலத்தை மட்டில் நாஸிகள் நன்கு அறிந்துகொண்டிருக்கின்றனர். ஜனநாயக தேசங்கள் சிதைவுற்றதென்றும், கெட்டு விட்டதென்றும் பலவாராக நாஸிகள் தங்களுக்குத் தோன்றியதெல்லாம் சொல்லிவருகின்றனர். நாஸிகள் இன்னும் பல விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஜனநாயகமும் அதன் சைனியமும் இப்பொழுது தான் சண்டையிட ஆரம்பித்திருக்கின்றன.

நியூ யார்க் டைம்ஸ், பிப்ரவரி .—யுனைடெட் ஸ்டேட்ஸ் இதுவரையில் தாக்கப்படாமல் இருந்தது. இப்பொழுது அதுவும் தாக்கப்பட்டது. அங்கிருந்து பிரபல ராணுவத்தலைவர்கள் யுத்தத்தில் இறங்கிவிட்டார்கள். இவ்விதம் சைனியங்கள் உலகத்தில் நாலா பக்கங்களிலும் அனுப்பப்படுவதைப் பார்த்தால் ஒருவருக்குப்பின் ஒருவராகத் தோற்கடிப்பது என்று இதுவரை ஹிட்லர் செய்து வந்த யுத்த தந்திரம் இனிமேல் பலிக்காது. ஏனென்றால் உலகமெங்கும் துருப்புகள் அனுப்பப்பட்டு ஆங்காங்கு சண்டைகள் நடந்துவருகின்றன. இத்துடன் ஒன்று சேர்ந்த நாடுகளின் துருப்புகள் தாங்கள் போய்ச்சேருவதற்குச் சாத்தியமாயுள்ள இடங்களில் அங்குள்ளவர்களுடன் சேர்ந்து சண்டை புரிகின்றனர். அமெரிக்கத் துருப்புகள் பிரிடிஷ் ஆதிக்கத்திற்குட்பட்ட வட ஐயர்லாந்தில் வந்திறங்கியதும், வட அட்லாண்டிக்கில் அவர்கள் நடத்திவரும் தற்காப்பை அதிகப்படுத்தியது போலாயிற்று. தென் மேற்கு பஸிபிக் பிராந்தியத்தில் அமெரிக்க விமானங்களும், லேசான கப்பல்களும் வெகு மும்மரமாக வேலை செய்து வருகின்றனவென்று டச்சுக்காரர்கள் ஏற்கனவே செய்தி அனுப்பிவிட்டனர். அதைப் போலவே சீனாவில் அமெரிக்க விமானிகள் யுத்த விமானங்களைச் செலுத்தி தாய்லாந்திலுள்ள முக்கியமான விமான தளங்களை வெற்றிகரமாகத் தாக்கி வருகின்றனர். மேலும் அதைப் போலவே சமீபக் கிழக்கிலுள்ள செங்கடல் பிரதேசத்தை நேசதேசத்தார்கள் ஒரு ஆயுத சாலையாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து எகிப்து, லிபியா, ருஷ்யாவிலுள்ள காகேஸஸ் முதலிய பிரதேசங்களுக்கும், அல்லது இந்து மஹா சமுத்திரம் வழியாக இந்தியாவுக்கும், இன்னும் தூரக்கிழக்குக்கும், கப்பல்கள் மூலமாக யுத்த சாமான்கள் அனுப்பப்படுகின்றன. இவ்விதமாக அமெரிக்கத் துருப்புகள் மிகவும் குளிர் பிரதேசமான ஆர்க்டிக் பிராந்தியத்திலும், உஷ்ணப் பிரதேசங்களிலும், பாலைவனப் பிரதேசங்களிலும் சென்று மும்மரமாக சண்டை செய்துவருகின்றனர்.

நியூ யார்க் பத்திரிகை, ஜனவரி 28.—அமெரிக்க வாலண்டியர் படை அடைந்துவரும் அபூர்வமான வெற்றிகளைப் பார்க்கும் பொழுது பஸிபிக் பிராந்தியத்தில் நேசதேசத்தார்கள் விமான எதிர்ப்பு ஆரம்பிக்கும் பொழுது எவ்வளவு கடுமையாக இருக்கும் என்று தெரிகிறது. இது விவரம் உத்தியோக முறையில் வெளிவந்த 'சைனீஸ் ஸெண்ட்ரல் டெய்லி நியூஸ்' பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. அமெரிக்க விமானிகள் அடைந்துவரும் வெற்றிகளுக்குக் காரணம் அவர்கள் தைரியத்துடன், நூதனமான யுத்த முறைகளைக் கொண்டு, உயர்தரமான விமானங்களிலிருந்து போர்புரிவது தான்.

---

# இந்திய சைனியத்தில் குமாஸ்தா வேலைக்கும், ஸ்டோர் கீப்பர் வேலைக்கும் வருகிறவர்களுக்குள்ள நிபந்தனைகள்.

இந்திய சைனியத்தில் பலவிதமான குமாஸ்தா வேலைக்கு வருகிறவர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிபந்தனைகளின் படி நடக்க விருப்பமில்லாதவர்கள் மனுக்களை அனுப்பவேண்டாம்.

## 1. உத்தியோக நிபந்தனைகள்.—

அடியில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கிணங்கி சிப்பாய்-குமாஸ்தாக்களாகவும், ஸ்டோர் கீப்பர்களாகவும் அபேக்ஷகர்கள் பதிவு செய்துகொள்ளவேண்டும்.—

(*a*) அபேக்ஷகர்கள் எந்த இடத்திலும் வேலை பார்க்கத் தயாராக இருக்க வேண்டும்.

(*b*) யுத்தம் நீடிக்கும்வரையிலும் இவர்கள் உத்தியோகத்தில் வைத்துக் கொள்ளப்படுவார்கள். அதற்குப் பிறகு தேவையானால் இன்னும் பனிரெண்டு மாதங்கள் வரையிலும் வைத்துக்கொள்ளப்படுவார்கள்.

## 2. யோக்கியதாம்சம்.—

(*a*) **சிப்பாய்—ஸ்டோர் கீப்பர்கள் (R. I. A. S. C.).**

இவர்களுக்கு சரளமாக இங்கிலீஷ் பேசவும், நன்றாக எழுதவும் தெரியவேண்டும்.

(*b*) **சிப்பாய் குமாஸ்தாக்கள், ஸ்டோர் கீப்பர்கள்.**

ஸ்கூல் பைனல் (S. S. L. C.) பரீக்ஷை தேறியோ அல்லது ஸ்கூல் பைனல் கிளாஸ் வரையிலோ, அல்லது அதற்கு சமமான வகுப்பு வரையிலோ படித்திருக்கவேண்டும். நன்றாக இங்கிலீஷ் எழுதப்படிக்கத் தெரியவேண்டும். ஆபீஸ் அனுபவமுள்ளவர்களும், டைப் அடிக்கத்தெரிந்தவர்களுமே முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## 3. வயது.—

சிப்பாய்—ஸ்டோர் கீப்பர்கள்.—18 முதல் 25 வயது வரை குமாஸ்தாக்கள், ஸ்டோர் கீப்பர்கள்—இந்திய ஆஸ்பத்திரி வேலை.

R. I. A. S. C.<br>
I. A. O. C.<br>
மதராஸ் ஸாப்பர்ஸும்,<br>
மைனர்ஸும்<br>
(Sappers and Miners). } 17½ முதல் 41 வரை.

## 4. தேக அமைப்பு.—

உயரம்.—5 அடி 2 அங்குலம்; நிறை 96 பவுண்டுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். மார்பு சுற்றளவு.—சாதாரண நிலையில் 29 அங்குலமும், மூச்சு இழுக்கும்பொழுது 2 அங்குலமும் அதிகரிக்கவேண்டும்.

## 5. சம்பளமும், அல்லவன்ஸும்.—

ஸ்டோர் கீப்பர் மாதம் ஒன்றுக்கு ரூ. 16 சம்பளம். மேலும் உயர்ந்த சம்பளம்பெற நல்ல சந்தர்ப்பங்களிருக்கின்றன.

குமாஸ்தாக்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 16 சம்பளம். தினம் ரூ. 1-8-0 படி. அதாவது மாதம் ஒன்றுக்கு சம்பளம் ஏறக்குறைய ரூ. 61-வரும். இத்துடன் சாப்பாடு, துணிமணி வகையரா இனாம்.

## 6. யுத்த அல்லவன்ஸ்.—

அயல்நாட்டு அல்லவன்ஸ் மாதம் ஒன்றுக்கு ரூ. 7. யுத்தப் பிரதேசங்களுக் கருகிலிருப்பவர்களுக்குப் படி கொடுப்பதாய் இருந்தால் மாதம் ஒன்றுக்கு 3 ரூபாய் கொடுக்கப்படும்.

## 7. விசேஷக் குறிப்பு.—

மனுப்போடுவதற்குமுன் கீழ்கண்ட விஷயங்களை அபேக்ஷகர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டும்.

(*a*) யாவரும் ஆரம்பத்தில் மூன்றாவது கிரேடில்தான் பதிவு செய்யப்படுவார்கள். அவரவர்களுடைய சாமார்த்தியம், திறமை, ஊக்கம் முதலியவைகளுக்குத் தக்கவாறு உயர்ந்த கிரேடுகளுக்குப் போக நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. அது பின்வருமாறு :—இரண்டாவது கிரேடுக்கு உயர்ந்ததும் மொத்த சம்பளம் மாதம் ஒன்றுக்கு 74-ரூபாயும், முதல் கிரேடுக்கு உயர்ந்ததும் மொத்தச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு 85-ரூபாயும் கிடைக்கும். உயர்ந்த கிரேடுகளில் சாப்பாடு, துணிமணி வகையரா இனாமாகக் கொடுக்கப்படும்.

(*b*) காய்கறி உணவு தின்கிறவர்கள் (Vegetarians) யாவரும், எல்லோருடனும் ஒன்று சேர்ந்து சாப்பிடுவதற்கு சம்மதப்படவேண்டும்.

(*c*) எல்லோரும் தோல், கொழுப்பு முதலியவைகளைத் தொட்டு உபயோகிப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

(*d*) நேரில் ஆஜராகச் சொல்லும் சமயத்தில் அபேக்ஷகர்கள் வயது, படிப்பு முதலியவைகளை ருஜுப்படுத்த தஸ்தவேஜுகளைக் காண்பிக்கவேண்டும்.

(*e*) அவ்விதம் பங்களூரில் நேரில் ஆஜராவதற்கு ரயில்வே பாஸ்கள் கொடுக்கப்படும். எந்தந்த வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ அந்தந்த வேலைகளில் உடனேயே அவர்கள் சேரவேண்டும். தேர்ந்தெடுக்கப் படாதவர்களுக்கு தங்கள், தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போக ரயில்வே பாஸ்கள் கொடுக்கப்படும்.

(*f*) மேற்சொல்லிய (*d*) பாராவில் கண்டவிதம் தஸ்தவேஜுகளைக் காண்பிக்கத் தவறினாலும், அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வேலையை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டாலும் அவர்கள் வந்த ரயில்வே சார்ஜைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டும். மேலும் ஊர்களுக்குத் திரும்பிப்போக ரயில்வே பாஸ்களும் கொடுக்கப்படமாட்டாது.

(*g*) இவ்விதம் ஏமாந்துபோகாமலிருப்பதற்கு முன்னமேயே பிரைவேட் டாக்டர்களிடம் சென்று தேகத்தின்கள் சரியாகயிருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும்.

(*h*) அந்தந்த வேலைகளுக்குத் தேர்ந்தெடுத்திருப்பதைக் கடைசியாக உதவி ரெக்ரூடிங் ஆபீஸர் முடிவு செய்வார். அதன்படி அபேக்ஷகர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

(*i*) அபேக்ஷகர்கள் தங்கள் கைப்படவே மனுக்களைத் தயாரித்து கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டும் :—

அஸிஸ்டெண்டு டெக்னிகல் ரெக்ரூடிங் ஆபீஸர்,<br>
(The Assistant Technical Recruiting officer)<br>
காரன்வாலிஸ் (Corn Wallis) பாரக்ஸ் (Barracks)<br>
ட்ரினிடி ரோடு (Trinity Road)<br>
பெங்களூர் (Bangalore).

# யுத்த சம்பந்தமான பலவித தொழில்களை செய்கிறவர்களுக்கு சம்பளமும், அல்லவன்ஸும்.

## A வகுப்பு.

| இனம். | மாதச்சம்பளமும், அல்லவன்ஸ். ரூ. | | குறிப்பு. |
|---|---|---|---|
| குமாஸ்தாக்கள் (S.S.L.C. பாஸ்செய்தவர்கள்). | 16 | தினம் 1 8 0 | அதிகச் சம்பளமும் கிடைக்கும். |
| ,, (தேருதவர்கள்) ... | 16 | மாதச் சம்பளம் | |
| ,, (இன்டர்மீடியட்; பி. ஏ. பாஸ்செய்தவர்கள்) | 60 | ,, | 50 சதவிகிதம் உயர்த்தப்படும். |
| ட்ராப்ட்ஸ்மென் (Draughtsman) | 46 | ,, | யாவரும் முதலில மூன்றுவது கிரேடுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த சம்பளம் 3வது கிரேடிலுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும். ஆனல் முதல் வகுப்புச் சம்பளம் ரூ. 79-2-0 இரண்டாவது வகுப்புச் சம்பளம் ரூ 59-2-0. |
| மின்சாரவேலைகளை கவனிப்பவன் (Electrician) | ,, | ,, | |
| இன்ஜின் வேலைக்காரன் (Engine Artificer) | ,, | ,, | |
| பிட்டர் (Fitter) ... | ,, | ,, | |
| மெக்கானிக் (Inst Mechanic) | ,, | ,, | |
| கடைசல் வேலை (Turner) | ,, | ,, | |
| பத்தவைப்பு வேலை (Welder) | ,, | ,, | |

## B. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| கொல்லுவேலை (Blacksmith) | 36-10-0 | மாதச்சம்பளம் | இந்தச் சம்பளம் 3-வது கிரேடுக்குக் கொடுக்கப்படும். ஆனல் முதல் கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ. 61—0—0 2-வது கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ. 47-14-0. |
| தச்சுவேலைக்கும், ஒட்டு வேலைக்கும், (Carpenter and joiner) | ,, | ,, | |
| கன்னார வேலை (Coppersmith) | ,, | ,, | |
| கான்கிரீட் முதலிய கொத்து வேலை (Concretor) | ,, | ,, | |

## C. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| கத்திகள் செய்வோன் (Cutler) | 31-15-0 | மாதச்சம்பளம் | இந்தச் சம்பளம் 3-வது கிரேடுக்குக் கொடுக்கப்படும். ஆனல் முதல் கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ 52—9—0. 2-ம் கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ 41-5-0. |
| தகரவேலைக்காரன் (Tinsmith) | ,, | ,, | |
| வர்ணவேலையும், சித்திர வேலையும் (Painter and decorator) | ,, | ,, | |
| ரப்பர் முதலிய ஒட்டு வேலை (Vulcaniser) | ,, | ,, | |

## D. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| சேணம், கடிவாளம் வகையரா செய்கிறவன் (Saddler and Harness maker) | 27-8-0 | மாதச் சம்பளம் | இந்தச் சம்பளம் 3-வது கிரேடுக்குக் கொடுக்கப்படும். ஆனல் 1-வது கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ 38-8-0. 2-வது கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ 32—11—0. |

## E. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| தையல் வேலை (Tailor) | 23-8-0 | மாதச்சம்பளம் | இந்தச் சம்பளம் 3வது கிரேடுக்குக் கொடுக்கப்படும். ஆனல் தையல் வேலைக்காரனுக்கு 1-வது கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ 31—0—0. 2-வது கிரேடுக்கு ரூ 27-4-0. சக்கிலிய வேலைக்கு 1-வது கிரேடுக்கு மாதச் சம்பளம் ரூ 27-6-0. 2-வது கிரேடுக்கு ரூ 25-8-0. |
| சக்கிலிய வேலை (Boot-maker) | 21-12-0 | ,, | |

## * G. வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் ஓட்டக் கற்றுக் கொடுப்பவர்கள். | 50-0-0 | மாதச் சம்பளம் | சாப்பாடு, துணிமணி செலவுகளை இவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும். |
| M. T. டிரைவர்கள் ... | 35-0-0 | ,, | |

## இதர வேலை (Misoellaneous).—

| | | |
|---|---|---|
| ரொட்டி சுடுகிறவன் (Baker) | 23-8-0 | ,, |

### பொதுக் குறிப்பு.—

•(g) (வகுப்பைத்தவிர) மற்ற எல்லா வகுப்புகளுக்கும் சாப்பாடு, துணி மணி, இடவசதி இவையாவும் இனாமாக அளிக்கப்படும். பதிவானவர்களுக்குள் யுத்த சம்பந்தமான வேலைகளில் ஈடுபடாமலிருப்பவர்களுக்கு ஆகாரம் முதலியவைகளுக்காக சம்பளத்தில் ஒரு ரூபாய் பிடிக்கப்படும்.

* இந்த வகுப்பில் எப்போதாவதுதான் காலி ஏற்படும்.

### விசேஷக் குறிப்பு.—

ரெக்ரூட் செய்யப்பட்டவர்களுக்குள் மூன்றுவது கிரேடுக்கு லாயக்கான பரீக்ஷையில் தேருதவர்கள், மற்றபடி லாயக்காக இருந்தால், பின் உபயோகப்படுவார்கள் என்று வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்படுவார்கள்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

**1942—** பிரஸங்கம் **85**—(2-வது பிரிவு).

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| மார்ச்சு | ... 7, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 5.30 |
| | 8, ஞாயிற்றுக்கிழமை. | நச்சாந்துபட்டி | ... ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... ,, | 6.30 |
| | 9, திங்கட்கிழமை ... | வயலோகம் | ... ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை | கல்லூர் | ... ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... ,, | 6.30 |
| | 11, புதன்கிழமை ... | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... ,, | 6.30 |
| | 12, வியாழக்கிழமை ... | வெங்களூர் | ... ,, | 6.00 |
| | | கோனாபட்டு | ... ,, | 6.30 |
| | 13, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் | ... ,, | 6.00 |
| | | விராலிமலை | ... ,, | 6.30 |

பிரஸங்கம் **86**—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச்சு | ... 14, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 15, ஞாயிற்றுக்கிழமை | ஆலங்குடி | ... ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... ,, | 6.30 |
| | 16, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... ,, | 6.30 |
| | 17, செவ்வாய்க்கிழமை | குழிபிறை | ... ,, | 6.00 |
| | | செவலூர் | ... ,, | 6.30 |
| | 18, புதன்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... ,, | 6.00 |
| | | எம்பல் | ... ,, | 6.30 |
| | 19, வியாழக்கிழமை .. | ராமச்சந்திரபுரம் | ... ,, | 6.00 |
| | | ராயவரம் | ... ,, | 6.30 |
| | 20, வெள்ளிக்கிழமை... | மலையூர் | ... ,, | 6.00 |
| | | காரம்பக்குடி | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—7-3-42.

## புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் மார்ச்சு மீ 14உ [ந. 86

# இந்திய மக்களுக்கு மேன்மை தங்கிய வைஸிராய் அவர்களின் செய்தி.

---

## யுத்த முயற்சிக்காக ஸம்போதனம்.

"இந்தியாவில் வசிப்பவர்களுடைய அரசியல் கொள்கை, ஜாதி, மதம் முதலியவை எவ்வகைப்பட்டாலும் ஸ்திரீ புருஷர்கள் யாவருக்கும் இச் செய்தியை விடுவிக்கிறேன். இந்தியாவிற்கு யுத்தம் நெருங்கி வந்திருப்பதின் காரணமாக அடுத்துவரும் சில வாரங்களில், சைனியத்தில் சேருவதற்காக நீங்கள் யாவரும் அழைக்கப்படுவீர்கள்.

"யாவரும் இந்த யுத்தத்தில் சேரவேண்டுமென்று ஒவ்வொருவரையும் பிரத்யேகமாக அழைத்ததாகக் கருதவேண்டும். இதுவரை சமாதானமாக யிருந்துவந்த நாடுகளில் செய்துவரும் அட்டூழியங்களால் காட்டு மிருண்டியென்றும், ஈவு இரக்கமில்லாதவனென்றும் சொல்லப்படும் அக்கிரமமான ஆசைகொண்ட எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு யாவரும் ஒன்று சேரவேண்டும். ஜாதி, மத வித்தியாசங்களை மறைத்துக் கொள்ளவேண்டும்.

"இந்திய வீரர்கள் இந்தியாவின் க்ஷேமத்தையும், புராதனமான உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காகவும், வருங்காலத்தில் திட்டங்கள் பயன் படுவதற்காகவும் உலகத்தின் பலபாகங்களில் சண்டை செய்துகொண்டிருக்கிறார்கள்."

## ஒவ்வொருவரும் ஒரு சிப்பாய்.

“இந்த யுத்தம் விஸ்தாரமாக நடக்கிறது. நம்மனில் ஒவ்வொருவரும் சிப்பாயாகயிருந்து சண்டை செய்ய சந்தர்ப்பம் இருக்கிறது. தைரியமாக நில்லுங்கள். தைரியமாக சண்டை செய்கிறவர்களுக்கு உத்ஸாகத்தை அளியுங்கள். பயப்படுகிறவர்களுக்கு தைரியத்தை ஊட்டுங்கள். தாறுமாறான செய்திகளைச் சொல்லுகிறவர்களைக் கண்டனம் செய்யுங்கள். மறைமுகமாக இருந்து துரோகம் செய்கிறவனை அடியோடு ஒழியுங்கள். தேசத்தின் தற்காப்புக்காக இன்று ஈடுபட்டு, வெற்றிகிட்டும்வரை தைரியமாகச் சண்டை செய்யுங்கள். வெற்றி கிட்டாவிட்டால் ஸ்வதந்திர ஸ்தாபனங்களும், பயிர்ச்சி, தயை முதலிய குணங்களும் இந்த உலகத்தில் எஞ்சியிருக்க முடியாது.

“நமக்கு உதவியாக சைனா, ருஷ்யா, அமெரிக்கா, பிரிடன் மற்றும் எவ்வளவோ நாடுகள் கூடியிருக்கின்றன. நமது நாட்டின் கௌரவத்திற்கும் நம்முடன்கூட இருப்பவர்களின் கௌரவத்திற்கும் தக்கவாறு இந்தியாவில் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நிச்சயமாயும் சீக்கிரத்திலும் வெற்றிபெற முடியும்.

“இந்தியர்களின் தைரியத்தில் எனக்கு பூர்ண நம்பிக்கை இருக்கிறது.”

---

**பிரஸங்கம் LXXXVI.**

# ஆகாய விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு.

---

ஜப்பானியர்கள் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன், விமானப்படையெடுப்பு நேரும் சந்தர்ப்பங்களில் செய்துகொள்ளவேண்டிய பாதுகாப்பு முறைகளைப் பற்றி இந்தியாவில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளப்படவில்லை. வெறும் திண்ணைப்பேச்சாகவே இருந்து வந்தது. ஆனால் வரவர விமானப் பாதுகாப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சென்னையிலும், கல்கத்தாவிலும் ஜனங்கள் விசேஷமாக இவ்வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். அதோடு அதிகமாக பீதியடைந்தும் இருக்கிறார்கள். தற்போதைய நிலைமைப் பரிசீலனம் செய்து பார்க்கும்போது அப்படி பீதியடைவதற்கான காரணங்கள் இருக்கிறதாகத் தெரியவில்லை. எதிரிகள் விமான மூலம் வந்து தாக்கினால் என்ன செய்வதென்று யோசித்து, அதற்காக முன் ஜாக்கிரதையாக இருந்தால் போதுமானதே தவிர கலவரமடைய வேண்டியதேயில்லை. தற்போதுள்ள யுத்த அனுபவத்தை எடுத்துக்கொண்டால், 700 மைலுக்கு அப்பாலுள்ள இடத்தை விமான மூலம் தாக்குவதானால், படையெடுப்பு அவ்வளவு கடுமையாக இருப்பதில்லை. இந்தியாவிற்கு ஜப்பானியர்தான் விமான மூலம் வரலாமென்று எதிர்பார்க்கப்படுவதில். சென்னைக்கு அவ்வளவு சமீபத்தில் அவர்கள் இல்லை. ரெங்கூன் பிராந்தியத்திலிருந்து வருவதாக வைத்துக்கொண்டாலும் 1,000-மைல் தூரம் இருக்கிறது.

விமான மூலம் வராமல் நீர்மூழ்கிகளை உபயோகித்துக்கொண்டு மதராஸ் முதலிய நகரங்களைத் தாக்குவதாக வைத்துக்கொண்டாலும் சிற்சில இடங்களில் சேதமேற்படலாமே தவிர பலமான கெடுதல்கள் ஒன்றும் நேராது. விமானங்களைக் கப்பல்களில் ஏற்றி கடல்மார்க்கமாகவோ, கடல் விமானங்களாலோ படையெடுப்பு நேருமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் அப்படி நேராதென்றே சொல்லலாம். நேருமென்று வைத்துக்கொண்டாலும், ஒரே கூட்டமாக பாம்பர் விமானங்களைக் கொண்டுவந்து படையெடுப்புச் செய்வதைப்போல் அவ்வளவு பெரும்வகையான தாக்குதல் செய்யமுடியாது. அப்போது விமானங்களை ஏற்றி வந்த கப்பல்களைத் தனியே விட்டுவிட்டு விமானங்களை மாத்திரம் அனுப்பி குண்டுகளைப்போட எதிரிகள் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த சமயத்தில் நாம் அக்கப்பல்களுக்குச் சேதத்தை விளைவித்துவிடலாம். ஆனால் எப்படியெல்லாம் நேருமென்று நம்மால் ஜோஸியம் சொல்லமுடியாது. இருந்தாலும் மதராஸுக்கு, விமானப் படையெடுப்பு பயம் ஏற்படும் சந்தர்ப்பம் சமீபத்தில் இல்லையென்று மாத்திரம் சொல்லலாம்.

மதராஸுக்கே அவ்வித பயம் இல்லையென்றால் புதுக்கோட்டைக்கு இல்லவேயில்லை. ஏனென்றால் புதுக்கோட்டை கடலுக்கு இப்பால் உள்நாட்டில் வெகு தூரம் தள்ளியிருக்கிறது. மேலும் இங்கே ராணுவ ஸ்தாபனங்களும் இல்லை. அப்படி இருந்தால், ஒருக்கால் அதைக் கெடுப்பதற்காக எதிரி வருவானோ என்ற பயம் ஏற்படலாம். அதுவும் இல்லை. ஆகவே மதராஸ் முதலிய இடங்களில் செய்வதைப்போல் விஸ்தாரமான தற்காப்பு முறைகளும் இங்கே செய்யத் தேவையில்லை. இனியும் தேவை ஏற்படவேண்டாமென்றே கடவுளைப் பிரார்த்திப்போம். இருந்தாலும் சிறிய அளவிலாவது நாம் தற்காப்பு முறைகளைச் செய்துகொள்ளுவது நலம். அதற்காக விமானப் பாதுகாப்பு உத்தியோகஸ்தரின் கீழ், வார்டன்களையும், தூதர்களையும், நெருப்பு அணைக்கும் கோஷ்டியினரையும், ஆபத்திலுள்ளோர் தப்புவதற்கு ஒத்தாசையளிப்பவர்களையும், பிரதம சிகிச்சையளிப்பவர்களையும் பயிற்சி செய்யப்படுகிறது. இவைகளில் வார்டனுடைய அலுவல்கள்தான் மிகவும் முக்கியமானவை. ஒரு வார்டனிடம் ஒரு குறிப்பிட்ட இடம் ஒப்பிவிக்கப்பட்டிருக்கும். விமானப் பாதுகாப்பு வேலைகளை வார்டன்களுடைய சாமர்த்தியத்தை அனுசரித்துத்தான் பயன் படுத்தமுடியும்.

இவர்களில் சிலருக்கு ஸ்தல வார்டன் (Area Warden) என்று பெயர். இவர்கள் தங்களுடைய முகாமில் (Post) எப்போதும் இருக்கவேண்டும். அதிக ஜனநெருக்கமுள்ள இடங்களில் ஒரு சதுர மைலுக்கு 10 முகாம்கள் இருக்கவேண்டும். இந்தக் கணக்கை அந்தந்த இடங்களுக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ளலாம். ஒரு முகாமிலுள்ளோர் 2,000 ஜனங்களுடைய பாதுகாப்பு வேலையை கவனித்துக்கொண்டால் போதுமானது. ஒவ்வொரு முகாமையும் 4 முதல் 10 வரை தனிப்பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பகுதிக்கும் வார்டன்கள் உண்டு. ஆறு முதல் எட்டு பகுதிகளை ஒரு தொகுதியாகச் சேர்த்து ஒரு தலைமை வார்டனிடம் ஒப்பிவிக்கப்பட்டிருக்கும். பெரிய நகரங்களில் ஆறு முதல் எட்டு தொகுதிகளை ஒரு டிவிஷனாக அமைத்து டிவிஷனல் வார்டனிடம் கொடுக்கப்பட்டிருக்கும். யாவருக்கும் மேற்பட்ட வார்டன்களுக்கு, ஸ்தல வார்டன் முதலியோர் சரியாக வேலை பார்த்து வருகிறார்களாவென்று மேல்பார்க்கும் வேலைதான் அதிகம். ஏனென்றால் வார்டன்களுடைய வேலைதான் திருப்திகரமாக இருக்கவேண்டும். அந்தந்த ஸ்தலங்களில் வசிக்கிறவர்களைத்தான் வார்டன்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். நல்ல படிப்பு, அந்தஸ்து, பொருந்தி சுற்றுப் பக்கங்களில் செல்வாக்குள்ளவர்களாக இருக்கவேண்டும். நம்பிக்கையும் அக்கறையும் பொருந்தியிருப்பதோடு நெருக்கடியான நிலைமைகளில் பதட்டப்படாமல் நடந்து கொள்ளவேண்டும். சமயோசித புத்தியிருக்கவேண்டும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் விமானப் படையெடுப்பு நேரலாமென்று எதிர் பார்க்கப்

படும். அந்த சமயங்களில் இவ்வார்டன்கள் செய்யவேண்டிய அலுவல்கள் பல இருக்கின்றன. அநேகமாக வார்டன்களைப் பொறுக்கும்போது அந்தந்த பிரதேசத்தின் நிலைமை தெரிந்தவர்களைத்தான் எடுக்கவேண்டும். உதவியளிக்க முன்வரும் சிந்தனையிருக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். எந்த எந்த கட்டடங்களில் நெருப்பு சீக்கிரத்தில் பிடிக்குமென்றும், சமீபத்தில் எங்கே தண்ணீர் வசதியிருக்கிறதென்றும், விமானப் பாதுகாப்பு கிட்டங்கி, நெருப்பை அணைக்கும் கோஷ்டியினர், பிரதம சிகிச்சை வைத்தியர்கள், ஆபத்திலிருந்து மீட்கும் கோஷ்டியினர் முதலியோர் சமீபத்தில் எங்கே இருக்கிறார்கள் என்றும் முன்னாடியே இவ்வார்டன்களுக்கு தெரிந்திருக்கவேண்டும். தான பயிற்சி பெறுவதோடு, தனக்கு அருகிலுள்ள பொதுமக்களுக்கும் விமானப்படையெடுப்பு நேர்ந்தால் என்ன செய்யவேண்டுமென்பதையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். மேலும் தனது சிநேகிதர்களுக்கு இவ்வித வேலையில் பயிற்சி உண்டு பண்ணி 3 பேர்களையாவது வாலண்டியர்களாக வைத்துக்கொள்ளவேண்டும். ஒருபோதும் இவர்கள் தனது வேலைகளில் அசிரத்தையாக இருக்கக்கூடாது.

ஒவ்வொரு முகாமிலும் ஒரு வார்டன் எப்போதும் இருக்கவேண்டும். தான் எங்கேயாவது வெளியே போக நேர்ந்தால், இரண்டு மூன்று பகுதி வார்டனை வைத்துவிட்டுப் போகவேண்டும். விமானப் படையெடுப்பு எச்சரிக்கை கொடுக்கப்பட்டவுடன் முகாமிலுள்ள வார்டன் விசேஷ நடப்புகளைப்பற்றிய ரிபோர்ட்டுகளை வாங்கிக்கொண்டு, தலைமை ஸ்தானத்திற்கு அறிவிக்கவேண்டும். படையெடுப்பு நடக்கலாமென்று எச்சரிக்கை (Siren) சங்கு உயர்ந்தும் தணிந்தும் (Warbling note) ஊதப்படும். இரண்டு நிமிஷகாலம் இச்சங்கு (all clear) தொடர்ந்து ஊதப்பட்டால், எதிரி விமானப்படையெடுப்பு நின்றுவிட்டதாக அறியவும். எச்சரிக்கை சங்கு ஊதப்பட்டவுடன் அந்தந்த பிரதேசங்களிலுள்ள வார்டன்கள் தெருக்களில் ரோந்து செய்துகொண்டு பிகில்களை (whistles) ஊதி, தெருக்களில் ஒருவரும் நடமாடாமல் செய்யவேண்டும். அப்போது போலீஸ்காரர்களுக்கு உதவியாயிருந்து பொதுமக்கள் கலவரமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், வேறு உதவி வரும்வரை தானாகவே முடிந்தவரை பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். எவ்விதமான உதவி வேண்டும் என்றும், ஆபத்து எப்பேர்ப்பட்டதென்றும் முகாமிலுள்ள வார்டனுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர் தலைமை ஸ்தானத்திற்கு செய்தி அனுப்புவார். இதில் ஒருவித தாமதமும் ஏற்படக்கூடாது. அனுப்பும் செய்திகள் சுருக்கமாகக் காணப்படவேண்டும். டெலிபோன் வசதியில்லாத ஊர்களில் தூதர்கள் மூலமாக அனுப்பலாம். ஆனால் அவர்களிடம் கையில் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். இம்மாதிரி வேலைகள் யாவும் பூரணமான சக்தியுடனும், சிரத்தையுடனும் செய்யப்படவேண்டும். வார்டன்கள் முன் ஏற்பாடான வேலைகளைச் சரியாகச் செய்துவைத்திருந்தால்தான் விமானப் படையெடுப்பு ஏற்படும்போது சரியான காபந்துடன் நடந்துகொள்ளலாம்.

சமீபத்தில் ரெங்கூனில் நிகழ்ந்தவைகளிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பு ஸ்தலங்களில் பத்திரமாக இருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. ஒரு இடத்தில் குண்டுகள் விழும்போல் காணப்பட்டால், சில பொதுமக்கள் கலவரமடைந்து அந்த இடத்தைவிட்டு வேறு இடங்களுக்கு ஓடி ஒளிந்துகொள்ளுவார்கள். சிலர் வேடிக்கை பார்க்க வருவதுபோல் தெருவில் வந்து நிற்பதும் உண்டு. ஆனால் தெருக்களில் வந்து கூடி வேடிக்கை பார்த்ததினால்தான், ரெங்கூனில் முதல் நாள் படையெடுப்பில் அதிகமான பேர்கள் கொல்லப்பட்டார்கள். பொதுவாக பறந்து வெடிக்கும் குண்டு (high explosive bombs) விழுந்தால், சேதமாகாமல் எந்த இடத்தையும் காபந்துசெய்ய முடியாது. ஆனால் அப்பேர்ப்பட்ட குண்டு விழுந்து, அதன் தூள்கள் நாலா பக்கத்திலும் சிதறி விழும்போது அதிகச் சேதம் ஏற்படாமல்தான் செய்துகொள்ள முடியும். உதாரணமாக பறந்து வெடிக்கும் குண்டுகள் விழும்போது கல்லாலோ, செங்கலாலோ கெட்டியாகக் கட்டப்பட்ட வீடுகளில் உள்ளடங்கி இருக்கும் அறைகளில் பத்திரமாக இருக்கலாம். அங்கே கண்ணாடிக் கதவுகள் இருக்கக்கூடாது. அப்படிக் கண்ணாடிக் கதவுகள் இருந்தால் முன்னாடியே கண்ணாடிகளை எடுத்துவிடுவது நலம். கண்ணாடிகளின் மேல காகிதத்தை ஒட்டுவது மாத்திரம் பிரயோஜனப்படாது. பக்காவான வீடுகளில்லாதவர்கள் குழிகளை வெட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமான தற்காப்புகளைச் செய்துகொண்டுதான் ரெங்கூனில் சிலர் தப்பித்தார்கள். ஒருவித தற்காப்பும் செய்துகொள்ளாமல இருக்கக்கூடாது. ஏதாவது ஒரு பாதுகாப்பு செய்துவைத்துக்கொள்ளவேண்டும். ஒருக்கால் தற்காப்பு ஸ்தலங்களுக்கு அருகில் இருக்கமுடியாமல் இருந்து, அப்பொழுது விமானப் படையெடுப்பு நேர்ந்தால், உடனே முகத்தை தலைப்பக்கமாக வைத்துக்கொண்டு பூமிமேல் படுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் முகம் தரையைத் தொடக்கூடாது. முழங்கைதான் தரையைத் தொடலாம். இரண்டு காதுகளையும், இரண்டு கைகளால் மூடிக்கொள்ளவேண்டும். அப்பொழுது வாயைத் திறந்து வைத்துக்கொள்ளுவது அவசியம். வாயில் கார்க், ரப்பர், கைக்குட்டை அல்லது துணி இவைகளை அடைத்துக்கொள்ளுவது அவசியம். எப்படியாவது வாய் அகண்டு இருக்கவேண்டும். இப்படி இருந்தால் அதிக ஆபத்து ஏற்படாது. மேலும் படையெடுப்புக் காலங்களில் தெருவுகளில் நின்றுகொண்டிருந்தால், மனிதர்களை நேரே தாக்கும் குண்டுகளாலும் (anti-personnel bombs) அபாயம் ஏற்படலாம். தற்காப்பு ஸ்தலங்களில் இருக்காமல் தெருக்களில் வந்து நிற்பவர்களைக் கொல்லுவதற்காகவே இக்குண்டுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை இந்த யுத்தத்தில் விஷவாயுப் பிரயோகம் அதிகம் செய்யப்படவில்லை. அவ்விதம் விஷ வாயுக் குண்டுகள் விழும்போது மூச்சுவிட உதவும் கருவி (Respirator)யை முகத்தில் அணிந்துகொள்ளுவதுதான் நலம். இவைகளை அணிந்துகொண்டால் விஷ வாயுத் தொந்தரவு ஏற்படாது. எனது அனுபவத்திலிருந்தும் இதுதான் நலமென்று தெரியவருகிறது.

நகரங்களில் விளக்குகளைக் கவனிப்பதும் விமானப் பாதுகாப்பு வேலைக்காரர்களின் ஒரு முக்கிய அலுவலாகும். அதாவது ஒரு நகரத்தில் காணப்படும் விளக்குகளின் பிரகாசம் எவ்வளவு தூரத்திற்கு அப்பால் தெரியுமென்றும் இவர்கள் நிர்த்தாரணம் செய்துகொள்ளவேண்டும். ஏனென்றால் இராக்காலங்களில் விளக்குகளின் பிரகாசத்தை வைத்துக்கொண்டு லக்ஷியங்களை எதிரிகள் தெரிந்துகொண்டுவிடுவார்கள். உதாரணமாக சென்னையில் பூரா விளக்குகளும் எரிந்துகொண்டிருந்தால், கடலில் 60 மைல்களுக்கு அப்பால் இருந்து பார்க்க முடியும். இப்போது விளக்குகள் குறைவாக ஏற்றப்படுவதாலும், விளக்குகளின் பிரகாசத்தைக் குறைத்திருப்பதாலும் 12 மைல் தூரத்திலிருந்துதான் தெரியும். ஆகையால் ஒரு இடத்தில் விமானப்படையெடுப்பு நேரலாமென்று எதிர் பார்த்தால், பின்னாடி கொஞ்ச காலம் கிரமித்து படையெடுப்பு நேர்ந்தாலும் விளக்குகளின் வெளிச்சத்தைக் குறைப்பதற்கு முன்னாடியே பழகிக்கொள்ளவேண்டும். இடை இடையே பூரா விளக்குகளையும் அணைத்துக்கொள்ளவும் சகஜமாகப் பழகிக்கொள்ளவேண்டும். முதலில் வெளிச்சத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டால்தான் தேவையானபோது பூராவாக விளக்குகளை அணைத்துக்கொள்ளலாம். இவ்வித பழக்கத்தைப் பொதுமக்களுக்கு முன்னாடியே உண்டுபண்ணினால்தான் வரவர குற்றம் குறைகளைச் சீர்திருத்திக்கொள்ளமுடியும். மதராஸில அடிக்கடி விளக்கணைப்புகள் பரீக்ஷார்த்தமாகச் செய்யப்படுகின்றன. இதில் ஜனங்களுக்கும் அனுபவம் ஏற்பட்டு ஒத்துழைப்பது மிக சாதகமான அம்சம். அவ்வித விளக்கணைப்புகள் செய்யப்படும்போது தெருக்களில் எல்லாவிதமான நடமாட்டமும் நிறுத்தப்படும். பாதுகாப்புப்படையினரைத் தவிர வேறு ஒருவரும் தெருவில் நடமாடக்கூடாது. இவ்விதமாகப் பொதுஜனங்களுக்கு விமானப் படையெடுப்பு காலங்களில் நடந்துகொள்ளவேண்டிய விதத்தை முன்னாடியே கற்றுக்கொடுத்து, அவர்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி செய்வது மிகவும் முக்கியமான அம்சம்.

# வார யுத்தச் செய்திகள்

---

### 7—3—42-லிருந்து 11—3—42-வரை.

ஜாவா மகத்தான யுத்தத்திற்குப் பிற்பாடு எதிரி வசமாயிற்று. அங்கு ஜனத்தொகை மிகவும் கொஞ்சமாக இருந்தாலும் கூட, அவர்கள் மிகவும் தைரியமாக எதிர்த்து சண்டை செய்து தங்கள் தீரத்தைக் காட்டினர். தூரக் கிழக்கில் அபாயம் வரப்போகிறதென்று முதன்முதலாக நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகளின் அரசாங்கம் அறிந்துகொண்டு, நேசதேசத்தாருக்கு எச்சரிக்கை செய்தது. சென்ற டிஸம்பர் மாதம் 8-ம் தேதியில் பிரிட்டனும், அமெரிக்காவும் ஜப்பானுடன் யுத்தம் துடங்கியவுடன், ஜாவாவிலுள்ள துருப்புகள் அவசர அவசரமாக யுத்தத்திற்கு ஆயத்தமாயின. உதவிப்படைகள் இங்கு வந்து சேர்ந்தவுடன் எதிரிகளைத் திருப்பித் தாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அங்கு உதவிப்படைகள் அதிக தாமதத்தின் பேரில்தான் வந்தன. அவைகள் மிகவும் ஸ்வல்பம்தான். இதற்கிடையில் அமெரிக்க பாம்பர் விமானங்களால் உதவி புரியப்பட்டு, டச்சுக் கப்பற்படையும், விமானப் படையும் சேர்ந்து ஜாவாக் கடலில் எதிரியின்பேரில் பலவெற்றிகள் அடைந்தன. எதிரிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. இருந்தாலும், இங்குள்ள துருப்புகள் சோர்வடைந்து விட்டன. விமானங்களுக்கும், விமான நிலயங்களுக்கும் ரொம்பவும் குறைவாக இருந்தது. ஜப்பானியர்கள் விமான பலம் அதிகம் பெற்றிருந்த படியால், பிப்ரவரி மாதக் கடைசியில் ஜாவாவில் வந்திறங்கிய பொழுது அவர்களைத் தடுப்பதற்கு அங்கு ஒருவருமில்லை. ஆனால் சில டச்சுப் படைகள் மட்டில் எதிரிகளை வரவிடாமல் கடைசி வரையில் எதிர்த்தன. முன்னேறி வந்த ஜப்பானியத் துருப்புகளை ஒவ்வொரு தடவையிலும் சாமர்த்தியத் துருப்புகள் தோற்கடித்தன. ஆனால் ஜப்பானியர்கள் தற்காப்பு முறையில் இறங்கியவுடன் எதிரிகளை எதிர்த்துநின்ற தனிப்பட்ட பகுதிகள் உடனே பின் வாங்கிவிட்டதாயும்தான், என்று மேஜர் ஜெனரல் கார்டன் பென்னட் சொன்னார். தரையில் எதிரிகளின் பலம் 10 மடங்கு அதிகமாயிருந்தபடியால் அவர்கள் முன்னேறிவருவதை தடை செய்யமுடியவில்லை. ஜவாவின் தலைநகரான பட்டேவியா முதன் முதலில் விழுந்தது. அடுத்தபடியாக ராணுவ முக்கிய ஸ்தலமாயிருந்த பாண்டோங்கும் எதிரிவசமாயிற்று. ஸௌரபாயா பூ தகன முறைக்குள்ளாயிற்று. டச்சு கிழக்கிந்தியத் தீவுகளின் உப கவர்னர் ஜெனரல் டாக்டர் வான் மூக் என்பவர் வாஷிங்டன் வழியாக லண்டனுக்குப் போவதற்குப் புறப்பட்டவர் இப்பொழுது ஆஸ்திரேலியாவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார். ஜாவா ஜப்பானியர்கள் வசமாகிவிட்டது என்று எதிரிகள் சொல்லிக்கொள்ளும் வதந்தி இன்னும் ஊர்ஜிதமாகவில்லை. பாண்டோங்குக்குக் கிழக்கிலும் மேற்கிலும், கிழக்கு ஜாவாவிலும் சுமத்ராவிலும் யுத்தம் நடந்து கொண்டிருப்பதாகச் சமீபத்தில் வந்த செய்தியிலிருந்து தெரியவருகிறது.

**பர்மா யுத்தம்.**—இந்த வாரத்தில் யுத்தம் பெகுவைச் சுற்றிலுமுள்ள இடங்களில்தான் நடந்தது. ஆரம்பத்தில் எதிரிகள் சுமார் 12 பேர்கள் கொண்ட சிற்சிறு பகுதிகளாக சிறு ரேடியோப் பெட்டிகளை வைத்துக்கொண்டு ஸைகிள்களில் தோன்றினார்கள். பீரங்கி பட்டாளமும், ஸப்ளைகளும் ஸயாம் தேசத்து யானைகளில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டன. விரோதிகள் சம வெளியான வயல்கள் பக்கம் வந்ததும் பிரிடிஷ் விமானப்படையும், A. V. G. படையும் இன்னும் புதிதாக வந்த பிரிடிஷ் டாங்கிகளும் விரோதிகளுக்கு பலத்த சேதத்தை விளைவித்தன.

**ரெங்கூன் பிடிபட்டது.**—சென்ற சனிக்கிழமை வரை ரெங்கூனில் நிலைமை அமைதியாகத்தான் இருந்தது. பிரிடிஷ், அமெரிக்க விமானங்களின் உதவியால் ரெங்கூன் துறைமுகம் வழியாக பிரிடிஷ் டாங்கிகள் வந்துசேர்ந்தன. கப்பல்களிலிருந்து சாமான் இறக்குமிடங்களிலும் ஒருவித அபாயமும் தோன்றவில்லை. மார்ச்சு மாதம் 6-ம் தேதி பிரிடிஷ் விமானப்படையால் உதவி செய்யப்பட்டு வந்த H. M. I. S. ஹிந்துஸ்தான் என்ற யுத்தக் கப்பல், விரோதிகள் அங்கு வந்து இறங்குவதைத் தடுத்த விரோதி விமானத்தையும் கைவசப்படுத்திக்கொண்டது.

தாத்காலிகமாக பிரிடிஷ் துருப்புகள் பெகுவில் 7-ம் தேதியன்று தங்கும்படி நேர்ந்துவிட்டது. அதே சமயத்தில் எதிரிகளும் பாகோ, ரெங்கூன் நதிகளின் கரைகளில் ஏராளமாக வந்திறங்கிவிட்டார்கள். அதனால்தான் ரெங்கூன் நகரம் காலிசெய்து விடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. பிரிடிஷ் துருப்புகள் பின்வாங்குகையில் ஹ்மாவிபி (Hmawbi) என்னுமிடத்திற்கு அருகாமையில் ரெங்கூன்—ப்ரோம் ரஸ்தாவைத் தாண்டிப்பதற்கு எதிரிகள் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. பிரமாதமான சண்டை நடந்ததின் பேரில் தான் சாம்ராஜ்யப் படைகள் எதிரிகளின் படை வரிசைகளைப் பிளந்து சென்றன. சுமார் 100 வீரர்கள்கொண்ட ஜப்பானியக் காவற்படை பெருவுக்கருகாமையில் ரெங்கூன்-மாண்டலே ரஸ்தாவைத் தாண்டியதாகவும், ரெங்கூனிலிருந்து ப்ரோமுக்குச் செல்லும் ரஸ்தாவிலிருக்கும் தாராவாடி (Tharrawaddy) என்ற பிரதேசத்தை நோக்கிச்செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது. ரெங்கூனிலிருந்து வட பர்மாவுக்குச் செல்லக்கூடிய ரஸ்தா இது ஒன்றுதான் இருக்கிறது. தாராவாடியை ஜப்பானியர் பிடித்துக்கொண்டதாகச் சொல்வது இன்னும் ஊர்ஜிதப்பட வில்லை.

சமீபத்தில் கிடைத்த செய்திகளிலிருந்து தாராவாடிக்கு அருகில் ப்ரோம் நதிக்கருகில் நேசதேசப்படைகள் நிலைத்திருப்பதாகத் தெரிகிறது. மேலும் ரெங்கூனுக்கு 10 மைல் வடக்கே இருந்த பாஸீன் துறைமுகத்தை நோக்கி எதிரிகள் போவதாகத்தெரிகிறது. இது ஒன்றுதான் இன்னும் பர்மியர் வசமிருக்கிறது.

ரெங்கூனிலிருந்த கப்பல் தளங்களும், எண்ணெய் சுத்திசெய்யும் யந்திரங்களும் பூ தகன முறைக்கு உள்ளாக்கப்பட்டன. ஸிரியாமிலிருந்த யந்திரங்களும் அழிக்கப்பட்டன.

தற்சமயம் உதவி ஜெனரல் ஸர் H. R. L. G. அலெக்ஸாண்டர் பர்மாவில் தலைமை வகிக்கிறார்.

மோல்மீனில் பிரிடிஷ் விமானப்படை குண்டுகள் போட்டன.

ஆஸ்திரேலியா யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதென்றே சொல்லலாம். ஸலாமுவா, லாக் பின்ஷாஃபென் என்ற இடங்களை நியூகினித் தீவில் ஜப்பானியர் கைவசப் படுத்திக்கொண்டு யுத்த தளவாடங்களை சேமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்களை ஆஸ்திரேலிய விமானங்கள் தாக்கி சில போக்குவரவுகளைச் சேதப்படுத்தின. நியூ பிரிடன் தீவில் காஸ்மாடா என்ற இடத்தில் ஜப்பானியப் பராக்கிரமம் படை ஒன்று சொனுத்தப்பட்டது. தென் பஸிபிக்கில் ஒரு பெரும் சண்டைக்கு ஏற்பாடாக வருகிறது.

அமெரிக்கா நீர்மூழ்கிகள் ஜப்பானிய நாசகாரி ஒன்றையும், எண்ணெய்க் கப்பல் ஒன்றையும் மூழ்கடித்து, 3 க்ரூயிஸர்களையும் ஒரு விமானமேற்றிச் செல்லும் கப்பலையும் சேதப்படுத்தின.

மற்றொரு அமெரிக்க நீர்மூழ்கி எதிரிகளின் சாமான் கப்பல்களையும், பிரயாணிகளையும் கப்பல்களையும் ஜப்பானுக்கு அருகிலேயே மூழ்கடித்தது. அமெரிக்க பாம்பர்கள் ஸலாமுவாவைப் படையெடுத்து இரண்டு கப்பல்களை மூழ்கடித்தன. 4 எதிரி கப்பல்கள் தீமூண்டன. ஒன்று கரையோரமாகத் தள்ளப்பட்டது.

மத்தியப் பஸிபிக்கில் மிட்வே தீவுகளுக்கு அருகில் ஒரு எதிரி விமானத்தை அமெரிக்க லைபடர் விமானங்கள் சுட்டு வீழ்த்தின.

**பிலிப்பைன்ஸ்.**—படான் தீபகற்பத்தில் சண்டை ஒன்றும் நடக்கவில்லை. மிண்டானேவில் சிறிய சண்டைகள் தான் நடந்தன. மாக் ஆர்தரின் படைகளை அழிக்க முடியாத காரணத்தினால் ஜப்பானிய ஜெனரல் ஹோம் தற்கொலை செய்து கொண்டுவிட்டதாகவும் அவனுக்குப் பதிலாக டோமோ யூகியமஷிடா படைத் தலைவனாகியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

**பொதுவானவை.**—அனலிஸ்டு பத்திரிகை கூறும் விதமாக சுமத்ரா, செலிபஸ், போர்னியோ, நியூ கினி, ஜாவா முதலியவை எதிரிவசமாயிருந்தாலும் இன்னும் அவைகளை ஒழுங்கு படுத்தியபாடில்லை. ஏனென்றால் ஆங்காங்குள்ள படைகள் ஜப்பானியரை மறைமுகமாகத் தாக்கியே வருகின்றன. படான் தீபகற்பத்தில் எதிரிகளுக்கு நேருவது போலவே மற்ற இடங்களிலும் தொந்தரவு காணப்படுகிறது.

தற்போது லண்டனிலுள்ள டச்சுப் பிரதம மந்திரி பின்வருமாறு சொன்னார்: 'நமது யுத்த முயற்சி மேலும் நடந்து கொண்டே இருக்கிறது. புதிதாக ஒரு கப்பற்படைத் தயாராகி வருகிறது'.

**ருஷ்யா.**—லெனின்கிராட்டைச் சுற்றிலும், மாஸ்கோவிற்கு அப்பாலும், டானெட்ஸிலும் கிரிமியாவிலும் ருஷ்யர்கள் மும்முரமாகவே தாக்குகின்றனர். ஸ்டாரா ருஸாவிற்கு அருகில் 16 ஜெர்மன் பகுதி பூராவாக அழிக்கப்பட்டது. இதனால் ஹிட்லருக்கு அதிகக் கவலையாக இருக்கிறது.

இவ்வாரத்தில் யூக்னவையும் கிரோனவையும் ருஷ்யர்கள் பிடித்து இதிலிருந்த ஜெர்மன் 26,263 காலாட் பகுதிகளைத் தாக்கியழித்தனர். லெனின்கிராட்டிற்கு முன்னால் ஜெர்மன் விமானக் கூடைப்பகுதியும் மத்திய முனையில் 48 வது பகுதியும் அழிக்கப்பட்டன. வியாஸ்மா-ஸ்மொலென்ஸ்க் ரஸ்தாவரையில் ருஷ்யர்கள் முன்னேறியிருக்கிறார்கள்.

இதுவரைத் திரும்பப்பிடித்த பிரதேசங்களை ருஷ்யர்கள் சீர்திருத்தம் செய்கிறார்கள். டானெட்ஸ்-மாஸ்கோ பகுதிகளில் 60 நிலக்கரிச் சுரங்கங்கள் மறுபடி செப்பனிடப்பட்டன.

தென் ருஷ்ய பாகத்தில் பனி உருகி ரஸ்தாக்களும் பிரதேசங்களும் வெள்ளமாகப்போயின. ஏப்ரல் மாதம் முடிவதற்குள் வசந்த காலத் தாக்குதல்களை ஆரம்பிக்க முடியாது.

**லிபியா.**—சாத்பிரதேசத்தில் ஜெனரல லி கிளார்க் என்பவனின் கீழ் இருந்த ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைகள் 900 மைல் பாலைவனம், மலை முதலி கஷ்டமான பாதைகளில் முன்னேறி மர்ஸுக் பிரதேசத்தில் பெஸ்ஸன் (Fezzan) என்ற இடத்தைப் பிடித்தன. இது எல் கஸாலாவிற்கும் டெமொவிற்கும் தென்மேற்கில் இருக்கிறது. மர்ஸுக்கிலிருந்து 200 மைல் வடகிழக்கில் இருக்கிறது.

மத்தியதரைக்கடலில் இதாலியக் கப்பற்படையால் துணைபுரியப்பட்ட எதிரிக்கப்பல்கூட்டம் பிரிடிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டது. எதிரியின் வியாபாரக் கப்பல் ஒன்றும் ஒரு நாசகாரியும் சேதமாக்கப்பட்டன. ஒரு ஜெர்மன் விமானமும் வீழ்த்தப்பட்டது.

ரோட்ஸ், ஸமோஸ், பெங்காஸீ, ட்ரிபோலி முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானங்கள் குண்டுகள் போட்டன.

**பிரிடிஷ் விமானப்படை** யெடுப்புகள் ஜெர்மனியேபிலும் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் மிகவும் கடுமையாகச் செய்யப்பட்டன. எதிரியின் முக்கிய தொழிற்சாலைப் பிரதேசமான ரூர் பிரதேசம்தான் லக்ஷியமாக இருந்தது. பாரிஸுக்கு அருகில் பாய்ஸியிலுள்ள மாட்போர்டு பாக்டரியும், காமினியிலுள்ள மின்சார யந்திர சாலையும், அபிவில்லியிலுள்ள ரயில்வே தளங்களும், ஜெயின்டு நாஸேரிலுள்ள கப்பல்தளங்களும், காலே கார்பி, ஆஸ்டெண்டு, ஹாவேர் முதலிய இடங்களிலுள்ள தொழிற்சாலை, மின்சாரசாலை முதலியவைகளும் தாக்கப்பட்டன.



**அமெரிக்க இஞ்ஜினியர்கள் கோஷ்டி** ஒன்று இந்தியாவிற்கு வரப்போகிறது. ராணுவ நிலை மாறிக்கொண்டே வருவதால் இந்தியாவில் தொழிற்சாலை பலத்தை விருத்தி செய்யவேண்டியது அவசியமாகி வருகிறது. இந்தியாவில் அவ்வித முயற்சியை விருத்தி செய்யத் தேவையான உதவியை அமெரிக்கா கொடுக்க சித்தமாக இருக்கிறது. சாட்பீல்டு ரிபோர்டு, ரோஜர் சங்கம், கிழக்குநாடுகளின் கூட்டம் முதலியோரின் அபிப்பிராயங்களும், அங்கீகரிக்கப்படும். ஆரம்ப காலங்களில் இந்தியாவிலிருந்து மைகா, மாங்கனீஸியம், மற்ற விளைவுபொருள்களை அமெரிக்கா வாங்கி அவைகளுக்குப் பதிலாக மோட்டார் வண்டிகள், யந்திர சாமான்கள், முதலியவைகளைத் திருப்பிக்கொடுத்தது. இப்போது இந்தியர் ஒருவர் நேராடி ஏற்பாடு செய்துவருவதால் மற்றும் தேவையான சாமான்களை வாங்க முடிகிறது. இஞ்ஜினியர்கள் கோஷ்டியும் வந்தால் இவ்வித முயற்சிகள் மேலும் துரிதமாக்கப்படும்.

**குத்தகைக்கடன் மசோதா** குத்தகைக்கடன் மசோதா அமுலுக்கு வந்து ஒரு வருஷமாவதால் அதனால் ஏற்பட்டுள்ள சாதகங்களைப்பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்டு அமெரிக்கக் காங்கிரஸ் சபை முன்பாக அறிவித்தார்:—

1. 257,045,241 டாலர் பொருமானமுள்ள சாமான்கள் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டன.

2. பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள், யந்திர சாமான்கள், கப்பல்கள், உணவுப்பொருள்கள், விளைவுபொருள்கள் முதலியவை வெளி நாடுகளுக்கு அனுப்பட்டன.

3. ருஷ்யாவிற்கு ராணுவ தூது கோஷ்டியனுப்பி, தேவையான யுத்த சாமான்கள் அனுப்பப்பட்டு, அவைகளின் உபயோகமும் கற்றுக்கொடுக்கப்பட்டன. சைனாவுக்குச் சென்ற கோஷ்டியினரால் சீனசைனியத்தைப் பழக்கி, யந்திர சாதனங்களை உபயோகிக்கும் விதம் சொல்லிக் கொடுக்கப்பட்டன. வட ஆபிரிக்கா, ஈரான் முதலிய இடங்களுக்கு அனுப்பப்பட்ட சாமான்கள் சரியாக உபயோகிக்கப்பட்டு வருகின்றனவா என்று பார்க்கப்பட்டது என்றார்.

**அமெரிக்க-அலாஸ்கா மார்க்கம்** இன்னும் ஒரு வருஷத்திற்குள் கட்டி முடிந்துவிடும் இதன் வழியாக சாமான் வண்டிகளும், டாங்கிகளும் கெடுதலடையாமல் கொண்டுபோக முடியும். ஏனென்றால் இதனருகில் எதிரி விமானங்களும் கப்பல்களும் வரமுடியாது.

**சீன விஷயங்கள்.**—

(1 அமெரிக்கச் சேனையைச் சேர்ந்த உதவி ஜெனரல் ஸ்டில்வெல்

(4) பர்மா தினத்தை 8ட ஞாயிற்றுக்கிழமை சைனா கொண்டாடிற்று. 17ட செவ்வாய்க்கிழமை இந்தியா தினத்தைக் கொண்டாடும்.

**பலவகைப்பட்டவை.**

(1) ஆங்கிலோ-அமெரிக்க கமிஷன் ஆரம்பிக்கப்பட்டு விவசாயம், சரீர ஆரோக்யம், வீடு வசதி, படிப்பு, சமூக தன்மை, பொது வரவுசெலவு முதலியவைகளை காரிபியன் பிரதேசத்தில் கவனிக்கும்.

(2) **ஆங்கில-கிரீஸ் ஒப்பந்தம்** ஏற்படுத்தப்பட்டு கிரீஸ் படைகளை நேர்மைப் படுத்தி நேசதேசப்படைகளுடன் ஒத்துழைக்க ஏற்பாடு செய்யப்படும்.

(3) **இரானில் மந்திரி மாறுதல்.**—முன்பு இரானில் பிரதம மந்திரியாயிருந்த மிஸ்டர் பராங்கிடி தனது பதவியை ராஜினமா செய்தார். ஏதோ மந்திரி சபையில் நெருக்கடி ஏற்பட்டதாம். இப்போது மிஸ்டர் அலி ஸோஹிலி அப்பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

(4) பிரிடனின் தினச் செலவு 145 லக்ஷம் பவுனுக்கு அதிகரித்திருக்கிறது.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசகளின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**2—3—42.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்.)

இரவில்.—கப்பற்படை தளங்கள்—கீல் (Kiel), வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven) (அங்குதான் ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸ்னௌ என்ற ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் தங்கியிருக்கின்றன.)

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi).

**ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகம், கப்பல்கள், மராமத்து வேலைகள், கப்பல் துறைகள் ஒரு கடல் விமான தளம்.—பாலர்மோ (Palermo). — பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. ஒரு பெரிய சாமான் கப்பல் மூழ்கிற்று.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விரோதி விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். — 11 விமானங்கள். — 60 விமானங்கள்.

**தூரக்கிழக்கு—ஜாவா (Java)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி இறங்குமிடங்கள்—ஜாவா (Java).

**பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதிப் படைக் கூட்டங்கள்—பெகு (Pegu)வுக்கருகாமையில்.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**2—3—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

**தூரக்கிழக்கு—நியு பிரிடன்(New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

ஜப்பானியர்கள் ஆக்கிரமித்த விமான நிலயம்.

ஜப்பானியக் கப்பல்கள்—காஸ்மாடா (Gasmata).

**3—3—42.** (செவ்வாய்க்கிழமை)

**ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்—ரெனுல்ட் (Renault) தொழிற்சாலைகள்—பிலான்கோர்ட் (Billan court) (பாரிஸுக்கு வெளியே).
துறைமுகம்—எம்டன் (Emden).
வெடிகண்ணிகள் பாவுவது—விரோதி சமுத்திரங்களில்.
} 2 விமானங்கள்.

**லிபியா(Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

காவல் புரிதல்—லிபியா (Libya)

துறைமுகம்—ட்ரிபோலி (Tripoli).

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விரோதி விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். — 6 விமானங்கள். — 18 விமானங்கள்.

**தூரக்கிழக்கு-ஜாவா (Java)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி ஆக்கிரமித்த விமான நிலயங்கள், அங்குமிங்கும் செல்லும் விரோதி படை வகுப்புகள்-ஜாவா (Java)வில்.

**தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்)

விமான நிலயம், மற்ற ராணுவக் கட்டடங்கள்—காஸ்மாடா (Gasmata)வில். — பலத்தசேதம்.

**4—3—42.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலிலும், இரவிலும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டதற்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

ராணுவ லக்ஷியங்கள்—பெங்காஸி (Benghazi), ட்ரிபோலி (Tripoli). — 3 விமானங்கள்.

**ருஷ்யா Russia**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். — 13 விமானங்கள். — 43 விமானங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**4—3—42.** (புதன்கிழமை) [illegible]

[illegible]

[illegible] (Bandoeng ... Wi...) [illegible]

[illegible] (Java)—[illegible]

விமான [illegible] (Kalijati).

**5—3—42.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலிலும், இரவிலும் வெடிகுண்டு எதிர்ப்புகளைக் குறித்துத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா Libya**—(பிரிடிஷ் விமானங்களால்).

லக்ஷியங்கள்.—ட்ரிபோலி, (Tripoli), பெங்காஸி (Benghazi).
விமான எதிர்ப்புகள் காவல் புரிவது—லிபியா (Libya). — நஷ்டமில்லை.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை எங்கும். — 14 விமானங்கள். — 79 விமானங்கள்

**தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி ஆக்கிரமித்த விமான நிலயங்கள்.—ஜாவா (Java)வில்.

**பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதிகளின் ரகசியமாக ஆக்கிரமித்தல்—பெகு (Pegu) வுக்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களில்.

**டிமோர் (Timor)**—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி தளங்கள்—டிமோர் (Timor).

**நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி ஆக்கிரமித்த தளங்கள்—காஸ்மாடா (Gasmata) உட்பட.

ஒரு விமான நிலயம்—கோபாங் (Koepang) குக்கு அருகாமையில்.

**6—3—42.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்.—விரோதி ஆக்கிரமித்த விமான நிலயங்கள்—பிரான்ஸ் (France).



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**6—3—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

**லிபியா Libya**—(பிரிடிஷ் விமானங்களால்).

[illegible] (Benghazi), [illegible] ட்ரிபோலி (Tripoli). — ஒரு சப்பல் மூழ்கிற்று.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். — 7 விமானங்கள். — 35 விமானங்கள்.

**தூரக்கிழக்கு—ஜாவா (Java)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

ஜப்பானியர்கள் இறங்குமிடங்கள், புதிதாகச் சேர்க்கப்பட்ட சைனியங்கள்.—ஜாவா (Java)வில்.

**பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதிப் படைகளுக்குப் பின்றல் 6 மைல் நீளமுள்ள ஸப்ளை வண்டிகளின்தொடர்.—பர்மா (Burma).

**7—3—42.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்.—விரோதிக் கப்பற்படை தளம்.—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). — 1 விமானம்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli).

காவல் புரிதல்.—ஸிரெனைகா (Cyrenaica) பூராவிலும்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் பூராவும். — 6 விமானங்கள். — 36 விமானங்கள்.

**தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விரோதி ஸ்தானங்கள்.—மணிலா (Manila)க் குடாக் கடல்.

**ஜாவா (Java), (N. E. I.)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமானமிறங்கும் புது இடங்கள்.—ஜாவா (Java).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—3—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.— மாட்போர்டு (Matford) தொழிற்சாலை—பாரிஸுக்கு (Paris) அருகாமையிலுள்ள பாய்ஸி (Poissy) என்னுமிடத்தில். | யாவும் தீப் பற்றின. | | |
| | மின்சார உற்பத்திசாலை.— காமைன்ஸ் (Comines). | | | |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—அபிவில்லி (Abbeville). | | 1 பாம்பர், 3 பைடர் விமானங்கள். | 2 பைடர் விமானங்கள். |
| | இரவில்.—பெரிய தொழிற்சாலையுள்ள ஜில்லா—எஸ்ஸன் (Essen). | | | |
| | இதர லக்ஷியங்கள்.—ரூர் (Ruhr) பிரதேசத்தில். | | | |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—ஆஸ்டெண்டு (Ostend), லெஹாவர் (Lehavre). | | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து (Holland). வட பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 10 விமானங்கள். | 39 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியத் துருப்புகள்.-பெகு (Pegu)வுக் கருகாமையில. | | | |
| | **நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ், விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—நியூ பிரிடன் (New Britain). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—3—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—3—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ஸூயஸ் (Suez)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | | | |
| | **தூரக்கிழக்கு—ஜாவா (Java)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பாண்டோங் (Bandoeng). | | | |
| | **நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Port Moresby). | | | |
| **4—3—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு நகரம்—கிழக்கு ஆங்கிலியாக் கடற்கரை (East Anglia)யில. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம். | | | |
| **5—3—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரையில். | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 4 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—ஜாவா (Java)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பாண்டோங் (Bandoeng). | | | |
| **6—3—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—ஜாவா (Java)**—(ஜப்பானிய விமானங்களால்) | | | |
| | பாண்டோங் (Bandoeng) இன்னும் பாக்கியுள்ள ராணுவ தளங்கள்.—ஜாவா (Java). | | | |
| | **நியூ கினியா (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—நியூ கினி (New-Guinea). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—3—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. | சொற்பச் சேதம். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினியா (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 8—3—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britian)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அங்குமிங்கும் சில இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, வடகிழக்கு கடற்கரையில். | சொற்பச் சேதம். ஒருவன் கொல்லப்பட்டான். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோவிற்கு (Moscow) அருகாமையில். | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—[illegible] | | | |
| | ப்ரோம் (Prome). | | | |
| 9—3—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—[illegible] | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterr[illegible] | | | |
| | மால்டா (Malta) | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (M scow)விற்கருகாமையில். | | 4 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |



# யுத்தக் குறிப்புகள்.

**ஜோஸியம்.** பஸிபிக்கில் ஜாவா எதிரிவசமாகிவிட்டதாலும், ஐரோப்பாவில் வசந்த காலம் ஆரம்பமாகி வருவதாலும், யுத்தத்தின் போக்கு இனி எப்படியிருக்குமென்பதைப்பற்றி பல விதமாக ஜோஸியம் சொல்லப்படுகிறது. சதுரங்க ஆட்டத்தில் அடுத்தபடியாக எதிரி என்ன விதமாக காய்களை நகர்த்தப்போகிறானோ என்று மற்றொரு கக்ஷிக்காரன் யோசிப்பது போலவேதான் அச்சு நாட்டினரும் நேசநாடுகளும் இனி என்ன செய்யப்போகிறார்கள் என்று ஒவ்வொருவரும் ஆலோசனையிலிருக்கிறார்கள். உதாரணமாக ஜப்பான் ஜெர்மனி நேசநாடுகள் என்ன செய்யக்கூடுமென்று நாம் சொல்லுவோம்.

ஜாவாவை எதிரிகள் வசப்படுத்திக்கொண்டதால் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நேரடியான சம்பந்தம் தடைபட்டுவிட்டது. ரெங்கூனைப் பிடித்துக்கொண்டதால் அங்கிருந்து இந்தியாவை நோக்கிப் பாய்வதற்கு ஒரு இடம் கிடைத்ததாகச் சொல்லலாம். அதேமாதிரி நியூகினியிலிருந்து ஆஸ்திரேலியாவைத்தாக்கலாம். மேலும் சிங்கப்பூர், படேவியா என்ற இரண்டு கப்பற் தளங்களும் எதிரி கைவசமானதால் ஆபிரிக்கா வரை ஹிந்து மஹா சமுத்திரத்தில் தாராளமாக நடமாட்டம் செய்ய எதிரிக்கு ஒரு சௌகரியமாகிவிட்டதாகவே சொல்லவேண்டும். இதைத் தவிர ஸைபீரியப் பிராந்தியத்திற்கு அருகிலும் ஜப்பானியர் சைனியங்களைச் சேமித்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஜப்பானுக்கு மூன்று வழிகள் இருக்கின்றன. இந்தியா, ஆஸ்திரேலியா, ருஷ்யா இவைகளில் எங்கே பாயப்போகிறதோ. ஜப்பானும் ஜெர்மனியும் சேர்ந்து இரண்டுபக்கங்களிலும் மத்தளத்தை அடிப்பதுபோல் தன்னைத்தான் தாக்கப்போவதாக ருஷ்யா எண்ணிக்கொண்டிருக்கிறது. தன்பக்கமாக ஜப்பானியர் திரும்பிவிட்டதாக ஆஸ்திரேலியா நினைக்கிறது. இந்தியா பக்கமாக யுத்தம் திரும்பிவிட்டதாக இந்திய வைஸிராய் கூட எச்சரிக்கை செய்திருக்கிறார். இந்த மூன்று ஜோஸியங்களைத் தவிர, மத்தியக்கிழக்கில் ஜப்பானியரும் ஜெர்மானியரும் ஒன்று சேர்ந்து தாக்குதல் செய்யப்போவதாயும் கூறப்படுகிறது. மேலும் மெடகாஸ்கர் விஷிக்குட்பட்டிருப்பதில் இந்தோ-சைனாவை விட்ட மாதிரி மெடகாஸ்கரையும் ஜப்பானுக்கு ஒப்படைத்துவிட்டால் நமக்கு பாதகம் தான். ஏனென்றால் விஷிக்குச் சொந்தமான 40 கப்பல்களை நாஸிகளுக்குக் கொடுத்துவிட்டது. மெடகாஸ்கரையும் கொடுத்தால், செங்கடல் பெர்ஸியன் குடா, முதலிய இடங்களுக்கும், அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா முதலியவைகளுக்கும் போக்குவரவு தடைபட்டுவிடும். இது இவ்வாறு இருக்க மெடகாஸ்கரைத் தாங்கள் பிடித்துக்கொள்ள நினைத்திருப்பதாயும் ஜப்பானுக்கு விட உத்தேசமில்லையென்றும் ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்களாம். இது சுத்த ஏமாற்றல்தான். ஏனென்றால் தனது காரியம் கைகூடும் வரை எதைவேணுமென்றாலும் ஜப்பானுக்கோ, இதாலிக்கோ ஹிட்லர் கொடுக்க சித்தமாகத்தானிருப்பான். இப்படியெல்லாம் செய்து சாம்ராஜ்யப்படைகளையும் கப்பற்படைகளையும் தனித்தனியே பிரிக்க எதிரிகள் யத்தனிக்கப் பார்ப்பார்கள். ஆகவே பலவிதமாகச் சொல்லப்படுகிறது. என்னதான் ஜப்பான் செய்யப்போகிறதோ?

வி வி வி வி வி வி வி

**அடுத்தபடியாக நாஸிகள் என்ன செய்வார்கள்?** பனி கரைய ஆரம்பமாகியிருக்கிறது. ரஸ்தாக்களில் இருக்கும் தண்ணீர் இன்னும் சிறிது காலத்தில் உலர்ந்துபோய்விடும். ஏப்ரல் மாதத்தில் யுத்தம் ஆரம்பிக்கப்படலாம். துருக்கி வகித்துவரும் நடுநிலைமையை மீறிக்கொண்டு நாஸிகள் துருக்கிவழியாக காகஸஸை நோக்கிப்போகலாம். ஜிப்ரால்டரைத்தாக்கலாம். பிரிடன்மேல் படையெடுப்புச் செய்யலாம். அல்லது மறுபடி ருஷ்யா முதலிய இடங்களிலிருந்து பெர்லினை நோக்கியே தோற்று ஓடலாம். ஏதோ வசந்த காலத்தாக்குதலுக்கு ஜெர்மனி தயார்செய்வதாக மாத்திரம் சொல்லப்படுகிறது.

**ஆபிரிக்காவிலுள்ள ஜெர்மன் தள கர்த்தரான ரோமல் என்ன செய்யக்கூடும்?**

ஸூயஸ்ஸைத் தாக்கலாம். பிரிடிஷ் தளகர்த்தரான ரிச்சியின் படைகளைக் கலைத்து ட்ரிபோலியைக் காப்பது செய்யலாம்.

வி வி வி வி வி வி வி

**நேசதேசங்கள் என்ன செய்யக் கூடுமென்று சொல்லுவோம்.**

ரோமலின் படைகளைத் தாக்குவதற்காக ஆங்கிலேய அமெரிக்கப் படைகள் விஷி பிரெஞ்சுப் பிரதேசத்தில் இறங்கி முன்னேறித்
தாக்கலாம். பர்மாவில் இறங்கி இந்தோ-சைனாவைத் தாக்கலாம். அல்லது
அமெரிக்கர்களும் ஆஸ்திரேலியர்களும் ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டு எதிரி
களைத் தாக்கலாம். தாய்லாந்தின் பேரிலும் பிரெஞ்சு இந்தோ சைனா பேரிலும்
படையெடுக்கலாம். இவ்வளவு உத்தேசங்களில் எப்போ, எது, எப்படி ? என்று
சொல்லுவதுதான் அசாத்தியமான விஷயம். இவைகளைப்பற்றி தலைவர்களைத்
தவிர வேறொருவருக்கும் தெரியாது. எது எப்படி நடந்தாலும் நாம் மனம் தளர
வேண்டியதில்லை. வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் நடந்துகொண்டால்
போதுமானது.

வி வி வி . வி வி வி வி

**பயத்திற்கு மருந்து.**

ஜிட்டர்பர்கு சொல்லுகிறார்:— "சிங்கப்பூர், ஜாவா, ரெங்கூன் முதலியவைகளெல்லாம்
எதிரிவசமாயின. உலகமே மூழ்கிப்போய்விட்டது. ஆகாசமே இடிந்து விழுந்து
விட்டது". இப்படிச்சொல்லுவதால் வெற்றி கிடைக்காது. தைரிய லக்ஷ்மியைத்
தான் வைக்கொள்ள வேண்டும். பயத்தைப் போக்கடிப்பதற்கு லாயக்காக சிலர்
சிலவார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பார்ப்போம்:—

1. ஜெனரல் J. C. ஸ்மட்ஸ்:—"ஆபிரிக்கப் பிரதம மந்திரி தற்சமயத்தில்
நேசதேசங்களின் நிலைமையைப் பார்த்து யாராவது அவர்கள் தோற்றுப் போய்
விடுவார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு சரித்திர ஞானமே இல்லையென்று
சொல்ல வேண்டும். இதுவரை ஜெர்மனி பிடித்துள்ள நாடுகளிலெல்லாம் ஜெர்
மனியைக் குறித்து நல்ல எண்ணமே கிடையாது. வெறுப்பும் எரிச்சலும்தான்
ஏற்பட்டிருக்கிறது. இவைகளை வைத்துக்கொண்டே ஜெர்மனி முடிவாகத்
தோற்றுப்போவதற்கான காரணம் இருக்கிறதாகவே சொல்லவேண்டும்."

2. டாக்டர் வான் மூக் டச்சுக்கிழக்கிந்தியத்தீவுகளின் உதவி கவர்னர்:—
"இந்த யுத்தம் ஒரு பெரிய சம்பவம். தனித்தனியாக ஆகாது. வெற்றியென்பது
பஸிபிக்கிலும், ருஷ்யாவிலும் அடையப்படும். எங்கே வெற்றி கிடைத்தாலும்
வெற்றிதான்."

3. ஸர் ஸ்டாப் போர்டு கிரிப்ஸ் பார்லிமெண்டு சபையின் தலைவர்:—
"பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் நிலைமை தற்சமயத்தில் ஏதோ அதிக நெருக்கடியாகக்
காணப்படுவதால் தப்பிதமான அபிப்பிராயங்களை ஒருவரும் கொள்ளக்கூடாது.
வருங்காலத்தில் நடக்கப்போவதைப்பற்றி நினைக்காமல் இருக்கக்கூடாது. இருகு
மங்கும் ஏதோ சில இடங்களை எதிரி பிடித்ததால் மட்டும் எதிரிக்கு வெற்றி கிட்டி
விடுமென்று நினைத்து விடக்கூடாது. இந்த யுத்தம் பிரமாதமாக நடந்துவருவ
தால் எந்தப்பக்கத்தில் மனிதஉதவியும், சாமான்கள் அதிகமாயும் இருக்கின்றனவோ
அக்கக்ஷி தான் ஜயிக்கும்."

4. ஸர்வால்டர் ஸிட்ரின் வர்த்தகச் சங்கங்களைச் சார்ந்தவர்:—
"தங்களால் கட்டி ஆளுவதற்கு முடியாதபடி ஜப்பானும், ஜெர்மனியும் நாடுகளைப்
பிடித்திருக்கின்றன. இனி கஷ்டங்கள் தான் அவர்களுக்கு அதிகரிக்கப்போகிறது."

5. டெயிலி ஹெரால்டு:—கிரிக்கெட் ஆட்டத்தைப்போல் இந்த யுத்தம்
நடந்து வருகிறது. இதற்கு காலவரை கிடையாது. ஈரமான தரையில் கிரிக்கெட்
ஆடப்பட்டால் சாதகமாக இருக்காது. அதைப்போல நேசநாடுகளின் தற்போதய
நிலைமை இருக்கிறது. இன்னும் நேசநாடுகளின் பலம் பூரா உபயோகிக்கப்பட
வில்லை. அவைகளை உபயோகிக்க ஆரம்பித்தவுடன் வெற்றிகிட்டும்.



இதுவரை கொடுத்த அபிப்பிராயங்களே போதுமானது. இருந்தாலும்
மறதியாக ஏதோ சிலவற்றை டாக்டர் கோயபல்ஸ் எழுதியிருப்பதை இங்கே
கொடுக்கிறோம்.

'சிங்கப்பூர் விழுந்தாலும் பிரிடிஷ் சாம்ராஜ்யமே போனதாக ஆகாது.
பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் வேர்களை களைந்து எறிந்தால் தான் முடியும். நாட்கள்
கணக்கிலோ, மாதக்கணக்கிலோ சாம்ராஜ்யங்களை அழிக்க முடியாது.'

ஆனால் ஜெர்மனியை முறியடித்தல் அத்துடன் ஒத்துப்பாடுகிறவர்கள் தாங்
களாகவே ஒழிந்து விடுவார்கள். வேலூரில் மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்:—முன்புநடந்த யுத்தத்தில்
1914—18 வரை, ஜெர்மன் வெற்றிகள் தான் தொடர்ந்து காணப்
பட்டன. ஒருதடவை தோல்வி யடைந்தால் மறுபடி ஜெர்மனியால் மீள
முடியாது. ஆகவே இந்தச் சண்டையிலும் நேசநாடுகளுக்கு முடிவான வெற்றி
கிடைக்குமென்று எனக்குப் பூர்ண நம்பிக்கையிருக்கிறது. சமீபத்தில் வெற்றி
கிடைக்குமா என்று நிச்சயம் சொல்ல முடியாத போனாலும், கொஞ்ச நாட்களில்
கிட்டும். வெற்றி கிட்டும்வரை நாம் பிரயத்தனப்பட்டுத்தான் பார்க்கவேண்டும்.
இப்படிச் சொல்லுவதால், அடைந்த தோல்விகளை மறைப்பதாக நினைக்கவேண்
டாம நடுவழியில் எவ்வளவு தொந்தரவு நேர்ந்தாலும் பல மைல்களைக் கடந்து
ஊருக்குச் செல்லுவதுபோல நாம் வெற்றிகிட்டும் வரை பாடுபடவேண்டும்!

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் ஏற்பாடுகள்.**

மிகவும் பிரமாதமாகச் செய்யப்படுகின்றன. இருக்கிற மாதிரியைப் பார்த்தால் வசந்த
காலத்தில் ருஷ்யாவை அப்படியே விழுங்கிவிடலாமென்று ஜெர்மானியர்கள்
நினைக்கிறதாகவே காணப்படுகிறது. இதுவரை ருஷ்யாவில் அடைந்த ஏராள
நஷ்டத்தை செக்கோஸ்லாவாகியா, பிரான்ஸ், பெல்ஜியம், இதாலி முதலிய
நாடுகளிலிருந்து 15 முதல் 20 லக்ஷம் ஆட்களை வரவழைத்து ஈடுசெய்யலா
மென்று ஜெர்மனி நினைத்திருக்கிறது. மேலும் ஹங்கேரி, ருமேனியா முதலிய
நாடுகளில் ஒவ்வொன்றிலிருந்தும் 5,00,000 பேர்களை அழைத்துக்கொள்ளுமாம்.
பல்கேரியாவிலிருந்து வரக்கூடிய சைனியத்தின் எண்ணிக்கை தெரியவில்லை.
ஹங்கேரி, ருமேனியா முதலிய நாடுகளுக்குள் பரஸ்பரம் மனஸ்தாபம் இருக்கும்
போது இத்தேசத்திலிருந்து வரும் துருப்புகள் எவ்விதம் ஒற்றுமையாக இருந்து
சண்டை செய்யப் போகின்றனவோ தெரியவில்லை. மேலும் ருமேனியா
ஏற்கனவேயே 2,00,000 பேர்களை ஒடெஸ்ஸாவிலும் கிரிமியாவிலும் இழந்ததைப்
பற்றி கவலையற்றிருக்கிறது. பல்கேரியாவிற்கு யுத்தத்தில் ஈடுபட மனதில்லை
யென்பது வியக்தமான விஷயம். ருஷ்யர்கள் ஜயம் பெறுவதைத்தான்
பல்கேரியா விரும்பிக்கொண்டிருக்கிறது.

இதைப்போல் மற்ற நாடுகளிலிருந்து ஆட்களை வரவழைத்து ஜெர்மனி
தனது யுத்த தளவாட உற்பத்தியை அதிகரிக்க நினைத்திருக்கிறது. 21,00,000
பேர்கள் வெளிநாடுகளிலிருந்து வேலையாட்கள் ஜெர்மனிக்கு வந்து தொழில்
புரிகிறார்கள். 1,00,000 போலீஷ்காரர்களும், 2,70,000 இதாலியரும், 1,40,000
செக்கர்களும், 1,20,000 பெல்ஜியர்களும், 1,08,000 யுகோஸ்லாவியர்களும்,
93,000 டச்சுக்காரர்களும், 80,000 ஸ்லாவகியர்களும், 50,000 பிரெஞ்சுக்காரர்
களும், 34,000 ஹங்கேரியர்களும், 30,000 டேனிஷ்காரர்களும், 1,90,000 கிரோ
ஷியர்கள், ஸ்விட்ஜர்லாந்தினர், ருஷ்யர் முதலானவர்களும், 19,00,000 யுத்தக்
கைதிகளும் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களைத்தவிர ஜெர்மன் வேலைக்காரர்களும்
இருக்கிறார்கள். 14-வயதுள்ள ஜெர்மன் பெண்களும், பையன்களும் தொழில்
சாலை வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யாவின் ஏற்பாடுகள்.**

இன்னும் அதிகமாகவே இருக்கின்றன. 19,30,00,000 ஜனத்தொகையுள்ள நாடு
கள் ருஷ்யர் ஆதிக்கத்தில் இருக்கின்றன. தன் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ள

இவர்கள் யாவருக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. முன் அணியில் தேர்ச்சிபெற்ற சைனியங்கள் சண்டை செய்வதுபோலவே வசந்தகாலச் சண்டைக்கு மேலும் தயார் செய்யப்படுகிறது. ருஷ்யச் சட்டப்படி திடமானவர்கள் யாவரும் யுத்த சாமான்களின் உற்பத்தியில் ஈடுபடலாம்.

வி வி வி வி வி வி வி

**என்ன நேரலாம்.** இதைப்பற்றி இப்போது சொல்லுவது தவறான காரியமாகும். இருந்தாலும் சிலவற்றைச் சொல்லுவோம். இனி நேரும் சண்டையில் ஏராளமான சைனியங்கள் ஈடுபடும். அதில் ஜெர்மன் துருப்புகள் அதிகத் தேர்ச்சியில்லாத வெட்டி ஆள்கூட்டமாகத் தானிருக்கும். ஏனென்றால் இதர நாட்டிலிருந்து வந்தவர்கள்தான், ஜெர்மன் பக்கத்தில் அதிகம் இருப்பார்கள். அவர்கள் மனதில்லாமல்தான் சண்டை செய்கிறவர்கள். ஆனால் ருஷ்யர்கள் சைனியம் தீவிர தேசாபிமானம் பெற்று ஸ்வதந்திரம் அடையப் போராடுகிறது. கொஞ்ச காலம் வரை ஜெர்மன் சைனியத்திலுள்ள குறைவுபாடுகள் வெளியே தெரியாது. தனது பக்கத்தில் உள்ளோரைச் சண்டைசெய்யும்படி பலாத்காரமாக ஹிட்லர் சொல்லலாம். ஆனால் யுத்தம் நீடித்து நடக்க நடக்க, பலாத்காரமாக வேலை வாங்கப்படுவதால் ஜெர்மன் சைனியம் முறிந்து அட்டைவீடு விழுவது மாதிரிதான் ஜெர்மன் திட்டங்கள் முறியப்போகின்றன.

வி வி வி வி வி வி வி

**சைனா தினத்தின் முக்கியத்துவம்.** சைனா தினம் கொண்டாடப்பட்டது. இந்த தினம் சென்றுவிட்டாலும், அன்று நடந்த கொண்டாட்டத்தின் தன்மை போய்விடவில்லை. சயாங் கை ஷேக்கும் அவரது மனைவியும் இந்தியாவிற்கு ஊர் பார்க்க வந்ததாக மட்டும் சொல்லமுடியாது. ராணுவம், பொருளாதாரம், அரசியல், சண்டையில் ஒருவகைப்பட்ட முஸ்தீப்பு முதலியவைகளைப் பரிசீலனை செய்யவே வந்தார்கள். மேலும் போக்குவரவு, வர்த்தக சம்பந்தம், பர்மாவிலேயே எதிரிகளைத் தடுப்பது, ஜப்பானியரின் அட்டூழியங்களைப்பற்றி அறிவிப்பது முதலியவைகளுக்காகவும் வந்தார்கள். கடைசியாக சயாங் இருநாடுகளுக்கும் ராணுவ ஒற்றுமை இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். அப்படி ஒற்றுமை ஸ்தாபிக்கப்பட்டால் பஸிபிக்கில் எதிரிகளை சுலபமாகத் தோற்கடித்து சிங்கப்பூர் முதலிய இடங்கள் எதிரி வசமானதால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யலாமென்றார். இப்போதுள்ள ஸ்வதந்திர சைனா முன்போல ஆட்டுமந்தைபோல் ஒன்றுபின்னமாக இல்லை. ஆனால் ஒற்றுமைப் பட்டு எதிரிகளை எதிர்க்கும் எண்ணம் பூரா பரவியிருக்கிறது. திடம் பலமடைந்து வரும் எதிரியை எதிர்த்து சீனர்கள் சண்டை செய்துவருகிறார்கள். எதிர்களின் தொந்தரவு இருந்தாலும் 400 கைத்தொழிற்சாலைகளைக் காபாந்துடன் நடத்தி வருகிறார்கள். ஆகவே இப்போதுள்ள சைனாவை ஒரு திருஷ்டாந்தமாக நாம் வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்தியாவும், சைனாவும் தங்களுடைய மனித பலத்தையும், விளைவு பொருள்களையும் ஒன்று சேர்த்து எதிரிகளைத் தாக்கவேதெனத் தீர்மானித்திருக்கின்றன. சைனாவுக்குச் சாதகமாக இருக்கும்படி அமெரிக்கா 500,000,000 டாலர்களையும், பிரிடன் 50,000,000 பவுன்களையும் கடன் கொடுத்திருக்கின்றன. இந்தியாவிலுள்ள கிழக்கு நாட்டுச் சீர்திருத்தச் சங்கம், ரோஜர் சங்கம் இவைகளுடன் உதவியாக அமெரிக்கர்களும் கலந்துகொண்டு சாமான் உற்பத்தி பிரச்னைகளைத் துரிதமாக்குவார்கள்.

வி வி வி வி வி வி வி

**பொது க்ஷேமத்தின்படி நடப் பவை.** எதிரி ஆக்கிரமித்துக்கொண்டுள்ள நாடுகளில் பொது க்ஷேமதிட்டம் ஆரம்பமாக்கப்பட்டிருக்கிறது.

1. 'மலேயாவிற்கும், பிலிப்பைன்ஸுக்கும் குடிப்போக ஏராள ஜப்பானியர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள்.

**(ஸைகோன் ஒலிபரப்பு, பிப்ரவரி 21).**



2. 'கிழக்கு ஆசியா பூராவும் ஜப்பானிய பாஷைதான் அரசாங்க பாஷையாக இருக்கும்.

(ஸைகோன் ஒலிபரப்பு, பிப்ரவரி 24).

3. 'பிரெஞ்சு இந்தோ-சைனாவிலிருந்து அரிசி, சோளம், நிலக்கரி, உலோகங்கள் முதலியவைகளை சுங்கவரி இல்லாமலே வாங்கிக்கொண்டு ஜப்பான் இந்தோ-சைனாவிற்குத் தேவையில்லாத சாமான்களை அனுப்புகிறது.

4. 'ஸயாம் நாணயத்தில் 450 லக்ஷம் பாகட் (baht) எடுத்துக்கொண்டு ஜப்பான் தங்கம் அனுப்புவதாகச் சொல்லிற்று. இன்னும் அனுப்பவில்லை.

5. 'இந்தோ-சைனாவிலுள்ள விவசாயம், சுரங்கவேலை ஸ்வதந்திரம் ஜப்பானுக்குவிடப்பட்டது.

6. 'கொள்ளையடிப்பதைக் காட்டிலும் அதிகக் கொடூரமான ஜப்பானியச் செய்கையைப்பற்றிய செய்தி ஹாங்காங்கிலிருந்து கிடைத்திருக்கிறது.

'பிரிடிஷ் சைனியத்தைச் சேர்ந்த 50 உத்தியோகஸ்தர்களைக் கட்டிப் போட்டு கத்திகளால் ஜப்பானியர் குத்தினார்கள்.

'வசமானதற்கு 10 நாட்கள் பிறகும் ஒளிந்து கிடக்கும் காயமடைந்தவர்களை மலைப்பிரதேசங்களிலிருந்து அழைத்து வரப்படுகிறது. இறந்தவர்களைப் புதைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை.'

'ஐரோப்பிய, ஆசிய மாதுகள் மானபங்கம் செய்யப்பட்டு கொல்லப் பட்டனர்.

'சைனாவில் ஒரு ஜில்லாவை வேசி நாடு என்று கூறப்பட்டது. இங்குள்ளவர்களின் கௌரவத்தை கவனிக்கப்படவில்லை.

'இவைதான் பொது க்ஷேமம்'.

வி வி வி வி வி வி வி

**நாஸிக் கொள்ளை.** ஐரோப்பாவில் நாஸிகள் பிரான்ஸ் பெல்ஜியம் இந்நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் துணிமணிகள், இன்னும் விலையுயர்ந்த பொருள்கள் யாவையும் கொள்ளையடிக்கின்றனர். மேலும், இதாலியிலுள்ள மோட்டார்களையும், தொழிலாளிகளையும், லக்ஸம்பேர்க், லொரைன் என்ற இடங்களில் உற்பத்தி செய்யப்படும் இரும்பு எஃகு பொருள்களையும் அவர் எடுத்துப் போகின்றனர். போலந்திலுள்ள சில மரங்களைவெட்டி காகித நாணயங்கள் செய்யப்படுகின்றன. அந்நாணயங்களைக் கொடுத்து நாஸிகள் போலந்திலுள்ள நிலங்களை வாங்குகிறார்கள்.

வி வி வி வி வி வி

**தவறுதலின்மை.** கஷ்டங்களையும், பிசகுகளையும் சர்ச்சில் ஒப்புக் கொள்ளுவது அவருடைய பெருந் தோரணையையும், நல்ல குணத்தையும் காட்டுகிறது. அவர் ஒரு சிப்பாயாகவும், அரசியல் நிபுணராகவும், சரித்திராசிரியராகவும் இருந்திருக்கிறார். ஆகவே உலகில் எந்த தேசத்திலும் மனிதர்கள் தவறுதல்கள் செய்யக்கூடியவர்கள்தான் என்றும், அவர்களுடைய பிசகுகளைத் தெரிந்துகொண்டு மேன்மையடைவதுதான் சகஜம் என்றும் அவர் அறிந்திருக்கிறார். ஆனால் இதற்கு நேர் விரோதமாக தன்னுடைய வீரர்களும், உத்தியோகஸ்தர்களும் அதிபலம் வாய்ந்தவர்கள் என்றும் தவறுதலே செய்யமாட்டார்கள் என்றும் ஹிட்லர் வீண் பெருமை அடித்துக்கொள்ளுகிறான். அதேபோலவே ஜப்பானிய சக்ரவர்த்தி தெய்வசக்தி வாய்ந்தவரென்றும் ஜப்பானியர் சொல்லுகிறார்கள். அச்சுநாட்டினர் செய்துவரும் பெருத்த தவறுதல்களைக் காட்டிலும் நேசதேசத்தார்களின் பிசகுகள் மிகவும் சிறியவை என்றே கருதவேண்டும். டன்கர்க்கிலிருந்து பிரிடிஷ் படைகளை வெளியேற்றியதால் பிரிடனின் பலம் மிகவும் அதிகமாயிருக்குமென்று 1940-ல் பிரிடனின் பேரில்

ஜெர்மனி படையெடுக்காமலிருந்தது. அந்த சமயத்தில் சாமர்த்தியம் வாய்ந்த ஒரு பிரிடிஷ் சைனியப் பகுதிதான் பிரிடனில் இருந்தது. இந்த உண்மையை அவர்கள் தெரிந்துகொள்ளாதிருந்தது ஒரு பெரிய தவறு. ருஷ்யாவின் பலத்தை குறைவாக ஜெர்மனி நினைத்ததும் ஒரு தவறு. ஜப்பான் இவ்வளவு தாமதமாக யுத்தத்தை ஆரம்பித்ததும் ஒரு தவறு. ஏனென்றால் 1940-ல் பிரிடன் வேறிடத்தில் ஈடுபட்டிருந்தது. அமெரிக்காவும் அந்த சமயத்தில் யுத்தத்தில் ஈடுபடவில்லை. அப்பொழுது ஜப்பானியர்கள் சண்டையை ஆரம்பிக்காமலிருந்தது ஒரு பெருத்த தவறு. இவையெல்லாம் அச்சுநாட்டினர் செய்த தவறுதல்கள்.

---

# பழி சாற்றுதல்

---

## ஒரு அமெரிக்கர் பிரிடனுக்குச் சாதகமாகப் பேசுகிறார்.

["ஸன்டே கிரானிகிள்" பத்திரிகையில் டொரோதி தாம்ஸன் எழுதியது].

சிங்கப்பூரில் சேனாபதிகள் சரியாக நடந்துகொள்ளவில்லையென்று யாவரும் நினைப்பார்கள். யுத்த முறையை நன்றாகப் பின்பற்றவில்லையென்றும் சொல்லுவார்கள். யார் என்ன சொன்னாலும் சிங்கப்பூர் எதிரிவசமானது என்னமோ உண்மை.

இதைப்பற்றி யார்மேல் குறைசொல்லுவது. தூரக்கிழக்கில் சில தோல்விகள் வந்ததற்கு பிரிடிஷ்காரர்களா காரணம். இல்லவே இல்லை. இந்த யுத்தம் ஆரம்பித்து 18 மாதகாலம்வரை இந்த யுத்தத்தில் அமெரிக்காவிற்குச் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்று நாம் (அமெரிக்கர்கள்) யோசித்துக்கொண்டிருந்தோம். தூரக்கிழக்கில் பிறகு யுத்தம் வந்தது. அப்போது பிரிடிஷ்காரர்கள்தான் அமெரிக்கர்களுக்குப் போதுமான உதவியளித்தார்கள். உதாரணமாக பேர்ல் துறைமுகத்தைக் காபந்துசெய்து வைத்திருந்தபோது பெரிய சண்டைக்குத் தயாராகவா அமெரிக்கர்கள் இருந்தனர். இல்லை. பிரிடிஷாரின் உதவியும் தேவையாக இருந்தது.

பினாங்கிலிருந்து தப்பிவந்த சில அமெரிக்கர்கள் கொடுத்த வாக்குமூலங்களைப் படித்துப் பார்த்தேன். அவைகளில் அமெரிக்கர்களை அப்புறப்படுத்தப் போதுமான வசதிகள் செய்யவில்லையென்றும், போதுமான விமான எதிர்ப்பு பீரங்கிகள் இல்லையென்றும், பிரிடிஷார் அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லையென்றும் பலவித குறைகள் காணப்படுகின்றன.

## ஓர் மாதும் பூனையும்.

இம்மாது தனது பூனையைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு தப்பி ஓடி வந்துவிட்டாள். இவள் தப்பியதற்கு யார் உதவி செய்தார்களோ. இவளுக்கு மற்றவர்கள் உதவியளிக்கவில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். இவள் யாருக்கு உதவி செய்தாள்? ஒருவருக்கும் இல்லை. ஆகவே இனிமேலாவது விமானப் படையெடுப்பு முதலியவைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தற்காப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும். இந்த இடத்தில் (அமெரிக்காவில்) நாம் சரியாக ஈடுபடாவிட்டால் பிரிடிஷ்காரர்கள் தானே குறைசொல்லுவார்கள்.

உதாரணமாக பிரிடிஷ்காரர்கள் ஜெர்மனியுடனும், ஜப்பானுடனும் சமாதானம் செய்துகொண்டு ஐரோப்பா எப்படியாவது போகட்டுமென்று விட்டுவிட்டால் என்ன நேருமென்பதை யோசித்துப் பாருங்கள். அமெரிக்கா கண்டத்திலும், கிழக்கு ஐரோப்பிய பாகத்திலும் யார் யார் எவ்வளவு சம்பந்தம் வைத்துக்கொள்வதென்பதை பிரிடிஷார் எதிரிகளுடன் நிர்த்தாரணம் செய்துகொண்டுவிட்



டால் மற்ற உலகின் கதியென்னவாகுமென்பதை யோசித்துப் பாருங்கள். இவ்விதம் பிரிடன் செய்யவில்லையென்றுதான் ஹிட்லரும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறான். ஆனால் பிரிடன் அவ்விதம் செய்யவில்லை.

உலகத்தில், அமெரிக்கா கண்டத்திற்கு வெளியே 7,20,00,000 வெள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை யாவரும் உணரவேண்டும்.

## 1½-வருஷ காலம் தனியே நின்றது.

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் ஜெர்மானியர் இங்கிலீஷ் கால்வாயில் புகுந்து பிரிடனுள் பிரவேசிப்பதற்கு யத்தனித்தார்கள். அந்த சமயத்தில் பிரிடனில் போதுமான விமான எதிர்ப்பு பீரங்கிகள் இல்லை. பிரிடிஷ் தீவில் உள்ள 470 லக்ஷம் ஜனங்களும் பட்டினி கிடந்து சாகவேண்டிய நிலைமையும் வந்தது. ஆனால் 1½ வருஷ காலம் தனியே பிரிடிஷ்காரர்கள் சண்டைசெய்து எதிரிகளைத் தடுத்து வந்தார்கள். இவ்விஷயம் ஏன் அமெரிக்கர்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. 50,000 பேர்கள் பிரிடனிலேயே இறந்தார்கள். பெல்ஜியத்து அரசன் தனியாக ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொண்டதை "துரோகம்" என்று பிரெஞ்சுத் தலைவன் சொன்னான். ஆனால் "அதைப்பற்றி பின்னடி அபிப்பிராயம் சொல்லப்படும்" என்று சர்ச்சில் சொன்னார். ஆகவே பிரிடன் தனியாக சமாதானம் செய்துகொள்ளாததோடு பிறர் மேல் குறையும் சொல்லுவதில்லை என்று தெரிகிறது.

அமெரிக்காவில் லிங்கன் முதல்முதலாகச்செய்த பிரசங்கத்தை மறுபடி யாவரும் கவனிப்பது நலம். அதாவது "அவரவர்கள் புண்ணியபாவங்களுக்குத் தகுந்த விதமான தண்டனையை கடவுள் விதிக்கிறார். ஆகவே அவைகள்தான் உண்மையானவை, தர்மமானவை." இம்மொழிகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் தாறுமாறான அபிப்பிராயங்களைச் சொல்லக்கூடாது. எவ்விதத்திலும் பிரிடன் வெற்றிபெறுவதைத்தான் விரும்பவேண்டும். பிரிடனுடைய பெருந்தன்மைக்கு மற்றுமொரு திருஷ்டாந்தம் இருக்கிறது. விஷி அரசாங்கத்தைப் பின்பற்றும் சிலர் நியூயார்க்கில் இருக்கிறார்கள். இவர்கள் "பிரிடனை அழித்து விடுவதாகவெல்லாம்" பேசுகிறார்கள். ஆனால் ஹிட்லரிடத்தில் யாவற்றையும் ஒப்படைத்த பிரெஞ்சுக்காரர்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட அவதூறாக பிரிடன் சொன்னதில்லை.

## "நாகரீகம் வாய்ந்தவர்களுக்கு கடைசி இருப்பிடம்".

அமெரிக்காவிலுள்ளவர்களில் சிலர் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைப்பற்றி அதிகமாக நினைப்பதில்லை. அப்படி இருக்கக்கூடாது. ஏனென்றால் பிரிடிஷ் சாம்ராஜ்யம் குலைந்தால் மேல்நாட்டு நாகரீகமே போய்விட்டதென்று சொல்லி விடலாம். அமெரிக்கா மாத்திரம் ஏகதேசமாக சமாளிக்க முடியாது. தனியாக இவ்வளவுகாலம் நின்றதால் இங்கிலீஷ்காரர்களுக்கு அசதி ஏற்பட்டிருக்கலாம். பிரிடன் மிகப் பழமையான நாடாகவும் காணப்படலாம். ஆனால் மேல்நாட்டு நாகரீகம் தற்சமயம் இங்கிலாந்தில் தானிருக்கிறது. இங்கிலாந்து போய் விட்டால் அந்நாகரீகமே அழிந்துவிடும். இவ்வளவு பட்டவர்த்தனமாகச் சொல்லுவதற்கு என்னைத் தண்டித்தாலும் தண்டியுங்கள். இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்விதமிருக்கும் இங்கிலாந்து வெகுநாள் இருக்க வேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்யவேண்டும்.

அது போகட்டும். அமெரிக்கர்கள் இங்கிலீஷ்காரர்களைக் குறைகூறுகிறார்களே தவிர அமெரிக்கர்கள் மீது இங்கிலீஷ்காரர்கள் ஒருபோதும் குறைகூறியதில்லை. உதாரணமாக அமெரிக்கர்களுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகம் எதிரி வசமானதைப்பற்றி பிரிடிஷ்காரர்கள் ஒருவார்த்தை கூடப் பேசியதில்லை. அமெரிக்கர்கள் தீவிர முயற்சியெடுத்துக்கொள்ளாததைப்பற்றியும் சொன்னதில்லை. மற்றவர்களை பிரிடிஷ்காரர்கள் ஒருநாளும் இளப்பமாக நடத்தியதுமில்லை.

ஆகவே அதிக ஆபத்து நேரிட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் சில சந்தோஷ வார்த்தைகளைச் சொல்லுகிறேன். "சிங்கப்பூர் முதலிய இடங்கள் எதிரிவசமான

போதிலும் இங்கிலாந்துடன் கூட நான் சந்தோஷமாக இருக்கவிரும்புகிறேன். ஏனென்றால் "இங்கிலாந்து எப்போதும் புகழ்பெற்ற நாடு. ஸ்வதந்திர மக்களுக்குத் தாய்நாடு." வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ள நாடு. நாங்களும் எங்களுக்கு இயற்கையான ஸ்வதந்திர உணர்ச்சி மூட்டக்கூடிய தன்மைகளுடன் சேர்ந்து கொள்ளுகிறோம். அமெரிக்காவில் "ஸ்வதந்திரத்திற்க இருப்பிடமான நாடு", "கொலம்பியா ரத்தினம் போன்றது", "பகமே என் கண்கள்", "நக்ஷத்திர அடையாளமுள்ள கொடி", "எப்பேற்பட்ட சண்டையிலும் மீஞ்சி வருவோம்" "இங்கிலாந்திலும் நக்ஷத்திரங்கள்" என்ற பாட்டுகள் இருக்கின்றன. இவைகளை பிரிடிஷாருடன் சேர்ந்து பாடிக்கொண்டு யுத்தத்தில் தீவிர முயற்சியாக இருந்து வெற்றிபெறுவோம்.

ஜூலையும் மாதம் என்று நான் முன் குறிப்பிட்டதை அமெரிக்காவைக் குறித்ததாக நினைத்துக்கொள்ளக்கூடாது. அமெரிக்கா ஒரு நாளும் தனியே போய்விடாது. அத்துடன் ஹாலந்து, நார்வே, ருஷ்யா, சைனா, இந்தியா, கிரேட் பிரிடன் முதலிய நாடுகள் யாவும் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு சண்டைசெய்கின்றன.

---

## சிங்கப்பூர் விழுந்ததால் இந்தியாவுக்குள்ள பாதகம்.

## ஏற்கனவே நடந்த பிசகுகளைப்பற்றி வருந்துவது பிரயோஜனமில்லை.

## யுத்தம் முடிந்தபிறகுதான் வெற்றி கிடைக்கும்.

(ஹேய்லி பிரபு சமீபத்தில் பி. பி. ஸியில் ஒலிபரப்பியது).

**இந்தியாவிற்கு அபாயம் நெருங்குகிறது.**

பிரிடிஷ், அமெரிக்க, டச்சு முதலிய நேசதேசத்தார்கள் கிழக்கு சமுத்திரங்களின் ஆதிக்கத்தைக் கைவசப்படுத்துவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த சமயத்தில் பெரும் கப்பல் தளமான சிங்கப்பூர் எதிரி வசமானதால் இன்னும் அதிக சிரமம் உண்டாயிற்று.

இதனால் இந்தியாவைப்பற்றிய அக்கறை கொண்டவர்களுக்கும் கவலை அதிகம் உண்டாகிவிட்டது. ஏனென்றால் இதுவரை யுத்தம் இந்தியாவிற்கு வெகு தூரத்தில் நடந்துவந்தது. இப்பொழுது அதன் பக்கம் நெருங்கிவிட்டது.

உதாரணமாக பர்மா எதிர்க்கப்பட்டுவிட்டது. எதிரிகள் பலத்தை அதிதுரிதமாகப் பலப்படுத்துவதற்கு சாத்தியமாக இருக்கிறது. அதனால் இந்தியாவும் எதிர்க்கப்படும் என்பது நிச்சயம். எம்மாதிரியான எதிர்ப்பு ஏற்படுமென்றும் எவ்வளவு சேதம் விளையுமென்றும் இப்பொழுது சொல்லமுடியவில்லை.

**ஜப்பானின் பாசாங்கு.**

இந்திய மக்களுக்கு நிச்சயமாக அபாயம் நேரிடுமென்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் ஜப்பானும், அதன் சிநேகிதர்களும் தங்களுக்கு பர்மாவையாவது இந்தியாவையாவது கைப்பற்றிக்கொள்ள ஆசையில்லை என்று பாசாங்கு செய்கிறார்கள். இந்தியாவிலுள்ள பொருள்களை பிரிடிஷ்காரர்கள் உபயோகித்துக் கொள்ளக்கூடாதென்று மாத்திரம் சொல்லுகிறார்கள். மேலும் இந்தியர்களுக்கும், பர்மியர்களுக்கும் ஸ்வதந்திரம் கொடுத்துவிடுவார்களாம். ஜப்பானுடைய ராணுவத்திற்கும், வியாபாரத்திற்கும் லாபகரமான சில திட்டங்களை அங்கீகரிக்க வேண்டுமாம். இவ்விதமாக தனது லாபத்தைத்தான் ஜப்பான் கோருகிறது.

**அதன் உள் கருத்து.**

சியாங் கை ஷேக் என்பவர் ஜப்பானியர்களின் வாக்குறுதிகள் யாவும் வெளிவேஷம் என்று ருஜுப்படுத்தவார். ஏனென்றால் இதற்குமுன் சைனாவுக்கும் ஜப்பான் இதேமாதிரி வாக்குறுதி கொடுத்து அதன்படி நடந்துகொள்ளவில்லை.



இந்தியாவுக்கும், பர்மாவுக்கும் கிரேட் பிரிடனுடன் சம்பந்தம் இருந்த காரணத்தினால், இந்நாடுகள் நேராடி யுத்தத்தில் ஈடுபட முடியவில்லை. சைனாவை ஆக்கிரமிக்க விரும்பியதுபோல, இப்பொழுது இந்த நாடுகளிலும் அவற்றிலுள்ள விளைபொருள்களிலும், ஜப்பான் பேராசை கொண்டிருப்பதால் அவைகளுடன் சண்டைசெய்ய நினைக்கிறது. இந்நாடுகளுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் அதற்கில்லை.

**இந்தியா தற்போது செய்யவேண்டிய கடமைகள்.**

இந்தியா ஏற்கனவேயே யுத்தத்திற்குத் தேவையான எல்லாவித சாதனங்களையும் செய்திருக்கிறது. இந்தியத் துருப்புகள் சென்ற இரண்டு வருஷ காலமாக யுத்தத்தில் வெவ்வேறு போர்முனைகளில் ஈடுபட்டு தங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது அது இன்னும் மகத்தான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வித முயற்சிகள் யாவும் பிரிடிஷாருடையவும் அல்லது நேசதேசத்தார்களுடைய தற்காப்புக்கு மட்டுமல்ல. ஆனால் இந்தியாவின் சொந்த பாதுகாப்பிற்கே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றன.

இந்தியா சைனாவின் நிலைமையைப்பற்றி அநுதாபப்படுகிறதாக சிற்சில இடங்களில் சொல்லப்படுகிறது. இந்தியா சைனாவுக்கு உதவி செய்வதானால் கிரேட் பிரிடனுக்கு உதவிசெய்த மாதிரியாகும். கிரேட் பிரிடன் இந்தியாவுக்கு உதவி செய்யாததினால், இந்தியாவும் சைனாவுக்கு உதவிசெய்ய முடியாது என்றும் சொல்லப்படுகிறது.

இந்தமாதிரி இந்தியர்கள் சொல்லுவது சைனாவுக்குத் திருப்தியை அளிக்காது. தற்சமயம் சைனாவுக்கு நேர்முகமான உதவி தேவையாயிருக்கிறது. ஆகவே சத்துருவான ஜப்பானை எந்த விதத்தில் முறியடித்தாலும் சாதகம்தான்.

அதிக கஷ்டமான நிலைமைகளில் சமாளிப்பது மனிதர்களுக்கு ஒரு பெரிய குணம். உலகத்தில் இருவகைப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். அதில் ஒரு வகைப்பட்டவருக்கு கஷ்டங்களையடைந்தபிறகு, அவை நிகழ்ந்ததற்குள்ள காரணங்களைப்பற்றி சதா சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். அல்லது புதியாக சிலர்மேல் சந்தேகப்பட்டுக்கொண்டு அவர்களைத் தாக்குவதற்கு ஏற்பாடுசெய்வார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் இருந்தும் ஒன்றுதான், இல்லாமலிருப்பதும் ஒன்றுதான். ஒரு நாளும் இவர்களுக்கு சந்தோஷமே கிடையாது.

ஆனால் மற்றொரு வர்க்கத்தினர் என்ன கஷ்டம் விளைந்தாலும், கவலையை ஒதுக்கிவைத்து தகுந்த விதமாக முயற்சி எடுத்துக்கொண்டு வெற்றிகரமாக சமாளித்து வரப் பாடுபடுவார்கள். இப்பேர்ப்பட்டவர்கள்தான் வெற்றியடைய லாயக்கானவர்கள். இப்பேர்ப்பட்டவர்களைத்தான் இந்திய மார்க்கதரிசிகளாக வைத்துக்கொள்ளவேண்டும்.

சில வருஷங்களுக்கு முன்னதாகவே யுத்தத்திற்காக இந்தியாவிலும், பர்மாவிலும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை யென்றும், வெடிமருந்தும், யுத்த தளவாடங்களும் உற்பத்தி செய்யப்படவில்லை யென்றும், படைப்பலம் அதிகப்படுத்தப்படவில்லை யென்றும், இம்மாதிரியாக இந்தியாவில் அநேகர்கள் வருத்தப்படுகிறார்கள்.

ஆனால் இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு அவ்வாறு முஸ்தீப்புகளைச் செய்வதற்கு பெரிய தியாகங்கள் தேவையாக இருந்தன. அப்படி சுயநலம் பாராட்டாதவர்கள் கிரேட் பிரிடனிலும், இந்தியாவிலும் மிகக்குறைவாக இருந்தார்கள்.

**யோசிப்பது சுலபம்; அதன்படி நடப்பதுதான் சிரமம்.**

மலேயா யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே ஆபிரிக்காவிலும், மத்தியக் கிழக்கிலும் நடந்த சண்டைகளில் நமது ராணுவங்களை ஈடுபடுத்தினோம். அவைகள் நமது வசமிருந்தால் மலேயா யுத்தத்தில் ஈடுபடுத்தியிருக்கலாம். அல்லது ஜப்பான் தாக்கும்படி நேர்ந்தால் அதற்குத் தற்காப்புக்காக தூரக்

கிழக்கை பலப்படுத்துவதா, இவை இரண்டில் எது அவசியமென்று நிர்த்தாரணம் செய்ய வேண்டியிருந்தால் ஒருவர்கூட சமீபக் கிழக்குப் பிரதேசங்களை இதாலியும், ஜெர்மனியும் அடையும்படி விட்டுவிட்டு ஜப்பானியர்கள் எதிர்க்காமல் நம் தற்காப்புகளைமட்டில் பலப்படுத்தும்படி சொல்லியிருக்கமாட்டார்கள்.

இதற்குமுன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பிசகானவையென்றும் அவைகளுக்கு மாறாக நடந்திருந்தால் லாபகரமாக நேரிட்டிருக்கக்கூடும் என்றும் இப்போது சொல்லுவது வெகு எளிது. ஆனால் இதுவரை நாம் தாத்காலிகமாக இழந்த ஸ்தானங்களை எவ்விதம் மீட்டுக்கொள்ளுவது என்பதைப்பற்றி யோசிப்பது தான் மிகவும் சிலாக்கியம். இவைகளைப்பற்றித்தான் நாம் முக்கியமாக கவனத்தைச் செலுத்தவேண்டும்.

### சில முக்கிய விஷயங்களும், அதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் பாடங்களும்.

ஒரு சமயத்தில் ருஷ்யாவிற்கு முழுத்தோல்வி ஏற்படும் போலிருந்தது. இப்பொழுது ருஷ்யர்கள் ஜெர்மானியர்களை வந்த வழியே திருப்பி அடித்துக் கொண்டுவருகிறார்கள். மேலும் தங்களுடைய சைன்யங்களை மறு யுத்தத்திற்காக பலப்படுத்திவருகிறார்கள். என்ன நேர்ந்தாலும் சரி, ருஷ்யா எதிரி வசமாகாது என்று இப்பொழுது நாம் நிச்சயமாக நம்பலாம்.

யுத்த தளவாட உற்பத்தியில் உலகத்திற்கே முதல்தரமாக விளங்கிவந்த அமெரிக்காவும் இப்பொழுது இந்தக் கடும்போரில் ஈடுபட்டிருக்கிறது. சைனாவுக்கு நீண்டகாலமாக யுத்தத்தினால் கஷ்டங்கள் நேரிட்டபோதிலும்கூட அது சின்னாபின்னமாகப்போகாமலும் முழுமனதுடனும் ஊக்கத்துடனும் எதிரிகளை விடாமல் எதிர்த்து வருகிறது.

கிரேட் பிரிடனில் முன்பு அதிக கஷ்டங்கள் நேர்ந்தன. இருந்தாலும் சென்ற வருஷத்தில் இருந்ததைவிட இப்பொழுது நமக்குப் பலமும், யுத்த முஸ்தீப்பும் பயிற்சி பெற்ற மனிதர்களும், பன்மடங்கு அதிகமாகவே இருக்கின்றன. நாமும் நமது நேசதேசங்களும் ஒருவகைப்பட்ட தலைமையின் கீழ் அமைந்திருக்கிறோம். அதனால் ஒரேவிதமான லக்ஷியத்தை அடையப்போகிறோம்.

இதுவரை சொல்லப்பட்டவையெல்லாம் உத்ஸாகம் மாத்திரம் கொடுக்கக் கூடிய வெறும் மனக்கோட்டைகள் அல்ல. உண்மையாக நடக்கக்கூடியவைகள் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் நமக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். இதற்குமுன் நடந்த கதையைப் பார்த்தால நமக்கு எவ்வளவோ பெருந்தோல்விகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த சமயங்களில் நமக்கு உறுதிப்பாடு குறைந்துவிடவில்லை. அதுபோல இப்பொழுதும் நாம் பலஹீனமடைந்து விடமாட்டோம்.

பெரிய வீரனும், ராஜீய நிபுணனுமான ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவரின் அனுபவத்தில் நேர்ந்திருக்கிறபடிதான் நமது தேச சரித்திரத்திலும் நிகழ்ந்திருக்கின்றன. அவைகளை நாம் ஒரு பாடமாக வைத்துக்கொள்ளவேண்டும். சில நாட்களுக்கு முன அவர் பேசுகையில் "என் வாழ்க்கையில் பெரும பாகம் சண்டையில் ஈடுபட்டிருந்தேன். யுத்தமானது கஷ்டத்தையும், சுகத்தையும் மாறிமாறி கொடுக்கக்கூடியது. யுத்த ஆரம்பத்திலாவது, மத்தியிலாவது ஒருபொழுதும் வெற்றி கிடைப்பதில்லை. முடிவில்தான் வெற்றி கிடைக்கும்," என்று தெரிவித்தார்.

---



## இந்தியாவிலிருந்து சுங்கிங்குக்கு ஆகாய மார்க்க மூலம் ஸப்ளை அனுப்பும் பிரச்னை.

### யந்திரமில்லா விமானங்களையும், இதர சுமையையும் விமானங்களே தூக்கிச் செல்லுகின்றன.

ஏற்கனவே இந்தியாவிலிருந்து சைனாவிற்கு பர்மா ரஸ்தா ஒன்று போடப்பட்டிருக்கிறது. சீனாவுக்கு சாமான்கள் வந்து சேருவதற்கு அஸ்ஸாம் வழியாகவும், இந்தியாவிற்கு மற்றொரு ரஸ்தா போடுவதில், சீனர்கள் மூன்று வருஷங்களாகப்பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். இப்போது இந்தியாவிலிருந்து சுங்கிங்குக்கு மூன்றாவது ரஸ்தா ஆகாய மார்க்கமாக ஏற்படுத்துவதற்கும் ஆரம்பமாகிவருகிறது. அப்படிச் செய்வதற்கு இடையூறுகள் அநேகம் இருக்கின்றன. ஏற்படுத்த முடியாதென்று சொல்லுவதற்குத்தான் சந்தர்ப்பங்கள் அநேகம் இருக்கின்றன என்றும் யுத்தப்போக்கும் இதற்கு அனுகூலமாக இல்லையென்றும் விமான நிருபர் நியூஸ் கிரானிகிள் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். புத்தி சாதுர்யத்தினாலும், மனோ திடத்தினாலும், தைரியத்தினாலும் விமானிகள், விமானங்களையே சுமை தூக்கிச் செல்லும் குதிரைகள் மாதிரி உபயோகித்து, கணவாய்களுக்கு மேல் பறந்து சீனாவுக்கு முக்கியமான ஸப்ளை பொருள்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றனர். பண்டை காலத்தில் இந்தக் கணவாய்களின் வழியாகத்தான் வர்த்தகம் நடந்துவந்தது.

ரங்கூனிலிருந்து மாண்டலே வழியாக லாஷியோவுக்கு வடக்கு நோக்கி ஒரு இருப்புப் பாதைதான் இருக்கிறது. ரங்கூன் பகுதியில் பர்மா ரஸ்தா மூடப்பட்டுவிட்டது. மேலும் இப்பொழுது இந்தியாவிலிருந்துதான் ஸப்ளைகள் சைனாவிற்குப் போவதால், ரங்கூனுக்குப் பதிலாக கல்கத்தாவை வைத்துக் கொண்டு, அங்கிருந்து சுங்கிங்குக்கு விமான மூலம் சாமான்களை அனுப்பலாம். ஆனால் 1,500 முதல் 2,000 மைல்கள்வரை விமானங்கள் பறக்கவேண்டியிருக்கும். அஸ்ஸாமில் ஸில்சார் என்ற இடத்திற்கும் கல்கத்தாவிற்கும் நேரான மார்க்கத்தை இருப்புப் பாதையாக ஏற்படுத்திவிட்டால், ஸில்சாரிலிருந்து சுங்கிங்குக்கு தூரம் 1,000 மைல்தானிருக்கும். இந்தப் பாதையில் இடையிடையே உயரமான மலைகளில் விமானங்கள் இறங்குவதற்கு இடங்கள் தயாரித்துவிடலாம். அம்மாதிரி இடங்கள் ஏற்படுவது கடினம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சீனர்கள் இந்த தேசத்தில் ரஸ்தாக்களைப் போட்டுவிட்டால், சீக்கிரத்தில் விமானங்கள் இறங்கும் தளங்களையும் உண்டாக்கிவிடலாம்.

### ஜெர்மன் (JU–52) விமானங்கள்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு பத்து வருஷங்களுக்கு முன் ஜெர்மனியின் விமான போக்குவரத்தில் முக்கியமாக உபயோகிக்கப்பட்டுவந்த மூன்று எஞ்ஜினுடன், செல்லும் JU-52 விமானமானது யுத்தம் ஆரம்பித்த பிறகு ஜெர்மனியின் தரைப்படைக்கும், விமானப் படைக்கும் சுமை தூக்கும் குதிரைகளாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை ஜெர்மானியர்கள் ஆயிரக்கணக்காகக் கட்டியிருக்கிறார்கள். இன்னும் கட்டிவருகிறார்கள். அவர்கள் செய்தபடையெடுப்புகளிலெல்லாம் இந்த JU-52 என்ற விமானங்கள் துருப்புகளையும், ஸப்ளைகளையும் க்ளைடர் என்ற சிறு விமானங்களையும் தூக்கிச் செல்லுகின்றன. இப்பொழுது லேசான டாங்கிகளையும், பீரங்கிகளையும் தூக்கிச் செல்ல விமானங்களையே உபயோகப்படுத்துகிறார்கள். விமானத்தின் (fuselage) என்ற பாகத்தில் டாங்கிகளையும், பீரங்கிகளையும் ஏற்றிக்கொண்டு குறிப்பிட்ட இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து, அங்கு உபயோகத்திற்குத் தயாராக சீக்கிரம் இறக்கிவிடப்படுகின்றன. இது மாதிரிதான் இப்புதிய ரஸ்தாமூலம் விமானங்கள் அனுப்பப்படும்.

க்ளைடர் என்பது விளையாட்டு பொம்மையல்ல. ஒரு க்ளைடரைத் தூக்கிச் செல்லும் விமானம் இரண்டு பங்கு பாரத்தை சுமக்க முடியும். ஒரு J. U. விமானம் குறைந்தது ஒரு க்ளைடரையாவது தூக்கச் செல்லுகிறது. இரண்டு,

மூன்று கிளைடர்களையும் தூக்கிச் செல்லுவதாகவும் சொல்லப்படுகிறது. பெரிய விமானங்கள் பெரிய கிளைடர்களையும், கனமான சுமைகளையும் தூக்கிச் செல்லக் கூடும். முப்பது அடி அகலமுள்ள இறக்கைகளுள்ள கிளைடர் 2 டனுக்கு மேல் நிறையுள்ள சுமையைத் தூக்கிச் செல்லலாம். இப்போது கிளைடர் விமானத்தால் என்ன உபயோகமென்று சொல்லுவோம். ஒரு டன் நிறையுள்ள சுமையையும், இரண்டு டன் நிறை சுமையை ஏற்றிய கிளைடரையும் சுமந்து 200 பெரிய விமானங்கள் செல்லக்கூடுமானால் இந்த விமானப்படை ஒரு பகுதியில் 600 டன்களைக்கொண்டு செல்லுகிறது. ஆகவே 300 லாரிகள் செய்யக்கூடிய வேலையை இவ்விமானப் படை, பத்தில் ஒரு பங்கு அவகாசத்திற்குள் செய்து முடித்துவிடும்.

## ஜெர்மன் கிளைடரின் நுணுக்கங்கள்.

சாதாரண ஜெர்மன் கிளைடர் விமானம் 80 அடி பரப்பும் 50 அடி நீளமுள்ள விமானமாகத் தோன்றுகிறது. அதன் (fuselage) என்ற பாகமெல்லாம் எஃகு குழாய்களாலும், சிறகுகள் மரத்தினாலும் செய்யப்பட்டவை. அது இறங்கும் பொழுது அடிபாகம் பூமியில் உரைந்துகொண்டு இறங்குகிறது. பூமியிலிருந்து உயரக் கிளம்பும்பொழுது அதற்குச் சக்கரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகாயத்தில் சென்ற பிறகு சக்கரங்கள் கீழே போடப்படுமாகையால், இறங்கும் போது பூமியில் உரசிக்கொண்டு இறங்கும். லிபியாவில் ரோமல் படைகளுக்கு ஸப்ளை செய்ய இம்மாதிரி கிளைடர்கள்தான் உபயோகப்படுத்தப்படுகின்றன. 12 மனிதர்களை, 6 டாமி துப்பாக்கிகளுடனும் 2 யந்திர பீரங்கிகளுடனும் ஒரு கிளைடர் தூக்கிச் செலுத்துகிறது.

ஜெர்மானியர்கள் இப்பொழுது இன்னும் பெரிய கிளைடர்களைக் கட்டுவதாக செய்திகளிலிருந்து தெரிகிறது. அவைகளில் சிலவற்றில் குறைந்த சக்தியுள்ள இஞ்ஜின்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் விமானத்தை இழுத்துச் செல்லும் கம்பி அறுந்துவிட்டாலும், விமான ஓட்டி, அந்த எஞ்ஜின் உதவியைக் கொண்டு ஜாக்கிரதையாகவும் தேவையான இடத்தில் இறங்கவும் முடியும்.

---

## வரும் வசந்தகாலத்தில் பலமான பாம்பர்படை.

## புதிதாகச் செய்யப்பட்ட கனமான பாம்பர்களின் தன்மை.

## சமயத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளும்.

## லக்ஷியத்தில் மாறுதலில்லை.

(விமானப்படைத் தலைவர் L. V. பிரேஸர் எழுதியது.)

சில மாதங்களாக சீதோஷ்ண நிலை சரியாக இல்லாததலால் வெகுதூரத்தில் சுடக்கூடிய பாம்பர்களை உபயோகிக்கவில்லை. சீதோஷ்ண நிலை கெடுதலாயிருந்ததால் எதிரியைத் தாக்கும் சக்தியும் குறைக்கப்பட்டது. இருந்தாலும் ஜெர்மனியின் தொழிற்சாலைப் பிரதேசங்களையும், முக்கிய பட்டணங்களையும் தாக்குவதைக் கொஞ்சமும் குறைக்கவில்லை. இதுவரை இருந்ததைக் காட்டிலும் வரும் வசந்த காலத்திலும் கோடைகாலத்திலும் பாம்பர் விமானப்படை அதிகமாக பலப்படுத்தப்படும். அதைக்கொண்டு மும்முரமாக எதிரிநாட்டில் சென்று சண்டை செய்யப்படும்.

புதிதாகச் செய்யப்பட்ட பாம்பர்களில் ஸ்டர்லிங், ஹாலிபாக்ஸ், மான்செஸ்டர் இவைகள் மிகச்சக்தி வாய்ந்தவை. இவைகளோடு லங்காஸ்டர் முதலிய கன



மான அமெரிக்க பாம்பர்களும் சேர்த்துக்கொள்ளப்படும். இப்பொழுது சொல்லப்பட்ட பாம்பர்கள் யாவும் அதிகமான குண்டுகளை ஏற்றிச்செல்லும் வெகு தூரமும் செல்லும். வேகமாயும் செல்லக்கூடியவை. அதிலுள்ள விமானிகளுக்குப் போதுமான பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. எதிரி நாட்டில் 12 முதல் 16 மணி நேரம் சஞ்சரிக்கும் சமயத்தில் விமானிகளின் பாதுகாப்புதான் முக்கியமானது. ஆகவே இவ்விமானங்கள் தகுந்த அனுபவத்தின் பேரிலேயே கட்டப்பட்டிருக்கின்றன.

## (Handley Page) ஹாண்டிலி பேஜ் பரம்பரை.

உதாரணமாக ஹலிபாக்ஸ் விமானங்கள் (Handley Page) ஹாண்டிலி பேஜ் V-1,500 என்ற பெரிய விமானத்தைப் பார்த்துக்கட்டப்பட்டது. ஹாண்டிலி பேஜ் என்பது 1918-ல் கட்டப்பட்டது. அதற்கு 4 பெரிய மோட்டார் இஞ்ஜின்கள் இருந்தன. அக்காலத்தில் பெர்லின் நகரைத் தாக்குவதற்காகவே கட்டப்பட்டது. ஆனால் அப்பொழுது சமாதானம் ஏற்பட்டுவிட்டதால் உபயோகிக்க முடியவில்லை. இப்பொழுது அதைக்காட்டிலும் அதிக சக்தியுடன் ஹலிபாக்ஸ் விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஸ்டர்லிங் பாம்பர் விமானங்கள், பறக்கும் படகுகளைப் பார்த்துச் செய்யப்பட்டவை. இரண்டிற்கும் சிறகுகள் ஒரு மாதிரிதான். நான்கு வருஷங்களுக்கு முன்னமேயே இந்த ஸ்டர்லிங் விமானங்கள் கட்டப்பட்டு பரீக்ஷை செய்யப்பட்டது.

இதைப்போல் மான்செஸ்டர் விமானங்களும் அவ்ரோ (Avro) மான்செஸ்டர் என்ற 1918-ல் கட்டப்பட்ட இரண்டு மோட்டார் இஞ்ஜின்கள் உள்ள விமானங்களைப் பார்த்துக் கட்டப்பட்டவை. 1918-ல் கட்டப்பட்ட அவ்ரோ விமானங்கள் மணிக்கு 126 மைல் வேகம்தான் செல்லும். மேலும் அது விமான வகுப்பில் 24 இனத்தைச் சார்ந்ததாக இருந்தது. தற்சமயத்தில் அது 179-வது இனத்திற்குத் தள்ளப்பட்டது என்றால் 24 வருஷகாலமாக விமான சிருஷ்டியில் நாம் அடைந்திருக்கும் அனுபவத்தையும், முன்னேற்றத்தையும் பாருங்கள். புதிதாக 155 வித விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன அல்லவா?

இப்போது உள்ள அவ்ரோ மான்செஸ்டர் விமானங்களுக்கு 4 மோட்டார் இஞ்ஜின்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிக குண்டுகளை ஏற்றிக்கொண்டு வெகுதூரம் செல்லக்கூடியவை.

## சண்டைசெய்யும் சக்தி அதிகரித்திருக்கிறது.

இவ்விதமாக புதிது புதிதாக விமானங்களைக் கட்டிவருவதால் நமக்கு விமான பலமும் அதிகப்பட்டுவருகிறது. ஆபத்துக்களைக் குறைத்துக்கொண்டு தைரியமாக இனி சண்டை செய்யமுடியும். ஆயிரக்கணக்கான குண்டுகளை ஏற்றிக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஜெர்மனிக்குச் சென்று தாக்கி சேதம் விளைவிக்கும்.

ஜெர்மனி பேரில் குண்டுகளைப் போடுவதோடு சமயத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளும். லக்ஷியத்தில் ஒரு மாறுதலும் இருக்காது. ஒரு சமயத்தில் பிரிடிஷ் தரைப்படையோடு கலந்துகொண்டு எதிரி ஸ்தானங்களைத் தாக்கும். மற்றொரு தடவை கப்பற்படையோடு கலந்துகொள்ளும். முன்பு பிஸ்மார்க் என்ற கப்பலை பிரிடிஷ் கப்பற்படை தாக்கிச் சென்றது. அப்போது கப்பற்படைக்கு உதவ ஸ்டர்லிங் விமானங்களும் தயாராக இருந்தன. இவ்விதமாகப் பலவிதமான விமான பலத்தைக்கொண்டே இந்த யுத்தத்தில் நாம் முடிவான வெற்றிபெறுவோம்.

---

## ஜெர்மனியின்பேரில் வெடிகுண்டுகள் போடப்படுகின்றன.

## வரவர அதிகமான படையெடுப்பு அதிகரிக்கிறது.

## மாரிகாலத்தில் நடந்த குறைந்த விமானப் படையெடுப்பு, இனிமேல் நடக்கப்போகும் விமானப் படையெடுப்புக்கு அறிகுறியல்ல.

(விமான பக்கப்படைத் தலைவர் L. V. பிரேஸ் எழுதியது.)

ஜெர்மனியின் மர்மஸ்தானங்களை வெடிகுண்டுகளினால் தாக்கப்பட்டு வருவது தயார்த்து நடத்தப்பட்டுவரும். அவ்விதம் ஜெர்மனியைத்தாக்க பிரிடிஷார்கள் மட்டுமல்ல. நேசதேசத்தார்களும் சேர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இங்கிலாந்திலுள்ள விமான தளங்களுக்கு, அமெரிக்க விமானப் படைதன் பாம்பர் விமானங்களில் ஒரு பகுதியை அனுப்பி பிரிடிஷ் விமானப் படையுடன் சேர்த்து விமான எதிர்ப்புகளில் ஈடுபட எத்தனிக்கிறது. ஜெர்மனியின் பேரில் சென்ற வருஷ மாரிகாலத்தில் ஏற்பட்ட விமான எதிர்ப்பைக் காட்டிலும் இந்த மாரிகாலத்தில் விமான எதிர்ப்புகள மிகவும் கொஞ்சம்தான். ஆனல், பிரிடிஷாரின் யுத்த தந்திரத்தில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்குமோ என்று கூட சிலர் சந்தேகிக்கலாம். உண்மையில் அவ்விதம் ஒன்றுமில்லை. இவ்விதம் குறைவு ஏற்பட்டதற்குக் காரணம் சிதோஷ்ண நிலைதான். குளிர் மிகவும் கடுமையாக இருந்தபடியால் பிரிடிஷ் விமானப் படையெடுப்பு அதிகமாக ஏற்படவில்லை. சென்ற ஜனவரி மாதத்தில் மட்டில் பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் ஜெர்மனியை பத்து இரவுகளில் சேர்ந்தாற்போல் தாக்கின. முதல் தடவை ஏற்பட்ட எதிர்ப்பு நீங்கலாக மற்ற எல்லாப் படையெடுப்புகளிலும் ஜெர்மனி மிகவும் பலமாகத் தாக்கப்பட்டது. ஆனல், முதல் தடவையில் மட்டில் பிரிடிஷாமடன் விமானங்கள் சிதோஷ்ண நிலை கெட்டிருந்த ஒரு இரவில் வட மேற்கு ஜெர்மனியில் பல இடங்களில் தாக்க நேரிட்டதால் அவைகள் அவ்வளவு வெற்றிகரமாகயில்லை.

இப்பொழுது யுத்த நிலைமையைக் கவனிக்க கடலாதிக்கம்தான் மிகவும் முக்கியமாகத் தெரிகிறது. ஆகையால் ஜெர்மனியின் துறைமுகங்கள், கப்பல் தளங்கள், இவைகளை விமானங்களைக்கொண்டு தாக்கவேண்டியது அவசியம். அவ்விதம் தாக்கப்பட்டால்தான் நீர்மூழ்கிக் கப்பல்களை உற்பத்தி செய்யவும், யுத்தக் கப்பல்களைப் பழுதுபார்க்கவும் ஜெர்மனிக்கு முடியாமல் போய்விடும். மேலும், இவ்விதம் துறைமுகங்களைத் தாக்கினல் ஜெர்மனியிலிருந்து ருஷ்யப் போர்முனைக்குக் கடல் மார்க்கமாகச்செல்லும் கப்பல்களும் தடைப்பட்டுவிடும்.

### வசந்த காலம்.

வசந்தகாலம் வரப்போகிறது. சிதோஷ்ண நிலை கெட்டிருந்த சென்ற மாரிகாலம் பூராவும் ஒன்றும் செய்யமுடியாமல் இருந்ததற்கு ஈடுசெய்ய வசந்த காலத்தில் நாம் என்ன செய்யக்கூடும் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டியதே யில்லை. உண்மையில் சென்ற 16 வருஷங்களில் எந்த சமயத்திலும் சிதோஷ்ண நிலை சென்ற வருஷ மாரிகாலத்தைப்போல அவ்வளவு கெட்டதாக இருந்ததேயில்லை. ஆனல், சென்ற வசந்தகாலத்தில் சிதோஷ்ண நிலை மிகவும் நல்லதாக இல்லாமலிருந்தும்கூட அப்பொழுது நடந்ததைக்கொண்டு இவ்வசந்தகாலத்திலும் நாம் செய்யவேண்டியது என்னவென்று யோசிப்போம். சென்ற வருஷம் வசந்தகாலத்தில் அதாவது ஏப்ரல் 7, 8-தேதி இரவுகளில் கீல் என்னுமிடத்தில் கப்பல்கள் பழுதுபார்க்கும் இடங்களில் வெடிகுண்டுகள் போட்டு அவையாவும் நாசமாக்கப்பட்டன. விமான எதிர்ப்புகாலத்தில் ஆகாயத்திலிருந்து பார்த்தால் கீழேயுள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட சேதம் இன்னதென்று விளங்காது. ஆனல், எங்கும் ஒரே நெருப்பு எரிந்துகொண்டிருப்பதைப் பார்க்க கீழ் துறைமுகத்திற்கு



அனர்த்தம் ஏற்பட்டது என்று மட்டில்தான் பிரிடிஷ் விமானிகளுக்கு அப்பொழுது தெரிந்திருக்கக்கூடும். திரும்பிவந்த விமானி, ஒருவர் "எரிகின்ற கீல் துறைமுகத்தையே சமுத்திரத்தில் அமுக்கினல் ஒழிய நெருப்பு அணையாது" என்று அங்கு ஏற்பட்ட சேதத்தைப்பற்றி வேடிக்கையாகச் சொன்னன்.

### விமானி சொன்னது சரியாய் போய்விட்டது.

பிறபட்டு அவ்விடத்தை வேவு பார்த்ததில் விமானி சொன்னதின் உண்மை வெளிப்பட்டது. கெய்ஸர் காலத்தில் பிரக்யாதிபெற்ற டியூக்ஷிவெர்க் கப்பல் (Deutschwerke) கட்டுமிடங்கள், அங்குள்ள கப்பற்படைக்கு வேண்டிய யுத்தப் பொருள்களைத் தயார் செய்யும் ஆயுதசாலை இவையாவும் வெடிகுண்டுகளால் பலமாகத்தாக்கப்பட்டு பாழாயின. ஏற்பட்ட சேதத்தை விஸ்தாரமாகச் சொல்வதற்கு முடியாது. ஒரு உதாரணம் மட்டும் இங்கு கூறுவோம்; டியூக்ஷிவெர்க் (Deutschwerke) கப்பல் கட்டுமிடங்களுக்குத் தெற்கே ஒரு பிரதேசத்தில் கப்பல் கட்ட உபயோகப்படும் சாமான்கள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. அவை பூராவும் தீக்கிரையாயின. மேலும் அங்கு நூற்றுக்கணக்கான அடிகள் நீளமுள்ள பெரிய பெரிய கட்டடங்களும், சிறு கட்டடங்களும் வெடிகுண்டுகளால் அடியோடு தகர்க்கப்பட்டன. கீல் (Kiel) பிரதேசத்திலிருந்த ஒரு பெரிய மின்சார உற்பத்திசாலைக்குப் பலத்தசேதம் ஏற்பட்டது. இந்த யந்திரசாலை இருந்த இடத்திற்கும் ஜெர்மனியில் கப்பல் கட்டுமிடங்களுக்கும் இடையே தொழிலாளிகள் வசித்துவந்த இடம் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. ஆதலால் அந்த இடத்தை அவர்கள் காலி செய்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

இதுவரை ஜெர்மனியைத்தாக்க அனுப்பப்பட்ட பிரிடிஷ் விமானப்படையை விட ஏப்ரல் மாதம் 7-ம் தேதி இரவு கீல் பிரதேசத்தைத் தாக்க ஏராளமாக விமானப்படை அனுப்பப்பட்டது. ஒரு வருஷத்திற்குப் பிறபட்டு இப்பொழுது பிரிடிஷ் விமானப்படையை பல இடங்களில் வைக்கவேண்டியிருந்தாலும்கூட இன்னும் ஏராளமாக விமானப்படை கீல் பிரதேசத்தையோ அல்லது ஜெர்மனியில் வேறெந்த நகரத்தையோ எதிர்த்து பெரும் சேதத்தை விளைவிக்கத் தயாராகயிருக்கிறது. விமானப்படை அதிகரிக்க, அதிகரிக்க, அது விளைவிக்கும் சேதமும விருத்தியாகும். எப்படியென்றல் ஒரு 100 பாம்பர் விமானங்களால் லக்ஷியங்களைத்தாக்கி எவ்வளவு சேதம் விளைவிக்கக்கூடுமோ அச்சேதத்தைக் காட்டிலும் இன்னும் இரட்டிப்பு மடங்குக்கு மேலேயே 200 பாம்பர்கள் சேர்ந்து விளைவிக்கக்கூடும். அதாவது எதிர்ப்பில் விமானங்கள் ஏராளமாக இருந்தால் அவைகளால் ஏற்படும் சேதமும் மிகவும் அதிகமாயிருக்கும். விவரித்துச் சொன்னல், விமான பலம் அதிகமிருந்தால, எதிரியின் தற்காப்பைப் பிளந்துகொண்டு போகவும், இராக்கால படைர் விமானங்களின் கவனத்தை குழப்பவும், தரையிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிக்காரர்களுக்கு மாறுட்டத்தை விளைவிக்கவும், பல இடங்களில் தீ மூட்டிவிடுவதால் நெருப்பை அணைக்கும் படைகளுக்கு அதிகவேலை கொடுக்கவும், சாத்தியமாகிறது. மேலும் அநேக விமானங்கள் இருந்தால் விமான எதிர்ப்பு ஆரம்பத்திலேயே பெருந்தீக்களை எழுப்புவது வெகு எளிது. அதனல் அடுத்தடுத்து வரும் பாம்பர் விமானங்களுக்கு லக்ஷியத்தைத் தெரிந்துகொள்ளவும் முடியும். இவ்விதம் சேதம் விளைவிக்கக் கூடிய ஏராளமாக விமானப்படை இப்பொழுது இங்கிலாந்தில் யுத்தத்திற்குத் தயாராக இருந்துவருகிறது.

---

# இந்த வருஷத்திற்குள் ருஷ்யா ஜெர்மன் சைனியங்களை நிச்சயமாக முறியடித்துவிடும்.

---

ருஷ்யாவில் முன்னிருந்த பிலிப் ஜோர்டான், நெய்ரோவிலிருந்து நியூஸ்க்ரானிகள் என்னும் பத்திரிகைக்கு கேபிள் மூலம் பிப்ரவரி 18-ல் அனுப்பிய செய்தி.

## ஹிட்லரின் வசந்தகாலத் தாக்குதல்.

சென்ற ஆறு மாதங்களாகவே நான் மாஸ்கோவிலிருந்தோ, குபிஷேவிலிருந்தோ வழக்கமாக அனுப்பிவரும் விமர்சனங்களில் நேசதேசத்தார்களுக்கு இறுதியில் வெற்றி கிடைக்கும் என்று குறிப்பிட்டு வந்திருக்கிறேன். அதே போலவே இந்த வருஷத்தில் பிரிடிஷ் சைனியங்கள் ஐரோப்பா கண்டத்தில் படையெடுத்து ருஷ்யாவுக்கு உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும் ருஷ்யர்கள் ஜெர்மன் சைனியங்களை முறியடித்துவிடுவார்கள்.

எச்சமயத்தில் வெற்றி கிடைக்குமென்பதை ராணுவ அதிகாரிகள் ஒருவித அபிப்பிராயத்தையும், பொதுஜன இலாகா அதிகாரிகள் வேறு விதமான அபிப்பிராயத்தையும் கொண்டிருக்கிறார்கள். ராஜீய வியவகாரங்களில் நீண்ட காலமாக சச்சரவுகள் நடப்பதில் ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் நிலைமை ஹிட்லர் தன் இஷ்டப்படி வசந்த காலத்தில் ஒரு பெரிய தாக்குதலை செய்யமுடியாமல் போய் விடுமென்று பொதுஜன இலாகா அதிகாரிகள் நம்புகிறார்கள். ஆகையினால் வரப் போகும் வசந்த காலத்தில் வெற்றி கிடைக்குமென்று அவர்கள் நம்புகிறார்கள்.

## ருஷ்யாவின் தயாரிப்பு: தந்திரமாக சேமித்து வைத்தல்.

ஆனால் அவர்கள் நினைப்பது பிசகென்று நிச்சயமாகத் தெரிகிறது. ராணுவ அதிகாரிகளும் நான் நினைப்பதுபோலவே எண்ணுகிறார்கள். அவர்கள் சரத் காலத்திற்குமுன் வெற்றி கிடைக்குமென்று நம்பவில்லை. ருஷ்ய ராணுவத் தலைவர் யாவரும் நிதானமான புத்திகூர்மை உள்ளவர்கள்தான். அவர்களில் அதிக நிதானமுள்ளவர்கள் நினைப்பது என்னவென்றால், ருஷ்யர்கள் தந்திரமாக தங்கள் வசமிருக்கும் பலத்தைக்கொண்டு இன்றுவரை வெற்றிகரமாகத் தடுத்துவந்த ஹிட்லரின் படையெடுப்பை (அக்டோபர் மாதம் 2-ம் தேதிமுதல் டிஸம்பர் மாதம் 6-ம் தேதிவரை) இன்னும் பலமாக வசந்த காலத்தில் தாக்க ஹிட்லர் தயாரித்துக்கொண்டிருப்பதாக நம்புகிறார்கள்.

ஹிட்லர் மாஸ்கோவைத் தாக்கப் பூரா முஸ்தீபுடன் இருந்த 51 படைப் பகுதிகளை அனுப்பினான். இன்னும் வசந்தகாலம் வந்தவுடன் அவன் அதைக் காட்டிலும் ஏராளமாகப் படைகளைத் திரட்டி அனுப்புவான் என்று ருஷ்யாவில் நினைக்கிறார்கள். மேலும் இந்தப் படையெடுப்பில் முதலில் ஏழு மாதங்களில் ஹிட்லருக்கு என்ன நஷ்டம் நேரிடக்கூடுமோ, அதையும், இன்னும் அதிகமாகவும் மாரிகாலத்தில் தயாரிக்கக்கூடும் என்றும் அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் இதுவரை இறந்துபோன நன்றாகப் பயிற்சிபெற்ற மேற்தர ராணுவ உத்தியோகஸ்தர்கள், இன்னும் கீழ்தர உத்தியோகஸ்தர்கள் இவர்களுக்குப் பதிலாக வேறு சிலரை நியமிப்பது சாத்தியமில்லை. மேலும் ருஷ்ய ராணுவத் தலைவர்கள் வெகு எளிதில் கற்றுக்கொள்ளக்கூடியவர்கள். யுத்தம் ஆரம்பித்த சில மாதங்களில் அவர்களின் தவறு அவர்களுக்குப் புத்தியைக் கற்பித்துவிட்டது. ஆகையினால் இனிமேல் எவ்வளவு பலம்கொண்டு ஹிட்லர் தாக்கினாலும்கூட அதை அவர்கள் தடுத்து சமாளிக்க முடியுமென்று ருஷ்ய ராணுவத் தலைவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.



அதைப்போலவே ஆக்கிரமித்த ஐரோப்பாவில், எல்லா நாடுகளிலும் உள்ள தொழிற்சாலைகள், யந்திரசாலைகள், கொத்தளங்கள், யுத்தப் பயிற்சிபெறும் தளங்கள் இவைகளிலெல்லாம் யுத்தத்திற்கு வேண்டிய சாதனங்களைத் தயார் செய்து மிக்க பலத்துடன் தாக்கினாலும்கூட ருஷ்யர்கள் அவர்களுக்கு எதிராக தாக்கமுடியும் என்று ருஷ்ய அதிகாரிகள் நம்புகிறார்கள். இவ்விதம் அவர்கள் பேசுவது வெறும் பேச்சில்லை. ஒருக்கால் மறுபடியும் கொஞ்சம் இடங்கொடுக்கும் படி நேரிட்டாலும் நேரிடும். ஆனால் ஏற்கனவே ருஷ்ய யுத்தம் ஆரம்பித்த முதல் ஆறு மாதங்களில் அவர்கள் தோற்ற அளவு இனிமேல் அவர்கள் தோற்க மாட்டார்கள் என்று அநேகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இதற்கிடையில் ஏராளமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உண்மையான விவரங்கள் தெரிந்தாலும் நமக்கு பிரமிப்பை உண்டாக்கக்கூடிய அவ்வளவு ஏராளமான யுத்தப் பொருள்கள் ரகசியமாகத் தயாராகிவருகின்றன.

ருஷ்யாவின் கைத்தொழிலின் சக்தி அயல்நாட்டார் நினைப்பதைக் காட்டிலும் பல்லாயிரம் மடங்குக்குமேல் உள்ளது என்பது சில பேர்களுக்குத்தான் தெரியும் (சுமார் ஐம்பது பேர்கள்).

## ருஷ்யா திரும்பத் தாக்குதல்.

இப்பொழுது ருஷ்யாவிலிருக்கும் டாங்கிகளும், பாம்பர் விமானங்களும் இவைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகம் செய்திருக்கக்கூடும் என்பது வாஸ்தவம்தான். ஆனால் தொழிற்சாலையை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதில் காலம் கழிந்துவிட்டதினால் இந்த நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது என்று நான் நம்புகிறேன். ஹிட்லர் மற்றொரு பெருத்த முயற்சிகொண்டு தாக்குவதற்குமேல் அடுத்த பிரயத்தனம் செய்ய முடியாதென்று எண்ணுவதால், வசந்தகாலத்தில் அந்தத் தாக்குதலை ருஷ்யர்கள் சமாளித்துவிட்டு மீண்டும் ஜெர் மானியர்களைத் தாக்க ஆரம்பித்துவிடுவார்கள். அது சமயம் அவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும். நிலைமையும் அதிக சாதகமாக இருக்கும். அவர்கள் நாட்டிற்கும், அவர்கள் ஜனங்களுக்கும் ஜெர்மானியர்கள் செய்த அட்டூழியங்களுக்கு அவர்களைப் பழிக்குப் பழிவாங்க புதிதாகவும், உயர்தர பயிற்சி பெற்ற வீரர்களையும் சண்டைக்கனுப்புவார்கள். ஆனால் இவை யாவும் சண்டையில் எதிர்பாராமல் நேரக்கூடிய நஷ்டங்களைப் பாராட்டாமல் சொல்லப்பட்டிருக் கிறது.

## ஜெர்மானியர்கள் பின்வாங்கவில்லை, முறியடிக்கப் படுகிறார்கள்.

ஜெர்மானியர்கள் மாஸ்கோவிலிருந்து இதுவரை பின்வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அடுத்த சமயத்திலோ அவர்களைப் பின்வாங்கவிடாமல் அடியோடு நாச மாக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது. ருஷ்யர்கள் இப்பொழுது ஜெர் மானியர்களை புறங்காட்டி ஓடச்செய்ததில் அவர்கள் பின்வாங்கினார்களே ஒழிய சிதறியடிக்கப்படவில்லை. ஆனால் மாஸ்கோவிற்கு சமீபத்திலிருந்துகொண்டு ஜெர்மானியர்களைத் தாக்கினபொழுது அந்த நாட்களில் ருஷ்யப் பொதுஸ்தாபன இலாகா பொறுமையாக இருந்துவந்ததை எவ்வளவு புகழ்ந்தாலும் அது போதாது. புருன்ஸ் (Prunce) சொன்னகப்படி ஜெர்மன் தாக்குதலின் கொடுமை குறைவுபடுவதற்கு அறிகுறிகள் ஏற்படும்வரை அவர்கள் காத்திருந்து பிற்பட்டு தங்கள் பலம் பூராவும்கொண்டு திரும்பத் தாக்கியிருக்கிறார்கள். இப்படிப் போட்ட திட்டத்தில் அவர்களுக்கு அனாவசியச் சேதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ருஷ்யர்கள் போட்ட திட்டத்திலும் அனாவசியச் சேதத்திற்கு இடம் வைத்தே அவர்கள் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள்.

# அமெரிக்கப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

**நியூ யார்க் டைம்ஸ், பிப்ரவரி 13.**—ஒரு நாளில் 15 நிமிஷங்களில் ஒரு சிறு யுத்தக் கப்பல், இரண்டு நாசகாரிகள் செய்து முடிக்கப்பட்டு சமுத்திரத்தில் இறக்கப்பட்டன. இன்னும் இரண்டு துணைக்கப்பல்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. இம்மாதிரி அமெரிக்காவின் கைத்தொழிலில் இதுவரை காட்டப்படாத மகத்தான சக்தி இப்பொழுது காட்டப்படுகிறது.

ஏற்கனவே போட்ட திட்டப்படி நாசகாரிகள் இன்னும் நாலு மாதம் கிரமித்துத்தான் பூர்த்தியாகுமென்றும், க்ரூயிஸர் இன்னும் ஆறு மாதம் கிரமித்துத்தான் பூர்த்தியாகுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. பஸிபிக் சமுத்திரத்தில் ஒரு தனி கப்பற்படையும், அட்லாண்டிக் சமுத்திரத்தில் மற்றொரு கப்பற்படையும் தயார் செய்யப் போட்ட திட்டப்படி கப்பல் கட்டுவதை துரிதப்படுத்தியதில் இப்பொழுது அந்த மூன்று கப்பல்களையும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே கட்டி முடிக்க சாத்தியமாயிற்று.

**நியூ யார்க் தினசரி பத்திரிகை, பிப்ரவரி 16.**—நம் தரைப்படையில் ஏற்கனவேயே சுமாராக 17,00,000 வீரர்கள் இருக்கிறார்கள். இந்த வருஷம் முடிவதற்குள் 36,00,000-லிருந்து 40,00,000-வரை எண்ணிக்கையுள்ள ஒரு சைனியத்தை தயார் செய்ய திட்டம் போடப்பட்டிருக்கிறது. தரைப் படையைச் சேர்ந்த விமான பலத்தை 20,00,000 பேர்களுக்கு விஸ்தரிக்க திட்டம் போடப்பட்டு இருக்கிறது. ஆனால் லுப்ட்வாபியில் இருப்பதோ 12,50,000 என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. பிரிடிஷ் விமானப்படையில் சுமாராக 10,00,000 பேர்கள் இருக்கிறார்கள். இத்தகைய தரைப்படையும், விமானப்படையும், 5,00,000 பேர்கள்கொண்ட கப்பற் படையுடன் சேர்ந்துகொண்டு ஜப்பானை எதிர்த்தால் நம்முடன் அது நம்மை வலுச் சண்டைக்கு இழுத்ததற்குத் தக்கப்பட நேரிடும். ஹிட்லரும் யுனைடெட் ஸ்டேட்ஸ் என்ற ஒரு தேசம் உலகத்தில் இல்லாமல் இருந்திருக்க கூடாதா என்றும் நினைப்பான். நாம் பலம்கொண்டு எதிரியை எதிர்க்கும் பொழுது நம் வீரர்கள் சுறுசுறுப்பாகவும், நல்ல ஆயுதங்களுடன் போர்புரிவார்கள். எதிரிகளோ ஆயுதமழுங்கியும் சோர்வடைந்தும் இருப்பார்கள்.

**விண்டிகேட்டர் பத்திரிகை பிப்ரவரி 18.**—இந்த யுத்தத்தில் இதுவரை முன் பிரிடன் செய்திருக்கும் பெரிய பிரயத்தனங்களை நிதானித்துப் பார்ப்போம். பிரெஞ்சுக்காரர்களும், பெல்ஜியர்களும் போர்செய்ய முடியாமல் நிறுத்திய பொழுது பிரான்ஸில் டங்கர்க் என்னுமிடத்தில் நடந்த கடும் போரில பிரிடிஷார் சண்டை செய்திருக்கிறார்கள். பிரிடிஷார் மட்டில் தனியாக நின்று ஜெர்மனி, இதாலி இவ்விரண்டு தேசங்களுடன் எதிர்த்து சண்டை செய்திருக்கிறார்கள். அடுத்தபடியாக பிரிடிஷார் நார்வேக்கு படையெடுத்துச் சென்றிருந்தார்கள். கிரீஸில் கிரேக்கர்களுக்குத் துணையாக தங்களுடைய சைனியங்களை அனுப்பினார்கள். அதன் பிறகு இராக்கில் ஐந்தாம் படையை அடியோடு அழிக்க பிரிடிஷார் படையெடுத்தார்கள். பிற்பாடு ருஷ்யாவுக்கு ஸப்ளை அனுப்ப உயிர்நிலையான மார்க்கத்திலுள்ள ஸிரியாவில் நடந்த சண்டையில் பிரிடிஷார் தங்கள் முழு திறமையையும் காட்டியிருக்கிறார்கள். முஸோலினி ஸ்தாபித்த கிழக்கு ஆபிரிக்க சாம்ராஜ்யத்தை பிரிடிஷார் அடியோடு அழித்திருக்கிறார்கள். லிபியா படையெடுப்பில் இரண்டு தடவையும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஜிப்ரால்டரும், மால்டாவும் கைவிடப்படாமல் தங்கள் வசத்திலேயே இன்னும் வைத்திருக்கிறார்கள். மத்தியதரைக்கடல் வழியாக ஸூயஸ் கால்வாய்க்கும் வட ஆபிரிக்காவைச் சுற்றிக்கொண்டு யுனைடெட் ஸ்டேட்ஸ், கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா இத் தேசங்களுக்குச் செல்லும் போக்குவரத்துப் பாதைகள் விரோதிகளால் தாக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. பிரிடனிலோ ஒரு நாட்டிலும் இது



வரை ஏற்படாத அளவு விமானத் தாக்குதல் ஏற்பட்டு அதையும் சமாளித்திருக்கிறது. வெடிகுண்டுக்குத் தப்பியிருக்கிறவர்கள் கோபத்துடன் கையை ஓங்கிக்கொண்டு "ஒரு பொழுதும் நாங்கள் பிரிடனைவிட்டு போகமாட்டோம்", என்று தைரியத்துடன் இருக்கிறார்கள்.

**சிகாகோ செய்தி பிப்ரவரி 6.**—இந்த யுத்தத்தில் ஜனங்கள் உண்மையில் போர்செய்ய விரும்புகிறார்கள் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. பொர்ல் துறைமுகம் சம்பவம் நடந்து கிட்டதட்ட இரண்டு மாதங்களாயின. ஜனங்கள் கட்டாயப்படுத்தப்படாமல் தாங்களாகவே வந்து ராணுவ சேவையில் ஈடுபடு கிறார்கள். கப்பற்படையில் தேவைக்குமேல் அநேகர்கள் வேலைக்குவருகிறார்கள். யுத்தத்தில் அவர்களைச் சேர்க்கும் வரை பொறுமையாக இருக்கும்படிக்கும் தங்கள் தங்கள் வேலையைப் பார்க்கும்படிக்கும், அவர்களுக்குச் சொல்லிவரப்படுகிறது. சண்டைக்கு ஆள் சேர்க்கும் திட்டப்படி படை திரட்டியதில் சண்டை ஆரம்பிப் பதற்கு முன்னமேயே ஏராளமான வீரர்கள் இந்த யுத்தத்தில் சேர்ந்துவிட்டார் கள். நமது தேசத்தைக் காப்பாற்ற தேவையானவர்களைச் சண்டையில் சேர்த்துக் கொள்ள நாம் தயாராக இருப்போம் என்பது எல்லோருக்கும் தெரியும். சண்டைக்கு ஆள் சேர்ப்பதற்காக ஊர் ஊராகப் போகவேண்டியதில்லை; அவர் களுக்கு பயம் உண்டாக்கி கட்டாயப்படுத்த வேண்டியதில்லை. மேலும் நமக்குப் போட்டு ஜனங்களைக்கூட்டி பிரசாரம் செய்யவேண்டிய தேவையுமில்லை. ஜெர்மானியர்களின் அக்கிரமங்களைக் கண்டு ஏராள மனிதர்களுக்குக் கோபம் உண்டாகியிருக்கிறது. அதனால் அவர்கள் போர்செய்யக் கட்டாயப்படுத்தப்படா மலேயே தயாராக இருக்கிறார்கள்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— பிரஸங்கம் 86—(3-வது பிரிவு).

| மாதம் | தேதி | இடம் | | மணி. |
|---|---|---|---|---|
| மார்ச்ச | ... 14, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 6.30 |
| | 15, ஞாயிற்றுக்கிழமை | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 16, திங்கட்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 17, செவ்வாய்க்கிழமை | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |
| | 18, புதன்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | எம்பல் ... | ,, | 6.30 |
| | 19, வியாழக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 20, வெள்ளிக்கிழமை ... | மழையூர் ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 87—(4-வது பிரிவு).

| தேதி | இடம் | | மணி. |
|---|---|---|---|
| 21, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 22, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | காரையூர் ... | ,, | 6.00 |
| | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 23, திங்கட்கிழமை ... | கொன்னையூர் ... | ,, | 6.00 |
| | மேலவேகுபட்டி ... | ,, | 6.30 |
| 24, செவ்வாய்க்கிழமை | வடவாளம் ... | ,, | 6.00 |
| | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.30 |
| 25, புதன்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 27, வெள்ளிக்கிழமை... | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—14-3-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் மார்ச்சுமீ 21உ [ந. 87

பிரஸங்கம் LXXXVII.

## விஷி பிரான்ஸ்.

### பிரெஞ்சு—ஜெர்மன் சம்பந்தம்.

பிரெஞ்சு மக்கள் அதிக உயர்வானவர்கள். ஜெர்மானியர்கள் மிகத் தாழ்மையான தன்மையுள்ளவர்கள். ஆகவே அவ்விருவர்களுக்கும் ஒற்றுமையான அம்சமே கிடையாது. இந்த நாடுகளின் சரித்திரத்தைப் பார்த்தால் ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் சம்பந்தப்பட்ட சண்டை எப்போதும் இருந்திருக்கிறது. இதுவரை நடந்த சண்டைகளிலெல்லாம் தான் தோற்றுவிட்டதாக இந்த நாடுகளில் ஒரு நாடும் ஒப்புக்கொண்டது இல்லை. ஆகையால் பிரான்ஸ் முதலில் ஜயிக்கும், பிறகு ஜெர்மனி பிரான்ஸைத் தோற்கடிக்கும். இவ்வாறு இந்த நாடுதான் முடிவான ஜயம் பெற்றிருக்கது என்று சொல்லமுடியவில்லை.

### 1940-ல் பிரான்ஸ் அழிவு.

1940-இல் ஜூன் மாதத்தில் திடீரென்று ஜெர்மனி பிரான்ஸ்பேரில் படையெடுத்தது. இது பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஜெர்மன் மக்களுக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. அதுவரை தங்களுடைய சைனியங்களுக்கு உலகிலேயே ஈடுகொடுக்கக்கூடிய வேறு சைனியம் இல்லை என்றும் மாஜினோ அரணை எவராலும் கடந்து பிரான்ஸ் பக்கமாக வரமுடியாதென்றும், பிரெஞ்சுக்காரர்கள் பெருமை கொண்டிருந்தனர். ஆனால் ஜெர்மன் மின்னல் படையெடுப்பு (blitzkreig) ஆரம்பிக்கப்பட்டு பிரெஞ்சு சைனியம் சின்னாபின்னமாக்கப்பட்டது. பிரான்ஸிலும் எதிரி சைனியம் புகுந்து தலைநகராயிருந்த பாரிஸுக்கும் அருகில் நெருங்கிவிட்டது. அந்த சமயத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் மதிமயங்கிவிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில், முன்பு ரோம சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த ஜூலியஸ் ஸீஸர், கால் (Gaul) என்ற தேசிய ஜாதியாருடன் சண்டைசெய்து வெற்றிபெற்றபோது எதிரிகளுடைய பலத்தைப்பற்றி எழுதியிருக்கிறதைச் சொல்லுகிறேன்:—"தீவிரமான தைரியத்துடன் (Gaul) கால் ஜாதியினர் சண்டை செய்தார்கள். ஆனால் பயன்படவில்லை. தோல்வியுடைய ஆரம்பமானவுடனே அவர்கள் சைனியங்கள் கலைந்து சிதறிப்போய்விடுகின்றன. அதாவது சைனியம் போல ஒன்றுபட்டு நிற்கவேயில்லை" என்றான். இது பிரெஞ்சுக்காரர்களுக்கு நன்றாக அன்வயிக்கும். 1940ஆம் ஜூன் மாதத்தில் ஜெர்மானியரின் முன்னேற்றத்தைத் தடுக்க

முடியாதென்று நினைத்துச் சரண் அடைந்துவிட்டனர். வைத்தியர்களின் பரிபாஷைப்படி, பிரான்ஸ் தன் அறிவை இழந்துவிட்டதென்றே சொல்லலாம். ஏனென்றால் நேர்த்தியான பிரெஞ்சு வீரர்கள் சமார் 20,00,000 பேர்கள் கைதிகளாக்கப்பட்டனர். "தேசமும் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டது. அதில் விளைவுபொருள்கள் கிடைக்கக்கூடியதும், தொழிற்சாலைகள் உள்ளதும், கலைஞானிகள் இருக்கக்கூடியதுமான பாகத்தை ஜெர்மானியர் வியாபித்துக்கொண்டார்கள். கீழ்த்தரமான பிரதேசம் பிரெஞ்சுக்காரர்களுக்கு விடப்பட்டது. போதாததிற்கு வீடுவாசமில்லாத 1,00,00,000 பேர்களையும் இப்பாகத்தில் அடைக்கப்பட்டது". இதுதான் பிரான்ஸும் ஜெர்மனியும் செய்துகொண்ட உடன்படிக்கை.

## விஷி.

பிரெஞ்சுக்காரர்களுக்கு என்று விடப்பட்ட இடத்தில் மார்ஷல் பிடேன் அரசாங்கம் நடத்துகிறார். ஜனநாயகம் முதலிய கொள்கைகளைப்பற்றி நினைப்பதற்குக்கூட பிரெஞ்சு மக்களுக்கு இப்போது முடியவில்லை. முன்பு பிரமாத ஆடம்பரம் செய்யப்பட்ட "ஸ்வதந்திரம், சமதை, சகோதரத்தன்மை" முதலிய வீரவாசகங்களெல்லாம் நின்றுவிட்டன. பிரான்ஸ் ஒரு தளைப்பட்ட தேசமென்ற தன்மையே மங்கி விட்டது. கொஞ்சமும் யோசிக்காமல் பிடேனின் அதிகார ஆக்ஞையை ஜனங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வேறு சக்தியில்லாமலும் போய் விட்டது. இப்படி அமைந்ததால் ஜெர்மனிக்கு ஒரு பக்கம் சாதகமாயிருந்ததோடு பிரெஞ்சுக்காரர்களுக்கும் சாதகம்போல் இருந்தது. பிடேனோடு கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பாடு செய்துகொண்டு தேவையானவைகளைச் சுரண்டுவதற்கு ஜெர்மானியருக்கு சாதகமாயிருந்தது. இதைத்தான் மெயின் காம்ப் என்ற புஸ்தகத்தில் ஹிட்லர் எழுதியிருக்கிறான். அதாவது:—"கெட்டிக்கார வீரன் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து பல தவணைகளில் தனக்கு வேண்டியவைகளைப் பலாத்காரமாய் பெற்றுக்கொள்ளுவான்". இவ்விதமே விஷியில் ஹிட்லர் செய்கிறான்.

## பிடேன்.

பிரெஞ்சுக் கைதிகளை விடுவிப்பதாக தாராளமாக வாயை விட்டு ஹிட்லர் சொன்னான். நடுநிலைமை நாடுகளைப்போல் அரசாங்கம் நடத்தலாமென்று பிடேன் அனுமதிக்கப்பட்டான். மீதியுள்ள பிரெஞ்சுக் கப்பற்படையை வைத்துக்கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டது. இப்படி ஹிட்லர் சொல்லுவதை உண்மையென்றும் கௌரவமான நிலை ஏற்பட்டிருக்குமென்றும் பிடேன் தகுந்த தலைவனென்றும் பிரெஞ்சு மக்கள் நினைத்தார்கள். இவ்வித சந்தர்ப்பத்தில் பிடேன், சில மந்திரிகளின் உதவியைக்கொண்டு 1940-ம் வருஷம் ஜூன் முதல் அரசாங்கம் நடத்தி வருகிறான். பிடேனுக்கும் அவனுடைய மந்திரிகளுக்கும் பிரிடன் மேல் வெறுப்பும் ஜெர்மனியுடன் நட்பும் இருந்துவருகிறது என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

## ஜெர்மன் பலாத்காரம்.

ஆனால் பிடேன் அரசாங்கம் ஒப்புக்கொண்ட காலத்தில் இருந்த நிலைமை அப்படி இல்லை. வரவர விஷி பிரெஞ்சு அரசாங்கத்தின்பேரில் ஜெர்மனியின் ஆதிக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது. விஷி அரசாங்கம் வெளிநாட்டு வியவகாரங்களை ஜெர்மனியின் இஷ்டப்படிதான் அமைத்துக்கொள்ள வேண்டும். லவால், டார்லான், முதலியோரைத்தான் பிடேன் மந்திரிகளாக வைத்துக்கொண்டு அரசாங்கத்தை நடத்தலாம். விஷி பிரான்ஸுக்குச் சொந்தமாக வட ஆபிரிக்காவிலும், மேற்கு ஆபிரிக்காவிலும் சில இடங்கள் இருக்கின்றன. இந்தோ-சைனாவும் விஷிக்குச் சொந்தமானதுதான். இந்த இடங்களை உபயோகப்படுத்திக்கொள்ள ஜெர்மனி ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் இங்கிலாந்தை எதிர்த்துச் சண்டை செய்வதற்கு இவ்வளவு இடங்களும் ஜெர்மனிக்குத் தேவையாக இருக்கின்றன.



## ஜெர்மன் தந்திரம்.

ஜெர்மனி இங்கிலாந்தையும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும் கலக்கவே எண்ணம் கொண்டிருக்கிறது. இதற்காக ஸூயஸ் கால்வாயை உபயோகிக்கவும் நினைத்திருக்கிறது. முதலில் ஜப்பானைத் தூண்டிவிட்டு தூரக்கிழக்கில் பிரிடனுக்குச் சொந்தமான பாகங்களைத் தாக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. இதாலியை மேற்கே முன்னேற்பு செய்யும்படிக்கும் சொல்லியிருக்கிறது. தானும் கொஞ்சமும் தாமதிக்காமல் எகிப்தை நோக்கிப் படையெடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. இதற்கு உதவியாக இதாலியையும் சேர்த்துக்கொண்டிருக்கிறது.

ஏனென்றால் எகிப்துக்கு அருகில் இதாலிக்குச் சொந்தமான சிலநாடுகள் இருப்பதால் இதாலியையும் சண்டையில் சேர்த்துகொள்ளுவது ஜெர்மனிக்கு சல்லிசாக முடிந்தது. இப்படி ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு முன்பு ஸீஸருக்குச் சொந்தமாயிருந்தது போல் பெரும் சாம்ராஜ்யத்தை அடையலாமென்று இதாலி சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தது.

## ஜெர்மன் திட்டங்களின் முறிவு.

ஆனால் ஜெனரல் வேவலின் சாமர்த்தியத்தினால் ஆபிரிக்காவில் இதாலியர்கள் தோல்வியடைந்து ஓடினார்கள். இதன் பயனாக இதாலிக்குச் சொந்தமாயிருந்த பாகங்கள் யாவும் போய்விட்டன.

## விஷி வட ஆபிரிக்கா.

ஆகவே இதாலியருக்கு உதவி செய்யவேண்டியது ஜெர்மனிக்கு அவசியமாகிவிட்டது. இதற்காக ரோமல் என்ற ஜெனரல் அனுப்பப்பட்டான். எகிப்தைப் படையெடுப்பதானால் அதற்கு அருகில் ஒரு நல்ல பிரதேசம் ஸ்வாதீனமாக இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட இடம் பிரெஞ்சு வட ஆபிரிக்காதான். விஷி பிரான்ஸ் பேரில் கொஞ்சம் பலாத்காரம் செய்து அதன் ஆபிரிக்க நாடுகளையெல்லாம் தான் வசப்படுத்திக்கொள்ள ஜெர்மனி நினைத்திருந்தது. இதற்குத் தடையாக ஜெனரல் வேகாண்டு குறுக்கே நின்றான். உடனே இவனை விலக்கிவிட்டு ஜெனரல் ஜூயின் என்பவன் விஷி ஆபிரிக்காவிற்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். இது வரை இவன் ஜெர்மன் ஜெயிலில் அடைபட்டுக்கிடந்தான். முன்பு பிரெஞ்சுக் கப்பற்படைத் தலைவனாக இருந்தவனை விலக்கிவிட்டு ஜெர்மனிக்குச் சாதகமாக வேறொருவனை நியமித்துக்கொண்டு ஆபிரிக்காவில் ஜெர்மானியர் புகுர ஆரம்பித்தார்கள். டாகரிலிருந்து ஓரானுக்கு இருப்புப்பாதையும் போடப்பட்டு வருகிறது. இதன் வழியாக மேற்கேயிருந்து வடக்கே சாமான்களையும் மனிதர்களையும் கொஞ்சமும் சேதமன்னியில் அனுப்ப உத்தேசம். ஏனென்றால் அட்லாண்டிக் கடல் மார்க்கமாக வருவதானால் ஜிப்ரால்டர் தடையாக இருக்கும். அலெக்ஸாண்டிரியா துறைமுகமும் லிபியாக்கு அருகில் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் இருக்கும் பிரிடிஷ் கப்பற்படைகள் எதிரிகளுக்குத் தடையாக இருக்கும். அதற்காக விஷி பிரான்ஸை முடிந்தவரை வசப்பட்டதாகவே செய்துகொள்ள ஜெர்மனி விரும்புகிறது. இதன் பயனாக ஆபிரிக்காவில் ஜெர்மன் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது.

## பிரெஞ்சு இந்தோ-சைனா.

ஜெர்மன் பலாத்காரத்திற்கு இணங்கி இந்தோ-சைனாவை பிடேன் விட்டுவிட்டான். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு ஜப்பான திடீரென்று இந்தோ-சைனாவில் புகுந்து தாய்லாந்தின் மேற்கிலும், மலேயாவின் தெற்கிலும் வியாபித்துக்கொண்டது. விஷியின் பலஹீனத்தன்மை ஜப்பானுக்கும், ஜெர்மனிக்கும் சாதகமாக இருக்கிறது. அகில ஆசியக் கொள்கையைப் பயன்படுத்தும் முயற்சிக்கு ஜப்பானுக்கு சௌகரியமாக முடிந்தது. தூரக்கிழக்கில் பிரிடனுக்குச் சொந்தமான நாடுகளைத் தாக்க ஜெர்மனிக்கும் சாதகமாயிற்று.

## மெடகாஸ்கர்.

இனிமேலும் விஷி நடந்துகொள்ளும் விதத்தை அமெரிக்காவும் நேசநாடுகளும் கவனித்து வருகிறார்கள். மெடகாஸ்கரைப்பற்றி பலவிதமான செய்திகள் பரப்பப்படுகின்றன. இதுவரை இது விஷி பிரான்ஸுக்குச் சொந்தமாக இருக்கிறது. தான்தான் வைத்துக்கொள்ளப் போகிறதா அல்லது அப்படியே பாசாங்கு செய்துவிட்டு ஜப்பானுக்குக் கொடுக்கப்போகிறதா என்பது தெரியவில்லை. இதை ஜெர்மனி மட்டுமல்ல, இங்கிலாந்து, அமெரிக்கா முதலியவைகளும் ஆவலாகக் கவனித்து வருகின்றனர்.

## பிரிடிஷ் வெற்றிதான் பிரான்ஸுக்கு நல்லகதியை அளிக்கும்.

இப்படியெல்லாம் இருக்கும் பிரிட்டிஷ் ஜெயிக்கப்போவதாக பிரெஞ்சு மக்கள் யாவரும் நம்பிக்கைகொண்டிருக்கின்றனர். அதனால் தங்களுக்கு நல்ல காலம் பிறக்கப் போவதாயும் நினைத்திருக்கின்றனர். வாரம் பிடேனுக்குத் தன் ஜனங்களிடம் மதிப்புக் குறைந்து வருகிறது. இதேபோது பிரெஞ்சு மக்களுக்கு பிடேன் அரசாங்கத்தை எதிர்த்து கலகம் செய்ய சக்தியில்லாமலிருக்கலாம். இருந்தாலும் பிடேனை நம்ப முடியாதென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகிவிட்டது. ஆகவே விஷி பேரில் நேசநாடுகள் ஒரு கண்ணை வைத்துக் கொண்டேதானிருக்கிறார்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

### 14—3—42-லிருந்து 20—3—42-வரை.

**பர்மா.**—இப்போது யுத்தம் நின்றிருக்கிறதாலும் இனிமேல் இராவதியை (ஐராவதி) நோக்கி எதிரிகள் செய்யப்போகும் தாக்குதலுக்கு முன் ஏற்பாடாகவே யுத்தம் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லலாம். இது ரங்கூனுக்கு 280 மைல் வடக்கே இருக்கிறது. இது ஒரு பெரிய எண்ணெய் பிரதேசம். ப்ரோம் ஜில்லாவில் எதிரிகள் ரங்கூனுக்கு 35 மைல் வடக்கில் டைக்-ஜி (Taik-Gyi) என்ற இடத்திற்கு அருகிலதானிருக்கிறார்கள். எதிரிகள் காவல்படை முன்னேறிச் சென்றுகொண்டேயிருக்கின்றன. டாண்டபேல ஜில்லாவில் ரங்கூனுக்கு வடக்கில் 85 மைலில் மியாங்லீபின் (Myaungleibin) என்ற இடத்தில் நேசதேசப் படைகள் எதிரிகளைத் தாக்கின. வேறு சண்டைகள் எல்லாம் சிறு இடங்களிலேயேதான் நடக்கின்றன. ஏனென்றால் அங்கே எதிரிகள் உட்புகுந்து பிரயத்தனப்படுவார்கள்.

ரங்கூனுக்கு வடகிழக்கில் பிரிடிஷ் படைகள் 3 கிராமங்களைப் பிடித்தன. இதில் ஒன்று ரெங்கூனிலிருந்து 100 மைல் தூரத்திலிருக்கிறது. இதன் பெயர் ஷ்வே-குவின் (Shwe-guin). இதைப்பிடிக்கப்போகு ஒரு சிறிய ஹவில்தார் கூலியாளைப்போல் மாறு வேஷம்பூண்டு எதிரி பக்கம் புகுந்து எதிரிகளின் திட்டமான ரகசியங்களைக் கற்றுக்கொண்டு வந்துவிட்டார்.

சீனப்படைகள் டாங்டாங் என்னுமிடத்தில் ஜப்பானிய காலாட்படைகளுடன் சண்டை செய்தன.

டாங்கியான் என்ற இடத்தில் பிரிடிஷ் விமானப்படை ஜப்பானியத் துருப்புகளையும் போக்குவரவுகளையும் தாக்கின. மங்கலாடன்-ஹம்மாவாபிரன்தாவில் ஹிமாலாபியையும் தாக்கின.

பாலியில் நிலைமை விபரமாகத் தெரியவில்லை. ஒருக்கால் எதிரிவசமாயிருக்கலாம்.



**ஆஸ்திரேலியா.**—இங்கே அமெரிக்கப்படைகள் வந்திருப்பதும் பிலிப்பைன்ஸ் வீரன் மாக் ஆர்தர் தலைமை வகிப்பதும் திருப்திகரமான அம்சங்கள். மோர்ஸ்பீ, தர்ஸ்டே தீவுகளிலும், டார்வின் துறைமுகத்திலும் ஜப்பானியர் விமானமூலம் தாக்குதல் செய்துவருகின்றனர். இதற்கு பதில் செய்யும்விதமாக காஸ்மாடா, ரபால், கோபாங், டில்லி (Dilli) முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானங்கள் குண்டுகள் போட்டன. டிமோர் பூராவாக ஜப்பானியர் வியாபித்துக்கொண்டதாகப் பிரஸ்தாபம்.

அமெரிக்க நீர்மூழ்கிகள் 5 ஜப்பானியக் கப்பல்களை ஜப்பானுக்கு அருகிலும், பிலிப்பைன்ஸுக்கு அருகில் 30,000 டன்னுள்ள ஒரு எண்ணெய்க் கப்பலையும் மூழ்கடித்தன. நியூகினிக்கு அருகில் எதிரிக் கப்பல்களை ஆஸ்திரேலிய விமானங்கள் மூழ்கடித்தன. நியூகினிக்கு அருகில் ஆஸ்திரேலிய, அமெரிக்கப் படைகள் எதிரிகளின் 8 சண்டைக் கப்பல்களுட்பட 23 கப்பல்களை மூழ்கடித்தோ, சேதமாக்கியோ அழித்தன.

ஸாலமன் தீவுகளின் தலைநகரான டுலகி நகரையும், பிளாரிடா என்ற ஒரு தீவையும் விமான மூலம் எதிரிகள் படையெடுத்தனர்.

ஜாவா எதிரிவசமானதால் அமெரிக்க, பிரிடிஷ், டச்சு, ஆஸ்திரேலியர்கூடிய போர்முனை இரண்டு பிரிவாகப் பிரிந்ததால் கிழக்குநாடுகளின் ஸப்ளை சங்கத்திலிருந்து ஸர் பெட்ராம் ஸ்டீவன்ஸ் என்ற ஆஸ்திரேலிய பிரதிநிதி திரும்ப அழைக்கப்பட்டார். தனது நாட்டுக் காப்பிலேயே அதிகம் ஈடுபடவேண்டியிருப்பதால் வெளிநாட்டுத்தேவைக்கு அதிகம் ஆஸ்திரேலியாவால் ஸப்ளைசெய்ய முடியாதபோதிலும், இச்சங்கத்துடன் ஒத்துழைத்து இந்தியா முதலிய நாடுகளுக்கும் முடிந்தவரை உதவியளிக்கும். இவ்வேலையை இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய வர்த்தகக் கமிஷனரான கோல்லன் (H. R. Gollan) வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலிய உள்நாட்டு மந்திரி டாக்டர் ஹெர்பர்டு எவாட் அமெரிக்காவிற்குச்சென்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போகிறார்.

இங்கிலாந்திலுள்ள பஸிபிக் யுத்தக்கமிட்டி லண்டனிலிருந்து (அமெரிக்காவிற்கு) வாஷிங்டனுக்கு மாற்றப்படலாம்.

ஜப்பானும் ஆஸ்திரேலியாவும் சமாதானம் செய்துகொள்ளப் போவதாக அச்சுநாடுகள் சொல்லுவது வீண் புரளி. இதைப்பற்றி மிஸ்டர் கர்டின் சொல்லுவதாவது:—

‘ஆஸ்திரேலியா கடைசிவரை சண்டை செய்ய தீர்மானித்துவிட்டது. எதிரிகள் தட்டுத்தடுமாறி கீழே விழும்வரை அடி கொடுக்கப்படும்.’

**நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள்.**—இந்தத் தீவுகளில் சண்டை நின்றுவிட்டதென்று எண்ணுவது பிசகு. நெதர்லாந்து அரசாங்கம் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டதாக அச்சுநாட்டினர் பொய் வதந்தியை வெளியிட்டிருக்கிறார்களே தவிர, உண்மையில் இல்லை. சுமத்திராவின் மத்திய பாகங்களில் தனித்தனியாக சண்டை நடக்கிறது. ‘எங்கு கண்டாலும் கிழக்கிந்தியத்தீவுகளின் சுதேச சைனியங்கள் மிகவும் தைரியமாக நின்று எதிரிகளுடன் சண்டை செய்து வருகின்றன. மேலும் நம்முடைய கப்பற்படையின் உதவியைக்கொண்டு வெகு மலைகளிலிருந்துகொண்டுங்கூட சைனியங்கள் நீடித்து யுத்தம் புரிகின்றன. இன்னும் இதில் நம்முடைய யுத்தக் கப்பல்களும் ஈடுபட்டிருக்கின்றன என்று வில்ஹெல்மீனா ராணி அறிவித்திருக்கிறார்.

**சைனா.**—(1) யெல்லோ நதி (The Yellow River) பள்ளத்தாக்கிலுள்ள ஹோனான்-ஷான்ஸே சமவெளியிலும், டேயே-செள-ஸா-வின் பிராந்தியத்திலும் ஒரு பெரிய யுத்தம் நடைபெற்று வருகிறது.

(2) புதிய (அஸாம்) ரஸ்தா வழியாக ஸப்ளைகள் ஏற்கனவேயே சைனுவுக்குப் போய்ச்சேர்ந்துகொண்டிருக்கின்றன. பர்மா ரஸ்தா வழியாகக் கொண்டு செல்லக்கூடிய அளவைவிட இன்னும் அதிகமான சாமான்களை இப்புதிய ரஸ்தா வழியாக கொண்டுசெல்ல முடியும்.

(3) **ஹாங்காங்கில்** கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்திக்க ஜப்பானியர்கள் யாதொரு ஏற்பாடும் செய்யவில்லை. ஜினிவா ஒப்பந்தப்படி ஜப்பானியர்கள் யுத்தக் கைதிகளை சரியான முறைப்படி நடத்தவில்லை. இதைப் பற்றி அவர்களைக் கேட்டால் அவ்வித ஒப்பந்தமே தங்களுக்கு தெரியாதென்று சாக்குச்சொல்லி ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமலிருக்கிறார்கள்.

(4) சைனுவுக்கு சென்ற பிரிடிஷ் ராஜ்யவசோஷ்டியின் தலைவரான தளகர்த்தர் டென்னிஸ் (Dennys) சைனுவில் குன்மிங் என்னுமிடத்திற்கருகாமையில் விமான விபத்தால் இறந்தார்.

**பலவகைப்பட்டவை.**—சுமத்திராவின் வடகோடியிலுள்ள வே (Weh) என்னுமிடத்தை ஜப்பானியர்கள் ஆக்கிரமித்துக்கொண்டார்கள். பிரிடிஷாருக்குச் சொந்தமான விண்ட்வேர்ட் (Windward) தீவுகளிலுள்ள காஸ்டிரிஸ் (Castries) என்னுமிடத்தை 'யு' படகுகளினுல் தாக்குதல் ஏற்பட்டது. அட்லான்டிக்கில் ஸில்லா தீவிற்குச் சொந்தமான ஒரு எண்ணெய்க் கப்பல் ஒரு நீர்மூழ்கிப் படகால் தாக்கப்பட்டது.

**ருஷ்யா.**—இந்த வாரத்தில் கார்கவ்விலிருந்து டாகன்ராக் வரையுள்ள தெற்குப் போர்முனையில் கடும் போர் நடந்தது. டானெட்ஸ் போர்முனையில் ருஷ்யர்கள் நீபரோ-பெட்ரோவ்ஸ்க் பிரதேசத்தை நோக்கி முன்னேறி எதிரிகளைத் தாக்கினர். ஸ்மாலன்ஸ்க், வியாஸ்மா என்ற இடங்களில் அநேக கிராமங்கள் ருஷ்யர்கள் வசம் வந்துவிட்டன. இக்கிராமங்களில் மீண்டும் குடியேறுவது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது. ஏனென்றால் ஜெர்மானியர்கள் ஒவ்வொரு கிராமத்தையும் ஒவ்வொரு கொத்தளமாகப் பலப்படுத்திவிட்டனர். அவைகளில் விமான எதிர்ப்பு பீரங்கிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீடும் ஒரு ரகசியக் கோட்டையாகச் செய்யப்பட்டிருக்கிறது.

பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ஆர்டிக்கிலுள்ள ருஷ்யத் துறைமுகங்களுக்குச் செல்லும் சாமான் கப்பல்களுக்கு வெற்றிகரமாக துணைபுரிந்து செல்லுகின்றன.

அமெரிக்காவிலிருந்து வந்த ஸப்ளைகள் பூராவும் ருஷ்யாவுக்கு இவ்விதம் பத்திரமாகக்கொண்டு சேர்த்ததற்காக ருஷ்ய அரசாங்கம் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டது.

**லிபியா.**—இரு கக்ஷியினரும், முஸ்திப்பு செய்துகொண்டும், புதிய சைனியங்களை உதவிக்கு வைத்துக்கொண்டும், யுத்த தளவாடங்களை சேகரித்துக் கொண்டும் பலப்படுத்திவருகிறார்கள். டெர்னுவுக்கும், பெங்காஸிக்கும் இடையிலுள்ள பிரதேசங்களை ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அதற்கு எதிரே எகிப்து வரையிலுமுள்ள ஒரு அகண்ட பிரதேசம் பிரிடிஷார் வசத்திலிருக்கிறது. சமீபத்தில்தான் எதிரிகளுக்குத் தரைவழியாகவும், ஆகாய மார்க்கமாகவும் ஏராளமாக புதிய துருப்புகள் வந்து சேர்ந்திருக்கின்றன. பிரிடிஷ் நிலை சரியாக இருப்பதினுல் தரையிலும், ஆகாயத்திலும் சரியாகக் காவல் புரியப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக மார்ச்சு 13-ல் இங்குள்ள பிரதேசங்களிலும், டொப்ருக்கிலும் எதிரி விமானஎதிர்புகள் ஏற்பட்டன. மார்ச்சு 16வ டிமிமிக்கு தெற்கே முன்னேறிய ஜெர்மன் படைகள் திரும்ப விரட்டப்பட்டன.

சுயேச்சை பிரஞ்சுப் படைகள் மிகவும் தைரியமாக எதிர்த்து இதாலிய எல்லைப்புறமான ஔலோ அல் கபிரைப் (Ualou Kl kebir) பிடித்துக்கொண்டனர்.

ரோட்ஸில் (Rhodes) மைப், மெரிஸா, கலாடோ என்னுமிடங்களையும், க்ரீட்டில் ஹெராக்லியான் என்னுமிடத்தையும், க்ரீஸில் பிரயஸ் என்னுமிடத்தையும் பிரிடிஷ் விமானங்கள் தாக்கின.



**விஷி.** (1) ஆக்கிரமித்த பிரான்ஸ், விஷி பிரான்ஸ் இந்த இரண்டு இடங்களிலும் இருக்கும் தொழிற்சாலைகள் ஜெர்மனிக்காகச் சாமான்களைச் செய்கின்றன. அங்கே யுத்தக் கைதிகளுக்குச் சொந்தமான இடங்களையும் ஜெர்மனி பிடித்துக் கொண்டிருக்கிறது. விடுவிக்கப்பட்டு இக்கைதிகள் திரும்பிவந்தால் தங்களுக்குச் சொந்தமான இடம் இருக்காது. அல்லது அதே இடங்களில் கூலிவேலைச் செய்ய வேண்டியிருக்கும்.

2. மெடகாஸ்கரை மனப்பூர்வமாக எதிரிகளின் வசம் கொடுத்துவிடாதென்று விஷி அமெரிக்காவிற்குச் சொல்லியிருக்கிறது. இதன்கருத்து சரியாக விளங்காததால் மறுபடி விஷியின் ஜவாப்புவேண்டுமென்று அமெரிக்கா கேட்டிருக்கிறது.

தற்சமயம் மெடகாஸ்கரில் இரண்டு பிரெஞ்சு க்ருயிஸர்களும், சில நீர்மூழ்கிகளும் இருக்கின்றன.

3. ஆக்கிரமித்த பிரான்ஸில் சில நகரங்களில் பிரிடன் குண்டுவீசியதற்குப் பிரதியாக பிரெஞ்சு மொராக்கோவிலுள்ள 18 முதல் 50 வயதுள்ள 2,000 இங்கிலீஷ்காரர்கள் கைதிசெய்யப்பட்டுள்ளனர்.

**பிரிடன் செய்த தியாகங்கள்.**—வெற்றியடைவதற்கான முயற்சி பிரிடன் எடுத்துக்கொண்டிருக்கிறதென்பதற்கு இந்த வாரத்தில் பிரிடன்செய்த நான்கு தியாகங்களைத் தவிர வேறு நிதர்சனம் தேவையில்லை.

(1) வெள்ளைரொட்டிக்குப் பதிலாக மஞ்சல் ரொட்டி.

(2) மோட்டாரில் உல்லாச சவாரி நிறுத்தப்பட்டது.

(3) குதிரைப்பந்தயம், விளையாட்டு மல்லுசண்டை, டிராமா, ஸினிமா கால்பந்து ஆட்டம், போன்ற விளையாட்டுச்செலவுகள் நிறுத்தப்பட்டன.

(4) பொதுமக்கள் அணியும் ஆடையில் 25 சதவிகிதம் குறைவு.

**உற்பத்தி இலாகா மந்திரி.**—காப்டன் லிட்டில்டன் அதிக அதிகாரங்களுடன் உற்பத்தி இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தற்காப்பு வேலைகளுக்கு எவ்வாறு சர்ச்சில் பொறுப்போ அப்படி இவர் சாமான்களின் உற்பத்தி முதலிய வைகளை கவனிப்பார்.

**கப்பற்சண்டை.**— யூ 131, 434, 574 என்ற மூன்று ஜெர்மன் யூ படகுகள் ஒரு பிரிடிஷ் கப்பல் கூட்டத்தைத் தாக்கவந்தபோது இம்மூன்றும் தாக்கப்பட்டன. யூ 574 என்ற படகுதான் ஸ்டான்லி என்ற அமெரிக்க நாசகாரியை முன்பு மூழ்கடித்தது. இப்போது அதுவே ஸ்டார்க் என்ற பிரிடிஷ் நாசகாரியால் மூழ்கடிக்கப்பட்டது.

2. பிரிடிஷ் படைகள் 3 இ படகுகளை வடகடலுக்கு அருகில் மூழ்கடித்தன.

**பெல்ஜியன் காங்கோ.**—நேசநாடுகளுக்கு தூரக்கிழக்கில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய உதவும். தகரம், கோபால்ட், தங்கம், வெள்ளி முதலியவைகளையும் அதிகம் உற்பத்திசெய்யும். அதன் கவர்னர் ஜெனரல் பியரி ரிச்மான்ஸ்—தூரக் கிழக்கில் நஷ்டமான தகரத்தை இங்கே உற்பத்திசெய்துவிடலாம். அதோடு ஏற்கனவேயுள்ள தங்கம் முதலியவைகளையும் இழக்காமலும் இருக்கலாம்'.

**ஹாலந்து.**—டச்சு நாட்டிலுள்ள நாஸிகள்பேரில் குண்டுகள் விழுந்ததால் ஆம்ஸ்டர்டாமில் ராணுவச்சட்டம் அமுலுக்கு வந்து உபாத்தியாயர்கள் முதலியோர் யாவரும் கைதிசெய்யப்பட்டனர்.

**ஸ்லோவினியா.**—போலாந்தில் ஜெர்மானியர்செய்த கொடிய முறைகளை ஸ்லோவினியாவில் இதாலியர் கையாளுகின்றனர். ஸ்லோவினியாவின் தலைநகரான லூப்லிஜானுவில் ஏதோ ஸ்லோவினியத்தலைவன் கொல்லப்பட்டான் என்று 400 மாணவர்களும்

உபாத்தியாயர்களும் கைதிசெய்யப்பட்டார்கள். அதில் 12 பேர்கள் கொல்லப்பட்டனர். 64 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 41 பேர்களுக்கு கட்டாயக் கூலிவேலைசெய்யும் படி தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

**துருக்கி.**—துருக்கியில் மிலாஸ் ஜில்லாவில் விவரம் தெரியாத விமானங்கள் 12 குண்டுகளைப்போட்டன.

**இந்தியா.**—(1) சமீபத்தில் அபாயம் இல்லாதபோதிலும் சௌகரியத்தை முன்னிட்டு ஸிலோனிலிருந்து குழந்தைகளையும் ஸ்திரீகளையும் அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தீவு, உதவி கப்பல் தலைவன் ஸர் ஜெபரி லெய்டன் வசம் ஒப்பிவிக்கப்பட்டிருக்கிறது.

(2) இந்தியாவிற்கு வரும் அமெரிக்க தூதகோஷ்டியின் தலைவருக்கு அமெரிக்க மந்திரி பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(3) **மத்திய வரவு செலவு திட்டம்.**—1942—43-க்கு 15 கோடி ரூபாய் மிச்சப்படும்படி போடப்பட்டிருக்கிறது. வருமான வரியாலும், புதிய யுத்த சாமான்களுக்கு விதிக்கப்பட்ட வரியாலும் உபரி ஏற்படுகிறது. நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து விமானத் தற்காப்பு, பிரசாரம், போலீஸ், விமானப்படையெடுப்பு பாதுகாப்பு முதலிய உதவிகளுக்கு பிரத்தியேகமான செலவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**ஹிட்லர் சொற்பொழிவு.**—இதுவரை ஜெர்மனியில் இறந்தவர்களுக்கு அனுதாபம் காட்டும் சந்தர்ப்பத்தில் திங்கட்கிழமை ஹிட்லர் பேசியதில் ஒன்றும் புதிதாக இல்லை. முன்னைவிட இப்போது எதிரிகளுக்கு இருக்கும் அதிக பயத்தை தெரிவித்தது. அகத்திலுள்ளவைகளையெல்லாம் சொல்லிவிட்டான். "முழுப் பொய்களைத்தான் சொல்லியிருக்கிறார்கள். செய்யும் தற்புகழ்ச்சிகளாலும், வீர வாதங்களாலும், ஒரு பிரயோஜனமுமில்லை. அவனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் ஜெர்மன் சைனியம் முறியக்கூடியதற்கான சந்தர்ப்பம் வெளிப்பட்டது" என்று ஸம்னர் வெல்ஸ் கூறினர். ருஷ்யக் குளிரில்தான் மிஞ்சிவிட்டதாகவும், நெபோலியன் 1812-ல் பட்ட அவஸ்தை தனக்கு நேரவில்லையென்றும், ருஷ்யச் சைனியங்களை ஜெர்மனிக்கு தூரத்திலேயே தடுக்கவேண்டுமென்றும் சொன்னான். கடைசியாக 'தெய்வமென்ன நினைத்திருந்தாலும், நமக்கு போட்ட சண்டைகளின் பயனாக நீண்டகாலம் சமாதானத்தைப் பெறுவோம்' என்றான். தோற்று இறப்பது என்பது தான் அவனுக்குக் கிடைக்கக்கூடிய நீண்ட சமாதானம். ஆகவே ஹிட்லருக்கு ஒரு நன்மையும் கிடைக்காது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—3—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பகலில்.—மின்சார உற்பத்திசாலை, தொழிற்சாலை.—மாஸிங்கார்ப் (Mazingarbe), பெத்தூ (Bethune)க்கருகாமையில். | | 3 பகல் பைடர் விமானங்கள். | 6 பகல் பைடர் விமானங்கள். |
| | இரவில்.—க்ருப்ஸ் தொழிற்சாலையும், மற்றுமுள்ள தொழிற்சாலைகளும்—எஸ்ஸன் (Essen). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | மற்ற லக்ஷியங்கள்.—ரூர் (Ruhr) பிரதேசம். | | 3 பாம்பர் விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—3—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான மிறங்குமிடம்.—மார்டுபா (Martubs). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரோட்ஸ் (Rhodes) தீவுகள். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 11 விமானங்கள். | 83 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோல்மீன் (Moulmein). | தீக்கள் கிளம்பின. | | |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியப் போக்குவரத்துகள், தரையிலுள்ள விமானங்கள்.—ஸலாமா (Salamaua), லேய் (Laye). | | | |
| | துறைமுகம்.—ஹானிஷ் (Hanisch). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ், விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய கடல் விமானம்.—காஸ்மாடா (Gasmata). | தீப்பற்றியது. | | |
| 10—3—42. (செவ்வாய்க்கிழமை) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr) பிரதேசத்தில், | | 4 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—லிபியா (Libya)விலுள்ள தரைப்படைக்கு உதவியாக. | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 19 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—ஸலாமா (Salamaua). | 2 கப்பல்கள் மூழ்கின. 4 கப்பல்கள் தீப்பற்றின. | | |
| | **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி போக்குவரத்து.-பெகு (Pegu)வுக்கருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 11—3—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் ஏற்பட்ட வெடிகுண்டு எதிர்ப்புக்கு விமானங்கள் தெரியவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள், துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமானச் சண்டைகள்.—கடற்கரை பிரதேசங்களில். | அநேக விரோதி விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | 1 விமானம். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 4 விமானங்கள். | 12 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—மோலமீன் (Moulmein). | | | |
| | **பஸிபிக் (Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கடல் விமானங்கள்.—மிட்வே (Midway)தீவில். | | | 1விமானம். |
| | **நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata). | | | |
| 12—3—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பற்படை தளம், கப்பல் பழுது பார்க்குமிடங்கள்—கீல் (Kiel). | | | |
| | சுரங்க வெடிகள் பாவுதல்.—விரோதி சமுத்திரங்களில். | | 8 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—எல்லாரநெப் (Elaraneb). | | | தரையிலுள்ள 3 விமானங்கள் சேதமாயின. |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **கிரீஸ் (Greece)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—பிரேயஸ் (Piraeus). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கிரீட் (Crete)க்கு தென் பாகத்தில். | | நஷ்டமில்லை. | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—3—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 7 விமானங்கள். | 24 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | வேவு பார்த்தல்.—நியூ பிரிடன் (New-Britain). | | | 1 விமானம். |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியர் வசமிருந்த விமான நிலயங்கள்.—ஸலாமா (Salamaua) லேய் (Lae). | | | |
| | விமானப்போர்.—நியூ கினி (New-Guinea). | | நஷ்டமில்லை. | 5 விமானங்கள். |
| | வேவு பார்த்தல்.—நியூ கினி (New-Guinea). | | | |
| 13—3—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்-ஹாஸிப்ருக் (Hazebrouck). | | | |
| | விமானச் சிறு சண்டைகள்.—வட பிரான்ஸி (Northen France)ல். | | 5 விமானங்கள். | 8 விமானங்கள். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ட்ரிபோலி (Tripoli), மெச்சிலி (Mechili). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை எங்கும். | | 11 விமானங்கள். | 23 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், சாமான் கிடங்குகள்.—காஸ்மாடா (Gasmata). | | | |
| | **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சைனியங்கள்.—கீழ் பர்மா (Lower Burma)வில் செல்லும் ஸப்ளை மார்க்கங்கள். | | | |

| தேதி | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 14—3—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாயி (English Channel)ல். | | நஷ்டமில்லை. | 10 விமானங்கள். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான நிலயம்—மார்டுபா (Martuba). | | | 3 விமானங்கள். |
| | இரவில்.—விமானச் சண்டைகள்—லிபியா (Libya). | | | 1 விமானம், அநேகம் சேதமாயின. |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ரோட்ஸ் (Rhodes)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—மாரிஸா (Mariza), கலாடோ (Calato). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஹெராக்லியான் (Heraklion). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 9 விமானங்கள். | 20 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.-காஸ்மாடா (Gasmata). ராபால் (Rabaul). | | | |
| | **டிமோர் போர்ச்சுகீஸ் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஆக்கிரமித்த விமான நிலயம்.-டில்லி (Dilli). | | | |
| 15—3—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும் இரவிலும் நேரிட்ட வெடிகுண்டுத் தாக்குதல்களுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள் ஸிரேனைகா (Cyrenaica) பூராவிலும். | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—மார்டுபா (Martuba). | | | 5 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 15—3—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் விமானச் சண்டைகள்.—போர் அரங்கம் முழுவதிலும். | | 6 விமானங்கள். | 17 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு -நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய விமான தளம்.—ராபால் (Rabaul), | | 1 விமானம். | 3 விமானங்கள். |
| | விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 10—3—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 9 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரதேசங்கள்.—தாராவாடி (Tharrawady)க்குத் தெற்கில். | | | |
| | **தூரக்கிழக்கு நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 11—3—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—3—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—மேற்குக் கடற்கரை—இங்கிலாந்து (England) | | 1 பாம்பர் விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சில ஜில்லாக்கள்.—பர்மா (Burma)வின் மத்திய பாகத்தில். | | | |
| 13—3—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 2 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| | பஸிபிக் (Pacific) —(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—யௌலி (Youle)த் தீவில். | | | |
| 14—3—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britian)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் மேற்குக்கடற்கரை. | நஷ்டமுமில்லை; ஒருவரும் கொல்லப்படவில்லை. | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | ... | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| | பஸிபிக் (Pacific)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தர்ஸ்டே (Thursday) தீவு. | | | |
| 15—3—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—3—42. (திங்கட்கிழமை) | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

**‘தப்பினேம்’.** காலமும் எதிரிகளுக்கு பாதகமாகிவருகிறது என்று தெரியவருகிறது. இது வரையில் யுத்த தேவதைக்கு பலியான ஜெர்மன் வீரர்களின் ஞாபகார்த்தமாக இங்கட் கிழமை பெர்லினில் ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்தான். இறந்தவர்களுக்காக ஏதோதான் கவலைப்படுவதாக மாயக் கண்ணீர் சொரிந்தான். இந்த யுத்தம் தேவாசுர யுத்தமென்றும், மனிதர்களின் உயிருக்கும் சரீரத்திற்கும் கடுமையான நஷ்டமேற்படுமென்றும், இருந்தாலும் தானும் ஜெர்மன் சைனியமும் மாரி காலத்தின் கொடுமையால் அழிந்துவிடாமல் எஞ்ஜிவிட்டதாகவும், அசட்டுப் பிசட்டென்ற ஹிட்லர் சொன்னான். ருஷ்யாவை முன்பு படையெடுத்த நெபோலியன் 1812-ல் குளிர் தாங்காது அழிந்ததாயும் தான் தப்பிவிட்டதாகவும் பெருமையாகச் சொன்னான். ஆனால் ருஷ்ய யுத்தம் ஆரம்பித்தது முதல் அவன் சொல்லி வந்தவைகளையும், இப்போது சொன்னதையும் பார்த்தால் அதிக வித்தியாசம் காணப்படுகிறது. அதாவது இந்த யுத்தத்தை 1941-க்குள்ளாகவே முடித்துவிடுவதாகச் சொன்னது போக, பிராணனைக் கொடுத்து சண்டை செய்து தானும் ஜெர்மனியும் தப்பவேண்டுமென்று சொல்லுவதைப் பார்த்தால் தற்சமயம் ஜெர்மனியின் நிலைமை முன்பைவிட அதிக ஆபத்துக்குள்ளாகி இருக்கிறதென்று தெரிகிறது. மேலும் வசந்த காலத்தில் செய்வதாகச் சொன்ன தாக்குதலுக்குப் பதிலாக கோடை காலத்தில் பெரும் தாக்குதல் செய்யப்போவதாகவும் சொன்னான். ஏனோ இவ்விதமெல்லாம் அவன் பயப்படவேண்டும்? இவ்வளவு பயந்தாங்குள்ளித்தனமாக இதுவரை அவன் பேசியதில்லையே!

வி வி வி வி வி வி வி

**இரண்டு காரணங்கள்.** இதற்கு இரண்டு காரணங்களை அவன் சொல்லியிருக்கிறான். ‘ஐரோப்பிய சமாதானத்தைக் கெடுக்கிற ருஷ்யர்கள்’ அலைமேல் அலையாக புதிய துருப்புகளையும் யுத்த சாமான்களையும் யுத்தரங்கத்திற்குக் கொண்டுவருகிறார்களென்றும், தான் அவைகளை எதிர் பார்க்கவில்லையென்றும் சொன்னான். ‘இன்றுதான் எதிரிகளுடைய பூரா ஏற்பாடுகளையும் கண்டோ’மென்றும் சொன்னான். ஆகவே நேசநாடுகள் செய்துவரும் யுத்த முஸ்தீப்பு ஒரு காரணம் என்கிறது.

**மாரி காலம்.** அடுத்த காரணத்தை மாரிகாலம் என்று சொன்னான். அதாவது ஹிட்லர் அனுபவத்திலேயே இவ்வருஷத்தில் தான் மாரிகாலம் மிகவும் முன்னாடியே வந்ததாயும், ஜெர்மன் விஞ்ஞானிகள் இதை எதிர்பார்க்க முடியவில்லையென்றும் சொன்னான். இவ்விதம் எதிர்பாராதவிதமாக மாரிகாலமே ஜெர்மனியின் பேரில் பழிவாங்குவது சரிதான். ஏனென்றால் எதிர்பாராத விதமாகத்தானே ருஷ்யா பேரில் ஜெர்மனி படையெடுத்தது. முன்பு 15-வது நூற்றாண்டில் ஸ்பெயின் தேசத்துக் கப்பல் கூட்டம் பிரிடன் மேல் படையெடுக்க வந்த காலத்தில், புயல் அடித்து கப்பல்களெல்லாம் சின்னாபின்னமாகியபோது கடவுளே காற்றை அனுப்பியதாகச் சொல்லப்பட்டது. இப்போதும், கடவுள் மாரிகாலத்தையனுப்பி எதிரிகளுக்குத் தொந்தரவை விளைவித்து வருகிறார் என்று சொல்லுவது பொருத்தமாகவே ஆகும்.

வி வி வி வி வி வி வி

**உண்மை காரணங்கள்.** மாரிகாலம் முதலிய எதிர்பாராத காரணங்களைக் காட்டிலும் வேறு காரணங்களும் இருக்கின்றன. அதாவது முன்பு பிராவிட்ஷ் என்ற ஜெர்மன் தளகர்த்தர், ஹிட்லரிடம் மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே தற்காப்பு ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று சொன்னதை ஹிட்லர் செவி கொடுத்துக் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக கீடல் என்பவனின் வார்த்தைப்படிக்கு மாஸ்கோவை நோக்கிச் சென்றான். மாரிகாலம் வருவதற்குள் அதிசீக்கிரத்தில் மாஸ்கோவைப் பிடித்துவிடலாமென்றும் நினைத்தான். ஆனால் ஏராள துருப்புகளைத் தான் காவு கொடுத்தான். மாரிகாலம் வந்தது. ஜெர்மன் சைனியமும் சின்னபின்னமாகச் சிதறி, முஸ்தீப்பு குறைந்து, ஒற்றுமை கலைந்து பின் வாங்கிக் கொண்டே வரவேண்டியதாயிற்று. காபந்துள்ள இடம் கிடைக்கவில்லை. ஆகவே 1812-ல் நெபோலியனுடைய கதிதான் இவனுக்கும் நேர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. பின் வாங்கிய விஷயத்தில் இருவருக்கும் ஒற்றுமைதான். ஹிட்லரைவிட நெபோலியன் அதிகதூரம் பின் வாங்கியிருக்கலாம். ஆனால் ராணுவம் சம்பந்தப்பட்ட வரையில் பின்வாங்கியது என்பது ஹிட்லருக்கு அவமானம் தான்.

வி வி வி வி வி வி வி

**நிலைமை நெருக்கடியானது.** "மாரிகாலத்தில் தப்பிவிட்டாலும் மேலும் மேலும் வரும் ருஷ்யச் சைனியங்களைப் பார்த்து ஹிட்லருக்கு பயமுண்டாகியிருக்கிறது." ஆகலால் ருஷ்ய முன்னேற்றத்தை எவ்வாறு தடுப்பதென்றும் கவலை கொண்டிருக்கிறான். ஜெர்மனி பெரிதும் ஒருக்கால் ருஷ்யர்கள் பாய்ந்துவிடுவார்களோவென்றும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறான். அப்படி ஜெர்மனிக்கு அருகில் வராமல் தூரத்திலேயே தடுக்க ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது.

இந்த இரண்டரை மாத காலமாக ருஷ்யர்கள் கடுமையாகச் செய்துவரும் குறுக்கு எதிர்ப்புகளின் பயனாக ஜெர்மனி விரட்டப்படுகிறது என்று தெரிய வருகிறது. அது எப்படி சாத்தியமாயிருந்தது என்று கவனிப்போம்.

வி வி வி வி வி வி வி

**மூன்று கட்டங்கள்.** ருஷ்யாவின் கேந்திர ஸ்தானங்களில் ஜெர்மன் படை ஏற்படாமலும், மாரிகாலத்தில் ஜெர்மானியர் தங்குவதற்கென்று ஏற்பாடு செய்திருந்த இடங்களிலிருந்து விரட்டுவதும், இதுவரை ஜெர்மானியர் பிடித்த இடங்களிலிருந்தும் விரட்டியடிக்கவும் ஆக மூன்று திட்டங்களை ருஷ்யர்கள் போட்டு நடத்திவந்தனர். முதல் கட்டத்தில் டிக்வினைப்பிடித்து லெனின்கிராட் விடுவிக்கப்பட்டது. கலினின், மொஜெய்ஸ்க், கலூகா முதலியவைகளைப்பிடித்து மாஸ்கோ வசப்படுத்தப்பட்டது. அஸாவ் கடலை நோக்கி டிமோஷென்கோ முன்னேறி ரோஸ்டவ்வையும் பிடித்தான். இரண்டாவது கட்டத்தில், யந்திரப்படைக்குப் பதிலாக குதிரைப் படைகள் உபயோகிக்கப்பட்டு பனிக்கட்டி மேல் சஞ்சரித்துக்கொண்டு, மாரிகாலத்தில் தங்க ஏற்பாடு செய்திருந்த ஜெர்மன் சைனியங்கள் பலவிதமாகத் தாக்கப்பட்டன. இதன் பயனாக ஜெர்மன் படைகள் பின் வாங்க நேர்ந்தது.



**கேந்திர ஸ்தானங்கள்.** தற்சமயம் மூன்றாவது கட்டம் நடந்து வருகிறது. பல ரயில்வே ஜங்ஷன்களைச் சுற்றியே போர் நடந்துவருகிறது. ஷ்லூஸல்பர்க், நோவோகிராட், ஸ்டாராயா ரூஸா, ர்ஷெவ், வியாஸ்மா, ஸ்மொலென்ஸ்க், பிரயான்ஸ்க், ஓரெல், குர்ஸ்க், கார்கவ், டாகன்ராக், முதலிய இடங்களை நாஸிகள் பலப்படுத்திக்கொண்டும் போக்குவரவுகளை ஸ்தாபித்துக்கொண்டும் ஸ்திரமாக இருந்தார்கள். ஆனால் ருஷ்யர்கள் இந்த இடங்களைத்தான் தாக்கி வருகிறார்கள். இவைகளைப் பிளந்து விட்டால் ஜெர்மன் படைகள் ஓடவேண்டியதுதான்.

வி வி வி வி வி வி வி

**தற்போதைய நிலைமை.** ஜெர்மானியரின் ஸ்தானங்கள் இன்னும் தளரவில்லை. லெனின்கிராட்டைச் சுற்றிலும் ஜெர்மன் சைனியங்கள் இருக்கின்றன. ஸ்மொலென்ஸ்கில் ருஷ்யர் படையெடுப்பைத் தடுத்தும் வருகிறார்கள். டீபர் நதிக்கரையில் டீப்ரா பெட்ரோவ்ஸ்க் என்ற இடத்தையும், அஸாவ் கடலண்டையும், ஸெபாஸ்டோபூலைச் சுற்றியும் இன்னும் ஜெர்மன் படைகள் இருக்கின்றன.

ஆனால் இந்தப் படைகளைப் புதுப்பித்துக்கொண்டு வசந்த காலத்திலோ, கோடை காலத்திலோ தாக்குதல் செய்யப் போதுமா என்று யோசிப்போம்.

எப்படி இருந்தாலும் ஜெர்மன் நிலை மிகவும் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. இதுவே ஹிட்லருக்கு அதிகக் கவலையையுண்டாக்கி இருக்கிறது.

1. ஸ்டாராயா ரூஸாவைப்போல இதர இடங்களிலும் ஜெர்மன் ஸ்தானங்கள் சூழ்ந்து கொள்ளப்பட்டன.
2. ஸ்டாராயா ரூஸாவிலேயே 80,000 ஜெர்மனியர் இறந்தனர். இந்த விதம் மற்ற இடங்களிலும் நிகழ்ந்திருக்கிறது.
3. ஒரு சமயம் இரண்டு நாட்களில் 200 ஜெர்மன் விமானங்கள் சேதமாயின. இதைப்போல் ஜெர்மன் யுத்த தளவாடங்களும் அதிக சேதமாக்கப்பட்டது.
4. ஜெர்மன் ரிஸர்வ் படைகளும் அதிகம் நஷ்டமாயின.
5. வெளிநாட்டுத் துருப்புகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதால் ஜெர்மன் சைனியம் வெறும் செல்லிக்காய் மூட்டையாக இருக்கிறது.
6. அடிமைகளைப்போல் நடத்தப்படுவதால் ஜெர்மன் சைனியத்திலுள்ளோரின் நடத்தையை நம்ப முடியாது.
7. ஆங்காங்கு ரகஸிய சூழ்ச்சிகள் ஹிட்லரைக் கொலைத்து வருகின்றன.
8. ஆக்கிரமித்த நாடுகளில் ஏற்படும் கலகங்களை ஜெர்மன் சைனியங்களைக்கொண்டு அடக்க வேண்டியிருக்கிறது.
9. ஜெர்மன் யுத்த முயற்சியை பிரிடிஷ் விமானங்கள் கெடுத்து வருகின்றன.
10. அலைமேல் அலையாக ருஷ்யச் சைனியங்கள் போர்முனைக்கு வருகின்றன. இவ்வளவு காரணங்களைக்கொண்டு ஹிட்லர் பீதியடைந்திருக்கிறான்.

வி வி வி வி வி வி வி

**மத்தியக் கிழக்கு யுத்தம்.** சொல்லும் ஜோஸியங்களெல்லாம் பலிக்குமானால் ஜெர்மானியர் அடுத்த படியாக காகஸஸைத் தாக்கலாம். அதற்குள் ஜப்பானியர்களும் மத்தியக் கிழக்கை நோக்கி வந்தால் ஜெர்மானியரும், ஜப்பானியரும் நேருக்குநேர் சந்தித்துக் கொள்ளலாம். ஆனால் ஸ்டாராயா ரூஸா, ஸ்மாலென்ஸ்க் டானெட்ஸ் முதலிய இடங்களில் ருஷ்யர்களுக்கும் ஜெர்மானியருக்கும் நடக்கும் சண்டை வசந்த காலம் ஆரம்பிக்கும் வரை நடந்தால ஜெர்மன் சைனியங்கள் முன்னேற முடியாமல் தடைபட்டுவிடும். ருஷ்யா தற்போது மத்தியக் கிழக்கு போராங்கமாகவும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் ஓர் ஜீவநாடியாகவும் ஆகிவிட்டது.

**பரம்பரம்.** காப்டன் ஆலிவர் லிட்டில்டன் சொல்லும் விதமாக ஜெர்மன் துப்ட்வாபி விமானப் படையில் 1,700 விமானங்களையும், 20,000 லாரிகளேற்றப்பட்ட யுத்த சாமான்களும் 20,000 யந்திர வண்டிகளும், பல பான்ஸர் படைகளையும் ருஷ்யப் போர்முனையிலிருந்து பிரித்து ஜெர்மானியர் ஆபிரிக்காவிற்கு அனுப்ப வேண்டியதாயிற்று. ஏனென்றால் ஆஸின்லெக் ஆபிரிக்காவில் அச்சு நாடுகளுக்குச் சொந்தமான இடங்களைப் பிடிப்பதற்கு தாக்குதல்கள் செய்தான். இவ்விடம் ஜெர்மன் சைனியங்கள் இவ்விதம் பிரிந்துவிட்டதால் ருஷ்யர்கள் குறைக்கு எதிர்படச் செய்வதற்கு சாதகமாக இருந்தது.

வி வி வி வி வி வி வி

**கடைசியாக விளைந்த பயன்.** பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட நட்பின் பயனாக இவ்விரு நாடுகளுக்கும் ஏற்பட்ட சாதகம் எவ்வாறாகயிருந்தபோதிலும் எதிரிக்கு அதிக பாதகமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. லிட்வினவ் சொல்லும் விதமாக 'ருஷ்யாவை ஜெர்மனி படையெடுப்பதற்கு முன் ஜெர்மனி வசமுள்ள யுத்த தளவாடங்களோடு ஒன்பது மாத காலமாக ஜெர்மனி, பிரான்ஸ் ஸெக்கோஸ்லோவாகியா ஆஸ்திரியா இன்னும் ஆக்கிரமித்த நாடுகள், இவைகளில் உள்ள தொழிற்சாலைகளில் செய்யப்படும் சாமான்களையும், சேர்த்துக்கொண்டு ஜெர்மனி பலம் பெற்றிருந்தால், அதன் பலத்தை ஒருவராலும் கட்டிப்பிடித்திருக்கமுடியாது. ருஷ்ய யுத்தம் ஆரம்பித்ததோ ஜெர்மன் பலம் குறைந்தது.

வி வி வி வி வி வி வி

**பொய் சொல்லும் தலைவன்.** ஜெர்மன் சைனியங்கள் முறிவதோடு ஜெர்மானியரின் மனதிலும் ஹிட்லரிடத்தில் நம்பிக்கை குறைந்துவருகிறது. 'எப்பொழுதும் வெற்றியே கிடைத்துக்கொண்டிருக்காது. தோல்வியும் நேரும்' என்று ஜெர்மன் மக்கள் அறிந்துகொண்டார்கள். மாஸ்கோவைச் சீக்கிரத்தில் பிடித்து ருஷ்ய யுத்தத்தை முடித்துவிடுவதாக ஹிட்லர் சொன்னது வீண் பொய் என்று இப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரியவருகிறது.

வி வி வி வி வி வி வி

**புயலுக்கு முன் அமைதி.** இவ்வாரத்தில் விசேஷமான செய்திகள் ஒன்றும் இல்லாததால், இனிமேலாவது ஏதாவது தடபுடல் நடக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இரு கக்ஷியினரும் அடுத்து நடக்கப்போகும் சண்டைக்காக அதிக முஸ்தீப்பு செய்திருக்கிறார்கள். ஜப்பான் எங்கே அடுத்தபடியாகத் தாக்குமென்றும், அதற்கு எங்கே தோல்வி வருமென்றும் நிச்சயம் சொல்லமுடியவில்லையே என்று சென்ற வாரத்திய அறிக்கையிலேயே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். விளாடிவாஸ்டாக்கில் ருஷ்யர்கள் செய்து வைத்திருக்கும் முஸ்தீப்பினாலும், சமீபத்தில் சைனா தினம் பலம் அடைந்து வருவதாலும், இந்தியாவில் வேவல் தலைமை வகிப்பதாலும், ஆஸ்திரேலியாவில் மெக் ஆர்தர் சைனியங்களைப் பலப்படுத்திவருவதாலும், பஸிபிக்கில் அமெரிக்கக் கப்பற்படை நடமாடிவருவதாலும் ஜப்பானுடைய நிலைமை திருப்திகரமாயில்லை. தன்னைத் தற்காப்பு செய்துகொள்வதற்காகவே இந்தியாவையோ, ஆஸ்திரேலியாவையோ ஜப்பன் தாக்கவேண்டும். ஆனல் உலக ஆக்கிரமண ஆசை பறந்துவிட வேண்டியதுதான். ஏனென்றால் நேசநாடுகள் இந்தியாவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் முன்னேறிப் போராடத்தி ஜப்பானை வந்த வழியே திரும்பி ஓடும்படி விரட்டியடிப்பார்கள்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்ய-ஜப்பானிய சம்பந்தம்.** ருஷ்யாவை ஒருக்கால் ஜப்பான் தாக்கக்கூடும் என்ற வார்த்தை வீண் புரளியாகாது. மாஸ்கோவிலிருந்த ஜப்பானிய ஸ்தானிகர் டாடாகாவாவிற்குப் பதிலாக ஸாடோ நியமிக்கப்பட்டிருக்கிறான். கொரியாவிலிருந்து மினமியும், மஞ்சுகோவிலிருந்து

சாங் ஷிக் ஹையும் திரும்பியதால், ருஷ்யா பேரில் ஜப்பானியர் போர்தொடுக்க லாம் என்பதற்கு ஹேஷ்யம் இருக்கிறது. மேலும் மஞ்சுகோவில் புதிய விமான தளங்கள் கட்டப்படுகின்றன. ஷாங்டங்கிற்கு தென்மேற்கில் மறுபடி யுத்தம் துவக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக்கொண்டும் ருஷ்யா பேரில் ஜப்பான் தாக்குதல் நேரிடும் என்றும் சொல்லாம். ருஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் ஏற்பட்ட அனாக்கிரமிப்பு ஒப்பந்தத்தை டாடாகாதான் கையெழுத்து செய்து முடித்தான். அப்போப்பட்டவனை திரும்ப ஜப்பான் அழைத்துவிட்டதால் ஜப்பானிய முறைகளில் ஏதோ மாறுதல் இருக்கிறதென்று தெரியவருகிறது. முன்பு ஜப்பான் குருஸூவை அமெரிக்காவிற்கு அனுப்பியதும் சண்டை ஆரம்பமாயிற்று. அதைப் போல் ஸாடோவை ருஷ்யாவிற்கு அனுப்பியதிலிருந்து ஏதோ நிலைமையில் மாறுதல் ஏற்படலாமென்று சொல்லலாம்.

மேலும் தூரக்கிழக்கில் ருஷ்யர்கள் செய்யும் ஏற்பாடும் இதையேதான் தெரிவிக்கின்றன. விளாடிவாஸ்டாக், நிகலயவ்ஸ்க் முதலிய இடங்களைக் காபந்து செய்திருப்பதோடு ஸைபீரிய சைனியத்தை 30 லக்ஷத்திற்கு அதிகப்படுத்தியிருக்கிறது. ஜப்பானிய சைனியம் 10 லக்ஷம்தானிருக்கிறது. ஸைபீரிய இருப்புப் பாதைக்குப் பின்னுடி மற்றொரு இருப்புப்பாதையும் போடப்பட்டிருக்கிறது. கம்சர்காவையும் அலாஸ்கையும் அலூஷியன் தீவுகள் வழியாக விமான மூலம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஜப்பானை ஹிட்லர் தூண்டிவிட்டு ருஷ்யாவைத் தாக்கச் சொல்லி அதனால் தனக்கு ஒரு சாதகத்தையும் விரும்பியிருக்கிறான். ஆனல் தானெடுத்த காரியம் ஒன்றும் முடிவடையாதலால் ஜப்பான் இவ்விஷயத்தில் கொஞ்சம் தயக்கமாகத் தானிருக்கும். மேலும் பிரிடனையும், அமெரிக்காவையும் கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மனி தாக்கி வருவதைத்தான் ஜப்பான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஜெர்மனியின் முழுவெற்றியையோ, முழுத்தோல்வியையோ ஜப்பான் விரும்பவில்லை. இதே விதமாக ஜப்பானியரையும் மனப்பூர்வமாக ஹிட்லர் விரும்பவில்லை. ஜப்பானியரை அதிகமாகத் தலைதூக்க விட்டுவிட்டால் பெரிய ஆபத்தென்றே ஹிட்லர் கருதுகிறான். ஜப்பானுக்கு எதிராக சைனாவைத் தூக்கிவிட வேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் ஜெர்மனியிலும் ஒரு கக்ஷியிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஆஸ்திரேலியா.** ஆஸ்திரேலியாவில் நேசநாடுகள் பலமடையாமலிருப்பதற்காக ஜப்பான் ஆஸ்திரேலியாவை நோக்கி அடுத்த படியாக பாயக்கூடுமென்றும் சொல்லலாம். டிமோர், டார்வின், விண்டாம், ப்ரூம், தீவையும், நியூ கினி தீவையும் ஆக்கிரமித்துக்கொண்டு முதலிய இடங்களில் ஜப்பானியர் விமானப்படையெடுப்பு செய்வதிலிருந்தும் இவ் விஷயம் ஊர்ஜிதமாகிறது.

வி வி வி வி வி வி

**சமாதானம்.** யுத்தம் ஆரம்பித்து இரண்டு வருஷங்களான பிறகுதான் பிடித்த நாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், வசந்த காலத்தில் தாக்குதலை ஆரம்பிக்க முஸ்தீப்பு செய்துகொள்வதற்கும், ஹிட்லர் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தான். அதைப்போல் ஜப்பானும் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறது. சைனாவிற்கு பாதி ஸ்வதந்திரம் கொடுத்து விடுவதாக தாராளமாக வாய்விட்டுச் சொல்லும், உண்மையில் அடிமையாகவே தான் வைத்துக்கொள்ளும். அமெரிக்காவும், பிரிடனும் பஸிபிக்கிலிருந்து தங்கள் படைகளை அழைத்துச் சென்று ஹிட்லருக்கு எதிராக உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்றும் சொல்லும். ஆனல் நேசநாடுகள் இதற்கெல்லாம் ஏமாந்து விடமாட்டார்கள். இதற்கிணங்கினல் முன்பு [illegible]

**சைனாவும், ஜப்பானும்.** சைனாவுக்கு ஜப்பான் ஒரு காலும் நன்மையைச் செய்யாது. சைனா, மஞ்சுகோ, கங்கிங், இந்தோ-சைனா முதலிய இடங்களிலிருந்து ஒரு காலும் வெளியேறாது. இவ்விஷயத்தை நவம்பர் மாதத்திலேயே ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொல்லியிருக்கிறார். டானகா புஸ்தகத்திலும் இவ்விஷயம் காணப்பட்டிருக்கிறது. "ஆசியா பூராவையும் வசப்படுத்திக்கொள்ள சைனாவை முதலில் வசப்படுத்திக்கொள்ளவேண்டும்," பொது க்ஷேம திட்டம், ஜப்பானிய சக்ரவர்த்தி தான் மேலானவன் என்ற கொள்கையின் படி சைனாவை ஜப்பான் விட்டுவிடாது.

வி வி வி வி வி வி வி

**ஹிமாலயா ரேடியோ.** "இந்திய ஸ்வதந்திர ரேடியோ நிலயம்" என்ற பெயருடன் ரோமில் ஒரு நிலயம் இருப்பதாக சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதிலிருந்து வரும் செய்திகளைக் கேட்டால் அவை இந்தியாவைப் பற்றியுமல்ல, ஸ்வதந்திரத்தைப் பற்றியுமல்ல. ஆனால் கோயபல்ஸின் பிரசாரமே இதாலியர்கள் மூலமாகச் செய்யப்படுகிறது. ஹிமாலயா என்ற நிலயமும் இதைப்போல் எதிரிகளால் தயார் செய்யப்பட்டது தான்.

வி வி வி வி வி வி வி

**அஸாத் ஹிண்ட் (Azad Hind).** இந்தப் பெயருடன் பெர்லினில் ஒரு நிலயம் இருப்பது சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. மார்ச்சு மாதம் 1உ பெர்லின் ரேடியோவில் ஹிந்துஸ்தானி பாஷையில் ஒலிபரப்பும் போது "நேற்றுமாலை 5 மணிக்கு (பெர்லின் மணிப்படி) சுபாஷ் சந்திர போஸ், ஏதோ அடையாளம் தெரியாத ரேடியோ நிலயத்திலிருந்து பேசியதைக் கேட்டோம்" என்று சொல்லப்பட்டது. ஆனால் பிப்ரவரி 23-ல பெர்லினில் டாமெய் நிருபருக்கு போஸ் பேட்டி அளித்ததாகவும், ஒரு ஐரோப்பிய ரேடியோ நிலயம் மூலமாக போஸ் பேசியதாகவும் ஜப்பான் ரேடியோ கூறிற்று.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டு துர்ப்பாஷை.** அச்சுநாட்டினரின் அப்பியாச பேச்சிற்கு உதாரணங்கள்.

1. "காந்தி பெரும் குற்றவாளி" (இதாலிய ஒலிபரப்பு ஜனவரி 6, 1942)

2. "பண்டித ஜவஹர்லால் நேருவின் முயற்சி பயன்படவில்லை. அவர் ஆங்கில-அமெரிக்க நாடுகளின் பணக்கார ஆட்சியின் பொதுவுடமைக் கூலியின் ஏஜெண்டு என்று கண்டுகொள்ளப்பட்டது. (ஜெர்மன் ஒலிபரப்பு பிப்ரவரி 25, 1942).

3. "சிகந்தர் ஹயக் தான் போன்ற துரோகிகள்" (ரோம் ஏப்ரல் 24, 1942)

4. "ஸர் தேஜ் பஹதூர் ஸப்ரூவைப்போன்ற உபயோகமற்ற மனிதர்கள் (ஜனவரி 5, 1942)

5. "எம். என். ராய், இந்திய மன்னர்களைப்போன்ற துரோகிகள்" (மார்ச்சு 6, 1942).

6. "பாட்டியாலா மஹாராஜா பேரிலும் அவன் குடும்பத்தின் பேரிலும் கடவுள் சாபம் பேடுக" (ஜனவரி 6, 1942).

வி வி வி வி வி வி வி

**தற்காலத்தில் இந்தியா (Gendai Indoron).** இந்த தலைப்புடன் ஜப்பான் ஒரு புஸ்தகத்தை பிரசுரித்திருக்கிறது. இது டக்ஷாஷி இடோ என்பவரால் எழுதப்பட்டு சென்ற சண்டை காலத்திலேயே பிரசுரிக்கப்பட்டது. இதில் ஜப்பானியர் இந்தியர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது [illegible] இது [illegible] இவர்



**இனிய சொற்கள்.** இந்தியர்களுடைய அனுதாபத்தையும், ஒத்துழைப்பையும் ஜப்பான் சம்பாதித்த விதம் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. தண்டோபாயத்திற்குப் பதிலாக ஸாமோபாயத்தையே ஜப்பான் உபயோகிப்பதால் இந்தியர்கள் தாங்களாகவே மனப்பூர்வமாக ஜப்பானிய நடத்தைகளை ஆச்சரியத்துடன் அங்கீகரிப்பார்களாம். இந்தியர் உள்பட யாவருக்கும் பொது க்ஷேமம் கொடுப்பதாக ஜப்பானியர் உறுதி கொடுப்பார்கள். ஆனால் செய்யத்தான் மாட்டார்கள். இந்தியவைப்பற்றி மிஸ்டர் இடோ சொல்லுவதாவது. "ஒரு புழுவும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எதிரியைக் கடிக்கும்". (இது ஒரு நல்ல அபிப்பிராயம் தான்). மேலும் அவன் சொல்லுவதாவது:, "எவ்வளவு கீழ்ப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களிடத்தில் அதிகாரதோரணையில் நடந்துகொண்டால் அவர்களுக்குக் கோபம் வரத்தான் வரும்!" இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது சைனாவில் குண்டு முதலியவை களைப்போட்டு அழித்தமாதிரி தான் இந்தியா விஷயத்திலும் ஜப்பானியர் நடந்துகொள்ளுவார்கள்.

சுமார் 400 வருஷங்களுக்கு முன்னதாகவே கவுண்டு ஒகுமா என்பவன் ஜப்பானுடைய ஆசைகளைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கிறான். அதாவது 30,00,00,000 இந்தியர்களும் தாங்கள் ஸ்வதந்திரம் பெறுவதற்காக ஜப்பானியரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான். பின்பு 1591-ல் ஹிடியோஷி என்பவன் ஜப்பானியரின் ஆட்சிக்குள் இந்தியாவை உட்படுத்துவது தெய்வ ஸங்கல்பமாகும் என்றும் சொல்லியிருக்கிறான். தற்சமயம் இடோ இவ்வித அபிப்பிராயங்களை மிருதுவான சொற்களால் சொல்லுகிறான்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவின் மறு மொழிகள்.** மேன்மை தங்கிய வைஸிராயாலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பிரிடிஷ் பிரதம மந்திரி சொல்லுகிறார்:—"நம்மைப் பற்றி எதிரிகள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்?" இதுவரை நம்மைப்பற்றி எதிரிகள் தெரிந்து கொள்ளவிட்டால் இந்தியா எவ்வித மனிதர்களை உண்டுபண்ணுகிறதென்பதை இனியாவது தெரிந்துகொள்ளட்டும். இந்தியாவில் ஏராள விளைபொருள்கள் இருக்கின்றன. இந்தியாவிற்கு பெரும் நாடுகள் உதவியளிக்கின்றன. இந்தியத் துருப்புகளுக்குப் பெரும் தலைவர் இருக்கிறார். இந்திய மக்கள் ராஜவிசுவாஸம், தைரியம், பொருந்திய மேலான பரம்பரையைச் சேர்ந்தவர்கள்!"

## பொது க்ஷேமத்தின்படி நடக்கிறவைகள்.

### நான்கிங்கில் நடந்த கொலைப்பந்தயம்.

1937 டிஸம்பர் 7-ல் அமெரிக்கர்களுக்குச் சொந்தமான ஜப்பான் அட்வர்டைஸர் என்ற தினசரிப் பத்திரிகையில் சண்டையை நிறுத்திய சிப்பாய்களிடத்தில் ஜப்பானியர்களுக்குள்ள மனப்பான்மையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

**உதவி தளகர்த்தர்களில் யார் முதலில் 100 சீனர்களை வெட்டிச் சாய்க்க முடியும்.** டோஷியக் முகாய், டகேஷி நோடா என்ற இரு உதவி தளகர்த்தர்கள் ஒரு பந்தயம் போட்டுக்கொண்டார்கள். அதாவது ஜப்பானியப்படை நான்கிங் நகரைப்பூராவியா பிடித்துக்கொள்வதற்குமுன் கையில் கத்தி யேந்தி, முதலில் யார் 100 சீனர்களை வெட்டி சாய்க்க முடியும் என்று போட்டி போட்டுக்கொண்டு புறப்பட்டார்கள். முகாய் 89 பேர்களையும், நோடா 78 பேர்களையும் தான் வெட்ட முடிந்தது.

**கத்தியை நீட்டிக் கொண்டே சென்றால் யார் முதலில் 100 சீனர்களை வெட்ட முடியும்.**

யாமடோ கத்தியை உபயோகித்து முதலில் யார் 100 சீனர்களை வெட்ட முடியும் என்ற பந்தயத்தில் யார் ஜயித்தது என்ற விவரம் தீர்த்தாரணம் செய்யப்படவில்லை என்று நிசி நிசி பத்திரிகை சொல்கிறது. முகாய் 106 பேர்களையும், நோடா 105 பேர்களையும் கொன்றார்களாம். ஆனால் முதலில் யார் 100 பேர்களைக் கொன்றது என்ற விவரம் கண்டு பிடிக்கப்படவில்லையாம். ஆகவே லக்ஷியத்தை 150 என்று வைத்துக்கொண்டு மறுபடி பந்தயம் துவக்கப்படும்.

(இப்பந்தயத்தில் முகாயின் கத்தி முறிந்தது. ஏனென்றால் ஒரு சீனனுடைய தலையில் இருந்த இரும்புக்குல்லாயில் வெட்டுப்பட்டதாம். இந்தப் பந்தயம் வேடிக்கையாக இருந்ததாம். ஏனென்றால் மற்றவன் 100 பேர்களைக்கொன்ற விவரம் தெரியாமல் இருவரும் 100 பேர்களுக்கு மேலே கொன்று கொண்டே போனார்களாம்.)

---

## ஜெர்மானியர் பேரில் ருஷ்யர்களுக்குள்ள வெறுப்பு.
## மீண்டும் சண்டை செய்ய உணர்ச்சி.
## ருஷ்யாவில் ஜெர்மன் அட்டூழியங்கள்.

(அமெரிக்கப் பத்திரிகாசிரியர் நேக்லி பார்ஸன் என்பவர் டெய்லி மெயில் பத்திரிகையில் எழுதியது).

சமீபத்தில் ருஷ்யர்கள் தீவிரப் போர் நடத்தி ஜெர்மானியரிடமிருந்து சில கிராமங்களையும், நகரங்களையும் பிடித்தனர். இவ்விதம் விடுவிக்கப்பட்ட இடங்களைப் போய்ப் பார்த்தால் ஜெர்மானியர்கள் செய்திருக்கும் அக்கிரமச் செய்கைகள் தெரியவருகின்றன. ருஷ்யர்கள் அவ்வித கொடுமைகளைப் பார்த்துத் தாங்காத கோபமடைந்து எப்பாடுபட்டாவது ஜெர்மானியரை எதிர்த்து சண்டை செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்து, வெள்ளை ருஷ்யா (White Russia)வில் இருந்து துரத்தியடிக்கின்றனர். நான் பிப்ரவரி 17-ம்தேதி லோடோஷினோ என்ற ஜில்லாவிற்குப் போயிருந்தேன். இது மாஸ்கோவிற்கு 100 மைல் வடமேற்கில் இருக்கிறது. முன்பு இது மிகவும் செழிப்பான பிரதேசமாக இருந்தது. அந்த இடத்தில் தற்சமயத்தில் தூக்கு மரங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. ஜெர்மானியர் அவைகளில் எட்டு உத்தியோகஸ்தர்களைக் கொலை செய்திருக்கிறார்கள். பிறகு 26 வயதுள்ள டாடியானா பெஷ்கோவட்ஸ்காயா என்ற ஸ்திரீ வைத்தியரையும் பார்த்தேன். ஜெர்மானியரால் கைதி செய்யப்பட்டு அடித்துத் தொந்தரவு செய்யப்பட்ட வாலன்டைன் என்ற பெயருள்ள 15 வயதுள்ள ஒரு பையனையும் பார்த்தேன். அவனுடைய தாயாரும் சகோதரியும், கொலை செய்யப்படுவதற்காக இழுத்துச் செல்லப்பட்டார்கள். மற்றொருவனையும் பார்த்தேன். இவனுடைய குடும்பத்திலுள்ளோர் யாவரும் கொல்லப்பட்டு 1½ வருஷக் குழந்தையும் ஜெர்மானியரால் பனியில் போடப்பட்டு இறந்ததாம். பிறகு கவலையில் ஆழ்ந்த சில கூட்டத்தார்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். இவர்களை ஜெர்மானியர் (Partisans) விரோதமாக கக்ஷி கட்டுகிறவர்கள் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இவர்கள் இரண்டு மாத காலமாக காடுகளில் குழிகளை வெட்டிக்கொண்டு மறைந்திருந்து ஜெர்மானியர் பேரில் கொரில்லாத் தாக்குதல்கள் செய்துவந்தனர். இவர்களுடைய நிலை தான் மிகப் பரிதாபகரமாயிருந்தது. இவர்களிடமிருந்து கதைகளைக் கேட்டும் இவர்களுடைய தின நிலையையும் பார்த்த பிறகுதான் ருஷ்யர்கள் சொல்லுவதெல்லாம் உண்மையென்று தெரியவந்தது. அவர்கள் சொல்லுவதா [illegible] இலவியெல்லாம் உண்மை. [illegible] [illegible] எனக்கு என்ன [illegible]"



### பயங்கரமான பிரதேசம்.

லோடோஷினோ பிரதேசத்தைத்தான் யாவரும் மிகக் கடுமையாக வர்ணிக்கின்றனர். ஜனவரி மாதத்தில் இங்கிருந்து தான் ஜெர்மானியர் கடைசியாக விரட்டப்பட்டார்கள். அப்பிரதேசத்தை விட்டு ஓடும்போது ஜெர்மானியர் 994 உத்தியோகஸ்தர்களைத் துரத்தியடித்தார்கள். இதில் 507 பேர்களைச் சுட்டுத் தள்ளினர். மிகுலினோகோரோடிஷ் என்ற கிராமத்தில் ஒரு ஜெயிலில் ஏராள ருஷ்யர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களை அப்படியே புகையை விட்டுக் கொல்லுவதென ஜெர்மானியர் யோசித்தனர். அது சாத்தியமில்லையென்று நினைத்து எட்டு, பத்துப் பேர்களாக வெளியே அழைத்து வந்து சுட்டுத் தள்ளினார்கள். 153 ஆபீஸர்களை துன்புறுத்தியே கொன்றனர். சிலரை 40° பனியில் தள்ளி விரைத்துச்சாகும்படி செய்தனர். 32,000 பேர்கள் வசித்து வந்த இவ்வூரில் 25,000 பேர்கள் உயிருடன் இல்லை. 1,000 பேர்களைக் கொன்று விட்டதாக ஜெர்மானியர் சொல்லுகின்றனர். பாக்கி 6,000 பேருடைய கதி என்னவாயிற்றென்று தெரியவில்லை. இதில் லோடோஷினோவைச் சார்ந்த 1,500 பேர்களும் அடங்கி இருக்கிறார்கள்.

### அடையாளத்திற்காகத் தூக்குமரங்கள்.

லோடோஷினோவில் தப்பிப் பிழைத்திருக்கும் சில உத்தியோகஸ்தர்களைக் கண்டு பேசினேன். எலிகள் வளைக்குள் வசிப்பது போல இடிந்து கிடக்கும் தங்கள் வீடுகளில் இவர்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். ஏற்கனவே இந்தப் பட்டணம் விவசாய மூக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. யாவற்றையும் ஜெர்மானியர் அழித்திருக்கிறார்கள். அதன் நடுவில் உயரமான தூக்குமரம் ஒன்று நடப்பட்டிருந்தது. அதில் 5 தூக்குக் கம்பிகள் தொங்கிக்கொண்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் பூமிக்குள் ஒரு சுரங்கத்திற்குள்தான் நான் முன் சொல்லிய டாடியானா பெஸ்கோவட்ஸ்காயா வசித்துக் கொண்டிருந்தாள். அவ்விடத்தில் தூக்கிடும் சம்பவங்களைப் பார்த்ததுண்டா என்று அவளைக் கேட்டேன்.

"ஆகா" என்று கைகளைப் பிடித்துக்கொண்டு பதில் சொன்னாள். "பார்ப்பதற்கு பயமாக இருந்தது. இருந்தாலும் பார்த்தேன். ஒரே ஆளை மூன்று தடவை தூக்கிடநேர்ந்தது" என்றாள்.

"உன்னை எதற்காக தண்டித்தார்கள்" என்றேன். "அது எனக்குத்தெரியாது" என்றாள். ஒருக்கால் ஜெர்மானியரைப் பார்த்துவிட்டு ஓடியிருக்கலாம். இரண்டு பீப்பாய் ஓடுகிறவர்களைத்தான் ஜெர்மானியர் பிடித்துத் தண்டிப்பது. கஞக்கு நடுவில் ஒரு பலகையைப் போட்டு அதன் மேல் இவளைப் போட்டு உருட்டி விட்டார்கள். தான் ஒரு கக்ஷியையும் சேர்ந்தவளல்லவென்று எடுத்துச் சொல்லுவதை ஜெர்மானியர் கேட்கவில்லை. தனக்கு ஒரு குழந்தையிருக்கிறதென்றும் அந்தக் குழந்தையை உத்தேசித்துத்தான் பிழைத்திருக்கவேண்டுமென்றும் சொன்னாள். ஒன்றையும் அவர்கள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஆனால் அப்படிச் செய்ய வஸ்திரத்தைப் பிரித்துவிடுவதாக பயமுறுத்தினார்கள். தொங்கிக்கொண்டிருந்தாளாம். வில்லை. ஒரு மாதகாலம் அந்தத் தூக்குமரத்திலேயே

### 17 வயதுப் பையன் தூக்கிடப்பட்டான்.

லோடோஷினுன் நகரத்தின் நடுவில நாச்சந்தியில் ஒரு தந்திக் கம்பம் நிறுத்தப்பட்டிருந்தது. அதில் 17 வயதுப் பையனைத் தொங்கவிட்டிருந்தார்கள். "எதற்காக" என்று விசாரித்தேன்.

"ஏதோ கொஞ்சம் மயக்க வஸ்துவைக் குடித்து விட்டு விபரீதமாக நடந்து கொண்டிருக்கலாம். அதற்காக அவனை ஜெர்மானியர் தூக்கிட்டிருக்கிறார்கள்.

"ஒரே மனிதனை மூன்று தடவை தூக்கிட்டதாக முன்பு சொன்னேமே அதற்குக் காரணமென்னவென்றால் அவனைத் தூக்கிட்ட கயறு தளர்ந்துபோய் விட்டதாம். அவன் லோடோஷினோவில் சாராயக்கிடங்கில் வேலை செய்து கொண்டிருக்கும்போது தலைமையதிகாரியை அவமதித்துப் பேசினனும்."

இவ்விதமாக, நவம்பர், டிஸம்பர் மாதங்களில் ஜெர்மானியர் யாவரையும் தூக்கிட்டுப் பொதுமக்களைப் பயமுறுத்த நினைத்தனர். அதற்காகவே தூக்கு மரங்களில் சவங்களைத் தொங்கவிட்டு வைத்தனர். இவ்வளவு கொடூரச் செய்கைகளில் முன் சொன்ன ஸ்திரீ வைத்தியரையும், 17 வயதுப் பையனையும் தூக்கிட்ட விஷயம் மிகவும் கொடுமையானது. மேலும் 13 பேர்களை உயிருடனேயே கொளுத்தினார்கள். இதில் 5 பேர்கள் விளாஸோவோ கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 55 முதல் 71 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களை ஜெர்மானியர் மரத்தில் கட்டிவைத்துத் துப்பாக்கியால் சுட்டார்கள். ஆனால் சாகவில்லை. உடனே அவிழ்த்து நெருப்பில் போட்டுக் கொன்றார்கள். இவ்விதம சித்திரவதை செய்வதற்குக் காரணமென்னவென்றால் இவர்களுடைய வீட்டுவாசலில் இரண்டு ஜெர்மன் ஆபீஸர்கள் இறந்து கிடந்தார்களாம். அந்த ஜெர்மன் ஆபீஸர்களைக் கொன்றது இவர்கள்தானென்று சொல்லி ஜெர்மானியர் இவர்களைத் துன்புறுத்தினார்கள். உண்மையில் அந்த 2 ஜெர்மன் ஆபீஸர்களையும் ருஷ்யச் சிப்பாய்கள் கொன்றுபோட்டுப்போயிருக்கிறார்கள். உண்மையானதையும் ஜெர்மானியர் செவி கொடுத்துக் கேட்கமாட்டார்கள்.

### வாலன்டைன்.

இவ்விதமாகப் பல இடங்களில் ஜெர்மானியர் செய்த அக்கிரமங்களை கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் இருக்கிறேன். ஆனால் மலேயிவோ என்ற கிராமத்தைச் சேர்ந்த வாலன்டைன் பிஷ்கௌ என்பவனைப் பற்றிய கதை மிகப் பரிதாபகரமானது. இக்கிராமத்தில் இருந்தவர்களை ஜெர்மானியர் அழைத்துச் சென்றபோது வாலன்டைனையும் கூட்டிச் சென்றார்கள். பிறகு ஒரு களஞ்சியத்தில் அடைத்து வைத்திருந்தனர். ஆனால் மிகவும் சிறுவர்களாக இருந்ததால் இவனையும் மற்றும் இரண்டு பையன்களையும் விரட்டிவிட்டார்கள். வாலன்டைன், ஷாப்கோவோ என்ற கிராமத்திற்கு ஓடி ஒரு மாதகாலமாக, தரைப்பெட்டியிலடைக்கப்பட்ட உருளைக்கிழங்கைத் தின்றுகொண்டு பிழைத்திருந்தான். அந்த சமயத்தில்தான் நான் அவனைப் பார்த்தது. என்னைப் பார்த்ததும் உரக்க அழ ஆரம்பித்தான்.

அதே ஷாப்கோவோ கிராமத்தில் ஒரு மர வீட்டினுள் ஒரு தலைமைக் குடியானவனும் அழுதுகொண்டிருந்தான். அந்த நிலைமையைப் பார்த்துவிட்டு என்னுடன்கூட வந்தவர்களுக்கு, சகிக்காமல் அதிக துக்கமும் கோபமும் வந்தது. அதைத் அடக்கிக்கொண்டார்கள். வாலன்டைனுடைய தாயாரையும் சகோதரியையும் ஜெர்மானியர் கொலை செய்வதற்காக இழுத்துச் சென்ற கதையைப் பின்னுடி ஒருவர் எங்களுக்குச் சொன்னார். இக்கதையைச் சொன்னவருடைய குடும்பத்தில் ஆறுபேர்கள் கொல்லப்பட்டனராம். இவ்விதமாகச் சொல்லப்படும் கதைகளிலிருந்து ஜெர்மானியரின் செய்கைகள் நன்றாகத் தெரியவருகின்றன. ஒரு கிராமத்தில் புகுந்ததும் அங்குள்ளவர்களின் துணிமணிகளைப் பிடுங்கிக்கொண்டு பனியில் தள்ளி விறைக்கும்படியோ வேறு விதமாகவோ கஷ்டத்துக்குள்ளாக்குகிறார்கள். சரீர திடம் பொருந்தியவர்களைக் கட்டாய வேலை செய்யும்படி கஷ்டத்திற்குள்ளாக்குகிறார்கள்.

### இரவில் வெளியே துரத்தப்பட்டனர்.

மலேயிவோ என்ற கிராமத்தைச் சேர்ந்த வாஸிடபிஸின் என்பவன், அந்த ஊருக்கு ஜெர்மானியர் வந்து விளைவித்த துன்பங்களைப் பற்றி ஸாங்கோபாங்கமாகச் சொன்னான். ஒருநாள் மாலையில் டபிஸின் மூன்று உருளைக்கிழங்குகளை உண்டதற்காக அவனையும், அவனது குடும்பத்தவர்களையும் ஜெர்மானியர் அடித்து இருட்டில் விரட்டினார்களாம் இவனுடைய தகப்பனாருக்கு 74 வயது, தாயாருக்கு 71 வயதும். தாயாருக்குக் கண்கள் தெரியாது. முதல் நாள் இரவிலேயே பனியில் விறைத்து 5 குழந்தைகள் இறந்தன. டபிஸினும் அவருடைய மனைவியும் இரு குழந்தைகளை எடுத்துச் சென்றார்கள். மறுநாள் இக்குழந்தைகளும் இறந்தன. இப்படி தெருக்களில் ஓடும் ருஷ்யர்களைக் கம்பிவேலிக்குள் அடைத்து துப்பாக்கியால் சுட்டார்கள். மோட்டார்களை மேலேற்றிக் கொன்றார்கள்.



டபிஸினின் கண் முன்பாகவே அவனது மனைவியும், ஒரு பெண்குழந்தையும் இறந்தனர். இவ்வித கதையைச் சொல்லும்போது டபிஸினுக்குத் துக்கம் தாங்கவில்லை. இனிமேல் அவனுக்கு உலகத்தில் வேறு துக்கப்படவேண்டியது ஒன்றும் பாக்கியில்லை.

ஒரு ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்த 500 பேர்களை ஸ்டவ் அடுப்பிலிருந்து புகையைக் கிளப்பிவிட்டு மூச்சு விடமுடியாமல் செய்து கொல்ல முயற்சித்தனர். காற்று வேண்டுமென்று சில கைதிகள் கண்ணாடிக் கதவுகளை உடைத்தனர். பிறகு 275 பேர்களை வெளியே அழைத்துவந்து துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினார்களாம்.

நான் அங்கே இருக்கும்போது, முன்பு மாஸ்கோ நகர சபைத் தலைவர் சொன்னது சரியென்று நினைத்துக்கொண்டேன் :—

“ஜெர்மானியர் செய்த அட்டூழியங்களைப் பார்க்கும்போது அவர்கள் மேல் எங்களுக்குத் தீராத வெறுப்புதான் அதிகரித்திருக்கிறது. எங்களுடைய சைனியங்களை முன்பைவிட அதிகமாக விருத்தி செய்திருக்கிறோம். ஜெர்மன் சைனியங்களை அடியோடு ஒழிக்கவே தீர்மானித்திருக்கிறோம்.”

---

## துருக்கியில் ஜெர்மன் பலாத்காரம்.

(S. F. ஜென்ஸன் எழுதியது.)

துருக்கி ஜனநாயகத்தின் தலைவரான கமால் அடாடர்க் அங்காராவில் 1927 அக்டோபர் 16, ஞாயிற்றுக்கிழமை ஜனசபையின் முன்பாக ஒரு பிரசங்கம் செய்தார். சுபாவத்தில் அதிகமாகப் பேசாதவரானாலும் எழு மணி நேரம் வீதம் தொடர்ந்து ஆறு நாட்கள் பேசினார். அப்படி அவர் பேசியதை 543 பக்கங்களடங்கிய ஒரு புஸ்தகமாகவும் பிரசுரிக்கப்பட்டது.

அவருடைய பேச்சிலிருந்து துருக்கியின் சரித்திரத்தைப்பற்றியும் புதிய மாறுதல்களைப் பற்றியும் சில அபிப்பிராயங்கள் தெரியவருகின்றன. ஆஸமான்லி சுல்தானுக்கு விரோதமாக துருக்கி ஜனங்களை ஒன்று சேர்த்தார். பால்கன் நாடுகளில் நடந்த சண்டைகளை சுல்தானின் கொடுங்கோலிலிருந்து முஸ்லீம் ஜனங்களை விடுவிப்பதற்காகச் செய்யப்பட்ட சண்டைகளென்றே எடுத்துரைத்தார்.

### பால்கன் நாடுகளின் சேர்க்கையில் விருப்பம்.

சுல்தான் அரசாங்கத்திய கிராசர்க்க துருக்கியர்களும் கிளம்பிவிட்டார்கள். ஆனால் இச்சமயத்தில் கமால் துருக்கியையே ஒருநிலைமையாக்க நினைத்தார். அதற்காக பால்கன் நாடுகளை ஒன்றுசேர்க்கும் ஒப்பந்தத்தை ஆரம்பித்து, கிரீஸ், யூகோஸ்லாவியா, ருமேனியா நாடுகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வித முன்னேற்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக பயன்பட்டு வந்தன. கிரீஸும் யூகோஸ்லாவியாவும் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டன.

பிரஸித்தமான ஹேகியா ஸோபியா மாதாகோவிலை சுல்தான் முகமதிய கோரியாக மாற்றியிருப்பதை கண்காக்ஷி சாலையாக மாற்றிவிட வேண்டுமென்று கமால் அபிப்பிராயப்பட்டான். கான்ஸ்டான்டிநோபிளை ஒரு பிரஸித்தமான பட்டணமாக்கி பால்கன் நாடுகளுக்கு தலைநகராகச் செய்ய வேண்டுமென்றும் கமால் விரும்பினான்.

ஆகவே இவ்வித நோக்கங்கள் கொண்டிருப்பதால் கிரீஸுக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் சாதகமாக ஆயிற்று. இந்த சந்தர்ப்பத்தில் 7,00,00,000 பேர்களடங்கிய பால்கன் குடியரசு நாட்டை அமைக்கப்போவதாயும் பலமான வதந்தி இருந்தது.

## அச்சுநாட்டு அதிருப்தி.

இவ்விதம் துருக்கி செய்துவந்த திட்டங்கள் ஜெர்மனிக்கும் இதாலிக்கும் அதிருப்தியை விளைவித்தன. உடனே இந்நாடுகள் துருக்கி பேரில் பலாத்கார யுத்தத்தைச் செய்வதெனத் தீர்மானித்தன. அதற்காக ஒரு வான பேபன் முதலியோர் ஜெர்மன் பிரசார வேலையை நடத்தி வந்தனர். பிறகு பிரசார வேலையை கோயபல்ஸ் முதலியோரிடம் ஒப்படைத்தனர்.

ஜெர்மன் பிரசார வேலை முதலாவதாக துருக்கியையும் க்ரேட் பிரிடனையும் பிரிப்பதற்காக 1941ஆம் ஸெப்டம்பர் மாதக்கடைசியில் ஆரம்பமாயிற்று. அச்சமயத்தில் ஜெர்மன் தூதர் டாக்டர் க்ளாடியஸ்லாம் இன்னும் 35 ஜெர்மானியரும் துருக்கிக்குப்போய் நாஸி அதிகாரத்திற்கு உட்படுத்தச்சென்றனர். பெரும் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும் கூடச் சென்றனர். இவர்கள் பால்பரஸ்லைக் கடந்து ஹைடர்பாஷா என்னுமிடத்தில் 1941ஆம் ஸெப்டம்பர் 28-ல் அங்காராவிற்குப் போகும் ரயிலில் ஏறும்போது "நாஸியதினம் துருக்கியில் அதிக நெருக்கடியான தினமாக இருக்குமென்று" எங்கும் செய்தி பரவப்பட்டது.

## க்ரோம் தோலுக்காக விருந்துகள்.

திங்கட்கிழமை பேபன் துருக்கியின் உபகாரியதரிசியான மெனிமென்ஜிபோக் குளுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பிறகு அயல்நாட்டு மந்திரி ஸரோஜாகுவுடனும் பேசினர். ஆனால் துருக்கியிலிருந்து க்ரோமியம் என்ற உலோகத்தை ஜெர்மானிய தூதகோஷ்டியினர் பெறமுடியவில்லை. ஏனென்றால் ஆங்கில-துருக்கி ஒப்பந்தப்படி 1943-ம் வருஷம் ஆரம்பிக்கும் வரை க்ரேட் பிரிடனுக்கு அனுப்பும்படியான ஏற்பாடு இருந்துவருகிறது. ஆனால் க்ரேட் பிரிடனுடன் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தையும் முறித்து துருக்கியை வசப்படுத்த நினைத்தது ஜெர்மானியருக்குப் பலிக்கவில்லை.

இதைப்போல் பலதடவைகளில் ஜெர்மன் பலாத்காரம் துருக்கிக்கு ஏற்பட்டிருக்கிறது. பல்கேரியாவின் எல்லைப்புற ஸ்தானங்கள் பலதடவை மூடப்பட்டன. பல்கேரிய, ஜெர்மன் துருப்புகள் துருக்கி மேல் படையெடுப்புச் செய்யப் போவதாயும் பிரஸ்தாபமாயிற்று.

தளகர்த்தர் ரீடர், டனிஸ் முதலியோர் பல்கேரியாவிற்குச் சென்று கருங்கடல் மூலமாக துருக்கிமேல் படையெடுப்புச் செய்யப்போவதாயும் பிரஸ்தாபமாயிற்று. கடைசியாக, ஈடன் மாஸ்கோவிற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தும்போது, ஜெர்மனி ஒரு பிரயத்னம் செய்தது. இதைப்பற்றி 1942-ல் ஜனவரி 22-ம் தேதி ஸ்டாக்ஹோமிலிருந்து வெளிவரும் ஸ்வென்ஸ்கா டாக்பிளாடேட் என்ற பத்திரிகையில் சமாசாரங்கள் பிரசுரிக்கப்பட்டன. அதாவது "பாஸ்பரஸ்லையும், டார்டனெல்ஸ்லையும் ஆங்கிலேயர்கள் ருஷ்யா வசம் ஒப்படைத்துவிட்டார்களென்றும் ருஷ்யா துருக்கிமேல் படையெடுக்கும் காரணம் இருக்கிறதென்றும்" ஜெர்மனி அறிவிக்கும் தகவல் கொடுக்கப் பட்டிருந்தது. இதே விஷயம் ஜெர்மன் ஆக்கிரமித்த பலநாடுகளிலும் பிரசாரமாயிருந்தது.

## துருக்கியின் பதில்.

இவ்வித ஜெர்மன் அவதூறுக்கு ஒரே ஒரு பதில்தான் கொடுக்கப்படும். இஸ்டான் புல்லில் உள்ள டெலிகிராப் என்ற பத்திரிகையில் ஜனவரி 30-ல் பதில் கொடுக்கப்பட்டிருந்தது. "துருக்கியர்களுக்கும், துருக்கி மந்திரிகளுக்கும், துருக்கியைப் ருஷ்யா, படையெடுக்க நினைக்கவில்லையென்று தெரியும். ஜெர்மனியிடமிருந்துதான் இவ்வித பயம் ஏற்பட்டிருக்கிறது".

இப்போது பிரசாரத்தைச் சற்று மாற்றிக்கொண்டு துருக்கியை ருஷ்யா, பிரிடன், அமெரிக்கா இம்மூன்று நாடுகளும் சண்டையில் இழுத்து விடப் பார்க்கின்றன என்று நாஸிகள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.



இதற்குக் காரணம் என்னவென்றால் குத்தகைக் கடன் மசோதப்படிக்கு துருக்கிக்கு அமெரிக்கா சாமான் ஸப்ளை செய்துவருவது ஜெர்மனிக்குப் பிடிக்காது. மேலும் ரயில் இஞ்ஜின்களும், சாமான் வண்டிகளும் ஆயுதங்களும் பிரிடன் துருக்கிக்கு அனுப்புகிறது. இதுவும் ஜெர்மனிக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணும். ருஷ்ய எண்ணெய்க் கப்பல்களும் துருக்கிக்குப் பத்திரமாக வந்து விடுகின்றன. இதற்கப்புறம் ஆபிரிக்காவில் ஜெனரல் ஆசின்லெக் முன்னடைந்து துருக்கியை கைவசப்படுத்தப்போவதாக ஜெர்மனி சொல்லிவருகிறது. ஆனால் ஆசின்லெக்கின் மேல்பார்வையில் இரான், ஈராக், ஸிரியா முதலிய நாடுகளில் ஜெர்மன் மின்னல் படையெடுப்புகள் பிரிடிஷ் படைகள் இருப்பதால்தான் நேராமல் பார்த்துக் கொள்ளமுடிகிறது.

பலவந்தமாக தாக்காத வரையில் துருக்கி நடுநிலைமை வகிக்குமென்று ஜெர்மனிக்குத் தெரியும். இருந்தாலும், கொஞ்சம், கொஞ்சமாக, பலாத்காரத்தை செய்து உள்நாட்டிலேயே கலகத்தை உண்டுபண்ண நினைத்திருக்கிறது. ஸூயஸ் கால்வாய் லிபியா சண்டை பிரிடனுக்குப் பாதகமானால் ஜெர்மனி நினைத்திருக்கிறது. ஸிரியா, பாலஸ்தீனம் வழியாகத் தாக்கலாமென்றும் ஜெர்மனி நினைத்திருக்கிறது. ஆனால் துருக்கியில் ஜெர்மன் அதிகாரத்திற்கு இடமில்லாதபோனால் பல்கேரியா குன்றிவிடுமென்று ஜெர்மனி பயப்படுகிறது. பல்கேரியா அரசன் மாத்திரம் நாஸிகளுக்கு உட்பட்டிருக்கிறானே விலும் ஜெர்மன் செல்வாக்குக் ஏனென்றால் பல்கேரியா மக்கள் உட்படவில்லை. அதனால் ருஷ்யாவிற்கு எதிராக தவிர பல்கேரியா மக்கள் சண்டை செய்யவும் விரும்பவில்லை. ஆகமீண்டும் துருக்கியில் பல்கேரியர்கள் சண்டை செய்யவும் விரும்பவில்லை. ஜெர்மன் புதுதிட்டத்திற்கு துருக்கி ஜெர்மன் பலாத்காரம் ஏற்பட்டிருக்கிறது. ஒருக்காலும் உட்படாது.

---

## துறைமுகம், சமுத்திரம் இவைகளின் ஆதிக்கம்.
## இரண்டு வெவ்வேறு விஷயங்கள்.
## கடல் யுத்தத்தின் முக்கிய 3 கோட்பாடுகள்.
## கடல் யுத்தத்தின் முக்கிய கோட்பாடுகள் ஏன் தோல்வியடையவேண்டும்.
## ஜப்பானியத் திட்டங்கள் ஏன் தோல்வியடையவேண்டும்.

(H. C. பெர்ரபி என்பவர் எழுதியது).

"ஒரு சமுத்திரத்திலுள்ள தீவோ அல்லது துறைமுகமோ அதைச் சுற்றியிருக்கும் கடலாதிக்கம் பெறுவதற்கு சாதகமாயிருக்கும் என்று ஜனங்கள் சொல்லுவது வழக்கம். உண்மையில் அவ்விதம் எண்ணுவது சுத்தத் தவறு", என்று தளகர்த்தர் மாஹான் எழுதியிருக்கிறார்.

ஜெர்மனி பிரான்ஸின் வடக்குக் கடற்கரையைக் கைப்பற்றி இங்கிலீஷ் கால்வாய் கிழக்குக் கரையிலுள்ள கப்பல்துறைகள், துறைமுகங்கள் இவைகளை வசப்படுத்திக்கொண்டதால் இனிமேல் பிரிடனின் கடலாதிக்கம் குறைந்து விட்டது என்று கோயரிங் அபிப்பிராயம் கொண்டது பிசகு.

இவ்விதம் ஏற்பட்டது சுமார் 20 மாதங்களுக்கு முன் இருக்கும். அது முதற்கொண்டு பிரிடனின் முக்கிய துறைமுகங்களிலிருந்து வியாபாரக் கப்பல்கள் துணைக்கப்பல்களுடன் வந்து போய்க்கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு ஜெர்மனியால் அதிகச் சேதம் விளைவிப்பது முடியவில்லை.

இங்கிலீஷ் கால்வாயின் மேற்கு பக்கத்தைக் கவனிப்போம். அங்கு ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான முக்கிய கடற்படை தளங்களான டெவன்போர்ட் (Devon Port), போர்ட்ஸ்மத் (Portsmouth), சத்தம் (Chatham) இவைகள் யாவும் பிரிடனின் வசத்தில் இருந்துவருகின்றன. அவைகளின் ஸ்வாதீனத்தைக் கொண்டு மட்டில் இங்கிலீஷ் கால்வாயில் ஆதிக்கம் பெற முடியவில்லை. மேலும்

அத்துறைமுகங்களின் உதவியைக்கொண்டு பிரெஸ்ட் துறைமுகத்திலிருந்து ஜெர்மனிக்குத் தப்பி ஓடும் எதிரி யுத்தக் கப்பல்களைத் தடுக்க முடியவில்லை. அதனால் அவ்விதத் துறைமுகங்களிலும், தீவுகளிலுமிருக்கும் யுத்தக் கப்பல்களால் தான் கடலின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியுமே ஒழிய மற்றபடி கப்பற்படை தளங்களால் மட்டில் முடியாது.

## ஜப்பானுக்கு ஒரு பாடம்.

கப்பற்படை யுத்தத்தில் துறைமுகங்களிலிருந்து கப்பல்கள் போகவும், வரவும் சாதகமிருந்தால்தான் வெற்றி கிடைக்கக்கூடும். ஷார்ன் ஹார்ஸ்ட் கப்பலும் அதைப்போல் மற்ற கப்பல்களும் தப்பிப்போனதால் மேற்சொல்லிய விஷயம் தெளிவாகத்தெரிகிறது. (A. B. D. A.) அமெரிக்கா, பிரிடன், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா வட்டாரத்தில் ஜப்பானியர்கள் பல நாடுகளைக் கைப்பற்றி வருவது மிகுந்த வியப்பைக் கொடுக்கக்கூடியபோதிலும், கைப்பற்றப்பட்ட நாடுகளை தங்கள் வசமே நிலைத்திருக்கச் செய்வதற்கு அவசியம் தேவையான கப்பல போக்குவரத்து சாதனங்களை ஜப்பானியக் கப்பற்படைக்கு வெற்றி பெற்ற நாடுகள் கொடுக்கமுடியாமல் இருக்கின்றன. ஹிந்து மஹா சமுத்திரத்தில் பிரிடிஷ் கப்பல் கூட்டங்கள் போய்வருவதை ஜப்பானியர்கள் சிங்கப்பூரை வைத்திருப்பதால் மாத்திரம் தடுத்துவிடமுடியாது. நேசதேசக் கப்பற்படைகள் அமெரிக்கக் கப்பற்படைகளைத் தெற்கு பஸிபிக் சமுத்திரத்தில் எந்தவிடத்தில் வேண்டுமானாலும் சுமிழுவதை மக்காஸார் ஜலசந்தியிலுள்ள துறைமுகங்களினால் ஜப்பானியர்கள் தடுத்துவிடமுடியாது.

மேற்சொல்லிய இரண்டு விஷயங்களையும் கப்பற்படையின் ஆதிக்கத்தைக் கொண்டுதான் சாதிக்கமுடியும். ஆனால் இப்பொழுது ஜப்பானியக் கப்பற்படை தாத்காலிகமாகத்தான் ஆதிக்கம் பெற்றிருப்பதினால் அதன் தரைப்படைகள் யாவும் இஷ்டப்பட்ட துறைமுகங்களுக்குப் போய்ச்சேருகின்றன. சென்ற இரண்டு மாதங்களாக கிழக்கிந்தியத் தீவுகளில் ஜப்பானியர் சிற்சில இடங்களை கிடைரென்று தாக்கி வருகின்றனர். அவர்கள் கையாண்டுவரும் முறைகள் யாவும் கப்பற்படை இலாகா கோட்பாடுகளுக்கு நேர் விரோதம். இதற்காகத்தான் ஜப்பானியர்கள் மிகவும் துணிகரமாக கடல யுத்த சம்பந்தமாக சட்டதிட்டங்களை மாற்றி அமைக்க எத்தனிக்கிறார்கள். இது மிகவும் துணிகரமான செய்கை. இந்தக் கோட்பாடுகள் பிரிடிஷ் தளகர்த்தர்களால் மட்டில் ஏற்படுத்தப்பட்டவையல்ல. இவை கடல் யுத்தத்தில் அனுபவத்திலிருந்து மாத்திரம் ஏற்பட்டவையல்ல. கடல் யுத்தத்தில் நியாயமான முறைகளைக் கையாளவேண்டும் என்பதை அமெரிக்கக் கப்பற்படை இலாகா அதிகாரி ஒருவர் உலகத்தாருக்கு முதன் முதலாக எடுத்துக்காட்டினார். ஆனால் சரித்திரப் பூர்வமாக கடந்துவந்த முறைகளுக்கு மாறாக நடக்கும் ஜப்பானியர்களை அமெரிக்கக் கப்பற்படைதான் எதிர்த்து போர் செய்து, அவர்கள் செய்துவரும் தவறைத் தெரிந்து கொள்ளச் செய்யவேண்டும்.

## அமெரிக்கக் கப்பற்படை மிகவும் பலமுள்ளது.

ஜப்பானியக் கப்பற்படையைவிட அமெரிக்கக் கப்பற்படையில் ஏராளமான யுத்தக் கப்பல்கள் இருக்கிறபடியால் அது மிக்க பலம் வாய்ந்திருக்கிறது. இனி அடுத்துவரும் இரண்டு வருஷங்களிலும்கூட அதன் பலம் ஜப்பானியரின் கப்பற்படை பலத்தைவிட அதிகமாக இருக்கும். இப்பொழுது 17 புதிய யுத்தக் கப்பல்களும், 54 க்ரூயிஸர் கப்பல்களும், 192 நாசகாரிகளும், அமெரிக்காவில் தயாராகிவருகின்றன. அவைகளில் பல முடியும்தருவாயில் இருக்கின்றன. அவைகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலேயே பூர்த்திசெய்ய ஏற்பாடாகி வருகின்றன. இவ்விதம் கப்பற்படையை விருத்திசெய்ய ஜப்பானியர்களால் முடியவில்லை. ஆனால் ஜப்பானியக் கப்பல் கட்டும் திட்டம், யுனைடெட் ஸ்டேட்ஸின் தற்காலக் கப்பற்படை பலத்தைவிட அதிகம்தான். தற்பொழுது அமெரிக்க கப்பற்படைதான் ஜப்பானியக் கப்பற்படையைவிட எண்ணிக்கையில் அதிகம்



கடல் யுத்தத்தில் முக்கியமாகக் கருதப்படும் யுத்தக் கப்பல்களை எடுத்துக்கொண் டால் யுனைடெட் ஸ்டேட்ஸின் பஸிபிக் கப்பற்படையில் 12 கப்பல்கள் இருக் கின்றன. ஆனால் ஜப்பானியக் கப்பற்படையில் பட்டேசான் இருக்கின்றன. இத் துடன் தொகை சைனக் கடலில் ஏற்பட்ட படையெழுச்சினால் ஜப்பானின் பலம் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது. இதுவரை சுமார் 50 ஜப்பானியக் க்ரூயிஸர் கப்பல்களும், நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும் அமுக்கப்பட்டோ, சேதமாக்கப் பட்டோ விட்டனவென்று அதிகாரப் பூர்வமாய் வந்த அமெரிக்க, டச்சு அறிக்கை களிலிருந்து வெளியாகிறது. யுத்த ஆரம்பத்தில் ஜப்பான் வசம் 250 யுத்தக் கப்பல்கள் இருந்தன. ஆனால் இப்பொழுது அதன் பலத்தில் ஐந்தில் ஒரு பாகம் குறைந்துபோய்விட்டது. சேதமடைந்த கப்பல்களைத் துரிதமாகப் பழுதுபார்த்து மீண்டும் போர்முனைக்குக் கொண்டுவந்துவிட முடியாது. ஏனென்றால் அவர்கள் இருக்குமிடத்துக்கும் சமீபத்திலுள்ள கப்பல் பழுதுபார்க்குமிடங்களுக்கும் சுமார் 2,000 அல்லது 3,000 மைல்கள் தூரம் இருக்கிறது.

## பெருத்த நஷ்டம்.

இவ்விதம் நஷ்டம் ஏற்பட்டதினால் கப்பற்படைக்கு மிக்க பலக்குறைவு ஏற்பட்டுவிட்டது. அது நஷ்டமடைந்திருப்பதையும் அது வெற்றிகள் அடைந் திருப்பதையும் பார்த்தால் அவைகளுக்குள்ள தாரதம்மியம் மிகவும் அதிகம் என்று தெரியவரும். இந்தக் கப்பல்களும் எதிர்க் கப்பற்படை பலத்துடன் நேருக்கு நேர் சண்டைசெய்து அவைகளுக்கும் நஷ்டமுண்டாக்கி தானும் நஷ்ட மடையவில்லை. ஆனால் தரைப்படைகளுக்கு உதவியாகச் செல்லும் எதிர்க் கப்பல் களுக்கு மட்டும் பலத்த சேதம் உண்டாகியிருக்கிறது. தென்மேற்கு பஸிபிக்கில் தாத்காலிகமாக ஜப்பான் ஆதிக்கம் செலுத்துவதில் அதன் கப்பல்கள் மூழ்கியதை யும் தாத்காலிகமாக சேதமடைந்த கப்பல்கள் உபயோகப்படாமல் இருப்பதையும் பார்த்தால் அதன் கடலாதிக்கம் ஸ்திரமாக ஆகிவிடாது என்பது தெரியவருகிறது. சிங்கப்பூர் (Singapore), பாலிக் பேபன் (Balik Papan), பான்டியானக் (Pontianak), அம்பாயினா (Amboina) இத்துறைமுகங்கள் ஒரே இடத்தில் இருக்கக்கூடிய கப்பற்படை தளங்கள். ஆனால் கப்பற்படையோ எங்கு வேண்டு மானாலும் போகக்கூடியவை. ஆனால் இந்தத்துறைமுகங்களின் சாதகத்தைக் கொண்டு யுத்தம் முடியும்வரை அந்தத் துறைமுகங்கள் இருக்கும் கடல்களில் தாராளமாய்ப் போய்வரக்கூடிய போதுமான கப்பற்படை இருந்தால்தான் ஜப்பானுக்குக் கடலாதிக்கம் நிலைக்கும்.

இது காரணத்தினால் சமீபத்தில் கடல் யுத்தத்தில் பயிற்சி பெற்றவர்களும் நேசதேசத்தார்களின் பிரதானமான அரசியல் நிபுணர்களும் நேசதேசக் கப்பற் படை பலத்தை ஒன்றாகத் திரட்டுவதைக் குறித்தும் அப்படி ஒன்றாகத் திரட்டினால் வருங்காலத்தில் ஏற்படும் யுத்த நடவடிக்கைகளில் என்ன பயன் கிடைக்குமென் பதைக் குறித்தும் பேசிவருகிறார்கள்.

---

## 'யு' படகுகளின் யுத்தத்தில் மூன்று கட்டங்கள்.

(உப விமானப் படைத் தலைவர் L. V. பிரேஸர் எழுதியது.)

இந்த யுத்தத்தின் ஒரு முக்கிய அம்சமான அட்லாண்டிக் யுத்தம் தொடர்ந் தாற்போலும், பகிரங்கப்படுத்தப்படாமலும் நடைபெறுகிறது. யுத்தப் போக்கைப் பற்றி காமன்ஸ் சபையில் சமீபத்தில் நடந்த விவாதத்தில் சென்ற இரண்டு மாதங் களில் பிரிடிஷாருக்கு கப்பல் நஷ்டம் அதிகமென்று மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறினார். இந்த நஷ்டம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் மட்டில் ஏற்பட்டதல்ல. உலகம் பூராவிலும் பரவியிருக்கும் கடல் யுத்தத்தில் ஏற்பட்ட கப்பல் நஷ்டத்தையும், தூரக்கிழக்கில் இறங்கிய காலமுதல் ஜப்பான் யுத்தத்தில் ஏற்பட்ட நஷ்டத்தையும் சேர்த்துச் சொன்னார்.

சென்ற வருஷம் நடந்த யுத்தத்தை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். யுத்தத்தின் முதல் கட்டத்தில் ஹிட்லர் எவ்வளவு தூரம் யுத்தத்தை விசாலப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம்வரை பரவச்செய்தான். அட்லாண்டிக் கடலில் பல இடங்களுக்கு அவன் தன்னுடைய 'யு' படகுகளை சிறுசிறு பாகங்களாகப் பிரித்து அனுப்பி தனியாக வரும் கப்பல்கள், துணைக்கப்பல்கள் இவைகளைக் கண்ட இடத்தில் தாக்கும்படிக்கும் ஏற்பாடு செய்தான். இவ்வித தாக்குதல்கள் கோடைகால நடுமத்தியில் உச்ச நிலையை அடைந்தன. ஆனால் பிரிடிஷ் கப்பற்படையும் கடற்கரைப் பாதுகாப்பு விமானப்படையும் ஒன்று சேர்ந்து இவ்வித தாக்குதல்களைத் தீவிரமாகத் தடுத்துவந்தன. நேசதேசக் கப்பற்படை 'யு' படகுகளைத் தாக்குவது வரவர அதிகரித்து வந்தது. ஆதலால் நாஜிகளின் தாக்குதல்கள் குறைவுபட ஆரம்பித்தன. 'யு' படகுகளில் உள்ளவர்கள் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். கப்பல்களுக்கு நேர்ந்த சேதத்தைப் பழுதுபார்க்க வேண்டியதாயிற்று. இவ்விதம் அநேக வாரங்கள்வரை 'யு' படகுகள் தாக்குதல்கள் மிகவும் குறைவு பட்டுவிட்டது. ஹிட்லர் தன் 'யு' படகுகளைப் பலப்படுத்திக்கொண்டு மற்றொரு பெரிய தாக்குதலை ஆரம்பிக்க ஹிட்லர் தயார்செய்து வருவதாக அறிகுறிகள் தோன்றின.

## 'யு' படகுகளின் கூட்டம் ஆக்ரோஷத்துடன் வேட்டையாடத் தொடங்கின.

இத்தகைய வேட்டை சென்ற வருஷம் கோடைகாலத்தின் கடைசியில் துவக்கப்பட்டது. ஜெர்மன் 'யு' படகுகள் கூட்டம் கூட்டமாக சமுத்திரங்களில் தனிப்பட்ட கப்பல்களையும், துணைக்கப்பல்களையும் தேடிப்பிடித்து வேட்டையாடின. கப்பல்கள் எங்கு வருமென்று எதிர்பார்த்தனவோ அங்கெல்லாம் அவைகள் ஒளிந்திருந்தன. அட்லாண்டிக் சமுத்திரமெங்கும் அதிகதூரமாக வேவுபார்த்து வரும் பாக்வுல்ப், கோண்டார் (Fack wolf, condor) என்னும் ஜெர்மன் விமானங்கள் நேசதேசத்தார்களின் கப்பல்கள் வருவதை இப்படகுகளுக்கு அடிக்கடி தகவல் கொடுத்துவந்தன. 'யு' படகுகளும் மறைவான இடங்களில் இருந்துகொண்டு, கப்பல்கள் வருமிடங்களில் சென்று அவைகளைத் தாக்கிவந்தன. நேசதேசத்தார்களின் கப்பற்படையும், கடற்கரைப் பாதுகாப்பு விமானப் படையும் இத்தகைய தாக்குதல்களுக்கு எதிர்பார்த்துத் தயாராகயிருந்தன. புதிய கப்பற்படை, விமானப்படை பகுதிகளை ஏற்படுத்தியும், ஏற்கனவேயுள்ள பகுதிகளைப் பலப்படுத்தியும் இப்புது தாக்குதல்களை சமாளிக்க தயார் செய்யப்பட்டது. இன்னும் புதிய ரக விமானங்கள் இந்தப் போரில் விடப்பட்டன. அவற்றில் அமெரிக்க 'லிபரேடர்' என்னும் விமானங்களும், ஹட்ஸன், கடேலினுஸ் என்னும் விமானங்களும் சேர்ந்ததினுல், கடற்கரைப் பாதுகாப்பு விமானப்படையின் பலம் அதிகரித்துவிட்டது. விமானத்தாக்குதல் வரவர மிக்க பலத்த சேதத்தை விளைவித்தன. ஏனெனில் அவைகள் வெடிகுண்டுகளோடு, ஆழவெடிகளையும் (Depth charges) தூக்கிச் சென்றன.

இந்தக் காலத்தில் தாக்கப்பட்டதும் அழிக்கப்பட்டதுமான நீர்மூழ்கிகளின் எண்ணிக்கையை யுத்தம் முடியும்வரை வெளியிடமுடியாது. ஆனால் இந்தப் பெரிய போராட்டத்தில் அல்லும் பகலும் தரை விமானங்களும், பெரிய கடற்விமானங்களும் ஏராளமாக ஈடுபட்டிருந்தன. அவைகள் வணிகக் கப்பல்கள் போக்குவரத்துக்குத் துணையாகயிருந்தன. அல்லது 'யு' படகுகளைத் தேடிப்பிடித்து வேட்டையாடித் தாக்கிவந்தன. இவ்விதம் அங்கு அநேக தாக்குதல்கள் ஏற்பட்டன. சில சமயங்களில் விமானங்கள் மட்டும் தாக்கின. மற்ற சமயங்களில் கடற்கரைப் பாதுகாப்பு விமானப்படையும், கப்பற்படையும் சேர்ந்து தாக்கின. அநேக சந்தர்ப்பங்களில் விமானங்கள் 'யு' படகைப் பார்த்தவுடன், நீரில் அமுங்கும்பொழுது தாக்கும். இத்துடனில்லாமல் அவை உடனே கப்பற்படைக்கு தகவல்கொடுத்து எதிரியின் 'யு' படகை அடியோடு அழிப்பதற்கும் ஏற்பாடு செய்துவிடும்.



## ஐந்து வாரம் மும்முரமான கடல் யுத்தம்.

ஐந்து வாரங்கள்வரை விடாமலும் தொடர்ந்தாற்போலும் யுத்தம் தீவிரமாக நடந்தது. கடற்கரைப் பாதுகாப்பு விமானப்படையிலுள்ளவர்களுக்கு ஓய்வே இல்லை. மேலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியிலும் ஆங்காங்கு நடக்கும் இந்த யுத்தத்தின் போக்கைப் படங்களில் குறிக்கும் விமான இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு ஓய்வு கிடையாது. அதுபோலவே ஒவ்வொரு தாக்குதலுக்கும் பிற்பட்டு, அடுத்தடுத்துவரும் விமானத் தாக்குதல்களுக்கு விமானங்களையும் விமானிகளையும் தயார்செய்து குறிப்பிட்ட நேரங்களில் அனுப்பிவரும் விமான தள உத்தியோகஸ்தர்களுக்கும் ஓய்வேயில்லை.

எதிரிகளின் தாக்குதல்கள் வரவர குறைவுபட்டேவந்தன. பிரிடிஷ் கப்பற்படையும், விமானப்படையும் ஒன்றுசேர்ந்து ஹிட்லரின் கப்பற்படைக்கு பலத்த சேதத்தை விளைவித்தன. இவ்வித கஷ்டங்களுக்கு இடையில் ஹிட்லரின் மின்னல் படையின் வெற்றிகள் மிகவும் ஸ்வல்பம்தான். மறுபடியும் ஹிட்லரின் 'யு' படகுகளின் தாக்குதல் தளர்வடைந்தது. அவ்வாறு ஏற்பட்டது சிறிது காலத்திற்குத்தான்.

கடையாக ஹிட்லர் பேசும்பொழுது 'யு' படகுகளைக்கொண்டு செய்யும் யுத்தத்தை அதிகரிக்கச் செய்யப்போவதாக அறிவித்தான். அம்மாதிரி ஜெர்மன் பொதுமக்களுக்குச் சொன்ன வார்த்தையைப் பூர்த்திசெய்ய முயலுகிறான். இதுதான் இந்த 'யு' படகு யுத்தத்தில் மூன்றும் கட்டமாக இருக்கும்.

---

## சைனு சமாளித்துக்கொண்டு வருகிறது.

## சீனர்களின் போர் திறமையின் மர்மம்.

## சீனமக்களின் ஒற்றுமையும், கஷ்டத்தை சமாளித்துக் கொள்ள அவர்களின் சம்மதமும்.

## அவர்கள் தந்திரத்தின் குறைதிசயங்கள்.

## சைனுவின் புனருத்தாரணம்.

இந்நாளில் 'சைனு' என்று சொன்னால் அந்தப்பதம் நமக்கு எவ்வளவு உற்சாகத்தை உண்டாக்குகிறது. சீனர்கள் ஒற்றுமையாகவும், புத்துயிர் பெற்றும் நம்முடன் சேர்ந்துகொண்டு போர்செய்துவருகின்றனர். மிகவும் பலஹீனமாகத் தோன்றிய இத்தேசத்தார் மிக்க பலங்கொண்டவர்களாக ரூபித்திருக்கிறார்கள். இம்மாதிரி இவ்வளவு சரித்திரத்திலேயே இதுவரை கிடையாது. ஆரம்பத்தில் சீனர்கள் எதிரிகளின் தாக்குதல்களால் அடியோடு அழிந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பொழுது அவர்கள் புத்துயிர் பெற்று மிகவும் தைரியமாகவும் எதிரிகளை எதிர்த்துத் தாக்கிவருகிறார்கள்.

1941-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஜப்பான் பிரதம மந்திரியாகயிருந்த கோனோய் இளவரசன் ஜப்பானிய மந்திரிசபையில் பேசும்பொழுது அந்த சபையில் ஒரு உணர்ச்சி ததும்பும்படியான பிரசங்கம் செய்தார். [illegible] குரலுடன் பேசினார். அவர் பேசும்பொழுது அவருக்கிருந்த [illegible] அவர் கன்னங்களில் தண்ணீர் வழிந்து [illegible] அவரை பேசவிடாமல் செய்தது. [illegible] யுத்தம் ஆரம்பித்து இது ஐந்தாம் ஆண்டு. இன்னும் இந்த [illegible] அறிகுறியும் தோன்றவில்லை. அதைப் போர் சம்பவத்தின் முடிவிற்கு யாதொரு [illegible] பொறுப்பாளிகளல்ல. வேறுயாரும் பொறுப்பாளிகளல்ல. [illegible] பொறுப்பும் என்னைப் பொறுத்ததேயாகும். ஜப்பானிய [illegible] அதன் முழுப்பொறுப்பும் [illegible] ஜனங்கள் இதுவரை செலவாயிவிட்டன. ஜப்பானிலிருந்து கோடிக்கணக்கான [illegible] ஆயிரக்கணக்கான ராணுவ உத்தியோகஸ்தர்களையும், போர் வீரர்களையும், இந்த சீன யுத்தத்தில், சைனு தேசத்தில், நாம் பரித்தியாகம் செய்திருக்கிறோம். அதற்காக

சக்கரவர்த்தியாரிடமும், பொதுமக்களிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்", என்று சொன்னான். இந்த வார்த்தைகள் சொன்னதும் அங்கிருந்த மந்திரி சபை அங்கத்தினர்கள் கண்ணீர் விடுத்தனர்.

## சைனா இன்னும் போர் நடத்துகிறது.

இது நடந்து ஒரு வருஷமாய் விட்டது. தற்போதுள்ள ஜப்பானிய மந்திரிகளுக்கு வருத்தப்பட்டு கண்ணீர் விடுவதற்குப் போதுமான காரணமிருக்கிறது. ஏனென்றால் சைனா இன்னும் முறியடிக்கப்படவில்லை. அது இன்னும் கொஞ்சமேனும் பயப்படவில்லை. அதற்கு நேர்ந்த கஷ்டத்தினால் அது தயங்கவில்லை. அதற்கு நேர்ந்த தோல்விகளினால் மனச்சோர்வடையவில்லை. இன்னும் யுத்தம் நடத்திக்கொண்டுதான் இருக்கிறது. ஜப்பான் விடுக்கும் சமாதானப் பேச்சுகளை ஏளனம் செய்துவிட்டும், தனக்கு நேர்ந்த துரதிருஷ்டங்களுக்காக வருத்தப்படாமல் வெற்றிகிடைக்குமென்ற நம்பிக்கையின்பேரில் சண்டை நடத்திவருகிறது.

சைனா இவ்விதமாக ராக்ஷஸ பலம்கொண்ட ஜப்பானுடன் நீண்டகாலமாக விடாமல் போர் நடத்துவதற்கும், ஜப்பானின் பயங்கரத் தாக்குதல்களை வெற்றிகரமாக சமாளித்து வருவதற்கும் அதற்கு இருக்கும் சாதனம் என்ன?

## ஆத்ம சக்தி.

இந்த யுத்தத்தில் எதிரிக்கு யந்திர சாதனங்கள் அதிகம். ஆனால் சைனாவுக்கு அதற்குள்ள ஆத்ம சக்தி அதிகம். சீனர்கள் தவறுதல்கள் இல்லாமல் ஒரேவித தந்திரத்தைக் கையாண்டு வருவதினால்தான் அவர்கள் எதிரிகளின் தாக்குதல்களை வெற்றிகரமாக சமாளித்து வருகிறார்கள். அந்த தந்திரப்படி நடப்பதற்கு அநேக வழிகள் இருக்கின்றன. அவைகளில் ஏதேனும் ஒன்று தவறியிருந்தாலுங்கூட சீனர்கள் தோற்றுப்போயிருப்பார்கள். எப்படி நடந்திருந்தால் சீனர்கள் தோற்றிருப்பார்கள் என்பதையும், அப்படி நடக்காமல் இருந்ததினால்தான் தோல்வியடையவில்லை என்பதையும் கவனித்தால், சீனர்கள் சமாளித்திருக்கும் கஷ்டங்கள் நன்கு தெரியவரும்.

## சீனர்களின் யுத்த தந்திரம்.

முதலாவது தலைப்படைத் தலைவர்களுக்குள் பூர்ண ஒற்றுமை அவசியம் வேண்டியிருக்கிறது. முக்கியமான தளகர்த்தர்களில் சிலர்களாவது சைனியங்களை விட்டுவிட்டுப் போயிருந்தால் சைனா அழிந்திருக்கும்.

இரண்டாவது, பொதுமக்கள் முழுமனதுடன் ஆதரவு கொடுக்காமலிருந்திருந்தால் 4½ வருஷங்கள் வரை ஒரு தேசமும் எதிரிகளின் தாக்குதல்களைச் சமாளித்திருக்க முடியாது. சமுத்திரக்கரையை விட்டுவிட்டு, உள்நாட்டிற்கு வந்து சீனர்கள் உள்நாட்டில் எதிர்ப்பு ஸ்தானங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்படிச் செய்ததில் சமுத்திரக்கரை ஓரத்திலிருந்த ஜனங்கள் தங்கள் சொத்துகளை விட்டுவிட்டு வரவேண்டியதாயிற்று. அப்படிச் செய்யாமலிருந்தாலும் சரி, அல்லது மனம் தளர்ந்திருந்தாலும் சரி, சைனா ஜப்பானுடன் எதிர்த்து நிற்க முடியாமல் போயிருக்கும். அதன் சக்தியும் குறைந்து போயிருக்கும்.

மூன்றாவது, யுத்த தந்திரத்தை வெறும் காகிதத்தில் எழுதி வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. ஆனால் திடமனதுடனும், தைரியமாகவும், மோசமான நிலைமைகளிலுங்கூட தலைவர்கள் அசதியப்படாமல் அந்த தந்திரத்தைச் சரியானமுறையில் நடத்திக்காட்டவேண்டும்.

நாலாவது, போர்வீரர்கள் சண்டைசெய்யமுடியாமல் போனால் எந்த தந்திரம்தான் பலிக்கும்? ஒன்றும் பலிக்காது.

ஐந்தாவது, போக்குவரத்து சாதனங்கள் இப்பொழுது லிபியாவில் நன்றாக அமைந்த லைன்கள் இட்டமும், போக்குவரத்து சாதனங்களும் எத்தகைய பயனைத் தருகிறது என்பதைக் கவனித்தால் இதன் முக்கியத்துவம் தெரியவரும்.



இதுவரையில் சைனாவின் யுத்த முயற்சி வெற்றிகரமாக நடந்ததிற்கு காரணங்கள் கூறினோம். இப்பொழுது சொல்லப்படும் ஆறாவது காரணம். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் ஜப்பானியர்கள் தவறாக நடந்துகொண்டிருப்பதினால் சைனாவிற்கு ஏற்பட்டிருக்கும் அனுகூலத்தைப் பற்றியது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பொதுமக்களை ஜப்பானியர்களால் சிநேக பாவத்துடன் நடந்து தன்மையப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்களின் ஆசைக்கு அளவு கிடையாது. அவர்கள் அங்கு லஞ்சம் வாங்கினார்கள். ஜனங்களுக்குள் கிளர்ச்சியை உண்டாக்கினார்கள். அவர்களுக்கு லாகிரி வஸ்துக்களைக்கொடுத்து அவர்களை கெட்டபழக்கத்திற்கு உள்ளாக்கினார்கள். பலவந்தமாகவும். அக்கிரமமாகவும் கொள்ளையடித்தார்கள். சீனர்களை முற்றிலும் கொடூரமாக நடத்தினார்கள். அவர்களின் கீழ் வேலை செய்கிறவர்களை பொருட்படுத்தாமல் நடத்தினார்கள். இக்காரணங்களினால் சாதாரணமாக ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து என்ன பயனை அடையமுடியுமோ அதைக்காட்டிலும் மிகவும் குறைவான பயனைத்தான் ஜப்பானியர்கள் அடைந்திருக்கிறார்கள். அதனால் ஜப்பானுக்குக் கிடைத்த வெற்றிகளில் ராஜீய விஷயமாக கவனித்துப் பார்த்தால் யாதொரு பயனுமில்லை என்று தெரியும். ஆனால் சீனப்பொதுமக்களின் பலம் அவர்கள் ஆத்ம சக்தியைப் பொறுத்தது என்றும் இதனால் ஏற்படுகிறது. சீனர்கள் எப்பொழுதும் தங்கள் தங்கள் காரியத்திலேயே கண்ணும்கருத்துமாக இருப்பவர்கள். ஆனால் கஷ்டங்கள் நேர்ந்த சமயங்களில் அவைகளுக்குத் தக்கபடி ஒன்றுகூடி நடக்கக்கூடியவர்கள். (1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்த இடம் சைனாவின் முழு விஸ்தீர்ணத்தில் 10 அல்லது 12 சதவிகிதம் தானிருக்கும்). இம்மாதிரி வெற்றி குறைவாக இருந்ததின் காரணம் என்னவென்றால், சீனர்கள் ஒரு மனப்பட்டு ஆக்கிரமிப்புக்காரர்களின் ஆட்சிக்கு உட்படாமல் இருந்ததுதான். மிகவும் கஷ்டமான சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்கள் ஊர்களைவிட்டு வேறிடங்களுக்கும் கூட போகத் தயாராகயிருந்தார்கள். சீனர்கள் எதிரிகளுக்குப் பின்னால் இருந்து கொண்டு அவர்களுக்கு ஹிம்சை செய்தார்கள். அவ்வாறு செய்வதைத் தடுக்க சில கிராமங்களையே தீக்கிரையாக்கி பயமுறுத்தினார்கள். இவ்விதம் அவர்கள் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும், சீனர்களின் ஹிம்சை நின்றுவிடவில்லை. இன்னும் அதிகமாயிற்று. வீடுகளை இழந்துங்கூட சீனர்கள் ஒன்றுசேர்ந்து எதிரிகளைப் பலமாகத் திருப்பித்தாக்கினார்கள். இம்மாதிரி சீனர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சியை ஜப்பானிய வெடி குண்டுகளால் அழிக்க முடியவில்லை. என்ன தோல்விகள் ஏற்பட்ட போதிலும் அவர்களின் உணர்ச்சி குன்றவில்லை. மேலும் அவர்கள் எவ்வித கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு அஞ்சா நெஞ்சத்துடன் விரோதியை எதிர்த்து நின்றும் அவனுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

## சீனர்களுக்கு நேசதேசத்தார்களின் உதவி.

ஜனநாயகங்கள் சீனர்களுக்கு உதவி செய்வார்களோ என்ற சந்தேகம் இருந்தபொழுதே சீனர்கள் மேற்சொல்லியபடி நடந்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது ஜனநாயகங்கள் ஒன்றுசேர்ந்து சீனர்களுக்கு எவ்வளவு உதவி செய்யமுடியுமோ அவ்வளவு செய்துவருகிறார்கள். இப்பொழுது அவர்கள் ஊக்கமடைந்து வெற்றி கிடைக்குமென்ற திட நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். சீக்கிரத்தில் வெற்றிகிடைக்கும் என்று சொல்லமுடியாது. இன்னும் எவ்வளவோ கஷ்டங்களும், தோல்விகளும் ஏற்படலாம். ஆனால் கடைசியில் வெற்றிகிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. வெற்றி கிடைக்காமல் ஒருநாளும் போய்விடாது. வெற்றியானது இன்னும் ஒரு வருஷத்திலாவது, இவ்வளவு பெரிய யுத்தத்தில் இன்னும் இரண்டு வருஷங்கள் தள்ளிப்போனாலும் சரி பாதகம் இல்லை. அல்லது ... ஏனென்றால் உலகத்தின் கதி இந்த யுத்தத்தைப் பொறுத்திருக்கிறது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

1942— பிரஸங்கம் 87—(4-வது பிரிவு).

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| மார்ச்சு ... | 21, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 22, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் | ... | ,, | 5.30 |
| | | காவராயூர் | ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, | 6.30 |
| | 23, திங்கட்கிழமை ... | கொன்னையூர் | ... | ,, | 6.00 |
| | | மேலவேகுபட்டி | ... | ,, | 6.30 |
| | 24, செவ்வாய்க்கிழமை | வடவாளம் | ... | ,, | 6.00 |
| | | செம்பட்டிவிடுதி | ... | ,, | 6 30 |
| | 25, புதன்கிழமை ... | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, | 6 30 |
| | 27, வெள்ளிக்கிழமை... | கார்த்தாமலை | ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி | ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 88—(5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 28, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 29, ஞாயிற்றுக்கிழமை | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | | வம்பன் | ... | ,, | 6.30 |
| | 30, திங்கட்கிழமை ... | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 31, செவ்வாய்க்கிழமை | பள்ளிவாசல் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| ஏப்ரல் ... | 1, புதன்கிழமை ... | புலியூர் | ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, | 6.30 |
| | 2, வியாழக்கிழமை .. | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் | ... | ,, | 6.30 |
| | 3, வெள்ளிக்கிழமை... | ஆதனூர் | ... | ,, | 6.00 |
| | | அரமனைப்பட்டி | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—21-3-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வரு மார்ச்சு மீ 28உ [ந. 88

பிரஸங்கம் LXXXVIII.

## இந்திய ஸ்திரீகளுக்கு மேன்மை தங்கிய வைஸ்ராய் மனைவியின் வேண்டுகோள்.

---

" இந்திய ஸ்திரீகள் யாவராயினும் ஜாதி, மதம், கொள்கை எப்பேர்ப்பட்டதாயினும் தங்களுடைய தேசத்திற்காகப் பாடுபடுவதற்கான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இங்கிலாந்தில் இருந்ததைப்போல, இந்திய ஸ்திரீகள், தங்களுடைய வீர்யத்தையும் மனோவலிமையும், விளக்கும் விதமாக, நடந்துகொண்ட விதங்களைப் பற்றிய கதைகள் அநேகம் சொல்லப்படுகின்றன. அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுடைய பரம்பரையைத்தான் தற்போதுள்ளவர்களும் சார்ந்திருக்கின்றனர். ஆகவே நம் முன்னோர் நடந்துகொண்ட விதமாக நாமும் நமது புகழை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும்.

பண்டைகாலத்திய சைனியங்கள் கீழ்தரமான ஆயுதங்களை உபயோகித்து வந்ததால் அவைகளுடைய நடமாட்டம் மிகவும் தாமதித்ததாகவே இருந்தது. திட்டங்களும் நேர்மையானவைகளாக இல்லை. சைனியங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு எதிரிகளைத் தாக்குவதற்குப் போதுமான அவகாசம் கிடைத்தது. தற்காலத்தில், எல்லாம் துரிதமாகச்செய்யப்படுகின்றன. எதிரிகள் வருவதை எதிர்பார்க்கவே முடிவதில்லை. அதிலும் விமான எதிர்ப்புகள் நேரும் சந்தர்ப்பத்தை முன்னால் கண்டுகொள்ளவே முடிவதில்லை. ஆகவே புருஷர்களைப்போல், ஸ்திரீகளும் தற்போது யுத்தத்திற்குவேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கவேண்டும். மேலும் பண்டை காலத்தில் நாம் இவ்விதமான கொடிய சத்துருக்களுடன் சண்டை செய்ததில்லை. தற்சமயத்திலோவெனில் ஜெர்மானியரும், ஜப்பானியரும் ஒரு நிறையாகத்தானிருக்கிறார்கள். பயத்தை உண்டாக்கியேதான் அவர்களால் அரசு புரிய முடியும். அவர்களுடைய திட்டங்களை எதிர்க்கிற ஜனங்களை அழித்துத்தான் தங்களை நிலைநாட்டிக்கொள்ள முடியும். உதாரணமாக ஜெர்மனியில் ஈவு இரக்கம் முதலிய குணங்கள் அனுசரிக்கப்படுவதில்லை. தாய்களைவிட்டு குழந்தைகள் பிரிக்கப்படுவார்கள். அரசாங்கத்தாருடைய நோக்கப்படிதான் அக்குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படும். பிறகு இக்குழந்தைகளையே, தாய்தந்தைகளிடம் மறைமுகமாயிருந்து ஒற்றுத்தொழில் புரியும்படி அரசாங்கத்தார் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். இதைவிட கேவலம் வேறு என்னவேண்டும். ஜெர்மனியில் ஹிட்லரைத்தான் யாவரும் கடவுளாகக் கொண்டாடவேண்டும். கொடுமை என்பதுதான் மதப்பற்றுதலுக்குச் சமமானது. வேறு ஒன்றும் கிடையாது. விவாகமாகாத ஸ்திரீகள் வியபசாரம் செய்து குழந்தைகளைப்பெற அனுமதிக்கப்படுகிறது. ஜெர்மன் சிப்பாய்கள்

தங்கள் நாட்டிற்காகச் சண்டை செய்வதால் அவர்கள் மூலமாக சந்ததிகளை உண்டுபண்ணுவது மிகவும் சிரேஷ்டமாம். ஆனால் ஜெர்மன் சிப்பாய்கள் உலகாக்கிரமணத்திற்காகவே சண்டையில் ஈடுபட்டிருக்கிறார்களென்பது நமக்குத் தெரியும். உலகத்தை அடிமையாக்கும் எண்ணம்தான் அவர்களுக்கு இருக்கிறது. அப்படி அவர்களை விட்டுவிட்டால் நாம் யாவரும் பொம்மைகள் மாதிரி அவர்கள் சொற்படி ஆடவேண்டியதுதான். நமக்கு ஸ்வதந்திரம், மதம் முதலியவை கிட்டாது.

"ஆகையால்தான் எல்லா இந்திய ஸ்திரீகளுக்கு நான் இவ்வேண்டுகோளை விடுவிக்கிறேன். தாய்க்கு இருக்கவேண்டிய இயற்கை குணங்களை நாம் மறக்கக் கூடாது. எனது குழந்தைகள் சண்டையில் ஈடுபட்டிருப்பதைப்போல் உங்கள் குழந்தைகளும் தாய்நாட்டின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்ற எதிரிகளை எதிர்த்துப் போராடுகிறார்கள். இதுவரை யுத்தம் இந்தியாவிற்கு வெகுதூரம் தள்ளி நடந்ததால் நமக்கு ஒரு பொறுப்பும் இல்லையென்று எண்ணினோம். இனி அப்படியிருக்க முடியாது.

"இந்திய ஸ்திரீகளிடம் எனக்கு அதிக நம்பிக்கையிருக்கிறது. எதிரிகளை எதிர்த்துச் சண்டை செய்வதில் இந்திய ஸ்திரீகளுக்குச் சமானம் யாருமில்லையென்று எப்பாடுபட்டாவது பெயர் வாங்கவேண்டும். ஆயுதங்களைத் தவிர வேறு தந்திரங்களாலும் நமது ஒற்றுமையையும் திடசித்தத்தையும் கலைப்பதற்கு எதிரி ஏற்பாடு செய்துவருகிறான். நாம் அதற்கு இணங்கக்கூடாது. உதாரணமாக நாம் எவ்வளவுக்கெவ்வளவு பயப்படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தனக்குச் சாதகமென்றே எதிரி நினைக்கிறான். இவ்வித உதவியை எதிரிக்குச் செய்யாமலிருக்க நாம் தைரியம் கொள்ளவேண்டும். ஆதாரமற்ற வதந்திகளுக்குச் செவி சாய்க்கவேண்டாம். பொய் பிரசாரத்திற்கு வசமாகவேண்டாம். ஒற்றுமைப்பட்டிருங்கள். தலைநிமிர்ந்து நில்லுங்கள். ஸ்திரீ உதவிப் படைகளுக்குப் பதிவு செய்யுங்கள். விவேகம், உறுதி, தைரியம் என்ற குணங்களை W. A. C. என்ற எழுத்துக்கள் அவ்விதபடையைக் குறிப்பதால் அப்படையில் சேர்ந்து கொள்ளுவது நியாயமும் ஆகும்".

## இவ்வருஷம் ஹிட்லரின் அழிவு காலம்.

(ஜான் காட்டன் என்பவர் எழுதியது).

தற்காலம் ஜப்பானியர்கள் எதிர்பாராத வெற்றிகள் அடைந்து வருவதினால் பிரிட்டனையும், யுனைடெட் ஸ்டேட்ஸையும் பிரமிக்கச் செய்துவிடலாம் என்று ஜெர்மனியும், ஜப்பானும் மனப்பால் குடித்துவந்தன. இப்பொழுது அவைகள் எதிர்பார்ப்பதற்கு மாறாகவே சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஜப்பானை முன்னேறவிடாமல் தடுப்பதற்கு பிரிட்டனாவது, யுனைடெட் ஸ்டேட்ஸாவது எடுத்துக்கொள்ளும் முயற்சிகளினால், ஜெர்மனியின் பேரில் அதிக கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்றும் சொல்லுவதற்கில்லை.

இவ்விதம் சொல்வதில் ஜப்பானின் பலத்தைக் குறைவாக மதித்து அதை எதிர்க்கமாட்டார்கள் என்பது இல்லை. அது யுத்தத்தில் இறங்குவதற்கு முன் அதன் பலத்தைப்பற்றி நாம் எவ்விதம் மதித்திருந்தாலுங்கூட, யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு அது அடைந்துவரும் மகத்தான வெற்றிகளினால், அதை பலமான விரோதி என்றே கருதவேண்டும்.

ஆனால் ஜெர்மனிதான் முக்கியமான விரோதி என்பதை மறந்துவிடக் கூடாது. அதனால் அதை முறியடிக்க வேண்டியதே நமது முக்கியமான கடமை. முதலில் ஜெர்மனியிலுள்ள நாஸிக் கொள்கை என்ற பைசாசத்தை அடியோடு ஒழித்தாலொழிய உலக அமைதி ஏற்படாது.

### இவ்வருஷத்தில் ஹிட்லர் தோற்றுவிடுவான்.

இந்த வருஷத்தில் ஹிட்லர் கட்டாயம் தோல்வியடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை வரவர அதிகரித்துவருகிறது. ஜப்பானியர்கள் வெவ்வேறு இடங்களில் தாக்குவதால் அதைத் தடுக்க நேசதேசத்தார்கள் முற்படுவார்களானால் அவர்களுடைய பலம் ஐரோப்பாவில் சிறிது குறையுமென்றும் அதனால் ஜெர்மனியை அவர்கள் அவ்வளவு பலமாகத் தாக்கமுடியாது என்றும் நாஸிகள் நம்புகிறார்கள். கொஞ்ச நாளாக பஸிபிக் யுத்தம் அவ்விதம் அவர்கள் எதிர்பார்த்தபடி நடக்கும் போல் தோன்றிற்று. ஏனென்றால் இப்பொழுது கீழ் சமுத்திரங்களில் ஜனநாயக நாடுகள் கடலாதிக்கத்தை நிலைநிறுத்த முடியாமல் போனதால் மலேயாவும், சிங்கப்பூரும் எதிரி வசமாயின. பர்மாவிலும், டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளிலும் விரோதிகள் பிரவேசித்திருக்கின்றனர். அதனால் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பயம் நெருங்கும் போலிருக்கிறது. ஆகவே ஜப்பானியர்கள் முன்னேறி வருவதை அவசியம் எப்பாடுபட்டாலும் தடைசெய்ய வேண்டும். அவ்விதம் செய்யத் தவறினால் கிழக்கு பாகம் பூராவும் எதிரிகள் வசமாய்விடும் என்று சாம்ராஜ்யத்தின் பலபாகங்களிலிருந்தும் ஜனங்கள் கேட்க ஆரம்பித்தார்கள்.

இவ்வித அபாயத்தை நிவர்த்திக்க ஏராளப் பிரயத்தனங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கிழக்குபாகத்தில் இப்பொழுது ஏராளமாகத் துருப்புகள் வந்திறங்குகின்றன. அதிதுரிதமாக விமானங்கள் அநேகம் அனுப்பப்பட்டும் வருகின்றன. மேலும் கடலாதிக்கத்தை நிலைநிறுத்த அநேக கடல் யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்விதம் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கிழக்கு பாகம் பலப்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் இக்கோடை காலத்தில் ஜெர்மனியை எதிர்ப்பதற்கு நேசநாடுகள் செய்துவரும் பிரம்மாண்டமான முயற்சிகள் ஒன்றும் குறைவுபடவில்லை. அப்பொழுது ஏற்படும் யுத்தமே மிகவும் கடுமையாக இருக்கும். ஜெர்மனியை அடியோடு அழித்துவிடுவதற்கான முயற்சிகள் இப்பொழுது தற்காப்பு முஸ்தீப்புடன் விளங்கும் இங்கிலாந்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதன் பூரா விவரமும் தெரியக்கொடுத்தால் இவ்வுலகத்தாரையே பிரமிக்கச் செய்யக்கூடும் என்பதில் சந்தேகமில்லை.

### ஹிட்லரின் தவறு.

பிரிட்டன் பேரில் நடந்த யுத்தம் முடிந்தபிறகு பிரிட்டனின் அப்போது உள்ள நிலைமையையும், இப்போது இருக்கும் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மேற்சொல்லிய ஏற்பாடுகளை பிரிட்டன் செய்துமுடிப்பதற்கு சாத்தியமாகயிருக்கும் என்று தெரியவருகிறது. டன்கர்க் முற்றிலும் முறியடிக்கப்பட்டு இனி பிரிட்டனை எதிர்ப்பது முடியாத காரியம் என்று நம்பிக்கையிழந்திருந்த பொழுது பிரிட்டனின் விமான பலத்தில் ஏற்படும் சேதத்தை ஈடுசெய்ய உபரியாக அதன் வசம் 9 விமானங்கள்தான் இருந்தன. மேலும் அந்த சந்தர்ப்பத்தில் ஹிட்லர் வசம் நல்ல முஸ்தீப்புடன் கூடிய 200 படைப்பகுதிகள் இருந்தன. அவைகள் யாவும் பிரான்ஸிலிருந்துகொண்டு பிரிட்டனை வெற்றிகரமாகத் தாக்கத் தயாராகயிருந்தன. அதே சமயத்தில் ஹிட்லரை எதிர்த்து நிற்க பிரிட்டனில் சரியானபடி முஸ்தீப்புடன்கூடிய ஒரு படைப்பகுதிகூட இல்லை. இதையறிந்து ஹிட்லர் அந்த சமயத்திலேயே பிரிட்டனை மறுபடியும் படையெடுத்திருக்க வேண்டும். அவ்விதம் படையெடுக்காமல் இருந்தது ஹிட்லர் செய்த பெருந்தவறுதல் என்றே சொல்லவேண்டும். அதனால் அவனுக்கு உலக சரித்திரத்திலேயே மகத்தான வெற்றி கிடைத்திருக்க வேண்டியதுபோக இப்பொழுது அவனுக்குப் பெருத்த தோல்வி நிச்சயம் என்று ஏற்பட்டுவிட்டது.

அற்பமான விஷயங்களே விதிப்பயனை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தவை. அப்பொழுது பிரிட்டன் பேரில் படையெடுக்க ஏன் ஹிட்லர் தயங்கினான் என்று ஒருவரும் தெரியப்போவதில்லை. அவ்விதம் தாமதித்தது அவனுடைய விருப்பத்துக்குத்தான். பிரிட்டன் அதற்கு பிறகு ராணுவத்தையும், விமானப்படையையும் அதிகமாக பலப்படுத்திக்கொள்ள முடிந்தது. இவ்வுலகத்திலுள்ள எல்லா நாடுகளின் விமான பலத்தைக் காட்டிலும் பிரிடிஷ் விமானப்படையே இப்பொழுது மிக்க வல்லமை வாய்ந்திருக்கிறது. கடல் யுத்தத்தில் அநேக விபத்துகள் ஏற்பட்டும்கூட, பிரிடிஷ் கப்பற்படை வரவர அதிக பலம் பெற்றுவருகிறது.

# இருதலைக் கொள்ளி.

ஜெர்மனிக்கு மேற்கு எல்லைப்புறத்தில் மிக்க பலம்வாய்ந்த பிரிடிஷ் தரைப் படை, விமானப்படை, கடற்படை இவையாவும் அதை எதிர்க்கத் தயாராகயிருக்கும்பொழுது, அதன் கிழக்கு எல்லைப்புறத்தில் ஜெர்மன் சைனியத்தைவிட பன்மடங்கு பலம்வாய்ந்த ருஷ்யச் சைனியத்துடன் ஹிட்லர் சண்டைசெய்து கொண்டிருக்கிறான். ருஷ்யச் சைனியமோ இந்த வருஷத்திற்குள்ளேயே நிச்சயமாக ஜெர்மன் தலைநகரான பெர்லினுக்குள் புகுந்துவிடுவதாக சபதம்செய்து வருகிறது. இது வீண்சபதமல்ல. ஜெர்மன் எல்லையை நோக்கி ருஷ்யா தீவிரமாக முன்னேறிவருவதைப் பார்க்க அதன் சபதம் பலித்துவிடும்போல் காணப்படுகிறது.

இதே சமயத்தில் இதுவரையில் கட்டப்படாத அவ்வளவு கனமான பாம்பர் விமானங்கள்கொண்ட ஒரு பெரிய பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியிலுள்ள நகரங்களை வெடிகுண்டுகளால் தகர்ப்பதற்குத் தயாராய் இருக்கின்றன. இத்துடன் ஐரோப்பாவில் போர் துவக்குவதற்கு பிரிடிஷ் சைனியம் ஒன்று தயாராய் இருக்கிறது. சமீபத்தில் பிரான்ஸில் நோக்க முகூட விமானப்படையெடுப்பினால், நேசதேசப்படைகள் ஐரோப்பாவில் புகுந்துவிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விதம் நேர்ந்த படையெடுப்பு சிறியதாய் இருந்தாலும் அதே மாதிரி, இனிமேல் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பிரம்மாண்டமான முறையிலும் தாக்குதல்கள் ஏற்படலாம். நிச்சயமாக அடுத்துவரும் சில மாதங்களுக்குள் அவ்வித தாக்குதல்கள் ஏற்படும்.

இந்த வருஷம்தான் ஹிட்லரின் அழிவுகாலம் என்று தோன்றுகிறது. எதிரிகளை மறைமுகமாகத் தாக்கி வெற்றிகள் அதிசீக்கிரத்தில் அடையலாம் என்று ஜப்பான் கொண்டிருக்கும் கனவுகள் இனிமேல் பலிக்காமல் போய் விடும் என்று அப்பொழுதுதான் ஜப்பானுக்குப் புத்திவரும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 21—3—42-லிருந்து 26—3—42-வரை.

ஆஸ்திரேலியா இப்பொழுது நியூஸிலாந்து, அமெரிக்கா இவ்விரு நாடுகளுடன் ஒன்று சேர்ந்து தூரகிழக்கு எதிரியான ஜப்பானை எதிர்க்கத் தயாராக இருக்கிறது. அம்மாதிரி ஒத்துழைப்பதை வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு வாஷிங்டனில் பஸிபிக் யுத்த சபையை நிர்மாணித்து அந்த சபையில் ஆஸ்திரேலியப் பிரதிநிதிகளும், நியூஸிலாந்து பிரதிநிதிகளும், ஆங்கில-அமெரிக்கப் பொது ராணுவ இலாகாத் தலைவர்களுடன் சீக்கிரத்தில் சேர்ந்து கொள்வார்களென்றும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அறிவித்தார்.

எவ்வளவு பெரிய ஜப்பானியத் தாக்குதலுக்கும் ஆஸ்திரேலியா சமாளித்து நிற்கக்கூடும் என்று தென்மேற்கு பஸிபிக் படை உபதலைவர் லெப்டினென்ட் ஜெனரல் பிரட் சென்ற புதன்கிழமை அறிவித்தார். ஜப்பானியர்கள் இருந்து தாக்கக்கூடிய இடங்கள் எல்லாம் பாதுகாக்கப்படுகின்றன. இப்பொழுது விமானங்கள் ஜாஸ்தியாக அனுப்பப்படுகின்றன. வாஷிங்டனிலிருந்து பஸிபிக் சமுத்திர யுத்தத்திற்கு எவ்வளவு உதவியனுப்பக்கூடுமோ அவற்றை யாவையும் அமெரிக்கா அனுப்பிவருகிறது. ஒற்றுமையாக அதிகாரத்தை வகிக்கவும், பொருளாதாரங்கள் பூராவும் சேகரித்து உபயோகிக்கவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் மாக் ஆர்தர் சந்தித்தபொழுது ஜப்பானைத் தாக்க அமெரிக்கா பலத்தை சேகரிப்பதாகத் தான் ஆஸ்திரேலியாவுக்கு வந்திருப்பதாகவும், அப்படிச் செய்தால்தான் பிலிப்பைன்ஸில் ஜப்பானியத் தாக்குதல் குறைவுபடும் என்றும், தான் பிலிப்பைன்ஸுக்குத் திரும்பிப்போகப் போவதாகவும், அம்மாதிரி ஜப்பானை அமெரிக்கா தாக்குவது கூடிய சீக்கிரம் ஏற்படும் என்றும் அறிவித்தார்.

நீண்ட தூரம் வியாபித்திரு
தற்சமயம் சோர்விலுலேயோ வைப்பு மார்க்கம் கப்பல்கள், சிறிய யுத்தக்
லேயோ அல்லது யுத்தப்பொருள்கள் ஏற்றிச் செல்லும் இழந்ததிலுலேயோ ஜப்பான்
கப்பல்கள் இவைகளில் அநேகத்தை ஜப்பான் குறைந்திருக்கிறது. ஆனபோதிலும்
தென்னோக்கி முன்னேறிச் செல்வதின் வேகம் மறுபடியும் அது மின்னல்
ஜப்பான வசமுள்ள பொருளாதாரங்களை முன்னிட்டு விஸ்தீர்ணத்தில்
போர் தொடரவும் கூடும். அப்படி நேரிடும் பக்ஷத்தில் இன்னும்
சைனாவைப்போல் அவ்வளவு பெரிதாகவும், சைனாவைக்காட்டிலும் ஜப்பானை
அதிகமான யுத்த தளவாடங்களும் பெற்றிருக்கும் ஆஸ்திரேலியா சாதாரணமாக
எதிர்த்துப் போராடுவது நிச்சயம். அந்தப் போரில் ஜப்பான் வெற்றியடைய
மலேயாவிலும், ஜாவாவிலும் வெற்றியடைந்ததுபோல் இனி ஆக்கிரமித்த
முடியாது. ஆஸ்திரேலியா மிக்க பலமாக திருப்பியடிக்க இயலும். அழிக்கப்பட்டுவிட்டதால்
பிரதேசங்களிலுள்ள பொருள்கள் நூதன முறையில் வேறு இடங்
எதிரி அவற்றை உபயோகிக்கமுடியாது. எஞ்சியிருந்தவைகளை நேசதேசக் கப்பற்படை
களுக்கு ஏற்றிச்செல்ல எதிரிக்குச் சாதனமுமில்லை. மேலும் தடை செய்துவிடக்கூடும்.
சமுத்திரத்தில் அவைகளை ஏற்றிச்செல்ல முடியாமல் (Dutch Timor) ஆஸ்திரேலியா
நேசதேசப்படையும் கொயபாங்கில் இருந்து வியாபித்திருக்கும் இடங்
வுக்கு வடகிழக்கே ஸாலமன் தீவு வரை 1,600 மைல் விமானங்களையும், விமான
களில் உள்ள கப்பல் போக்குவரத்துகளையும், ஆகாய அதிகரித்துவருகிறது.
தளங்களையும் நேசதேசப் படைகள் தாக்குவது தினசரி ஆக்கிரமித்த

ஜப்பானுக்குச் சொந்தமான மார்கஸ் தீவையும், ஜப்பானியர் சேர்ந்து
வேக் தீவுகளையும், அமெரிக்கக் கப்பற்படையும், விமானப்படையும், கிடைத்திருக்
சென்ற பிப்ரவரி மாதத்தில் தாக்கினதாக இப்பொழுது தகவல் படகுகளும், 3 கடல்
கிறது. இந்த எதிர்ப்பில் எதிரியின் 2 வேவு பார்க்கும் விமானங்கள், பாதுகாப்பு
விமானங்களும் நாசமாக்கப்பட்டன. சிதறுண்ட யோகஹாமாவுக்கும்,
பீரங்கிகள் இவைகளில் பல சேதமாக்கப்பட்டன. அதனால் ஜப்பானுக்கு
மார்கஸுக்கும் இடையே 990 மைல்கள் இருக்கின்றன. டோகியோவில்
பயம் ஏற்பட்டுவிட்டது. இந்த சம்பவத்திற்குப் பிறப்பட்டு இரவுகள் வரை
விமானத் தாக்குதல்கள் ஏற்படுமோ என்று பயந்து அநேக
விளக்கணைப்பு திட்டத்தைக் கையாளும்படி நேரிட்டது.

நியூ கினியில் மார்க்ஹாம் பள்ளத்தாக்கில் எதிரி முன்னேறிச் செல்வது
மெதுவாக இருக்கிறது. மோர்ஸ்பியை எதிரி கைப்பற்றியதாகச் சொல்வதும்
மறுதளிக்கப்படுகிறது. ஆனால் சென்ற வாரத்தில் பலதடவைகளில் அந்த ஊர்
விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாயிற்று. ஆஸ்திரேலிய சமுத்திரக்கரையோர
யிருக்கும் ப்ரூம், கதரைன், டார்வின் இந்த இடங்களில் எதிரியின் விமானத்
தாக்குதல்கள் இருந்தன.

ஆஸ்திரேலிய விமானங்கள் யாம்டேனு தீவிலுள்ள ஸாம்லிக்கியும், இரண்டு
ஜப்பானிய க்ரூயிஸர்கள் நாசமடைந்த ராபாலையும், லே, கொயபாங் இந்த இடங்
களையும் வெடிகுண்டுகளால் தாக்கின.

நேசதேச எதிர்ப்பு அதிகரித்துவருவதினால் எதிரியின்
பர்மாவிலும்கூட வந்திருக்கும் 5, 6-வது சீனப்
முன்னேற்றம் குறைவுபட்டிருக்கிறது. பர்மாவுக்கு வாய்ந்தவர்கள். நல்ல
பட்டாளங்கள், சீனத்துருப்புகளிலேயே மிகவும் திறமை அமெரிக்கப் படைத்தலைவர்
முஸ்தீப்புடன் இருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் அதிகாரத்தின்கீழ் போர்
லெப்டினென்ட் ஜெனரல் ஜோஸப் ஸ்டில்வெல் ஈடுபட்டிருக்கிறார்கள்.
செய்கிறார்கள். மிக்க திறமையுடன் போரில் தாக்குதலை

இப்போது மாண்டலே ரங்காவை நோக்கியே தங்கள் முக்கிய பிடிக்கவேண்டுமென்பதே
ஆரம்பித்திருக்கின்றனர். டாங்கூ என்ற இடத்தைப் உபயோகித்துக்
அவர்களின் நோக்கம். ஏற்கனவே ஜப்பானியர்கள் படகுகளை ப்ரூமுக்குச்
கொண்டு ஐராவதி நதியில் தாராவாடிக்கு வடக்கே போய்விட்டதால் டாங்கூ
செல்லும் மார்க்கத்திலுள்ள தாராவாடியிலிருந்து நேசதேசப் படைகள் ஐராவதி
மார்க்கத்தில் இன்னும் வடக்குப் பக்கமாக வாபஸாகிவிட்டன. காடடர்ந்த
முனைக்கும், டாங்கூ முனைக்கும் இடையே 'யோமாஸ்' என்ற ஜப்பானியப் படைகள்
பிரதேசம் இருக்கிறது. அதைத் தாண்டிக்கொண்டு

டாங்கூவில் திரண்டிருக்கின்றன. அங்கு காத்துக்கொண்டிருக்கும் சீனப்படைகளுடன் முன்னேறிவரும் ஜப்பானியரின் முக்கியப்படைகள் கைகலந்தன. பையூ என்னுமிடத்திற்கு அருகாமையில் சிறு சண்டை ஏற்பட்டது. அதில் எதிரிகள் 70 பேர் கொல்லப்பட்டனர். டாங்கூவை கிழக்குப் பக்கத்திலிருந்து தாக்கும் நோக்கத்துடன் ஸயாமுக்கு வடமேற்கே உள்ள கியங்மே என்ற இடத்தில் ஏராளமாக ஜப்பானியப் படைகள் வந்திறங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

லெபடான் பிரதேசத்திலிருந்த ஜப்பானியத் துருப்புகள் யாவும் முறியடிக்கப்பட்டன. மோல்மீன், மிங்காலாடான் என்ற பிரதேசங்களை பிரிடிஷ் விமானங்கள் வெற்றிகரமாக எதிர்த்தன. தாய்லாந்திலுள்ள கிராமே என்ற பிரதேசத்தையும் A. V. G. விமானங்கள் பறந்து சென்று தாக்கின.

**பிலிப்பைன்ஸ் தீவுகளில்** ஜெனரல் மாக் ஆர்தருக்கு பிறகு ஜெனரல் வான் ரைட் தலைமை வகித்திருக்கிறார். ஜப்பானிய தளகர்த்தரான யாமஷீட்டா சரண் புகும்படி கேட்டதற்கு அதை நிராகரித்து மிண்டனோ தீவில் ஜப்பானியர்கள் தங்கியிருக்கும் ஸாம்போயாங்கா இடத்தைத் தாக்குவதை முதல் வேலையாகச் செய்கிறார். ஜப்பானிய விமானங்கள் கிரீஜிடார், படான் என்ற இடங்களின் மீது குண்டுகளை வீசின.

**சைனாவில்** மின் (Min) நதிக்கரைக்கருகாமையில் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் தோன்றின. ப்யூச்சௌ (Foochow)க்குக் கிழக்கேயுள்ள சாங்லேனுக் கருகாமையிலும், ஹாங்காங்குக்கு மேற்கேயுள்ள சுவதான் (டைபிங்) ஜில்லாவிலும் உள்ள சீனர்களுக்குச் சொந்தமான பல இடங்களை அவைகள் தாக்கின. வென்சௌவினுக் கருகாமையிலுள்ள ஒரு துறைமுகத்தை சீனப்படைகள் தாக்கின.

**அந்தமான் தீவுகளில்** எதிரிகள் வியாபித்துக்கொண்டனர். அங்குள்ள பிரிடிஷ் படையிலுள்ளவர்கள், இன்னும் கைதிகளாக வைக்கப்பட்டவர்களில் பலர், அத்தேசத்தினர் எல்லோரும் வெளியேறினர்.

**ருஷ்யப்** போர்முனை முழுவதும் நரகம்போல் காணப்படுகிறது. கேரிலின் போர்முனையிலிருக்கும் ஸோவியத் துருப்புகளைப் பிளந்து செல்வதற்கு எத்தனித்த பின்னிஷ் துருப்புகள் முறியடிக்கப்பட்டன. கார்க்கவுக்குச் சுற்றியுமுள்ள பாதுகாப்பு அரண்கள் யாவும் தகர்க்கப்பட்டன. அங்கு படுதோல்வி நேரிடாமல் தடுப்பதற்கு அசௌக்கியமாயிருந்த ஜெனரல் பிராசிட்ஷ் என்பவர் மீண்டும் அழைக்கப்பட்டார். டாகன்ராக் பிரதேசத்தில் கடும்போர் நடக்கிறது. ஸ்டாரோ ருஸா என்னுமிடத்தில் வைகியாக்கப்பட்ட சிப்பாய்கள் கடைசி வரையில் சண்டை செய்ய நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். ருஷ்யப் படைகளுக்குப் பயந்து ஓடும் சிப்பாய்கள் யாவரும் சுடப்படுகின்றனர். இந்தப் பகுதியில் சரண் புகும் சிப்பாய்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்துவருகிறது.

சென்ற வாரத்தில் ருஷ்யப் போராங்கத்தில் லுப்ட்வாபேக்கு 249 விமானங்கள் நஷ்டமாயின.

பாரண்ட்ஸ் கடலில் எதிரிக்குச் சொந்தமான 3,500 டன் நிறையுள்ள கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

இன்னும் புதிதாக உதவிப் படைகள் அனுப்பும்படி ஹிட்லர் கேட்டதின் காரணமாக பல்கேரியா அரசன் போரிஸ் பெர்லினுக்குச் சென்றிருக்கிறான்.

ஜெர்மனிக்கு ஏற்கனவே அனுப்பியுள்ள 3,00,000 துருப்புகளைவிட 15,000 பேர்களையும், 5,000 தொழிலாளிகளையும் அனுப்புவதாக ருமேனியா ஒப்புக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஹங்கேரி 22,000 துருப்புகளையும், 5,000 வேலையாட்களையும் அனுப்புவதாக ஒப்புக்கொண்டது.

**லிபியா.**—டிமிமிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தில் எதிரிகள் சிறு சண்டைகள் போட்டுவருகின்றனர். அங்குள்ள பிரிடிஷ் நேசப்படைகள் எதிரிகளின் பீரங்கிப் பிரயோகங்களுக்கு இடையே வெற்றிகரமாக சில டாங்குகள் மோட்டார்கள் இவைகளைக் கைப்பற்றிக்கொண்டனர். பிரிடிஷ் விமானப்படையும் மார்போ, பெர்க்கா, டெர்னு, ஹாலனி (Greece), லோடேக்னியாஸ், செம்மா, ஹம்ஹாக் (Crete) இவைகளை வெற்றிகரமாகத் தாக்கின.

மத்தியதரைக்கடலில் சென்ற 2 யூ படகுகள், 2 லைட்டர் கப்பல்கள், 6 இரட்டைப் பாய்மரக்கப்பல்கள், ஒரு மோட்டார் படகு இவைகளை பிரிடிஷ் நீர்மூழ்கிகள் தாக்கி சேதத்தை விளைவித்தன.

ஞாயிற்றுக்கிழமையன்று லேசான 5 பிரிடிஷ் க்ரூயிஸர்களும், நாசகாரிகளும் அடங்கிய ஒரு பகுதி அட்மிரல் P. L. வியானின் தலைமையின்கீழ் மால்டாவை நோக்கிச் செல்லும் சாமான் கப்பல்களுக்குத் துணையாகச் சென்றது. எதிரே பலமான ஒரு யுத்தக் கப்பல், 2 கனமான க்ரூயிஸர்கள், 4 லேசான க்ரூயிஸர்கள், ஒரு சிறு யுத்தக் கப்பல் இவைகள் அடங்கிய இதாலியக் கப்பற்படை இதைத் தாக்க வந்ததில் நேசதேசக் கப்பற்படை அதை விரட்டிவிட்டது. எதிரி யுத்தக் கப்பல் பலமாகத் தாக்கப்பட்டது. சாமான் கப்பல்கள் யாவும் பத்திரமாக மால்டாவுக்குப் போய்ச் சேர்ந்தன. ஒரு சாமான் கப்பல் மட்டில் மூழ்கடிக்கப்பட்டது. இது பிரிடிஷ் கப்பற்படைக்கு கியாதியைக் கொடுத்த சம்பவம் என்று சர்ச்சில் கூறுகிறார்.

**ஜப்பானியரால் ஆபத்து.**—தூரக்கிழக்கில் ஜப்பானியர்கள் பயங்கரமாக முன்னேறி வருவதைப் பார்க்க நாஸிகளுக்கும் தங்களுக்கும் அபாயத்தை விளைவிப்பார்களோ என்று பெருத்த பீதி ஏற்படுகிறதாகச் சொல்லப்படுகிறது. அந்த அபாயத்தைத் தடுக்க ஐரோப்பிய நாடுகள் பரஸ்பர சிநேகம் அடையவேண்டுமென்று பிரசாரத்தை அது கிளப்பியிருக்கிறது. நேசதேசத்தார்கள் ஐரோப்பாவில் கவனம் செலுத்துவதை மாற்றுவதுதான் இதன் நோக்கம்.

**யுத்தப் பொருள்கள் உற்பத்திசெய்யும் இலாகா.**—யுத்தப் பொருள்கள் உற்பத்திசெய்யும் இலாகா மந்திரி காப்டன் லிட்டில்டன் என்பவர் காமன்ஸ் சபையில் [illegible], கப்பற்படை, ஆகாயப்படை இந்த [illegible] அடங்கிய பொதுவாக யுத்தப் பொருள்கள் [illegible] சம்பந்தத்தைக் குறித்துச் சொன்னார். [illegible] உற்பத்தி இலாகா மந்திரி சபைகளின் நிபுணர்களும் சேர்ந்து [illegible] சேர்ந்த ஒரு திட்டத்தைத் தயாரித்து ஆங்கில [illegible] கூடியமட்டில் நாடுகளின் உற்பத்தி இலாகா [illegible] அமெரிக்க ஸ்தாபனங்களுடனும் கலந்து வேலை செய்வார்கள். இதன் நோக்கமும் ராணுவ அதிகாரிகளுடனும் கலந்து அபிப்பிராயங்களுக்கும், உற்பத்தி இலாகா திட்டங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பரஸ்பர சம்பந்தம் இருக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான். முக்கியமான வேலைகளில் ஒன்று பிரிடிஷ் விளைவுகளும், [illegible] யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடிஷ் சாம்ராஜ்யம் இவைகளிலுள்ள பொருளாதாரங்களுடன் இணைக்கவேண்டியதாக இருக்கிறது.

**இந்தியாவுக்கு ஸ்திரீகளின் உதவிப்படை.**—இந்த அறிக்கையின் முதல் பக்கத்தில் மேன்மை தங்கிய மார்க்கியானஸ் லின்லித்கோ அவர்கள் இந்திய ஸ்திரீகளை ஸ்திரீகளின் உதவிப்படையில் சேரும்படிக்கும், அந்தப் படைக்குதான் தலைவியாக நியமிக்கப்பாவதாகவும் வெகு ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருப்பதை இதில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் எல்லா ஸ்திரீகளும் ஜாதி, மதம், குலம் வித்தியாசமன்னியில் கலந்து தொண்டு செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்க இந்த திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்குத் தக்கபடி வேலை [illegible] யுத்த காலம் நீடிக்கும் வரை அந்தந்த ஊர்களில் [illegible] சேர்க்கப்படும். ஆங்காங்கு படைப் பகுதிகள் ஏற்படுத்தப்படும். ரேடியோவில் ஒலிபரப்பு [illegible], தந்தி கொடுப்பது, டெலிபோனில் பேசுகிறது, [illegible] வேலைபார்ப்பது, ராணுவ பகுதிகளிலும் குமாஸ்தாக்கள் வேலைபார்ப்பது, எதிரி வருவதை வேவுபார்க்கும் இலாகாவில் வேலைபார்ப்பது, [illegible] உணவு திட்டங்களைக் கவனிப்பது, உதவிப்படை முகாம்களில் [illegible] காயமடைந்தவர்களைச் சிகிச்சை செய்ய ஏற்றிவரும் ஸ்தாபன மோட்டார்கள், [illegible] மோட்டார்கள் இவைகளை ஓட்டுவது, இன்னும் மற்றவை முக்கியமான வேலைகளில் ஸ்திரீகள் ஈடுபடலாம்.

மார்ச்சு மாதம் 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்களின் வேண்டுகோளின்படி தேசமெங்கும் பிரார்த்தனை தினமாகக் கொண்டாடப்படும்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—3—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும் இரவிலும் ஏற்பட்ட விமான எதிர்ப்புகளுக்குச் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—பார்ஸ (Barce)க் கருகாமையில். | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.-கடேனியா (Catania). | | 1 விமானம். | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 15 விமானங்கள். | 47 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-நியு பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ராபால் (Rabaul). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | துறைமுகம்.—லே (Laye). | | | |
| 17—3—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் சேர்ந்த வெடிகுண்டுத் தாக்குதல்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமானமிறங்குமிடம்.-மார்டுபா (Martuba). | | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மத்தியதரைக்கடலி (Mediterranean)ன் மத்திய பாகத்தில் விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள். | ஒரு கப்பல் தீப்பற்றியது; மற்றொன்று சேதமாயிற்று. | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சிறு சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 16 விமானங்கள். | 44 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—ஸலாமவ (Salamaua), லே (Laye). | | | |



மத்தியதரைக்கடலில் சென்ற 2 நீ படகுகள், 2 ஸப்ளைக் கப்பல்கள், 6 இரட்டைப் பாய்மரக்கப்பல்கள், ஒரு மோட்டார் படகு இவைகளை பிரிடிஷ் நீர் மூழ்கிகள் தாக்கி சேதத்தை விளைவித்தன.

ஞாயிற்றுக்கிழமையன்று லேசான 5 பிரிடிஷ் க்ரூயிஸர்களும், நாசகாரிகளும் அடங்கிய ஒரு பகுதி அட்மிரல் P. L. வியாமின் தலைமையின்கீழ் மால்டாவை நோக்கிச் செல்லும் சாமான் கப்பல்களுக்குத் துணையாகச் சென்றது. எதிரே பலமான ஒரு யுத்தக் கப்பல், 2 கனமான க்ரூயிஸர்கள், 4 லேசான க்ரூயிஸர்கள், ஒரு சிறு யுத்தக் கப்பல் இவைகள் அடங்கிய இதாலியக் கப்பற்படை இதைத் தாக்க வந்ததில் நேசதேசக் கப்பற்படை அதை விரட்டிவிட்டது. எதிரி யுத்தக் கப்பல் பலமாகத் தாக்கப்பட்டது. சாமான் கப்பல்கள் யாவும் பத்திரமாக மால்டாவுக்குப் போய்ச் சேர்ந்தன. ஒரு சாமான் கப்பல் மட்டில் மூழ்கடிக்கப் பட்டது. இது பிரிடிஷ் கப்பற்படைக்கு கியாதியைக் கொடுத்த சம்பவம் என்று சர்ச்சில் கூறுகிறார்.

**ஜப்பானியரால் ஆபத்து.**—தூரக்கிழக்கில் ஜப்பானியர்கள் பயங்கரமாக முன்னேறி வருவதைப் பார்க்க நாஸிகளுக்கும் தங்களுக்கும் அபாயத்தை விளைவிப் பார்களோ என்று பெருத்த பீதி ஏற்படுகிறதாகச் சொல்லப்படுகிறது. அந்த அபாயத்தைத் தடுக்க ஐரோப்பிய நாடுகள் பரஸ்பர சிநேகம் அடையவேண்டுமென்று பிரசாரத்தை அது கிளப்பியிருக்கிறது. நேசதேசத்தார்கள் ஐரோப்பாவில் கவனம் செலுத்துவதை மாற்றுவதுதான் இதன் நோக்கம்.

**யுத்தப் பொருள்கள் உற்பத்திசெய்யும் இலாகா.**—யுத்தப் பொருள்கள் உற்பத்திசெய்யும் இலாகா மந்திரி காப்டன் லிடில்டன் என்பவர் காமன்ஸ் சபையில் முதலில் பேசுகையில் தரைப்படை, சப்பற்படை, ஆகாயப்படை இந்த இலாக்காக்களின் உதவித் தலைவர்கள் அடங்கிய பொதுவாக யுத்தப் பொருள்கள் தயாரிக்கும் ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்துவதைக் குறித்துச் சொன்னார். மேற்கண்ட மூன்று உற்பத்தி இலாகா மந்திரி சபைகளின் நிபுணர்களும் சேர்ந்திருப்பார்கள். இவர்கள் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயாரித்து ஆங்கில அமெரிக்க ஸ்தாபனங்களுடனும், குடியேற்ற நாடுகளின் உற்பத்தி இலாகா அதிகாரிகளுடனும் கலந்து வேலை செய்வார்கள். இதன் நோக்கமும் ராணுவ இலாகா திட்டங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும், உற்பத்தி இலாகா திட்டங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பரஸ்பர சம்பந்தம் இருக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான். முக்கியமான வேலைகளில் ஒன்று பிரிடிஷ் விளை பொருள்களையும், கைத்தொழிலையும் யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடிஷ் சாம்ராஜ்யம் இவைகளிலுள்ள பொருளாதாரங்களுடன் இணைக்கவேண்டியதாக இருக்கிறது.

**இந்தியாவுக்கு ஸ்திரீகளின் உதவிப்படை**—இந்த அறிக்கையின் முதல் பக்கத்தில் மேன்மை தங்கிய மார்ஷியானஸ் லின்லித்கோ அவர்கள் இந்திய ஸ்திரீகளை ஸ்திரீகளின் உதவிப்படையில் சேரும்படிக்கும், அந்தப் படைக்குதான் தலைவியாக இருக்கப்போவதாகவும் வெகு ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருப்பதை இதில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் எல்லா ஸ்திரீகளும் ஜாதி, மதம், குலம் வித்தியாச மன்னியில் கலந்து கொண்டு அவர்களுக்குத் தக்கபடி வேலை செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்க இந்த திட்டம் கோரப்பட்டிருக்கிறது. யுத்த காலம் நீடிக்கும் வரை அந்தந்த ஊர்களில் பயிற்சி அதாவாசம் சேர்க்கப்படும். ஆங்காங்கு படைப் பகுதிகள் ஏற்படுத்தப் படும். டெலிபோனில் பேசுகிறது, தந்தி கொடுப்பது, ரேடியோவில் ஒலிபரப்புவது, ஆபிஸிலும் படைப்பகுதிகளிலும் குமாஸ்தாக்கள் வேலைபார்ப்பது, ராணுவ ஆஸ்பத்திரியில் உக்கிராண வேலைபார்ப்பது, எதிரி வருவதை வேவுபார்க்கும் இலாகாவில் வேலைபார்ப்பது, உதவிப்படை முகாம்களில் உணவு திட்டங்களைக் கவனிப்பது ஸ்தாபன மோட்டார்கள், காயமடைந்தவர்களைச் சிகிச்சை செய்ய ஏற்றிவரும் மோட்டார்கள் இவைகளை ஓட்டுவது, இன்னும் மற்றவை முக்கியமான வேலைகளில் ஸ்திரீகள் ஈடுபடலாம்.

மார்ச்சு மாதம் 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்களின் வேண்டுகோளின்படி தேசமெங்கும் பிரார்த்தனை தினமாகக் கொண்டாடப்படும்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—3—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும் இரவிலும் ஏற்பட்ட விமான எதிர்ப்புகளுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—பார்ஸ (Barce)க் கருகாமையில். | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—பெஙகாஸி (Benghazi). | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.-கடேனியா (Catania). | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 15 விமானங்கள். | 47 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ரபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | துறைமுகம்.—லே (Laye). | | | |
| **17—3—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் சேர்ந்த வெடிகுண்டுத் தாக்குதல்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமானமிறங்குமிடம்.-மார்டுபா (Martuba). | | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மத்தியதரைக்கடலின் (Mediterranean) மத்திய பாகத்தில் விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள். | ஒரு கப்பல் தீப்பற்றியது; மற்றொன்று சேதமாயிற்று. | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சிறு சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 16 விமானங்கள். | 44 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—ஸலாமா (Salamaua), லே (Laye). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **18—3—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரேனிகா (Cyrenaica) முன் அணி பிரதேசங்களில். | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான மிறங்குமிடம்.—மார்டுபா (Martuba). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 7 விமானங்கள். | 18 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மோல்மீன் (Moulmein). | | | 15 விமானங்கள் தீப்பற்றின. |
| | மற்ற விமான மிறங்குமிடங்கள்—மோல்மீனுக்கு (Moulmein)க்கருகாமையில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.-மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| | **பஸிபிக் (Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—ஸாலமன் (Solomon) தீவுகள். | | | |
| **19—3—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—மார்டுபா (Martuba). | | | 1 விமானம். |
| | விரோதி விமானமிறங்குமிடங்கள்.—ஜுயிலா—டெமிஸன் (Juila Temissan) ஜில்லா. | | | 5 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 14 விமானங்கள். | 37 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.-ரபால் (Rabaul) துறைமுகத்தில். | விரோதியின் ஒரு பெரிய க்ரூயிஸர் கோரத் தாக்கப்பட்டது. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 19—3—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள், ஸலாமா (Salamaua), லேயி (Laye) பிரதேசங்களில். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | போர்முனைக்குப் பின்றுலுள்ள விரோதியின் போக்குவரத்துகள். | | | |
| 20—3—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்.)** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான எதிர்ப்புகள்—யுத்தப் பிரதேசங்கள். | | | |
| | விமானமிறங்குமிடங்கள்—டேர்ணு (Derna), பேர்க்கா (Berka). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயம், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்—மார்டோபா (Martuba). | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma) (அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | மாபி (Hmawbi). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | விமானமிறங்குமிடம்—பாஸீனு (Bassein)-க்கு வடக்கே. | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ், விமானங்களால்).** | | | |
| | ஜப்பானிய யுத்தக் கப்பல்கள்—ராபால் (Rabaul). | 2 க்ரூயிஸர்கள் பலத்த சேதமடைந்தன | | |
| 21—3—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயங்கள்—பெர்க்கா (Berka), டெர்ணு (Derna). | | | |
| | கப்பல்கள், துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 14 விமானங்கள். | 53 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—3—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிரீஸ் (Greece)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ஹெராக்ளியான் (Heraklion). | | | |
| | **கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ரெடிமோ (Retimo), டிம்பாகி (Tympaki). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ஜப்பானிய விமானங்கள் துருப்புகள்.—லே (Laye). | அநேகர் கொல்லப்பட்டனர். | | 3 பாம்பர் விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ராபல் (Rabaul), கோபாங் (Koeppang) | | | |
| 22—3—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—வடகடலில் வேவுபார்த்தல். | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமானமிறங்குமிடம்—மார்டுபா (Martuba). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரேனைகா (Cyrenaica) வின் முன் அணிப் பிரதேசங்கள். | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 11 விமானங்கள். | 26 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | 10 விமானங்கள். |
| | விமான நிலயம்—மிங்கலாடன் (Mingaladon). | | | |
| | மற்ற ஜப்பானிய விமான தளங்கள்.—தெற்கு பர்மா (Burma). | | | |
| | டிமோர் (Timior) (போர்ச்சுகல்)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்லி (Dille). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | வேவுபார்த்தல்—ஸலாமா (Salamaua), லே (Laye) பிரதேசங்களில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 17—3—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | 1 விமானம். | |
| | மால்டா (Malta) | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 17—3—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 18—3—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). பகலில்.—தென்மேற்குக் கடற்கரை—இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). டார்வின் (Darwin) துறைமுகம். | | | |
| 19—3—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). மாஸ்கோவிற் (Moscow) கருகாமையில். | | 5 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). வேவுபார்த்தல்.—நியூ கினி (New-Guinea), பாபுவா (Papua) இவற்றில் ஜப்பானியர் ஆக்கிரமித்த இடங்களில். | | | |
| 20—3—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). இங்கிலாந்தி (England)ல் அன்று விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). மாஸ்கோவிற் (Moscow) கருகாமையில். | | 6 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | நஷ்டமில்லை. ஒருவருக்கும் சேதமில்லை. | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). ஸாம்லிகி (Saumliki) (யாம்டெனு (Yamdena) தீவில்). | | | |
| 21—3—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 12 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—3—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). மாஸ்கோவிற் (Moscow) கருகாமையில். | | 2 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). ஒரு பட்டணம்.—மத்திய பர்மா (Central Burma). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). வேவு பார்த்தல்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்தில். | | | |
| 22—3—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). இரவில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்கு பாகத்தில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 17 விமானங்கள். | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). கதரைன் (Katherine). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). விமானதளங்களில்.—மத்திய பர்மா (Central Burma). | | | |
| 23—3—42. (திங்கட்கிழமை) | | | | |
| | **பிரிடன் (Britian)**—(ஜெர்மன் விமானங்களால்). இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில் அநேக பிரதேசங்கள். | சொற்பச் சேதம். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). மாஸ்கோவிற்கு (Moscow) அருகாமையில். | | 3 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). நேசநாடுகளுக்குச் சொந்தமான விமானதளங்கள்.—மத்திய பர்மா (Central Burma). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**பெரும் முன்னேற்பாடுகள்** வசந்தகாலத் தாக்குதலை உத்தேசித்து செய்யப் படுகின்றன. வெளிநாடுகளிலிருந்து வேலைக் காரர்களை வரவழைத்து ஹிட்லர் பலாத்காரமாக வேலை வாங்கி வருகிறான். யுத்தச் சாமான்களை அதிகப்படுத்தவே இவ்விதம் செய்யப்படுகிறது. இதைப்பற்றி நாம் இதற்கு முன் பிரஸ்தாபித்திருக்கிறோம்.

நேசதேசங்களின் முஸ்தீப்புகளும் விருத்தியாகிக்கொண்டே வருகின்றன. வெள்ளிக்கிழமை மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் பேசும்போது 'ஜெர்மனியைக்காட் டிலும் பிரிட்டனில் ஆள்மாஹாணம் அதிகம் என்றும், பிரிட்டனின் யுத்த முயற்சி உலகத்திற்கே ஆச்சரியத்தை அளிக்கிறதென்றும்' சொன்னார். மிஸ்டர் அட்லி பிற்பட்டு பேசும்பொழுது மிஸ்டர் பெவினின் வார்த்தைகளை ஊர்ஜிதம்செய்து 'யுத்த சாமான்களின் கிட்டங்கிகள் 10 மடங்கும், டாங்கிகள் 5 மடங்கும், கப்பற் படை 4 மடங்கும், வியாபாரக் கப்பல் 2 மடங்கும் விருத்தியாகியிருக்கிறதாகச், சொன்னார்.

அமெரிக்காவில் அரசியல் தகராறுகளும், தொழில் கலகங்களும், குறுகிய மனப்பான்மையும் இருந்தபோதிலும் அவைகளை மறைத்துவைத்துக்கொண்டு மிஸ்டர் ரோனல்ட் வில்ஸனின் முயற்சிகளின்படி ஏராளமாக சாமான்கள் செய்யப்படுகின்றன.

சமீபத்தில் கிடைத்த கணக்குகளைப் பார்க்கும்போது கனடாவிலிருந்து இந்தியாவுக்கு முன்பைவிட இரண்டு மடங்கு அதிகமான சாமான்கள் வருவதாயும், ஆஸ்திரேலியாவுக்கு மூன்று மடங்கு சாமான்கள் வருவதாயும் தெரிகிறது. 1942 பிப்ரவரியில் பிரிட்டனுக்கு 5,90,00,000 டாலர் மதிப்பும், ருஷ்யாவுக்கு 39,91,000 டாலர் மதிப்பும், எகிப்துக்கு 1,70,00,000-ம் ஈராக்குக்கு 32,97,000-ம், நியூஸீலாந்துக்கு 16,00,000 டாலர்கள் மதிப்புள்ள சாமான்கள் வந்திருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**முக்கிய விவரங்கள்.** நேசநாடுகளின் பலம் விருத்தியடைந்துவரும் சந்தர்ப்பத்தில் எதிரிகளின் பலம் குறைந்துகொண்டே வருகிறது. சென்ற மாதத்தில் ருஷ்ய யுத்தரங்கத்தில் நாஸிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் மிகவும் ஜாஸ்தி. 43 டாங்கிகள், 285 பீரங்கிகள், 83 பள்ளங்களில் வைக்கப்பட்டிருக்கும் பீரங்கிகள், 491 யந்திர பீரங்கிகள், 236 தானேவெடிக்கும் துப்பாக்கிகள், 3,804 சாதா துப்பாக்கிகள், 23 விமானங்கள், 4 கிளைடர் விமானங்கள், 794 லாரிகள் இவைதவிர ஏராளமான குண்டுகள், மருந்து, மோட்டார்கள், குதிரைகள், ரெயில்வே இன்ஜின்கள், வண்டிகள் முதலி யனவும் வசப்படுத்தப்பட்டன. இதைத் தவிர 40,000 ஜெர்மானியர்கள் கொல் லப்பட்டனர். 25,000 பேர்கள் வசிக்கக்கூடிய 331 நகரங்கள் விடுவிக்கப்பட்டன.

மாரிகால நிலையால் ஜெர்மனிபேரில் பிரிடிஷ் விமான எதிர்ப்பு திட்டப்படி நடைபெறவில்லை. கால நிலை மிகக் கடுமையாக இருந்தது ஒரு காரணம். ருஷ்யா, மத்தியக்கிழக்கு முதலிய நாடுகளுக்கு உதவியாகப் போகவேண்டியிருந்ததும், அட்லாண்டிக்கில் 'யூ' படகுகளை எதிர்த்துச் சண்டை செய்யவேண்டியிருந்ததும் இரண்டாவது காரணம். நல்ல சீதோஷ்ண நிலை ஏற்பட்டதிலிருந்து முழுபலத் துடன் பிரிடிஷ் விமானப்படை தாக்குதலை ஆரம்பித்துவிட்டது. உதாரணமாக ரெனால்ட் மாட்போர்டு, எஸ்ஸன் முதலிய தொழிற்சாலைகள் தாக்கப்பட்டன. உலகத்திலேயே பெரியதான இரும்பு, எஃகு தொழிற்சாலை எஸ்ஸனில் இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவின் பாதுகாப்பு.** ரெங்கூன் எதிரி வசமானதிலிருந்து சைனாவுக் கும், பர்மாவுக்கும் முன்னிருந்த தரை, கடல் மார்க்கங்கள் தடைபட்டுவிட்டன. இதற்காக வேறு நான்கு வழிகள்



கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவுக்கும், சைனாவுக்கும் இப்போது போடப்பட்டுவரும் ரஸ்தா முடிவடைந்து விடும். ஜப்பான் பேரில் தரைமார்க்க மாகத்தாக்குதல் செய்வதற்கு உதவியாக யிருக்கும். இருந்தாலும் தற்போது மத்திய பர்மா, வடக்கு பர்மா, இந்தியா, இந்நாடுகளின் தற்காப்பை முன் விட்டு இப்பிரதேசங்களை எப்படியாவது காபந்து செய்ய வேண்டும். ஜெனரல் ஸர் ஆர்சபால்டு வேவல் இதைப்பற்றி பிரஸ்தாபிக்கும்பொழுது, 'வடகிழக்கு இந்தியாவில் சேகரம் செய்யப்படும் விமானப்படை தற்காப்பு செய்துகொள்ளு வதில் மாத்திரம் திருப்தி கொள்ளாமல் முன்னேறி எதிரே தாக்குவதிலும் ஈடு பட்டு இந்தியப் பாதுகாப்பைச் செய்யும்,' என்றார். விமானப்படை அதிகாரி ஸர் ரிச்சர்ட் பியர்ஸ், 'ஒரே இடத்திலேயே இருந்துகொண்டு எதிரி வரும் வரை நாம் காத்துக்கொண்டு இருக்கமாட்டோம். ஜப்பானுக்குச் சொந்தமான நாடு களிலேயே போய்த் தாக்குவோம்' என்றார்.

சிங்கப்பூர் எதிரி வசமானதைக் காட்டிலும் ரெங்கூன் விழுந்ததால் தான் அதிக ஆபத்து என்று வேவல் குறிப்பிட்டார். ஏனென்றால் ரெங்கூன் இந்தியா வுக்கு வெகு அருகில் இருக்கிறது. பர்மாவில் சைனிய அணிகளுக்குப் பின்புறமுள்ள போக்குவரவு சாதனங்கள் கெடுதலடையாமலிருப்பதால், பர்மாவைத் தற்காப்பு செய்வது சுலபம். இந்தியத் தற்காப்பைப்பற்றி பேசும்பொழுது 'சைனியங்களை நீளமாக வைப்பதைக் காட்டிலும் துக்குத் தூக்கான இடங்களில் வைத்து சண்டை செய்வது நலமென்றும், பீட்டன், மால்டா முதலிய இடங்களைப்போல் குறிப்பிட்ட சில இடங்களைப் பலப்படுத்திக் கொண்டால் போதுமென்றும், அவர் சொன்னார். பீரங்கிப் படகுகளைக்கொண்டு நதி மார்க்கங்களைக் காபந்து செய்யலாம். பெரிய நகரங்களை விமானங்களாலும், பீரங்கிகளாலும் காபந்து செய்துகொள்ளலாம். எவ்வளவு ஆபத்திருந்தாலும் கூட, பொதுமக்கள் தைரியமாகவும், ஒற்றுமையுடனும் இருக்கவேண்டும்' என்றார்.

வி வி வி வி வி வி வி

**தூரக்கிழக்கில் அமைந்துள்ள பனாமா கால்வாய்.** மலாக்கா ஜலசந்தியையும், சுந்தா ஜலசந்தியையும் தூரக்கிழக்கு பனாமா கால்வாய் என்று சொல்லப்படும். பஸிபிக்கிலுள்ள ஏராளத் தீவுகளையும், சைனா பர்மா முதலியவைகளையும் தன் வசத்தில் வைத்துக்கொள்ள ஜப்பான் நினைத்தால் முன் சொல்லப்பட்ட இரண்டு ஜலசந்திகளிலும், இந்து மஹா சமுத்திரத்திலும் ஜப்பான் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள வேண்டிவரும். இதற்காக இரண்டு பெரும் கப்பற்படைகள் தேவையாக இருக்கும். நேசநாடு யுத்த தந்திரங்களுக்கு இடையிடையே விமான தளங் களையும் கப்பல் தளங்களையும் உபயோகப்படுத்திக்கொண்டு, ஒரு இடத்திற்கும் மற்றொரு இடத்திற்குமுள்ள இடைவெளியை வசப்படுத்த ஜப்பான் முயன்றால், ஜப்பானுக்குத்தான் அது பாதகமாக முடியும். ஏனென்றால் ஆஸ்திரேலியா ஒரு பக்கத்திலிருக்கிறது. இந்து மஹா சமுத்திரம் மற்றொரு கோடியிலிருக்கிறது. இந்த அகண்ட பிரதேசத்தில் ஜப்பானுடைய தந்திரம் பலிக்காமல் போய்விடும்.

வி வி வி வி வி வி வி

**எங்கே அமெரிக்கக் கப்பற்படை.** பஸிபிக்கில் அமெரிக்கக் கப்பற்படை இருக்கி றது. அது எங்கே என்று ஜப்பானியர்கள் கேட்கிறார்கள். இதை அவர்கள் கேட்கத் தேவையேயில்லை. அமெரிக்கக் கப்பற் படையினிடம் அடிவாங்குவது அவர்களுக்குத் தெரியும். உதாரணமாக மார்ச்சு மாதம் 6-ம் தேதியோடு முடிவடையும் வாரத்தில் தூரக்கிழக்கில் ஈடுபட்டிருக் கும் அமெரிக்க நீர்மூழ்கிகளால் ஜப்பானிய நாசகாரி ஒன்றும், ஒரு பெரிய எண் ணெய்க் கப்பல் ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டன. விமானமேற்றிச் செல்லும் இரண்டு பெரிய கப்பல்களும், இரண்டு க்ரூயிஸர்களும் தாக்கப்பட்டன. இன்னும் கொஞ்ச நாளில் அமெரிக்கக் கப்பற்படை இருக்குமிடத்தை ஜப்பானியர்களே சொல்லவேண்டிவரும்.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டு யுத்த தந்திரம்.** சமீபத்தில் 'டைம்ஸ்' பத்திரிகையில் அச்சு நாட்டு யுத்த தந்திரத்தைப்பற்றி ஒரு விபரம் எழுதப்பட்டிருக்கிறது. ஜப்பானுடைய லக்ஷியம் மூன்று. அதில்

துருக்கி மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. பிரான்ஸுடன் செய்துகொண்ட உடன்படிக்கை நிறைவேற்றப்படவில்லை. பிரிட்டனுடன் மாத்திரம் சிநேகமாகவே நடந்துவந்து தற்காப்பு திட்டங்களைப் பூர்த்தி செய்துவந்தது. இஸ்தான்புல் நகரத்திலுள்ள எல்லாத் தொழிலாளிகளையும் அழைத்து ஜலசந்தியின் தற்காப்பைப் பலப்படுத்திக்கொண்டது.

### 1940 நவம்பர்—நாஜிகளிடமிருந்து ஏற்பட்ட ஆபத்து.

பிரகிருத யுத்தத்தில் நாஜிகள் முன்னேறி ஒன்றன்பின் ஒன்றாக எல்லா சிறு நாடுகளையும் ஆக்கிரமித்துக்கொண்டதாலும், சூழ்ச்சிகளை உண்டுபண்ணியதாலும் துருக்கி ஸ்தாபித்த பால்கன் ஒற்றுமை கலைந்தது. ஆகவே மற்ற நாடுகள் வீழ்ந்து வரும்போது தனது நாட்டையும், நடுநிலைமையையும் காப்பாற்றிக்கொள்ளுவதில் துருக்கி அக்கரை எடுத்துக்கொள்ள நேர்ந்தது. 1940 நவம்பர் 1உ துருக்கியின் ஜன சபையின்முன் பேசும்போது ஜனாதிபதி இனோனு அச்சநாடுகளுக்கு எச்சரிக்கை செய்துவிட்டான். "துருக்கி யுத்தத்தில் ஈடுபடாததால் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் நமது பிரதேசத்தையும், கடலையும், விமான வழிகளையும் உபயோகித்துக்கொள்ள முடியாது. இந்நிலைமை நாம் நடுநிலைமை வகிக்கும்வரை இருக்கும். நமது விஷயங்களில் நாம் போதுமான அக்கரையை எடுத்துக் கொண்டு மற்ற நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படி நடந்துகொள்ளுவோம். வெகு சிரமப்பட்டு பிரிட்டன் தனியே இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் துருக்கிக்கும் பிரிட்டனுக்கும் உள்ள பாந்தவ்யம் என்நாளும் நிலைத்திருக்கும்படி நாம் நடந்துகொள்ளவேண்டும்."

ஆனால் இவ்விதம் வெறும் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாதென்றும், நடுநிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளத் தகுந்த சைனிய மூஸ்தீப்பு இருக்கவேண்டுமென்றும் துருக்கி தெரிந்துகொண்டு டிஸம்பர் மாதத்தில் பிரிட்டனுடன் ஒரு வியாபார ஒப்பந்தத்தை செய்துகொண்டது. அதன் படி பருத்தி, கம்பளி முதலிய சாமான்களைத் தவிர யுத்த சாமான்களையும் பிரிட்டன் ஸப்ளை செய்ய வேண்டும். இதற்குப் பிரதியாக 86,00,000 துருக்கி பவுன் மதிப்புள்ள சாமான்களை பிரிட்டன் வாங்கிக்கொள்ளும்.

### பால்கன் நாடுகள் சின்னபின்னமாக்கப்பட்டன.

நான்கு வருஷங்களுக்கு முன்பு துருக்கித் தலைவனான கெமால் அடாடர்க் பால்கன் நாட்டுத் தலைவர்கள் யாவரையும் அங்காராவிற்கு அழைத்து வரும் காலத்தில் இந்நாடுகளுக்கு நேரக்கூடிய ஆபத்துகளைப்பற்றித் தெரியப் படுத்தினான். ஆனால் யூகோஸ்லாவியர்களையும், கிரேக்கர்களையும், பல்கேரியர்களையும் ஒரு பொதுவான திட்டங்களுக்கு உட்படுத்தமுடியவில்லை. இவ்விதம் இவர்கள் சேராமலிருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு சென்ற ஏப்ரல் மாதத்தில் பால்கன் நாடுகளை ஜெர்மானியர் படையெடுத்தனர். அச்சமயத்தில் கிரீஸும் யூகோஸ்லாவியாவும் ஜெர்மன் சூட்சிகளுக்கு உட்படவில்லை. ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா முதலிய நாடுகள் பொருளாதாரம், அரசியல் முதலியவைகளில் அதிக பலம் பெறாததாலும், நாட்டு மக்களுக்குள் அவநம்பிக்கை ஏற்பட்டதாலும் ஜெர்மானியர் பயமுறுத்தியதாலும் சுலபமாகவே இந்நாடுகள் ஜெர்மானியர் வசமாகிவிட்டன. ரஸ்தாக்களையும், இருப்புப்பாதைகளையும் ஜெர்மானியர் உபயோகித்துக்கொள்ள ஆரம்பித்தனர். பால்கன் நாடுகளுக்குள் துவேஷம் அதிகரித்தது. நிலைமை கைமீறிவிட்டது. கடைசித்தருணத்தில் யூகோஸ்லாவிய மக்கள் கலகமும் செய்தும் பார்த்தனர் ஒன்றும் பலிக்கவில்லை. யூகோஸ்லாவியா, கிரீஸ் உள்பட ஜெர்மனியின் வசமாயின. ஆகவே பால்கன் மக்கள் தற்சமயம் ஸ்வதந்திரம் வாய்ந்தவர்களாகவில்லை. ராஜ்யங்கள் தனிப்பட்டவைகளுமில்லை.

### 1941 ஜனவரி—ஈடன்-டில் செய்த விஜயம்.

ஏற்கனவே துருக்கிக்கும், ஆங்கிலேயருக்கு முள்ள வியாபார, அரசியல் ஒப்பந்தங்கள் 1941 ஜனவரியில் மீண்டும் பலப்படுத்தப்பட்டன. அச்சமயத்தில் அங்காராவில் துருக்கித் தலைவர்களும் பிரிட்டிஷ் சைனியத் தலைவர்களும் கலந்து பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். அடுத்த மாதத்தில் மிஸ்டர் ஈடன் [illegible]

மந்திரி, சைனியத் தலைவனான சரக்மாக் முதலியோருடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். 'அங்காராவில் ஒரே குதூஹலமாக இருக்கிறது. ஈடனும், டில்லும் செல்லுமிடங்களிலெல்லாம் துருக்கி கொண்டுள்ள சிநேக பாவம் நன்றாகத் தெரிய வருகிறது" என்று அங்காரா ரேடியோ கூறிற்று.

### 1941 ஏப்ரல்—துருக்கிக்கும், ஜெர்மனிக்கும் உள்ள சிநேகம்.

ஆனால் மற்ற நாடுகளுடன் துருக்கி செய்துகொண்ட அரசியல், ராணுவ ஒப்பந்தங்களால் அதன் நடுநிலைமைக்கு ஒரு கெடுதியும் ஏற்படவில்லை. பிரிட்டனுடன் கொண்டுள்ள சிநேக ஒப்பந்தம் ஜெர்மனியையும் அதன் தோழர்களையும் துருக்கியின் நடுநிலைமையை மீறாமல் இருக்கும்படி கட்டுப்படுத்தியது. ஆனால் அச்சுநாடுகளுடன் துருக்கி பொருளாதார ஒப்பந்தம் செய்துகொள்ளுவதைத் தடுக்கவில்லை. ஏப்ரல் மாதத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின் பயனாக ஒருகோடி துருக்கி பவுன் பொறுமானமுள்ள புகையிலையை ஜெர்மனி வாங்கிக் கொண்டு அதற்குப் பிரதியாக யந்திர சாமான்களையும், யுத்த சாமான்களையும் துருக்கிக்கு ஸப்ளை செய்யும். இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு சிறிது காலம் கிரமித்து ஜெர்மன் தொழிற்சாலை நிபுணர்களும், வியாபாரிகளும், விவசாயிகளும் துருக்கிக்கு வந்து துருக்கி-ஜெர்மன் வியாபாரத்தை விருத்திசெய்தனர். இதற்கு இரண்டு மாதத்திற்கெல்லாம் துருக்கியும் ஜெர்மனியும் ஒரு சிநேக ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. "ஏற்கனவேயுள்ள ஒப்பந்தங்களுக்குட்பட்டுத்தான்" இப்புதிய ஒப்பந்தம் ஏற்பட்டு 10 வருஷங்கள்வரை நிலைத்திருக்கவேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இது பிரிட்டனுக்கும் தெரியும். இதனால் பிரிட்டனுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கு ஒரு கெடுதியும் ஏற்படவில்லை. பால்கன் நாடுகளின் ஸ்வதந்திரத்தை அச்சுநாடுகள் கெடுத்து வந்ததால் துருக்கியின் நடு நிலைமையைக் கெடுக்காமல் இருக்கவேண்டுமென்றே இவ்வொப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. பிரிட்டனுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மறு தளிக்கும்படி ஜெர்மனி சொன்னதை துருக்கி நிராகரித்துவிட்டது. தான் வகித்து வரும் நடுநிலைமையையும், அரசாங்கத்தையும், பிரதேசத்தையும் துருக்கி காப்பாற்றியே வந்தது. அனடோலியா வழியாக ஜெர்மன் துருப்புகள் செல்ல அனுமதிக்கவும் இல்லை உல்ஸ் (Uls) என்ற பத்திரிகை இதைப்பற்றி எழுதியதாவது :—"ஜெர்மனியுடன் புதிதாக எதுவும் சிநேகம் செய்து கொள்ள வில்லை. ஏற்கனவேயுள்ள சிநேகத்தை புதிப்பித்துக்கொள்ளவுமில்லை. துருக்கியைச் சுற்றி ஏற்படக்கூடிய சிருங்கலையான விஷயங்களில் துருக்கி நடுநிலைமைவகிக்கும். பிரிட்டனுக்கு எதிராகச் சண்டை செய்கிறவர்களுக்கு நாம் ஒரு உதவியையும் செய்யமாட்டோம். இதனால் துருக்கியின் அரசியல் திட்டத்தில் ஒருவித மாறுதலும் ஏற்படாது" என்றிருந்தது சமீபத்தில் துருக்கி மூலமாக ஜெர்மன் சைனியங்கள் செல்லமுடியாது. இது பிரிட்டனுக்குச் சாதகமான அம்சம்.

### 1941 ஜூன்—ஆங்கிலேய-ருஷ்ய அறிக்கை.

1941-ம் வருஷ கோடைகாலத்தில் ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்த சமயத்தில் துருக்கியின் நடுநிலைமையை யாவரும் கௌரவிப்பார்கள் என்று துருக்கி பிரதம மந்திரி சொன்னார். ஆனால் துருக்கி மூலமாக ஜெர்மன் துருப்புகள் செல்ல அனுமதிக்கப்படவேண்டுமென்று ஜெர்மானியர் கோரினார்கள். ஆனால் டார்டனல்ஸ் யுத்தப் பிரதேசம் என்று துருக்கி சொல்லிவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அதாவது 1941 ஆகஸ்டு 10-ம் தேதி துருக்கிப் பிரதம மந்திரியிடம் பிரிட்டிஷ் அரசாங்கமும், ருஷ்ய அரசாங்கமும் ஒரு அறிக்கையைக் கொடுத்தனர். "பிரிட்டிஷ் அரசாங்கமும், ருஷ்ய அரசாங்கமும் துருக்கிக்குச் சொந்தமாயுள்ள பிரதேசத்தைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொள்ளும். துருக்கி யுத்தத்தில், ஈடுபடாமல் இருக்கவேண்டுமென்பதை இவ்விரண்டு அரசாங்கங்களும் அங்கீகரித்திருப்பதோடு, துருக்கியை வேறே எந்த நாடாவது படையெடுத்தால் துருக்கிக்குப் போதுமான உதவியளிக்கப்படுமென்றும்" சொல்லின.

### 1941 ஸெப்டம்பர்—நாஜி பலாத்காரம்.

துருக்கி ரகசியமாக ஏதோ சூழ்ச்சிகளைச் செய்துவருவதாக ஜெர்மனியில் பிரஸ்தாபிக்கப்பட்டது. "நிலைமை அதிக நெருக்கடியாகிவிட்டது என்பதை

ஜெர்மன் அரசாங்கம் இனி மறைத்து வைத்திருக்க முடியாது" என்றும் ஜெர்மனி
யில் சொல்லப்பட்டது. ஆகவே துருக்கியின் நடுநிலையைக் கெடுப்பதற்காக
பலாத்காரத்தைச் செய்யக்கூடியவிதமாக ஜெர்மன் பிரசாரமும் நடந்துவந்தது.
1941-ம் வருஷம் சரத்காலத்தில் நாஸி ஐந்தாம் படையினர் வெகு மும்மரமாக
துருக்கியில் பரவ ஆரம்பித்தனர். ஜெர்மனிக்குச் சாதகமாக விஷயங்களைப்
பிரசுரிக்கும்படி துருக்கியில் சில பத்திரிகைகளுக்கு ஜெர்மானியர் லஞ்சத்தையும்
கொடுத்தனர். டர்கிஷ் போஸ்டு என்ற பத்திரிகை நிலயத்தைப் பரிசோதனை
செய்தபோது ஜெர்மன் பிரசார சம்பந்தமான புஸ்தகங்களை துருக்கி போலீஸ்
காரர்கள் கைப்பற்றினார்கள். ஜெர்மன் தூதரின் தூண்டுதலுக்கு இணங்கி தான்
நடந்துகொண்டதாக அப்பத்திரிகையின் பிரசுரகர் அறிவித்தார். துருக்கியிலுள்ள
ஜெர்மானியர் யாவரும் நாஸி ஏஜெண்டுகளென்றும் தனக்குக்கூட லஞ்சத்தைக்
கொடுத்து ஜெர்மனிக்குச் சாதகமாக விஷயங்களைப் பிரசுரிக்கும்படி சொன்ன
தாகவும் டான் என்ற துருக்கிப் பத்திரிகை கூறிற்று. ஜெர்மானியரின் நோக்கப்படி
பிரசாரம் செய்யாததற்காக ஒரு ஜெர்மன் கம்பெனி தனது பிரசுரங்களை அப்
பத்திரிகைக்குக்கொடுக்க மறுத்ததாகவும் சொல்லப்பட்டது. ஜெர்மனியின் தூதர்
என்று சொல்லிக்கொண்டு பிரசாரத்தை நடத்திவந்ததற்காக யேனி ஸபா என்ற
பத்திரிகை ஜெர்மானியரை தூஷித்தும், அதற்குத் துருக்கி அரசாங்கம் சரியான
நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லிற்று.

## துருக்கி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்.

நாஸிகளின் செய்கைகளுக்குத் துருக்கி திட்டமான நடவடிக்கைகளை
எடுத்துக்கொண்டது. எட்டு ஜெர்மன் ஒற்றர்கள் கைதி செய்யப்பட்டனர்.
டர்கிஷ் போஸ்டு என்ற பத்திரிகை தடைசெய்யப்பட்டது. ராணுவத் தற்காப்பு
கள் பலப்படுத்தப்பட்டன. ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்து
நீக்கப்பட்டனர். 100 ஜெர்மன் இஞ்ஜினியர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.
இதில் கோல்டன் கார்ன் என்ற இடத்தில் சூரீப் தளத்தில் வேலைசெய்த கப்பல்
இஞ்ஜினியர்களும், கூல்டிஜுக்கிலுள்ள கப்பல் தளத்தில் வேலைசெய்த நிபுணர்
களும், ஜோன்குல்டக்கில் சுரங்கங்களில் வேலைசெய்தவர்களும் சேர்ந்தவர்கள்.
1941-ம் வருஷ முடியும்போது ஜெர்மன் நர்ஸ்களும், சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்
கும் மாதுகளும் 15 நாள் அவகாசத்திற்குள் துறத்தப்பட்டனர்.

## 'புது திட்டம்'.

ஜூலை மாதத்தில் துருக்கியும், ஜெர்மனியும் செய்துகொண்ட வியாபார
ஒப்பந்தம் பயன்படவில்லை. ஏனென்றால் துருக்கி பவுன் 22,000,000 மதிப்புள்ள
க்ரோம் தோலை துருக்கி அனுப்பவில்லை. பிரிட்டனுடன் செய்துகொண்ட உடன்படிக்
கைப்படி பிரிட்டனுக்குத்தான் அனுப்பிற்று. இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு
ஜெர்மன் பிரசாரம் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மன்
தூதன் வான் பேபன் துருக்கிக்கு புது திட்டத்தைக் கொடுப்பதாகச் சொல்லிவந்
தான். "ஜெர்மனியின் புது திட்டத்தை துருக்கி அங்கீகரித்தால் துருக்கியின் ஸ்வ
தந்திரத்தை ஜெர்மனியும் இதாலியும் கௌரவிக்குமென்று" அவன் சொன்னான்.
ஆனால் இப்படி சொல்லிக்கொண்டே கிரீஸை இதாலி படையெடுத்ததைப்
பார்த்துவிட்டு புது திட்டம் என்ன என்பதை துருக்கி கண்டுகொண்டது.
யால்கின் என்பவர் யேனி ஸபா என்ற பத்திரிகையில் பின்வருமாறு சொன்னார்:—
"புது திட்டத்தினால் ருமேனியாவிற்கு ஏற்பட்ட பயன் என்ன? ஒன்றுமில்லை.
துருக்கி சம்பந்தப்பட்டவரையில் துருக்கியர் அடிமையாக வேண்டியதுதான்"
என்றார்.

## 1941 அக்டோபர்—பொருளாதார செம்மட்டி.

1941-ம் வருஷ அக்டோபர் கடைசியில் டாக்டர் க்ளாடியஸ் அங்காராவிற்கு
விஜயம் செய்தபோதுதான் கிரேட் பிரிட்டனுடன் இருக்கும் ஸ்நேகத்தை துருக்கி
முறித்துக்கொள்ளும்படி அதிக பலாத்காரம் செய்யப்பட்டது. துருக்கியை நாஸி
ஆளுகைக்கு உட்படுத்தும் எண்ணத்துடன் 35 ஜெர்மன் பிரதிநிதிகளுடன் இவன்
வந்தான். இக்கூட்டம் பாஸ்பரஸ்ஸைக் கடந்து அனடோலியாவிற்குள் பிர
வேசிக்கும்போது 'நாளைய தினம் (1941, செப்டம்பர் 29உ திங்கட்கிழமை)

துருக்கியின் சரித்திரத்திலேயே அதிக நெருக்கடியான தினமாக இருக்குமென்று'
நாஸி ஏஜெண்டுகள் செய்திகளைப் பரப்பினார்கள். க்ளாடியஸ் பேச்சுவார்த்தைகளை
நடத்திக்கொண்டிருக்கும்போதே ஜெர்மன் அரசாங்கமும் துருக்கியேரில்
பலாத்காரத்தைச்செய்தது.

பிரிட்டனும் ருஷ்யாவும் துருக்கியைப் பங்குபோட்டுக் கொள்ளப்போவதாயும்
வதந்திகள் உலாவின. துருக்கியின் எல்லைப்புறத்தில் நாஸிப்படைகள் குவிக்கப்
பட்டிருந்தன. இதே சமயத்தில் ஹிட்லர், ரிப்பன்டிராப், வான் பேபன்
முதலியோர் பெர்லினில் துருக்கியைப்பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.
அங்காராவிலிருந்து ஜெர்மன் ராணுவ விமானத் தலைவனான ஜெனரல் நோட்
என்பவனும் அழைக்கப்பட்டிருந்தான். இந்த நிலையைக் கவனிக்கும்போது
துருக்கியே படையெடுக்கப்படலாம் போல் காணப்பட்டது. க்ளாடியஸ்ஸும்
அவனுடன் கூடவந்த 35 தோழர்களும் துருக்கியில் பேச்சுவார்த்தை நடத்தி
வந்தனர். இதுவரை துருக்கிக்குக் கொடுக்கவேண்டிய 80,00,000 பவுனைத்தவிர
இன்னும் எவ்வளவு சாமான்கள் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருப்ப
தாகச் சொன்னான். இப்படியாக பலவிதமான பலாத்காரங்களைச் செய்து
துருக்கியிடமிருந்து க்ரோமைப் பெறுவதுதான் நோக்கம். க்ரோம் ஜெர்மனிக்கு
அதிக அவசியமாக இருக்கிறது. ஆனால் பிரிட்டனுடன் செய்துகொண்ட ஏற்பாட்
டின்படி 1943-ம் வருஷ ஜனவரி வரை பிரிட்டனுக்கு அனுப்பவேண்டியிருக்கிறது.
பிரிட்டனுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை துருக்கி முறிக்க வேண்டுமென்
பதும் ஜெர்மானியரின் நோக்கம். ஆனால் துருக்கி கொஞ்சமும் இணங்கவில்லை.
ஜெர்மானியர் செய்த பயமுறுத்தல்களுக்குத் துருக்கி பிரஸிடெண்டு இனோனு பின்
வருமாறு சொல்லிவிட்டான்:—"நமது தேசம் பிறரால் கொடுக்கப்பட்டதில்லை.
இன்று நமக்குத் தேவையாயிருப்பதும் இனி தேவையாக இருக்கப்போவதும்
நம்மாலேயே உண்டு பண்ணப்படும். இதில் பிறர் தலையிடத் தேவையில்லை."

## க்ளாடியஸ்ஸும் க்ரோமும்.

அக்டோபர் மாதத்தில்தான் துருக்கி-ஜெர்மன் வியாபார ஒப்பந்தம் கையெழுத்
தாயிற்று. அந்த நிபந்தனைகளைப் பார்த்தாலே ஜெர்மானியருக்கு ஏற்பட்ட
பாதகமான அம்சங்கள் தெரியவரும். (க்ளாடியஸ் கேட்டபடி 1,50,000 டன்
அல்ல) வருஷம் 90,000 டன் எடையுள்ள க்ரோம் ஸப்ளை செய்வதாக துருக்கி
ஒப்புக்கொண்டது. ஆனால் 1943-ம் வருஷ ஜனவரி மாதத்திற்குப் பிற்பட்டுத்
தான். மேலும் 1942-க்குள் 1,80,00,000 துருக்கி பவுன் பொறுமானத்திற்கு யுத்த
சாமான்களை ஜெர்மனி அனுப்பிவிட வேண்டும். ஆகவே துருக்கிக்கும், பிரிட்டனுக்கும்
நட்பு அதிகமாக இருக்கிறதென்பதை நாஸிகள் தெரிந்துகொண்டிருப்பார்கள்.
துருக்கி தேசிய தினத்தன்று டாக்டர் ஸய்டாம் என்ற துருக்கியின் பிரதம மந்திரி
"ஆக்கிரமண ஆசைகொண்ட நாடுகளை எதிர்த்துப் போராடுவதாகச்சொல்லி"
தேசத்திற்குப்பயம் இன்னும் இருக்கிறது, தீர்ந்துபோகவில்லையென்பதை யாவரும்
உணரவேண்டும். நமது சைனியம் ஏற்கனவே இருந்ததைவிட அதிக பலம்
பெற்றிருக்கிறது. இன்னும் பலப்படுத்தப்படும். அதில் நமக்கு நம்பிக்கையும்
இருக்கிறது" என்று முடித்தார்.

## புகையிலையும், டமோஹாக் விமானங்களும்.

மிகவும் லாபகரமாக வியாபாரம் செய்துகொள்ளுவதென பிரிட்டனும், துருக்கி
யும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. 1941-ம் வருஷ மே மாதத்தோடு முடிவாகிற ஒரு
வருஷ காலத்தில் 350 லக்ஷம் பவுன் பொறுமானமுள்ள சாமான்கள் துருக்கிக்கு
வந்து போயிருக்கின்றன. ஜெர்மன் யூ படகுத் தொந்தரவின் இடையிலேயே
இம்மாதிரி நடந்துவந்தது. கம்பளி, தேக்கு, குருவிந்தக்கல் (emery) பாடம்
செய்த பழங்கள், புகையிலை, சணல், ஆலிவ் எண்ணெய் முதலியவை துருக்கியி
லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. ரயில்வே இஞ்ஜின்கள், ரயில் வண்டிகள்
$7\frac{1}{2}$ லக்ஷம் பவுன் பொறுமானத்திற்கும், ரப்பர் டயர்கள், சர்க்கரை, பஞ்சு நூல்,
ரப்பர், சுரங்கவேலைக்கு லாயக்கான யந்திர சாமான்கள், தொழிற்சாலைச் சாமான்
கள் முதலியன பிரிட்டன் முதலிய நாடுகளிலிருந்து துருக்கிக்கு வந்திருக்கின்றன.
ஹிங்கல் விமானங்களுக்கு உபரிச் சாமான்கள் தேவையாயிருந்தபோது பிரிட்டனில்

வீழ்த்தப்பட்ட ஜெர்மன் விமானங்களின் பாகங்களை பிரிடன் துருக்கிக்குக் கொடுத்தது. சென்ற வருஷம் அக்டோபர் மாதத்திற்குள் துருக்கிக்கு ஹரிகேன் விமானங்களையும் அமெரிக்க டமோஹாக் பைடர் விமானங்களையும் பிரிடன் ஸப்ளை செய்தது. மேலும் பிரிடிஷ் விமானத்தில் பயிற்சியளிப்பவர்கள் துருக்கியில் மாணவிகளைப் பழக்கப்படுத்தினார்கள். தரையில் இருக்கக்கூடிய சிலருக்கு எகிப்தில் பயிற்சி கொடுக்கப்பட்டது. யுத்த சாமான்களைத் தவிர 40,000 டன் கோதுமையையும் பிரிடன் அனுப்பியிருக்கிறது. இன்னும் 30,000 டன் கோதுமை அனுப்பப்படும்.

### துருக்கி-ஜெர்மன் வியாபார சம்பந்தம்.

ஆனால் துருக்கியும் ஜெர்மனியும் செய்துகொண்ட வியாபார ஒப்பந்தம் ஒழுங்காக நடைபெறவில்லை. ஹெர்மன்-கோயரிங தொழிற்சாலை, குருப் தொழிற்சாலை, ஹம்போல்டு-டியூட்ஸ் தொழிற்சாலை ஆக இம்மூன்றும்தான் துருக்கிக்கு சாமான்களனுப்புவதை ஒப்புக்கொண்டன. பாதி முடிவடைந் எஃகு சாமான்களையும், யுத்த சாமான்களையும், யந்திரங்களையும், மோட்டார்களை யும் அனுப்புவதென ஒப்புக்கொண்டன. ஆனால் முன்பு ருஷ்யாவிற்கு அனுப்புவ தாய் ஒப்புக்கொண்ட சாமான்களையே துருக்கிக்கு அனுப்பின. இவை துருக்கிக்குத் தேவை யில்லாததால் துருக்கி அங்கீகரிக்கவில்லை. பொருளாதார ஒப்பந்தம் என்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு நாஸிகள் ஆக்கிரமணம் செய்துவருவார் கள் என்பது யாவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் கிரேட் பிரிடன் செய்து கொண்ட வியாபார நிபந்தனைகளால் பரஸ்பரம் சமாதானமும், சமதையும் ஏற்படும்.

### ராணுவ சூழ்ச்சி.

டாக்டர் கிளாடியஸ்ஸின் பிரயத்தனம் பலிக்கவில்லை. அதாவது பொருளா தாரம் என்ற ஏற்பாடு பலிக்கவில்லை. உடனே ராணுவ சூழ்ச்சிகளை ஜெர்மானியர் கையாண்டனர். பல்கேரிய எல்லைப்புற மார்க்கங்கள் பலதடவை மூடப்பட்டன. திரேஸ் எல்லைப்புறத்தில் பலதடவைகள் ஜெர்மன். பல்கேரியத் துருப்புகள் சேமிக்கப்பட்டன. கருங்கடல் மூலமாக துருக்கியைப் படையெடுக்க அட்மிரல் ரீடர் பல்கேரியாவிற்குச் சென்றார். இந்த சந்தர்ப்பங்களில் துருக்கி கொஞ்ச மும் கலங்கவில்லை. பல்கேரியப் பார்லிமெண்டின் உதவித் தலைவர் ஒரு தடவை பேசுகையில் "பல்கேரியாவின் தெற்கிலுள்ள பிரதேசங்களை பல்கேரியச் சைனி யம் இன்னும் ஆக்கிரமிக்கவில்லையென்றும், பல்கேரிய அரசாங்கம் அங்கே ஸ்தா பிக்கப்படவில்லை யென்றும்" சொன்னான். இதற்குப் பதிலை இகடம் என்ற துருக்கிப் பத்திரிகை எழுதிற்று. "அவர் கூறியது துருக்கிய திரேஸைப் பற்றியதாக இருந்தால், அவர் வந்து ஒரு கைபார்க்கட்டும்" என்று சொல்லிற்று. யேனி ஸபாஎன்ற பத்திரிகையும் அதேவிதமாகக் கூறிற்று. "துருக்கியின் தெற்கில் பிரிடிஷ் சைனியம் இருக்கிறது. தேவையானால் உதவிக்கு வரும்." ஆனால் துருக்கியின்பேரில் அச்சுநாட்டு பலாத்காரம் ஏற்படும் சந்தர்ப்பம் இருந்த தாகவே துருக்கியர் நினைத்தனர். இருந்தாலும் தனது சைனியத்தைப் பலப் படுத்தியதோடு பிரிடிஷ், ருஷ்ய உதவியையும் கொண்டிருந்ததால் அச்சுநாடுகளின் பலாத்தாரம் பலிக்கவில்லையென்றே சொல்லலாம்.

### 1941 நவம்பர்—ஷிமிட் தூது.

கிளாடியஸ் தூது பயன்படாததால் டாக்டர் பால் ஷிமிட் என்பவன் துருக்கிக்கு அனுப்பப்பட்டான். இவன் நவம்பர் 17-ல் கூட ஏழுபேர்களை அழைத்துவந்து துருக்கிப் பத்திரிகைகளை அச்சுநாட்டுக்குச் சாதகமாக விஷயங் களைப் பிரசுரிக்கத் தூண்டவே வந்தான். ஆனால் துருக்கிப் பத்திரிகைகள் யாவும் அபிப்பிராயங்களைத் தங்களிஷ்டப்படி பிரசுரிக்கின்றன. இவை நாஸிகளுக்குப் பாதகமாகத்தானிருக்கும். தான் ஸ்வதந்திர நாடான துருக்கியில் இருக்கிறதை மறந்து நாஸித் திமிருக்குத் தகுந்தபடி ஷிமிட் பேச்சுவார்த்தைகளை நடத்தினான். அமெரிக்கச் செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாதென்றும் சொன்னான். ஆனால் துருக்கிப் பத்திரிகைகள் யாவும் அவைகளின் பத்திராதிபர்களின் இஷ்டப்படி நடத்தப்படுவதால் மற்றவர்களின் அபிப்பிராயப்படி நடத்த முடியாதென்று அவருக்கு பதில் கூறப்பட்டது. ஆகவே ஷிமிட்டும் திரும்பினான்.



### 1941 டிஸம்பர்—குத்தகைக் கடன் உதவி.

"துருக்கியின் தற்காப்பு அமெரிக்காவின் தற்காப்பிற்கு அவசியமானது" என்று அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொல்லி, குத்தகைக் கடன் மசோதாப் படிக்கு துருக்கிக்கும் உதவியளிப்பதாகச் சென்ற வருஷம் டிஸம்பர் மாதத்தில் அறிவித்தார். இது விஷயத்தில் துருக்கி தனது திருப்தியைத் தெரிவித்து தனது நாட்டின் தற்காப்பு விருத்தியாகுமென்றும் நடுநிலைமைக்கு ஒருவித கெடுதி இல்லையென்றும் தெரிவித்துக்கொண்டது. இதுவரை 2½ வருஷகாலமாக யுத்தம் நடந்துவருவதில் துருக்கி நடுநிலைமையை வகித்துவருவதுபோல் இனியும் இருந்துவர நினைத்திருக்கிறது. துருக்கியின் பிரதம மந்திரி சொன்னதாவது: "நமது வெளிநாட்டுத் திட்டம் கொஞ்சமும் மாறவில்லை.........ஏற்கனவேயுள்ள திட்டப்படி நடந்துகொள்ளுவதெனத் தீர்மானித்திருக்கிறோம்."

### 1942 ஜனவரி—ருஷ்யாவைப் பற்றிய பொய்ப்பிரசாரம்.

கொஞ்சகாலமாகத் துருக்கிக்கு பிரிடனைப் பற்றியும் ருஷ்யாவைப் பற்றியும் விரோத எண்ணம் ஏற்படும்படியாக நாஸிப் பிரசாரம் நடந்துவருகிறது. கடந்த வருஷம் ஜனவரி மாதத்தில் துருக்கியில் அமெரிக்கப் பிரதிநிதியாக இருந்த மிஸ்டர் ஜான் மாக் மர்ரே என்பவர் டார்டனல்ஸையும் ருஷ்யர் கைப்பற்ற நினைத்திருப்பதாக அபிப்பிராயப்பட்டார். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாஸிகள் நேசநாடுகளுக்கும் துருக்கிக்கும் விரோதத்தை உண்டுபண்ணப் பார்க் கின்றனர். ஆனால் நேசநாடுகளோடு துருக்கி கொண்டிருக்கும் சிநேக பாவத்தை யேனி ஸபா பத்திரிகையின் பத்திராதிபரான யால்சின் என்பவர் எழுதியிருக்கிறார். இவர் மிகவும் கௌரவம் வாய்ந்தவர். "துருக்கியின் ஜனநாயகம் ஸ்தாபிக்கப் பட்டது முதல் ருஷ்யாவுடன் சிநேகமாகவே இருந்துவருகிறது. (1921-லேயே துருக்கி-ருஷ்ய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது). ருஷ்யர்களிடம் நமக்கு நம்பிக்கை உண்டு. நேசநாடுகளுக்கும் துருக்கிக்கும் சிநேகபாவம் வெகுநாள் நீடித்திருக்கும் என்று அங்காராவிலுள்ள நிபுணர்கள் நினைக்கின்றனர்" என்று எழுதியிருக்கிறார். கொஞ்ச நாள் கிரமித்து மிஸ்டர் மாக் மர்ரே அவ்விதம் சொல்லவில்லை யென்று துருக்கிப் பத்திரிகைகள் பிரசுரித்தன. இது டாக்டர் கோயபல்ஸுக்கு கலக்கத்தை உண்டுபண்ணிற்று. (1942 ஜனவரியில்) மாஸ்கோவில் ஆங்கிலேய-ருஷ்யப் பேச்சுவார்த்தை முடிந்ததும் மறுமுறையாக துருக்கிக்கும் நேசநாடு களுக்கும் பிளவை உண்டுபண்ண கோயபல்ஸ் முயற்சித்தான். துருக்கியை பிரிடன் ருஷ்யாவிடம் ஒப்படைத்ததாக மறுபடி பிரசாரம் செய்யப்பட்டது. ருஷ்யா ஐரோப்பாவில் வெற்றியுடன் கூடியிருப்பதை பிரிடனும் அமெரிக்காவும் தடுக்கமுடியாதென்றும் அந்நிலை துருக்கிக்குப் பாதகமாக முடியுமென்றும் விசித்திரமாகக்கட்டிவிடப்பட்டது. ஆனால் ஐரோப்பிய வியவகாரங்களில் பிரிட னுக்கு அதிக அக்கரையில்லையென்றும், ருஷ்யாவிற்குத் தேவையான உதவியைத் துருக்கி கொடுக்கலாமென்றும் எடுத்துச் சொல்லப்பட்டது.

பிரிடிஷ் பார்லிமெண்டு சபைமுன்பாக மிஸ்டர் ஈடன் பேசும்போது ருஷ்யாவில் நடந்த பேச்சுவார்த்தைகளில் துருக்கியைப் பற்றி ஒன்றுமில்லை என்றும் யுத்தத்தை நடத்தும் பிரச்னையே சர்ச்சை செய்யப்பட்டதென்றும் அறிவித்தார். "ருஷ்யாவிடமிருந்து துருக்கி பயப்படக் காரணமில்லையென்றும் துருக்கிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிரிடிஷ்-ருஷ்ய ஒப்பந்தத்தின்படி யாவும் நடைபெறுமென்றும்" ஈடன் சொன்னார். அங்காராவில் துருக்கியின் அயல் நாட்டு மந்திரி ஸரோஜகுலு மாஸ்கோவில் நடந்த கூட்டம் தனக்கு அதிகத் திருப்திகரமாக இருந்ததாயும், அங்கு நடந்த சம்பாஷணையின் ஸாராம்சத்தையும், மாலடோவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றியும் ஹூக்கஸன் என்ற பிரிடிஷ் பிரதிநிதி தனக்கு அறிவித்ததாயும் சொன்னார். மிஸ்டர் ஈடனும் பிரிடிஷ் பிரதிநிதியும் அறிவித்ததற்குத் துருக்கி தனது திருப்தியைத் தெரிவித் துக் கொண்டது.

### 1942 பிப்ரவரி—பிரிஸ்டலில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் பேசியது.

நேசநாடுகளிடம் இவ்வளவு ஊர்ஜிதமாக துருக்கி சிநேகபாவத்தைத் தெரி யப்படுத்திக்கொண்[illegible] ஜெர்மன் பிரசாரம் குறைந்தபாடில்லை. 1942-ம்வரு

பிப்ரவரி 9-ல் பிரிஸ்டலில் கிரிப்ஸ் பேசியதை வைத்துக்கொண்டு மறுபடி ஜெர்மன் பிரசாரம் ருஷ்யாவைப்பற்றி தலைகிளம்பிற்று. நேசநாடுகள் வெற்றி பெற்றதும் ஐரோப்பாவையும், துருக்கியையும் ருஷ்யா கவளீகரித்துக்கொள்ளு மென்றும் ருஷ்யாவிலுள்ள பிரிடிஷ் பிரதிநிதியான கிரிப்ஸ் சொன்னதாக ஜெர்மன் பிரசாரம் கிளம்பிற்று.

உண்மையில் கிரிப்ஸ் பிரிஸ்டலில் என்ன சொன்னார் என்று பார்ப்போம்:— "ஐரோப்பிய அரசாங்கங்களைக் கட்டுப்படுத்த ருஷ்யாவிற்கு எவ்வித சிந்தனையு மில்லையென்பதை நான் அறிவேன். பொதுவுடமைக் கக்ஷியில் மெச்சத்தக்க விஷயங்கள் பல இருக்கின்றன. தங்கள் நாட்டைச் சீர்படுத்திக்கொள்ளுவதிலேயே ருஷ்யர்களுக்குப்போதுமான அலுவல்கள் இருக்கின்றன. தேசாக்கிரமண ஆசை அவர்களுக்குக் கிடையாது". இவ்விஷயங்கள் நாஸிகளுக்குப் பிடிக்காதலால் பிரசாரத்தை சற்று மாற்றிக்கொண்டனர். நாஸிகள் சொன்னதாவது:—"பிரிடனில் பொதுவுடமைக்கக்ஷியைஸ்தாபிக்கும்படி கிரிப்ஸை ஸ்டாலின் அனுப்பியிருக்கிறார்." பொதுவுடமைக் கக்ஷி யென்பதற்கு நாஸி ரேடியோ பலவித பொருள் கூறுகிறது. நாஸிகளின் உலகாக்கிரமண ஆசையைத் தடுப்பதரெல்லாம் பொதுவுடமைக் கக்ஷி என்று பொருள்படும்படி நாஸிகள் கூறுகின்றனர். துருக்கியர்களுக்கு இதன் உண்மைக் கருத்துத் தெரியுமாதலால் நாஸி பிரசாரம் நம்பப்படவில்லை. "சண்டைக்கு ஐரோப்பா செய்த உதவி" என்ற சிறு புத்தகத்துடன் A. E. யால்மன் என்பவர் 1941-ம் ௵ டிஸம்பர் 3உ வெளிவந்த வாடன் என்ற பத்திரிகையில் எழுதியுள்ளார்:—"பொதுவுடமைக் கக்ஷியை எதிர்ப்பது என்ற வியாஜத்துடன் ருமேனியா முதலிய நாடுகளிலிருந்து நாஸிகளால் சைனியம் சேகரிக்கப்படுகிறது. ருஷ்யாவில் தினம் ஆயிரக்கணக்கான பேர் இறக்கின்றனர். அவர்களுக்கு ஈடு செய்ய ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து நாஸிகள் சைனியத்தைச் சேகரிக்கின்றனர்."

## துருக்கியின் மனப்பான்மை.

துருக்கியின் ஸ்வதந்திரப் பத்திரிகைகளைப் பார்த்தால் ஜெர்மனியுடன் செய்து கொண்ட சிநேக ஒப்பந்தமும், ஜெர்மன் பத்திரிகைகளின் பிரசாரமும், வியாபாரத் தூதுகோஷ்டிகளும், ராணுவ மெரட்டல்களும், ருஷ்யாவைப் பற்றிய பொய் பிரசாரமும் துருக்கியின் ஸ்வதந்திரத்தைக் கெடுக்க முடியவில்லையென்று தெரிய வரும். தான் தீவிரமாக நடுநிலைமையை வகிப்பதுடன் நாஸிகளுக்கு உட்படாமல் துருக்கி இருக்கிறது. நேசநாடுகள் தர்மத்திற்காகச் சண்டை செய்வதால் வெற்றி கிடைக்குமென்றும் துருக்கி நம்பியிருக்கிறது.

## துருக்கியின் நடுநிலைமை.

துருக்கி நடுநிலைமை வகிப்பதால் மத்தியக்கிழக்குக்கு யுத்தம் பரவாமல் இருக்கிறது. இது நேசநாடுகளுக்கு சாதகமான அம்சம். துருக்கியினுள் எதிரிகள் புகுந்திருந்தால், இராக், இரான், ஸிரியா முதலிய நாடுகளின் நிலை கெட்டுப் போயிருக்கும். இந்நாடுகளில் நாஸிகள் செய்த சூழ்ச்சிகளை நேசநாடுகள் தடுப்பதற்கும் சாதகமாக இருந்தது. இவ்விடங்களில் எதிரி மூஸ்தீப்பு குறைந்ததாலேயே துருக்கியின் நிலைமையும் நேசநாடுகளின் பலமும் விருத்தியடைந்தன. அக்ஸாம் என்ற பத்திரிகையில் நெஜ்முடின் ஸடாக் எழுதும்போது: "துருக்கியின் நடுநிலைமையால் துருக்கிக்கும் நேசநாடுகளுக்கும் நன்மையேற்பட்டது. மேலும் இங்கிலாந்தின் எதிரிகளுடனும் நாம் நட்புடன் இருக்கிறோம்". என்றார்.

## துருக்கியின் அனுதாபம்.

ஜனநாயகத்தையேதான் துருக்கி அனுசரிக்கிறது. துருக்கி கொண்டுள்ள தீவிரக் கொள்கையினால் காகஸஸ், இரான், இராக் முதலிய இடங்களில் உள்ள எண்ணெய்ப் பிரதேசங்களை நாஸிகள் கைப்பற்ற முடியவில்லை. பிரிடனுக்கு துருக்கி செய்த உபகாரத்தைப்பற்றி ஒரு துருக்கி பத்திரிகை எழுதுகிறதாவது:— "இந்த யுத்தம் முடிவடைவதற்குள் இங்கிலாந்திற்கு எவ்வளவோ சிநேகிதர்கள் ஏற்படலாம். எப்போதும் நினைக்கக்கூடிய சிநேகம் துருக்கியுடன்தான் ஏற்பட்டிருக்கிறது". இதற்கு திருஷ்டாந்தமாக பிரான்ஸ் விழுந்த காலத்தில் பிரிடன் தனியாக இருந்தபோதும் துருக்கி சிநேகமாகவே நடந்துகொண்டதை வைத்துக் கொள்ளலாம்.

# வார யுத்தச் செய்திகள்.

### 11—4—42-லிருந்து 17—4—42-வரை.

**பர்மா.**—இம்மாதம் முதல் வாரத்தில் தளகர்த்தர் சியாங் கை ஷேக்கும் அவர் மனைவியும் லாஷியோ, மாண்டலே, மெய்மியோ, இன்னும் சீனர்களுடைய போர் முனை முதலியவைகளைப் போய் பார்வையிட்டார்கள். அங்குள்ள அமெரிக்க, பிரிடிஷ் சேனாதிபதிகளுடனும் கலந்து பேசினார்கள். அச்சந்திப்பின் காரணமாக தலைமையை ஒற்றுமைப்படுத்தல், ஸப்ளைகள், போக்குவரத்து, முதலியவைகள் சம்பந்தமாக பல முக்கிய விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

ஒரு வாரம் வரை சீனர்கள் வீரத்தனமாகப் போர் புரிந்தனர். பிறகே டோங்கூ எதிரி வசமாயிற்று. இதற்குப் பிற்பட்டு ஜப்பானியர்கள் அகண்ட பிர தேசத்தின் வழியாக முன்னேறி சீன, பிரிடிஷ் ஸ்தானங்களைத் தாக்கினார்கள். ஸ்வா நதிக்கரையில் டோங்கூவுக்கு வடக்கே சீன, பிரிடிஷ் ஸ்தானங்களான டாங்டுவிங்கியி ('Taungdwingyi), மிக்யாங்யே (Migyangye) தாக்கப்பட்டுள்ளன. மிக்யாங்யே எதிரி வசமாயிற்று. ஆனால் டாங்டுவிங்கியி (Taungdwingyi)ல் இன்னும் போர் நடந்துவருகிறது. ஏப்ரல் 7-க்கும் 11-ம் தேதிக்குமிடையில் நடந்த சண்டையில் யேடஷி வழியாக, தாகயா வரை ஜப்பானியர் முன்னேறினர். ஸ்வா நதிக்கு வடக்கே ஸ்வல்ப தூரத்திலுள்ள மியோலாவை நோக்கி சீனப் படைகள் பின்வாங்கியிருக்கின்றன. மாச்சி (Mawchi) பிரதேசமெங்கும் காவல் புரியப்படுகிறது.

**திரிகோணமலையைச்** சென்ற வியாழக்கிழமை ஏராளமான எதிரி பாம்பர், பைடர் விமானங்கள் தாக்கியதில், எதிரிக்கு 6 விமானங்கள் நாசமாயின. இன்னும் 6 விமானங்கள் தாக்கப்பட்டு சேதப்பட்டிருக்கும். 4 விமானங்களும், விமானம் ஏற்றிச் செல்லும் கப்பலும் தாக்கப்பட்டன. விமானங்கள் ஏற்றிச் செல்லும் ஹெர்மிஸ் என்ற பெயருள்ள கப்பலை எதிரி விமானங்கள் தாக்கி அதைக் கடற்கரைக்குப் பத்து மைலுக்கருகாமையில் மூழ்கடித்தன.

**வங்காளக் குடாக்கடல்.**—அந்தமான் தீவுகளை பிரிடிஷ் விமானங்கள் வெற்றி கரமாகத்தாக்கின.

**பிலிப்பைன்ஸ் தீவுகள்.**—பாடானிலிருந்தும், மணிலாக் குடாவிலிருந்தும் கரிஜிடார், ஹூகஸ்கோட்டை இவ்விரண்டையும் எதிரிகள் பலமாகத் தாக்கினர்.

பிலிப்பைன்ஸ் தீவு கணங்களைச் சேர்ந்த ஸீபு தீவில் 12,000 ஜப்பானியத் துருப்புகள் வந்திறங்கின. அங்கு எதிர்ப்பு அதிக பலமாக இருப்பதினால் எதிரி கள் கொஞ்ச மைல்களுக்குமேல் முன்னேற முடியவில்லை. பனே (Panay) என்ற இடத்திலும் எதிரிகள் இறங்கியிருக்கிறார்கள்.

பலமான தற்காப்புடன்கூடிய ஜப்பானியக் கப்பல் ஒன்று ஸிலிபஸ் கடலில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான நீர்மூழ்கியால் மூழ்கடிக்கப்பட்டது. பிலிப்பைன்ஸுக்கு அருகில் 4 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 4 சேதமாயின.

**நியூ கினி.**—தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியர்கள் தற்காப்புதான் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் போட்ட திட்டங்கள் முறிந்துவிட்டன. லே, ராபால், ஸாலமன் தீவுகளிலுள்ள பெய்ஸி (Faisi) இவைகளை அமெரிக்க, ஆஸ்திரேலிய பாம்பர் விமானங்கள் தாக்கின.

**ருஷ்யா.**—ஆர்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரையிலுள்ள விஸ்தாரமான போரரங்கத்தில் கடுமையான போர் நடைபெற்று வருகிறது. அங்காங்குள்ள சைனியங்களைத் தப்புவிக்க நாஸிகள் இன்னும் புது துருப்புகளை ஏராளமாக அனுப்பிவருகிறார்கள், பனி உருக ஆரம்பித்து நாலாபக்கங்களிலும் சேறாக ஆன போதிலும் ருஷ்யத் துருப்புகள் எதிரிகளுக்கு அவகாசம் கொடுக்காமல் போர்

புரிகின்றன. கார்கவ்விற்கு வடக்கே டிமோஷெங்கோ எதிரி சைனியங்களைச் சிதறி ஓடும்படி செய்தார். முக்கியமாக மத்தியப் போர்முனையிலும், டானெட்ஸ் பிரதேசத்திலும் தாக்குதல்களும் திரும்பித் தாக்குதலகளுமாக மும்மரமான சண்டை நடந்துவருகிறது. பிரயான்ஸ்க் போர்முனையில் டெஸ்னா நதியை வசப்படுத்திக்கொள்ள இருகக்ஷியினரும் சண்டைசெய்து வருகின்றனர்.

பாரெண்ட்ஸ் (Barents) கடலில் 7,000 டன் நிறையுள்ள இருப்பு ஏற்றிச் செல்லும் எதிரிக்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. எதிரித் தாக்குதல்களுக்கு இடையில் சேதமாகாமல் அமெரிக்க, பிரிடிஷ், டச்சுக்கப்பல் கூட்டமொன்று மர்மான்ஸ்க் வந்துசேர்ந்தது.

ஏராளமாக நஷ்டம் நேருவதால் ஜெர்மன் அணிகளில் துருப்புகள் அதிருப்தி கொண்டு யுத்தரங்கத்தை விட்டுச் செல்வதாகப் பிரஸ்தாபம். அப்படி செல்லுகிறவர்கள் போலந்தின் காடுகளிலும் பால்டிக் ஸமஸ்தானங்களிலும் ஒளிந்திருந்து ஜெர்மானியருக்கு வரும் ஸப்ளைகளைச் கொள்ளையடிக்கின்றனர்.

**மரியூபோல் சம்பவம்.**—மரியூபோலிலுள்ளவர்களைக் கூட்டமாக ஜெர்மானியர் கொளுத்திவிட்ட தகவல் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டதும் அங்கிருந்த யூதர்களும் பொதுவுடமைக் கக்ஷியினரும் வயது முதிர்ந்தவர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் வெளியேற்றும்படி உத்தர விடப்பட்டது. சுமார் 2,000 முதல் 3,000 பேர்கள் வெளியேற்றப்பட்டனர். சுமார் ஏழு மையில்தூரம் சென்றதும் ஜெர்மானியரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**துருக்கி.**—திரேஸையும் ஸிரியாவையும் துருக்கிக்குக் கொடுப்பதாகச் சொல்லி ஜெர்மானியர் பலாத்காரத்தை உண்டுபண்ணுவதாகத் தெரிகிறது. மாட்ரிட்டிலுள்ள பெர்லின் நிருபர் 'இதுவரையில் இருந்த கௌரவத்தைக் காட்டிலும் அதிகமான கௌரவம் துருக்கிக்குக் காண்பிக்கவேண்டிய நிலை வந்திருக்கிறது' என்று எழுதியிருக்கிறார். நடுநிலைமையை நீடித்து வகிப்பதற்காகத் துருக்கிக்கு பிரிடனும் அமெரிக்காவும் முடிந்த உதவியைச் செய்கின்றனர்.

**லிபியா.**—அச்சு நாட்டினர் இருக்கும் ஸ்தானத்திற்கு தென்பக்கத்தில் கடமாட்டமொன்றும் இல்லை. கஸாலாவிற்கு மேற்கிலுள்ள ரஸ்தாவில் நாம் அதிகக் குண்டுகள் வீசியதின் காரணமாக எதிரி டெம்ராத்திற்குச் சென்றிருக்கிறான். காடேலஹமாஹாக்கு வடகிழக்கிலுள்ள ஸிடிபிரகிஸாவில் தற்சமயம் எதிரி இருக்கிறான். பிரிடிஷ்காரர்கள் முதலில் தாக்குவார்களென்று ரோமல் எதிர் பார்த்தான். அதனால் தென்பக்கத்திலுள்ள படைகளை அழைத்துக்கொள்ளலாமென்றும் மார்டுபோ, டெர்ணு, டிமிமி முதலிய விமான தளங்களை இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாமென்றும் ரோமல் நினைத்தான்.

**மால்டா.**—சில நாட்களாக எதிரி குண்டுவீச்சு மட்டுப்பட்டிருக்கிறது.

**விஷி.**—இங்கு நிலைமை மோசமாகி வருகிறது. பிரஸாவில்லி (Brazzaville)யில் அமெரிக்கப் பிரதிநிதியின் நியமனத்தை விஷி அரசாங்கம் கண்டித்து அனுப்பிய செய்திக்குப்பதிலாக அமெரிக்கக் காரியதரிசி ஸம்னர் வெல்ஸ் மறுபடியும் ஸ்வதந்திர பிரெஞ்சு அரசாங்கத்தைத் தான் அங்கீகரித்திருக்கிறார். மேலும் ஸ்வதந்திர பிரெஞ்சு அரசாங்கத்திற்குச் சொந்தமான நாட்டுமக்களுடன்தான் அமெரிக்கா சம்பந்தம் வைத்துக்கொள்ளுமென்றும் சொல்லப்பட்டது. விஷி ஜெர்மனியின் ஆதிக்கத்தில் இருப்பதால் மேற்கு ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு அரசாங்கம் விஷியின் தலைமையை ஒப்புக்கொள்ளவில்லை.

இதற்கு விஷி பதிலனுப்புகையில் அமெரிக்க காரியதரிசி அனுப்பிய செய்தி தனக்கு அவமானத்தை உண்டுபண்ணுவதாயும், அமெரிக்கர்கள் வீண் பிரசாரத்தைச் செய்வதாயும், அமெரிக்கர் போன்ற அந்நிய நாட்டினர் சொல்லும் விதமாக விஷி அரசாங்கத்தை நடத்த முடியாதென்றும் [illegible]யிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட பதிலை ஜெர்மானியர் தயாரித்திருக்கிறார்கள் என்பது உண்மை. வரவர விஷிமேல் ஜெர்மன் பலாத்காரம் அதிகரித்துவருகிறது. ரியோம் விசாரணையில் யுத்தக் குற்றத்தை பிரான்ஸ்பேரில் சுமத்தமுடியாது போயிற்று. பிரான்ஸ் யுத்தத்திற்குத் தயாராகவேயில்லை என்றுதான் முடிந்தது. இது ஜெர்மனிக்குப் பாதகமான முடிவு. ரேனல்டு, பாய்ஸீ தொழிற்சாலைகளை பிரிடிஷார் தாக்கியதால் விஷி கோபம் அடைந்து பிரிடனுக்கு விரோதமாக பிரசாரம் செய்யவில்லையென்றும் ஜெர்மன் கோபம் கொண்டிருக்கிறது. ஆக இவ்விதக் காரணங்களைச் சொல்லிக்கொண்டு ஜெர்மனி, ருஷ்யச் சண்டையை ஆரம்பிப்பதற்குமுன் விஷி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கிறது. இல்லாவிடில் நேசநாடுகளுடன் பிரான்ஸ் சேர்ந்தாலும் சேர்ந்துவிடுமென்று நினைக்கிறது. பிரான்ஸிலுள்ள யூதர் முதலிய பலவித கக்ஷியினர் நேசநாடுகள் பக்கம் போவார்களென்றும் பயப்படுகிறது. டார்லான் ஜெர்மனிக்குச் சாதகமாகவில்லை. துரோகியான லவால் தலைமை வகிப்பான். பீடேன் பேருக்குத் தலைவனாகயிருப்பான். தற்சமயம் ஸ்வதந்திரப் பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட ஸிரியா, வடமேற்கு ஆபிரிக்கா முதலியவைகளை லவால் பிடிக்கப் பார்ப்பான். மார்டின்கூ, காடிலோப், ஸெயிண்டு பீரி முதலியவைகளையும் வசப்படுத்தப் பார்ப்பான். லவால் திரும்பிவிட்டால் வட ஆபிரிக்காவிற்கு அமெரிக்கா உணவுகளை அனுப்பாது. விஷியில் அமெரிக்கப் பிரதிநிதியாயிருக்கும் லீஹி திரும்ப அழைக்கப்படுவார்.

**யுத்தக் குற்ற சம்பந்தமாக ரியோம் விசாரணை.**—பிப்ரவரி 19உ முதல் நடந்து வந்த விசாரணை காலவரையில்லாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு ஜெர்மன் சிப்பாயைக் கொன்றதற்காக பாரிஸில் 5 பொதுவுடமைக் கக்ஷியினர் சுடப்பட்டனர். தாக்குதலுக்குக் காரணத்தைத் தெரிவிக்காவிட்டால் வெள்ளிக்கிழமைக்குள் இன்னும் அதிகமான யூதர்களும், பொதுவுடமைக் கக்ஷியினரும் சுடப்படுவார்கள்.

**நீரிவில் பிரிடஷ் விமானப்படையெடுப்பு** ஒன்று ஞாயிற்றுக்கிழமை செய்யப்பட்டது. அங்குள்ள அன்ஸால்டோ பயட் தொழிற்சாலையில் ஜெர்மனிக்கு யுத்த சாமான்கள் செய்யப்படுவதால் தாக்கப்பட்டது. ரோமலுக்கு சாமான்கள் செல்லும் போக்குவரத்து மார்க்கங்களெல்லாம் தடுக்கப்பட்டன.

**நார்வே.**—நாஸி திட்டத்திற்கு உட்பட்டு மதப்பிரசாரம் செய்ய இஷ்டப்படாத பாதிரிமார்கள் ஆஸ்லோவில் ராஜினாமாச் செய்த விஷயத்தை ஏற்கனவேயே பிரஸ்தாபித்திருக்கிறோம். இதில் 77 பாதிரிமார்கள் சேர்ந்தனர். இவர்கள் யாவரையும் கைதி செய்யும்படிக்கும், எல்லா மாதாக்கோவில்களை மூடும்படிக்கும் குவிஸ்லிங் மந்திரி உத்தரவிட்டிருக்கிறான். ஆனால் நாஸிகள் தலையிட்டு உத்தரவை ரத்து செய்தனர். பாதிரிமார்கள் வெற்றி பெற்றனர்.

**பலவகைப்பட்டவை.**—1. ஜப்பானுடன் இரான் ராஜீய சம்பந்தங்களை ரத்து செய்துவிட்டது.

2. 1942-43-க்கு 52,860-லக்ஷம் பவுனுக்கு பிரிடனின் வரவு செலவு திட்டம் போடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தைப் பிரேரேபிக்கும்போது ஸர் கிங்ஸ்லிவுட், 'நமது நாட்டிற்கு சமீபத்தில் எதிரி இன்னும் இருக்கிறான். நமது தற்காப்பு முறைகளை நிறுத்தக்கூடாது. நமது வரவு செலவு திட்டங்களை எதிரியால் இன்னும் தடுக்கமுடியவில்லை என்றே நாம் சொல்லலாம்' என்றார்.

3. மதராஸ் யுத்த நிதி 2 கோடி போய் சேர்ந்துவிட்டது. இதைப்பற்றி மேன்மை தங்கிய மதராஸ் கவர்னருக்கு, மேன்மை தங்கிய வைஸ்ராய் நற்செய்தி அனுப்பும்போது, 'யுத்தத்தின் முதல் 19 மாதங்களில் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டது. அடுத்த 12 மாதங்களில் மற்றொரு கோடி ரூபாயை சேமித்துவிட்டீர். இதிலிருந்தே முடிவான வெற்றியடையும்வரை தீவிரமாக நீர் இருந்து வருகிறீர் என்பது தெரிகிறது. மதராஸ் மகாணத்தைப்பற்றி இந்தியாவே மகிழ்கிறது. நீடித்து இவ்விதமே நடந்துகொள்வீராக' என்று அனுப்பியிருக்கிறார்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—4—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.-விரோதி ஸப்ளைக் கப்பல்கள்- நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக் கருகாமையில் | இரண்டு கப்பல்களும் தாக்கப் பட்டன. | 1 விமானம். | |
| | இரவில்.-ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்-ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland) பிரதேசங்கள். | | 5 விமானங்கள். | |
| | **லிபியா Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | | 1 விமானம்; இன்னும் சில சேதமாயின. |
| | அலைதாங்கிகள், கப்பல்கள்.-பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—பெர்க்கா (Berka). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை எங்கும். | | 19 விமானங்கள். | 59 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). லேயி (Lae). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய முன்னணித் துருப்புகள்.—டாங்கூ (Toungoo) போர்முனையில். | | | |
| **7—4—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). பகலிலும், இரவிலும் ஏற்பட்ட விமானத் தாக்குதல்களுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள் — ஸிரெனைகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமானமிறங்கும் இடம்.-பெர்கா (Berka). | | | |
| | விமான நிலயம்.—டெர்ண (Derna). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் தரையிலிருக்கும் விமானங்கள்.—போர் முனைஎங்கும். | | 14 விமானங்கள். | 63 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தீவில் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்த இடங்களில் வேவு பார்த்தல். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—4—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள் இங்கிலீஷ் கால்வாய் (English Channel), கலே (Calais), பொலாயின் (Boulogne) பிரதேசங்கள். | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—ஹாம்பர்க் (Hamburg) வடமேற்கு ஜெர்மனியில் இன்னும் இதர இடங்கள். | | | |
| | கப்பல் துறைகள்.—லெஹாவர் (Lehavre). | | 8 விமானங்கள். | |
| | விரோதி ஸப்ளைக் கப்பல்களின் கூட்டம்.—ஜட்லாந்து (Jutland) கடற்கரைக்கருகாமையில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi), மார்டுபா (Martuba). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | 12 விமானங்கள். |
| | விமான நிலயம்.—கிரீட் (Crete). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | 6 விமானங்கள். | 30 விமானங்கள். |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | 9 விமானங்கள். |
| | ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | காவலுலவு.-கடற்கரையைச் சுற்றிலும். | | | |
| **9—4—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில் நேர்ந்த விமான எதிர்ப்புகளுக்குத் தகவல் கிடைக்கவில்லை. | | | 6 விமானங்கள். |
| | இரவில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயங்கள். — ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.—கிரீட் (Crete). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | 5 விமானங்கள். | 9 விமானங்கள். |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் அரங்கம் முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **9—4—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லேயி (Lae). | | | |
| **10—4—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கிரீட் (Crete). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள். தரையிலுள்ள விமானங்கள்.—போராரங்கம் முழுவதிலும். | | 5 விமானங்கள். | 17 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியத் துருப்புகள்.-ஸிடாங் (Sittang) பள்ளத்தாக்குப் போர்முனை. | | | |
| **11—4—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் நேர்ந்த விமான நடமாட்டங்களுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள். விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.-போராரங்கம் முழுவதிலும். | | 2 விமானங்கள். | 5 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்கள்). | | | |
| | விமான நிலயங்கள், கப்பல்கள்.-ராபால் (Rabaul) | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தரையிலுள்ள விமானங்கள்.—லேயி (Lae) | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | பெய்ஸி (Faisi). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—4—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | பகலில்.—ரயில் வண்டிகள் தங்குமிடம் ஹாஸிபுருக் (Hazebrouck) விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (Northern France). | | 13 பைடர், 1 பாம்பர் விமானங்கள். | 4 பைடர் விமானங்கள். |
| | இரவில்—ராணுவ லக்ஷியங்கள்.—ரூர் (Ruhr). | | | |
| | **இதாலி (Italy)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டூரின் (Turin). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி முகாம் செய்திருக்கும் இடங்கள், மோட்டார்கள் போக்குவரத்து, பீரங்கி ஸ்தானங்கள்.—டிமிமி (Tmimi) பிரதேசத்தில். | | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.-பெங்காஸி (Benghazi) | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமானநிலயங்களிலுள்ள விமானங்கள்.—போராரங்கம் முழுவதிலும். | | 3 விமானங்கள். | 8 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லேயி (Lae). டிமோர்—(Timor) (Dutch) துறைமுகத்திலுள்ள கப்பல்கள், விமான நிலயங்கள்.—கோயபாங் (Koepang) | | | 4 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமான நிலயம்.—டாங்கூ (Toungoo). | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—4—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரையில் அங்குமிங்கும் சில இடங்கள். | சொற்பச் சேதம்; சிலர் காயமடைந்தனர். | 1 விமானம். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | | 2 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—4—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 4 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி** (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **8—4—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). பகலில்.—இங்கிலாந்தி (England) ன் கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம். | சிலர் கொல்லப்பட்டனர். | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 9 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ்** (Philippines) **தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). அமெரிக்கத் துருப்புகள்.—போராங்கத்தின் முன்னணியில். | | | |
| **9—4—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). ஒரு பட்டணம்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில். | | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன்** (Solomon) **தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). டுலாகி (Tulagi). | | | |
| **10—4—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்) தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ்** (Philippines) **தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). கரிஜிடார் (Corregidor) கோட்டை. | | | |
| **11—4—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | அநேக விமானங்கள் சுடப்பட்டோ, நாசமாக்கப்பட்டோ விட்டன. | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **11—4—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி** (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 2 விமானங்கள். | |
| **12—4—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). இரவில்.—இங்கிலாந்தி (England) ன் தென்கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம். | | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ்** (Philippines) **தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). கரிஜிடார் (Corregidor). | | | |
| **13—4—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன்** (Britian)—(ஜெர்மன் விமானங்களால்). இரவில்.—இங்கிலாந்தி (England) ன் வடமேற்கில். | சொற்பச் சேதம். | | |
| | **மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). மால்டா (Malta). | | 2-விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ்** (Philippines) **தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). கரிஜிடார் (Corregidor). | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**எதிர் குண்டுகள்.**

சீனர்கள் சொல்லும் விதமாக 'ஒவ்வொரு வதந்தியும் எதிரி போடும் ஒரு குண்டுக்குச்
சமமாக இருக்கிறதென்ற' அநுபவத்திலால் தெரியவருகிறது. இந்தியாவில்
ஐந்தாம் படையினர் இல்லை. இருந்தாலும் பரபரப்பை உண்டுபண்ணும் நோக்கத்
திடன வதந்திகள் உலாவுகின்றன. இதுதான் தற்சமயமுள்ள ஆபத்து. அபிப்
பிராயங்கள் ஆழமாகப்பதியும் இந்தக் கிழக்கு நாடுகளில் அக்கரையில்லாமல் முச்
சந்திகளிலும், கடைவீதிகளிலும் உண்டாகும் பொய் சமாசாரங்கள் தந்தி,
ரேடியோ செல்லுவதைக் காட்டிலும் துரிதமாக உலாவுகின்றன.

அச்சு நாடுகளிலோவெனில் செய்திகள் யாவும் அரசாங்கத்தாரால் கட்டுப்
படுத்தப்படுகின்றன. ஜப்பானில் பிறநாட்டுச்செய்திகளை ரேடியோ மூலம்
கேட்கக்கூடாது. ஜெர்மனியில் அயல் நாட்டுச் சமாசாரங்களைக் கேட்டால் கொலை
தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தியாவில் தாராளமாக செய்திகளைக் கேட்கவும்
பிரசுரிக்கவும் அனுமதிக்கப்படுகிறது.

வி வி வி வி வீ வி

**'அக்யாப்'.**

இதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளு
வோம். ஏப்ரல் 2உ அக்யாப் எதிரி
வசமானதாக சுங்கிங்கில் தப்பாக செய்தி ஒலிபரப்பப்பட்டது. இதை பி. பி. ஸி.
யும் அறிவித்தது. ஆனால் அகில இந்திய ரேடியோவில் திருத்தப்பட்டது.

இவ்விதமாக தங்களிஷ்டப்படி செய்திகளைச் சொல்லுவது எப்போதும் ஆபத்துத்தான். இதை ஆதாரமாகக்கொண்டு எதிரிகள் பிரசாரத்தை ஆரம்பித்து விடுவார்கள். புதிய டெல்லியில் செய்திகளை அறிவிக்கும்போது எதிரிகள் சொல்லும் எல்லாப் பொய் செய்திகளையும் மறுப்பது சாத்தியமில்லை. பொது மக்கள்தான் ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவுடன் நட்பு.** நாம் தற்சமயத்தில் இவ்வித எச்சரிக்கைகளைக் கொடுப்பதற்கு ஒரு காரணமிருக்கிறது. ஏனென்றால் ஜப்பானியர் பிரசார மூலமாக இந்தியாவை தனது பேரில் நட்புப் பாராட்டச் செய்யவேண்டுமென்று பார்க்கிறார்கள். முக்கியமாக ஸர் ஸ்டாபோர்டு-கிரிப்ஸ் வந்தது முதல் ஜப்பானியர் பிரசாரத்தைச் செய்கிறார்கள். 'எப்படியோ ஒரு விதம் கிரிப்ஸின் திட்டங்களுக்கு இந்தியா வரும் முடிவை ஜப்பான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதாக' ஏப்ரல் 6உ டோகியோவிலிருந்து இந்தியாவிற்கு ஒலிபரப்பப்பட்டது. சென்ற வாரத்தில் ஜெனரல் டோஜோவும் 'இந்திய மக்கள் எதிரிகளென்ற எண்ணம் ஜப்பானியருக்கு உண்டாகவே உண்டாகாது. யுத்தத்தினால் அவஸ்தைப்படும் மக்களுக்கு ஜப்பானியர் அனுதாபம் காட்டுகின்றனர்' என்று சொன்னான். 'நமக்கு ஸ்வதந்திரமளிப்பதாயும், பொதுக்ஷேம திட்டத்தைக்கொடுப்பதாயும், இந்திய சிப்பாய்கள் ஜப்பானியர் பக்கம் போய்விடுவதாயும், ஆக்கிரமித்த நாடுகளில் ஆசியா வாசிகளுக்கு தயவு, தாக்ஷிண்யம் முதலியவைகளைக் காண்பித்து ஐரோப்பியர்களைக் கடுமையாக நடத்துவதாயும், பின்வாங்கும்போது ஐரோப்பியர் மாத்திரம் பத்திரமாகச் சென்று, ஆசியா வாசிகளைத் தனியே விட்டுவிடுவதாயும்' பலவிதமாகச் சொல்லப்படுகின்றன.

டோகியோ ரேடியோவைப்போல 'அஸாத் ஹிண்டு' என்ற பெயருடன் பேர்லினிலிருந்து வெளிவரும் ரேடியோவில் ஒலிபரப்பும்போது பின்வருமாறு ஒரு வதந்தி கிளப்பப்பட்டது :—பம்பாயில் இரண்டு சினிமா நடிகைகளை ஆஸ்திரேலியத் துருப்புகள் அடித்துத் துன்புறுத்தியதாகச் சொல்லப்பட்டது. உண்மையில், இதில் ஒரு பெண் இவ்விஷயத்தை மறுத்துவிட்டாள், மற்றொரு பெண் நவம்பர் முதலேயே பம்பாயிலேயே இல்லை. இக்கதையே அவளுக்குத் தெரியாது.

சில வாரங்களுக்கு முன்பு வேவலைப்பற்றித் தகவல் சொல்லும்போது அவர் காயமடைந்ததாயும், உடம்பு அசௌகரியமாக இருப்பதாயும், பங்களூரிலோ, ஸிலோனிலோ ஆஸ்பத்திரியில் இறந்து விட்டதாகவும், சொல்லப்பட்டது.

இவ்விதமான விஷமப் பிரசாரங்களெல்லாம் எதிரிகளால் செய்யப்படும் திரிசமங்களே. இவைகளை ஆதாரமாகக்கொண்டு இந்தியர்களும் பரப்புகின்றனர். மதராஸ், கல்கத்தா, சிட்டகாங், பங்களூர், ஜாம்ஷெட்பூர் முதலிய இடங்களில் குறிப்பிட்ட நாட்களில் ஜப்பானியர் குண்டு போடப்போவதாகவும பொய்வதந்தி பரவுகிறது.

இவ்விதமான விஷயங்களை அரசாங்கத்தார் ஊர்ஜிதம் செய்யும்வரை நாம் மறுப்பதுதான் உசிதம். இந்தியத் துறைமுகப்பட்டணங்களில் எதிரி குண்டு வீச்சு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் முன்னாடியே அரசாங்கத்தார் எச்சரிக்கை கொடுப்பார்கள். ஏதாவது சம்பவங்கள் நடந்தவுடனே உண்மையைப் பிரசுரமும் செய்வார்கள். இதற்கு அத்தாக்ஷியாக கொழும்பு, திரிகோணமலை, விசாகப்பட்டணம், காக்கிநாடா முதலிய இடங்களில் குண்டு வீச்சு ஏற்பட்டதும் அரசாங்கத்தார் விடுவித்த அறிக்கைகளை வைத்துக்கொள்ளலாம்.

வி வி வி வி வி வி வி

**கடற்கரைப் பட்டணங்களில் குண்டு வீச்சு.** கொழும்புவிலும் கடற்கரைப்பட்டணங்களிலும் நேர்ந்த எதிரி விமானப்படையெடுப்பைப்பற்றி இன்னும் சில உண்மை விவரங்கள் கிடைத்திருக்கின்றன. மூன்று எதிரிச் சண்டைக் கப்பல்களும், 5



விமானமேற்றிய கப்பல்களும், (ஒன்று 28,000 டன் எடையுள்ளது, 60 விமானங்களேற்றப்பட்டிருந்தன) ஸிலோனின் கடற்கரைப் பிரதேசங்களுக்கு அதிகச்சேதத்தை ஏற்படுத்தின. ஆனால் எதிரி விமானங்களுக்கு இன்னும் அதிகச்சேதம்.

ஆபிரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் நடுவில் வியாபாரப் போக்குவரவிற்குச் சாதகமாக இருப்பதால் தான் ஜப்பானியர் கொழும்புவைத் தாக்கினார்கள். மற்ற இந்தியத் துறைமுகங்களைக் காட்டிலும் கொழும்புவில் சாதாரண காலங்களில் அதிகமான கப்பல்கள் தங்கிச் செல்லும். கொழும்புதான் கிழக்கிந்தியக் கப்பற்படைப் பகுதியின் தலைமை ஸ்தானம். திரிகோணமலையில் கப்பல்கள் சேமிக்கப்படுகின்றன. கப்பல்களுக்கு எண்ணெயும் போடப்படுகிறது. நேச நாடுகள் கொழும்புவிலிருந்துதான் குறுக்கு எதிர்ப்புகள் செய்வார்களென்பதும் எதிரிக்குத் தெரியும்.

விமானங்களைக் கப்பல்களிலேற்றிக்கொண்டு வந்ததிலிருந்தே அந்தமானைப் பிடித்துக்கொண்டதால் எதிரிக்குப் பிரயோஜனமில்லையென்று தெரிகிறது. இந்தியாவிலிருந்து அந்தமான் 750 மைல் தூரத்திலிருக்கிறது. ஜப்பானிய விமானங்கள் 400 மைல் தூரத்திற்கு மேல் ஒரே தரத்தில் பறந்து செல்லமுடியாது. விமானங்களேற்றிய கப்பல்களையும் யுத்தப் பிரதேசத்திலேயே நிறுத்தி வைத்துக்கொள்ளுவதும் முடியாது. ஏனென்றால் நாம் அவைகளைச் சுலபமாகத் தாக்கிவிடலாம். கப்பல் தளங்களுக்குத் திரும்பிச் செல்லுவதானால் 2,500 மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். கொழும்புப் பிரதேசத்தில் அழிக்கப்பட்டதுபோக மீதமுள்ள எதிரி விமானங்கள் திரும்பிச் செல்லும்போது விசாகப்பட்டணத்திலும், காகினாடாவிலும் குண்டுகளைப்போட்டன. ஆனால் தாக்குதல் கடுமையாக இல்லை. தொடர்ந்து கடுமையாக முற்றுகையிடுவதானால் சமீபத்தில் விமான தளங்களை எதிரிகள் வைத்துக்கொள்ள வேண்டும்.

அந்தமான் ரங்கூனுக்குச் சமீபத்தில் 400-மைல் தூரத்தில் இருப்பதால் எதிரிக்குக் கொஞ்சம் சாதகமாக இருந்தது. இந்தியாவிலிருந்து 750-மைல் தூரத்திலிருப்பதால் பிரயோஜனப்படாது.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்க விமானங்கள்.** இந்தியாவிலிருந்து அமெரிக்க விமானங்கள் சென்று அந்தமானைத் தாக்கிய நற்செய்தி கிடைத்திருக்கிறது. ஜப்பானிய விமானங்களைக் காட்டிலும் இரட்டிப்பு மடங்கு தூரம் அதிகமாக அமெரிக்க விமானங்கள் பறக்கின்றன என்று தெரிகிறது.

இந்த அமெரிக்க விமானக் கூட்டத்தில் பைடர்களும் பாம்பர்களுமிருக்கின்றன. ஹிமயமலையின் உயர்ந்த சிகரமான எவரஸ்டைக் காட்டிலும் 7,000 அடி அதிக உயரம் பறக்கும் தன்மையுள்ளவை. 2,000 முதல் 3,000 மைல் தூரம்வரை மறுபடி எண்ணெய் போட்டுக்கொள்ளாமலே பறக்கக் கூடியவை. மணிக்கு 300 மைல் வேகமும் செல்லும். 4-டன் எடையுள்ள குண்டுகளை ஏற்றிச் செல்லும். இவ்விமானங்கள் மேற்கிந்தியத் தீவுகள் மூலமாயும் அபிரிக்கா மூலமாயும் இந்தியா வந்திருக்கின்றன. தென் அட்லாண்டிக், நன்னம்பிக்கை முனை, அராபிக்கடல் வழியாக ஏற்பட்டிருக்கும் கடல் மார்க்கங்களைத் தவிர ஆபிரிக்கா வழியாக மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு போக்குவரவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**கொழும்புவில் அடைந்த அனுபவங்கள்.** கொழும்புபேரில் நேர்ந்த எதிரி விமானப்படையெடுப்பின்போது விமான ஸ்தானம், துறைமுகம் தாக்கப்பட்டதோடு ஆஸ்பத்திரியும் தாக்கப்பட்டது. காயலாக்காரர்கள் இறந்ததினால்தான் பாதிச்சேதம் ஏற்பட்டது. இவ்வளவு கொடுமையாகத் தாக்குதலைச் செய்தாலும் எதிரி விமானங்களும் நஷ்டமடைந்தன. மொத்தத்தில் எதிரியின் படையெடுப்புப் பலிக்கவில்லை.

கமக்கு ஏற்பட்ட சாதகம் அதிர்ஷ்டவசமாக ஏற்பட்டதல்லவன்று ஸர் ஐப்பி லேடன் சொல்லுகிருர். பாதுகாப்பு சரியாக செய்யப்பட்டிருந்தது. ஜனங்கள் ஜாக்ரதையுடனும் இருந்தனர். ஆகவே ஒற்றுமை, முன் ஜாக்ரதை, முதலியவை கள் அவசியம் இருக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**பர்மா போர்முனை.**

டோங்கூவிலிருந்து சீனப் படைகள் பின் வாங்கி (10 மைல் தூரம்) (Kyungon) குயிங கஞக்குச் சென்றதாலும், ப்ரோமிலிருந்து தயாட்மேயோவிற்கு (30 மைல்) பிரிடிஷ் படைகள் சென்றதாலும் நேசநாடுகளின் நிலைமை கெட்டு விடவில்லை. இடைவிடாது 5 நாட்கள் குண்டுகள் போடப்பட்டாலும் நமது தற்காப்பு பிரமாத மாக எதிர்த்து நின்றது. சீனச் சைனியமும் அதைரியப்படாமலிருக்கிறது. மேலும் அவர்களுக்கு உதவி வந்து கொண்டிருக்கிறது.

பிரிடிஷ் படைகள் பின் வாங்கியதால் எதிரியின் திட்டம் தடைபட்டது. மேலும் தற்காப்பு குறுகிய இடத்தில் பலமாகச் செய்யப்பட்டிருக்கிறது. சீனர் களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

எதிரி வசத்தில் ரங்கூன் இருப்பதால் ஸப்ளை முதலியவை வருவதற்கு அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. மேலும் தாகின் என்ற வாலிபர்கள் கூட்டம் தற்சமயம் எதிரிகள் பக்கம் சேர்ந்து வழிகாட்டுவதுடன் நேசநாடுகளை எதிர்த்துச் சண்டையும் செய்கின்றனர். பர்மியர்கள் இந்தியர்களுடன் நின்று கொண்டு ஜப்பானியரை எதிர்த்தே போராடுகின்றனர். சிறிது நாடு வசமாவதற் குள் ஜப்பானியருக்கு ஏராள நஷ்டமேற்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**பனி உருகுகிறது.**

மாரிகாலம் முடிந்து பனி உருகி எங்கும் ஒரே வெள்ளமாக இருக்கிறது. பனிக்கட்டிகள் மேல் ரஸ்தாக்களையும், இருப்புப் பாதைகளையும் போட்டு துருப்புகளையும் எடுத்துச் செல்லலாமென்று ஹிட்லர் நினைத்திருக்கிருன். இதற்காக ருஷ்யர்கள் ரயில் மார்க்கங்களையும் ஜங்ஷன்களையும் உடைத்தெறிகின்றனர். தங்கள் போர் முனையையும் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். ஆர்கேஞ்ஜலுக்கு கிழக்கில் மார்ஷல் ஒரோஷிலாவ் ஒரு பெரும் ரிஸர்வ் படையைச் சேமித்திருக்கிருர். இதில் 75 காலாட் படைகளும், 20 டாங்கிப் படையும், 15 குதிரைப் படையும், 12 மோட்டார் படைகளும், இருக்கின்றன. ஸ்டாலின்கிராட்டில் புடென்னி குதிரைப் படையையும், மோட்டார் படைகளையும் சேமித்திருக்கிருர். வசந்த காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு யுத்த சாமான்களைச் செய்துகொண்டும் வெள்ளாமையை கவனித்துக்கொண்டுமிருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**வசந்தகாலத் தாக்குதல் என்ற பேடிஜம்.**

தங்களால் முடிந்தவரை நாஸிகள் பிரசாரத்தை நடத்திவரும் வசந்த காலத் தாக்குதல் நேருமென்றே சொல்லலாம். இதைப் பற்றி ஆனலிஸ்டு விமர்சகர் கூறுவதைப் பார்ப்போம். ஜெர்மன் முன்னணிகள் முன்னேறித் தாக்குவதை நிறுத்திவிட்டன. நேசநாடுகள் செய்யப்போவதையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. பிரயான்ஸ்க், கார்கவ் இந்த இரண்டு இடங் களையும் ருஷ்யர்கள் தாக்கியதால் எதிரி அடைபட்டுள்ளான். ஆகவே ரிஸர்வ் படைகளை எதிரி அழைத்துக்கொள்ளவேண்டும். அல்லது மேற்கு பக்கத்தி லிருக்கும் படைகளை அழைத்துக்கொள்ளவேண்டும்.

மார்ஷல்—ஹாப்கின்ஸின் விசேஷ தூது அமெரிக்காவிலிருந்து லண்டன் வந்திருக்கிறது. நாஸிகளுக்கு எதிராக மேற்கே ஒரு போர் முனையை ஏற்படுத்து வது விஷயமாக வற்புறுத்தவே வந்திருக்கிருர். இவ்வருஷம் ஐரோப்பாவை பிரிடன் படையெடுப்பதானுல் அமெரிக்கக் கப்பல் உதவி கொடுக்கத் தயார் என்று சொல்லவே வந்திருக்கிருர்.

இன்வெஸ்டியா என்ற பத்திரிகையில் ருஷ்ய ஜனாதிபதி காலினின், பின்வரு மாறு எழுதியிருக்கிருர்:-“ விமானத்திலும், தரையிலும் ஜெர்மானியர் பலத்துடன் கூடியிருக்கவில்லையென்றும், டான் பள்ளத்தாக்கிலிருந்து ஜெர்மானியர் விரட்டப் படுகிருர்களென்றும், மாரிகாலத்தில் பனி தாங்காது 3,00,000 ஜெர்மானியர் இறந் திருப்பதாயும்” சொன்னுர்.

“ஜெர்மனியில் எங்கு சென்றாலும், சந்தை கூடுமிடத்திலும், தெருக்களிலும், கசாய்க்கடையிலும், காய்கறிக்கடையிலும், காபி ஹோட்டல்களிலும், ரயில் வண்டிகளிலும் ஜனங்கள் முணுமுணுத்துக்கொண்டுதானிருக்கிருர்கள்” என்று ஒரு ஜெர்மன் அறிக்கை கூறுகிறது. எப்படி இந்த வருஷம் முடியப்போகிற தென்றும் யுத்தம் முடியுமா முடியாதாவென்றும் ஹிட்லரே சந்தேகப்பட்டிருக் கிருன்.

இவைகளைப் பார்க்கும்போது ஜெர்மனிக்கு நல்லகாலமில்லையென்று தெரி கிறது. ஏனென்ருல் அக்டோபர் 2-ம் தேதி மாஸ்கோ பேரில் முடிவான தாக்கு தல் ஆரம்பமாகி விட்டதாக ஹிட்லர் சொன்னதுபோக நிலைமை தற்சமயம் நமக்குத் திருப்திகரமாக இருப்பதேதான் காரணம். நிலைமை எதிரிகளுக்குத் திருப்திகரமாக இல்லாததால்தான் முன்பு பிரடிரிக் என்பவன் சொன்னதை கோயபல்ஸ் யாவருக் கும் தற்சமயம் சொல்லிவருகிருன். ‘யாவருக்கும் தைரியமும் ஊக்கமும் வேண்டும்’ என்கிருன். நார்வே, போலாந்து பிரான்ஸ், கிரீஸ் முதலியவைகளை ஜயித்த ஜெர்மன் சைனியம் தொலைந்துவிட்டது. ருஷ்யப் பனியில் யாவும் அழிந்துகிடக் கின்றன. இவைகளைக்கண்டு மற்ற துருப்புகள் பயப்படாமலிருக்கும் பொருட்டு பூமிக்குள் புதைக்கப்படுகின்றன. ருமேனியா ஹங்கேரி, பல்கேரியா இதாலி, பின்லாந்து முதலிய இடங்களிலிருந்து வந்த கீழ்தரமான படைகளே சண்டை செய்கின்றன.

வி வி வி வி வி வி வி

**மொத்த பயன்.**

ருஷ்யாவில் நடந்த மாரி காலச் சண்டையினுல் விளைந்தது என்ன?

1. ருஷ்யச் சைனியங்களின் முயற்சிகள் பலிக்கவில்லை யென்றும், ஏற் கனவே தாங்களிருக்கும் இடங்களிலிருந்து மறுபடி தாக்குதலை ஆரம்பிக்கப் போவதாயும் ஜெர்மானியர் சொல்லுகின்றனர்.

2. பிரமாதமான ஏற்பாடுகளைச் செய்தும் லெனின்கிராட் இன்னும் விடுவிக்கப் படவில்லை. விடப்ஸ்க், ஒரல், கார்கவ் கிரிமியா முதலிய இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதைகள் இவர்கள் வசத்திலேயே இருக்கின்றன.

3. இதுவரை சண்டைசெய்து வந்த இடங்கள் மாற்றப்பட்டன. பல இடங் களில் இரு சைனியங்களும் துளைக்கப்பட்டிருக்கின்றன. மறுபடி இரு சைனியங் களும் முன்னேறிப் போர்நடத்த சந்தர்ப்பம் இருக்கிறது.

4. லெனின்கிராட்டில் ஜெர்மானியர் முற்றுகையிட்டாலும் அவர்களுடைய படை அணிகள் பிளக்கப்பட்டன.

5. ஸ்டாராயா ருஸாவிலுள்ள ஜெர்மன் சைனியம் முறிந்தால் அவர் களுக்குப் பெருத்த நஷ்டம்தான்.

6. மாஸ்கோ முன்னிலையில் பிரமாதமான நிகழ்ச்சிகள் நேராதபோனுலும் ஜெர்மானியரின் எதிர்ப்பு தளர்ந்திருக்கிறது.

7. தெற்குப் போர்முனையில் ஜெர்மானியர் பல இடங்களில் சூழ்ந்து கொள்ளப்பட்டனர்.

8. கார்கவ்விற்குத் தெற்கே இரண்டு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் உள்ள ஜெர்மன் போக்குவரவுகள் கலைக்கப்பட்டன.

மற்றபடி முடிவென்ன? ஜெர்மானியரும் ருஷ்யரும் ஆங்காங்கு முன்னேறிய இடங்களில் அப்படியே சூழப்பட்டுள்ளனர். முக்கிய ஸ்தானங்களில் ஜெர்மன் ரயில்வே ஜங்ஷன்கள் கெடுதியடைந்தன.

இதுவரை 150 முதல் 200 ஜெர்மன் பகுதிகள் அழிக்கப்பட்டதால் 40 ரிஸர்வ் படைகள் சண்டைக்கு அழைக்கப்பட்டுள்ளன. ருஷ்யர்களுக்கும் சேதமேற்பட்டு இருந்தாலும், அவர்களுக்கு உதவி மேலும் மேலும் குறையாமல் வந்துகொண்டு இருக்கிறது. புதிய சைனியங்களும் சேமிக்கப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**இஸ்லாம் மதத்தைக் காப்பாற்றுகிறவர்கள்.** அச்சு நாட்டினர் சொல்லுவதைப் பார்த்தால் இஸ்லாம் மதத்தைக் காப்பாற்றுகிறவர்கள் அதிகமாக இருக்கிறதாகக் காணப்படு கிறது. வில்ஹெல்ம், முஸோலினி, மார்ஷல் பிடேன் யாவரும் அராபியர்களையும், ஸிரியர்களையும் காப்பாற்றுவதாகச் சொல்லுகின்றனர். போலந்தில் ஹிட்லரின் ஆட்சி பின்வருமாறு மாறியிருக்கிறது.

"போலந்திலுள்ள முஸ்லீம்களை நாஸிகள் புதிய விதமாகக் கொலைசெய் கின்றனர். வார்ஸா கோரியிலுள்ள இமாம் ஷேக், அலி இஸ்மெயில், லோர்ஜே விட்ச், முதலியோர் ஜெர்மனியிலுள்ள ஜெயில்களுக்கு அனுப்பப்பட்டனர். சிலரை அடித்த்த கொன்றிருக்கின்றனர்.

"போலாந்திலுள்ள எல்லா முகமதிய கோரிகளும் மூடப்பட்டன. தினம் தொழுவது கூடாது. ஸ்லோபினிலுள்ள கோரியை வண்டிகள் நிறுத்த உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தக் கொடுமைகளைப் பற்றி அறிவிக்கச் சென்ற முகமதியர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

"இவைகளைப் பற்றி நாஸிகளிடம் தெரியப்படுத்தியபோது, டாக்டர் ஷிஜேவிட்சை நாஸிகள் அவமதித்தனர்.

"ஐந்து நூற்றாண்டுகளாக போலந்தில் முஸ்லீம்கள் வசித்துவருகின்றனர். அவர்களுக்கு போலிஷ் அரசாங்கம் எல்லாவித உரிமையும் கொடுத்திருக்கிறது. கோவில்களைக் கட்டிக்கொள்ளலாம். மற்ற போலிஷ் மக்களுடன் சமஉரிமைகள் இவர்களுக்கும் உண்டு."

யேனி ஸபா என்ற பத்திரிகையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள பின்கண்ட விஷயங்களை முஸ்லீம் மதப்பற்றுள்ளவர்கள் அவசியம் படிக்கவேண்டும்.

"ஒரு நாட்டின் தலைவன் வேதாந்தக் கலையில் ஈடுபட்டிருந்தால் அவன் முஸ்லீம்களுக்குச் சிநேகிதனாக இருப்பதைப்பற்றி ஆச்சரியமில்லை. ஆனால் மதப் பற்றுதல் கொஞ்சமும் இல்லாமல இஸ்லாம் மதத்தைத் தழுவுவதாக ஜனங்கள் சொன்னால் அது வீண் ஏமாற்றம்.

"வில்ஹெல்ம் என்ற அரசன் முஸ்லீம்களுடன் நட்பாக இருந்தால் இஸ்லாம் மதத்தைத் தழுவியே இருக்கலாம். தான் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவனாகவே அவன் இருந்தால் இஸ்லாம் மதத்தினருக்கு மாத்திரம் நன்மையைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. இஸ்லாம் மதமென்பது யாவருக்கும் பொதுவான கொள்கைகளடங்கியதுதான்.

"தற்சமயம் ஹிட்லரும், முஸோலினியும், முஸ்லீம்களுடைய சிநேகிதர் களாகத் தங்களைச் சொல்லிக்கொண்டால் 'இது முகமதிய உலகத்திற்கே அவமானமா கும். நாம் எதைச் சொன்னாலும் முகமதியர் நம்பிவிடுவார்கள் என்று இத்தலைவர் கள் நினைக்கின்றனர். இதை நாம் நம்பவேகூடாது. தேசத்திற்குக் கெடுதிதான்.

"பிரிடிஷ்காரர்களின் ஆக்கிரமணத்திலிருந்து முஸ்லீம் உலகத்தை விடுவிப்ப தாக இதாலியும் ஜெர்மனியும் சொல்லுகின்றன. கிருஸ்துவ மதக்கொள்கைகளை வெறுக்கும் இவர்கள் எவ்வாறு முஸ்லீம் மதத்தை மாத்திரம் நாடுவார்கள். கிருஸ்துவ மதம் பரவியிருக்கும் நாடுகளைப் படையெடுக்காமலும், ஒன்றுமறியாத வர்களைக் கொலைசெய்யாமலும் இவர்களிருந்தால் இவர்கள் சொல்லுவதை முஸ்லீம்கள் நம்புவார்கள்."

**பலாத்காரம்.** துருக்கியில் நாஸி பலாத்காரம் மறுபடி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் ஈடன் துருக்கிக்குச் சென்றதுமுதல் நாஸிகள் துருக்கியர்களை பயமுறுத்தியும், வியாபாரச் சலுகைகளைக் காட்டாமலும், சூழ்ச்சிகளும் செய்துவருகின்றனர். பிரகிருதத்தில் பேபன் ஹிட்லரைக் கண்டு சந்தித்ததையும், பெர்லினுக்கு போரிஸ் மன்னர் சென்றதையும், துருக்கிப் பிராந்தியத்தை நோக்கி பல்கேரியத் துருப்புகள் போவதையும், துருக்கிக்குச் சொந்தமான திரேஸையும், ஜலசந்தியையும் இஸ்தான்புல்லையும் புதிய ஐரோப்பிய படத்தில் சேர்ந்திருப்பதையும் பார்த்தால் துருக்கிக்கு ஆபத்துவருவதாகக் காணப்படலாம். இராக், இரான், ஸிரியா காகஸஸ் முதலியவைகளைத் துருக்கி வசம் கொடுத்துவிடுவதாயும் நாஸிகள் சொல்லுகின்றனர். "நாஸிக் கபடங்களுக்கு இதுவே கடைசி சாக்ஷியாகும்" என்று பாக்தாத்திலுள்ள அலஹவாடித் பத்திரிகை கூறுகிறது.

வி வி வி . வி வி வி வி

**ஜப்பானிய ஐந்தாம்படை.** ஜப்பானிய ஐந்தாம்படையினர் எங்கும் இருப்ப தாகவே காணப்படுகிறது. டவாவோவில் 40-வருஷ காலமாக 20,000 ஜப்பானியக் குடியானவர்களும், செம்படவர்களும் தளங்களைக்கட்டி வைத்திருக்கின்றனர். இதை உபயோகித்துக்கொண்டே ஜப்பானி யர் மற்ற இடங்களைத் தாக்கிவருகின்றனர். வட மலேயாவில் உள்ள சுரங்கங்களி லும், தோட்டங்களிலுமிருந்த ஜப்பானியர் அதிக உதவியைச்செய்தனர். நியூகினி -ல்யிபஞ்சுத் தோட்டக்காரர்கள் ஒற்றர்களாக இருந்து ஜப்பானியருக்கு உதவி புரிந்தனர். நியூகினியைப் படையெடுத்த ஜப்பானிய விமானங்கள் யாவும் டிமோரில் வியாபாரம் செய்ய வந்தவர்களுக்குச் சொந்தமானவைதான்.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளுக்குள் கலகம் வந்தால்.** ஹிட்லரும் டோஜோவும் தாங்களாகவே மடிய வேண்டியதுதான். நேசநாடுகள் அதிகக் கவலை யெடுக்கத் தேவையில்லை. வெளிப் படையாக இருநாடுகளும் ஒரே லக்ஷியங்களுக்காக நட்புகொண்டிருந்தாலும், ஆசியா சம்பந்தப்பட்டவரையில் ஜப்பானும் ஜெர்மனியும் சண்டைபோட்டுக் கொள்ளுமென்று தெரிகிறது. ஏனென்றால் ஆசியாவில் தங்கள் நாட்டு மக்களுக்கு இடம் தேவையாக இருப்பதாக இருவர்களும் சொல்லியிருக்கின்றனர். ஆசியாவி லுள்ள பொருள்களை அபகரிக்க வேண்டுமென்று இருநாடுகளும் சொல்லியிருக் கின்றன. ஐரோப்பா ஆபிரிக்கா நாடுகளில் கிடைப்பது மாத்திரம் ஹிட்லருக்குப் போதாது. ஆசியாவும் தேவைதான். ஹாலந்தைப் படையெடுக்கும்போது வெளிநாடுகளில் ஹாலந்திற்குச் சொந்தமான பொருளையும் கொள்ளையடிக்க நினைத்தான். ஆனால் ஜாவா, ஸுமத்ரா முதலியவைகளை ஜப்பான் அபகரித்துக் கொண்டது. இது ஹிட்லருக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் "யுத்தத்திற்குப் பிறகுதான் யாவும் தீர்மானிக்கப்படும் என்று" ஹிட்லர் சொன்னான்.

ஜாவா முதலிய இடங்களைப் பிடித்ததுபோல இந்தியாவையும் ஜப்பானை விட்டுப் பிடிக்க ஏற்பாடுசெய்து, பிறகு தனக்கு ஒருபாகத்தைப் பெற்றுகொள்ளு வதே ஜெர்மனியின் நோக்கமாக இருக்கலாம். 1934 முதலே இந்தியாவில் ஜெர்மன் ஒற்றர்கள் இருந்துவந்தனர். யுத்தம் ஆரம்பிப்பதற்குக் கொஞ்சநாள் முன்னாடிதான் டாக்டர் ஷாஃட் என்ற ஜெர்மானியர் இந்தியா பூராவும் பார்வை யிட்டுச்சென்றான். மேலும் இந்தியாவிலிருந்து சென்ற சில அயோக்கியர்களும் பெர்லினில் பொய் சொல்லி வருகிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**சண்டைக் கப்பல் வாரம்.** ஏழை பணக்காரன் யாவரும் மீதம் பிடிப் பதற்கு லாயக்கான முறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு அத்திட்டம் பிரிடனில் முடிவடைந்தது. இதன் கருத்து சாதாரண மானது தான். யுத்த நிதிக்காக நன்கொடைகளை வாங்கவும் ஸர்டிபிகேட்டுகளாக ற்றவும் ஒரு வாரம் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு

ஜில்லாவிலும் நடைபெற்றது. இப்படி வசூலாகும் பணத்தைக்கொண்டு சண்டைக் கப்பல்களைக் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. 12,50,00,000 பவுன் வசூல் செய்து 4 சண்டைக் கப்பல்களும், 3 விமானமேற்றும் கப்பல்களும் 4 க்ரூயிஸர்களும், 38 நாசகாரிகளும், 3 நீர்மூழ்கிகளும் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்ததிற்கு அதிகமாகவே வசூலாயிற்று. பணக்காரர்களும் பாங்கிகளும் யுத்தப் பத்திரங்களை வாங்கின. ஆனால் ஏழைகளின் பணத்தைக் காப்பாற்றுவதே தான் இதன் நோக்கம். 15 ஷில்லிங் பொறுமானம் முதல் ஸர்டிபிகேட்டுகள் விற்கப்பட்டன.

இதுவரை பிரிடனில் 145 வாரங்கள் இம்மாதிரி முடிவடைந்திருக்கின்றன. அநேகமாக எல்லா வாரங்களிலும் எதிர்பார்த்த பணம் வசூல் செய்யப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**இந்திய சமாசாரங்கள்.**

1. ஜனாதிபதி ரூஸ்வெல்டின் தனது தூதரான கர்னல் ஜான்ஸன் ஏப்ரல் 4உ டெல்லி வந்துசேர்ந்தார். பொருளாதார நிபுணரான டாக்டர் ஹென்றி கிரே, கவசமணிந்த வண்டிகளைத் தயாரிப்பதில் சமர்த்தரான A. W. ஹாரிங்டனும், தொழிற்சாலைகளை அமைப்பவரான H. E. பேய்ஷரும், தொழிலாளிகளிடம் வேலை வாங்குகிற D. டெக்கரும் அடங்கிய கோஷ்டியுடன் இவர் வந்திருக்கிறார். இவ்வித அமெரிக்க கோஷ்டியைக்கொண்டு இந்தியாவில் செய்யவேண்டிய அலுவல்களைச் சரிவர அமைப்பதுதான் ஜான்ஸனின் வேலை.

2. டெல்லியில் ஏப்ரல் 7உ உணவு உற்பத்தி பிரச்னைகளைப் பரிசீலனை செய்யக்கூடிய கூட்டத்தில் அதிகமாக உணவுகளை உற்பத்தி செய்வதென முடிவு செய்யப்பட்டது. இதற்காக மத்தியச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்திற்கு மேன்மை தங்கிய வைஸிராய் செய்தியனுப்பினார் அதன்படி யுத்த முயற்சிக்கு ஒரு உதவியாக இருப்பதோடு பிறகு சமாதானகாலத்திலும் அதிக நன்மையாக இருக்கும்.

3. (ஏப்ரல் 8உ) தேசியத் தற்காப்புச் சங்கம் கூடிற்று. ஜப்பானியர் ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள இந்தியர்களைப் பற்றியப் பிரச்னைகள் தீர்மானிக்கப்பட்டன. மலேயா, பர்மா முதலிய இடங்களிலிருந்து வெளியேறிய இந்தியர்களைப் பற்றிய பிரச்னையும் இந்தியத் தற்காப்பு பிரச்னையும் தீர்மானிக்கப்பட்டன.

4. வெளியேறியவர்களைப்பற்றி கவனிக்கும் கமிட்டி ஏப்ரல் 3, 4 தேதிகளில் கூடி பர்மாவிலுள்ள இந்தியர்களைப் பற்றிய பிரச்னையைச் சர்ச்சை செய்தது.

---

## ரூர் பிரதேசத்தில் பிரிடிஷ் விமானப் படையெடுப்பு.

## ஜெர்மனியின் ஜீவநாடியான தொழிற்சாலைப் பிரதேசத்தைத் தகர்க்கவேண்டும்.

(உப விமானத்தலைவர் L. V. பிரேசர் எழுதியது.)

ஐரோப்பாவில் சீதோஷ்ண நிலை மிகவும் சாதகமாக மாறியதலிருந்து பிரிடிஷ் விமானப்படையின் பாம்பர் விமானப்பகுதி ஜெர்மனியைப் பலமாகத்தாக்க ஆரம்பித்துவிட்டது. ஜெர்மன் கப்பற்படை தளங்களை நமது விமானங்கள் சில தடவைகள் தாக்கின. மற்றும் பெரும்பாலும் ஜெர்மன் தொழிற்சாலைகளே தாக்கப்பட்டன. மேலும் முக்கிய லக்ஷியங்களை வெற்றிகரமாக குண்டுகள் வீசுவதற்கும் ஏற்பாடாயிற்று.

மார்ச்சு மாதம் இரண்டாவது வாரத்தில் மூன்று இரவுகள் தொடர்ந்தாற் போல் ஜெர்மனியின் தொழிற்சாலைப் பிரதேசங்களில் ஜீவநாடியான ரூர் பிரதேசத்தை அதிகம் பலம் வாய்ந்த பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தாக்க வந்தன. ஹாம்பார்னுக்கருகாமையிலுள்ள தைஸென் எஃகுத் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட



தாக்குதலைக் கவனிப்போம். மார்ச்சு மாதம் 9-ம் தேதி இரவு பிரிடிஷ் விமானப் படையின் ஒரு பெரிய பாம்பர் விமானப்பகுதி ரூர் பிரதேசத்தில் சென்றதில் சில விமானங்கள்தான் இந்த எஃகு தொழிற்சாலைகளைத் தாக்கின. அந்த பாம்பர் விமானங்களிலுள்ளவர்கள் எவ்விதம் சேதம் விளைவிக்கிறார்கள் என்பதை இந்த உதாரணத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

### புகைப்படங்கள் எதைக் காட்டுகின்றன.

ரூர் பிரதேசத்திலுள்ள முக்கிய தொழிற்சாலைதான் பிரிடிஷ் விமானப் படைக்கு இலக்காக இருந்தது. தாக்குதலில் படிப்படியாக நடந்ததையெல்லாம் வரிசையாக புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் படிப்படியாக சேதங்கள் ஏற்பட்டும், அதிகரித்தும் வந்திருக்கிறது தெரியவரும்.

வெடிகுண்டுகள் மாறிமாறி வெடிக்கையில் தீக்கள் கிளம்புவதை நீங்கள் பார்க்கலாம், முக்கியமாக அந்தத் தொழிற்சாலைகளில் வடகிழக்குப் பாகத்தில் தீக்கள்கிளம்பின. அவைகள் வரவர அதிகரித்து தொழிற்சாலை பூராவும் புகை சூழ்ந்துவிட்டது. அந்தப் புகையினிடையில் பெரிய ஜ்வாலை தோன்றிற்று. பிரிடிஷ் விமானப்படையின் வெடிகுண்டுகளில் கனமான வெடிகுண்டு தீக்களுக்கு நடுவே வெடித்ததினால் அந்த ஜ்வாலை உண்டானது.

ரூர் பிரதேசத்தின் விஸ்தீர்ணம், பெர்லின் விஸ்தீர்ணத்தைப் போல் சுமாராக இரண்டு பங்குதான் இருக்கும். ஆனால், இந்த இடத்திலிருந்துதான், ஜெர்மனியில் எடுக்கப்படும் நிலக்கரியில் 75-சதவிகிதமும், சுட்ட நிலக்கரியில் 84-சதவிகிதமும் இரும்பு, எஃகு இவைகளில் 70-சதவிகிதமும் கிடைக்கிறது. கைத்தொழிலிலும், போக்குவரத்திலும் நவீன முறைகள் ஏற்பட்டிருப்பதால் பண்டை காலத்தைப் போல் மூலாதாரப்பொருள்கள் கிடைக்கக்கூடிய இடத்திற்கு சமீபத்திலோ, அல்லது நிலக்கரி எடுக்கப்படும் இடங்களுக்கு அருகாமையிலோ தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கவேண்டிய அவசியம் நேரிடவில்லை. ஆனால் இந்தக் கைத்தொழில் ஸ்தாபனங்களில்தான் எஃகு தகடுகள் தயாரிக்கப்படுகின்றன. அவைகளைக் கொண்டு வேறு தொழிற்சாலைகளில் யந்திரங்கள் தயாரிக்கப்படும். இந்த எஃகு தொழிற்சாலைகளில் டாங்கிகளுக்கு வேண்டிய முக்கியமான உருப்புகள் செய்யப்பட்டு வேறு இடங்களில் அவைகளை ஒன்றுசேர்த்து டாங்கிகள் கட்டப்படும்.

பாரிஸுக்கு சமீபத்திலுள்ள ரெனால்ட்டு தொழிற்சாலை யுத்தக் கருவிகள் செய்யும் நவீன தொழிற்சாலைகளில் பிரதானமாயுள்ளது. ஆனால் அந்தத் தொழிற்சாலையில் தளவாடங்கள் செய்வதற்கு லிலி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் இரும்பு, எஃகு சாமான்கள் வந்துதான் ஆகவேண்டும். சென்ற கோடையில் லிலி பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளிலும், மின்சார உற்பத்திசாலைகளிலும் வெடிகுண்டுகள் போட்டுத் தாக்கினதால் ஜெர்மானியர்கள் பாரிஸுக்கு ரூர் பிரதேசத்திலிருந்துதான் பொருள்களை அனுப்பவேண்டியதாயிற்று.

### ஜெர்மனியின் ஜீவநாடி.

ஜெர்மனியின் பொருளாதாரம் பூராவும், மத்திய ஐரோப்பாவின் பொருளாதாரமும் ரூர் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளை நாடியிருக்கின்றன. ஜெர்மன் உத்தியோகஸ்தர்களுக்கு உதவியாகயிருக்கவும், பிரசாரத்துக்காகவும், யுத்தம் ஆரம்பித்ததிற்கு சற்றுமுன் பிரசுரித்த புஸ்தகம் இதைக் குறிப்பிடுகிறது. "இந்த ரூர் பிரதேசம் ஜெர்மனியின் பலத்திற்கு முக்கிய ஆதாரம், அதன் ஜீவநாடி" என்று அதில் கண்டிருக்கிறது. மேலும் "ஐரோப்பாவில் உள்ள தொழிற்சாலைகளில் நிரம்பிய பிரதேசங்களில் மிகப்பெரிதானது ரூர் பிரதேசம். ரூர் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு ஜெர்மனி ஒருநாளும் சமாளிக்க முடியாது." என்றும் அதில் கண்டிருக்கிறது. உண்மையில் ரூர் பிரதேசத்தில் தொழிற்சாலைகள் இருப்பதினால் பிரிடனைக் காட்டிலும் ஜெர்மனிக்கு சாதகம் இருப்பதாகத் தோன்றுகிறது. அப்பிரதேசம் இல்லாவிட்டால் அவ்வித சாதகம் ஜெர்மனிககு ஏற்படாது. ஏனென்றால் பிரிடனில் தொழிற்சாலைகளைப் பரவலாக ஸ்தாபிக்க ஏராளமாக இடமிருக்கிறது.

ஜெர்மனியில் வெற்றிகரமாக வெடிகுண்டுபோட்டுத் தாக்குவது முடியாத காரியம் என்று சில சமயம் வாதிக்கப்படும். ஏனென்றால் ஜெர்மனியின் தொழிற் சாலை நகரங்கள் மிகவும் பரவலாக இருக்கின்றன. ஆனால் இந்த வாரத்தில் ரூர் பிரதேசத்தைப்பற்றி கவனிக்காமல் சொல்லப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. ரூர் பிரதேசத்தில் நேர்ந்த சேதத்தைப் பழுதுபார்க்க ஜெர்மனி யாதொரு ஏற்பாடும் செய்திருப்பதாக ஒன்றும் தோன்றவில்லை. ஆனால், சென்ற கோடையில் க்ரப்ஸ தொழிற்சாலைகள் சேதமடைந்தவுடன் உடனே அவைகளைப் பழுதுபார்க்க 1,000 வேலைக்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

---

# சைனாவும் இஸ்லாமும்.

## சீனர்களில் 5 கோடி பேர்கள் முகமதியர்கள்.

சீனாவில் 5 கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். இவ்வளவு முஸ்லீம்கள் உள்ள நாடு இந்தியாவைத் தவிர வேறொன்றுமில்லை. சீன தேசசரித்திரப் பூர்வமாக, சைனாவில் டாங் பரம்பரை அரசாண்டு வந்த காலத்தில் அதாவது கி. பி. 628-ம் ஆண்டில் முகமதிய மதம் முதன் முதலில் பரவ ஆரம்பித்தது என்று தெரிகிறது. சுமார் கி. பி. 651-ம் வருஷத்தில் ஆண்டுவந்த டாங் வம்ச சக்ரவர்த்திக்கு பல முகமதிய அரசாங்கங்கள் கப்பம் செலுத்திவந்தன என்ற விஷயம் முகமதிய தஸ்தாவேஜுகளிலிருந்து நமக்குத் தெரிகிறது.

அதற்குப் பிற்பட்டு, வியாபார அபிவிருத்தியின் காரணமாக, சீனாவில் ஜனத்தொகையில் அநேகர் வரவர இஸ்லாம் மதத்தைத் தழுவ ஆரம்பித்து இப்பால் 13-ம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு சுமார் 5 கோடி முகமதியர்கள் அங்கு வசித்துவருகிறார்கள்.

தெற்கிலிருந்து கடல் மார்க்கமாகவும், மேற்கிலிருந்து தரை மார்க்கமாகவும் ஆகிய இவ்விரண்டு வழிகள் மூலமாக முகமதிய மதம் முதன்முதலில் சீனாவில் பரவ ஆரம்பித்தது. கடல் மார்க்கம், அராபிக்கடலிலிருந்து ஆரம்பித்து, வங்காளக் குடாக்கடல் மூலமாயும், மலாகா ஜலசந்திகள் வழியாகவும் சமுத்திரக்கரைப் பிரதேசங்களான க்வான்டங், புகியன், கியாங் இவைகளுக்குச் செல்லும்.

அடுத்தபடியாக முகமதியர்கள் தரை மார்க்கமாக பர்ஷியா, ஆப்கனிஸ்தானம் முதலிய தேசங்கள் வழியாக சீனாவில் சிங்யாங் பிரதேசத்திற்கு வந்தார்கள். அங்கிருந்து கிழக்கு முகமாகத் திரும்பி சீனாவின் வடமேற்கு மாகாணங்களான ஷென்ஸி, கான்ஸு முதலிய இடங்களில் குடியேறினார்கள்.

கி. பி. 755-ம் ஆண்டு, சீன கவர்ன்மெண்டின் வேண்டுகோளின்படி காலிப் அபு ஜாபர் என்ற அரசர் 4,000 அராபியத் துருப்புகளை சீனாவுக்கு அனுப்பி அங்கு ஏற்பட்ட கலகம் ஒன்றை அடக்கும்படி ஏற்பாடுசெய்தார். இவர்கள் சீனாவில் அரும் பெரிய வேலைகளைச் செய்துமுடித்தனர். பிற்பட்டு அநேகர் சீனாவிலேயே இருந்துவிட்டார்கள். இன்னும் அவர்களுடைய வம்ச பரம்பரையில் வந்தவர்களில் அநேகரை அங்கு காணலாம்.

சமீபத்தில் அங்கு சீன முகமதியர்கள் கல்விச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. கொரானை சீன பாஷையில் மொழி பெயர்ப்பிப்பதும், ஆங்காங்கு முகமதிய பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதும், மற்ற பேர்போன முகமதிய நாடுகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளுவதும் முதலியவைகள் அச்சங்கத்தின் முக்கிய அலுவல்கள். விசேஷ கல்வி கற்றுவர அநேக முகமதிய வாலியர்கள் கெய்ரோவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அராபிக் பாஷை, இன்னும் மற்ற விஷயங்களைப் போதிப்பதற்கு சைனாவுக்கு நல்ல பயிற்சிபெற்ற முகமதியர்களை அனுப்பும்படி எகிப்து தேசத்தரசருக்கு ஒரு வேண்டுகோள் சமீபத்தில் விடுவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா, எகிப்து, மெக்கா, துருக்கி முதலிய பல தேசங்களுடன் சைனா சம்பந்தம் வைத்துக்கொண்டதில், சீனர்களுக்கு முகமதிய கிரந்தங்கள் ஏராளமாகக் கிடைத்தன. இஸ்லாம் மத சம்பந்தமான விஷயங்களை விவாதிப்பதற்கு அநேக கூட்டங்கள் நடைபெறுகின்றன.

## ஹாங்காங்கில் ஜப்பானியரின் அக்கிரமச் செய்கை.

## அங்கிருந்து தப்பி ஓடிவந்த ஆங்கில ஸ்திரீயின் அனுபவம்.

ஹாங்காங்கை ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டதும் அங்கிருந்து தப்பி வந்த ஒரு ஆங்கில ஸ்திரீ, அங்குள்ள நிலைமையைப்பற்றி தன்னிடம் சொன்னதாக டெய்லி டெலிகிராப் பத்திரிகையின் நிருபர் சுங்கிங்கிலிருந்து தந்தி மூலம் சொன்னார். மிஸ் ஹாரப் ஹாங்காங் அரசாங்கத்தில் சீன விஷயங்களை கவனிக்கும் வேலையில் இருந்து வந்தாள். அவள் சொன்னதாவது :—

"ஹாங்காங் சரண் புகுந்து ஒரு வாரம் கிரமித்தும்கூட காயமடைந்த பிரிடிஷ் போர்வீரர்கள், போர்களத்திலேயே கிடந்தார்கள். அவர்களில் இருவரைப் பார்த்தேன். அவர்கள் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்து இருந்தார். ஒரு கால் ஒடிந்து போயிருந்தது. அத்துடன் நாலுமைலுக்கப்பாலிருக்கும் ஆஸ்பத்திரிக்கும் மூன்று பகல், மூன்று இரவு அவர் ஊர்ந்து சென்றார். அவருக்கு அன்னம் தண்ணீர் கிடையாது. ஆஸ்பத்திரி போய் சேருமபொழுது முற்றிலும் சோர்வடைந்துவிட்டார்.

"மற்றொருவரான இந்தியப் போர் வீரருக்கும் கழுத்தில் பெருத்த காயம் இருந்தது அவரும் அம்மாதிரி நகர்ந்துகொண்டே சென்று ஆஸ்பத்திரிக்கு சமீபத்தில் உயிர் போகும் தருவாயில் காணப்பட்டார். ஆனால் அவர் காப்பாற்றப் பட்டுவிட்டார்."

## கவனமில்லாமல் போட்டுவைத்ததில் மரணம்.

"இம்மாதிரி காயம்பட்ட அநேகம் பேர்கள் இருந்தார்கள். சீன கிராம வாசிகளும் சிலருக்கு உதவியளித்தார்கள். அநேகம் பேர்களுக்கு ஸ்வல்ப காயங்கள் இருந்தபோதிலும் அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்யப்படாததால் இறந்துவிட்டார்கள். சிலர்கள் 10 நாட்கள் வரை இருந்து பிறகு இறந்திருக்கிறார்கள். அநேகம் போர்வீரர்களின் சவங்கள் அழுகின பிறகு தான் பார்க்கப்பட்டன. மலைச்சருவுகளில் எல்லாம் பேர் தெரியாத பிரிடிஷ் போர்வீரர்களின் சவங்கள் ஏராளமாகச் சிதறிக்கிடக்கின்றன.

"கற்பழிக்கப்பட்ட ஸ்திரீகளில் அநேகர் ரண சிகிச்சை செய்ய வந்தவர்கள். ஒரு ஜில்லாவில் அநேக சீன ஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். அத்துடன் 7 ஐரோப்பிய ஸ்திரீகளும் கற்பழிக்கப்பட்ட பிறகு துப்பாக்கியில் சொருகியிருக்கும் ஈட்டி முனையால் குத்திக்கொல்லப்பட்டார்கள். என் சிநேகிதியின் புருஷன் பிரிடிஷ் வியாபாரி என்னிடம் சொன்னதாவது :

"(நான் போரில் சேர்ந்து சண்டை செய்ததில் காயமடைந்தவன். என் மனைவி வேலை செய்யும் ஆஸ்பத்திரிக்கு என்னை எடுத்துப்போனார்கள். அடுத்த அறையில் என் மனைவியின் குரலைக்கேட்டேன். அன்று கிறிஸ்துமஸ் தினம். அன்று பிற்பகல் 3-மணிக்குத்தான் ஹாங்காங் சரணடைந்தது. அப்பொழுது ஜப்பானியர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார்கள், கூக்குரல் கேட்டது. சிறிது நேரம் கழித்து என் மனைவியை தேடப்புறப்பட்டேன். அவள் இறந்திருக்கக்கண்டேன். அவள் கற்பழிக்கப் பட்டிருந்தாள். அவள் முகத்தில் கத்தி முனையால் ஏற்பட்ட காயங்கள் இருந்தன. இன்னும் பல ஸ்திரீகளும் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார்கள்.)

"(அங்கு சூழ்ந்திருந்த ஜப்பானியர்களிடமிருந்து தப்புவதற்காக ஒரு கட்டிலின் கீழ் பதுங்கிக் கொண்டேன். அக்கட்டியில் என் பெண்ஜாதியின் சவத்தை ஒளித்துவைத்து நானும் பதுங்கிக் கொண்டேன். அறைக்குள் வந்த ஜப்பானியர்கள் கட்டிலின்கீழ் பார்க்காமல் துப்பாக்கி ஈட்டிகளால் எல்லா படுக்கைகளிலும் குத்தினார்கள். என் மனைவியின் சவத்திலும் மறுபடியும் குத்துகள் விழுந்தன. எனக்கு பலத்த காயம் ஏற்பட்டது. பிறகு நானே என் பெண்ஜாதியின் சவத்தை அருகாமையில் புதைத்துவிட்டேன்).

## சீனர்கள் ஹிம்சிக்கப்பட்டார்கள்.

"முக்கியமாக சீனர்களுக்கும் இன்னும் மற்ற அந்நிய ஜாதியாருக்கும் இம்மாதிரி நேர்ந்தது. நானிருந்த கட்டடப் பகுதிகளில் நான் ஒருவன் தான் அயல்

நாட்டைச் சேர்ந்தவன். 40 சீனர்கள் இருந்தார்கள். அவர்களில் எல்லா ஸ்திரீகளும் கற்பழிக்கப்பட்டு, எல்லா மனிதர்களும் துப்பாக்கியால் சொருகும் ஈட்டிகளால் குத்தப்பட்டார்கள்.

"அயல் நாட்டார்கள் கைதி செய்யப்பட்ட பிறகு அவர்கள் ஹிம்சிக்கப் படவில்லை. ஆனால் சீனர்களுக்கு மட்டில் பிற்பட்டும் துன்பம் விளைவிக்கப் பட்டது. ஜனவரி மாதக் கடாசியில் தண்ணீர் துறைக்குப் பக்கத்தில் சீனர்கள் நீள வரிசையாக நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டேன். ஜப்பானியர்கள் யாதொரு காரணமும் இல்லாமல் மூங்கில் கம்புகளினால் ஆண் பெண்களுக்கு ஒரு டஜனுக்குக் குறையாமல் அடிகள் கொடுத்து, தண்ணீரில் எறிந்து அவர்கள் மூழ்கினதைப் பார்த்தேன். கொல்லப்பட்ட சீனர்களின் சவங்களைப் பார்த்துக்கொண்டே நான் துறைமுகத்தில் நடந்து சென்றேன்.

"சுமார் 22 வயதுள்ள ஒரு சீன பெண் பிள்ளையை வெய்டன்ஹாம் தெரு மூலையில் நிறுத்தி ஜப்பானியப் போர்வீரர்கள் அவளை துயிலுரிந்து, ரஸ்தாவின் நடுவில் அவளை நிருவாணமாக நிறுத்தினார்கள். அதற்கு ஒரு மணி கிரமித்து நான் அவ்வழியாகச் செல்லும்பொழுது அவள் அப்படியே நின்றுகொண்டிருந்தாள்.

## குடியேற்ற நாட்டு இலாகா காரியதரிசி கைதி செய்யப்பட்டார்.

"சண்டை துவக்குவதற்கு ஒரு நாளைக்கு முந்தித்தான் ஹாங்காங்குக்கு வந்து சேர்ந்த குடியேற்ற நாட்டு இலாகா காரியதரிசி மிஸ்டர் கிமஸன் அந்த தேசம் சரண புகுந்த பிறகு ஜப்பானியர்கள் செய்து வரும் அக்கிரமங்களைக் கண்டனம் செய்து கடிதம் எழுதினார். மறுநாள் அவர் கைதி செய்யப்பட்டு ஜெயிலில் வைக்கப்பட்டார்.

"தெருக்களில் கைதி செய்யப்படும் வரை காபந்து செய்துவந்த ஹாங்காங் போலீஸ்காரர்களின் தொப்பிகளிலும், சட்டைகளிலுமிருந்த தங்கத்தினால் செய்த சக்ரவர்த்தியின் முடி சின்னங்களை ஜப்பானியர்கள் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அந்த நகரத்தின் மத்தியில் எனக்குத் தெரிந்த போலீஸ்காரன் ஒருவன் அந்த சின்னத்தைத் தரித்துக்கொண்டு நடப்பதைக் கண்டேன். 'எப்படி அச்சின்னங்கள் உன்வசம் மாத்திரம் இன்னுமிருக்கிறது. என்று நான் கேட்டேன். சட்டைப் பையிலிருந்து கை நிறைய சின்னங்களை எடுத்துக்காட்டி, 'ஜப்பானியர்கள் பிடுங்கிக் கொள்ள, பிடுங்கிக்கொள்ள நான் ஒவ்வொன்றாக தரித்துக்கொண்டு வருகிறேன்' என்று சொன்னான். இதுதான் ஹாங்காங் வாசிகளின் விசேஷமான ராஜவிசுவாசம்."

---

## நிரபராதிகளைக் கொலை செய்தல்.

### பத்து ஜெர்மானியர்களுக்கு 4,000 ஸெர்பியர்கள் வீதம் கொல்லப்படுகின்றனர்.

லண்டனிலிருக்கும் யூகோஸ்லாவிய அரசாங்கத்தின் பிரதம மந்திரி புரபசர் யோவானோவிட்ச் என்பவர் ஸண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் நிருபர் ஜார்ஜ் ஸ்லோகோம்பு என்பவரை பேட்டி கண்டபொழுது சொன்னதாவது:—

ஜெர்மன் சைனியம் செய்த அட்டூழியங்களைப்பற்றி சரித்திரத்தில் இதுவரை கேள்விப்பட்டிருத படுகொலைகள் நடந்த விவரம் இப்பொழுது முதன் முதலாக போப்பின் பவனத்திலிருந்து கிடைத்திருக்கிறது.

ருஷ்யாவின் பேரில் படையெடுத்த மூன்றுமாதங்கள் வரை ஸெர்பியர்களும் பொதுவுடைமைக்காரர்களும் ஜெர்மன் சைனியங்களுக்குப் பின்னிருந்துகொண்டு ஜெர்மன் ஆக்கிரமிப்பைப் பிடிவாதமாக எதிர்த்துவருவதைப்பற்றி ஹிட்லருக்குத் தெரியப்படுத்தவில்லை. அவனுக்கு அவ்ரகசியம் தெரிந்தவுடன் ஒரு ஜெர்மன் சிப்பாய் கொல்லப்பட்டால் அதற்கு ஈடாக 100 ஸெர்பியர்களைச் சுடவேண்டும் என்றும், ஒரு ஜெர்மானியனுக்குக் காயம் ஏற்பட்டால் அதற்குப் பதிலாக 50 ஸெர்பியர்களைச் சுடவேண்டும் என்றும் கடுமையாக உத்தரவு கொடுத்தான். மேலும் எந்த வீட்டிலிருந்து குண்டுகள் கிளம்புகிறதோ அதை எரித்து சாம்பலாக்கவேண்டுமென்றும், அந்த வீட்டில் 50 வயதுக்கு மேலுள்ள ஆண்களைக் கொன்றுவிடவேண்டுமென்றும் உத்தரவிட்டான்.

சென்ற அக்டோபர் மாதத்தில் பொதுவுடைமைக் கக்ஷிக்காரர்கள் ஸெர்பியா தேசத்தின் மத்தியிலிருக்கும் கருகுயேவாட்ச் நகரத்திற்கு வெளியிலிருந்த ஜெர்மன் படையைத்தாக்கி, 10 ஜெர்மானியர்களைக் கொன்றும், 26 பேர்களுக்குக் காயத்தையும் உண்டாக்கினார்கள். அக்டோபர் 20-ம்தேதி விடியற்காலத்தில் பெரும்பலம் வாய்ந்த ஜெர்மன் படை ஒன்று அந்நகரத்தைச் சுற்றிக்கொண்டது. ரஸ்தாக்களை எல்லாம் மூடிவிட்டது. அந்நகரத்திலுள்ள ஆண்பிள்ளைகளை எல்லாம் சுற்றிவளைத்துக்கொள்ள ஆரம்பித்தது. அந்த நகரவாசிகளுக்கு நேர்ந்திருக்கும் கதி அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவர்கள் தப்பிஓட பிரயத்தனப் படவில்லை. 15 முதல் 50 வயது வரையுள்ள ஆண்மக்களையெல்லாம் திரட்டி டோப்போவிஸ்கெஸுப் (Topovskesupe) என்ற இடத்திலுள்ள ராணுவ வாஸஸ்தலங்களில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அங்கு இரவு பூராவும் அவர்களுக்கு என்ன கதி நேரிடுமென்றுகூடத் தெரியாமலே அவர்கள் காலங்கழித்தார்கள். ஆனால் அவர்களுக்கு பயம் என்பது கிஞ்சித்தும் ஏற்படவில்லை.

அப்படி சுற்றி வளைக்கப்பட்ட ஸெர்பியர்கள் 7,000 அல்லது 8,000 பேர்களிலிருக்கும். தெருக்களிலுள்ள பத்திரிகைகள் விற்கும் பையன்களையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றினார்கள். குதிரைவண்டி ஓட்டிக்கொண்டிருந்தவர்களைப் பிடித்துக்கொண்டார்கள். கச்சேரிகளில் உள்ள நீதிபதிகள், வக்கீல்கள், சாக்ஷிகள், கைதிகள் இவர்களையும் அநேகம் குருமார்களையும் பிடித்துப்போனார்கள். ஆற்றில் வெள்ளம் வராமல் அணைக்கட்டிக்கொண்டிருந்த சுமார் 6,000 தொழிலாளிகளைப் பிடித்துப்போனார்கள். இன்னும் அங்குள்ள வியாபாரிகள், தொழிலாளிகள், கைத்தொழில் பழகிக்கொள்ளவந்தவர்கள், யூதர்கள், குறிசொல்லுபவர்கள் இவர்களைக்கூடப் பிடித்துப்போனார்கள். கடைசியாக ஒரு கீழ்தரப் பள்ளிக்கூடத்தில் நுழைந்து பையன்களிருக்கும் அறைகளில் நுழைந்து 16 வயதுக்கு மேல்பட்ட மாணவர்களையும், உபாத்தியாயர்களையும், வயது முதிர்ந்த M. பாண்ட்லீட்ச் என்ற தலைமை உபாத்தியாயரையும் பிடித்துப் போய்விட்டார்கள்.

அடுத்தநாள் வெடியற்காலத்தில் ஜெர்மானியர்கள் தாங்கள் கொண்டுவந்த கைதிகளை 40 பேர்களாக வகுத்து நகரத்திற்கு வெளியேயுள்ள நிலங்களுக்குக் கொண்டுபோனார்கள். அங்கே அவர்களை முறைப்படி யந்திர பீரங்கிகளைப் பிரயோகித்து, சுட்டு வீழ்த்தினார்கள். ஸிம்மர்மான் என்ற ஜில்லா ராணுவ தலைமை அதிகாரியின் உத்தரவுப்படி ஜெர்மன் ராணுவ சிப்பந்தி ஒருவன் இந்தக் கொலையை நடத்தினான்.

100 பள்ளிக்கூடப் பையன்களைச் சுடும்முறை வந்தது. அந்தப் பையன்கள் கையில் புஸ்தகங்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது தலைமை உபாத்தியாயர் முழங்காலிட்டு அவர்களைக் கொலைசெய்யாமல் விட்டுவிடும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அவர் வேண்டுகோள் மறுதளிக்கப்பட்டவுடன் அவர் அந்த ஜெர்மானியனிடம் 'என்னையும் சுட்டுவிடு' என்று கத்தினார். அப்படியே அவரும் கொலை செய்யப்பட்டார்.

இம்மாதிரி கொல்லப்பட்டவர்களில் 12 உபாத்தியாயர்கள், 7 குருமார்கள், அநேக நீதிபதிகள் இருந்தார்கள். முதன்முதலில் கொலை செய்யப்பட்டவர் அந்நகரத்தில் பிரசித்திபெற்ற ஒரு பரோபகாரி. அந்த நாள் பூராவும் கொலை நடந்தது. ஹிட்லர் உத்தரவுப்படி கொலை செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதாவது 2,300 பேர்கள் சுடப்பட்டு விட்டார்கள் என்று ஒரு போர்வீரன் சொன்னான். ஆனால் அந்த ராணுவ அதிகாரியோ இன்னும் சுடும்படி உத்தரவு கொடுத்தான். அதற்குப்பிறகு இறந்தவர்களின் கணக்கு எடுக்கப்படவில்லை. உத்தியோக இறந்தவர்களின் எண்ணிக்கை 3,400-லிருந்து 4,000 வரையிருக்கும். உத்தியோக முறையில் ஜெர்மனியில் நியமிக்கப்பட்ட நகர அதிகாரி மூலம் நகர ஜனத்தொகையில் ஆண்மக்களில் 100-க்கு 60 பேர்கள் அழிக்கப்பட்டார்கள், என்று வெளியிடப்பட்டது.

இறந்தவர்களைப் புதைக்க அநேக நாட்கள் பிடித்தன. அவர்களையெல்லாம் அதிக ஆழமில்லாத கல்லறைகளில் ஒன்றாகச் சேர்த்துப் போடப்பட்டார்கள். அந்த நகரம், நரகம் போலாய்விட்டது. சாதாரணமாக குடியானவர்கள் அந்த நகரத்திலுள்ள மார்க்கட்டுகளில் கூட்டம்கூட்டமாக வந்திருப்பதுபோக இப்பொழுது அவர்கள்கூட அங்கு வாராமலிருந்துவிட்டார்கள்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 91—(3-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | ... 18, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 19, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | வடகாடு | ... | ,, | 6.30 |
| | 20, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| | 21, செவ்வாய்க்கிழமை | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | | ராயவரம் | ... | ,, | 6.30 |
| | 22, புதன்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |
| | 23, வியாழக்கிழமை ... | மழையூர் | ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| | 24, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 92—(4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 26, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, | 5.30 |
| | | கீரப்பழனி | ... | ,, | 6.00 |
| | | ஆதூர் | ... | ,, | 6.30 |
| | 27, திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, | 6.30 |
| | 28, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | இள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 29, புதன்கிழமை ... | வடவாளம் | ... | ,, | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.30 |
| | 30, வியாழக்கிழமை ... | ரெகுனூர் | ... | ,, | 6.00 |
| | | காஞ்சூர் | ... | ,, | 6.30 |
| மே | ... 1, வெள்ளிக்கிழமை... | குழிபிறை | ... | ,, | 6.00 |
| | | செவலூர் | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—20-4-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25உ [நெ. 92

## மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்கள் மால்டா தீவிற்கு ஜார்ஜ் சிலுவை பதக்கத்தை அளித்திருக்கிறார். பிரிடிஷ் குடியேற்ற நாடுகளுக்குள் மால்டா விற்கே இவ்வித கௌரவம் முதல் தடவையாகக் கிடைத்திருக்கிறது.

இப்பதக்கத்தை மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்களின் விருப்பப்படி மால்டாவின் மாதாகோவிலில் அலங்காரமாக வைக்கப்படும். மால்டாவின் சிப்பாய்களின் ஆடைகளிலும் ஆயுதங்களிலும் இச்சிலுவை அணியப்படும்.

இவ்வித கௌரவத்தை அளிக்கும்போது மால்டா கவர்னருக்கு கீழ்கண்ட செய்தியையும் அனுப்பியிருக்கிறார்.

"மால்டா மக்களின் தைரியத்தை மெச்சியே இப்பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. எந்நாளும் அழியாத அவர்களின் வீரத்தனத்திற்கு அடையாளமாக இச்சிலுவை நிற்கும்."

### மால்டாவின் தீரம்.

"கடந்த சில வாரங்களில் இரவும் பகலுமாக ஓயாது 500 அச்சுநாட்டு விமானங்கள் 91 சதுரமைலுள்ள மால்டா தீவின்மீது குண்டுகளை வீசி கடுமையான சேதங்களை விளைவித்திருக்கின்றன. இதுவரை நடந்த விமானத் தாக்குதல்களில் மால்டா மீது செய்யப்பட்டதே மிக அதிகமானது.

"சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வாலட்டா (Valetta) என்ற துறைமுகத்தில் பறந்து வெடிக்கும் குண்டுகள் விழுந்து அதிகச் சேதத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. கிருஸ்தவ சகாப்தம் ஆரம்பமானது முதல் இருக்கும் கட்டடங்களை எரி குண்டுகள் பாழாக்கியும் இருக்கின்றன.

"இருந்தாலும் அத்தீவுகோட்டைவாசிகள் கொஞ்சமும் கலங்காமல் தைரியமாக எதிர்த்து நிற்கின்றனர். ஆபிரிக்காவிற்குப் போகும் இதாலிய-ஜெர்மன் கடல்போக்குவரத்திற்கு ஒரு தடையாகவே இத்தீவு இருக்கிறது.

"இதுவரை 2,000 தடவைகளுக்குமேலாகவே விமானத்தாக்குதல்களும், யந்திர பீரங்கித்தாக்குதல்களும் ஏற்பட்டிருந்தும் மால்டா வாசிகள் அமைதியாகவே காணப்படுகின்றனர்.

"மலைகளைக்குடைந்து மால்டா மக்கள் வாசஸ்தலங்களை அமைத்துக்கொண்டு அங்கேயே வசிக்கின்றனர்.

"மால்டாவில் ஒரு இடம்கூடவிடாமல் குண்டு வீச்சுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததால் ஜனங்கள் தப்பி ஓடுவதற்கு வேறு இடமே கிடையாது. இதாலி இந்த சண்டையிலீடுபட்டபிறகு மால்டாவில் பிறந்த குழந்தைகளுக்கு குகை வீடுகளைத் தவிர வேறே ஒன்றும் தெரியாது. சூரியாஸ்தமனமாவதுதான் ஒரு கணக்கு. உடனே மறைவான இடங்களுக்குச் செல்லவேண்டியதுதான்.

"இடிந்த இடங்களைச் சரிபார்க்கும் வேலை எப்போதும் இருக்கும். ரஸ்தாக்களையும், வீடுகளையும், கச்சேரிக் கட்டடங்களையும், கடைகளையும் ரிபேர் செய்த மணியம்தான். தண்ணீர் குழாய்கள், மின்சாரக் கம்பிகள், டெலிபோன் கம்பிகள் யாவும் துரிதமாக பழுது பார்க்கப்படும்.

"மால்டா மக்கள் கதோலிக் மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய மாதாகோவில்கள் பழுதடைந்தன. ஸெயிண்ட் ஜான் கதீட்ரல் கோவிலும் இடிந்தது. முன்பு கப்பல் உடைந்ததால் ஸெயிண்ட் பால் என்ற பாதிரி தங்கியிருந்த புராதன கோவிலும் பூரா இடிந்தது.

"ஆகவே தற்சமயம் பிரார்த்தனைகளெல்லாம் தற்காப்பு ஸ்தலங்களில் செய்யப்படுகின்றன. அங்கேயே ஸ்வாமி பீடம் அமைக்கப்பட்டு, தீபங்களேற்றப்பட்டு தொழப்படுகிறது. குண்டு வீச்சுகளால் ஜனங்களுக்கு கெடுதி ஏற்படுமே தவிர ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வரும் ஆசாரங்கள் என்றும் அழியா. இவ்விஷயம் அச்சுநாட்டினருக்கு நன்குகத் தெரியும்.

"1565-ல் துருக்கியர் முற்றுகையிட்ட காலத்தில் மால்டா வாசிகள் தைரியமாக எதிர்த்து நின்ற விதமாகவே அந்த பரம்பரையில் வந்த மக்கள் தற்சமயத்தில் நாஸிகளை எதிர்த்து வெற்றியடைவது அல்லது இறப்பது என்ற லக்ஷியத்துடன் சண்டை செய்து வருகின்றனர்.

---

பிரஸங்கம் XCII.

# இந்தியாவின் பாதுகாப்பு.

---

## இந்திய மக்களுக்கு மேன்மை தங்கிய Sir ஆர்ச்சிபால்டு வேவல் ஒலிபரப்பு மூலம் அறிவித்த செய்தி.

நீண்ட காலமாக அயல் நாட்டவரின் ஆக்கிரமிப்புனுல் ஏற்படக்கூடிய அபாயத்திற்கு உட்படாமல் இருந்த இந்தியாபோன்ற தேசத்தில் பீதி ஏற்படுவது சகஜம். அதிலும் அபாயம் அதிகமாக நேரிடக்கூடிய பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு பீதியும் கவலையும், சந்தேகமும் ஏற்படுவது ஸர்வ சகஜம். தங்களுக்கும், தங்கள் குடும்பங்களுக்கும் ஆபத்து சமீபித்துவிட்டதே என்று அல்லல்படுகின்றனர். இந்தியப் பாதுகாப்பில் ஈடுபட்டவர்கள் திறமையுடன் நடந்து கொள்ளுவார்களா என்ற சந்தேகமும் உண்டாகிறது.

கடந்த சில மாதங்களாக நடந்துவரும் ராணுவ சம்பவங்கள் கவலையை உண்டுபண்ணியிருக்கின்றன. இந்தக்கடும் யுத்தம் இரண்டரை வருஷ காலமாக நடந்துவருவதில் இந்தியாவிற்கு அருகில் வரவில்லை. துளிக்கூட அபாயம் ஏற்படவுமில்லை. இதற்குக் காரணமாக இந்தியத் துருப்புகள் வெளி நாடுகளில் உறுதியுடனும் தைரியமாகவும் சண்டை செய்து வந்திருப்பதுதான். லிபியா போன்ற மேற்கு நாடுகளில் இவர்கள் போரில் ஈடுபட்டு அபாயம் வராமல் தடுத்திருக்கின்றனர்.



அதைப்போல் கீழ்திசை நாடுகளுக்கும் இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அங்கும் பலமாக எதிரிகளை எதிர்த்து யுத்த பயம் பரவாமல் தடுப்பார்கள்.

இருந்தாலும் மலேயா, பர்மா முதலிய இடங்களில் நடந்துள்ள சம்பவங்கள் இந்தியரின் மனதில் திகிலையும் சந்தேகத்தையும் உண்டுபண்ணியிருக்கின்றன. இவைகளை எதிரியின் தற்புகழ்ச்சிப் பிரசாரம், இன்னும் சிங்கப்பூர், ரெங்கூன் முதலிய இடங்களிலிருந்து ஓடிவந்தவர்கள் சொல்லும் கதைகள் முதலியன இன்னும் அதிகமாக்குகின்றன.

## கொடுக்கும் உறுதி மொழிகள் உண்மையானவையே.

இந்தியாவின் பாதுகாப்புப் பொறுப்பு பூராவும் என் பேரிலேயே சுமத்தப்பட்டிருக்கிறது. பொய்யானவைகளும் சுலபமானவைகளுமான உறுதி மொழிகளைக் கொடுப்பவன் நானல்ல. அபாயம் இல்லையென்றும் நான் சொல்லவில்லை. ஆனால் இருக்கும் பயத்தைத் தெளிவாக எடுத்துச்சொல்லவும், எவ்விதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று காண்பிக்கவே நான் முன் வந்திருக்கிறேன்.

கொஞ்சமும் தாமதிக்காமல் ஒரு உறுதி கூறுகிறேன்; அச்சுநாடுகளின் மிருகத்தனத்தையும், ஆக்கிரமணத்தையும் அடக்குவதற்காகப் புரியப்படும் இந்த யுத்தத்தின் இறுதியான வெற்றி நமக்குக்கிட்டுவது என்பது மாத்திரம் நிச்சயம்.

## உதவியளிக்கும் நாடுகள்.

உலகில் உறுதியும், பலமும், பொறுமையும் கூடிய நான்கு நாடுகள் இந்தியரின் பக்கமிருக்கின்றன. அவர்கள் பிரிடிஷார், சீனர், ருஷ்யர், அமெரிக்க மக்கள். சமாதான காலங்களில் பிரிடிஷார் கஷ்டமறியாதவர்களாகவும் சுகஜீவனம் செய்கிறவர்களாகவும் காணப்படுவார்கள். எதிரிக்கு விட்டுக்கொடுப்பது என்ற மனப்பான்மையே அவர்களுக்குக் கிடையாது. கஷ்டம் வந்தபோதுதான் மறைவாகக் கிடக்கும் திறமையும், சாமர்த்தியமும் தானே வெளிவரும். ஒருக்காலும் பணியமாட்டார்கள்.

இரண்டாவது சீனர். இவர்களுடைய நாகரீகம் மிகப் புராதனமானது. ஆயுதக் குறைவிருந்தாலும் ஐந்து வருஷ காலமாக ஜப்பானியரை எதிர்த்து வந்திருக்கின்றனர்.

மூன்றாவதாக நமக்கு உதவுகிறவர்கள் ருஷ்யர். ஜெர்மானியரின் தீவ்ர தாக்குதல்களைக் கொஞ்சமும் கலங்காமல் எதிர்த்து சண்டைசெய்து வருகிறார்கள். இவர்களால் ஜெர்மானியருக்கு பலத்த தோல்வியும் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிற்கு உதவி கடைசியாக அமெரிக்கர்கள் நமது பக்கமிருக்கின்றனர். இந்தியாவிற்கு உதவி புரியவேண்டுமென்ற தீவ்ர உறுதி இவர்களுக்கு இருக்கிறது காரியத்தில் இறங்கிவிட்டால் கொஞ்சமும் பின்வாங்கமாட்டார்கள். இவ்வித காரணங்களைக் கொண்டு நாம் ஜயிப்போமென்பதில் சந்தேகமே வேண்டாம். எப்பொழுது, எப்படி என்பதுதான் பிரச்னை.

## இந்தியத் துருப்புகளின் திறம்.

அடுத்தபடியாக நான் தைரியமாகக் கொடுக்கக்கூடிய அம்சம் இந்தியப் பாதுகாப்பில் ஈடுபட்ட துருப்புகளின் தைரியத்தைப்பற்றியும், திறமையைப் பற்றியும் தான். இவைகளில் எனக்கு அதிக நம்பிக்கையிருக்கிறது. மலேயா, பர்மா முதலிய இடங்களில் நடந்தவைகளை ஆதாரமாகக்கொண்டு பிரிடிஷ் சிப்பாய்களைப்பற்றியாவது இந்தியச் சிப்பாய்களைப் பற்றியாவது உங்களுக்குச் சந்தேகம் ஏற்படவேண்டாம். ஜப்பானியரைப்பற்றி பிரமாதமாகவும் நினைக்கவேண்டாம்.

அந்தந்த ஸ்தலங்களில் நமது படைகள் முன்ஜாக்ரதையுடனில்லை, பயிற்சியும் போதாது. இவ்வித தவறுதல்களைப்பற்றி நான் விவரிக்கப்போவதில்லை. அந்த அனுபவங்களிலிருந்து தக்க பாடங்களைக் [illegible] கொண்டோம்,

இனி அந்தத் தவறுதல்கள் நேராது. ஜப்பானியச் சிப்பாய்கள் உறுதி வாய்ந்து சண்டை செய்கிறவர்கள் தான். மனிதனுக்கு மனிதன் நம்மள் சிப்பாய்களும் சளைத்தவர்களல்ல, மேலானவர்களே. நான்கு மாதங்களாகியும் நமது துருப்புகள் பர்மாவில் இன்னும் உறுதியாகவே எதிர்த்து வருகின்றனர். ஓய்ச்சல் ஒழிச்சல் இன்றி போர் செய்கின்றனர். ஜப்பானியரின் எண்ணிக்கை மிகப்பெரிது. இதைத் தவிர எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் சண்டை செய்துவருவதே அவர்களுடைய திறத்திற்குத் தகுந்த அத்தாக்ஷியாகும்.

## இந்தியாவின் பாதுகாப்பு.

அடுத்தபடியாக இப்பிரச்னையை எடுத்துக்கொண்டால் விமானத்தாக்குதல் நேரக்கூடிய அபாயம்தானிருக்கிறது. நகரங்கள் மீது குண்டு வீச்சும் நேரலாம். இதனால் பொதுமக்களுக்கு திகில் உண்டாகியிருக்கிறது. இருக்கும் அபாயத்தை அதிகமாக நினைத்துக்கொண்டே அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

இந்த யுத்தத்திற்கு முன்பு விமர்சனக்காரர்கள் எல்லாம் அழிந்துவிடப் போகிறதென்று ஜோஸியம் சொன்னார்கள். ராட்டர்டாம் நகரிலும், பிரிடனில் சில பட்டணங்களிலும் ஜெர்மானியர் செய்த கொடுமைப் படையெடுப்புகளைக் கண்டே யாவரும் பீதியடைந்திருக்கின்றனர். ஆனால் அவ்வித படையெடுப்புகளை அனுபவித்த டச்சுக்காரர்களும், பிரிடிஷாரும் கொஞ்சமும் அதைரியம் கொள்ளவில்லை என்று யாவரும் நினைத்துக்கொள்ளவேண்டியது.

நமது எதிரிகள் செய்யும் பலாத்கார யுத்தத்தில் பொதுஜனங்களுக்கிடையே பீதியை உண்டாக்குவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

தப்பி ஓடிவந்தவர்கள் பலவிதக் கதைகளைச் சொல்லிவருகின்றனர். இவையாயும் உண்மையாக இருக்கமாட்டா. அவரவர்கள் தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களைக் கொஞ்சம் மிகையாகச் சொல்லுவதென்பது தான் பழக்கம். இருந்தாலும் ஏற்பட்டிருக்கும் அபாயத்தை நான் குறைத்துச் சொல்லவில்லை.

ஆனால் அபாயத்தின் மதிப்பைப்பற்றி சரியான விவரத்தை வெளியிட வேண்டுமென்பதே என் நோக்கம்.

## விரோதி விமானத் தாக்குதல்கள்.

முதலாவதாக பிரிடன்பேரில் ஜெர்மன் விமானப் படையெடுப்பு நேருவதைப் போலவோ, ஜெர்மனிபேரில் பிரிடனால் செய்யப்படும் படையெடுப்பைப் போலவோ அவ்வளவு கடுமையாக இந்திய நகரங்களில் தாக்க ஜப்பானுக்கு போதுமான சக்தி கிடையாது. சிங்கப்பூரில் விமானப் படையெடுப்புகள் கொஞ்சம் தான் நேர்ந்தன. பொதுமக்களுக்கோ, ராணுவங்களுக்கோ சேதம் கொஞ்சம் தான்.

சிங்கப்பூர் எதிரிவசமாவதற்குச் சில தினங்களுக்கு முன்பு நான் அங்கு இருந்தேன். முடிந்த அளவு விமானங்களைக் கொண்டுவந்தே ஜப்பானியர் தாக்கினர். ஆனால் அவ்விதமாக இந்தியப் பட்டணங்களை ஜப்பானியரால் தாக்க முடியாது.

சிங்கப்பூரில் ஏற்பட்ட சேதமும் ஒரு தடவையில்தான் அதிகம். ஏனென்றால் பதுங்குமிடங்களை ஜனங்கள் அடையவில்லை. இதே விதமாகத்தான் ரெங்கூனிலும் நடந்தது.

ஜப்பானியர் இதுவரை கண்மூடித்தனமாக பொதுமக்கள் பேரில் குண்டு வீசியதில்லை. ஆனால் தேவை ஏற்பட்டால் அவ்விதம் செய்யத் தயங்கவே மாட்டார்கள்.

பொதுமக்கள் கலவரமடையாமல் பாதுகாப்பு விதிகளின்படி நடந்து கொண்டால் சேதம் அதிகமேற்படாது. படையெடுப்புக் காலங்களில் சப்தமும் தூசியும் கிளம்புமே தவிர உயிர்ச் சேதமோ, காயமோ அதிகமேற்படாது.



## பாதுகாப்பு ஏற்பாடுகள் தயாராக இருக்கின்றன.

இரண்டாவதாக இந்தியாவில் அபாயம் ஏற்படக்கூடிய இடங்களில் பாது காப்பிற்காக நாம் வைத்திருக்கும் விமான பலமும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் அதிக பலம் வாய்ந்தவையே. அந்த இடங்களிலெல்லாம் எதிரிக்கு அதிக நஷ்டமே ஏற்படும்.

திரிகோணமலை, கொழும்பு முதலிய இடங்களில் எதிரி ஏராள விமானங் களைக்கொண்டு ரெங்கூனைத் தாக்கியதுபோல் தாக்குதல் செய்தாலும் நஷ்டத்தையும் அடைந்திருக்கிறான்.

இந்தியாவில் நமது பாதுகாப்பு முறைகள் தினம் விருத்தியடைந்து இந்தியா பூராவும் பரவி வருகின்றன.

நான் விரும்பும் அவ்வளவு பலத்துடன் இவைகள் இல்லை என்பது உண்மை தான். ஆயினும் சில வாரங்களுக்கு முன் இருந்ததைக் காட்டிலும் அதிக பலத் துடனிருக்கிறது. விமானப் பாதுகாப்பே இல்லாமல் சில மாதங்களுக்கு முன் இருந்த நிலை பூரா மாறிவிட்டது. கூடிய சீக்கிரத்தில் பாதுகாப்பு இன்னும் ஓங்கிவிடும்.

பயனேற்படும் வரை விமானப் படையெடுப்பு பாதுகாப்புகளைச் செய்து கொள்ள மூன்று அம்சங்கள் தேவை:—

(1) பைடர் விமானங்கள், விமானஎதிர்ப்பு பீரங்கிகள்.

(2) ஏ. ஆர். பி. முறைகள்.

(3) ஜனங்களின் உறுதியும்கட்டுப்பாடும்.

இவைகளில் கடைசியாகச் சொன்னதுதான் முக்கியமானது.

## படையெடுக்கக்கூடிய சந்தர்ப்பம்.

மற்றொரு அபாயம் இருக்கிறது. ஆனால் இது அவ்வளவு ஆபத்தானதுமல்ல, சீக்கிரத்தில் நேரக்கூடியதுமல்ல. அதாவது கடல் மூலமாயும் தரை மார்க்கமாயும் ஏற்படக்கூடிய அபாயம்தான்.

இந்தியக் கடற்கரைக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதும், படைகளை இறக்குவதற்கு எதிரி முயற்சிப்பான் என்பதும் உண்மைதான்.

இந்து மகாசமுத்திரத்திலிருந்து ஜப்பானியரை நேசநாடுகள் விரட்டும் வரை எதிரிப்படைகள் ஏதாவது ஒரு இடத்தில் இறங்கலாமென்பதை எதிர்பார்க்கலாம்.

விஸ்தாரமான இந்தியக் கடற்கரைப் பிரதேசம் பூராவும் பாதுகாப்பு முறைகளையோ, சிப்பாய்களையோ வைப்பது அசாத்தியமான விஷயம். இவ்விதம் செய்யும் உத்தேசமும் எனக்கு இல்லை.

அருகில் எதிரிக் கப்பல்கள் வராமல் தடுக்க விமான பலமும், ஏதாவது இந்தியா ஓரிடத்தில் ஆபத்து ஏற்பட்டால் தரைப்படையும் வைக்கப்பட்டு பாதுகாக்கப்படும்.

இவ்விரண்டு பலமும் இப்போது திரட்டப்பட்டு வருகிறது.

## ஜப்பானியருக்குள்ள சிரமம்.

ஏற்பட்டிருக்கும் அபாயத்தைத் தெளிவாகக் காண்கிறோம். அது அதிகம்தான். கஷ்ட நிலைகளில் தனக்குள்ள சிரமங்களையும் எதிரிக் குள்ள கஷ்டங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பதே சேனாதிபதியின் கடமையாகும்.

ஜப்பானியரின் தளங்கள் அவர்களிருக்குமிடத்திற்கு வெகு தூரத்திலிருக்கின்றன. யுத்தம் அகண்ட பிரதேசத்தில் நடைபெறுகிறது. அவர்களுடைய

போக்குவரத்து சாதனங்கள் கடல் விமான மூலம் தாக்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன;

விமான மூலம் இந்தியாவைத் தாக்க ஜப்பானியர் முயன்று ஒரு பகுதியை வசப்படுத்தவும் முயலலாம். ஆனால் இந்தியா உண்மையாக நடந்துகொண்டால் எதிரிக்கு அதிக சிரமம் தான்.

எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கையுடன் வாழ்வதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறேன்.

நமக்கு இருக்கும் கஷ்டமும், அபாயமும் மகத்தானவை. இந்தியப் பாது காப்பைப்பற்றிய பொறுப்பும் எனக்கு அதிகம் இருக்கிறது.

## நமது வெற்றியைத் தடுக்கமுடியாது.

இந்தியப் பாதுகாப்பு விஷயத்தில் நேசநாடுகள் அக்கறை யெடுத்துக் கொண்டு தேவையான உதவியைச் செய்யத் தயாராக இருக்கின்றன என்பதை நான் எடுத்துக் கூறுகிறேன். வெற்றி கிட்டும்வரை சண்டைசெய்வார்கள்.

இந்த உறுதியை ஒன்றும் தடைசெய்யாது. ஆனால் தோல்வி ஏற்படுமோ என்ற எண்ணமும், அகாரணமான பீதியும்தான் தடை செய்யும்.

அவ்வித மனப்பான்மை கூடாதென்றும், ஆக்கிரமிப்பை எதிர்க்கவேண்டுமென்றும், இந்தியாவின் பிரபலத் தலைவர்கள் சமீபத்தில் கர்ஜித்திருக்கின்றனர். இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பினரும், பிரிடிஷாரானாலும் சரி, இந்தியரானாலும் சரி, அதிகாரிகளும் பொதுமக்களும் ஒன்றுபட்டு அபாயத்தைத் தடுக்க வேண்டும். ஆபீஸ்களிலோ, தொழிற்சாலைகளிலோ, கிராமங்களிலோ, தம்தம் கடமையைச் செய்யவேண்டும். முழுமனதுடன் உழைத்தால் பாதி பயம் தீர்ந்துவிடும். எனது பொறுப்பும் குறைவுபடும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

### 18—4—42-லிருந்து 24—4—42-வரை.

**பர்மா.**—யேனாங்யங் என்ற இடத்தை பிரிடிஷ், சீனத் துருப்புகள் திரும்பப் பிடித்த செய்தி கிடைத்திருக்கிறது. இங்கேதான் மேற்கு பர்மிய எண்ணெய் தளங்கள் அதிகம். ஏற்கனவேயே சொல்லிய பிரகாரம் சென்ற வாரத்தில் ஜப்பானியர் உட்புகுந்த காரணத்தினால் எண்ணெய் பிரதேசங்கள் யாவும் பூதகன முறைக்கு உட்படுத்தப்பட்டன. ஆனால் கியாக்படுனா (Kyaukpadauna) விலிருந்து புதிய சீனப் படைகள் வந்து பிரிடிஷ் படைகளுடன் சேர்ந்து தாக்கின. ஜப்பானியப்படை சூழ்ந்துகொள்ளப்பட்டது. இடமும் பிடிக்கப்பட்டது.

நமக்கு ஏற்பட்ட இந்த சாதகத்தால் மூன்று மைல் தெற்கு நோக்கி எதிரி விரட்டப்பட்டான். ஸிட்டாங் முனையில் பியின்மானா (Pyinmanna) வைச் சுற்றி சீனப் படைகளுக்கும் ஜப்பானியப் படைகளுக்கும் சண்டை நடக்கிறது. ஸால்வீன் முனையில் டோங்கூவிற்கு வடகிழக்கில் 60 மைல் தூரத்தில் பாவ்லேக் (Bawlake) என்ற இடத்தில் சண்டை நடந்துவருகிறது. ஐராவதிக்கும் ஸால்வீனுக்கும் இடையிலுள்ள இருப்புப்பாதையில் டாங்டிவிங்யி (Taungdwingyi) என்ற இடத்தை நேசதேசப்படைகள் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றன.

ஸால்வீனுக்கு மேற்கே லாய்காவை நோக்கி ஜப்பானியர் முன்னேறுகின்றனர். சீனரை விரட்டுவதே நோக்கம்.

அல்லன்மியோ, பாஸீன், குவா குடா, ஸான்டேவே, ஆண்டிரு குடா முதலியவைகளை பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

**பிலிப்பைன்ஸ் தென்மேற்கு பஸிபிக்.**—பனாய் தீவில் தென்மேற்கு கரையில் ஸான் ஜோஸ் என்ற இடத்திற்கு எதிராக இன்னும் அதிகமாக ஜப்பானியத் துருப்புகள் வந்திறங்கியிருக்கின்றன. வடக்கு லூஸானில் அமெரிக்க, பிலிப்பைன்ஸ் துருப்புகள் படையெடுத்தன. பல தடவை தாக்கப்பட்ட ஜப்பானியச் சிறு சண்டைக்கப்பல் ஸெபுவிற்கு அருகில் அமெரிக்க டார்பிடோ படகுகளால் மூழ்கடிக்கப்பட்டது. இலோய்லோ, கபிஸ், ஆன்டீக் முதலிய இடங்களில் ஜப்பானியர் இறங்கியிருக்கின்றனர். டிமோரில் ஆஸ்திரேலியரும் டச்சுக்காரர்களும் ஜப்பானியரை எதிர்த்துவருகின்றனர்.

**ஜப்பானில்** குண்டு வீச்சு நிகழ்ந்திருக்கிறது. சனிக்கிழமை டோக்கியோ, யோகஹாமா, கோபி, நகோயா முதலிய பட்டணங்களில் அமெரிக்கக் கப்பல்களில் சென்ற விமானங்கள் குண்டு வீசின. அதுமுதல் அந்த இடங்களில் எச்சரிக்கை அடிக்கடி கொடுக்கப்படுகிறது. இதன் பயனாக தற்காப்புப் படை ஒன்றை டோக்கியோவில் தயார் செய்வதாகப் பிரஸ்தாபம். சைனாவில் சாகியாங், புகீன், நவாங்ஸி, ஜியுஸின் பிரதேசங்களை வேவுபார்த்து ஜப்பானியர் தாக்குகின்றனர். ஜப்பானில் குண்டுபோட்ட விமானங்கள் இந்த இடங்களிலிருக்கலாமென்று நினைக்கப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் ஜப்பான் அமெரிக்காவைக் கண்டபடியெல்லாம் பேசுகிறது. சரியாக ஊர்ஜிதமான விவரம் கிடைக்காததால் அமெரிக்கர்கள் முதலில் தகவலைக் கொடுக்க முடியவில்லை. குண்டுகளை வீசி விமானங்கள் திரும்பி விட்டன என்று சொன்னதன்பேரில் அவை சைனாவிற்குச் சென்றிருக்கலாமென்று ஜப்பானியர் நினைக்கின்றனர்.

**ருஷ்யா.**—இன்னும் ஆறு வாரங்களுக்குச் சகதியாகத்தான் இருக்கும். இந்த சமயத்தில் இருதிறப்பாரும் பலப்படுத்துகின்றனர். எதிரியின் பலத்தைக் குறைக்கும் விதமாக ருஷ்யப் படைகள் தாக்கியேவருகின்றன. மறுபடி யுத்தத்திற்கு வரவொட்டாமல் தடுக்க ருஷ்யர்கள் எதிரியின் போக்குவரத்துகளைத் தடுத்தும், டிரெயின்களைக் கவிழ்த்தும், படைகளை அழித்தும் வருகின்றனர். ருஷ்யர்களை முன்னேறித் தாக்கவிடாமல் ஜெர்மானியரும் முடிந்தவரை தடுக்கின்றனர். பின்லாந்து, ஸ்மொலென்ஸ்க், கலினின், பிரயான்ஸ்க், லெனின்கிராட் முனைகளில் ருஷ்யர்களுக்கு வெற்றிதான். மர்மான்ஸ்க்கைப்பிடிக்கச் செய்த ஜெர்மன் முயற்சி பலிக்கவில்லை. லெனின்கிராட்டைப் பிடிக்க முடியாததால் வான்லூப் என்ற சேனாதிபதி விலக்கப்பட்டான்.

தெற்கு யூக்ரேனில் இடம் வசதியாகிவிட்டதால் இருபடையினரும் பலம் செய்கின்றன. கொர்ச்சை நோக்கி ருஷ்ய உதவிப்படைகள் வருகின்றன. தியோடோஸியா தாக்கப்படலாம். காகஸை ஜெர்மானியர் தாக்குகின்றனர்.

**லிபியா.**—இவ்வாரத்தில் வெப்பக்காற்றுகள் அடித்ததால் சண்டைகள் நிறுத்தப்பட்டன. தற்சமயம் சீதோஷ்ண நிலை மாறியதால் எதிரி சேமித்திருக்கும் பிரதேசங்களை பிரிடிஷ்படைகள் காவல் புரிந்தன.

**மால்டா.**—பேரில் படையெடுப்புகள் மீண்டும் செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் பிரிடிஷ் விமானப்படைப் பகுதிகளும் வந்திருக்கின்றன.

**ஆக்ஸ்பர்க்.**—17உ பகலில் பிரிடிஷ் விமானங்கள் பிரிடனிலிருந்து 600-மைல் தூரம் பறந்து சென்று தாக்கின. அதன் ஜனத்தொகை 1,65,000. பவேரியாவில் இதுவே முக்கிய ரயில்வே ஜங்ஷன். ஜெர்மன் மெஸ்ஸர்ஷ்மிட் விமானங்கள் இங்கேதான் செய்யப்படுகின்றன. நீர்மூழ்கிகளுக்கு உதவும் டீஸெல் இன்ஜின்களும் செய்யப்படுகின்றன. ஸெயிண்டு ஓமார், கலே, ரோவன் சொர்பர்க் முதலிய இடங்களில் குண்டுகள் போடப்பட்டன.

**விஷி.**—ஜெர்மன் பலாத்காரத்திற்கு உட்பட்டு ஜெர்மானியருக்குச் சாதகம் செய்ய லவால் மந்திரியாகிவிட்டான். பிடேன் பேருக்குத்தான் தலைவன். அதிகாரம் லவாலுக்குத்தான். சமாசாரம், உள்நாட்டு வியவகாரம், அயல்நாட்டு வியவகாரங்களுக்கு மந்திரியாக இருப்பான். தரை, கடல், விமானப்படைகளுக்கு டார்லான்

அதிகாரி. ஏப்ரல் 20உ லவால் ஒலிபரப்பு மூலம் பேசும்போது தான் அதிகாரத்திற்கு வந்ததால் ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் சமரஸம் ஏற்பட்டதாம். ஐரோப்பிய சமாதானத்தை ஏற்படுத்தமுடியுமாம். ஆனால் அதேதினத்தில் ஆக்கிரமித்த பிரான்ஸில் 35 பிரெஞ்சு மக்கள் கொலைசெய்யப்பட்டனர். இவர்கள் 16உ ஜெர்மன் துருப்பேற்றிய டிரயினைக் கவிழ்த்தனராம். டிஸம்பர் 1940-ல் லவாலைக் கைதி செய்த மாண்டனல் பதவியிழந்தான். ஏப்ரல் 21உ அமெரிக்காவில் இருந்த லியோன் மார்ஷல் பிரெஞ்சு பிரதிநிதி பதவியை ராஜீனாமாச் செய்தான். கெய்ரோவில் சில கலகங்கள் நிகழ்ந்திருக்கின்றன. விஷியுடன் தென் ஆபிரிக்க அரசாங்கம் ராஜீய உறவை ரத்து செய்துவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **13—4—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—காவலுலவு—இங்கிலீஷ் கால்வாய் (English Channel)எங்கும். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலயங்கள்—டெர்னு (Derna), மார்டுபா (Martuba). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—பெங்காஸி (Benghazi), பார்ஸ் (Barce) பிரதேசங்களில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | | 6 விமானங்கள். | 13 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி துருப்புகளின் கூட்டங்கள், ஐராவதி போர்முனைக்குத் துருப்பு ஏற்றி வரும் படகுகள். | | | |
| | விமான நிலயம்—டோங்கு (Toungoo). | | | |
| | விரோதிப் படைகள்—ப்ரோமு(Prome)க்கு வடக்கே. | | | |
| | **அந்தமான் (Andamans) தீவுகள்.** | | | |
| | விரோதியின் கடல் விமானக்கூட்டங்கள்-பிளேர் (Blair) துறைமுகம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **14—4—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | மின்சார உற்பத்திசாலை இன்னும் மற்ற லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—கலே (Calais), பொலாயின் (Boulogne)பிரதேசங்கள். | | 4 விமானங்கள். | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr) பிரதேசத்தில். | | | |
| | சாமான் ஏற்றும் கப்பல்—நார்வீஜியன் கடற்கரைக்கருகாமையில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில், பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போராரங்கம் எங்கும். | | 4 விமானங்கள். | 20 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்—ராபால் (Rabaul). | 1 கப்பல் தாக்குண்டது. | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமானதளம்—மணிலாவுக் (Manila) கருகாமையிலுள்ள நிக்கோல்ஸ் (Nicholls). | சேதமாக்கப்பட்டது. | | |
| | ஒரு சிறுகப்பல்—படான் (Bataan) கடற்கரைக் கருகாமையில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | தரையிலுள்ள விரோதி விமானங்கள்—மிண்டானுவோ (Mindanao)வில் டாவோ (Davao)க்கருகாமையில் உள்ள விமான தளத்தில். | அநேக விமானங்கள் சேதமாக்கப்பட்டன. | | |
| | பண்டக சாலைகள்—டாவாய் (Davao). | | | |
| | இரண்டு துருப்பேற்றும் கப்பல்கள்—டாவாய் (Davao) குடாவில். | | | |
| | விமான தளம்—ஸீபு (Cebu) நகரத்தில். | | | |
| | 5 துருப்பு ஏற்றும் கப்பல்கள், கப்பல் துறைகள்—ஸீபு (Cebu). | 3கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; இரண்டு தாக்குண்டன. | 1 விமானம். | 3 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **15—4—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France).<br>கப்பல் துறைகள்-செர்பர்க் Cherbourg), கலே (Calais) பிரதேசத்தில.<br>இரவில்.—கப்பல் துறைகள்—ஸெண்ட் நஸேர் (St. Nazaire).<br>விமான நிலயம்—பெல்ஜியத்துக்குச் சொந்தமான ஹாலந்து, (Holland).<br>வெடிகண்ணிகள் பாவுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனேகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 32 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விரோதிப் படைகள்—போர்முனைக்குப் பின்புறத்தில். | | | |
| **16—4—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France).<br>மின்சார உற்பத்திசாலை, கப்பல் துறைகள்—லெஹாவர் (Lahavre)<br>கப்பல்துறைப் பிரதேசம்—டங்கர்க் (Dunkirk).<br>விமான நிலயம்.-செர்பர்க் (Cherbourg) தீபகற்பம்.<br>இரவில்.—ரூர் (Ruhr) இன்னும் மற்ற ஜில்லாக்கள்—ஜெர்மனி (Germany)யின் வடமேற்கு பாகத்தில்.<br>வெடி கண்ணிகள் பாவுவது.—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | 2 விமானங்கள். | 5 விமானங்கள். |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனேகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள், பெங்காஸி (Benghazi). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—4—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 16 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon). | | | |
| **17—4—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | காலையில்.—விமான எதிர்ப்புகள்—செர்பர்க் (Cherbourg) தீபகற்பம்.<br>மார்க்யூஸ் (Marquise).<br>பிற்பகலில்.—ஸெண்ட் ஓமர், (St. Omer), கலே (Calais) மிலுள்ள லக்ஷியங்கள்.<br>இருப்புப்பாதை.—கலே (Calais).<br>மின்சார உற்பத்திசாலை, கப்பல் கட்டு மிடங்கள், எண்ணெய் கிணறுகள்.—ரோவன் (Roven).<br>கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg)<br>யந்திரம்.—முக்கிய தொழிற்சாலை—ஜெர்மனியின் ஆக்ஸ்பர்க் (Augsburg) நகரம்.<br>இரவில்.—துறைமுகம்—ஹாம்பர்க் (Hamburg).<br>நீர்முழ்கிகளின் தளம்.—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire).<br>கப்பல்துறைகள்-லெஹாவர் (Lehavre).<br>வெடி கண்ணிகள் பாவுவது.—விரோதிக்குச் சொந்தமான கடல்களில்.<br>விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Law Countries). | | 3 விமானங்கள்.<br>9 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi), பெர்க்கா (Berka) பிரதேசங்களில்.<br>விமான எதிர்ப்புகள்.—முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முகம் முழுவதிலும். | | 4 விமானங்கள். | 6 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரபால் (Rabaul). | கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Dutch Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கோயபாங் (Koepang). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| 18—4—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள் வட பிரான்ஸ் (France). | | | |
| | இருப்புப் பாதைகள்.—கலே (Calais), பிரதேசத்தில். | | | |
| | இரவில்.—சீதோஷ்ண நிலை கெட்டிருந்ததால் விமான எதிர்ப்புகள் ஏற்படவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனேகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | மாக்வி (Magwe)—ஸின்பாங்வி (Sin Pauncwe) ஸெயிங்கயா (Sainggya). | | | |
| | **அந்தமான் (Andaman) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கடல் விமானங்கள்.—பிளேர் (Blair) துறைமுகம். | | | 2 தீப்பற்றியது. 3 சேதமாக்கப்பட்டன. |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—ராபால் (Rabaul). | | | |
| | **ஜப்பான் (Japan)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டோக்கியோ—(Tokyo) ஜப்பானின் தலை நகரம், யோகஹாமா (Yokahama). | | | |
| 19—4—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—டங்கர்க் (Dunkirk), கலே (Calais) பிரதேசங்கள். | | | |
| | இரவில்.—வெடிகண்ணிகள் பாவுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனேகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| 19—4—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 13 விமானங்கள். | 31 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள். விமானம் பறப்பதற்கான இடங்கள்.—பாஸின் (Bassein). | | | |
| | இரட்டைப் பாய்மரக் கப்பல்கள்.—ஸாண்டோவே (Sandoway)க் கருகாமையில். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britan)**-(அமெரிக்க, பிரிடிஷ், விமானங்களால்) | | | |
| | விமான நிலயம், துறைமுகம், கப்பல்கள்—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—லே (Lae), ஸலாமுவா (Salamawa) பிரதேசங்களில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| 14—4—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 9 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |
| 15—4—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்குக் கடற்கரை. | பலத்த சேதம். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | எண்ணெய் தளங்கள்.—வட பர்மா (Burma). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—4—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. | சிலர் காயப்பட்டனர். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |
| | பனேய் (Panay) தீவுகள். | | | |
| | விமான இறங்குமிடங்கள்.—பனேய் (Panay) தீவுகள். | | | |
| 17—4—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | பகலில்.—இரண்டு இடங்கள்-இங்கிலா (England)ந்தின் தென்மேற்குக் கடற்கரை. | சிலர் கொல்லப்பட்டனர். | 1 பாம்பர் விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Morseby) துறைமுகம். | | | |
| 18—4—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.-சில இடங்கள்-இங்கிலாந்தின் (England) தென் பாகத்தில். | சொற்பச் சேதம் மட்டில். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Morseby) துறைமுகம். | | | |
| 19—4—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் துருப்புகள்.—பர்மா (Burma). | | | |
| 20—4—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England) தெற்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**தைரியமென்பது** கேவலம் மானஸிகமான தோற்றமல்ல. தான் காரியத்தில் ஈடுபடாமல் பிறர் தைரியமாக இருப்பதைப்பார்த்து சந்தோஷப்படுவதுமில்லை. ஆனால் பிரயாஸையின்பேரில் தைரியம், பொறுமை, ஆத்ம உதவி முதலியவைகளை தனது சொந்த அனுபவத்திற்குக் கொண்டுவந்து பிறருக்காக தானே ஈடுபடுவதுதான் தைரியத்தின் சரியான லக்ஷணமாகும். இவ்விஷயத்தைப்பற்றி சென்னை கலெக்டரும் ஊர்பாதுகாப்பு கமிஷனருமான மிஸ்டர் மாரிஸ் திங்கட்கிழமை யன்று விரிவாகப் பேசினார். ஆத்ம உதவி, பொதுஜனங்களுக்கிடையேயுள்ள சமூக ஒற்றுமை முதலியவைகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று அவர் சொன்னார். உணவு சாமான்கள் முதலியவைகளை அரசாங்கத்தாரே விற்பனை செய்வார்களென்றும் பொதுஜனங்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும் எடுத்துச்சொன்னார். அன்று பேசிய ஒரு பிரமுகரும் 'ஜனங்களுக்குத் தைரியம் முதலியவை வேண்டுமென்றும், எதிரி வசமாகாமலிருக்கத் தீவ்ரமான எண்ணமும் வேண்டுமென்று' சொன்னார்.

வி வி வி வி வி வி வி

**திரும்பு வெள்ளம்.** இவ்வாரத்தில் அமெரிக்க விமானங்கள் வெகு தூரம் கடந்து டோகியோ, யோகஹாமா, கோபி முதலிய நகரங்களைத் தாக்கின. சைனா தளங்களிலிருந்து இவை தாக்கச் சென்றிருக்கலாம். நேசநாடுகளுக்கு ஒரு ஆச்வாஸம் ஏற்பட்டிருப்பதோடு ஜப்பானில் தோட்டிமுதல் தொண்டமான்வரை நடுக்கம் கண்டிருக்கிறது.

இந்தியாவில் நிலைமை கொஞ்சம் அமைதியாகக் காணப்படுகிறது. கொழும்பு, திரிகோணமலை, விசாகப்பட்டணம், காகினடா முதலிய இடங்களில் நேர்ந்த தாக்குதல்களுக்குப் பின்பு புதிய தாக்குதல்கள் ஒன்றும் நேரவில்லை. ஒருக்கால் எதிரி முஸ்தீப்புகளைச் செய்துகொண்டிருக்கலாம். ஸர் ஜேம்ஸ் ஸாமர்வில்லி தனது திட்டங்களை மாற்றிக்கொண்டிருக்கிறார். இந்து மகா சமுத்திரத்திலுள்ள பிரிடிஷ் கப்பற்படை அதிக பலப்பட்டு வருகிறது. இரண்டு நாட்களில் 100 விமானங்களை இழந்ததாலேயே எதிரி கொஞ்சம் யோசனையில் ஆழ்ந்திருக்க வேண்டும். பர்மாவிலிருந்துவந்த செய்திகளிலிருந்து யேனாங்யாங் என்ற இடத்திலுள்ள எண்ணெய் வயல்களை நேசநாடுகள் பிடித்ததாயும், ஜப்பானியப் படை ஒன்று சூழப்பட்டுள்ளதாயும் தெரியவருகிறது.

திடீர் தாக்குதல்களைச் செய்து இனிமேல் சுலபமாக எதிரி வெற்றிகளடைய முடியாது. சிங்கப்பூரைப்போல் மற்ற இடங்களில் இனி நேராது. பேர்ல் துறைமுகத்தில் அமெரிக்கர்களுக்கு சிறிது கப்பல் சேதம் நேர்ந்ததே தவிர பூர்ண பலம் இன்னும் இருக்கிறது. இந்து மகா சமுத்திரத்தில் ஜப்பானியக் கப்பல்கள் நடமாடிக்கொண்டிருந்தாலும் தென்மேற்கு பஸிபிக் கடலில் அமெரிக்கக் கப்பல்கள் ஜப்பானின் சண்டைக் கப்பல்களையும், ஸப்ளைக் கப்பல்களையும், போக்குவரவு கப்பல்களையும் தாக்கிவருகின்றன. கரோலினாத் தீவு வழியாக ஜப்பானியத் துணைக்கப்பல்கள் நடமாட்டமே நின்றுவிட்டது.

வி வி வி வி வி வி வி

**காலமும் உதவுகிறது.** பிலிப்பைன்ஸில் ஜப்பானியர் எதிர்த்துவந்தது நேசநாடுகளுக்குக் கொஞ்சம் சாதகமாக இருக்கிறது. கிடைத்த அவகாசத்தில் ஆஸ்திரேலியப் படைகள் பலப்படுத்தப்பட்டன. லேயி, டிமோர், க்ஸ்மாடா, ராபால் முதலிய இடங்களில் எதிரிகளுக்கு அதிக சேதமும் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியப் படைகள் தனது சொந்த ஊரின் தற்காப்பை முன்னிட்டுத் திரும்பவும் வந்தன. அமெரிக்க ஸப்ளைகளும், பாம்பர் விமானங்களும், நீர்மூழ்கிகளும் ஆஸ்திரேலியாவின் உதவியை முன்னிட்டு வந்துசேர்ந்துவிட்டன. இவைகளின் பயனாக தெற்கு நோக்கி எதிரி முன்னேற்றம் தடைபட்டுள்ளது.

**பிலிப்பைன்ஸ் தீவுகள்.**

பாடான் எதிரிவசமானாலும் கரிஜிடாரில்
தடுத்துவருகின்றன. நேசதேசப்படைகள் புகுந்து எதிரியைத்
இவ்விதமே நடைபெறுகிறது. ஹுஸான், மின்டானுவோ, மற்றும் சில தீவுகளிலும்
களிடம் குறையவேயில்லை. சண்டைபோடும் உணர்ச்சி பிலிப்பைன்ஸ் துருப்பு
என்று மெக் ஆர்தர் சொல்லியுள்ளார். 'மறுபடி பிலிப்பைன்ஸுக்குத் திரும்பிவருவேன்'
ஜனாதிபதி ரூஸ்வெல்டு 'பிலிப்பைன்ஸ் வாசிகளின் அத்தீவுகளின் தலைவனுன கூஸானுக்கு
வரை அமெரிக்கா அவர்களுக்கு உதவி புரியும்' என்று சொன்னார். தர்ம லக்ஷியங்கள் கைகூடும்

வி வி வி வி வி வி வி

**டோகியோவும் ஆக்ஸ்பர்கும்.**

அமெரிக்க விமானங்கள் ஆயிரக்கணக்கான
டோகியோவைத்தாக்கின. மைல்கள் பறந்து ஜப்பானின் தலைநகரான
ஜெர்மனியின் உள்நாட்டிலுள்ள பிரிடிஷ் விமானங்களும் 600 மைல் தூரம் பறந்து
குண்டுகளைப் போட்டன. ஆக்ஸ்பர்க் என்ற தொழிற்சாலை ஸ்தலத்தில்

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டு வசந்த காலத்தாக்குதல் பின்வாங்குகிறது.**

வசந்த காலத்தில் அச்சுநாட்டுத் தாக்குதல்
நேரப்போவதாக வெகு ஆடம்பரத்துடன்
காலவரையில்லாமல் சொல்லப்பட்டதெல்லாம் நிறுத்தப்பட்டது. காணப்படவில்லை.
என்று தெரியவில்லை' யென்று நாஸிப்பத்திரிகைகள் 'எப்பொழுது, காலம் பக்வமாகும்
எங்கும் வெள்ளமாக ஆகிவிட்டதால் கூறுகின்றன. பனி உருகி
மாஸ்கோவிற்கும் லெனின்கிராட்டிற்கும் இடையில் தெற்குபாகத்தில் சண்டையே இல்லை.
பனிப்புயல்கள் அடிக்கின்றன.

தனது சிப்பாய்களுடன் ஹிட்லருக்கு சச்சரவு ஏற்பட்டிருக்கிறது.
ஜெர்மனியின் உள்நாட்டில் மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதோடு நேசதேசப் படை
யெடுப்பு நேருமென்ற பயமும் உண்டாகியிருக்கிறது இதற்காக ஹிட்லர்
சீக்கிரத்தில் சண்டையைத் துவக்கலாமென்று சொல்லுகிறான். அவனுக்கு கீழு
ள்ள ஜெனரல்கள் ஜூன்மாதம் வரை காத்திருக்கலாமென்று சொல்லுகின்றனர்.
தெற்குநோக்கி சண்டை செய்யலாமென்று ஹிட்லர் சொன்னால் வடக்கே
போவோமென்று அவர்கள் அபிப்பிராயத்தைக் கொடுக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**நேசதேசத் தாக்குதல்.**

உலகின் பல பாகங்களின் பொறுப்பு வாய்ந்த
களை கவனித்தால் ஜெர்மனி பேரில் பலர் இவ்வாரத்தில் நிகழ்த்தியப் பேச்சு
நேருமென்று தெரிகிறது. நேசநாடுகளின் தாக்குதல் சீக்கிரத்திலேயே
சில சொற்பொழிவுகளைக் கவனிப்போம்:—

1. 'தற்காப்பு முறையிலிருந்து முன்னேறித் தாக்கும் முறைக்கு வரும்
சந்தர்ப்பம் வந்து விட்டது.'
(உதவி பிரதம மந்திரி மிஸ்டர் C. R. அட்லி, ஏப்ரல் 19).

2. 'எவ்வளவு கஷ்டமானாலும் முன்னேறித் தாக்கும் திட்டத்திற்கு வெகு
அருகில் வந்து விட்டோம். கூடிய சீக்கிரத்தில் அவ்வித திட்டத்தைக்
கையாளுவோம்.'
(அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்ஸன் ஏப்ரல் 17).

3. 'ஒவ்வொரு யுத்தத்திலும் மாறும் சந்தர்ப்பங்கள் உண்டு முடிவான
வெற்றியடைவதற்கான காரணங்கள் வெகு துரிதமாகவே வரும். யுத்த சாமான்
களின் உற்பத்தியை நாம் இன்னும் பூரா முடிக்கவில்லை. இருந்தாலும் முடிவான
வெற்றியை உண்டுபண்ணக்கூடிய சமயம் வந்துவிட்டது'. (அமெரிக்க யுத்த
சாமான்களின் உற்பத்தி சங்கத்தின் தலைவரான மிஸ்டர் டோனல்டு நெல்ஸன்
ஏப்ரல் 17).

4. 'இனிமேல் சாமான்களின் உற்பத்தியைப்பற்றியப் பிரச்னை அவ்வளவு
இல்லை. முன்னேறிச் சண்டை செய்யவேண்டியதுதான்'. (சுத்த சக்கடன்
மசோதா திட்டத்தைப் பயன்படுத்தும் மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் ஏப்ரல் 18).

**ஹிட்லர் பிறந்த நாள்.**

ஏப்ரல் 20உ திங்கட்கிழமை யன்று ஹிட்லரின்
53-வது பிறந்த நாள். கோயரிங், கோய
பல்ஸ் போன்ற பலர் அன்று அதிக ஆடம்பரங்களுடன் ஹிட்லரைப்பற்றித் தப்பு
ஸ்தோத்திரங்களுடன் சொற்பொழிவுகளைச் செய்தனர். அவ்விதம் பேசும்போது
ஹிட்லர் இவ்வுலகத்தில் செய்துள்ள பெரும் குற்றங்களையும், அயோக்கியத்
தனங்களையும் மறந்துவிட்டனர். இவ்விஷயங்களில் ஹீராட், டாமூர், செங்கிஸ்
முதலியோரைவிட ஒரு மாத்து அதிகமாகவே ஹிட்லர் காணப்படுகிறான்.
'ஹிட்லர் உலகத்திற்கு முதன்மையானவனென்றும், தனிப்பட்டவனென்றும்,
சரித்திரப் பிரசித்திவாய்ந்தவனென்றும், இவனுக்குச் சமமானவனே கிடையா
தென்றும்' அவனைப்பற்றி புகழ்ந்து பேசப்பட்டது. ஆனால் இதைக்கேட்டவர்கள்
ஒருவரும் அவைகளை நம்பவில்லை. ஹிட்லரைச் சுற்றிக்கொண்டு திரியும் சிலர்தான்
அவைகளைக் கேட்டிருப்பார்கள். எது எப்படியானாலும் இந்த உலக யுத்தத்திற்கும்
அழிவிற்கும் காரணம் ஹிட்லர் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.
ஜன சமூகத்திற்கு தான் செய்த சேவைகளைப்பற்றி சிந்திக்கும் போதெல்
லாம் ஐரோப்பிய யுத்தரங்கங்களில் இறந்தவர்களின் பிசாசுக்கூட்டம்தான் அவன்
கண்முன் கூத்தாடும். முற்றுகையிட்டுக் கொளுத்திய நகரங்களில் வசிக்கும்
ஸ்திரீகள், குழந்தைகள், புருஷர்கள் முதலியோரின் அழுகைக் குரல்தான் காதில்
ஒலிக்கும். பெற்றோரை இழந்த குழந்தைகளையும், புருஷர்களை இழந்த பெண்
களையும் வீடுவாசலில்லாமல் தெருவுகளில் ஓடும்போது காண்பான். நரகத்தில்
ஏற்படும் அனுபவங்கள்யாவும் அவனுக்குச் சம்பவிக்கும்.

வி வி வி வி வி வி வி

**விஷியின் அக்கிரமம்.**

லவால் பதவிக்கு வந்ததும் பிரான்ஸின்
நிலைமை மிகக் கேவலமாகிவிட்டது. எதிரி
யின் முயற்சியும் கொஞ்சம் பலித்தது. பயந்தாங்குள்ளிகளுக்கு எப்பவும்
கஷ்டம்தான். 1940-ல் நடுச்சண்டையில் யுத்தத்தை நிறுத்திவிட்டு ஜெர்மனி
யுடன் சமாதானத்தைச் செய்துகொண்டது. இந்தோ-சைனாவை எதிரியிடம்
ஒப்படைத்துவிட்டது. ஸிரியாவையும் கொடுக்கும்போல் இருக்கிறது. உணவுப்
பொருள்களை மீண்டும் பெறுவதற்காக அமெரிக்காவுடன் உறவு கொண்டாடப்
பார்க்கிறது. இருந்தாலும் தனது உரிமைகளையெல்லாம் இழந்து ஜெர்மனி வசம்
விழுந்துவிட்டது. இந்த நிலைமையைத் தெரிந்துகொண்டு அமெரிக்கா ஸ்வதந்திர
அரசாங்கத்தைத்தான் அங்கீகரித்திருக்கிறது. பிரிடனும் இந்த நிலைமையைத்
தெரிந்துகொண்டுவிட்டது. டைம்ஸ் பத்திரிகை கொடுக்கும் எச்சரிக்கையாவது,
'ஜெர்மனிக்கும் அடிமையாகுவதே லவால் மந்திரி சபையின் நோக்கம். தேசத்
திற்கு ஏற்படும் நஷ்டத்தை அச்சபை கவனிக்காது. ஜெர்மனிக்குத் தேவையான
படி நடந்துகொள்ள சம்மதித்ததினாலேயே தான் லவால் பதவிக்கு
வந்திருக்கிறான்".

டெயிலி மெயில் பத்திரிகை எழுதுவதாவது:—'லவால் பதவியை ஏற்றதையும்
ஜெனரல் வான் ரன்ஸ்டட் பிரான்ஸுக்கு வந்திருப்பதையும் கவனித்தால்
மேற்கே ஜெர்மன் சைனியங்கள் திரும்பும்போல் காணப்படுகிறது. ஆனால்
கிழக்கே ஜெர்மன சைனியத்தின் வலுவு குறையும்"

விஷியிலுள்ள உண்மையான பிரெஞ்சு மக்களுக்கு நிச்சயமான எண்ணம்
ஒன்று இருக்கிறது. அதைப்பற்றி ருஷ்யாவிலுள்ள ஸ்வதந்திர பிரெஞ்சு மந்திரி
M. கரிய குயிபிஷெவ்விலிருந்து ஒலிபரப்பு மூலம் தெரிவித்திருக்கிறார்:

"பழிவாங்குவதற்காகவே இம்மக்கள் அமைதியாக ஏற்பாடு செய்து வரு
கின்றனர். ரகசிய சூழ்ச்சிகளாலும், எதிரி சைனியத்தின் ஒற்றுமையைக் கலைப்ப
தாலும் கலகத்தை உண்டுபண்ண யாவரும் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

"எதிரிகளுக்கு உதவுகிறவர்களைக் கொஞ்சமும் தயவுகாட்டாமல் தண்டிப்
பார்கள்.

"ஏராள பிரெஞ்சு சிப்பாய்கள் ஜெர்மனியின் ஜெயில்களில் இறக்கும்
சமயத்தில் லவால் பிரெஞ்சு மக்களின் உணர்ச்சியையே கெடுக்கிறான்".

## இரண்டு யுத்தங்கள்.

தற்சமயம் நடந்துவரும் இந்த யுத்தத்தை இரு
பிரிவுகளாகப் பிரிக்கவேண்டுமென்றும்,
அதாவது—1939-41 ஐரோப்பிய யுத்தமென்றும், 1942-ல் ஆரம்பமான
உலக யுத்தமென்றும்—குறிப்பிட்டு ஒரு வியாசம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

முதலாவதான யுத்தத்தில் ஜெர்மனியின் ஆக்கிரமத்தை எதிர்த்துப்
போராடிய சிறு ராஜ்யங்களெல்லாம் அழிந்தன. பழைய ஐரோப்பியப் பிரிவினை
கெட்டுவிட்டது. அந்த சமயத்தில் பிரான்ஸும் பிரிடனும் நேசநாடுகளாக
இருந்து சண்டையைச் செய்தன. 1942-ல் ஆரம்பமாகி நடந்துவரும் உலக
யுத்தத்தில் ஈடுபடுவதற்காக ஹிட்லர் ஆக்கிரமித்த நாடுகளை தளங்களாகவும்,
யுத்த சாமான்களைச் செய்யவும் உபயோகித்து வருகிறான். தனிப்பட்ட நாடுகளை
வைத்துக்கொண்டு ராணுவம், தொழிற்சாலை முதலியவைகளை நடத்தி வந்தகாலம்
போய்விட்டது. தனது சக்தியால் சிறு நாடுகளை ஒரு க்ஷணநேரத்தில் அழித்து
விடலாமென்று ஹிட்லர் காண்பித்துவருகிறான். மேலும் ருஷ்ய யுத்தத்தைப்
பார்த்தாலும் பிரதேச விஸ்தாரமும் அதிகமான முஸ்தீப்பும் கொண்டிருந்த நாடு
தான் ஜெர்மனியை எதிர்த்து நிற்கமுடியுமென்றும் தெரிகிறது.

ஆக 1939—41-ல் ஐரோப்பாவின் பழைய திட்டத்தை அழித்ததே
ஹிட்லரின் ஒரு முறையாகும். அடுத்தபடியாக புது திட்டத்தை ஸ்தாபிப்
பதாகச் சொன்னது எவ்வளவு தூரம் சாத்தியமாயிற்று என்று பார்ப்போம்.
இதன்படி ஐரோப்பாவில் சமாதானம், பத்திரம், நிரந்தரமான க்ஷேமம் முதலியன
உண்டாகவே இல்லை.

கூட்டமாகக் கொலைசெய்வதும், அனாவசியமாக யாவரையும் கைதிகளாக்
குவதும், போலீஸ் கோஷ்டிகளை ஏற்படுத்துவதும் தான் தொழிலாக இருக்கிறது.

இவ்விதம் நாஸி திட்டங்கள் பயன்படாததிற்கு என்ன காரணம்?

தேசத்து மக்களின் உண்மை தத்துவங்களை அறியாததாலேயே புதிய
திட்டம், பழைய திட்டம் யாவும் முறிந்தன. அந்தந்த நாடுகள் தனிப்பட்டவை
என்று அதிகம் வற்புறுத்தியதால் பழைய திட்டம் முறிந்தது. அந்தந்த தேசங்
களின் மக்கள் தனிப்பட்டவர்கள் என்ற தன்மையை கவனிக்காததாலேயே
புதுதிட்டம் குலைந்துவருகிறது. ஐரோப்பாவில் பலராஜ்யங்கள் புராதனமாயும்,
கௌரவத்துடனும், தனிப்பட்ட தன்மையுடனும் இருக்கின்றன. இவைகள்
நாஸிகளின் கொள்கைகளுக்கு இணங்கவேமாட்டா. ஜெர்மனியைத் தலைமையாக
வைத்துக்கொண்டு தான் அதன் சொற்படி நடந்துகொள்ள எந்த நாடும்
விரும்பாது. ஆகவே யாவரும் மறைமுகமாக நாஸிகளைத் தாக்கிக்கொண்டும்,
சூழ்ச்சிகளைச் செய்துகொண்டும், அமைதியில்லாமலும் இருக்கின்றன. பகிரங்க
மாகக் கலகம் செய்யும் சமயமும் வரும்.

ஒரு நாடு தலைமை வகித்து மற்றநாடுகள் அதற்குட்பட்டு இருக்கவேண்டு
மென்று சொன்னால் ஐரோப்பிய பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது.

ஐரோப்பாவில் மற்ற எதிரிகள் வராமல் தடுப்பதாக ஜெர்மானியர் சொல்லு
கிறார்களே தவிர உண்மையில் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் அடிமைகளாக்கப்படு
கின்றனர். நாஸிகளுக்காக யுத்த சாமான்களையும் உணவுகளையும் யாவரும்
உற்பத்திசெய்யவேண்டும். பிறரை அடிமைகளாக்கியதால் ஜெர்மனிக்குச் சேர்ந்த
தொழிலாளர் படை 1,310 லக்ஷமிருப்பதாக பிராங்க் சொல்லுகிறான். இது நேச
நாடுகளுடைய பலத்தைக்காட்டிலும் இரட்டிப்புமடங்காகும். ஏனோ ருஷ்யாவை
யும், சைனாவையும், இந்தியாவையும் பிராங்க் சேர்த்துக்கொள்ளவில்லை.

ஜெர்மனியின் புது திட்டத்தின் அம்சங்களைக் பின் கண்ட வியாசம் நன்றாகக்
குறிப்பிடுகிறது. 'இது உலக விமர்சனம்' (World Review) என்ற பத்திரிக்
கையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது :—

உண்மையான திட்டத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான அம்சங்கள்
நாஸி புதுதிட்டத்தில் காணப்படவில்லை. தேசங்களை ஜயித்து ஆங்காங்கு



ரோம சாம்ராஜ்யம் முன்பு ஸ்தாபிக்கப்பட்டபோது மேலான பயிற்சியும், நல்ல
வாழ்கையும், உண்டுபண்ணப்பட்டன. நாஸிகளால் அவ்விதமாக ஒன்று ஏற்
படுத்த முடியாது, ஏனென்றால் ஏற்கனவே ஜெர்மன் கலை குலைந்து வருகிறது.
ஜெர்மன் பயிற்சிக்கும் கலைக்கும் காரணமாயிருந்த ஸ்தாபனங்களை யெல்லாம்
நாஸிகள் அழித்துவிட்டனர். மேலும் ஸ்காண்டிநேவியா ஸ்விட்ஜர்லாந்து,
ஹாலந்து முதலிய நாடுகளில் ஜெர்மனியைக்காட்டிலும் மேலான வாழ்கை
யிருந்து வருவதால் அந்நாடுகளுக்கு ஜெர்மனி புதிதாக ஒன்றும் கற்றுக் கொடுக்க
முடியாது. ஜெர்மானியரிடத்தில் பிறர் விரும்பும்படியான வாழ்க்கையே இல்லா
ததால் அந்நியர் ஜெர்மன் பழக்க வழக்கங்களைத் தழுவ சம்மதிக்கவும் மாட்டா
ர்கள்.

"இவ்விதமாக ஆக்கிரமித்த நாடுகளின் தரத்தைத் தெரிந்துகொள்ளாமல்
புதுதிட்டத்தை பலாத்காரமாக நாஸிகள் ஸ்தாபிக்க முயலுகின்றனர். இதனால்
அந்த நாடுகளின் நட்பை ஜெர்மனி அடையமுடியவில்லை. மாகாணங்களும்
பிரதேசங்களும் பிரிக்கப்படுகின்றன. எல்லைகள் பொருளாதார திட்டங்களைக்
கவனியாது அரசாங்கத்தை நடத்தவே பலவிதமாகப் பிரிக்கப்படுகின்றன.

"ஸினிமாப் படங்களைப்போல் துரிதமாக ஒரு சாம்ராஜ்யத்தையும் ஸ்தாபிக்க
முடியாது. வெகுநாளாக இருந்த வாழ்கையை திடீரென்று மாத்திவிடமுடியாது.
இவ்விஷயத்தை நாஸிகள் உணரவில்லை."

வி வி வி வி வி வி வி

**மால்டா வாசிகளின் உணர்ச்சி.** மால்டா வாசிகளின் தைரியத்தைப்பற்றி மற்
றொரு இடத்தில் இப்பத்திரிகையில்
பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்குள் மால்டாதான்
விசேஷ கௌரவம் அடைந்திருக்கிறது. ஒரு நாள்கூட ஓய்வு இல்லாமல் எதிரி
குண்டுவீச்சு ஏற்பட்டிருக்கிறது. 1940 ஜுன் முதல் தினம் மூன்று குண்டுவீச்சு
வீதம் 2,000 தடவை ஏற்பட்டிருக்கிறது. 4,500 வீடுகள் நாசமாயின. இருந்தாலும்
மால்டா வாசிகள் தைரியமாக எதிரிகளை எதிர்த்து நிற்கின்றனர். லிபியாவிற்குப்
போகும் அச்சநாட்டு ஸப்ளைகளைத் தடுக்கின்றனர். இதாலியின் நகரங்களான
நேபிள்ஸ், பிரிண்டிஸி, கடானியா, ஸிராகூஸ், லிகடா, மார்ஸலா, ஸிடிராபனி,
பாலர்மோ முதலியவைகளிலுள்ள கடல், விமான தளங்களை அழிக்கின்றனரர்.
இதாலியாக் கடற்படை அடைபட்டுப்போனதால் மத்தியதரைக்கடலில் பிரிடிஷ்
துணைக்கப்பல்கள் தாராளமாகச் செல்லுகின்றன. இந்த நிலையில் மால்டா
வாசிகள் சண்டை செய்கின்றனர். ஆகாசம் இடிந்துவிழுந்தாலும், பூமி பெரண்
டாலும் இவர்கள் பின்வாங்கமாட்டார்கள். இதை மற்றநாடுகள் அறியவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவிற்கு அமெரிக்க உதவி.** ஆஸ்திரேலியாவிற்கு ஏராளமாக அமெரிக்க
ஸப்ளைகள் சென்று கொண்டும், விமானம்,
கடல், தரை முதலியவைகளில் அமெரிக்கப் படைகள் ஈடுபட்டு ஆஸ்திரேலியா
விற்கு உதவிக்கொண்டும் இருக்கும் இத்தருணத்தில் இந்தியாவிற்கும் செய்யப்
படும் உதவி சிறிதல்ல. இந்திய தளங்களிலிருந்து அமெரிக்க விமானங்கள்
பறந்து அந்தமான், ரெங்கூன் முதலிய இடங்களைத் தாக்கியதிலிருந்தே இந்தியத்
தற்காப்பு விஷயத்தில் அமெரிக்கா அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிற
விஷயம் தெரியவருகிறது. மஸ்ஸாவா தொழிற்சாலைகளில் சேர்க்கப்பட்ட
விமானங்களும் டாங்கிகளும் கப்பல்களில் ஏற்றப்பட்டு அராபிக் கடலைக்கடந்து
இந்தியா வந்து சேருகின்றன. மற்றவை அட்லாண்டிக் கடலைத்தாண்டியே
வருகின்றன. நன்னம்பிக்கை வழியாகவோ, ஆபிரிக்கா வழியாகவோ வருகின்றன.
ரெங்கூன் எதிரிவசமாகி விட்டபடியால் அங்கு செல்லவேண்டிய கப்பல்கள்
இந்தியாவிற்கே நேராக வருகின்றன. இதுவே சமீபத்தில் செய்யப்பட்ட உதவி.
மேலும் வருங்காலத்திற்கு லாயக்கான திட்டங்கள் போடப்பட்டு மத்தியக்
கிழக்கிற்கும், தூரக்கிழக்கிற்கும் தேவையான யுத்த சாமான்களை இந்தியாவில்
செய்ய அமெரிக்கர்கள் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். இத்திட்டங்களைப் பயன்

படுத்த ஜனாதிபதி ரூஸ்வெல்டின் தனது பிரதிநிதியான கர்னல் லூயிஸ் ஜான்ஸனும், இன்ஜினியர்களின் கோஷ்டியும் வந்திருப்பது விசேஷம் தான். ஏராளமாக சாமான்களை உற்பத்தி செய்வதற்கு நான்கு அம்சங்கள் முக்கியமானவை. ஒன்று விளைவுபொருள்கள், இரண்டாவது யந்திரங்கள், மூன்றாவது நிபுணர்கள், அடுத்தது தொழிலாளிகள். இவைகளில் இந்தியாவில் விளைவுபொருள்களும், தொழிலாளிகளும் இருக்கின்றனர். அமெரிக்கா மற்ற இரண்டையும் கொடுத்து உதவும். இங்கிருப்பவர்களையே பழக்கிவிட்டால் நிபுணர்களாக ஆகிவிடுவார்கள். பிரிடனிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் யந்திரங்கள் கொண்டுவரப்படும். சென்ற வருஷத்தில் மேற்கு ருஷ்யாவிலிருந்து கிழக்கு ருஷ்யாவிற்குத் தொழிற்சாலைகள் மாற்றப்பட்ட விதமாக இந்தியாவிற்கும் இவை மாற்றப்படும். பெரிய தொழிற்சாலைகளைக்கூட மாற்றி சிலமாதங்களுக்குள் வேலை செய்யும்படி அமைத்துவிடலாமென்று ருஷ்யாவிலிருந்து தான் கற்றுக்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் இன்ஜினியாகளின் கோஷ்டியில் மிஸ்ட்டர் டர்க்டெக்கர் என்பவர் ஒருவர். இவர் இல்லியனோஸ் (Illionois) என்ற நாட்டிலுள்ள எஃகு தொழிலாளர் கூட்டத்தில் வேலைக்காரர்களைப் பழக்குகிறவர். பேய்ஸ்டர் இன்ஜினியரிங் கம்பெனியின் தலைவரான மேரி பேய்ஸ்டர் யந்திரங்களை அமைப்பவர். மிஸ்ட்டர் ஆர்தர் N. ஹோரிங்டன் என்பவர் கவச வண்டிகளையும் மின்சார சக்தியினால் வேலை செய்யக்கூடிய யந்திரங்களையும் உண்டுபண்ணுகிறவர். இவர்களுக்குத் தலைவர் டாக்டர் ஹென்ரி கிராடி. இவர் பொருளாதாரத்தில் நிபுணர். கர்னல் லூயிஸ் ஜான்ஸன் திட்டங்களைச் சீக்கிரத்திலேயே ஜனாதிபதியிடம் அறிவித்து காரியாம்சையில் நடத்த ஏற்பாடு செய்வார்.

1. செவ்வாய்க்கிழமையன்று நியூ டெல்ஹியில் டாக்டர் கிராடி பேசும்போது சொன்னதாவது:—

'மற்ற நேசநாடுகளுக்குக் கொடுத்த உதவியைப்போல் இந்தியாவிற்கும் செய்வதை அமெரிக்கா கவனித்துவருகிறது'.

2. 'அமெரிக்கப் பொருள் அதிகமாக ஈடுபடுகிறது. ஆனால் பிறர்நாட்டில் ஊன்றிக்கொண்டு ஆக்கிரமிக்கும் ஆசை கிடையாது'.

3. 'அமெரிக்கர்யாவும் ருஜுவாகவே நினைக்கின்றனர். தற்போதுள்ள இந்தியப் பொருள்களை உபயோகித்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருவித கஷ்டத்தையும் உண்டுபண்ணமாட்டார்கள்'.

4. 'ருஷ்யா, சைனா, இந்தியா இவையாவும் ஏராளமான பொருள்களையும், சைனியங்களையும் கொண்டிருக்கின்றன. இவைகளை மற்ற நாடுகள் கொள்ளையடிக்கும்படி விட்டுவிடக்கூடாது'.

5. 'தொழிற்சாலைகளை விருத்திசெய்வதற்கு யுத்தமே ஒரு காரணம். தற்சமயத்தில் இந்தியாவும் தொழிற்சாலைகளை விருத்திசெய்துகொண்டால் வரும்காலத்தில் எந்த நாடும் இந்தியாபேரில் படையெடுக்க முடியாது.'

---

## "ஸ்வதந்திர இந்திய ரேடியோ" ஏமாற்றம்.

---

*பி. பி. ஸி. யின் 'லிஸனர்' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.*

தற்சமயம் இந்திய மக்களுக்கு இரண்டு நிலயங்கள் எதிரி நாட்டிலிருந்து ஒலிபரப்புகின்றன. ஒன்று ரேடியோ ஹிமாலயா என்பது. இது இந்தியத் தொழிலாளிகளுக்கும், குடியானவர்களுக்கும் ஒலிபரப்புகிறதாகச் சொல்லுகிறது. மற்றொன்று ஸ்வதந்திர ரேடியோ என்பது. ஒவ்வொன்றும் தனது உண்மை ஸ்வரூபத்தை மறைக்கவே பிரயத்தனப்படுகிறது. ஹிமாலயா என்பது இதாலியில் இருக்கிறது. மற்றொன்று ஜெர்மனியிலிருக்கிறது.

"பிரெண்டு வுட் என்பவர் 'கள்ள ரேடியோ என்பது ஒன்றும் புதிதல்ல' என்றார். இவ்வித தந்திரத்தை பிரிடன், பிரான்ஸ், ருஷ்யா இன்னும் இதர நாடுகளுக்கும் அச்சுநாடுகள் செய்தன. அதற்கு அவைகள் கையாளும் முறை மிக சுலபமானது. ஏனென்றால் தங்களுடைய நிலயங்களிலிருந்து ஒலிபரப்பிக்கொண்டே, மற்ற நாடுகளிலுள்ள திருட்டு நிலயங்களிலிருந்து வருவதாகச் சொல்லுவார்கள். இப்படிச் சொன்னால் அவர்கள் நம்புவார்களென்பதே அச்சு நாடுகளின் எண்ணம்.

"இந்த தந்திரம் கேட்போருக்குத் தெரியாது. இருந்தாலும் நிலயங்கள் தனது உண்மைகளை வெளிப்படுத்திவிடுகின்றன.

## கோயபல்ஸ் பிரசாரம் தவறுகிறது.

அவர்கள் செய்த தவறுதல்கள், பிரிடனிலேயே இருப்பதாகப் பாசாங்கு செய்யப்படும் அச்சு நாட்டிலுள்ள ரேடியோ நிலயங்களிலிருந்து வெளிவரும் செய்திகள் மூலமாக வெளிவந்துவிட்டன. இங்கிலீஷ் பாஷையில் செய்யப்படும் ஜெர்மன் ஒலிபரப்புகளைக் கேட்கக்கூடாதென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர் குட்டு ஒருநாள் வெளிப்பட்டது. அதாவது சென்ற வருஷம் மே மாதம் 4உ காலத்தை கோடைகாலத்திற்குத் தக்கவாறு பிரிடனில் மாற்றப்பட்டது. பிரிடனின் உள்ளோருக்கே இது தெரியாது. ஆகவே ஜெர்மன் பிரசாரகர்களும் இதைத் தெரிந்துகொள்ளாமல் தங்கள் வழக்கப்படி ஜெர்மன் மணிப்படிக்கு ஒலிபரப்பப்பட்டது.

"ஸ்வதந்திர இந்திய நிலயமும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த குட்டு ஜெர்மனியிலிருந்துதான் வெளிவந்தது. சில நாட்களுக்குமுன் ஹிந்துஸ்தான் பாஷையில் இந்தியாவிற்கு ஒலிபரப்பும்போது 'அதிக சிரமம் ஏற்பட்டாலும் சுபாஸ் சந்திர போஸின் செய்தி ஒலிபரப்பப்பட்டது. எந்த நிலயத்திலிருந்து அவர் பேசினார் என்று கண்டுபிடிக்கப் பிரயத்தனப்பட்டோம். ஆனால் எங்களால் முடியவில்லை' என்றது. உடனே போஸின் பேச்சு ஒலிபரப்பப்பட்டது. பிறகு பெர்லினில் ஒலிபரப்புகிறவர் 'விவரம் தெரியாத நிலயத்திலிருந்து போஸின் பேச்சு ஒலிபரப்பப்பட்டது' என்றார். (ஹிந்துஸ்தானியில் ஜீஸன் மார்ச்சு 4).

இவ்விதமாகச் செய்து இந்தியர்களை நம்பும்படி செய்வதே ஜெர்மனியின் நோக்கம். ஸ்வதந்திர இந்திய ரேடியோ இருப்பது தனக்குத் தெரியாதாம். உடனேயே பெர்லினில் இங்கிலீஷில் ஒரு ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

"பிறகு கொஞ்சநாளில் ஸ்வதந்திர இந்திய நிலயத்தைப்பற்றி அவர்களே சொல்ல வந்தனர். அதில் பேசுகிறவன் 'சில வாரங்களாக நாம் ஸ்வதந்திர இந்திய நிலயத்திலிருந்து செய்திகளைக் கேட்கிறோம்." ஆனால் உடனே அந்த நிலயத்தின் மணிக்கு விவரங்கள் கொடுக்கப்பட்டன. 'இந்த நிலயம் சுபாஸ் சந்திர போஸுக்குச் சொந்தமானது என்பதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது" என்றும் சொல்லப்பட்டது. (இந்தியாவிற்கு இங்கிலீஷில் ஜீஸன், மார்ச்சு 4).

---

# இவ்யுத்தத்தில் கிரேட் பிரிடன் எடுத்துக் கொண்ட பங்கு.

பிரான்ஸ் விழுந்ததில் பிரிடனுக்கு ஏராளமான துருப்புகள் சேதம். முஸ்தீப்புடன் கூடிய 4,00,000 சைனியங்கள் நஷ்டம். கடைசியில் பிரிடனில் 20 படைப்பகுதிகளே மீதியிருந்தன. இப்பொழுது பிரிடிஷ் சைனியம் வெகு பலமாயும், பிரமாதமாயும் சேகரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சுமார் 10 சண்டைகளில் ஈடுபட்டு அனுபவம் வாய்ந்தவர்கள். அதில் ஒரு பகுதி ஆபிரிக்கா கண்டத்தில் இரண்டு பெரிய இதாலியப் படைகளை அடியோடு முறியடித்தது.

மற்றொரு இதாலிய சைனியத்திற்கும், ஜெர்மன் சைனியத்திற்கும் பலத்த சேதத்தை விளைவித்தது. மேலும் ஆபிரிக்கப் போர்முனையில் எதிரியின் சைனியங்கள் சேதத்தைப்பற்றி வெவ்வேறு செய்திகள் கிடைத்திருக்கின்றன. குறைந்த பக்ஷம் 4,00,000 எதிரி வீரர்கள் அல்லது உயர்ந்த பக்ஷம் 7,00,000 பேர்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்படுகிறது.

சுமார் 12 மாத காலத்திற்குள் கிரேட் பிரிடனிலிருந்து மத்தியகிழக்குப் போர்முனைக்கு 10,00,000 டன் நிறையுள்ள சாமான்கள் கப்பல்களில் ஏற்றியனுப்பப்பட்டன. இத்துடன் 30,000 யந்திர வண்டிகளும், டாங்கிகளும், அனுப்பப்பட்டன. அவைகளை ஏற்றியனுப்ப 300 கப்பல்கள் பிடித்தன.

இவ்விதம் சாமான்களை ஏற்றிச்சென்றதில் பிரிடிஷ் சாம்ராஜ்யப் படையில் கொல்லப்பட்டவர்களில் 70 சதவிகிதம் கிரேட் பிரிடனின் துருப்புகளே தான்.

## பலவேறு போர்முனைகளுக்குச் சைனியங்களை அனுப்புதல்.

யுத்தங்களில் ஏராளமாக ராணுவப்படைகள் ஈடுபடுவதுடன், முக்கிய தளங்கள், அயல் நாடுகளிலுள்ள போர்முனைகள் இவைகளுக்கு படைப்பகுதிகளை அனுப்பிவிக்கவேண்டும். ஐஸ்லாந்து, ஜிப்ரால்டர், மால்டா, ஸைப்ரஸ், மத்தியக் கிழக்குப் போர்முனை, இந்தியா இவைகளில் துருப்புகளை வைக்கவேண்டிய அவசியமுமிருக்கிறது.

பிரிடிஷ் சைனியங்கள் ஈடுபட்டிருக்கும் எல்லாப் போர்முனைகளிலும், ருஷ்யாவிலும், பிரிடிஷ் விமானப்படை இவ்யுத்தத்தில் முக்கியமாக ஒரு பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. கடற்கரைப் பாதுகாப்பு விமானங்கள் அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டியும் வட கடல் வழியாகவும் ஜெர்மனி, ஜெர்மனி ஆக்கிரமித்த பிரான்ஸ் இவைகளின் கடற்கரைகளுக்குப் பலதடவைகள் சென்றிருக்கின்றன. அது சுமார் 5 கோடி மைல்களுக்கு மேலிருக்கும். யுத்தம் ஆரம்பித்த இரண்டு வருஷங்களுக்குள் கடற்கரைப் பாதுகாப்பு விமானப்படை, 7,000 துணைக் காவலுடன் கூடிய கப்பல் கூட்டங்களுக்குத் துணைபுரிந்ததில் 27,000 தடவைகள் போய் திரும்பியிருக்கவேண்டும்.

ஜெர்மனியின் பாதிக்கு மேலுள்ள பைடர் விமானங்களை ருஷ்யப் போர்முனையில் ஈடுபடாமல் ஜெர்மனியின் மேற்கு பாகத்திலேயே தங்கும்படி, பிரிடிஷ் பைடர் விமானங்கள் செய்துவிட்டன.

பாம்பர் பகுதி சென்ற வருஷம் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் எதிரியின் லக்ஷியங்களின் பேரில் எவ்வளவு குண்டுகளைப் போட்டனவோ அதைவிட இன்னும் அரை மடங்கு அதிகமான குண்டுகளை இந்த வருஷம் அதே மாதங்களில் பிரயோகித்தன. 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் முதல், 1942 பிப்ரவரி முடிய ஜெர்மனிக்கும், இதாலிக்கும் சொந்தமான 8,754 விமானங்களை, பிரிடிஷ் விமானங்களும், அவைகளுடன் ஒத்துழைக்கும் நேசதேச சாம்ராஜ்ய விமானங்களும் இன்னும் பிரிடிஷுக்குச் சொந்தமான விமானம் சுடும் பீரங்கிகளும் சேர்ந்து, சுட்டு வீழ்த்தின. கப்பற்படை, சாமான் கப்பல்கள் அல்லது கப்பற்படைக்கு சாதகமாயுள்ள விமானப்படை இவைகளால் 642 எதிரி விமானங்கள் சேதமாக்கப்பட்டன. ருஷ்யாவிலும், தூரக்கிழக்கிலும் சுட்டு வீழ்த்தப்பட்ட எதிரி விமானங்களைத் தவிர மொத்தம் 9,396 விமானங்கள் நஷ்டம்.

1942 பிப்ரவரியில் எடுக்கப்பட்ட தொகையிலிருந்து பிரிடனிலுள்ள விமானங்களில் 89 சத விகிதம் பிரிடனிலேயே தயாரிக்கப்பட்டவை. விமானங்களில் 72 சத விகிதமும், தரை உத்தியோகஸ்தர்களில் 98 சத விகிதமும் கிரேட் பிரிடன் வாசிகளும், அங்கு பயிற்சி பெற்றவர்களுமேயாகும். அதேபோல் அந்நிய நாடுகளிலுள்ள விமானங்களில் 75 சத விகிதம், பிரிடனிலிருந்து வந்தவைகள் தான். விமானிகளில் 83 சத விகிதமும், தரை உத்தியோகஸ்தர்களில் 99 சத விகிதமும் கிரேட் பிரிடனிலிருந்து வந்தவர்கள்.

இப்பொழுது கிரேட் பிரிடன் சென்ற வருஷத்தைக் காட்டிலும் மூன்று பங்கு அதிகமாகவும், டங்கர்க் சம்பவத்திலிருந்த டாங்கிகளில் ஐந்து பங்கு அதிகமான டாங்கிகளையும் உற்பத்தி செய்துவருகிறது.

## இன்னும் ஏராளமான கப்பல்கள் கட்டப்பட்டன.

சண்டை துவக்குவதற்கு முதல் வருஷக் கடைசியில் கட்டப்பட்ட யுத்தக் கப்பல்களின் நிறையைக் காட்டிலும் 1941-ம் வருஷம் கடைசி மூன்று மாதங்களில் சுமார் நாலுமடங்கு அதிக நிறைகொண்ட யுத்தக் கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன. அதைப்போலவே வியாபாரக் கப்பல்களின் நிறையும் இரட்டித்துவிட்டது. அதனால் யுத்தக் கப்பல்களும் வியாபாரக்கப்பல்களும் அதிக துரிதத்தில் ஏராளமாகக் கட்டிமுடிக்கப்படுகின்றன. இன்னும் கட்டப்பட்டும் வருகின்றன. சென்ற யுத்தத்தில் எந்தக்காலத்திலும் இம்மாதிரி இருந்ததே இல்லை. மேலும் யுத்த ஆரம்பித்த காலத்தில் இருந்ததைவிட 10 பங்கு அதிகமும், டங்கர்க் சம்பவத்திற்குப் பிறகு மூன்று பங்கு அதிகமும், இப்பொழுது எல்லாவித யுத்த சாமான்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1940-ம்௵ ஜூலை௴ முதல், 1941-ம்௵ மே௴ முடிய பிரிடனில் 10 நாட்களுக்கு 9 நாட்கள் குறையாமலும், அநேகமாக 30 இரவுகள் நீங்கலாக மற்ற எல்லா இரவுகளிலும் விரோதி விமானங்கள் படையெடுத்துச் சென்றன. 1941-ம் வருஷம் முடிய 43,357 ஆண், பெண், குழந்தைகள் உள்பட கொல்லப்பட்டனர். இன்னும் 49,986 பேர்கள் ஆண், பெண், குழந்தைகள் உள்பட காயமடைந்தனர். 1941-ல் பிரிடனுக்குக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு இரண்டு விமானங்களுக்குப் பதிலாக அங்கிருந்து 10 விமானங்கள் அனுப்பப்படும். அதேபோலவே பிரிடனுக்குக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு டாங்கிக்கும் 15 டாங்கிகள் வெளியே அனுப்பப்பட்டன. ருஷ்யாவிற்கு ஏராளமாக ஸப்ளைகள் அனுப்பப்பட்டன. ஜனவரி மாதம் 31-ம் தேதியோடு ஒரு டாங்கி நீங்கலாக மற்றபடி ருஷ்யாவுக்கு அனுப்புவதாயிருந்த யுத்தப்பொருள்கள் யாவும் அனுப்பப்பட்டாய்விட்டது. சென்ற அநேக மாதங்களாகவே பிரிடனில் தயாரிக்கப்படும் எல்லாவித யுத்தப்பொருள்களிலும் 80 சதவிகிதம் வெவ்வேறு போர்முனைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

## நேசநேசக் கப்பல்களில் ஏற்றியனுப்பப்படும் சாமான்களின் மொத்த நிறையில் 63 சதவிகிதம் கிரேட் பிரிடனின் கப்பல்களில் கொண்டுபோகப்பட்டன.

இதுவரை பிரிடிஷ் நேசதேசக் கப்பல்கள் சுமார் மாதம் ஒன்றுக்கு 1,20,00.000 மைல்கள்வரை கடலில் சென்றிருக்கின்றன. அவற்றில் ஒரு கோடி மைல்கள் தூரம் கிரேட் பிரிடனின் கப்பல்களே சென்றிருக்கின்றன. 1941-ம் வருஷம் ஸெப்டம்பர்௴ 30-ம் தேதியில் மொத்தம் நேசநாடுகளின் கப்பல்களில் ஏற்றி வந்த சாமான்களில் 63 சதவிகிதம் பிரிடிஷ் கப்பல்களில் வந்தன. இப்பொழுது நினைத்த சமயத்தில் 600 யுத்தக் கப்பல்கள் தயாரில் இருக்கின்றன. யுத்தத்திற்கு முன்பு இருந்ததைவிட சில கப்பல்கள் அநேக நாட்கள்வரை சமுத்திரத்திலேயே இருந்துவிடுகின்றன. உதாரணமாக 1940-ம் வருஷம், நவம்பர் மாதத்தில் H. M. S. 'கம்பர்லாண்டு' என்ற கப்பல் மொத்தம் 213 நாட்கள் கடல் பிரயாணம் செய்ததில் 206 நாட்கள் சமுத்திரத்திலேயே தங்கியிருந்தது. 1941-ம் வருஷம் டிஸம்பர் கடைசியில் 'ஷராப்ஷயர்' என்ற க்ரூயிஸர். 1,67,700 மைல்கள் சென்றிருக்கிறது. 'பாரஸ்டர்' என்ற நாசகாரி 601 நாட்கள் கடலில் சஞ்சாரம் செய்து 1,72,000 மைல்கள் சென்றிருக்கிறது. எட்டு நாசகாரிகள் அடங்கிய ஒரு பகுதி 1941-ம்௵ ஜூன்௴த்தில் 10 லக்ஷம் மைல்கள் சென்றிருக்கின்றன. இத்துடன் பிரிடிஷ் கப்பற்படை, எதிரியின் முக்கிய படைகளைத் தன் சொந்தக் கடலிலேயே அடைத்துவைத்தும், மற்றுமுள்ள சமுத்திரங்களில் அவைகள் அதிகமாக நடமாட்டம் வைத்துக்கொள்ளவிடாமலும் செய்துவிட்டது. இன்னும் பிரிடிஷ் விமானப்படையின் உதவியைக்கொண்டு விரோதிக்குச் சொந்தமான 52,50,000 டன்கள் நிறையுள்ள வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்தோ, சேத

மாக்கியோவிட்டன. மேலும் எதிரியின் 3 முக்கிய கப்பல்கள், 13 க்ரூயிஸர்கள், 54 நாசகாரிகள், இன்னும் அநேக நீர்மூழ்கிகள் இவைகளை மூழ்கடித்திருக்கிறது. இன்னும் கப்பற்படைக்கு உதவியாகயிருக்கும் ஏராளமான சிறிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டோ, சேதமாக்கப்பட்டோ விட்டன. தூரக்கிழக்கில் சமீபத்தில் ஏற்பட்ட சம்பவங்களை விட, இதுவரை ஜெர்மானிய இதாலியக் கப்பல்கள் சேதமானதில் 86 சதவிகிதமுள்ள கப்பல்களை கப்பற்படையும் விமானப்படையும் மூழ்கடித்திருக்கின்றன. இன்னும் விரோதிகளுக்குச் சேதமான வியாபாரக் கப்பல்களில் 89 சதவிகிதமுள்ள கப்பல்கள் பிரிடிஷ் கப்பல்களினால் மூழ்கடிக்கப்பட்டோ, பிடிபட்டோ விட்டன. எல்லா நேசநாட்டுப் படைகளும் சேர்ந்து விரோதியின் நீர்மூழ்கிகளை அழித்ததில் அதில் 94 சதவிகிதம் பிரிடிஷ் கப்பற்படையினால் மட்டில் ஏற்பட்டது.

---

## அமெரிக்கக் கைத்தொழிலாளிகளின் பிரதிக்ஞை.

## அச்சு நாடுகள் வலுச்சண்டைக்கு இழுப்பதை எவ்விதம் தடுக்கவேண்டும்.

அமெரிக்காவிலுள்ள மூலாதாரப் பொருள்களுக்குத் தகுந்தவாறும், சாமான் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறும், எதிரிகளை எதிர்த்துப் போராடும் சைனியங்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு யுத்த தளவாடங்கள் உற்பத்திசெய்து கொடுப்பதாக அமெரிக்கத் தொழிலாளிகள் பிரதிக்ஞை செய்திருக்கிறதாக தொழிற்சாலை சொந்தக்காரர்களின் சங்கத் தலைவர் வால்டர் டி புல்லர் (Waller D Fuller) இந்த வியாசத்தில் முக்கியமாக குறிப்பிட்டிருக்கிறார்.

சென்ற டிசம்பர் மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் ஜப்பானியர்கள் ஹாவாய் தீவிலுள்ள பேர்ல் துறைமுகத்தை திடீரென்று வெடிகுண்டுகளைக்கொண்டு கடுமையாகத் தாக்கிற்று. அப்பொழுதுதான் அமெரிக்கா இதற்குமுன் நேரிடாத பேராபத்து வந்துவிட்டதென்று உணர்ந்தது. மேலும் நாலு நாட்கள் கிரமித்து ஜெர்மனியும், இதாலியும் அமெரிக்காவை வலுவுச் சண்டைக்கு இழுத்ததில் அதற்கு அவைகளுடன் போர்புரியும்படி நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

இப்பொழுது அமெரிக்கக் கடற்கரைகளைப் பாதுகாக்க நிற்கும் சைனியங்களுக்குப் போதுமான யுத்த தளவாடங்கள் துரிதமாக உற்பத்தி செய்யவேண்டிய வேலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதோடு ஸ்வதந்திரம் அடைவதற்காக மிகவும் திறமையுடன் போரிடும் மற்ற நாட்டினருக்கும் யுத்தப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் நாம் அனுப்பவேண்டியிருக்கிறது. அதற்கு அமெரிக்கப் பொருளாதாரங்களையும், யுத்தப் பொருள்கள் செய்யும் சக்தியையும் பொறுத்திருக்கிறது.

### 7100-கோடி டாலர்கள்.

மேற்சொல்லிய இரண்டு முக்கிய வேலைகளைச் செய்துமுடிக்க யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கம் சென்ற வருஷம் நவம்பர் மாதம் 25-ம் தேதியிலேயே 7,100 கோடி டாலர்களை யுத்தப் பொருள்கள் உற்பத்திக்காக ஒதுக்கிவைத்துவிட்டது. பூராவாக விரோதிகளுடன் சண்டை முடிவதற்குள் மேற்சொல்லிய தொகையைக் காட்டிலும் இரண்டு பங்குக்குமேல் செலவுசெய்யவேண்டியிருக்கும்.

இவ்விதம் ஏராளமான தொகையை அமெரிக்கப் பாதுகாப்பிற்காக ஒதுக்கிவைப்பதினால்மட்டில் என்ன பிரயோஜனம். பணத்தை வைத்துக்கொண்டு மட்டில் எதிரியின் டாங்கிகள், விமானங்கள், யுத்தக்கப்பல்கள் நீர்மூழ்கிகள், இவைகளுடன் எவ்விதம் போர் புரிவது. எதிரியை வெற்றிகரமாக எதிர்ப்பதற்கு இன்னும் ஏராளமான நீர்மூழ்கிகள், கப்பல்கள், யுத்த விமானங்கள் இன்னும் டாங்கிகள் உற்பத்தி செய்தாகவேண்டும்.

இவைகளை உற்பத்தி செய்வதற்காகத்தான் அமெரிக்கத் தொழிற்சாலைகள் முற்பட்டிருக்கின்றன.

இத்தொழிற்சாலைகள் யாவும் சமாதான காலத்தில் இவ்வுலகத்தில் உற்பத்தி செய்யப்படும். மோட்டார்களின் எண்ணிக்கையில் 72-சதவிகிதமும், 50-சதவிகிதம் டெலிபோன் யந்திரங்களும், 45-சதவிகிதம் ரேடியோக்களும் செய்து வந்தன. ஆனால் இப்பொழுதோ அவைகள் திடீரென்று யுத்தத்திற்குச் சாதகமாயுள்ள பல யந்திரங்களையும், யுத்த தளவாடங்களையும் உற்பத்தி செய்யவேண்டியதாயிற்று. அமெரிக்காவின் பாதுகாப்பிற்காகவும், அதன் நேசநாடுகளின் உதவிக்காகவும் பாடுபட்டு வருகின்றன.

### தொழிற்சாலைகளின் உற்பத்தி சக்தி முன்பைவிட பலமடங்கு பெருகி விட்டது.

சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சொந்தமான பிரதேசத்தை வேண்டுமென்று துர்எண்ணத்தின் பேரில், யாதொரு எச்சரிக்கையன்னியில் ஜப்பான் திடீரென்று தாக்கிற்று. அதனால் அமெரிக்கப் பிரஜைகளில் அநேகர் உயிர் துறந்தனர். கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இவ்விதம் அமெரிக்காவுக்கு நஷ்டங்கள் ஏராளமாக ஏற்பட்டன.

ஜப்பான் அமெரிக்காவை வலுவுச் சண்டைக்கிழுத்ததில் இதற்குமுன் உற்பத்தி செய்யப்பட்ட சாமான்களைவிட பன்மடங்கு இப்பொழுது அதிகமாக செய்யும்படி ஆய்விட்டது. இப்பொழுது அமெரிக்காவே நேரில் யுத்தத்தில் இறங்கிவிட்டது. அதன் தொழிற்சாலைகளில் ஏராளமாக யுத்த தளவாடங்கள் முன்பைவிட இரட்டிப்பு மடங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏற்கனவேயுள்ள தொழிற்சாலைகளுடன் புதிய தொழிற்சாலைகளும் உபரியாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் வேலையில்லாமலிருந்த பழைய ஆலைகள் புதிப்பித்தும், வேலை துவக்கப்படுகின்றன. தேசத்தின் தற்காப்புக்காக யுத்தப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் வாரம் பூராவும், தினசரி 24-மணி நேரமும் வேலை செய்கின்றன.

இவ்விதம் அமெரிக்காவிலுள்ள மூலாதாரப் பொருள்களின் பரிமாணத்திற்குத் தக்கவாறும், சாமான் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறும், எதிரிகளை எதிர்த்துப் போராடும் சைனியங்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு யுத்த தளவாடங்களை அமெரிக்கக் கைத்தொழிற்சாலைகள் உர்பத்தி செய்துகொடுத்தாக வேண்டும்.

இப்பொழுது அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் யுத்தப் பொருள்களின் எண்ணிக்கையைக் குறித்து உண்மையைச் சொல்லுவதற்கில்லை. ஏனென்றால் இச்செய்தியை வெளியிடுவதினால் எதிரிகளுக்குச் சாதகம் ஏற்படும். ஆனால் ஸ்வதந்திரத்திற்காக பாடுபடும் நாடுகளுக்கு உதவியனுப்புவதற்காக அமெரிக்கத் தொழிற்சாலைகளிலிருந்து எவ்வளவு யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை அத்தேசத்தினர் அறியவேண்டியது அவசியம்தான். சென்ற வருஷம் டிசம்பர் மாதம் 7-ம் தேதியில் அமெரிக்காவுக்குச் சொந்தமான துறைமுகத்தை வஞ்சகமாக ஜப்பானியர்கள் தாக்கிய காலம் வரையில் மேற்கண்ட தொகையில் 1,300 கோடி டாலர்கள் விலைமதிப்புள்ள யுத்தப்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு நேசதேசத்தார்களுக்கு டிசம்பர் மாதம் முதல் தேதி வாக்கிலேயே அனுப்பியாய்விட்டது. அப்பொழுதுதான் அமெரிக்க உற்பத்தி சக்தி பெருக ஆரம்பித்தது. அதாவது அங்குள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி ஏற்கனவே இருந்த அளவிற்கும் 30-சதவிகிதத்திற்குமேல் அதிகரித்திருந்தது.

### மின்சார சக்தி முன்பைவிட 14-சதவிகிதம் அதிகம்.

யந்திரங்களை ஓட்டுவதற்கவசியமான மின்சாரம் முன்பைவிட 14-சதவிகிதம் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இப்பொழுதுள்ள அபரிமிதமான கோதுமை, வெள்ளாமை யுனைடெட் ஸ்டெட்ஸுக்கு மட்டிலல்ல, கிரேட் பிரிடனுக்கும் சேர்ந்து 2 வருஷங்களுக்குப் போதுமானது.

மேலும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலாதாரப் பொருள்களை அரசாங்கத்தார் விசேஷமாக சேமித்து வைத்திருக்கிறார்கள். அவைகளின் மதிப்பு 100 கோடி டாலருக்குமேலிருக்கும். மேலும் யந்திரங்களை செவ்வையாக

ஓடச்செய்வதற்கான கொழுப்பு, எண்ணெய் முதலிய சாமான்கள் அங்கு ஏராளமாக இருக்கின்றன.

சென்ற வருஷம் நவம்பர் மாதம் 23-ம் தேதி, அதாவது குத்தகைக்கடன் சட்டத்தை அமெரிக்கக் காங்கிரஸ் சபை அங்கீகரித்து 8 மாதம் 12 நாட்களுக்குப் பிற்பட்டு, ஒரு 100 கோடி டாலர்களுக்குமேலேயே விலைமதிப்புள்ள யுத்தப் பொருள்கள் தங்கள் தேசத்தினரைக் காப்பாற்றவும், ஸ்வதந்திரத்திற்காகவும், போராடும் பிரிட்டனுக்கும், இன்னும் இதர நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. மேற்சொல்லிய யுத்தப் பொருள்களில் 1,110 லக்ஷம் டாலர்கள் மதிப்புள்ள உணவுப் பொருள்கள் அடங்கியிருக்கின்றன.

டிசம்பர் மாதம் முதல் தேதி வாக்கில் நாம் பிரிட்டனுக்கு மாதம் ஒன்றுக்கு 500 யுத்த விமானங்கள் வீதம் அனுப்பிவந்தோம். இந்த வருஷத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 650-க்குக் குறையாமல் அனுப்புவோம்.

## உற்பத்தியின் உன்னத நிலை.

தற்போது எல்லாத் துறைகளிலும் உள்ள உற்பத்தியின் கணக்கு பின்வருமாறு:—யந்திரம் செய்யும் ஆயுத உற்பத்தியின் மதிப்பு ஒரு வருஷத்தில் 4,500 லக்ஷம் டாலர்களிலிருந்து 7,500-லக்ஷம் டாலர்களுக்கு அதிகரித்திருக்கிறது. அதாவது டாங்கிகள், விமானங்கள், கப்பல்கள், பீரங்கிகள் இவைகளைச்செய்து முடிப்பதற்காக உலோகத்தைத் துண்டிக்கவும், துளைபோடவும், அரைக்கவும் வல்லமையுள்ள யந்திரம் செய்யும் ஆயுதங்களின் உற்பத்தி இந்த ஒரு வருஷத்தில் மட்டில் முந்தியைவிட மூன்றில் இரண்டு பங்கு அதிகமாயிற்று. யந்திரம் செய்யும் ஆயுதங்கள் இல்லாமல்போனால் யுத்த தளவாடங்கள் யாவும் செய்யமுடியாமல் போய்விடும்.

இதுவரையில் வருஷத்திற்கு 820 லக்ஷம் டன் நிறையுள்ள எஃகு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. அடுத்த வருஷம் 950 லக்ஷம் டன்கள் உற்பத்தி செய்ய முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**எண்ணெய் உற்பத்தி:**—இவ்வருஷம் 120 கோடி பீப்பாய்கள், அடுத்த வருஷம் 140 கோடி பீப்பாய்கள்.

**மங்கனிஸியம் (Manganesium):**—இவ்வருஷம் 300 லக்ஷம் பவுண்டுகள், அடுத்த வருஷம் 360 லக்ஷம் பவுண்டுகள்.

**புகைக்காத வெடிமருந்து:**—இந்த வருஷம் 930 லக்ஷம் பவுண்டுகள், அடுத்த வருஷம் 3,740 லக்ஷம் பவுண்டுகள்.

இவைகளைத் தவிர வெடிமருந்து உற்பத்திக்குத் தேவையான பொருள்களையும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

## தினசரி இரண்டு யுத்தக் கப்பல்கள் விதம்.

**கப்பல்கள்.**—சென்ற நவம்பர் மாதத்தில் தினசரி சராசரி ஒரு கப்பலுக்கு மேலேயே கட்டப்பட்டுவந்தது. அந்த மாதத்தில் மட்டில் 33 கப்பல்கள் கட்டப்பட்டன. அவைகளில் 35,000டன் எடையுள்ள 'இந்தியானா' என்ற யுத்தக் கப்பலும், 10,000டன் நிறையுள்ள 'கிளிவ்லாண்ட்' என்ற க்ரூயிஸரும் அடங்கியவை. நான்கு நாசகாரிகளும், ஒரு நீர்மூழ்கியும் கட்டி முடிக்கப்பட்டன. இன்னும் ஒரு நாசகாரியும், ஒரு நீர்மூழ்கியும் கட்டுவதற்கும் ஏற்பாடாயிருக்கிறது. ஒரு க்ரூயிஸர், 9 நாசகாரிகள், ஒரு நீர்மூழ்கி இவைகள் உள்பட 52 யுத்தக் கப்பல்களை புதிதாகக்கட்டுவதற்கும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன; இவ்விதம் கணக்கிட்டால் தினசரி இரண்டு கப்பல்கள் வீதம் இந்த வருஷத்தில் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் மாதம் ஒன்றுக்கு 84,000டன் நிறையுள்ள வியாபாரக் கப்பல்கள் வீதம் கட்டப்பட்டுவருகின்றன. அடுத்த வருஷத்தில் மொத்தம் 2,30,000டன் நிறையுள்ள கப்பல்களைக் கட்டுவதற்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

**விமானங்கள்.**—சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் 1,900 யுத்த விமானங்களுக்குமேல் உற்பத்தி செய்யப்பட்டன. அந்த எண்ணிக்கை 1940-ம் வருஷ ஸெப்டம்பரில் இருந்த உற்பத்தியைவிட இரண்டு பங்கு அதிகம். இப்பொழுது தற்காப்பு முயற்சி ஆரம்பித்தபொழுது இருந்ததைவிட மூன்று மடங்கு அதிகம் விமான உற்பத்தி இலாகாவில் வருஷத்திற்கு 50,000 விமானங்கள் வீதம் செய்வதற்கு திட்டம் ஏற்பாடாயிருக்கிறது. அடுத்த வருஷத்திலேயே மேற்கண்டபடி விமானங்கள் கட்டி முடிக்கப்படும். ராணுவ உபயோகத்திற்காக சாமான் ஏற்றிச் செல்லும் விமானங்கள் உள்பட சென்ற வருஷத்தில் மொத்தத்தில் 26,000 விமானங்கள் செய்யப்பட்டன. இந்த வருஷத்தில் 39,000 விமானங்கள் புதிதாகக் கட்டி முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## இந்த வருஷத்தில் 26,000 டாங்கிகள் உற்பத்தி.

**டாங்கிகள்.**—சென்ற வருஷத்தில் எல்லா தினுசு டாங்கிகளும் சேர்ந்து சுமாராக 5,000 செய்து முடிக்கப்பட்டன. 1940-ம் வருஷ உற்பத்தியைவிட இது 10 பங்கு அதிகமிருக்கும். இந்த வருஷத்தில் 26,000 டாங்கிகள் உற்பத்தியாகியிருப்பதை கவனித்தால் சென்ற வருஷத்தில் தயாரிக்கப்பட்டது மிகவும் குறைவு என்று தெரியும். 1940-ம் வருஷத்தில் லேசான டாங்கிகளின் உற்பத்தியைக் காட்டிலும் 6 மடங்கு அதிகமான டாங்கிகள் சென்ற வருஷத்தில் செய்யப்பட்டன. அதேபோலவே 1940-ம் வருஷத்தைக் காட்டிலும் 15 மடங்கு அதிகமாக நடுத்திறமான கனமுள்ள டாங்கிகளும் தயாரிக்கப்பட்டன.

**பீரங்கிகள்.**—இதற்கு முன்னிருந்த உற்பத்தியைக் காட்டிலும் 30 அங்குல அகலமுள்ள விமானத்தில் ஏற்றப்படும் யந்திர பீரங்கிகளின் எண்ணிக்கையில் மூன்று பங்கும், 60 மிலி மீட்டர் அகலமுள்ள பள்ளங்களில் வைத்துச் சுடும் பீரங்கிகளின் எண்ணிக்கையில் மூன்று பங்கும், புது தினுசு துப்பாக்கிகளில் இரண்டு பங்கும் அதிகமாக இவ்வருஷத்தில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

முதலெடுப்பில் இந்த உற்பத்தியின் திட்டத்தை கவனிக்கையில் மனதிற்குத் திருப்திகரமாயிருப்பதாகத் தோன்றினாலும் தற்போது ஏற்பட்டுள்ள அவசியத்திற்குப் போதுமான அளவு இருக்கவில்லை. சென்ற டிசம்பர் 1-ம் தேதியிலிருந்ததைப் போலவேதான் அடுத்த வருஷத்திற்கு யுத்த தளவாட உற்பத்தி திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவை அமெரிக்கா யுத்தத்தில் இறங்குவதற்கு முன் 39,000 விமானங்கள் உற்பத்தி செய்வதாகத் திட்டம் போட்டதைக் காட்டிலும் இப்பொழுது 50,000, 60,000, 70,000 விமானங்கள் செய்யவேண்டிய தின் அவசியம் நமக்குத் தெரிகிறது. இந்தப்படி நாம் எண்ணிக்கொள்ளுவது தவறில்லை.

## பொதுமக்களுக்குத் தேவையான சாமான்கள்.

அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும்படி கேட்டதை அமெரிக்கத் தொழிற்சாலைகள் ஒப்புக்கொண்டு நடத்திவருகின்றன. ஆனால் ராணுவ முஸ்தீப்புகளுக்கு வேண்டிய யுத்த தளவாடங்களை மட்டில் உற்பத்தி செய்தால் போராது. அவைகளைக் காட்டிலும் பொதுமக்களுக்குத் தேவையான சாமான்களையும் உற்பத்தி செய்தாகவேண்டும். ஆனால் எல்லாவற்றையும் காட்டிலும் ராணுவத்திற்கு வேண்டிய பொருள்களை முதலில் தயாரிக்கவேண்டும். பொதுமக்களுக்கு யுத்தத்தில் ஊக்கம் குன்றாமலிருப்பதற்காக, அவர்களுக்குத் தேவையான சாமான்களை உற்பத்தி செய்துகொடுத்தாகவேண்டும். அதற்காக பற்பல தொழில் நிபுணர்களையும் இந்த யுத்த காலத்தில் புதிய பொருள்களை உற்பத்தி செய்யவேண்டிய சாதனங்களைக் கண்டுபிடிக்கும்படி தூண்டவேண்டும்.

டிசம்பர் மாதம் 8-ம் தேதி அமெரிக்கா ஜப்பான் பேரில் யுத்தம் துடங்கிய பொழுது-யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜனாதிபதியிடமும், வாஷிங்டன் பிரதிநிதிகளின் சபை தலைவரிடமும் 'ஜனாதிபதி இஷ்டப்படிக்கும், காங்கிரஸ் இஷ்டப்படிக்கும் இன்று எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு அனுசரணையாக அமெரிக்கக் கைத்தொழிலும் ஒத்துழைக்கும்' என்று அமெரிக்கத் தொழிலாளிகளின் சங்கத்தலைவன் என்ற ஹோதாவில் நான் தெரிவித்தேன்.

## மூழ்கடிக்கப்பட்ட ஒரு கப்பலுக்கு 2 கப்பல்கள் விதம் கட்டப்படும்.

ஜப்பானும், ஜெர்மனியும், இடாலியும் அமெரிக்கப் பொதுமக்கள் பேரில் இந்த யுத்தத்தை சுமத்தியதற்காக அமெரிக்கக் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டால்

அதற்குபதிலாக இரண்டு கப்பல்கள் கட்டிக்கொடுக்கப்படுவதாக நான் மறுபடி
உறுதி கூறுகிறேன். எதிரி உற்பத்தி செய்யும் ஒரு வெடிகுண்டுக்கு ஒரு டஜன்
வெடிகுண்டுகள் இங்கு தயாரிக்கப்படும். சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்களுக்கு
ஈடுசெய்ய, ஏராளமான விமானங்களும் உற்பத்தி செய்யப்படும்.

அமெரிக்க மக்களுக்கு தேசாபிமானம் அதிகம். அதுபோலவே அமெரிக்கத்
தொழிற்சாலைகளும் உலகத்தில் தேச க்ஷேமத்தை முன்னிட்டு தங்களாலான
உதவியைச் செய்யும். ஸ்வதந்திரம் அழியாமலிருப்பதற்ககவும், மனிதர்களுக்குள்
பரஸ்பரம் விசுவாசம் ஏற்படுவதற்காகவும், துரிதமாக நிச்சயமான வெற்றி
கிடைக்கும் வரை அமெரிக்கக் கைத்தொழில் ஏராளமாகப் பொருள்களைத் தயாரித்
துக் கொண்டுதானிருக்கும்.

---

## ஒருவருக்கும் பிரயோஜனமில்லாத அரசாங்கம். வாங் சிங் வெய் ஜப்பானியரின் சொற்படி நடக்கிறான்.

(ஒரு விசேஷ நிருபர் எழுதுவது).

நான்கிங் நகரில் வாங் சிங் வெய்யைத் தலைமையாக வைத்து, பேருக்கு ஒரு
அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு ஜப்பானியர் செய்துகொண்ட உடன்படிக்கை
யின் பயனாக ஜப்பானியர் சொல்ல முடியாத கிரிசமங்களைச் செய்துவருகின்றனர்.
சைனா, கொரியா முதலிய இடங்களில்கூட இவ்வளவு அட்டூழியங்களைச் செய்ய
வில்லை. 1937 ஜூலையில் சைனா-ஜப்பான் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்,
ஜப்பானியரை எதிர்க்கவேண்டுமென்று சொன்னவர்களில் வாங் சிங் வெய்
முதன்மையாக இருந்தான். மஞ்சூரியாவை ஜப்பானியர் எதிர்த்தபோது
அங்கிருந்த சாங் ஸியூ-லியாங் என்ற சீன தளகர்த்தர் ஜப்பானியரைத் தடுக்கவில்லை
யென்று வாங் பிரமாதமாக சீறிவிழுந்து தனது பதவியையும் ராஜிநாமா செய்
தான். இதன் பயனாக மஞ்சூரியாவில் சைனியத்திற்குத் தலைமை வகித்தவர்கள்
வேலையை விட்டு விலகவேண்டி வந்தது. அந்த சந்தர்ப்பங்களில் வாங் சொன்ன
சிலமொழிகளை கவனிப்போம். "ஜப்பானைக் காட்டிலும் சைனா குறைந்த
ராணுவ பலம் பெற்றிருந்தாலும், மிருகபலத்தைக்கொண்டு சைனாவை பயமுறுத்தி
இளப்பமான உடன்படிக்கைகளுக்குள்ளாகும்படி செய்யமுடியாது."

சைனா-ஜப்பான் சண்டையின் ஆரம்பகாலங்களில் மற்ற தலைவர்களைப்போல்
வாங் சிங் வெய்யும் ஜப்பானியரைத் தடுத்து இறப்பதேமேலானது என்று
சொன்னான். ஆனால் திடீரென்று ஒருமாறுதல் ஏற்பட்டு ஜப்பானியருடன்
சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று சொன்னான். இதற்குக்காரண
மென்னவென்றால் சைனாவின் தலைவனான சயாங்கை ஷேக்கைக் கண்டு இவன்
பொறாமைகொண்டான். வாங் தனது எண்ணங்களை மனதிற்குள்ளாகவே
வைத்துக்கொண்டிருந்து ரகசியமாக 1939-ஆம் டிஸம்பரில் பிரெஞ்சு இந்தோ-
சைனாவிற்குள் ஓடிவிட்டான். தேசத்துரோகியாகவே போய்விட்டான்.

### வாங் சிங் வெய் கடவுள் தூதனாம்.

இவ்வளவு காலமும் ஜப்பானியர் ஒரு சீனத் தலைவனைப் பிடித்து தனது
அரசாக்ஷியை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருந்த
னர். முன்பு உத்தியோகம் வகித்த பெகிங், நான்கிங் முதலிய இடங்களில் வயது
முதிர்ந்த காவாலிகளையெல்லாம் சிற்சில மாகாணங்களில் வேலைக்கு அமர்த்தினர்.
மார்ஷல் வு. பி. புவை மறுபடி அரசாங்கம் வகிக்கும்படி ஜப்பானியர் தூண்டியது
பயன்படவில்லை. ஏனென்றால் சைனாவிலிருந்த ஜப்பானியத் துருப்புகளை அப்புறப்
படுத்த வேண்டுமென்று இவன் வற்புறுத்தினான். அதை ஜப்பானியர் ஒப்புக்
கொள்ளவில்லை.

வாங் சிங் வெய் சைனாவை விட்டு வெளியேபோன செய்தி ஜப்பானியர்
ஆவலாக வரவேற்றி பூரா சைனாவிற்கும் ஜப்பானுக்கு உட்பட்ட அரசாங்கத்தை
ஸ்தாபித்து விடலாமென்று எண்ணினார்கள். டோகியோ முதலிய முக்கிய
ஜப்பானிய நகரங்களுக்கு அவனை அழைத்துச்சென்று நான்கிங்கிற்குத் தலைவனாக
பட்டாபிஷேகமும் செய்தனர்.

இந்தப்புதிய அரசாங்கத்திற்கு விசேஷ தூதனாக ஜெனரல் M. அபி
நியமிக்கப்பட்டான். சைனா ஜப்பான் சமாதான உடன்படிக்கையை ஏற்பாடு
செய்ய மற்றொரு தூதனும் நியமிக்கப்பட்டான். 1940-ஆம் ஏப்ரல் 23-ல் ஜெனரல்
அபி நான்கிங்கை அடைந்தான். நவம்பர் 30-ல் தான் உடன்படிக்கை முதலிய
சாஸனங்கள் கையெழுத்தாயின.

### பூரா அடிமைத்தனம்.

அது முதல் சைனாவிற்குப் பிடித்தது சனியன். அரசியல், பொருளாதாரம்,
ராணுவம் முதலிய விஷயங்களில் ஜப்பானுக்கு ஏராளமான சௌகரியங்கள் ஏற்
பட்டும் நான்கிங்கிற்கு ஒருவித கௌரவ நிலையும் அளிக்கப்படவில்லை. இதர
நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருப்பது, இதர உதவிகளைச் செய்வது என்று ஒரு
நிபந்தனை (7-வது) இருந்ததே தவிர அதன்படி ஒன்றும் நிறைவேற்றப்
படவில்லை. ஆனால் ஜப்பானியர் தேசங்களை அதிகமாகக் கைக்கொள்ளவில்லை
யென்றும், நஷ்ட ஈடு கேட்கவில்லையென்றும் பெருமைப்படுத்திக் கொள்ளுகிறார்
கள். உண்மையாதெனில் சைனாவிலேயே ஜப்பானியத் துருப்புகள் காலவரையில்
லாமல் நிறுத்தப்பட்டிருப்பதே ஜப்பானுக்கு சாதகம்தான். வர்த்தக நிபந்தனை
களெல்லாம் ஜப்பானியருடைய மேல்பார்வைக்கு உட்பட்டுத்தான் இருக்க
வேண்டும். "சைனா யுத்தம் ஆரம்பமானது முதல் ஜப்பானியருக்குச் சைனாவில்
நேர்ந்த நஷ்டத்தை" சைனா அரசாங்கம்தான் பொறுத்துக்கொள்ளவேண்டும்.
ஒற்றுமை என்று பாசாங்கு செய்துகொண்டு சைனாவின் வடக்கு மகாணங்களிலும்
மங்கோலியாவிலும் கிடைக்கும் உலோகங்கள் சம்பந்தமான பாத்தியம் ஜப்
பானியருக்குத்தான் உண்டு. "யாங்ட்ஸி நதியில் வியாபார ஸ்வதந்திரமும் ஜப்பானி
யருக்குத்தான். மங்கோலியாவிலும் வடசைனாவிலும் பொதுவுடமைக் கக்ஷிக்காரர்
களின் கலவரம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுவதற்காக என்று பொய்சொல்லி
ஒரு ஜப்பானியச் சைனியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் நிரந்தர
மான சமாதானம் ஏற்பட்ட பிறகுதான் ஜப்பானியச் சைனியங்கள் அப்புறப்
படுத்தப்படுமாம்.

ஆகவே இம்மாதிரி ஜப்பானும் நான்கிங் அரசாங்கமும் செய்துகொண்ட
உடன்படிக்கையை மற்ற பாகத்திலுள்ளோர் ஏற்கவேயில்லை. சைனாவிற்குச்
செய்த துரோகமென்றே இது கருதப்பட்டது. போதையிலிருக்கிறவனிடம்
ஏமாற்றி நிபந்தனைகளை வாங்குவதுபோல ஜப்பானியர் நான்கிங் அரசாங்கத்
தாரிடம் திட்டங்களை ஏமாற்றி ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### ஜப்பானியரின் வேலைக்காரர்கள்.

புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் கேவலமான நிலைமையைப்பற்றி
மனதினால் கூட நினைக்க முடியாது போலிருக்கிறது. தலைநகரை விட்டு, முக்கிய
மாக ஷாங்காய் நகரைவிட்டு அரசாங்கத்தினர் வெளியேறினால் கொலைதான்.
நான்கிங் நகரம் ஜப்பானின் ஒரு ராணுவ நகரமாகவே இருக்கிறது. சமாதானம்
ஏற்பட்டு இரண்டு வருஷங்களுக்குப்பிறகு சைனியத்தை அப்புறப்படுத்தாத
தோடு புதிது புதிதாக சாமான்கள் தேவையாக இருக்கிறதாயும் ஜப்பானியர்
சொல்லுகின்றனர். நகரவாயில்களிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் ஜப்
பானியத் துருப்புகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சீன அதிகாரிகள் இவர்களைப்
பார்க்கும்போதெல்லாம் வந்தனம் அளிக்கவேண்டும். அநேக சீன உத்தியோகஸ்
தர்கள் அந்த இடங்களுக்கு அருகில் வரும்போது வண்டிகளை விட்டு இறங்கி மரி
யாதையாக நடந்தே செல்லவேண்டும்.

சைனாவில் காணப்படும் சுவர்களிலெல்லாம் ஜப்பானிய மருந்துகளைப்பற்றிய
நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. புது திட்டத்தைப் பற்றியும் பிரசார
பத்திரங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. சைனாவின் மத்திய பாங்கியின் பொய்
யான நாணயச்செலாவணி தான் எங்கும் கிராமாந்தரங்களில் பரப்பப்படுகிறது.
புதிதாக மத்தியபாங்கி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மூலநிதியே
இல்லை. ஆனால் காகித நோட்டுகள் அச்சடிக்கும் ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்
டிருக்கிறது. இந்த நோட்டுகளுக்குச் செலாவணியே கிடையாதே. உதாரண

மாக ரயில்வே கட்டணங்களும், பொது தர்மக்கணக்குகளும் ஜப்பானிய நாணயத்திலுல்தான் வரவு செலவு செய்யவேண்டும்.

### பயங்கர ஆட்சி.

பொதுஜனங்களின் திருப்தியையும் மரியாதையையும் சம்பாதிக்க நான்கிங் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேயில்லை. ஆனால் ஷாங்காயிலுள்ள ஜப்பானிய சேனையுடன் சேர்ந்துகொண்டு பயங்கர ஆட்சியைத்தான் செலுத்தி வருகிறது. இதுதான் அதற்கு ஏற்பட்ட புகழ். தேசபிமான முள்ளவர்களும் சுங்கிங் அரசாங்கத்தை நேசிக்கிறவர்களுமான சில சீன பத்திரிகை நிருபர்களை கொலை ஜாபிதாவில் பதிய வைத்து துன்புறுத்தப்படுகிறது.

நான்கிங் அரசாங்கத்திற்குப் போதுமான வருவாயமில்லாமல் அவஸ்தைப் படுகிறது. கிடைக்கும் பணத்தை ஜப்பானியச் சைனியத்திற்கும் கப்பற்படைக்கும் செலவழிக்கவேண்டியிருக்கிறது. உப்புவரி, கடல் சுங்கவரி முதலியனயாவும் ஜப்பானியர்களால் திருடப்படுகிறது. அநேகமாக இதரநாட்டு நாணயங்களை (முக்கியமாக தங்கம்) வாங்குவதற்கே உபயோகப்படுத்தப்படுகிறது.

ஷாங்காய் பிரதேசத்தில் லஞ்சம், குற்றம் முதலியன குடிகொண்டிருக்கின்றன. ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும், சீனப் போலீஸ்காரர்களும் சேர்ந்து சூதாட்டம், விபசாரம், கஞ்சா முதலிய லாகிரி வஸ்து வியாபாரம், முதலியவைகளை அபிவிருத்தி செய்கின்றன. ஸ்திரீகளை மானபங்கப் படுத்துவது மிக அதிகம்.

இதற்கெல்லாம் காரணமென்னவென்றால் சரியான அரசாங்கம் இல்லாதது தான். ஆனால் ஜப்பானியச் சைனியம் வெளியே சென்றால் நான்கிங் அரசாங்கமும் பொதுமக்களால் விரட்டப்படும்.

---

## விமானப் படையெடுப்பு காலங்களில் செய்யவேண்டியவை.

### ரெங்கூனில் கற்ற பாடங்கள்.

### சங்கு ஊதும்போது பாதுகாப்பு ஸ்தலங்களுக்குள் சென்றுவிடவும்.

(H. D. லாதாம் எழுதியது).

[சமீபத்தில் மிஸ்டர் H. D. லாதாம் ரெங்கூனுக்குச் சென்று, அங்கு பாதுகாப்பு கோஷ்டியினர் எடுத்துக்கொண்ட திட்டங்களைப்பற்றி தெரிந்துகொண்டு பின்வருமாறு எழுதுகிறார். மறைமுகமாக இருக்கவேண்டுமென்றும் குழிகளுக்குள் செல்லவேண்டுமென்றும், எதி குண்டுகளை உடனேயே அழித்துவிடவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்].

டிஸம்பர் மாதம் 23உ காலையில் ஜப்பானிய விமானங்கள் ரெங்கூன் நகரை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன என்று எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. இவ்வெச்சரிக்கை, முதல் குண்டு விழுவதற்கு 25 நிமிஷங்கள் முன்பாகவே கொடுக்கப்பட்டது. இவ்வித எச்சரிக்கை கொடுக்கப்பட்டும், இதற்குமுன் பல மாதங்களாக பழக்கமடைந்திருந்தும் குண்டுகள் விழும்போது ஆயிரக்கணக்கான பேர்கள் தெருக்களிலேயே நின்றுகொண்டிருந்தனர். ஜனங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதை மறந்து தெருவுகளில் வேடிக்கை பார்க்க வருவார்கள் என்று எதிர்பார்த்தே ஜப்பானியர் பொதுமக்களை குண்டுகளால் நேரே தாக்கினார்கள்.

### வேடிக்கை பார்ப்பதுகூடாது.

மனிதர்களைத் தாக்கும் குண்டுகள் ஆழமாகப் பாயாமல், ஒரு பொருளோடு உராசியதும் வெடித்து நாலா பக்கங்களிலும் சிதறிவிடும். இந்த குண்டுகள் விழுந்த இடங்களை நான் பார்த்ததில் குண்டுகளிலிருந்து சிதறிய துண்டுகள் வெகு தணிவாகவே பறந்து செல்லுகின்றன. பூமியின் மேல் பரப்பெல்லாம் சேதமாகியிருந்தது. ரஸ்தாக்களின் ஓரங்களிலுள்ள நடைமார்க்கங்களிலுள்ள

கற்களெல்லாம் உடைந்து கிடந்தன. கடைகள், வீடுகள் எல்லாம் கீழே இடிந்து போயின. 100 அடி சுற்றளவிற்குக் கண்ணாடிகள் சிதறிக்கிடந்தன. ஒரு தெருவில் பாதுகாப்புச் செய்து கொள்ளாததால் 100 பேர்களுக்கு மேலாகவே இறந்துவிட்டனர். தரைமேல் படுத்துக்கிடந்தவர்கள்கூட குண்டு விழும் சப்தத்தைக் கேட்டு இறந்தனர். காயமும்பட்டனர்.

ஆகவே சங்கு ஊதியதும் பாதுகாப்பு ஸ்தலங்களுக்கு அவசியம் செல்லவேண்டுமென்பதை ரெங்கூன் மக்கள் தெரிந்துகொண்டனர். வேடிக்கை பார்ப்பதை எப்படியாவது நிறுத்தவேண்டும். உடைந்த குண்டுகளின் துண்டுகள் நாலா பக்கங்களிலும் செல்லுவதோடு, யந்திர பீரங்கிகளின் குண்டுகளும், உடைந்த விமானங்களும் விழுந்து அதனாலும் சேதமேற்பட்டது. ஏனென்றால் ஆகாயத்தில் செல்லுபவையெல்லாம் பூமியில்தானே விழவேண்டும்.

ரெங்கூனில் நடந்த முதல்நாள் படையெடுப்பிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது "பாதுகாப்புசெய்து கொள்ளவேண்டுமென்று" தான்.

முடிந்தால் செங்கல், கல் முதலியவைகளால் கட்டப்பட்ட வீடுகளை அமைத்துக்கொள்ளலாம். அப்பேர்ப்பட்ட வீடு சமீபத்தில் இல்லையானால் பூமிக்குள் குழிகளை வெட்டிக்கொள்ளலாம்.

### குண்டுகளும், செங்கல் கட்டடங்களும்.

குண்டுகள் விழுந்து ஜனங்கள் இறந்துபோன சில தெருவுகளைப் போய் பார்த்தேன். குண்டுகளின் துண்டுகள் சுவர்களைத் துளைத்திருந்தன. ஆனால் செங்கல் சுவர்களில் நாலைந்து அங்குல ஆழம்தான் உட்சென்றிருக்கின்றன. செங்கல் சுவர்களால் கட்டப்பட்ட பாதுகாப்பு ஸ்தலங்களில்கூட வெளிப்புறத்தில் செங்கல்களைக் கொஞ்சம் துளைத்திருக்கின்றனவே தவிர நேராடி சுவர்களைப் பிளந்து செல்லவில்லை.

பாதுகாப்பு ஸ்தலங்களையும், குழிகளையும் நேராடி குண்டுகளால் தாக்கப்படாமல் செய்யவேண்டும். மனிதர்களைத் தாக்கும் குண்டு ஒன்று, மரக்கட்டத்தின் மேல் நேர விழுந்ததால் பாதி வீடு இடிந்துபோயிற்று. 25 அடி சுற்றளவிற்கு மற்ற பாதியில் துளைக்கப்பட்டிருந்தது, அந்தபாகம் கீழேவிழவில்லை. அதற்கு 10 கெஜத்திற்கு சமீபத்தில் அந்த வீட்டு ஜனங்கள் குழிக்குள் பதுங்கியிருந்ததால் தப்பிவிட்டனர். இந்த வீட்டின் மேல் விழுந்த குண்டுதான் மிகப்பெரியது.

நிலைமை இவ்வாறிருக்கையில் சில ஐந்தாம் படையினர் வேறுவிதமான பீதியை உண்டாக்குகின்றனர். அதாவது ஜப்பானிய விமானங்கள் தரைக்கு வெகு சமீபத்தில் வந்து யந்திர பீரங்கிகளை உபயோகிப்பதால் குழிக்குள் இருப்பவர்களும் இறக்கின்றனர் என்று சொல்லுகின்றனர். ஆனால் உண்மை யாதெனில் ஜப்பானிய விமானங்கள் 17,000 அடி உயரத்தில் மணிக்கு 200 மைல் வேகத்தில் பறந்து செல்லுவதால் கோணல் கோணலாக வெட்டப்பட்டிருக்கும் குழிகளைக் குறிபார்த்து குண்டுகளைப் போடுவதென்பது சாத்தியமில்லை. மேலும் தரையிலிருப்போரின் மேல் யந்திர பீரங்கிகள் உபயோகப்படுத்தப்படவில்லை யென்று அதிகாரிகளை விசாரித்ததிலிருந்து தெரிகிறது. பாதுகாப்புச்செய்துகொள்ளாமல் இருக்கும் ஜனங்கள் பேரில் மனிதர்களைத் தாக்கும் குண்டுகள் விழுந்ததாலேயே அதிகம் பேர் இறந்தனர்.

### அமைதியுடனிருக்கவும்.

ஓரிடத்தில் ஒரு குழியிலும் ஒரு குண்டு விழுந்தது. இதைக் கண்டு கலவரப்பட்டு பக்கத்திலுள்ள குழிகளிலுள்ளோர் அதற்குள்ளேயே அமைதியுடன் இருக்காமல் வெளியே ஓடினார்கள். அப்பொழுது மற்றொரு குண்டு விழுந்து பலர் இறந்தனர். ஆகவே எதிரி விமானங்கள் சென்றுவிட்டன என்ற அறிவிக்கும் சங்கு ஊதப்படும்வரை குழிகளுக்குள்ளேயே இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் குறைவான சேதம் ஏற்படும். ஆகவே "அமைதியுடனிருக்க வேண்டுமென்பது" இரண்டாவது பாடம்.

வீடுகளுக்குள் பத்திரமாக இருக்கும்போது கண்ணாடிக் கதவுகளுக்கு அப்பால் தள்ளியே இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட இடங்களில் குண்டுகள் விழுந்தால் 100 அடி சுற்றளவிற்குக் கண்ணாடித் துண்டுகள் சிதறி சேதமேற்படும்.

முடிந்தால் பலமான சுவர்களுக்கு இடையில் இருக்கப் பிரயத்தனப்படவேண்டும். ஜன்னல்களுக்கு தூரத்திலேயே இருப்பது நலம். ஜன்னல், வாசல் முதலிய இடங்கள் வழியே குண்டுத்துண்டுகள் வர முடியாத இடத்தில் அதாவது இரண்டு சுவர்கள் சேரும் ஓரங்களிலும், டேபிளுக்கு அடியிலும், மூலைகளிலுள்ள படுக்கைக் கட்டில்களுக்கு அடியிலும் இருப்பது நலம்.

### எரிகுண்டுகள்.

40 பவுண்டு எடையுள்ள எரிகுண்டுகளையும் ஜப்பானியர் போட்டனர். இவைகள் கீழே வந்ததும் 4 முதல் 6 அங்குல நீளத்தில் பென்ஸில் உருவத்துடன் துண்டுகள் நாலா பக்கங்களிலும் சிதறி விழுகின்றன. கருப்பு ரப்பர் பந்துகளைப் போலவும் சில பரவுகின்றன. பின் சொல்லப்பட்டவை மூலை முடுக்குகளைப் பார்த்தே ஓடி தீயைப் பரப்புகின்றன. உருண்டையான குண்டுகளைத் தண்ணீரால் அணைக்கமுடியும். உலர்ந்து போனால் மறுபடி தீப்பிடித்து எரியும். ஆகவே இவை விழுந்த இடங்களை நன்ருகத் தேடிப்பார்த்து அக்குண்டுகள் அழியும் வரை பிரயத்தனம் எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளின் பேரில் மணலைக் கொட்டினாலும், வேறு மூடிகளை மூடினாலும், மீண்டும் அவைகளால் தொந்தரவு நேராது. இவ்விதம் உடனே செய்யவேண்டும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 92—(4-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | ... 25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 26, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, | 5.30 |
| | | நீர்ப்பழனி | ... | ,, | 6.00 |
| | | ஆலூர் | ... | ,, | 6.30 |
| | 27, திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, | 6.30 |
| | 28, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 29, புதன்கிழமை ... | வடவாளம் | ... | ,, | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.30 |
| | 30, வியாழக்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| மே | ... 1, வெள்ளிக்கிழமை... | குழிபிரை | ... | ,, | 6.00 |
| | | செவலூர் | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 93—(5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 3, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | | வம்பன் | ... | ,, | 6.30 |
| | 4, திங்கட்கிழமை ... | ஆதனூர் | ... | ,, | 6.00 |
| | | அரமனைப்பட்டி | ... | ,, | 6.30 |
| | 5, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 6, புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் | ... | ,, | 6.30 |
| | 7, வியாழக்கிழமை .. | புலியூர் | ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, | 6.30 |
| | 8, வெள்ளிக்கிழமை... | பள்ளிவாசல் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—27-4-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் மே மீ 3உ [ந. 93

## இந்தியாவிற்கு அமெரிக்கர்களின் நற்செய்தி.

(ஜனாதிபதி ரூஸ்வெல்டின் அந்தரங்க தூதரான கர்னல் லூயிஸ் ஜான்ஸனின் ஒலிபரப்பு).

யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தவும், கௌரவமாக சமாதானத்தை நிலைநாட்டவும், அமெரிக்க மக்களும், ஜனாதிபதியும் பூர்ணமாக அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவ்வித உயர்ந்த லக்ஷியங்களை அடைவதற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுக்கிருேம்.

### ஜனாதிபதியின் வாழ்த்து.

என்மூலமாக பரம சாதுக்களான இந்திய மக்களுக்கு ஜனாதிபதி வந்தனத்தையும், வாழ்த்தையும் அனுப்புகிருர். யாருடைய பிரதிநிதியாக இருப்பதினால் எனக்கு உங்களை வாழ்த்தும்படியான கௌரவம் பெற்றிருக்கிறேனே அப்பேர்ப்பட்ட அமெரிக்க மக்களும் வாழ்த்துகளை அனுப்புகிருர்கள்.

### அமெரிக்காவும், ஆசியாவும்.

பலவருஷங்களாக லாபகரமாயும், கௌரவமாயும், சிநேகமான ராஜீய சம்பந்தங்களாலும், அமெரிக்காவுக்கு ஆசியாவைக் குறித்து திட்டமான நோக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மற்ற விஷயங்களில் அமெரிக்காவுக்குள்ள அக்கரைகளும், பொறுப்பும், அவ்வளவு அதிகமில்லை என்றே சொல்லலாம்.

உதாரணமாக பஸிபிக்கில் நடந்த 9 அரசு ஒப்பந்தத்தில் எல்லா நாடுகளுக்கும் ஸ்வதந்திர சமதை இருக்கவேண்டுமென்றும், அரசியல், வர்த்தகம் முதலியவைகளுக்குத் தடை இருக்கக்கூடாதென்றும் அமெரிக்காவின் நோக்கமென்று வெளிப்படுத்தப்பட்டது.

அவ்வித தீர்மானத்திலிருந்து கொஞ்சமும் நாங்கள் பின்வாங்கவில்லை பின்வாங்கவும் மாட்டோம். உலகில் ஸ்வதந்திர நாடுகள் இவ்விதம் ஒன்றுக்கொன்று சமரசமாக நடந்துகொள்வதைப் பார்த்து திருப்தியடையாமல் ஜப்பான் அமெரிக்காவிற்கு விரோதமாகச் சண்டையை ஆரம்பித்தது.

எங்களால் முடிந்தவரை ஜப்பானை எதிர்த்தடிப்போம். முன்வைத்த காலை பின்வாங்க மாட்டோம். வெற்றியடையும்வரை உருவிய கத்தியை மறுபடியும் உறைக்குள் போடமாட்டோம்.

### நேசநாடுகள்.

ஜப்பானுடைய சிநேகிதர்கள் எல்லாம் நம் விரோதிகளாக ஆய்விட்டார்கள். ஆகவே ஜப்பானால் தாக்கப்படும் நாடுகள்யாவும் நம் நேச நாடுகளாகிவிட்டன.

நேசநாடுகள் யாவும் ஒற்றுமையுடன், ஜெர்மனி, இதாலி, ஜப்பான் முதலிய நாடுகளின் ஆக்கிரமத்தை ஒழிக்க சண்டைசெய்ய முற்பட்டுவிட்டன.

### இந்தியாவின் உதவி தேவை.

நேசநாடுகள் வெற்றிபெற தீர்மானித்துவிட்டன. தோல்வியடையமாட்டா அதற்கு இந்தியாவின் உதவி தேவை. இந்தியாவின் உதவி தேவையாயிருக்கிறதென்று அமெரிக்காவின் சார்பாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### இந்தியாவிற்கு நாங்கள் உதவியளிப்போம்.

ஜப்பானைப்போன்ற கொடிய எதிரி இந்தியாவைக் கவரும் நோக்கத்துடன் கண்வைத்து, இந்தியாவில் லக்ஷக்கணக்கான பேர்களை அடிமைகளாக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதை கவனித்து அவ்விதம் எதிரி வசமாகாமலிருப்பதற்காகவே இந்தியாவைப் பாதுகாக்க நேசநாடுகள் முன்வந்திருக்கின்றன. சீனர்களையும், மலேயர்களையும், பிலிப்பைன்ஸ் வாசிகளையும், ஜாவா வாசிகளையும் எதிரிகள் வசப்படுத்த முயற்சிக்கின்றனர். பார்மோஸா, கொரியா, மஞ்சூரியா முதலிய நாடுகளிலுள்ளோரை வசப்படுத்தியிருப்பது எனக்குத் தெரியும்.

### ஜப்பானின் முன்னேற்றமும், அடிமைத்தனமும்.

நேசநாடுகள் வெற்றியடைந்தால் மற்ற நாடுகளைக்காட்டிலும் இந்தியாவிற்கே அதிக நன்மை. எதிரிகளை விரட்டியடித்தால்தான் இந்தியாவிற்கு ஒரு பிரதானமான ஸ்தானம் கிடைக்கும்.

ஏனென்றால் ஜப்பான், ஜெர்மனி முதலிய நாடுகளுக்குட்பட்டிருந்தால் எந்த நாட்டுக்குமே முன்னேற்றம் கிடையாது.

### உலகத்தின் ஸ்வதந்திர உரிமைகள்.

உலகத்தின் எந்த பாகத்தில் இருந்தாலும் ஸ்வதந்திர மக்களின் உரிமைகளைக் காப்பாற்றவே நாம் சண்டை செய்கிறோம். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்ன பிரகாரம் எல்லா மக்களுக்கும் பேச்சுரிமை இருக்கவேண்டும். ஒருவித பயமும் இருக்கக்கூடாது. அதுவே சர்வ தேசங்களுக்கும் விடுவித்த அறிக்கையாகும்.

### கூட்டாளிகளும், சிநேகிதர்களும்.

அவ்வித ஸ்வதந்திரத்தை அடைவதற்காகவே இந்தியர்களை அமெரிக்கக் கூட்டாளிகளாகவும், நேசநாட்டினராகவும் பாவிக்கிறது.

### இந்தியாவும் சைனாவும்.

அமெரிக்காவுக்குள்ள நிலைமையைப்போல இந்தியாவின் வருங்கால அமைப்பும், இந்த யுத்தத்தால் அதிக கஷ்டத்திற்குள்ளாகி யிருக்கிறது. எதிரியை விரட்ட இந்தியாவிற்கு நாம் உதவியளிக்காமல் போனால் நாம் பயந்தாங்குள்ளிகளாகவே ஆகிவிடுவோம். இந்தியாவிற்கு உதவுவதால் நமக்கும் உதவி ஏற்படும்.

ஆகவே யுத்தத்தினால் ஏற்படும் நிலைமைகளைத் தீர்மானிப்பதாலும், யுத்தரங்கங்களை நிர்ணயிப்பதாலும் மட்டும் எங்கள் வேலை முடிந்துவிடாது. எந்த இடத்தில் அச்சுநாட்டினர் பரவினாலும் அங்கெல்லாம் சென்று சண்டை செய்யத் தீர்மானித்துவிட்டனர்.

எதிரி நாட்டிற்குச்சென்று, அவனை முறியடிப்பதற்கான முயற்சி சமீபத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.



கொஞ்சம் நன்றாகப் பரிசிலனை செய்துபார்த்தால் நாஸிகளை முன்னேற விட்டால்' உலகில் பல நேர்த்தியான அம்சங்கள் அழிந்துவிடும்.

இந்தியாவிலும் சைனாவிலும் நடக்கும் மாறுதல்களை அமெரிக்காவிலுள்ளவர்கள், அக்கரையுடன் கவனித்துவருகின்றனர். ஏனென்றால் ஆசியாவின் வருங்கால அமைப்பும், ஒற்றுமையும் இந்தியர்களிடமும், சீனர்களிடமும் தான் இருக்கின்றன.

பத்து நூற்றாண்டுகளின் அரசியல் முன்னேற்றத்தின் பயனாக இந்த இரு நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஸ்வதந்திரம், படிப்பு முதலியவைகளைப் பாதுகாக்க முயற்சித்து வருகின்றன.

தற்சமயம் இந்தியாவின் வழியாகவே சீனாவுக்கு மார்க்கம் ஏற்பட்டிருக்கிறது. சீனாவின் மேற்கு, தென்மேற்கு மாகாணங்களில் ரஸ்தாக்கள் போடப்பட்டும், இருப்புப்பாதைகள் போடப்பட்டும், துறைமுகங்கள் ஸ்தாபிக்கப்பட்டும் இருப்பதால் பஸிபிக், இந்து மகா சமுத்திரம் வழியாக உலகின் மற்ற பாகங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளமுடியும்.

சீனாவுக்கும், இந்தியாவுக்கும் பொதுவான பல விஷயங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும், புராதனமான கலை, நாகரீகம் இருக்கின்றன. இவைகளை நாங்கள் வெகுகௌரவத்துடனும், ஆச்சரியத்துடனும் பாராட்டி வருகிறோம். இந்தியாவிலும், சீனாவிலும் புதிய தேசிய இயக்கமும், பொதுமக்களுக்கு சுயமான மனோதிடமும் ஏற்பட்டிருக்கிறது. இவ்விதமாக இவ்விரண்டு தேசங்களும் தோளுடன் தோள் ஒட்டி உலக சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் ஆசியாவிற்கு எப்பொழுதும் நன்மைதான். ஆனால் இந்த இரண்டு நாடுகளை ஜப்பானியர்கள் ஆக்கிரமித்துக்கொண்டால் ஆசியா முழுவதிலும் குழப்பம்தான் இருக்கும்.

### வெற்றிதான் லக்ஷியம்.

தானாக ஏற்பட்ட சந்தர்ப்பங்களின் அமைப்பால் இந்தியாவும், அமெரிக்காவும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. பொதுவான எதிரிகளைத் தோற்கடிக்கும் விஷயத்தில், நேசநாடுகள் யாவும் ஒன்றுபட்டிருக்கின்றன.

இந்திய சாதுமக்களே! நாங்கள் எங்களுடைய நிச்சயத்தைத் தெரிவித்தபடி உங்களுடைய நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்ளுங்கள். கொடுத்த வாக்குறுதிகளை நேசநாடுகள் ஒருநாளும் மீறியதில்லை. அவைகளை நம்பிய நாடுகளையும் ஒருநாளும் கைவிட்டதில்லை.

நம்மவர் யாவருக்கும் வெற்றியைத் தவிர வேறு லக்ஷியம் கிடையாது. யுத்தரங்கத்தில் நாங்கள் மும்மரமாக இறங்கியபடியே சமாதான காலத்திலும் எங்களுடைய உயர்ந்த லக்ஷியங்களைப் பயன்படுத்துவோம்.

---

பிரசங்கம் XCIII.

## பிரான்ஸ்.

ஆக்கிரமித்த நாடுகளில் நாஸி அரசாங்கத்தால் ஏற்பட்ட கொடுமையைப் பற்றியும் கொடுங்கோலைப்பற்றியும் நமக்கு விவரங்கள் கிடைத்திருக்கின்றன. இருந்தாலும் பிரான்ஸ் சம்பந்தப்பட்டவரையில் ஹிட்லர் நடந்துகொண்டிருக்கும் வழியானது மிக தந்திரமாக இருக்கிறது. ஒரு தேசத்தில் மூன்றில் ஒரு பங்கைத்தான் ஆக்கிரமித்துக்கொண்டு மற்ற பாகத்தை தனியே விட்டுவிட்டு அங்கேயே ஒரு தலைவனிடம் அந்த பாகத்தின் அரசாங்கத்தை ஒப்படைப்பதென்றால் சாதாரண விஷயமல்ல. இந்த விதமாக பிரான்ஸைப் பிரித்துவிட்டதிலிருந்து ஹிட்லரின் சாமர்த்தியம் நன்றாகத் தெரிகிறது. இதனால் பிரெஞ்சு மக்களுக்குமட்டுமில்லாமல் உலகத்திற்கே குழப்பம் ஏற்பட்டது. ஜெர்மன்

சைனியங்கள் பிரவேசிக்காத பாகங்களில் அதாவது வட ஆபிரிக்கா, ஸிரியா, இந்தோ-சைனா முதலிய பிரெஞ்சு நாடுகளிலெல்லாம் நாஸிகளின் செல்வாக்கு பரவ ஆரம்பித்துவிட்டது. இது சாமர்த்தியமல்லவா.

இப்படிச் செய்யாமல் எல்லா பிரான்ஸையும் நாஸிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால் பிரெஞ்சு அரசாங்கம் ஓடிப்போயிருக்கும். ஹாலந்து, பெல்ஜியத்தைப்போல பிரான்ஸும் நாஸிக்கு உட்பட்டிருக்கும். அந்த நாட்டிலிருந்து ஓடிய அரசாங்கம் இங்கிலாந்திலிருந்து அரசபுரிய வேண்டியிருக்கும். இந்தோ-சைனா உள்பட பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள் நேசநாடுகள்பக்கம் சேர்ந்திருக்கும்.

## பிரெஞ்சு மக்கள் குழம்புகின்றனர்.

பிரெஞ்சு மக்களை ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் செய்தே ஹிட்லர் பிரான்ஸில் வெற்றிபெற்றான். சமீபகாலத்தில்தான் ஹிட்லர் தந்திரங்கள் கொஞ்சம் பலிக்காமல் இருந்து வருகின்றன. முன்பு வெர்டூன் சண்டையில் ஜயம் பெற்ற மார்ஷல் பிடேன் யாராலும் கொண்டாடப்பட்டான். பிரான்ஸின் தேசாபிமானத்தைப்பற்றியும், முந்திய புகழுக்கு பிரான்ஸைத் திருப்பிவிடுவதாகவும் பெருமையாகச் சொல்லிக்கொண்டான். ஜனங்களும் இவன் சொல்லுவது உண்மையென்று நம்பினார்கள். ஜெர்மானியரின்மேல் இயற்கையான வெறுப்பு ஒருபுறமிருக்க புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பிரெஞ்சு அரசாங்கத்தின்பேரில் ஜனங்களுக்கு ஒரு விசுவாஸமும் ஏற்பட்டது. இதுதான் பிரெஞ்சு மக்களுக்கு முதலில் ற்பட்ட குழப்பம். இதுதான் நாஸிகளால் செய்யப்பட்ட தந்திரமுமாகும்.

தற்சமயத்தில் விஷி அரசாங்கத்தின் நடத்தையைப்பற்றி அதிகம் சொல்லப் போவதில்லை. இருந்தாலும் விஷி பிரெஞ்சு மக்களின் மனதில் நிலவரமில்லாத தன்மையை உண்டுபண்ணி நாஸிகள் ஆக்கிரமித்த பிரான்ஸில் கையாண்டுவரும் முறைகளைப்பற்றி கவனிப்போம்.

## ஜெர்மனிக்கு பிரான்ஸ் உணவு அளிக்கவேண்டும்.

பிரான்ஸில் மூன்றில் இரண்டு பங்கை பிடித்துக்கொண்டதும் அயல் நாடுகளுடனுள்ள திட்டங்கள் பூராவும் மாற்றப்பட்டன. பிரெஞ்சு அரசாங்கத்துடன் சமாதானம் செய்துகொண்ட சிறிதுகாலத்திற்குப் பிறகு பாரிஸ்ஸில் வெளிவரும் லோவேர் என்ற பத்திரிகையில் மார்ஷல் டீட் என்ற துரோகி ஒருவன் பின்கண்ட செய்திகளைப் பிரசித்தப்படுத்தினான்.

"பிரான்ஸ் இனிமேல் ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்துகொள்ளவேண்டும். ஜெர்மன் சைனியங்களை உபயோகித்துக்கொள்ளவேண்டும். விவசாய நாடாகவே தானிருக்கவேண்டும். தொழிற்சாலைகளை விருத்தி செய்துகொள்ளக்கூடாது. ஜெர்மனியுடனும் இதாலியுடனும் அதிகமான பொருளாதார உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவேண்டும்".

இவ்வித திட்டங்களைத்தான் நாஸிகளும் விரும்பிக்கொண்டிருந்தனர். ஐரோப்பாவிலுள்ள தொழிற்சாலைகளை தாங்கள் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு தங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து பெறுவதேதான் நாஸிகளின் நோக்கம். இப்படிச் செய்துவிட்டால் ஆக்கிரமித்த நாட்டு மக்கள் சைனிய முஸ்தீப்பு பெறமுடியாது, ஜெர்மன் மக்களுக்கு உயர்வான நிலை கிடைக்கும்.

## கோதுமை.

முன்பு டீட் எழுதிய அபிப்பிராயத்தையும், வோல்கிஷெர் பியோபாஷ்டர் என்ற பத்திரிகையில் நான்கு மாதங்கள் பிற்பட்டு வெளிவந்த செய்தியையும் சேர்த்துப் பார்த்தால் டீடின் கருத்து வேறுவிதமாகவே காணப்படுகிறது. அப்பத்திரிகையில் பின்வருமாறு காணப்பட்டிருந்தது:—"பிரான்ஸின் தானிய அருவடையில் பிரெஞ்சு மக்களைப்போல் எங்களுக்கும் அக்கறையிருக்கிறது". இதன் கருத்து மிகவும் உண்மையானதாகவே வெளிக்குக் காணப்படுகிறது.



கோல்நிஷி ஜீடங் என்ற பத்திரிகையில் பின்கண்ட செய்தி ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. "இவ்வருஷம் ஜெர்மனியின் வடக்கிலிருந்து கோதுமை வராது. ரைன் ஜில்லாக்களிலுள்ள மில்களுக்கு பிரெஞ்சு கோதுமை பலதடவைகளில் வந்திருக்கிறது."

இவ்விதமாகப் பத்திரிகையில் பிரசுரமானவுடனேயே ஆக்கிரமித்த பிரான்ஸிலிருந்து 8,00,000 டன் கோதுமை ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டதாகவும் ஜெர்மன் பத்திரிகைகள் கூறின. கொஞ்ச நாட்கள் கழித்தும், பிரான்ஸிலிருந்து எடுத்துச் சென்ற கோதுமையின் கால்பாகத்தைத் திரும்பவும் ஆக்கிரமித்த பிரான்ஸுக்கு ஜெர்மனி அனுப்பி, ஜெர்மானியர் மிகவும் உதார குணமும், தயவும் படைத்தவர்களென்று பாரிஸ் பத்திரிகைகளில் புகழவும் பட்டது.

## உருளைக்கிழங்கு.

பிரிடனைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமான உருளைக்கிழங்கு பிரான்ஸில் பயிரிடப்படுகிறது. இருந்தாலும் அவையாவும் ஜெர்மானியரால் கொண்டுபோகப்படுவதால் பிரெஞ்சு மக்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படும்போது 500 பேர்கள் வரிசையாக நின்று கொள்ளுவார்கள். இவர்களைப்பார்த்து பிரெஞ்சு ஸ்திரீகள் கோபமடைந்து "கொலராடோ தேசத்து வண்டுகள்" என்று கேலி செய்தார்கள். (நம் நாட்டிலுள்ள வெட்டுக்கிளிகளைப்போல் இவ்வண்டுகள் உருளைக்கிழங்கு பயிரை அழித்துவிடும்).

1940 நவம்பரில் வெளிவந்த ஸ்வீடன் செய்தி ஒன்று கூறுகிறபடி பிரெஞ்சுக் குடியானவர்கள் ஜெர்மானியரின் அனுமதியில்லாமல் தானியங்களைப் போரடிக்கவும் கூடாது. உருளைக்கிழங்கை வெட்டியெடுக்கவும் கூடாது. பிராணிகளை ஆகாரத்திற்காகக் கொல்லவும் கூடாது கிடைக்கும் தானியங்களில் 60 சதவிகிதம் ஜெர்மனிக்கு அனுப்புவதற்காகப் பிரித்து எடுத்து விடவேண்டும்.

பிரான்ஸைப் பிடித்துக் கொண்டதும் பிரெஞ்சு பிராங்க் நாணயத்தைக் காட்டிலும், ஜெர்மன் நாணயத்தின் மதிப்பு உயர்த்தப்பட்டதால் ஜெர்மன் சிப்பாய்கள் கொஞ்சப்பணம் கொடுத்துத் தேவையான ஆடைகளையும், கம்பளி, பட்டு கால் அணிகளையும், கால் சல்லடங்களையும் பெற்றுக்கொண்டார்கள். பிரான்ஸிலுள்ள பஞ்சு யந்திரசாலைகளெல்லாம் மூன்றில் ஒரு பங்குதான் வேலை செய்கின்றன. ஏனென்றால் அவைகளுக்குப் போதுமான விளைவுபொருள்கள் கிடைக்கவில்லை. பிரெஞ்சுப் பொதுமக்களெல்லாம் ஸ்வீடனிலிருந்து கொண்டுவரப்பட்ட காகிதச் சட்டைகளை அணிந்து கொள்ளுகின்றனர். தோல், ரப்பர் முதலியவைகள் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்படுவதால் செருப்புகளுக்கு பதிலாக கட்டைகளை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது.

## ஹிட்லருக்காக டாங்கிகள்.

பிரான்ஸில் ஆக்கிரமிக்க வந்த ஜெர்மன் சைனியங்களின் செலவை மூன்று பங்கு பிரான்ஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. செலவுபோக மீதியுள்ள பணத்தைப் பிரெஞ்சுத் தொழிற்சாலைகளில் ஜெர்மானியர் மூலநிதியாகப் போட்டுவிடுகின்றனர். ரேனால்டு, ஸிட்ரோன் என்ற இரண்டு மோட்டார் தொழிற்சாலைகளில் டாங்கிகளும் இதர யுத்த சாமான்களும் செய்யப்பட்டு ஜெர்மனிக்கு ஸப்ளை செய்யப்படுகின்றன. பிரசித்தமான ஹிஸ்பானோ சூயிஸா என்ற தொழிற்சாலையில் விமான என்ஜின்கள் செய்யப்படுகின்றன. இவ்விதமாகவே ஜெர்மன் தேவைகளுக்காகவே ஆக்கிரமித்த பிரான்ஸில் எல்லா வர்த்தக ஸ்தாபனங்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

பிரான்ஸுடன் சமாதானம் செய்துகொள்ளும்பொழுது 20 லக்ஷம் பிரெஞ்சுக் கைதிகளைத் திருப்பிக்கொடுக்கும் விஷயத்தைப்பற்றி பிரஸ்தாபமே செய்யப்படவில்லை. பிரெஞ்சுக் குடும்பங்களில் அண்ணனோ, கணவனோ, பிள்ளையோ, தகப்பனோ யாராவது ஒருவன் ஜெர்மன் ஜெயில்களில் அடைக்கப்பட்டிருப்பான். ஆகவே எவ்வித நிபந்தனைகளுக்கும் பிரெஞ்சுக்காரர்கள் உட்படுவாரென்று ஹிட்லருக்குத் தெரியும்.

## ஓயாத பிரச்னை.

பதினெட்டு மாதங்களுக்கு முன்பாக பிரான்ஸுடன் சண்டை நின்றிருந்தாலும் உண்மையில் இரு நாடுகளுக்கும் சச்சரவுகள் இருந்துகொண்டே வருகின்றன. அதனால்தான் நிரந்தரமான சமாதானம் ஏற்படும்வரை பிரெஞ்சுக் கைதிகளை சிறையிலேயே ஜெர்மனி வைத்துவருகிறது. நாஸிகளால் நடத்தப்படும் பாரிஸ் பத்திரிகைகளும், ரேடியோவும் இப்பிரச்னையைப் பற்றி தினம் பிரசாரம் நடத்திவருகின்றனர். நாஸிகளுக்கு விரோதமாக பிரெஞ்சு மக்கள் நடந்துகொண்டால் "பிரெஞ்சுக்கைதிகளை விடுவிக்க முடியாது. ஏனென்றால் சில பிரெஞ்சு மக்கள் நிலைமையை சரியாக அறிந்து கொள்ளவில்லை என்று" பிரசாரம் செய்யப்படுகிறது.

அவர்கள் சொல்லும் விதமாக உண்மை விவரங்கள் என்னவென்று விவரிப்போம். பிரான்ஸிற்குச் சென்ற பிரிடிஷ் வெளிநாட்டுப் படைகள் ஜெர்மன் சைனியங்கள் ஏராளமாய் எதிர்த்து வருவதைப் பார்த்து தங்களை காப்பாற்றிக்கொள்ள பிரிடனுக்கு ஓடிவந்துவிட்டன. அந்த நிலைமையில் நேச நாடுகள் ஜயிப்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. ஆகவே யுத்தத்திற்குப் பிறகு பிரான்ஸிற்கு ஏதாவது நல்ல நிலைமையை ஏற்படவேண்டுமானால் இப்பொழுது முதற்கொண்டே ஜெர்மனியுடன் நேசமாக நடந்துகொள்ளவேண்டும். இது தான் நாஸிகள் செய்யும் பிரசாரம். உண்மையில் நேசநாடுகள் வெற்றிபெரு என்று நினைத்துக்கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் அச்சுநாட்டினருடன் சேர்ந்துகொண்டால் ஹிட்லர் இஷ்டப்படி சமாதானம் செய்துகொண்டு பிரெஞ்சுக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

## கைதிகளுக்குள் பிரசாரம்.

இவ்வித அபிப்பிராயத்தை பிரான்ஸில் ஹிட்லருக்கு உடந்தையாக இருக்கும் சிலர் பிரசாரம் செய்துவரும்பொழுது பிரெஞ்சுக் கைதிகள் இருக்குமிடங்களிலும் இவ்வித பிரசாரம் கடுமையாக இருக்கிறது. இதைப்பற்றி நடுநிலை நாட்டிலிருந்து கிடைத்த ஒரு கதை மூலம் தெரியவருகிறது. பிரிடனிலிருந்து வந்த பிரெஞ்சுக் கைதிகளை நாஸிப் பிரசார மந்திரி முன்பாக நிறுத்திவைக்கப்பட்டது. அந்தப் பிரசார அதிகாரி அக்கைதிகளின் பாஷையில் பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள ஒற்றுமையையும் அம்மக்களின் நிலைமையை முன்னேற்றம் செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் எடுத்துச் சொன்னான். பிரிட்டானி சிப்பாய்கள் மௌனம் சாதித்தனர். அவர் சொன்ன ஒரு வார்த்தைகூட இவர்களுக்குப் புரியவில்லை. காரணம் என்னவெனில் பிரிட்டானில் (Brittany) அப்பாஷை 800 வருஷங்களாகப் பேசப்படவில்லை. இவ்விஷயத்தை நாஸிகள் கண்டுகொள்ளவில்லை. அந்தந்த ஜனங்களுக்குத் தக்கவாறு பிரசாரம் செய்து வசப்படுத்திவிடலாமென்று நாஸிகள் எண்ணினார்கள். அது பலிக்கவில்லை.

## தேசாபிமானம் ஒரு குற்றமா?

நாஸிப் பிரசாரம் சமீபத்தில் ஒரு புதிய விதமாக ஆரம்பமாகியிருக்கிறது. ரியோம் விசாரணை ஆரம்பமாகி பிரெஞ்சுத் தலைவர்களில் சிலர் விசாரணை செய்யப்படுகின்றனர். இதைப்பற்றி டாக்டர் ஷிமிட் பின்கண்ட விஷயத்தைச் சொன்னான். இவன் ஜெர்மன் அயல்நாட்டுப் பத்திரிகை இலாகா தலைவன்:—

"ஜெர்மனியுடன் சண்டையைத் துவக்கியதே குற்றமென்று பிரெஞ்சு மக்கள் அறிந்துகொள்ளவேண்டும்" என்றான்.

எவ்வளவு கடுமையாக நாஸிப் பிரசாரம் நடந்துவந்தாலும் நாஸிகளை எதிர்த்துப் போராடும் விஷயத்தில் பிரெஞ்சு மக்களின் ஊக்கம் குறையவேயில்லை. ருஷ்யர்களின் தீரச்செயல்களையும், அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதையும் பார்த்தால் நாஸிகளின் நிலைமை மாறிவிடுமென்றே தெரியவருகிறது. பிரெஞ்சுக்காரர் ஒருவர் இது விஷயமாக ஆகஸ்டு மாதத்தில் எழுதியுள்ள கடிதமொன்றில் கீழ்கண்டவாறு காணப்பட்டிருந்தது:—

"ஒரு வருஷத்திற்கு முன்பு 80-சத விகிதம் பிடேனைப் பின்பற்றினோம். தற்சமயத்தில் யாவரும் விரோதமாகவே இருக்கிறோம்."



## குழப்பம் வலுக்கிறது.

"அதே மாதத்தில் பிடேன் சொல்லும்போது தனது செல்வாக்குக் குறைந்து வருகிறதாகவே காணப்படுகிறது" என்றான்:—

"பிரெஞ்சுக்காரர்களைப்பற்றி பலவிஷயங்கள் தெரியவருகின்றன. பிரான்ஸில் சில பாகங்களில் குழப்பம் ஏற்பட்டுவருகிறதாகத் தெரிகிறது. எங்கும் அரசாங்கத்தைப்பற்றி சந்தேகமே உண்டாகிறது. எனது அரசாங்க அதிகாரத்தையே சிலர் மறுக்கின்றனர்.............." என்றான்.

ருஷ்யத் தொந்தரவுகளால் ஏதோ கொடுமை சம்பவங்கள் நடந்ததாக ஜெர்மன் பிரசாரம் நடந்துவந்தது. அக்டோபர் ௴ 5௳ லியான்ஸில் பால்மரியன் என்பவன் ருஷ்யர்களைக் கண்டித்து ஒரு சொற்பொழிவைச் செய்தான். எதிரி நாட்டு ரேடியோவைக் கேட்கக்கூடாதென்று சொல்லிவிட்டு மார்ஷல் டிமோஷென்கோ அடைந்துவரும் வெற்றிகளைப்பற்றியும் சொன்னான். "எதிரி நாட்டு ரேடியோ ஒலிபரப்புகளைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது திடீரென்று பின்கண்ட செய்தி ஒலிபரப்பப்பட்டால் என்ன நேருமென்று பாருங்கள். 'போலந்திற்குள் ருஷ்யச் சைனியம் புகுந்தது. ஜெர்மனியிலும் பிரவேசித்தது. பிரான்ஸிலும் நுழைந்தது!'?" இச்செய்தி உடனே ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டது.

## இதாலியரை பிரெஞ்சுக்காரர் வெறுக்கின்றனர்.

பிரான்ஸிலிருந்து வெளிவரும் கடிதங்களையும் சில அறிக்கைகளையும் பார்த்தால் விஷி பிரான்ஸில் 75 சத விகிதமும், ஆக்கிரமித்த பிரான்ஸில் 90 சத விகிதமும் அச்சுநாடுகளுடன் ஒத்துழைக்க மறுக்கிற விஷயம் நன்றாகத் தெரியவருகிறது. இதாலியப் பத்திரிகைகளும் இதை அனுசரித்தே செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

ஜியார்னே டி இதாலியா என்ற பத்திரிகையில் செப்டம்பர் மாதத்தில் பின்கண்ட வியாசம் பிரசுரிக்கப்பட்டிருந்தது:—

"சென்ற வருஷத்தின் முடிவில் நம்மைப் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பிடிக்கவில்லையென்று நிச்சயம் சொல்லமுடிந்தது. தற்போது நம்மை அவர்கள் வெறுக்கின்றனர் என்றே சொல்லலாம்".

அதே பத்திரிகையில் பின்கண்ட விஷயமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"பல பிரெஞ்சுக்காரர்கள் பிரிடனிடம் விச்வாசமாகவே இருக்கின்றனர். ஜெர்மன் ஆட்சியை நிராகரிப்பதற்கும், ஜெர்மன் அரசாங்கத்தின் செல்வாக்கைக் குறைப்பதற்கும், 'பிரிடன் அடையப்போகும் வெற்றியைத்தான்' எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்".

## நல்ல உதாரணம்.

முன் சொல்லப்பட்டது இதாலியரின் அபிப்பிராயம். ஜெர்மானியர் சொல்லுவதை கவனிப்போம். இதாலியரைப்போல் பகிரங்கமாக ஜெர்மானியர் சொல்லமாட்டார்கள். இருந்தாலும் வான் ஸ்டூல்ப்நாகலும் அவனது கீழ்தர உத்தியோகஸ்தர்களும் பலவிதமான அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர். ஜெர்மன் டெலிபோன் கம்பிகளை அறுத்ததற்காக அபராதம் விதிக்கப்பட்டது. ஜெர்மன் ஆபீஸர்களையும், சிப்பாய்களையும் அடித்துத் துன்புறுத்தியதற்காக ஒரு குற்றமும் அறியாதவர்கள் கொலை செய்யப்பட்டனர். நாஸிகளின் அதிகாரம் ஒன்றையும் மீறக்கூடாது. உதாரணமாக ஜெர்மன் ஆபீஸர்களும், துருப்புகளும் வீதியில் போய்க்கொண்டிருக்கும்போது அசுத்தம் செய்யக்கூடாதென்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

ஜெர்மானியரைக் கேலிசெய்தால் 500-பிராங்க் அபராதம். அதட்டினால் 5-வருஷம் தண்டனை. இவ்வித உத்தரவுகளைப்போடும் சந்தர்ப்பத்திலிருந்தே நாஸிகளுக்கு மறைமுகமான எதிர்ப்பு இருக்கிறதென்று தெரியவருகிறது.

மேலும் நாஸிகளை எதிர்க்கும் சில செய்திகளும் கிடைத்திருக்கின்றன. ஆறு மாத காலத்திற்குள் மூன்று தடவை ரூவன் நகரிலுள்ள ஸப்ளைக் கிடங்குகள்

தீ மூட்டப்பட்டன. இதற்காக அப்பட்டணம் பூரா 60 லக்ஷம் பிராங்க் அபராதம் விதிக்கப்பட்டது. வெர்ஸெயல்ஸில் ஆகஸ்டில், லவால், டீட் என்ற இருவர்களின் பேரில் பால்கோலே என்பவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். இதற்கு கலகம், துரோகம், சூழ்ச்சி, ஆயுதங்கள் வைத்துக்கொண்டது முதலிய குற்றங்களுக்காக 61 பிரெஞ்சுக்காரர்கள் கொலை செய்யப்பட்டனர்.

### நுண்ணறிவு.

ஆனால் ஜெர்மன் சிப்பாய்களை ரகசியமாகக் கொன்றதாலேயே பிரான்ஸ் ஸ்வதந்திரமடைய முடியுமா என்று யோசிக்கவேண்டும். இந்த சமயத்தில் நிராயுதபாணிகளாக இருக்கும் பிரெஞ்சுக்காரர்களைக் கொல்லுவது நாஸிகளுக்கு சுலபம். சென்ற அக்டோபர் மாதத்தில் ஜெனரல் டிகால் பிரெஞ்சு மக்களுக்கு லண்டனிலிருந்து பின்கண்ட செய்தியை ஒலிபரப்பினார்:—

"தற்போதய நிலையில் ஜெர்மானியரைக் கொலை செய்யாதீர்கள். வெளியில் இருந்து சைனிய உதவி வரும்போது நீங்களும் அத்துடன் சேர்ந்துகொள்ளலாம். அதுவரை பொறுமையுடனும், தயாராகவும், தீர்மானத்துடனும் இருங்கள்."

இவ்விஷயம் ரகசியமாகப் பிரான்ஸில் பலபத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது, அதில் லிபர்டி என்ற பத்திரிகையை 5 லக்ஷம் பேர்கள் வாசிக்கின்றனர். அதில் "பூரா பலம் பெறுவதற்குக் கலகம் செய்யவேண்டாம். எதிரி இவைகளை கவனித்துவிடுவான்" என்றிருந்தது.

பொதுவாகவே பின்கண்ட விஷயம்தான் எங்கும் பரவியிருந்தது. "எதிரிக்கு அற்பமான தொந்தரவுகளை விளைவித்து நாம் பயந்து ஓடவேண்டாம். பிரான்ஸிலிருந்தே தப்பி ஓடி டிகாலுடன் சேர்ந்துகொள்ளுவோம். அப்போது நமக்கு ஆயுத பலம் கிடைக்கும். அதைவைத்துக்கொண்டு எதிரியுடன் சமமாக சண்டை செய்வோம்." இந்த மனப்பான்மைதான் நேசநாடுகள் போட்டிருக்கும் திட்டத்திற்குச் சாதகமானது.

ஆனால் பிரான்ஸிலிருந்தும் சுலபமாகத் தப்பிவிடமுடியாது. ஏனென்றால் ஜெர்மானியரின் உத்தரவன்னியில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு சுலபமாய் போகமுடியாது. உதாரணமாக பாரிஸில் கொஞ்ச நாட்களுக்குமுன்பு இங்கிலாந்திற்குத் தப்பிப்போகிறவர்களுக்கு உதவுவதாக ஒரு பிரெஞ்சு தம்பதிகள் கைதி செய்யப்பட்டிருந்தனர். 965 இளைஞர் தப்பிச்சென்ற பிறகே இவ்விஷயம் நாஸிகளுக்குத் தெரியும்.

### "பிரான்ஸ் ஒரு சண்டையில் தோற்றது ... ... ..."

தங்கள் சொந்த ஊரிலிருந்துகொண்டு நாஸி சிப்பாய்களைக் கொலைசெய்தால் அவர்கள் கைதி செய்யப்படுவார்கள். ஆனால் வெளிநாடுகளிலிருந்து விமானம் முதலிய உதவிகளைக் கொண்டுவந்து குண்டுகளைப்போட்டு தப்பிச் சென்றுவிடலாம். பிரெஞ்சுக்காரர்கள் பாம்பர் விமானங்களிலேறிக்கொண்டு ஜெர்மனியில் குண்டுகளைப்போட்டு வருகின்றனர். டாங்கிப்படையினராகவும், காலாட்படைகளாகவும் லிபியா யுத்தத்தில் ஈடுபட்டு இதாலியரையும் ஜெர்மானியரையும் எதிர்க்கின்றனர். பஸிபிக்கிலுள்ள பிரெஞ்சுத் தீவுகளிலிருந்துகொண்டு ஜப்பானியரையும் தாக்குகின்றனர்.

சீரான சைனியத்தில் சேர்ந்துகொண்டு எதிரியுடன் சண்டைசெய்வதே நலம். அப்படியில்லாமல் தீவிர தேசாபிமானம்கொண்டு ஜெர்மானியரை ரகசியமாக அமுக்குவது பயன்படாது.

"ஒரென், ஸிரியா" முதலிய இடங்களில் ஜெர்மானியர் வெற்றிபெற்றதைச் சுட்டிக்காட்டும் நாஸிப் பிரசாரத்திற்குப் பதிலாகவும், பிரான்ஸை பிறர் தோற்கடிக்கப்பட்ட நாடென்று சொல்லப்படும் பிடேன் மொழிகளுக்கும் பதிலாக டிகால் சொன்ன வார்த்தைகளை யாவரும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். பிடேன் அவமானகரமாக சமாதானம் செய்துகொண்ட தருணத்தில் டிகால் சொன்னார்.

"ஒரு சண்டையில் பிரான்ஸ் தோற்றிருக்கிறதே தவிர, யுத்தத்தை இன்னும் கைவிடவில்லை".

# வார யுத்தச் செய்திகள்.

## 25—4—42-லிருந்து 1—5—42-வரை.

**நற்செய்தி.**—விசாகப்பட்டணத்தில் தற்போது இருக்கும் நிலைமையைப் பரிசீலனை செய்யும்போது கலெக்டர் மிஸ்டர் C. H. மாஸ்டர்மான் பின்கண்ட விஷயத்தைத் துவக்கிக் காட்டியிருக்கிறார்:—

"இந்த நகரம் சம்பந்தப்பட்ட வரையில் நிலைமை மிகத்திருப்திகரமாக இருக்கிறது. இதற்குமுன் நடந்த படையெடுப்பின்போது வங்காளக்குடாக் கடலில் விமான மேற்றிய கப்பல்களிலிருந்துகொண்டே தாக்குதல் ஏற்பட்டது. அதற்கு உதவியாக கப்பற்படையும்கூட வந்தது. இவையாவுக்கும் கொழும்பிற்கு அருகில் ஏற்பட்ட சேதத்தின் பயனாக சிங்கப்பூருக்குக் கிழக்கே சென்றுவிட்டன. இத்தகவல் எனக்கு சேனாபதி வேவலிடமிருந்து கிடைத்தது.

அந்த ஜப்பானிய விமானங்கள் மறுபடி திரும்பி வரமாட்டா. ஏனென்றால் பஸிபிக் படையை பலப்படுத்துவதற்கு எடுத்துச் செல்லவேண்டியிருக்கும். அமெரிக்கக் கப்பற்படையிடமிருந்து ஜப்பானியக் கப்பற்படைக்கு பயம் ஏற்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் ஜப்பானியர் இங்கே தைரியமாக வரமாட்டார்கள். அப்படி வந்தாலும் நாம் மூன்று வாரங்களுக்கு முன் இருந்ததைவிட அதிக பலம் பெற்று தயாராக இருக்கிறோம். இனி என்ன நேர்ந்தாலும் இந்தியக் கடற்கரைக்கு விமானம், கடல், தரை மூலமாக பயம் குறைந்துவிட்டது.

**பர்மா.**—இங்கே இருக்கும் நிலைமையைப் பற்றிய தகவல்கள் சரிவரக் கிடைக்கவில்லை. ஐராவதி, ஸிட்டாங், கரென்னி என்ற மூன்று போர் முனைகளிலும் ஒரு சமயத்தில் ஜப்பானியத் தாக்குதல்கள் நேரும்போலிருக்கிறது. முதலாவதாக பிஞ்சாங் நதிக்கரையில் சீனர்கள் தடைசெய்திருக்கின்றனர்; இரண்டாவதாக டாக்டனுக்கு அருகில் பெரிய சண்டை நடக்கிறது. மூன்றாவதாக லியோகவ்விலிருந்து டௌங்கியிவரையில் ஜப்பானியர் முன்னேறியிருக்கின்றனர்.

டௌங்கியைப் பிடித்ததும் தெற்கு நோக்கி சீனர்கள் முன்னேறியிருக்கின்றனர். ஹிஸ்பாவை (Hsipaw)ப் பிடித்து மாண்டலே—லாஷியோ இருப்புப் பாதையைப் பிடிக்க எதிரி முயற்சிக்கிறான்.

**தென்மேற்கு பஸிபிக்.**—சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி லாஷியோ காலி செய்யப்பட்டது. லாயி, போகன்வில்லி என்ற இடங்களில் நேசதேசத் தாக்குதல் கடுமையாக நிகழ்ந்திருக்கிறது. மோர்ஸ்பி, துலகி, டார்வின் முதலிய பட்டணங்களில் எதிரியின் குண்டுவீச்சு ஏற்பட்டிருக்கிறது. காரிஜிடாரில் எதிரித் தாக்குதல் மட்டுப்பட்டிருக்கிறது. படேய் இன்னும் எதிரியைத் தடுத்து வருகிறது.

**நியூஸிலாந்தும்,** பிஜி தீவுகளும் தனிப்பட்ட அமெரிக்கப் படையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியத் தலைவர்களுடன் இது கலந்துகொள்ளும்.

ஏப்ரல் 18உ ஜப்பானைத் தாக்கச்சென்ற அமெரிக்க விமானங்கள் ஸைபீரியாவில் இறங்க நேர்ந்தது. ஆனால் ஸர்வ தேசச் சட்டங்களின்படி காவலில் வைக்கப்பட்டிருக்கின்றன.

**ருஷ்யா.**—சகதியும் வெள்ளமும் இருந்தாலும் இங்குமங்கும் சில சண்டைகள் நடந்திருக்கின்றன. கலினின், ஸ்மொலென்ஸ்க் என்ற இடங்களில் எதிரித் தாக்குதல்கள் திருப்பியடிக்கப்பட்டன. மர்மான்ஸ்கில் எதிரி குறுப்பு எதிர்ப்புகள் பூரா வீணாயின. பின்லாந்தில் ருஷ்யத் தாக்குதல் பலமாக இருக்கிறது. ஸ்டாராயா ரூஸா, நோவோகரோட் இவைகளைத் தவிர இல்மன் ஏரிப் பிரதேசம் பூரா ருஷ்யர் வசத்திலிருக்கிறது.

**லிபியா.**—சிதோஷ்ண நிலை கெடுதலாக இருந்தாலும் பிரிடிஷ் தாக்குதல் காவல் புரியும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறது. ஏப்ரல் 26௳ எதிரி பின் வாங்க வேண்டிவந்தது. மால்டா பேரில் மறுபடியும் தாக்குதல் நிகழ்ந்தது. அலெக்ஸாண்டிரியா, ஸூயஸ்பேரிலும் குண்டுவீசப்பட்டது. ஸிஸிலியிலும், லிபியாவிலுமுள்ள எதிரி தளங்களில் பிரிடிஷ் விமானங்கள் குண்டுவீசின.

டொப்ரூக்கில் ஏழுமாத காலமாகக் காப்பாற்றிவந்த ஆஸ்திரேலியப்படைக்கு பதிலாக தென் ஆபிரிக்கப்படை வந்திருக்கிறது.

**பிரிடிஷ் விமானத்தாக்குதல்.**—விமான இலாகா மந்திரி ஸர் ஆர்ச்பால்டு ஸின்கிளர் புதன்கிழமை யன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எதிரியின் ராணுவ லக்ஷியங்களைத் தாக்கும் விஷயத்தில் பிரிடிஷ் அரசாங்கத்தார் ஒருவித மாறுதலையும் செய்யவில்லை. இவ்விதம் எதிரியின் பலத்தையும், யுத்த தொழிற்சாலைகளையும், போக்குவரத்துகளையும், ராணுவக் கிட்டங்கிகளையும் தாக்குவதுதான் நோக்கம்.

பால்டிக் கடலில் பனி உருக ஆரம்பித்துவிட்டது. வட ருஷ்யா, பின்லாந்து, நார்வே, முதலிய இடங்களிலுள்ள சேனைக்கு ஸப்ளை அனுப்பவும் ஸ்வீடனுடைய இரும்பு மண் போக்குவரவு முதலியவைகளுக்குப் லாயக்காக லூபெக்கும், ரோஸ்டாக்கும் இருக்கின்றன.

மேலும் நீர்மூழ்கி மானுபிகளுக்கும், தொழிற்சாலை சாமான்களின் வியாபாரத்திற்கும் லூபெக் லாயக்கானது. ரோஸ்டாக்கில் ஹீங்கல் விமானங்கள் கட்டப்படுகின்றன.

போட்ட திட்டப்படி ரோஸ்டாக்கில் நான்கு தடவை குண்டுகள்வீசப்பட்டன. இவைகளின் பயனாக அப்பட்டணத்திலிருந்த தொழிற்சாலைகள் யாவும் நாசமாயின என்று நேரில் பார்த்தவர் மூலம் தெரிகிறது. டிரான்ஜம், கீல், இவைகளும் ஏப்ரல் 28௳ தாக்கப்பட்டன. மர்மான்ஸ்க் வழியாக ருஷ்யாவிற்கு நேசதேச ஸப்ளை போகும் பாதையில் டிரான்ஜம் இருக்கிறது. இது ஜெர்மானியரின் முக்கிய கப்பற் தளமாக இருக்கிறது.

இங்கிலாந்தில் பாத், எக்ஸிடர், நார்விச் முதலிய இடங்களில் நாஸி விமானங்கள் குண்டுகளை வீசின. இவைகளில் ஒன்றுகூட ராணுவ லக்ஷியங்களில்லை. பொதுஜனங்களின் வீடுகளும், ஞாபகச் சின்னங்களும், இன்னும் சில கலைச்சின்னங்களும்தான் சேதமாயின.

**பலவகைப்பட்டவை—1. யூகோஸ்லாவியா.**—யூகோஸ்லாவிய தேசாபிமானிகளுக்கும், ஜெர்மன் துருப்புகளுக்கும் சண்டை நடந்தது. ஸோகோலோவாஸ், ரகடிஸ், போலியோஸி மலை முதலிய இடங்களில் கடுமையான சண்டைகள் நடக்கின்றன.

2. **இதாலி.**—இதாலியில் பஞ்சமும் கோபமும் அதிகரித்திருக்கிறது. விசேஷக் கூட்டத்தை முன்னிட்டு முஸோலினி தனது ஆட்களை அழைத்திருக்கிறார். பெர்னி, போனஸ்ஐயர்ஸ் என்ற இடங்களிலிருந்து கிடைத்த செய்திகளைப் பார்த்தால் இதாலியில் பாஸிஸ்டு கக்ஷி கலைந்து முஸோலினியும், கவுண்டு கயானாவும் பதவியிழக்கப்போவதாயும், போடக்ஸியோ மேற்பதவிக்கு வந்து சமாதானம் செய்துகொள்ளப்போவதாயும் பிரஸ்தாபப்படுகிறது.

3. **நார்வே.**—நாஸிக்கொள்கைகளின்படி படிப்புச் சொல்லிக்கொடுக்க மறுத்ததற்காக 1,100 உபாத்தியாயர்கள் கைதி செய்யப்பட்டனர். 500-பேர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளனர்.

4. **சைனா.**—பிரதிநிதிகளை மாற்றிக்கொள்ளும் ஜிரேக ஒப்பந்தத்தை எகிப்துடன் செய்துகொண்டிருக்கிறது.



5. **பிரான்ஸ்.**—லவால் பதவிக்கு வந்தபிறகு மறுபடி ரகசிய சூழ்ச்சிகளும் கலகங்களும் ஆரம்பமாகியிருக்கின்றன. ஜெர்மன் சிப்பாய்களும் உத்தியோகஸ்தர்களும் தாக்கப்படுகின்றனர்.

ஏமீன்ஸ்—செர்பர்க் ரயில்வண்டி ஜெர்மன் துருப்புகளை ஏற்றிச்சென்ற சில சம்பவங்களும் கவிழ்ந்த சில நாட்களுக்குப் பின்னர் பாரிஸ் பிரதேசத்தில் என்ற இடத்திலும், நேர்ந்திருக்கின்றன. பெதுனுக்கு அருகில் லில்லெல்ஸ் என்ற இடத்திலும் ஜெர்மன் பியிலென்ஸ், இவைகளுக்கு அருகில் மெரிகோரு துருப்புகள் தாக்கப்பட்டன.

பாஸ்டிகலே, நார்ட் என்ற இடங்களில் தொழிற்சாலைகளும், ரயில்வே தண்டவாளங்களும், கேபிள்களும் தடுக்கப்படுகின்றன.

ஆக்கிரமித்த பிரான்ஸ் பூராவும் ஜெர்மானியரால் விரும்பப்பட்ட உணவுகள் அழிக்கப்படுகின்றன.

பாரிஸ் நகரிலேயே அதிகக்கலகம் ஏற்பட்டிருக்கிறது. 500-பேர்கள் ஒவ்வொரு வாரமும் கைதி செய்யப்படுகின்றனர். ஒரு வருஷகாலமாக பொது மக்களின் வீடுகளில் 12,000-தடவை போலீஸ்காரர்கள் பரிசோதனை செய்தனர்.

விஷி பிரான்ஸில் பொதுவுடமைக் கக்ஷியினர். என்று சொல்லப்பட்டு 2,000-பேர் கைதி செய்யப்பட்டனர். மார்ச்சோடு முடிவாகும் ஆறுமாத காலத்தில் 230-ரகசிய கலகங்கள் நேர்ந்ததை விஷி அரசாங்கமே ஒப்புக் கொள்ளுகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **20—4—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ரோந்து இங்கிலீஷ் கால்வாயில் (English Channel). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.-ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | | 11 விமானங்கள். | 31 விமானங்கள் |
| | **கூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஸலாமா (Salamaua). | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**—(அமெரிக்க் பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பனேய் (Panay). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **21—4—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், இன்னும் இதர லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi), டெர்னு(Derna), மார்டுபா(Martuba), டிமிமி (Timimi) பிரதேசங்களில். | | | |
| | மோட்டார் போக்குவரத்து.—ஜடபாயா (Jadabaya) ரஸ்தாவில். | | | |
| | விரோதி சாமான் கப்பல்.—ஸிரெனைகாவுக் (Cyrenaica) கருகாமையில். | | | 1 விமானம். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 15 விமானங்கள். | 32 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) ஜப்பானிய சைனியங்கள்.—முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| **22—4—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—செர்பர்க் (Cherbourg) பிரதேசத்தில். | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—லெஹாவர் (Lehavre). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ரைன்லாந்து (Rhineland). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | காவல்புரிதல்.—ஸிரெனைகா (Cyrenaica)வில். | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—காமிஸோ (Comiso). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—ராபல் (Rabaul). | | | |
| **23—4—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—பால்டிக் துறைமுகம்—ரோஸ்டாக் (Rostock). | இடிந்து போனவைகள். | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—4—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | 2 விமானங்கள். |
| | விரோதி மோட்டார் படை, சைனியம், உத்தியோகஸ்தர்கள் முகாம்செய்திருக்கும் இடங்கள்.—ஸிரெனைகா(Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | 4 விமானங்கள். | |
| | விமான நிலயம்.—காமிஸோ (Comiso). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | 11 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.-போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ், விமானங்களால்). | | | |
| | கப்பல்கள், சைனிய வாஸஸ்தலங்கள், பண்டக சாலைகள், போராரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு— பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—பர்மா (Burma)வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| **24—4—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் கட்டுமிடங்கள், இன்னும் மற்ற லக்ஷியங்கள்—பிளஷிங் (Flushing)கிலுள்ள கப்பல்துறைகள். | | | |
| | விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—ஹின்கேல் (Heinkel)லிலுள்ள விமானத் தொழிற்சாலைகள்—ரோஸ்டாக் (Rostock)கிலுள்ள நெப்டியூன் (Neptune), கப்பல் கட்டுமிடங்கள். | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | கப்பல்துறைகள்—டங்கர்க் (Dunkirk), பிரான்ஸ் (France) ஹாலந்து, பெல்ஜியம் இவைகளிலுள்ள தொழிற்சாலைகள். | மூழ்கடிக்கப்பட்டது. | 3 விமானங்கள். | |
| | விரோதி சாமான் கப்பல்—நார்வே (Norway)க்கருகாமையில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Bengbazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | 10 விமானங்கள். | 68 விமானங்கள். |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்—போராரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கோயபாங் (Koepang). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—4—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—செர்பர்க் (Cherbourg), டங்கர்க் (Dunkirk) லெஹாவர் (Lehavre). | | | |
| | தொழிற்சாலை—கலே (Calais). | | | |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்—அபிவில்லி (Abbeville). | | 16 விமானங்கள், | 3 விமானங்கள். |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசங்கள்—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போரரங்கம் முழுவதிலும். | | 5 விமானங்கள். | 36 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—லே (Lae). | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான தளம்—பொகானிவுலி (Bougainuille). | | | |
| **26—4—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ரோஸ்டாக் (Rostock) கிலுள்ள ஹின்கெல் தொழிற்சாலைகள். | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| | கப்பல் துறைகள்—டங்கர்க் (Dunkirk). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான தளங்கள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா Libya**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | துறைமுகம்—பெங்காஸி Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—நியூ கினி (New-Guinea), நியூ பிரிடன் (New Britain). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராபல் (Rabaul). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **21—4—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |
| **22—4—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 14 விமானங்கள், 21 முதல் 23 ஏப்ரல் வரை. | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**-(ஜப்பானிய விமானங்களால்) | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்) | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம்.—(Moresby). | | | |
| **23—4—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | சமுத்திரக்கரையோரமுள்ள ஜில்லாக்கள்.-தெற்கு இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கரிஜிடார் (Corregidor) | | | |
| **24—4—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கடற்கரைப் பிரதேசங்கள்.-தென்மேற்கு இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம்.(Moresby) | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மாண்டலே (Mandalay). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**25—4—42.** (சனிக்கிழமை).

**பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).
இரவில்—சில இடங்கள்.—மேற்கு, தெற்கு, வடகிழக்கு இங்கிலாந்து (England).

**மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).
மால்டா (Malta).

**தூரக்கிழக்கு-ஆஸ்திரேலியா** (Australia)—(ஜப்பானிய விமானங்களால்).
டார்வின் (Darwin) துறைமுகம்.

**26—4—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.)
இரவில்—ஒரு பட்டணம்.—மேற்கு இங்கிலாந்து (England). 2 விமானங்கள்.

**மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்)
மால்டா (Malta).

**தூரக்கிழக்கு-நியூ கினி** (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).
மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**27—4—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன்** (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).
இரவில்:—ஒரு பட்டணம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). சொற்பச்சேதம்.

**தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா** (Australia)—(ஜப்பானிய விமானங்களால்).
டார்வின் (Darwin)—துறைமுகம்.

**மத்தியதரைக்கடல்** (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்).
மால்டா (Malta).

---

# யுத்தக் குறிப்புகள்.

**அமெரிக்காவும், இந்தியாவும்.** அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டு தனது பிரதிநிதியான கர்னல் லூயி ஜான்ஸனின் மூலமாக அனுப்பிய நற்செய்தி இப்பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கத் துருப்புகள் ஏற்கனவேயே இந்தியாவிற்கு வந்திருக்கின்றன. இன்னும் வந்துகொண்டும் இருக்கின்றன.

இந்தியாவை முக்கிய தளவாடசாலையாகச் செய்துவிடவேண்டுமென்று ரோஜர் கமிட்டியும், கிழக்கு நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட ஸப்ளை கமிட்டியும், சாமான்களை விலைக்கு வாங்கும் கமிட்டியும், முடிவு செய்த தீர்மானங்களின் பயனாக அமெரிக்க இன்ஜினியர்களின் கோஷ்டியும் வந்திருக்கிறது.

இந்தியாவில் அமெரிக்கர்களுக்கு வஞ்சகமான நோக்கங்கள் ஒன்றும் கிடையாது. இந்தியாவில் அமெரிக்கத் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து லாபம் சம்பாதிக்கவேண்டுமென்ற நோக்கமும் அவர்களுக்குக் கிடையாது. சாமான்களை அதிகமாக உற்பத்தி செய்யும் விஷயமாக அமெரிக்கா அடைந்த அனுபவத்தை இந்தியர்களுக்கும் கற்றுக்கொடுப்பதென்பதுதான் நோக்கம். இதற்காக சாமான்களையும் நிபுணர்களையும் அமெரிக்கா கொடுத்து உதவும். குத்தகைக்கடன் மசோதாப்படிக்கும் தேவைக்குத் தக்கவாறு இந்தியாவிற்கு சாமான்கள்வரும்.

**அமெரிக்காவும், யுத்தமும்.** இந்தியாவின் புராதனமான கலைக்கும், நாகரீகத்திற்கும் உகந்தவாறு அமெரிக்கா உதவி செய்ய முன்வந்திருப்பது ஸ்வதந்திரத்தை ஸ்தாபிப்பதற்காகச் செய்யப்படும் யுத்தத்தின் ஒரு தந்திரமாகவே ஆகும். ஏப்ரல்மீ 28உ ஜனாதிபதி ஒலிபரப்பும் போது சொன்ன வார்த்தைகள் எதிரிகளின் மனதில் பயத்தை உண்டுபண்ணியே இருக்கவேண்டும்.

"அமெரிக்க சண்டைக் கப்பல்கள் அட்லாண்டிக்கின் வடக்கு தெற்கு பாகங்களிலும், ஆர்டிக், மத்தியதரைக்கடல், பஸிபிக் முதலிய சமுத்திரங்களிலும் ஈடுபட்டிருக்கின்றன.

"தென் அமெரிக்கா, கிரீன்லாந்து, ஐஸ்லாந்து, பிரிடன், சமீபக்கிழக்கு மத்தியக்கிழக்கு, தூரக்கிழக்கு, இன்னும் பஸிபிக்கிலுள்ள தீவுகள் முதலியவைகளில் அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கிவிட்டன.

"பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளின் தற்காப்பிற்காக அமெரிக்க விமானங்கள் உதவிவருகின்றன.

நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா இன்னும் தேவையான இடங்களில் அமெரிக்க பாம்பர் விமானங்கள் யுத்தத்திலீடுபடும்.

"ஜப்பானியர் எவ்வளவு தடை செய்தாலும் சைனாவிற்கு விமானங்களும், யுத்த சாமான்களும் அனுப்பப்படும்."

வி வி வி வி வி வி வி

**ஹிட்லரின் பயமுறுத்தல்கள்.** ரூஸ்வெல்டு பேசியதற்கு நேர்மாறாக அதாவது தைரியமே இல்லாமல் ஹிட்லர் ஒரு சொற்பொழிவு செய்தான். இதுவரை பேசும் போதுள்ள தைரிய சின்னங்கள் ஒன்றும் காணப்படவில்லை. அடைந்ததோல்விகளையும் ருஷ்யாவில் தனக்கு ஏற்பட்ட கெடுதிகளையும் பற்றி அதிகமாகச் சொன்னான். இனிமேலும் சின்னங்கள் சாதகமாக இல்லையென்றும் தெரிவித்தான். வெற்றியைப்பற்றி ஒன்றும் அதிகம் குறிப்பிடாமல் மறுபடியும் மாரிகாலம் வந்துவிட்டால் என்னசெய்வதென்றுபயப்பட்டான். தனக்கு இன்னும் விசேஷ அதிகாரம்வேண்டுமென்றும், சோம்பேரிகளைத் தண்டிக்க தனக்கு உரிமைவேண்டுமென்றும் சொன்னான். ஒருக்கால் யாரையாவது பதவியிலிருந்து விலக்க நினைத்திருக்கிறான் போலும். மேலும் ஜெர்மனியில் நிலைமை திருப்திகரமாக இல்லாததால் அதிக அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு யாவரையும் அடக்க நினைக்கிறதாகவும் தெரிகிறது. ஹிட்லருக்கு அடங்காத சைனியங்கள் ஜெர்மனியில் கிளம்பி வருவதாக லார்டு லைமன் சந்தேகப்படுகிறார்.

வி வி வி வி வி வி வி

**விமானப் படையெடுப்புகள்.** போலோன், பிரன்வால், ஸெயிண்ட் நாஸேர் முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானப் படை குண்டுகளை வீசியது. பிரிடிஷ் விமானங்கள் வேகமாகத் தாக்கியதிலிருந்து எதிரி தயாராக இல்லையென்று தெரிகிறது. அட்லாண்டிக் கடல் பக்கத்தில், அதாவது ஐரோப்பாவின மேற்கே எதிரி ஒருவித தற்காப்பும் செய்து கொள்ளவில்லையென்றும் தெரிகிறது.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் விமானப் படையின் முன்னேறித் தாக்குதல்** மறுபடி பிரமாதமாக துவக்கப்பட்டிருப்பதாக நியூ யார்க் டெயிலி மிர்ரர் என்ற பத்திரிகை கூறுகிறது. இதுவே ஜெர்மனிக்கு எதிராகத் திறக்கப்பட்ட மற்றொரு போர்முனையாகும். ஐரோப்பாவிலுள்ள தொழிற்சாலைகளையும், கப்பல்களையும் கப்பல் கட்டுமிடங்களையும் இரவில் தாக்கி வந்தன. பகல் காலத்தில் எதிரியின் லுப்ட்வாபி விமானப்படையுடன் சண்டை புரிந்து ருஷ்யா, மால்டா, லிபியா முதலிய இடங்களுக்கு உதவிபோக விடாமல் செய்யப்பட்டது. விமானப்படைப்பகுதித் தலைவர் L. V. பிரேசர் சொல்லும் விதமாக 15 லக்ஷம் ஜெர்மானியர் ஓரிடத்திலேயே அடைபட்டுள்ளனர்.

**ஜெர்மனியும் ஜப்பானும்.**

குற்றத்தொழில் புரியும்போது நேசமாக இருக்குமே தவிர ஒரு நாடு முன்னுக்கு வந்தால் மற்ற நாட்டிற்குப் பிடிக்காது. அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் செய்திகளை கவனிக்கும்போது ஸ்டாக்ஹோமிலுள்ள ஜெர்மன் பிரதிநிதி பிரிடிஷ் பிரதிநிதியுடன் உறவு கொண்டாடுவதாகத் தெரிகிறது. இது வீண் ஆடம்பரமா ஞலும் சமாதானத்தை முன்னிட்டு செய்யப்பட்டதென்றே நினைக்கலாம். ஏன் னென்ருல் ஜப்பான் அடைந்துவரும் வெற்றிகள் ஜெர்மனிக்குத் திருப்தி அளிக்க வில்லை. ஜெர்மனியும் ஜப்பானும் கலந்து ஒரு பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொள்ளவில்லை. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளை இருநாடுகளும் கவர நினைக் கின்றன.

ஜெர்மனி தொடர்ந்து வெற்றிபெற்ருல் அது ஜப்பானுக்கும் பிடிக்கவில்லை. நாஸிகள் யுத்த தந்திரங்களை ஜப்பானியச் சிப்பாய்கள் கைப்பற்றுகின்றனர். மடகாஸ்கரை ஜப்பான் ஆதிக்கமடைவதை லவால் அங்கீகரிக்கவில்லை. ஆசியாவைத் தான் வைத்துக்கொள்வதாயும், ஆபிரிக்காவை ஜெர்மன் ஆக்கிரமித்துக் கொள்ள லாமென்றும் ஜப்பான் சொல்லிவிட்டது. 50,000 டன் எடையுள்ள பிரெஞ்சுக் கப்பல்களை ஜப்பான் வசப்படுத்திக்கொண்டது.

வி வி வி வி வி வி வி

**நேச நாடுகளின் தயாரிப்புகள்.**

ஜப்பானும் ஜெர்மனியும் என்ன திட்டங்களைப் போட்டிருந்தாலும் நேசநாடுகள் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா இம்மூன்று நாடுகளுக்கும் இடையிலுள்ள முக்கோண வடிவமுள்ள இந்து மஹா சமுத்திரத்தில் தற்காப்பு செய்து வருகின்றன. இம்முக்கோணத்தின் ஒவ்வொரு பக்கமும் சமார் 4,000 மைல் நீளமிருக்கலாம். மேற்கே மெடகாஸ்கர், நோஸாம் பிக் என்ற இடங்களைத் தவிரவும், கிழக்கே சிங்கப்பூரைத் தவிரவும் எல்லா பாகங்களும் பிரிடிஷாரின் வசமிருப்பதால் நன்ருக பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. மத்தியக்கிழக்குப் பக்கம் போகவொட்டாமல் ஜப்பானைத் தடுக்க பிரிடன் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஸிரியா, இராக், இரான் முதலிய நாடுகள் ஒற்றுமையுடன் இருக்கின்றன. ஆபிரிக்கத் துறைமுகங்களும், கப்பல்களுக்கு எண்ணெய் போடும் தளங்களும் பலப்படுத்தப்பட்டது. கேப்டவுன், ஸைமன் குடா, எலிசபெத் துறைமுகம், கிழக்கு லண்டன், டர்பான், மொம்பஸா, கொழும்பு, திரிகோணமலை, கொச்சி, பம்பாய், கராச்சி, மதராஸ், சல்கத்தா முதலிய இடங் களில் எதிரி வந்தால் அவஸ்தைப்பட வேண்டியதுதான். அதிகச் சேதம் எதிரிக்கு நேரும்.

வட ஆபிரிக்காவில் ரோமனுடன் போக்குவரவு செய்துகொள்ள லவால் உதவி செய்யலாம். ஆனல் பிரெஞ்சுப் போக்குவரவுகளை அமெரிக்கா தடுக்கும். பிரெஞ்சுத் தங்கத்தை பறிமுதல் செய்யும். பிரெஞ்சுப் பிரதேசங் களையும் ஆக்கிரமித்துக்கொள்ளும்.

ஜப்பானியப் பிரதிநிதிகள் ஐரோப்பாவில் பல இடங்களில் கூட்டம் கூட்டிப் பேசி வருவதற்கும் இதுதான் காரணமாக இருக்கலாம். முக்கியமாக மெடகாஸ் கரைப்பற்றித்தான் ஜப்பானியருக்குள்ள கவலையெல்லாம. நெருக்கடியான நிலைமைகளில் அமெரிக்காவும் பிரிடனும் சரியாக நடந்துகொள்ளும் இந்தோ- சைனுவை ஜப்பான் வசம் ஒப்படைத்தமாதிரி மறுபடி செய்யமுடியாது.

வி வி வி வி வி வி வி

**வெற்றி உணர்ச்சி.**

பின்கண்ட வியாசத்தில் பிரிடனுக்கு வெற்றியைப் பற்றியுள்ள உணர்ச்சியை லார்டு பீவர் புருக் அதிகம் போற்றியிருக்கிறார். அதைப்படித்தால் ஆச்சரியமாகக் காணப்படலாமே தவிர உண்மை அதுதான்.

"சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு நமது சிப்பாய்களைத் தவிர மற்ற யாவற்றையும் இழந்தோம், மறுபடி எல்லாவற்றையும் புதுப்பிக்கவேண்டி வந்தது. ஆயுதங்கள் துப்பாக்கி, ஏராளமான பீரங்கிகள், 50,000 வண்டிகள், டாங்கிகள், விமானங்கள், யாவற்றையும் இழந்தோம்.



"இத்துடன் நமக்குக் கிடைத்துவந்த விளைவுபொருள் பிரதேசங்களும், ஸப்ளைகளும் ஜெர்மனி வசமாயிற்று.

"அதிசமாக கப்பல்களை இழந்ததால், நமக்கு ஏற்பட்ட கெடுதி மிகவும் அதிகம். நார்வே, டன்கர்க் சண்டையில் 47 சண்டைக் கப்பல்கள் நஷ்ட மடைந்தன. நாசகாரிப்படையில் பாதிப் பழுதாயிற்று.

"இந்தக் கஷ்டங்களிலிருந்து நாம் மீளுவதற்குள் பிரிடன்மேல் விமானச் சண்டை துவக்கப்பட்டது. அந்தச் சண்டையின் ஆரம்பத்தில் 5 ரிஸர்வ் பைடர் விமானங்களே நமதுவசம் இருந்தன. புதிதாகக் கட்டியும் பழுது பார்த்தும், இதர தந்திரங்களாலும் இச் சண்டைக்குத் தேவையான விமானங்கள் ஸப்ளை செய்யப்பட்டன.

"ஒவ்வொரு மனிதனும் கடியாரங்களை கவனியாமலும், வேலை செய்யும் மணிக் கணக்குகளைக் குறிக்காமலும் அல்லும் பகலுமாக வேலை செய்தான்.

வி வி வி வி வி வி வி

**கிரேக்கர்களுக்கு உதவி**

"1941-ம் வருஷத்தின் வசந்தகாலத்தில் கிரேக்கர் களுக்கு நாம் உதவியளித்தோம். அவ்வித உதவி அளிக்கும்போது ஏராளமான கஷ்டங்கள் வருமென்று தெரிந்தும் கொஞ்சமும் பின்வாங்காமல் பிரதம மந்திரி உதவியளித்தார். ஏனென்ருல் அவர்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்று ஓர் நிர்ப்பந்தம் இருந்தது. அது பூர்த்தி செய்யப்பட்டது.

"பிறகு விஷயங்கள் வெகு மும்மரமாக நடந்தன. மத்தியக்கிழக்கில் 7 தனிப் போர்முனைகளில் பிரிடிஷ் சைனியம் 4 பெரும் சண்டைகளை செய்தது. ஆகவே 1940-ம், 1941-ம், இரண்டும் கடுமையான வருஷங்களாகும்.

"பிறகு ஜப்பான் சண்டை ஆரம்பமாயிற்று. தயார் இல்லாத சமயத்தில் மலேயாவிலும், சிங்கப்பூரிலும் நம்மை தாக்கினர்கள். அந்த சந்தர்ப்பங்களில் நாம் செய்த தவறுதல்களைப்பற்றி சொல்லிப்பயனில்லை. அந்தத்தவறுதல்கள் நேர்ந்த விஷயத்தைச் சொல்லியும் பயனில்லை. இனிமேல் நாம் ஜாக்ரதையாக இருப்பதுதான் நலம்.

வி வி வி வி வி வி வி

**ஆயுத உற்பத்தி.**

"இரண்டுவருஷ காலமாக யுத்தத்திற்குத் தேவையான எல்லாவிதமான ஆயுதங் களையும் உற்பத்தி செய்வதைப் பார்த்தாலேயே பிரிடனின் சாமர்த்தியம் நன்கு தெரியவரும். போட்ட திட்டத்திற்கு அதிகமாகவே சைனியத்திற்கு முஸ்தீப்பு கொடுக்கப்பட்டது.

"கடந்த ஆறுமாதங்களில் டாங்கிகள் இரட்டிப்பு மடங்கு உற்பத்தி செய்யப்பட்டன. 1 வருஷத்திற்கு 35,000 குண்டுகள் வீதம் உற்பத்தி செய்யப் பட்டன. பிரிடிஷ் க்ரூயிஸர்கள் வருஷத்தில் 300 நாட்கள் யுத்த வேலையில் ஈடுபட்டிருந்தன. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் 64 சண்டைக் கப்பல்கள் உள்பட 326 எதிரிக் கப்பல்களை சேதப்படுத்தி இருக்கின்றன. விமான மூலமாயும், கடலிலும் தாக்கப்பட்டு 52,50,000 டன் எடையுள்ள எதிரி வியாபாரக் கப்பல் களும், வர்த்தகக் கப்பல்களும், 3 பெரும் கப்பல்களும், 13 க்ரூயிஸர்களும், 35 நாசகாரிகளும், எவ்வளவோ நீர்மூழ்கிகளும் சேதமடைந்தன.

"பிரிடிஷ் விமானப்படை 10,000 அச்சு நாட்டு விமானங்களை அடித்தது. பிரிடிஷ் படையில் 5,000-விமானங்களே நஷ்டம்.

"சென்ற வருஷத்தில் 9,171 விமானங்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பப் பட்டன. 2,134 விமானங்களே பிரிடனின் உதவிக்கு வந்தன.

**மனித பலம்.** 14-வயது முதல் 64-வயது வரை உள்ளவர்கள் 3,30,00,000 இருக்கிறார்கள். இதில் 2-கோடி மக்கள் சைனியத்தில் சேர்ந்திருக்கின்றனர். சிறு குழந்தைகளுள்ள ஸ்திரீகளைத் தவிர மற்றவர்கள் 41-வயதுவரை யுத்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யவேண்டும். 30-வயதுக்குள் விவாகமாகாத ஸ்திரீகளும யுத்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யவேண்டும். 1918-ஐ விட தற்சமயத்தில் 3-மடங்கு ஸ்திரீகள் யுத்த சாமான்களைத் தயாரித்துவருகின்றனர். 25,000 ஸ்திரீகள் தரைப்படையில் சேர்ந்திருக்கின்றனர்.

"ஆகவே பிரிடிஷ் மக்கள் ஒருவித குற்றமுமில்லாமல், குறையுமில்லாமல் பாடுபட்டு வருகின்றனர். ஆனால் அரசாங்கத்தாரை குறைகூறுவதைப்பற்றி அவர்கள் குறைத்துக்கொள்வதில்லை.

"பக்குவமில்லாத ரொட்டிகளைத் தின்கிறார்கள். முட்டை சாப்பிடுவதை நிறுத்திவிட்டார்கள். ஆரஞ்சு முதலிய பழங்கள் கிடைப்பதில்லை. மருந்துக்குகூட அப்பிள் கிடைப்பதில்லை. இவ்விதமாக உணவு திட்டங்களை பூராவாகக் குறைத்துக் கொண்டிருக்கின்றனர். கிடைக்கும் சர்க்கரையை ருஷ்யர்களுக்கும், சாராயத்தை அமெரிக்கர்களுக்கும், தானியத்தை எகிப்து மக்களுக்கும், ரயில்வே இன்ஜின்களை பர்ஸியர்களுக்கும், தண்டவாளங்களை டாங்கி தொழிற்சாலைகளுக்கும் கொடுத்து உதவி புரிகின்றனர்.

"கால்சட்டைகளில் போடப்படும் பக்லிஸ்களையும், கைப்பொத்தான்களையும் அணிவதில்லை.

"பிரிடன் இவ்விதமாக எல்லாவித சந்தர்ப்பங்களுக்கும் லாயக்காக தயாராக இருக்கிறது. இவ்வருஷத்தில் கப்பல்கள் இரட்டிப்பு மடங்கு உற்பத்தி செய்யப்படும். இவ்விதம் செய்தால்தான் பிரிடிஷ் மக்கள் திருப்திகொள்வார்கள்.

வி வி வி வி வி வி வி

**லவால்.** தங்களுடைய காரியங்களைச் சாதித்துக்கொள்ள லவாலையும் நாஸிகள் கைக்குள் போட்டுக் கொண்டார்கள். பிரெஞ்சுத் தொழிற்சாலைகளையும் விவசாயத்தையும் ஜெர்மன் நன்மைகளுக்காக உபயோகப்படுத்தப்படுகின்றன. ஸ்டாக்ஹோமிலிருந்து ஏப்ரல் 27உட வந்த டாஸ் செய்தியின்படி மத்திய ஐரோப்பாவிற்கு பிரெஞ்சுத் தொழிற்சாலைகள் மாற்றப்பட்டன. பிரான்ஸில் விவசாயமே விருத்திசெய்யப்படுகிறது. இவ்விதமாக பிரெஞ்சு மக்கள் ஜெர்மன் தலைவர்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டிவந்தது.

ஸ்டிராஸ்பரோ—மார்ஸெயில்ஸ் இருப்புப்பாதை நாஸிகள் வசமாகிவிட்டது. இதன் உதவியால் ரோமனுக்கு ஸப்ளைகள் அனுப்பமுடிகிறது.

நாஸிகளுக்கு இணங்கி லவால் நடந்துவிடுவதால் அவனிடம் சில சௌகரியங்களைப்பெற முயற்சிக்கின்றனர். ஜெர்மனிபேரில் படையெடுப்பு நேர்ந்தால் பிரெஞ்சு மக்கள் நேச நாட்டுப்பக்கம் சேருவார்களென்று போலோன், ஸெயிண்ட், நாஸேர் முதலிய இடங்களைப் பிரிடிஷ் விமானங்கள் தாக்கியபிறகு தெரியவருகிறது. ஆகவே நெருக்கடியான நிலைகளில் கலகங்களேற்படாமல் லவால் பார்த்துக்கொள்ளவேண்டும்.

எதிர்பார்க்கும் விதமாக அந்நாட்டு மக்கள் ஜெர்மானியருக்குச் சாதகமாக இல்லை. லவால் பதவிக்கு வந்தபிறகு ருவானில் 80 பேர்களும், ஸெயிண்ட் நாஸேரில் 20 பேர்களும் கொலை செய்யப்பட்டனர். காவலில் ஆயிரம் பேர் வைக்கப்பட்டுள்ளனர். எங்கும் விளையாட்டு நிறுத்தப்பட்டது. சில ஜில்லாக்களில் ராணுவ ஆட்சி அமுலிலிருக்கிறது. 1940 டிஸம்பரில் லவாலை கைதி செய்த போலீஸ் அதிகாரி கைதி செய்யப்பட்டார். செய்தி இலாகாவில் சிலர் பதவியிழக்கலாம்.



இவ்வித முறைகளை எதிர்த்து ரயில்வே தண்டவாளங்களையும் ஜெர்மன் விமான தளங்களையும் பிரெஞ்சுக்காரர்கள் தாக்கிவருகின்றனர். இதற்காக பிரெஞ்சுக் கைதிகளை விடுவித்தும், ஆக்கிரமித்த பிரதேசத்தை மறுபடி ஸ்தாபித்தும், பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளை ஸ்வாதீனப்படுத்தியும் லவால் திருப்தி செய்யப்பார்க்கிறான். ஆனால் மறுபடியும் நாஸிகளுக்கே அடிமையாகப் போகவேண்டியிருப்பதால் பிரெஞ்சு மக்கள் திருப்திகொள்ளவில்லை.

---

## துரோகத்திற்கு முந்தின உதாரணங்கள் இருக்கின்றன.

## சமாதானம் செய்துகொள்ள ஜப்பானின் பிரயத்தனங்கள்.

('ஜப்பான் கிரானிகள்' முக்கிய பத்திராதிபர் டி. ஜெ. இவான்ஸ் என்பவர் எழுதியது)

டோகியோவில் சமீபத்தில் வெளிவந்த அரசியல் அறிக்கையில் முந்திய வழக்கப்படி உலக சமாதானத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் ஜப்பான் பிரிடனுடனும், யுனைடெட் ஸ்டேட்ஸுடனும் போர் துவக்கியதாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. ஜப்பானிய ஆக்கிரமிப்புகளை சமாதானத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்று அந்த நடவடிக்கைகளைச் செய்யத் தூண்டிவரும் அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஜப்பான் சமாதானம் செய்துகொள்ளுவதாக வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டு 1931-ல் மஞ்சூரியாவில் படையெடுத்தும், பிற்பட்டு ஷாங்கேயிலும் தாக்கிற்று. 1937-ல் சீனாவின் பேரில் போர் துடங்கினதும் இதற்கு ஒரு உதாரணம்.

அந்த அரசியலறிக்கையில் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமுமிருக்கிறது. அந்த அறிக்கையைத் தயாரித்தது ராணுவ கக்ஷியினர். அந்த அறிக்கையில் ஜப்பானியச் சக்ரவர்த்தி பின்வருபவைகளைச் சொன்னதுபோல் கண்டிருக்கிறது. ஜப்பானியச் சக்ரவர்த்தியும், அவர் தகப்பனாரும், அவர் பாட்டனாரும் முறையே கிழக்கு ஆசியாவில் சமாதானம் உண்டாக்கி ஒழுங்கு படுத்தி, உலகத்தில் அமைதி ஏற்பட பாடுபட்டார்கள். ஆனால் கிரேட் பிரிடனுக்கும், யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் ஏற்பட்டிருக்கும் அதிகார ஆசை கிழக்குப் பிரதேசத்தை அடிமைப்படுத்த ஏற்பாடுசெய்துவருகிறார்கள். இவ்விதம் செய்வதைத் தடுப்பதற்கு, ஜப்பானுக்கு அவர்களுடன் போர்செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதனால்தான் ஜப்பானியர்களும் மிகவும் அருவெருப்புடன் அவர்களுடன் போர் செய்து வருகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

### கொள்ளைக்கூட்டத்தாரின் முறைகள்.

பிரிடனுக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் அதிகார ஆசை இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது கவனருகமற்றது. உண்மையில் கிழக்கு ஆசியாவை நிலைநிறுத்துவதற்கும், உலகத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கும் ஜப்பான் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பார்வைக்கு அருவெருப்பை உண்டாக்குகிறது. மேலும் அது சொல்லிவருவது யாவும் வெறும் பாசாங்குதான்.

இப்பொழுது ஜப்பானியச் சக்ரவர்த்தியின் பிரக்யாதி பெற்ற பாட்டனார் 1868-ம் வருஷத்திலிருந்து 1912-ம் வருஷம் வரையில் அரசாட்சி செய்தார். அவர் பட்டத்துக்கு வந்த 6 வருஷங்களுக்கெல்லாம் பார்மோஸா தீவுக்கருகாமையில் ஏதோ ஒரு கப்பலுடைந்து தப்பி வந்தவர்களில் சிலரைக் காட்டு ஜாதியார்கள் தாக்கினார்கள். அக்கப்பலில் வந்தவர்கள் ஜப்பானியர்களோ என்னமோ சந்தேகமாகயிருந்தது. இதற்குள், சீனர்கள்தான் அம்மனிதர்களைத் தாக்கியதாக சொல்லிக்கொண்டு ஜப்பான் பார்மோஸா தீவுக்கு ஒரு சிக்ஷைப்படை அனுப்பித்தது. அந்தக் காட்டு ஜாதியார்கள் செய்த நடவடிக்கைகளுக்கு சீன அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுதளித்தது. பார்மோஸா தீவைப் பாதுகாக்க துருப்புகளை அனுப்பித்தது. பீகிங்கிலிருந்த பிரிடிஷ் மந்திரி குறுக்கிட்டு அந்த சமயம் போர் வராமல் தடுத்துவிட்டார்.

1875-ம் வருஷத்தில் கொரியன் கடல்களில் ஆழம் பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்த ஜப்பானியர்கள் சுடப்பட்டார்கள். இதற்காக ஜப்பான் கப்பற் படையைத் திரட்டி போர்செய்ய ஆரம்பித்தது. உதவியற்ற கொரியன் அரசாங்கமும் மன்னிப்புக்கேட்டுக்கொண்டது. இத்தகைய சிறந்த உடன்படிக்கையினால் ஜப்பானியரின் வர்த்தகத்திற்கு இரண்டு துறைமுகங்கள் கிடைத்தன.

## மாஜி பிரஸிடெண்டின் தலையீடு.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு ஜப்பான் ரின்கின்லை சேர்த்துக்கொண்டது. ஆனால் சீன அரசாங்கம் அந்தத் தீவுகள் தங்களுக்குக் கப்பங்கட்டும் ஸமஸ்தானங்கள் என்று பாத்தியம் கொண்டாடின. வாஷிங்டனில் பதவியை விட்டுவிட்டு தூரக்கிழக்கில் சந்தோஷமாகக்காலம் கழித்துவந்த மாஜி பிரஸிடெண்டு கிராண்ட் என்பவர் ஜப்பானுக்கு சிநேக முறையில் புத்திமதி சொல்லி யுத்தம் வராமல் தடுத்துவிட்டார். கிராண்ட் குறிக்கிட்டதினால் அந்தத் தீவுகளை ஜப்பான் சேர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளாமல் தாத்காலிகமாக நிறுத்தி வைத்தது.

1880-ம் வருத்திலிருந்து, 1885-ம் வருஷத்திற்குள் கொரியாவில் அதிக கலகம் இருந்தது. ஜப்பானிலிருந்து வந்தவர்கள் ஐந்தாம்படை வேலை செய்தார்கள். 1885-ம் வருஷத்தில் அந்த தீபகற்பத்தில் ஜப்பானுக்கும் சமஉரிமை உண்டென்று சீனா ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டது. இத்தகைய இரண்டு பேர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த காரணத்தினால் 1895-ம் வருத்தில் சீன-ஜப்பான் யுத்தம் ஆரம்பித்தது. சீனா தோல்வியடைந்ததினால் ஜப்பானுக்கு பாஸ்கடோர்ஸ் தீவுகளும், பார்மோஸாவும், லியோடங் தீபகற்பத்தின் ஆதிக்கமும் கிடைத்தன. ஆனால் ஐரோப்பிய வல்லரசுகள் குறிக்கிட்டதினால் சீனா 3 கோடி டீல்ஸ் நாணயங்கள் கொடுத்து அதன் பிரதானமான தேசத்தை சீனாவிடமே இருக்கும்படி செய்துவிட்டது.

## ஸைபீரியாவில் சமாதானம் ஏற்படுத்துவது.

1904-ம் வருஷத்தில் மஞ்சூரியாவில் போட்டிபோட்டுக்கொண்டு சமாதானத்தை விரும்புவதாகச் சொல்லும் ஜப்பான், ருஷ்யாவுடனும் போர்செய்தது. அடுத்தவருஷத்தில் சீனப்பிரதேசம் ருஷ்யாவிடம் குத்தகைக்கு இருந்ததை ஜப்பான் எடுத்துக்கொண்டுவிட்டது. ஏற்கனவே ஜப்பான் தன் பிரதேசங்களை விஸ்தரிக்கச் செய்யப் போட்டிருக்கும் திட்டங்களின்படி நாடுகளைச் சேர்த்துக் கொண்டுவருவது, கிழக்கு ஆசியாவின் நிலைமையை நிலைநிறுத்துகிறதாம்.

இப்பொழுது ஜப்பான் அரசனின் பாட்டன் அரசாட்சி காலத்தில் உலக சமாதானத்திற்காக ஜப்பான் செய்த நடவடிக்கைகள் யாவும் மேற்சொல்லியபடிதான். இப்பொழுதுள்ள அரசனின் தகப்பனார் பட்டத்துக்கு வந்த இரண்டு வருஷம் கழித்து அப்போது கிரேட் பிரிடனுடன் ஜப்பான் நேசதேசமாக இருந்ததால், ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தில் நேசதேசத்தார்களுடன் சேர்ந்தது. இதுவும் ரொம்பவும் யோஜனையின்பேரில்தான் ஏற்பட்டது. ஆனால் ஜப்பான் நேசதேசத்தார்களுடன் சேர்ந்ததின் முக்கியமான காரணம் ஆசியா கண்டத்தில் பிரதேசங்களைக் கைப்பற்றியதற்குப் போட்ட திட்டங்களில் ஜெர்மனிக்குக் குத்தகைக்கு விடப்பட்டு, ஜெர்மானியர்கள் வசித்துவரும் ஷான்டே பாயங்கிலுள்ள சீனப்பிரதேசத்தை தாக்குவதற்காகத்தான். அவர்கள் லக்ஷியத்திற்கு அநேக மைல்களுக்கு அப்பால் ஜப்பானியத் துருப்புகள் இறங்கின. இது 1914-ல். 1922-ம் வருஷத்திற்குப் பிறகுதான் பிரிடனும், அமெரிக்காவும் நிர்பந்தம் செய்ததின்பேரில் ஆக்கிரமித்த பிரதேசத்தை சீனாவுக்குத் திருப்பிக் கொடுக்க ஜப்பான் வேண்டா வெறுப்பாய் ஒப்புக்கொண்டது.

1918-ல் ஆங்கில-அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்துகொண்டு ஸைபீரியாவில் ஜப்பானும் சண்டைசெய்தது. ஆனால் அதே சமயம் ஜப்பானும் ஐந்தாம் படை வேலைசெய்தது. இந்தப் படையெடுப்பு 4 வருஷ காலம் நீடித்திருந்தது. ஜப்பானியர்களுக்கு 70 கோடி 'என்' நாணயங்கள் செலவாயிற்று. கிழக்கு ஆசியாவில் அமைதி வேண்டுமென்று விரும்பின ஆங்கில—அமெரிக்கரிடம் நம்பிக்கை குறைந்துவிட்டது.

## ஜப்பானில் பொம்மை அரசர்கள்.

இப்பொழுது சக்ரவர்த்தி 1926-ல் பட்டத்திற்கு வந்தார். அவருடைய கொஞ்ச கால அரசாட்சியில் சமாதானத்திற்கும், உள்நாட்டு நிர்வாகத்திலும் விநோதமான உள்நாட்டு சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. ஜப்பான் சீனாவுடன் இருமுறை போர்செய்திருக்கிறது. மஞ்சூரியாவில் அநேக தடவைகள் சிறு சண்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஹிட்லருடனும், முஸோலினியுடனும் சிநேக பாவத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. சீனக்குடியரசு நாடுகளான மூன்று கிழக்கு மாகாணங்களைக் கைப்பற்றி அங்கு ஜப்பான் பொம்மை அரசாங்கம் ஸ்தாபித்தது. அந்நாடுகளின் ஸ்வதந்திரம் டோக்கியோவிலுள்ள யுத்த இலாகா மந்திரியின் கீழிருக்கும்படி செய்துவிட்டது.

சமீபத்தில் நான்கிங்கில் மற்றொரு அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மறுபடியும் அதுவும் டோக்கியோவின் கீழ் இருக்கிறது. இதுதான் சீனாவில் தேசிய அரசாங்கம் என்று சொல்லப்படுகிறது. புதிய திட்டத்தை ஸ்தாபிக்க ஜப்பான் போடும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பதாக உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது.

பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் சொந்தமான தேசத்தை ஜப்பான் தாக்கி துரோகம் செய்ததை நியாயமானதாகக் காட்டுவதற்காக அந்த அரசியல் பத்திரிகையில் ரம்யமான வாக்கியங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால் உண்மையில் பார்த்தால் ஜப்பான் வாஷிங்டனில் சமரசப்பேச்சுப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே முன்னெச்சரிக்கையன்னியில் பேர்ல் தீவில் அமெரிக்காவைத் தாக்கிவிட்டது. ஜப்பான் செய்தது எப்படித் தப்பான காரியமோ, அதுபோலவே தான் ஜப்பான் சமாதானத்தைக் கோரும் பேச்சுமிருக்கும்.

---

## நிர்வாக நிதி வரவு அதிகமாகவும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் செலவு குறைவாகவும் இருக்கிறது.

## 1941—1942-ல் பிரிடிஷ் நிர்வாக நிதி ஸ்திரீகளை அதிகமாக வேலைக்குத் திரட்டுதல்.

(ஆஸ்வால்ட் டச்சு என்பவர் எழுதியது.)

எதிர்பார்த்தபடி 1941—1942-ம் வருஷத்தில் ஏற்கனவே போட்ட திட்டத்தைக் காட்டிலும் நிர்வாக வருவாய் 28,80,00,000 பவுன் அதிகமாக இருக்கிறது. செலவு ஐட்டம் சம்பந்தமாக ஏற்கனவே போடப்பட்ட மதிப்பைக் காட்டிலும் 18,50,00,000-பவன் குறைவாக இருக்கிறது. 1941-ம் வருஷ ஏப்ரலில் நிர்வாக வரவு செலவில் 3,17,10,00,000-பவுன் பிடிக்குமென்று மதிப்பிடப் பட்டது. ஆனால், அதற்கு மாறாக 2,70,10,00,000-பவுன்தான் கூடுதலாயிற்று.

இந்த உபரிச்செலவின் பெரும்பாகம் கடன்களினாலும், மீதப்படுத்திய தொகைகளினாலும் ஈடுசெய்யப்பட்டிருக்கிறது. 1941-ம் வருஷ மார்ச்சு-மீ 31-ம் தேதியில் கூடுதலான கடன் 2,81,30,00,000-பவுன். இந்த பனிரெண்டு மாதங்களில் 49,90,00,000-பவுன் கடன்தான் அதிகரித்திருக்கிறது. ஆகவே 1942-ம் வருஷ மார்ச்சு-மீ 31-ம் தேதியில் கடன் தொகை 3,31,20,00,000 பவுன் கூடுதலாகிறது. இதிலிருந்து என்ன தெரிந்ததென்றால், மொத்த செலவில் 10-சதவிகிதம்தான் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக்கொடுக்கப்படும் கடன்களிலிருந்து ஈடுசெய்யவேண்டியதாக ஆயிற்று. பாக்கி செலவுக்கு வருமானத்திலிருந்து 44-சதவிகிதமும், மற்ற கடன் பத்திரங்கள், மீதப்படுத்திய தொகைகள் இவைகளிலிருந்து 40-சதவிகிதமும் ஈடுசெய்யப்பட்டிருக்கின்றன. யுத்தகால நிர்வாக வரவு செலவு திட்டத்தில் இது விசேஷமான பயனைக்கொடுத்திருக்கிறது.

## இம்மாதத்தில் ஏராளவருவாய்.

1942-ம் வருடம் மார்ச்சு மாதத்தில் சாம்ராஜ்யத்தில் நிர்வாக வருமானம் அதிகமாக வந்தது. மீதப்படுத்துவதற்காக பொதுமக்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையில் இந்த மாதத்தில்தான் பொதுமக்களால் மீதப்படுத்தப்பட்ட தொகை அதிகமாயிருந்தது.

லண்டனில் யுத்தக்கப்பல் வாரத்தின் முடிவு தெரிவித்ததில் 14,60,00,000 பவுன் வருமானம் கிடைத்ததென்று வெளியாகிறது. கிரேட் பிரிடனில் மற்ற எல்லா இடங்களிலும் அநேக யுத்தக்கப்பல் வாரங்கள் வைத்து நடத்தியதில் 20,00,00,000-பவுனுக்குமேல் வருமானம் வந்திருக்கிறது. மார்ச்சு மாதத்தில் மீதப்படுத்தப்பட்ட தொகை 38,10,00,000-பவுன் கிடைத்திருக்கிறது. அதாவது ஒரு நாளைக்கு 1,20,00,000-பவுனுக்குமேல் வருமானம் கிடைத்திருக்கிறது.

யுத்தக் கப்பல் வாரங்களிலும், நிர்வாக வரவு திட்டத்தில் அதிகமும் இருப்பதைமுன்னிட்டு இந்த வருஷத்தில் மூன்றுவது தடவையாக அரசாங்கத் தார் கோரியகாலத்தில் திருப்பிக்கொடுக்கப்படும் கடன் தொகை குறைக்கப் பட்டிருக்கிறது. அதாவது அவ்வித கடனில் 1,20,00,000-பவுன் குறைந்தது மார்ச்சு மாதத்தில்தான்.

## வேலையின் நிலைமை.

பிரிஸ்டலில் நடந்த பிரசங்கத்தில் மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் என்பவர் தேசத்தார்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் விவரத்தைக் குறிப்பிட்டார். நாலு கோடி மக்களில், 2-கோடி ஆண், பெண்கள் யுத்த வேலைக்காகச் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். "யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எந்த தேசத்திலும் இது வியப்பைக்கொடுக்கக்கூடிய ஒரு ஏற்பாடு." இந்த நாட்டில் ஸ்திரீகளை வேலைக்குச் சேர்த்திருப்பதுபோல் வேறு எந்த நாட்டிலுமில்லை. வேலை இல்லாமல் சோம்பேறியாகவோ, சௌகரியத்தை முன்னிட்டோ வேலை செய்யாமலோ, அரைகுறை சௌகரியத்தை முன்னிட்டு வேலை செய்யாமலோ இருந்துவந்ததெல்லாம் இப்பொழுது அநேகமாய் மறைந்துபோய்விட்டது.

மிஸ்டர் பெவின் சொல்லிய சங்கதியிலிருந்து, இப்பொழுது வேலை யில்லாமல் இருந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டதாகத் தெரிகிறது. கல்யாணம் ஆகியிருக்கும் ஸ்திரீகளுக்கு மாத்திரம் வேலைபார்த்துக் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்களில் அநேகம் பேர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் வேலை கிடைத்துவிட்டது. ஆனால், இப்பொழுது முக்கியமாகச் செய்யவேண்டிய காரியமென்னவென்றால், தனிப்பட்ட ஸ்திரீகளும், மனிதர்களும் யுத்த சம்பந்தமில்லாத பொது இலாகாவில் வேலைபார்த்துவரும் இடங்களில் கல்யாணமான ஸ்திரீகளை நியமித்துவிட்டு, யுத்தப் பொருள்கள் தயாரிக்கும் வெகு தூரத்திலுள்ள தொழிற்சாலைகளில் அதிகம் ஸ்திரீ, புருஷர்களை வேலையில் ஈடுபடும்படி செய்யக்கூடும்.

---

# இராக்காலத்தில் தாக்கும் பிரிடிஷ் பாம்பர் விமானங்கள்.

(உப விமானப் படைத்தலைவர் L. V. பிரேசர் எழுதியது.)

இராக்காலங்களில் வெகுதூரம் சென்று விமானத் தாக்குதல்கள் ஆரம்பிப்பதற்கு தற்போது பிரிடனில் ஏராளமான பாம்பர் விமானங்கள் இருக் கின்றன. இம்மாதிரி இவ்வுலகத்தில் வேறு எந்த தேசத்திலும் கிடையாது. விசேஷமாக இதற்கு மட்டில் இப்படை தயாரிக்கப்பட்டதல்ல. இன்னும் மற்ற எல்லாவிதமான வேலைகளுக்கும் அவைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அவைகள் பகற்காலங்களிலும் தாக்கச்செல்லும். மேலும் பிரிடனைப் பாதுகாக் கும் வேலையிலும் ஈடுபட்டிருக்கும்.



இந்த விமானப்படை ஒரு விசேஷமான படைப் பகுதி. ஏனென்றால் பிரிடிஷ் விமானப்படையில் ப்ளென்ஹிம், ஹாம்டன், வெல்லிங்டன், விட்லி, மான்செஸ்டர், ஹாலிபாக்ஸ், ஸ்டர்லிங்ஸ் முதலிய பாம்பர் விமானங்கள் இருக் கின்றன. இவைகளைத் தவிர இராக்கால பாம்பர் விமானங்களும் இருக்கின்றன. இவைகளைப்போல் வேறு அயல்நாட்டு எந்த வெடி விமானங்களும் வேலைசெய்ய முடியாது. இப்புதிதாகக் கட்டப்பட்ட விமானங்களைக்கொண்டு இராக்காலங் களில் ஜெர்மனியில் படையெடுக்கப்படுகிறது. இவ்வேலை இன்னும் சிறிது காலம் நடைபெறும்.

## வெகுகால அனுபவத்தின் பயன்.

வெகுகால அனுபவத்தின் பயனாக ஜெர்மனியைத் தாக்குவதற்கு பல பாம்பர் விமானங்கள் இப்பொழுது கட்டப்பட்டு தயாராயிருக்கின்றன. விமானங் கள் கட்டியமைப்பதற்கு முன்னாடியே திட்டங்கள் போடப்பட்டன. யந்திரங் கள், கருவிகள், தொழிற்சாலைகள் இவைகள் யாவும் நிர்மாணிக்கப்பட்டன. நவீன கைத்தொழில் முறையில் எவ்வளவோ சிக்கல்கள் இருந்தாலும், ஐந்து வருஷங்களுக்குமுன் கட்ட ஆரம்பிக்கப்பட்ட ஆகாய விமானங்கள் இப்பொழுது தான் உபயோகப்பட்டு வருகின்றன.

பிரிடனின் பேரில் நடத்திய பகற்கால சண்டையில் ஜெர்மானியர்கள் தோற் றுப் போவதற்கு முன்பு, இராக்காலங்களில் ஏராளமான பாம்பர் படைகளை அனுப்பவேண்டுமென்பது ஜெர்மனிக்குத் தெரிந்திருக்காது. ஆனால் இவ்விதம் இராக்காலத் தாக்குதல்களுக்கு லாயக்காக அந்தக் காலத்தில் அவர்களின் பாம்பர் விமானங்களும், விமானிகளும் தயாராகவில்லை. ஐரோப்பாவின் மேற்குக் கரையோரத்தில் விமான தளங்கள் ஜெர்மனிக்குக் கிடைத்த பிறகும், பகற் காலத்தில் பிரிடனைத் தாக்கமுடியவில்லை என்று தெரிந்த பிறகும்தான், இராக் காலத்தில் வெடிகுண்டுகள் போட ஜெர்மானியர்கள் முயன்றார்கள்.

## ஜெர்மானியருக்குள்ள கஷ்டங்கள்.

இவ்வித பிரயத்தனத்தில் அவர்களுக்கு அதிக கஷ்டங்கள் இருந்தன. விமானிகள் பயிற்சி பெறவில்லை. விமானங்கள் இராக்காலத்தில் பறக்கத் தகுந்தபடி கட்டப்படவில்லை. அதனால் லுப்ட்வாபியின் பலத்தில் ரொம்பவும் குறைவு ஏற்பட்டுவிட்டது. இராக்காலங்களில் சரியாக நடத்தத் தெரியாததால் ஜெர்மன் விமானங்கள் தானாகவே மோதுண்டு முறிந்துபோன விமானங்களின் எண்ணிக்கை, பிரிடன் பாதுகாப்பில் பிரிடிஷ் விமானங்கள் சுட்டு வீழ்த்திய ஜெர்மன் விமானங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகம். ருஷ்ய யுத்தத்திலும், ஜெர்மனிக்கு விமானங்கள் சேதமேற்பட்டால், பிரிடனை இராக் காலங்களில் ஜெர்மனி தாக்கிவந்ததை நிறுத்திவிட்டது.

இராக்காலத்தில் உபயோகப்படுத்தப்படும் பாம்பர் விமானங்களுக்கு ரகசியமான அமைப்புகள் ஒன்றுமில்லை. ஆனால் பார்ப்பதற்கு ஒன்று சேர்க்க முடியாதது போல் காணக்கூடிய தன்மைகளை சமரசப்படுத்தி அமைப்பதில்தான் இதன் ரகசியம் இருக்கிறது. சாமான்களை ஏற்றி மெதுவாகச் செல்லும், கப்பல்களுக்கு, அதிவேகமாக செல்லும் யுத்தக் கப்பல்களில் சில தன்மைகள் தேவையாகயிருக்கும். மேலும் நாசகாரிகளைப்போல் மறுகிச செல்லுவதற்கு லாயக்கான விசைகள் யாவும் இருவகைக் கப்பல்களுக்கும் இருக்கவேண்டும். சரியான அளவுகளைக் கொடுக்கக்கூடிய நுட்பமான கருவிகளாய் இருந் தாலும் அவைகள் யாவும் கெட்டியாக அமைக்கப்படவேண்டும்.

இம்மாதிரி பார்வைக்கு நேர்மாறான குணங்கள் இருப்பதாகத் தெரியும் விஷயங்களை எல்லாம் சமரசப்படுத்தி, நல்ல பயன் கொடுக்கக்கூடிய விதமாக பிரிடிஷ் பாம்பர் விமானங்களில் சேர்த்து அமைத்திருப்பதினால் தான், இராக் காலங்களில் பிரிடிஷ் விமானப்படை விமானதளங்களிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் ஜெர்மனிக்குப் போய் தாக்குவதற்கு முடிகிறது.

## சமுத்திரத்திற்குக் கீழிருந்து சண்டை.

## பிரிடிஷ் நீர்மூழ்கிக் கப்பல்களின் வீரச்செயல்கள்.

(H. C. பெர்ஸி என்பவரால்).

கடல் யுத்தத்தில் ஒரு அம்சமான சமுத்திரத்திற்குள்ளிருந்து கொண்டு சண்டை செய்வதில் 'யு' படகுகளுக்கு மிஞ்சியது ஒன்றும் கிடையாதென்றும் அச்சுநாட்டினர் தற்புகழ்ச்சி செய்துகொண்டு வந்தார்கள். ஆனால் இப்பொழுது பிரிடிஷ் நீர்மூழ்கிகள் நடத்திவரும் வீரச் செயல்களைப் பார்க்க அவை எதிரிகளின் 'யு' படகுகளைக் காட்டிலும், அதிதுரிதமாகச் செல்லக்கூடியவைகளாகவும், அதிக வலிவு பெற்றவைகளாகவும், சண்டையில் அதிக திறமை வாய்ந்தவை களாகவும் இருந்துவருகின்றன. பிரிடிஷ் கப்பற்படை இலாகா அதிகாரி பிரிடிஷ் நீர்மூழ்கிகளின் வீரச் செயல்களைப்பற்றி அடிக்கடி வெளியிட்டிருக்கிறார். அவைகளில் மிகவும் பேர்போனது டாலிஸ்மான் என்ற நீர்மூழ்கியேயாம். அது சுமார் 220 நாட்களில 26,000 மைல்கள் தூரம் சுற்றித்திரிந்து எதிரி சாமான் ஸப்ளைக் கப்பல்களையும் 'யு' படகுகளையும் வெற்றிகரமாகத் தாக்கியும், அவைகளில் அநேக கப்பல்களையும், ஒரு நீர்மூழ்கியையும் மூழ்கடித்து இப்பால் அதன் துறைமுகத்தில் தங்கியிருக்கிறது.

இரண்டு நீர்மூழ்கிகள் சமுத்திரத்தின் கீழிருந்தால் ஒன்று மற்றொன்றைப் பார்க்க முடியாதென்றும், அதனால் அவைகள் ஒன்றோடொன்று சண்டை செய்துகொள்ள முடியாதென்றும் சாதாரண மனிதர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். உண்மையில் சென்ற யுத்தத்திலும் சரி, இந்த யுத்தத்திலும் சரி, நீர்மூழ்கிகளுக்குள் அநேக சிறு சண்டைகள் நேரிட்டிருக்கின்றன. புதிதாகக் கட்டப்பட்ட பிரிடிஷ் நீர்மூழ்கி ஒன்று முதன்முதலில் சமுத்திரத்தில் மிதக்க விட்டவுடன் இம்மாதிரி ஒரு சிறு சண்டை ஏற்பட்டது. அது ஒரு விசித்திரமான கதை. அது பின்வருமாறு:—

### மூன்று 'யு' படகுகளுடன் சண்டை.

கடல் பிரயாணம் ஆரம்பித்த சிறிது காலத்திற்கெல்லாம் அது மூன்று எதிரி நீர்மூழ்கிகளுடன் சண்டைபோட நேர்ந்தது. போரிடுவதற்காக ஆயத்தம் செய்துகொள்ள அதற்குப் போதுமான அவகாசம் கிடையாது. லக்ஷியத்தைக் குறிபார்த்து ஏதாவது ஒரு குழாய் மூலம் கண் நோட்டத்தில் சுட வேண்டியதாக ஆயிற்று. எதிரிப் படகுகளில் ஒன்று சுட்டு மூழ்கடிக்கப்பட்டது.

அடுத்த நாள் இரவு சமுத்திரத்தில் மற்றொரு 'யு' படகு தோன்றிற்று. அது உடனே ஜலத்தில் அமுங்கிவிட்டதால், அதைத் துரத்திப் பிடிக்க ஐந்து மணி நேரம் வரை பிரிடிஷ் நீர்மூழ்கி வெகு மும்முரமாகப் பிரயத்தனப்பட்டது. ஆனால் ஒரு குண்டு கூட எதிரிப் படகின்மேல் போடுவதற்கு முடியவில்லை. இவ்விதம் வேட்டையின் மத்தியில் மற்றொரு 'யு' படகு தன்னைத் துரத்தி வருவதாக பிரிடிஷ் கப்பலின் தலைவன் அறிந்துகொண்டான். பிறகு எதிரியின் படகு பிரிடிஷ் கப்பலைக் குறிவைத்து ஒரு இடிகுண்டை பிரயோகித்தது. ஆனால் அந்த குறி தவறிவிட்டது. பிறகு ஏதோ நோக்கங்கொண்டு எதிரியின் 'யு' படகு விலகிச் சென்றுவிட்டது.

இரண்டு இரவுகள் சேர்ந்தாற்போல் மூன்று 'யு' படகுகளுடன் ஒரு பிரிடிஷ் நீர்மூழ்கி மட்டில் தனிமையாக நின்று வேவுபார்த்து வந்தது. இது ஒரு உணர்ச்சியைத் தரும் சம்பவம்.

பிற்பட்டு சமுத்திரத்தில் ஒரு பெரும் புயலடித்தது. அலைகள் 30 அடிக்கு மேல் உயரமாகக் கிளம்பி எங்கும் பயங்கரமாக இருந்தது. அன்று எதிரியின் 'யு' படகு ஒன்று எதிர்நோக்கி வருவதை பிரிடிஷ் கப்பல் பார்த்துவிட்டது. புயல் கடுமையாக இருந்ததால் கப்பலை அங்குமிங்கும் திருப்புவதற்கு இயல வில்லை. விரோதிக் கப்பல் அபாயத்தை உணர்ந்துகொண்டு சமுத்திரத்திற்குள்



மூழ்கிவிட்டது. ஆனால் வெளியில் நடக்கும் விஷயங்களைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு கண்ணாடி அறை மட்டில் வெளியே தெரிந்தது. அலைகள் பிரமாதமாக அடித்ததால் இதைக் கண்டுகொள்வதற்கு முடியவில்லை. அந்த பிரிடிஷ் படகும் நேரான வழியில் செல்வதற்கு முடியாமல் அலைகள் திருப்பும் வழியாகவே அங்குமிங்கும் ஊசலாடிக்கொண்டிருந்தது. அதனால் நிதானித்துக்கொண்டு சரியானபடி குறிபார்த்து இடிகுண்டுகளையும் பிரயோகிக்க சாத்தியமில்லாமல் போய்விட்டது.

கடைசியில் நல்ல சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. இடிகுண்டுகள் பிரயோகிக்கப்பட்டன. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பெரிய வெடிசப்தம் கேட்டது. 'யு' படகின் உச்சிபாகம் மட்டில் சமுத்திற்குமேல் காணப்பட்டது. பிரிடிஷ் படகிலிருந்து பீரங்கிக்காரர்கள் குறிபார்த்து சுட எத்தனித்தார்கள். ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் பீரங்கிகளை உபயோகிக்க முடியவில்லை. ஏனென்றால் படகின் ஆட்டத்தில் அங்குள்ள மாலுமிகள் அங்குமிங்கும் தள்ளப்பட்டனர். மேலும் அலைகள் வெகு உயரம் அடித்ததில் படகின் முன்பாகத்தில் கூட அடிக்கடி ஜலம் வந்ததால் மாலுமிகள் அலைகள் அடித்துப் போய்விடுமோ என்றும் பயந்தார்கள். இந்த சமயத்தில் நேர்ந்த தாக்குதலில் பிரிடிஷாருக்கு வெற்றி என்று சொல்வதற்கில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் மாலுமிகள் வீரத் தனமாகவும், தைரியமாகவும் சமாளித்து வந்த விஷயம் பாராட்டத்தக்கது.

### முடமாகியும், எதிரிப்படைகளுக்கு சேதம் விளைவித்தல்.

நீர்மூழ்கிகள் முடமாகியும், வெகுதிறமையுடன் சண்டை செய்திருக்கின்றன. உதாரணமாக இங்கு ஒரு கதை குறிப்பிடப்பட்டிருக்கிறது. யுத்தக் கைதிகள் மீண்டும் இங்கிலாந்துக்கு வந்தவுடன் பூரா விவரமும் நமக்குத் தெரியக் கொடுக்கப் படும்.

விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில் ஷார்க் என்னும் ஒரு நீர்மூழ்கி தாக்குண்டு பழுதுபட்டுப்போய்விட்டது. "வேறொன்றும் புதிய தகவல்கள் கிடைக்கவில்லை" என்று மட்டில் பிரிடிஷ் கப்பற்படை இலாகாவிலிருந்து கிடைத்தது. ஆனால உத்தியோக முறையில் வெளிவராத செய்திகள் பின்வருமாறு அறிவித்தன. ஜலத்தின்மேல் நகருவதற்குக்கூட முடியாமல் கிடந்தது. அந்த சமயத்தில் எதிரி விமானம் ஒன்று தாக்கிற்று. அங்குள்ள மாலுமிகள் பீரங்கிகளை கொண்டு எதிரி விமானத்தை சுட்டு வீழ்த்தினர். எதிரி விமானத்திலிருந்த விமானிகளை கைதிகளாக்கி சிறு படகில் ஏற்றிவந்தனர்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கவசம்பூண்ட ஜெர்மன் சிறு கப்பல்கள் அங்கு தோன்றின. ஷார்க் மட்டில் இன்னும் மிதந்துகொண்டுதான் இருந்தது. அது மூழ்குவதற்கும் முடியாமல், முந்திச் செல்வதற்கும் முடியாமல் தத்தளித்து வந்தது. சிறு சண்டை போட்டதில் பிரிடிஷ் நீர்மூழ்கி உடைபட்டு, அதிலுள்ள பிரிடிஷ் மாலுமிகளும், ஜெர்மன் கைதிகளும் கைப்பற்றப்பட்டார்கள்.

### 21 நாட்கள்வரை சூரிய வெளிச்சமே கிடையாது.

நீர்மூழ்கியிலுள்ள மாலுமிகள் அநேக நாட்கள்வரை கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும். நீண்ட தூரம் காவலுலவுக்கு அங்குள்ள மாலுமிக்ளில் சிலர் சூரிய வெளிச்சத்தையே கண்டிருக்கமாட்டார்கள். குறைந்த பக்ஷம் சுமார் 21 நாட்கள் இருந்தாலும் இருக்கலாம். யதேச்சையாய் எதிரி விமானம் இதை பார்த்துவிட்டாலோ, அல்லது கப்பல்களினால் தாக்குண்டாலோ அநேக மணிகள் நேரம்வரை தண்ணீரிலேயே மூழ்கி இருக்கும்படி நேரிடும்.

நார்வே கடற்கரை வழியாக வந்துகொண்டிருந்த ஜெர்மன் சாமான் கப்பல் களைத் தடுப்பதற்கு ஈடுபட்டிருந்த ஒரு பிரிடிஷ் படகு விடாமல், 43 மணிக்கு மேற்பட்டே தாக்கப்பட்டது. அதிலுள்ள மாலுமிகள் தங்களைச் சுற்றிலும் ஆழ வெடிகள் சுமார் 100 வெடித்ததை கணக்குப் பண்ணினார்கள். அதற்குப் பிறகு எவ்வளவு வெடித்ததென்று அவர்களுக்குத் தெரியாது. அந்தக் காரிருளில்

சமுத்திரத்தின் மேல்பாகத்திற்கு வந்து, அப்படகில் நல்ல சுத்தமான காற்று
உட்புகும்படி கதவைத் திறப்பதற்கு, அப்படகின் தலைவன் இரண்டு மூன்று தடவை
முயற்சித்தான். ஆனால் ஒவ்வொரு தடவையிலும் முடியாமல்போய் தண்ணீருக்
குள்ளே மூழ்கவேண்டியதாயிருந்தது.

நீர்மூழ்கிக்குள்ளிருக்கும் காற்று அநேக மணிநேரம் நிலைத்தால் கெட்டுப்
போய்விடும். அதாவது அதில் பிராணவாயுவே இல்லாமல் போய்விடும்.
அதனால் அங்குள்ள மாலுமிகளின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. கடைசியில்
அப்படகு நீர்மட்டத்திற்குமேல் வந்தவுடன் மாலுமிகள் சோர்ந்துபோய் மிகவும்
அவஸ்தைபட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் தலைவன் அபாயங்
களைக் கடந்து பத்திரமான இடத்திற்குக் கொண்டுவந்துசேர்த்தான். பிற்பட்டு
அவர்கள் எவ்வளவோ தடவைகள் வெற்றிகரமாக எதிரிகளைத் தாக்கி வந்திருக்
கின்றனர்.

---

## பார்லிமெண்ட்டில் நடந்த விவாதத்தைப் பற்றிய விமர்சனம்.

## பிரிடன் தன் கஷ்ட நஷ்டங்களை எதிரிக்குக்கூட ஒளிப்பதில்லை.

## ஜனநாயக ஆட்சியின் கீழுள்ள பொதுமக்கள் வாழ்க்கையின் சுகாதிசயங்கள்.

## லண்டன் எதிரிகளைத் 'திருப்பித்தாக்கும்'

(ரெனி ஸ்மித் என்பவரால் எழுதப்பட்டது).

மார்ச்சு மாதம் 31-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் எதிரியைக்
கடுமையாகத் தாக்கினதும், பட்டவர்த்தனமாகப் பேசினதும்தான் முக்கியமான
சம்பவங்கள். இப்படித்தான் இருக்கவேண்டும். கஷ்டத்தை தைரியத்துடன்
பொறுத்துக்கொள்வதும், அநுபவத்தால் தெரியக்கூடியதைக் கற்றுக்கொள்ள
விரும்புவதுமே ஸ்வதந்திர மனிதனின் சுகாதிசயங்கள். பிரிடனில் இன்னாட்களில்
யுத்தத்தினால் வரக்கூடிய கஷ்டங்களையும், அது எவ்வளவு மகத்தானதாக
இருக்கிறதென்பதையும், பிரிடிஷ் மக்கள் அவைகளை எவ்விதம் சகித்து
வருகிறார்கள் என்பதையும், எல்லோரும் தெரிந்திருக்கிறார்கள். எதிரியைத்
தோற்கடிக்கும் பிரயத்தனத்தில் மற்ற நேசதேசத்தார்களுக்கு பிரிடன் பின்
வாங்காது.

பிரிடிஷார்கள் அவர்களுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களை எதிரிகளுக்கும்,
உலகத்தார்களுக்கும் ஒளித்துவைப்பதில்லை. இதனால்தான் ஜனநாயக ஆட்சியின்
பலம் வரவர அதிகரித்துவருகிறது. இம்மாதிரி ஜெர்மனியில் முடியாது.
ஏனென்றால் வெளிப்படையாகப் பேசினால் ஜெர்மனிக்கே ஆபத்தாய் முடியும்.
ஏனென்றால் ஜெர்மன் பொதுமக்களுக்குக் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளும்
மனோதைரியம் கிடையாது. இவ்விஷயத்தை ஜெர்மனியின் சரித்திரத்திலிருந்தே
நாம் அறிந்து கொள்ளக்கூடும். 1848-ல் பொதுமக்களுக்கு அதைரியம் ஏற்பட்
டிருந்தது. 1871-லிலும் அம்மாதிரி தைரியக்குறைவு ஏற்பட்டிருந்தது.
1914-லிலும் இம்மாதிரி ஏற்பட்டிருந்தது. 1918-லிலும் பொதுமக்கள் தைரியக்
குறைவாக இருந்தார்கள். ஆனால் அப்பொழுதுதான் பிரஷ்யாவின் இரு
பிரடிரிக் அரசர்கள் காலமுதல் வரவர அவர்கள் ராணுவக் கக்ஷியால் அதிகமாக
அடிமைப் படுத்தப்பட்டு சுயேச்சையைப் பெற சந்தர்ப்பம் வாய்த்தது. ஆனால்
அவர்கள் அதைப்பயன் படுத்திக்கொள்ளவில்லை.

## ஜெர்மனியில் நடக்கும் மூடுமந்திரம்.

ஹிட்லரின் ராணுவ அரசியலில் ஜெர்மனியில் என்ன நடக்கிறதென்ற
விஷயம் ஒருவருக்கும் புரியவில்லை. அங்கு பொதுக்கூட்டங்கள் நடைபெறாது.
மனிதர்கள் சுயேச்சையாக விவாதங்கள் செய்யமுடியாது. மந்திரி சபையும்



கிடையாது. பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பிரசுரிப்பதற்கும் ஸ்வதந்திரம்
கிடையாது. ஆனால் பிரிடன் மற்ற ஜனநாயகங்கள் மாதிரி போர்புரிகிறது.
அவைகளுக்குள் யதேச்சையாக விவாதங்கள் நடைபெறுகின்றன. மேலும் யுத்த
நெருக்கடியிலும்கூட யுத்த விஷயங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுவது குறைவு
படவில்லை. சிலசமயங்களில் பிரிடிஷார் அயல்நாட்டிலுள்ள அபாயங்களை
முன்னிட்டு பொறுப்புக் குறைவாகவோ தன்னடக்கமில்லாமலோ நடந்துகொள்ள
லாம். அநேக உணர்ச்சிகளில் அது ஒன்று. தனிப்பட்ட நபர்கள் மூலம்
ஸ்வதந்திரத்தை சரியான முறையில் நடத்தச் செய்வதற்கு ஸ்வதந்திர தேசத்
தாருக்கும் பொறுப்பு இருக்கிறது. ராணுவ பலத்தினால் தனிப்பட்ட நபரின்
வாழ்க்கையை கட்டுப்பாடு செய்யாமல் ராணுவ ஆட்சியைத் தடுப்பதில் ஸ்வதந்திர
தேசத்தாருக்கு அபாயங்கள் நேரிடலாம். ஆனால் ஜெர்மன் ராணுவ ஆட்சியின்
கீழ்தான் தனிப்பட்ட நபர் கைதியைப்போல் வாழ்க்கையை நடத்தவேண்டி
ருக்கிறது.

மீண்டும் சாமான் உற்பத்தியைப்பற்றி காமன்ஸ் சபையில் பட்டவர்த்தன
மாகச் சொல்லப்பட்டுவருகிறது. உற்பத்தி இலாகா புதுமந்திரி மிஸ்டர்
ஆலீவர் லிடில்டனும், பீவர் புரூக் பிரபுவும் சேர்ந்து யுனைடெட் ஸ்டேட்ஸில் கூடி
யோஜிக்கவும், உள்நாட்டில் மிஸ்டர் எர்னஸ்ட் பெவினும் தேசத்தார்களின்
உற்பத்தி சக்திக்குத் தக்கவாறு எந்தத்துறைகளில் அபிவிருத்தி செய்யலாம்
என்றும் முயற்சிக்கிறார்கள். ஆனால் மந்திரிசபை ஏற்கனவே வெளியிட்ட
பிரகாரம் என்ன குறைகள் இருப்பதாகத் தோன்றுகிறதோ அவைகளை வெளிப்
படையாகக் கூறிவிட்டது.

சிங்கப்பூர் வீழ்ச்சியைப்பற்றி விசாரணை நடத்தும்படி பிரபுக்கள் சபை
வற்புறுத்துகிறது. மேலும் இதுவரை பிரிடிஷ் தேச சரித்திரத்தில் இம்மாதிரி
யான தோல்வி ஏற்பட்டதில்லை யென்று சொல்லப்பட்டு அது விஷயமாகக்
கடுமையான வார்த்தைகள் பேசப்பட்டன.

## பத்திரிகைகளுக்கு ஸ்வதந்திர உரிமை.

'டெய்லி மிர்ரர்' பத்திரிகையில் வெளிவந்த சில விஷயங்களுக்காக உள்
நாட்டுக் காரியதரிசி எடுத்துக்கொண்ட நடவடிக்கையினால் பத்திரிகைகளுக்கு
உரிமை பாதிக்கப்பட்டதாக காமன்ஸ் சபையில் விவாதம் நடைபெற்றது. அந்த
விவாதத்தில் மில்டன், க்ராம்வெல், நெல்ஸன் இவர்களின் ஊக்கத்தைப்போல்
உணர்ச்சி காட்டப்பட்டது. பிரிடனிலுள்ள ஸ்வதந்திரத்தின் கொள்கைகளைப்
பாதுகாப்பதற்காகக் கிளம்பிய ஆவேசத்தில் டெய்லி மிர்ரர் பத்திரிகையில்
திடுக்கிடச்செய்யும்படி வெளிவந்த விஷயம்கூட கவனிக்கப்படாமல் போய்
விட்டது. உள்நாட்டுக் காரியதரிசியும், காமன்ஸ் சபை மெம்பர்களும், தேசத்தார்
களும் அவ்விவாதத்தில் உள்ளதை உள்ளவாறு பேசி சம்வாதம் நடத்தினார்கள்.
அந்தப் பிரச்னையில் மனிதனின் ஸ்வதந்திரம் என்னவென்பதையும், எவ்வாறு
நல்லவழியில் பிரயோகிக்கலாமென்றும், எப்படியிருந்தால் அதற்கு ஹானி வருமென்
றும், அதனால் அதற்கு என்ன பாதிப்பு ஏற்படுமென்று இவையாவும் விளக்கிக்காட்
டப்பட்டது.

பிற்பட்டு லண்டனில் கன்ஸர்வேடிவ் கக்ஷிக்கூட்டத்தில் ராணுவத்
தோல்விகளை அடுக்கடுக்காக பிரதம மந்திரி சொல்லிக்கொண்டுவருகையில் இந்தப்
பிரதிநிதிகள் கொண்ட கூட்டம் மூச்சுக்கூட விடாமல் கேட்டுக்கொண்டிருந்தது.
இது ஒரு ஆச்சரியமே. "ஸிரேனைகாவை விட்டுத் துரத்தப்பட்டோம். ஆனால்
அதில் பாதியைத்தான் மீண்டும் கைப்பற்றியிருக்கிறோம். கிரீஸிலிருந்தும்,
கிரீட்டிலிருந்தும் வெளிக்கடத்தப்பட்டோம். தூரக்கிழக்கில் நல்ல பலம்வாய்ந்த
ஒரு புதுவிரோதி, ஜப்பான் நம்மைத் தாக்கி வருகிறது. ஹாங்காங் எதிரி
வசமாய்விட்டது. மலேயா தீபகற்பம், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் யாவையும்
எதிரிகள் கைப்பற்றிக்கொண்டனர். ஜாவாவுக்கருகாமையில் நேசதேசக் கப்பற்
படைக்கு பலத்த நஷ்டம். பர்மா படையெடுக்கப்பட்டு, ரெங்கூனும் வீழ்ந்து

விட்டது. வட பர்மாவில்: கடுமையான போர் நடந்துவருகிறது. இதே சமயத்தில் ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்கும் அபாயம் நெருங்கிவிட்டது. சென்ற ஐந்து, ஆறு மாதங்களாக அட்லாண்டிக் கடற்போரில் நமக்கு வெற்றி கிடைத்ததுபோக, இப்பொழுது மறுபடியும் தாத்காலியமாக, நிலைமை மோசமாக இருந்துவருகிறது" என்று சர்ச்சில் அடிக்கடிக்காகக் கூறினார். அவர் ஒன்றையும் மிகைப்படுத்திச் சொல்லவுமில்லை, மாத்ஸல்லியத்தினாலும் சொல்லிவிடவுமில்லை.

## ஹிட்லரின் யோசனை என்ன.

நான் முற்களவே சொன்ன பிரகாரம் ஜெர்மனியில் என்ன நடக்கிறதென்று ஊகிக்கத்தான்வேண்டும். அவன் மனதில் என்ன இருக்கிறதென்பதைப் பற்றி சந்தேகமேயில்லை. துருக்கியிலிருந்து ஜெர்மனியின் தூதனாக வான் பேபனைத் தருவித்து அவனைக் கண்டு பேசியிருக்கிறான். பல்கேரியாவிலிருந்து போரிஸ் மன்னனைத் தருவித்து, அவனுடன் கலந்திருக்கிறான். பல்கேரியா, ருமேனியா இவைகளின் தலைவர்களையும் ஒருவருக்கொருவர் போட்டிபோடச் செய்கிறான். 1941-லேயே ருஷ்யாவை ஜயித்துவிடுவதாகச் சொன்ன வாக்குறுதியை 1942-லாவது நிறைவேற்றுவதற்காக, ருமேனியாவிலிருந்து 3,00,000 வீரர்களையும், ஹங்கேரியிலிருந்து 3,00,000 வீரர்களையும் இன்னும் இதாலியிலிருந்து 2,50,000 வீரர்களையும் ருஷ்யப் போர்முனைக்கு அனுப்பும்படி அவன் கேட்டுவருவது நமக்குத் தெரியும். 1942-ம் வருஷத்தில் ஹிட்லரின் கீழுள்ள ஐரோப்பிய நாடுகளிலுள்ள எல்லாவித யுத்தப்பொருள்களையும் எந்த விதத்திலாவது பலவந்தம் செய்து கைப்பற்றப் பார்க்கிறான். 1942-ம் வருஷத்தில் வெற்றியடைவதற்காக எதிரி தன் முழுபலத்தையும் காட்டப்பார்க்கிறான். நேசதேசத்தார்களின் கடமையும் தெளிவாகத் தெரிந்துவிட்டது. அவர்களும் இந்த 1942-ம் வருஷத்திலேயே தங்கள் வசமுள்ள முழுபலத்தையும் காட்டவேண்டுமென்று இங்கிலாந்தில் ருஷ்யப் பிரதிநிதியாக இருக்கும் M. மேயிக்ஸ்கி சொன்னார். வரும் வசந்த காலத்திலும், கோடையிலும், எதிரியைத் தோற்கடிக்க வேண்டியதற்காக மகத்தான முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

## லண்டனில் யுத்தக் கப்பல் வாரம்.

இதுவரை லண்டனில் ஏற்பட்ட படையெடுப்புகளில் பொதுமக்கள் 'திறமையுடன் சமாளித்துவந்தார்கள்'. இவ்வாரத்தில் 'திருப்பித்தாக்கவும் முடியும்' என்று காண்பித்தார்கள். உண்மையைப் பேசியதிலிருந்தும், கடுமையாகத் திருப்பித் தாக்குதலிருந்தும், வெற்றியடைவதற்கான ஊக்கம் பிறந்திருக்கிறது. 'யுத்தக் கப்பல் கட்டுவதற்காகப் பணம் திரட்டும் வாரம் முடிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன், 12,50,00,000 பவுன் சேர்ந்துவிட்டதாக லண்டன் மேயர் தெரிவித்தார். அவர் அப்பொழுது 15,00,00,000 பவுன் சேர்ந்துவிடும் என்றும் அறிவித்தார். 1942 வசந்த காலம் வந்துவிட்டது. ஆண், பெண் அடங்கலும், அவர்கள் வசமுள்ள பூரா திரவியத்தையும் கொடுக்க முன் வரவேண்டும். 1942-ம் வருஷத்தில் உலகத்திலுள்ள நேசதேசத்தார்களுக்கும், சிநேகிதர்களுக்கும் அவர்களுடன் சேர்ந்து பிரிடிஷார் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் காணலாம்.



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

மணி.

1942—

### பிரஸங்கம் 93—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| மே ... | 2, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 3, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... ,, | 6.00 |
| | | வம்பன் | ... ,, | 6.30 |
| | 4, திங்கட்கிழமை ... | ஆதனூர் | ... ,, | 6.00 |
| | | அரமனைப்பட்டி | ... ,, | 6.30 |
| | 5, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி | ... ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... ,, | 6.30 |
| | 6, புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் | ... ,, | 6.30 |
| | 7, வியாழக்கிழமை .. | புலியூர் | ... ,, | 6.00 |
| | | கண்ணங்குடி | ... ,, | 6.30 |
| | 8, வெள்ளிக்கிழமை ... | பள்ளிவாசல் | ... ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் 94—(1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 9, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| 10, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி | ... ,, | 6.00 |
| | வேங்கடக்குளம் | ... ,, | 6.30 |
| 11, திங்கட்கிழமை ... | திருமயம் | ... ,, | 6.00 |
| | மேலூர் | ... ,, | 6.30 |
| 12, செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி | ... ,, | 6.00 |
| | பாம்பூர் | ... ,, | 6.30 |
| 13, புதன்கிழமை ... | அரிமளம் | ... ,, | 6.00 |
| | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 6.30 |
| 14, வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி | ... ,, | 6.00 |
| | கிள்ளுகோட்டை | ... ,, | 6.30 |
| 15, வெள்ளிக்கிழமை... | பெருங்களூர் | ... ,, | 6.00 |
| | ஆதனக்கோட்டை | ... ,, | 6.30 |

## விளம்பரம்.

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

**ஸிவில் பாதுகாப்பு**

என்ற ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

பொன்னமராவதி வலம்புரி டாக்கிஸில்

மேமீ 8௳ முதல் 11௳ முடிய காண்பிக்கப்படும்.

இப்படத்தை

**புதுக்கோட்டை**

**யுத்த அறிக்கை நிலயம்**

பொது ஜனங்களுக்கு பொர்சு செய்கிறது.


Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—4-5-42.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம்௵ மேமீ 9௳ [ந. 94


பிரஸங்கம் XCVI.

## ஜப்பான்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமுள்ளவர்கள் ஜப்பானியரைப் பற்றி 1914-ம் வருஷத்திற்கு முன்பு கண்ணியமாகவே நினைத்தனர். ஜப்பானியர் ஓர் அழகிய தீவில் வசிக்கிறவர்களென்றும், தைரியம், ராஜவிசுவாஸம், சாமர்த்தியம், கௌரவம், சுத்தம், அடக்கம், நாகரீகம், பயிற்சி முதலியன பொருந்தியவர்களென்றும் நம்பப்பட்டிருந்தது. இவ்வித அபிப்பிராயம் முதல் தடவையாக ஜப்பானுக்குச் சென்று வசித்த ஐரோப்பியர்களாலும், அமெரிக்கர்களாலும்தான் கொடுக்கப்பட்டது. உண்மையில் இவை யாவும் காணப்பட்டிருந்தால் ஜப்பான் முதல்தரமான நாடாகியிருக்கும். ஆனால் ஜப்பானியர் வரவர பிறரிடத்தில் கௌரவமாக நடந்துகொள்ளவில்லை. தன்னைப்பற்றி பிறர் நல்ல அபிப்பிராயம்கொண்டிருப்பதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஜப்பான் தன்னிஷ்டப்படியெல்லாம் நடந்துகொள்ள ஆரம்பித்தது. சமீப காலங்களில் சீனர்களுக்கும், ருஷ்யர்களுக்கும் ஜப்பான்பேரில் முதலில் வெறுப்பு உண்டாயிற்று. 20 வருஷகாலமாக இந்த வெறுப்பு உலகெங்கும் பரவ ஆரம்பித்தது. இதற்குக் காரணம் என்னவென்று விசாரிப்போம். முதலாவதாக ஜப்பானுக்கு அளவிலா ஆசைகளிருந்தன. இந்த ஆசைகளின் எல்லை என்னவென்றே கண்டுபிடிக்க முடியவில்லை. நாகரீகம் படைத்த நாடுகளின் எண்ணங்களை அழிக்க ஜப்பான் யத்தனப்பட்டது, கௌரவமாக நடந்துகொண்டிருந்தால் ஜப்பான் முதல்தர நாடாக ஆகியிருக்கலாம். ஆனால் ஏமாற்றுவதிலும், பயமுறுத்துவதிலும் ஈடுபட ஆரம்பித்தது. ஆகவே அதுவரையில் சிநேகமாக இருந்த நாடுகளெல்லாம் துவேஷபுத்தியை உண்டுபண்ணிக்கொண்டன. சமூகத்திற்கே தீங்கை விளைவிக்கும் ஜெர்மானியருடனும், இதாலியருடனும் ஜப்பான் நட்புகொண்டது. அவர்களோ தங்களுக்கு ஏதாவது லாபம் வரும்போல் காணப்பட்டால், பிறருக்கு எவ்வளவு சிரமம் வந்தாலும் கவனிக்கமாட்டார்கள். சிரித்தே கழுத்தை அறுப்பார்கள். ஜப்பானும் இத்தொழிலைக் கையாண்டது. கொடுமைச் செய்கைகளை இனிதான வாசகங்களால் அழைத்து, கடும் தொழிலைப் புரியும் கொள்ளைக்கூட்டத்தவர்களில் ஜப்பானியர் முதன்மையானவர்கள். சைனா யுத்தத்தை சிறு சம்பவம் என்றும், ஆக்கிரமணத்திற்காகப் புரியப்படும் சண்டையில்லையென்றும் சொல்லி பாசாங்கு செய்து, கடுமையான யுத்தத்தைச் செய்துவருகின்றனர். ஆசியாவிற்கு ஸ்வதந்திரம் கொடுப்பதாகச் சொல்லுகின்றனர். உண்மையில் ஜப்பானுடைய அதிகாரத்தை விருத்திசெய்வதேதான் நோக்கம். பொது க்ஷேம திட்டத்தை ஸ்தாபிக்கப்போவதாகவும் சொல்லிக்கொள்ளுகின்றனர். உண்மையில் பிறர் நாடுகளை வசப்படுத்திக்கொண்டு அங்குள்ள பொருள்களை அபகரிப்பதுதான் நோக்கம். பலவீனமான நாடுகளின்மேல் படையெடுத்து, ஜப்பானுடன் ஒத்துழைத்தால்

விட்டுவிடுவதாகச் சொல்லும். ஜப்பானுடன் ஒத்துழைப்பதென்றால், சண்டை செய்யாமல் வசமாவதுதான். முகமூடியைப்போல் ஜப்பான் தனது கருத்துக்களை மறைத்துவைத்துக்கொண்டு, காரியங்களைச் சாதித்துக்கொள்ள தேனொழுகும் வாசகங்களைச் சொல்லி ஏமாற்றிவருகிறது. பிறர் கண்ணில் மண்ணைத் தூவி தான் மிகவும் நன்றாக நடந்துகொள்ளுவதாகப் பாவனைசெய்தும் வருகிறது. தங்களை ஒன்றும் அறியாத அப்பாவிகளென்றும், வெளுத்ததெல்லாம் பால் என்று சொல்லக்கூடியவர்களென்று பிறர் நினைக்கவேண்டுமாம். உண்மையில் ஜப்பான் ஒரு பெறும் தந்திரமுள்ள நாடுதான். ஆனால் இதற்கெல்லாம் 'காரணமென்னவென்றால், அதன் ராணுவத் தலைவர்கள் ஜப்பானுடைய அந்தரங்க சக்தி என்னவென்பது தெரியாமல், பிறர் நாடுகளை ஆக்கிரமிக்க நினைப்பதுதான் காரணம். இவ்விதமாக ஐரோப்பாவில் ஜெர்மனி தன்னைப்பற்றிய உண்மை சக்தி தெரியாமலிருக்கிறது. அவ்விதம் நினைத்திருப்பது தவறென்று நேசநாடுகள் எடுத்துக் காட்டப்போகின்றன. ஜப்பானுக்கும் அவ்விதம் எடுத்துக் காண்பிக்கப்படும். அது எப்படி என்றும், அந்த சமயத்தில் ஜப்பானுடைய நிலைமை என்னவாகும் என்பதையும் சொல்லுவோம். முதலாவதாக, தரை, கடல், விமானங்களில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டு, இதுவரைப் பிடித்துள்ள நாடுகளிலிருந்து விரட்டியடிக்கப்படும். இந்த யுத்தத்தில்தான் ஸயாம், மலேயா, டச்சுச் தீவுகள் முதலியவைகளை ஜப்பான் பிடித்திருக்கிறதாக நினைக்கவேண்டாம். மஞ்சூரியா, கொரியா, பார்மோஸா முதலியவைகளில் பல நாட்களுக்கு முன்பாகவே ஜப்பான் சண்டைசெய்து வசப்படுத்தியிருக்கிறது. சைனாவிலும் சண்டை செய்துவருகிறது. ஆனால் சீனர்கள் தைரியமாகவும், விடாமுயற்சியுடனும் 5 வருஷகாலமாக எதிர்த்து வருகின்றனர். ஜப்பானியரும் கடல் பக்கமாக அடைக்கப்பட்டிருப்பதால் மீண்டும் சைனாவைத் தாக்கமுடியாது.

இவ்வித காரணங்களால்தான் ஜப்பானியர் வெறுக்கப்படுகின்றனர். தோல்வி பெற்றால் பட்டினி கிடக்கவேண்டியது என்பதை ஜப்பானியர் உணர்ந்து வருகின்றனர். ஆனால் ஜப்பானுடைய ராணுவத்தலைவர்கள் தொலைந்தால் அட்லாண்டிக் சாஸனத்தின்படி ஜப்பானுக்கும் நன்மை ஏற்படும். 16-வது நூற்றாண்டு முதல் ஒரு விஷயம் புலப்பட்டுவருகிறது. அதாவது, பிறரை ஜப்பானியர் அடக்க முடியாதென்பதும், அனாவசியமாக அவர்களும் அவஸ்தைப்படவேண்டியதில்லையென்பதும். நாம் உலக சமாதானத்தை ஸ்தாபிக்குமுன் ஜப்பானியர், ஜெர்மானியர் இவர்களின் விஷ மயக்கத்தைப் போக்கடிக்கவேண்டும். அதற்காக நாம் அட்லாண்டிக் சாஸனத்தை உலகின் மற்ற பாகங்களில் ஸ்தாபிப்பதுதான் சரியான வழி. மற்ற நாடுகளைப்போல் தோல்வியென்பதே ஜப்பானுக்கு இதுவரை தெரியாது. தங்களுக்குத் தோல்வியே கிடையாது என்ற அஸ்திவாரத்தின் பேரில், ஜப்பானிய அரசாங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தனது யந்திர முறைகளை நவீனமயமாக்கியதால் அதிக சிரமமேற்பட்டிருக்கிறது. இந்த யுத்தம் ஆரம்பிக்குமுன்னர், ஜனங்களுடைய தலைவன் ஏதாவது ஒரு திட்டத்தைப் புதிதாகக்கொண்டுவந்தால் கொலை செய்யப்பட்டான். கடந்த 20 வருஷகாலமாக இந்த ஜப்பானிய அரசியல் நிபுணர்களின் சங்கியையே மிக அதிகமானது. அப்படி இறந்தவர்களெல்லாம் புத்தி சாதுர்யம் வாய்ந்தவர்கள்தான்.

ஜப்பானியரைவிட அதிக பலம் வாய்ந்திருந்தாலும், ஜெர்மானியர் அவ்வளவு தலைவிறி கோலமாகத் திரிந்ததில்லை. தோல்வியோ, ஜயமோ எது கிடைக்கும் என்பதை அவர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள். தனக்குத் தோல்வியே ஏற்படாதென்று ஜப்பான் அசட்டு தைரியம்கொண்டிருக்கிறது. ஆனால் தோல்வி ஏற்பட்டால், ஜப்பானுடைய நிலைமை மிகப்பரிதாபகரமாகப் போய்முடியும். ஜப்பானியச் சக்ரவர்த்திக்கு துர்போதனைகள் செய்துவந்த ராணுவத் தலைவர்கள் அடியோடு ஒழிக்கப்படுவார்கள். எல்லாத் தலைவர்களும் கொல்லப்படுவார்கள். ஆசியா முதலிய நாடுகளில் ஆதிக்கம் அடையவேண்டுமென்ற எண்ணம் ஜப்பானில் 16-வது நூற்றாண்டில் ஹிடியோஷி காலம் முதல் இருந்துவருகிறது. ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய நாடுகளின் தூண்டுதல்களால் ஏற்பட்டிருக்கலாம். ஆதியில் ஜப்பானியருக்கு அவ்வித எண்ணங்கள் கிடையாது. ஜப்பானியரின் புராதனக் கொள்கையின்படி ஜப்பானிய சக்ரவர்த்தி ஒரு தெய்வாம்சம் பூண்ட



வனல்ல. அவ்விதம் சக்ரவர்த்தியை உயர்த்திச் சொல்லுவது, ஜப்பானிய மக்களுக்கு ஒரு தாழ்ந்த தன்மையைத் தெரிவிக்கிறது. பல நாட்களாக இந்த விஷயங்கள் பரிசீலனை செய்யப்பட்டுவருவதால், தற்சமயத்தில் ஏற்பட்டுவரும் தொந்தரவுகளை சுலபமாகவே போக்கடித்துவிடலாம். ஆனால் இதற்கு லாயக்காக நேசநாடுகள் நடந்துகொள்ளவேண்டும். ஸர்வதேச வியவகாரங்களில் நல்ல அயலார்களாக ஜப்பானியர் நடந்துகொள்ளவில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன் வரை உலகின் மற்ற பாகங்களுடன் அதிக சம்பந்தம் பெறுமல்யிருந்து, பிறகு மேற்கு நாடுகளிலிருந்து நவீன வர்த்தக முறைகளையும், யுத்த தந்திரங்களையும் தெரிந்துகொண்டவுடன் தன்னைப்பற்றி ஜப்பான் பிரமாதமாக நினைத்துக்கொண்டிருக்கிறது. உலகின் மற்ற பாகங்களையும் ஆக்கிரமித்துக்கொள்ள தங்களுக்கு ஏதோ தனிப்பட்ட கௌரவம் இருக்கிறதாகவும் நினைக்கின்றனர். அவர்களாக ஏற்படுத்திக்கொண்ட இந்த எண்ணம் முதலில் போக்கடிக்கப்படவேண்டும். தங்களால் முடிந்ததை உலகத்தாருக்குக் கொடுக்கவேண்டுமென்பதையும், தங்கள் சொந்த உபயோகத்திற்கு எதையும் கொள்ளையடிக்க முடியாதென்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 2—5—42-லிருந்து 8—5—42-வரை.

**பர்மா.**—லாஷியோவைப் பிடித்தபிறகு வடக்கே சென்று மாண்டலேயையும் வந்திருக்கிறான். கயாங்ஸி (Kyankse) வரையிலும் எதிரி பிடித்திருக்கிறான். எதிரிக்குப்பின்புறத்திலுள்ள சீனப்படைகள் டௌங்கி, லாய்லம் என்ற பட்டணங்களுக்கு இடையில் பலமாக எதிர்த்துப் போராடுகின்றன. ஐராவதிப் போர் முனையில் பிரிடிஷ் படைகள் அவா என்ற பாலத்தை உடைத்துவிட்டுப் பின் வாங்கின. ஷான் ஸமஸ்தானத்திலுள்ள நிலைமையைப்பற்றி தகவல் ஒன்றும் தெரியவில்லை. சைனாவிற்கும், இந்தியாவிற்கும் இடையிலுள்ள போக்குவரத்துகளைத் துண்டிக்க ஜப்பானியர் கடும் பிரயத்தனங்களைச் செய்கின்றனர்.

இருந்தாலும் 20 முதல் 25 சதவிகிதம் வரை ஜப்பானியருக்கு விமானங்கள் நஷ்டம்.

அமெரிக்க பாம்பர் விமானங்கள் ரெங்கூன் துறைமுகத்தைத் தாக்கின அக்யாப்பின்பேரில் எதிரி விமானப்படையெடுப்பு நேர்ந்தது.

லாஷியோ எதிரி வசமானதால் பர்மா ரஸ்தாவிற்குப் பதிலாக வேறு ரஸ்தாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. விமான மூலமாகவே சாமான்கள் அனுப்பப்படுகின்றன.

**சைனா.**—கிழக்குப் பக்கமாகச் சீனர்கள் பெரும் தாக்குதலைச் செய்கின்றனர். ஷாங்கெய், நான்கிங், ஹாங்சௌ, வின்ஷங், நின்கோ, அமாய் முதலிய இடங்களிலும் படையெடுப்புகளைச் செய்தனர்.

**தென் மேற்குபஸிபிக்.**—சிலகாலமாகப் பிரமாதமாக எதிர்த்து நின்றும் செவ்வாய்க்கிழமை காரிஜிடார் எதிரிவசமாயிற்று. அங்கிருந்து ஜெனரல் வெயின் ரைட்டிற்கு ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்தி மிகவும் தேருதலைச் செய்கிறது.

“ சமீப வாரங்களில் எதிரிகளின் பீரங்கிகளையும், விமானங்களையும் எதிர்த்து நின்ற விவரத்தை நான் ஆச்சரியத்துடன் ” கவனித்துக்கொண்டுவந்திருக்கிறேன்.

" தனியாக ஒதுக்கப்பட்டும், உணவு, ஆயுதம், முதலியவை கிடைக்காமலும் நீங்கள் இருந்து உலகத்திற்கே ஒரு திருஷ்டாந்தமாக இருந்திருக்கிறீர்கள். ஓயாத தைரியமும், மனோவலியும், பெற்றிருக்கிறீர்கள்.

" கடும் நிலைமைகளில் பொறுமையாக இருந்து தலைமை வகித்துவருவதால் உமது கடமையைச் சரிவர செய்து வந்தீர்.

" பிலிப்பைன்ஸில் நமது படைகள் நடந்து வந்த விதம் மற்ற இடங்களிலும் கப்பல்களிலும், நமது மானுபிகள் உதாரணமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

" கப்பல் தளங்களிலும், தளவாடசாலைகளிலும் இரட்டிப்பு மடங்கான முயற்சி செய்யப்படுகிறது.

" நீரும் உமது படைகளும் தைரியமாக சண்டை செய்வதே நமது யுத்த முயற்சியையும், நாம் அடையப்போகும் வெற்றியையும் குறிக்கிறது.".

**மெடகாஸ்கர்.**—பிரிடிஷ் கப்பல், தரை, ஆகாயப்படைகள் ஒத்துழைத்து செவ்வாய்க்கிழமை மெடகாஸ்கரில் புகுந்தன. தனிப்பட்ட படைகளும் இதில் சேர்ந்திருக்கின்றன. கடல் விமான பந்தோபஸ்துடன் கூரியர் குடாவில் பிரவேசித்து டீகோஸ்-ஸ்ராஸ் என்ற கப்பல் தளத்தை நோக்கிச் செல்லுகின்றன. உடனே சரண் அடையும்படி அங்கிருந்த விஷியின் பிரதிநிதிக்கு அனுப்பிய உத்தரவிற்கு "முடிவுவரை எதிர்க்கப்போவதாக" பதில் வந்திருக்கிறது. ஆகவே சண்டைகள் நடக்கின்றன.

நேச நாடுகளின் சார்பாக ஜப்பானியர் பயத்தை நிவர்த்திக்கவும் இவ் வாக்கிரமணம் செய்யப்பட்டிருக்கிறது. மெடகாஸ்கர் இந்துமகா சமுத்திரத்திற்குப் பிரவேசிக்கும் ஸ்தலத்தில் இருப்பதால் ஆபிரிக்காவை கடல், விமான மூலமாகத் தாக்குவதற்கு உபயோகமாக இருக்கும்.

**ருஷ்யா.**—ஜெர்மன் கிருபர்களிடமிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து, சேறும் சகதியும் ஜெர்மானியருக்கு அதிகத் தொந்தரவு விளைவித்துவருவதாக தெரிகிறது. வெள்ளத்தினால் துருப்புகள் துண்டிக்கப்படுகின்றன. சேற்றில் ஸப்ளைப் போக்குவரவும், மோட்டார் வண்டிகளும் மாட்டிக் கொள்ளுகின்றன. ஜெர்மன் துருப்புகளும் அதிகமாக அவஸ்தைப்படுகின்றன. இவ்வாரத்தில் நடந்த சண்டையைப்பற்றி அனலிஸ்டு விமர்சகர் சொல்லுவதாவது:—" முதல் தடவையாக வந்த அறிக்கை கூறுவதாவது 'முன்னேறிப்போர்கள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. இவைகளால் ருஷ்யர்களின் நிலைமை திருப்திகரமாக ஆகியிருக்கின்றன. ஆகவே, பெரிய சண்டைகள் நடக்கின்றன. மற்ற பாகங்களைவிட தெற்கே தரை அதிகக் கெட்டியாக இருப்பதால் அங்கேதான் சண்டை அதிகம்.

**லிபியா.**—ஏதென்ஸுக்கு அருகிலுள்ள மெண்டியிலும், ரோட்ஸிலுள்ள மெரிட்ஸாவிலுமுள்ள எதிரி விமான தளங்கள் பலமாகத் தாக்கப்பட்டன. ஞாயிற்றுக் கிழமையன்று எதிரியின் காவல்படைகள் பின்வாங்கிச் செல்லும்படி செய்யப்பட்டன.

**பலவகைப்பட்டவை: ஹிட்லர்—முஸோலினி சந்திப்பு.**—புதன்கிழமை இவ்விருவர்களும் ஷால்ஸ்பர்க் என்னுமிடத்தில் சந்தித்தனர். இருவர்களும் அதிக நட்பு முறையில் நெருக்கமாகப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ருஷ்யப் போர் முனைக்கு மீண்டும் இதாலியப் படைகள் தேவையாக இருப்பதாக ஹிட்லர் அறிவித்தாலும். நைஸ், கார்ஸீகா, டுனிஸ் முதலிய இடங்களை இதாலியர் விரும்பியதை ஹிட்லர் மறுத்து விட்டாலும். பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளுக்குப் பிரகிருதமுள்ள நிலைமை அப்படியே ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று ஹிட்லர் விரும்பினான். ஏனென்றால், பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளின் மனப்பான்மை சாதகமாக இருந்தால்தான் ஆபிரிக்கா யுத்தம் சாதகமாக முடியுமென்று ஹிட்லரின் நினைப்பு.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—4—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **இரவில்.**—ராணுவ லக்ஷியங்கள் கொலோனி (Cologne) லும் இன்னும் மற்ற இடங்களிலும்—ரைன்லாந்து (Rhineland). | | | |
| | **ஜெர்மனிக்குச் சொந்தமான கப்பற் படைதளம் கப்பல் துறைகள்.**—டங்கர்க் (Dunkirk). | | | |
| | **விமான நிலயங்கள்.**—விரோதி ஆக்கிரமித்த ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries), பிரான்ஸ் (France). | | 17 விமானங்கள், | |
| | **விரோதி சாமான் ஸப்ளைக் கப்பல்.**—டென்மார்க் (Denmark) கடற்கரைக் கருகாமையில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | 2 விமானங்கள். |
| | **துணைக்கப்பல் கூட்டம்.**—ஸர்டி (Sirte) குடாவில். | ஒரு எண்ணெய்க் கப்பல் தாக்குண்டது. | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—ஸிரெனைகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | **மோட்டார் லாரிகள், பெட்ரோல் ஸப்ளை போக்குவரத்து.**—கெமினிஸுக் (Ghemines) கருகாமையில். | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம்.**—கிரீட் (Crete). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதிக் கப்பல்.**—மத்தியதரைக் கடல் (Mediterranean). | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | 12 விமானங்கள். | 20 விமானங்கள். |
| | **விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்.** போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **வேவு பார்த்தல்.**—லே (Lae). | | | |
| **28—4—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **இரவில்.**—மூன்று ஜெர்மன் யுத்தக் கப்பல்கள், ட்ரோன்ட்ஜம் (Trondhjem) கப்பற்படை தளம். | | | |
| | **விமான நிலயங்கள் இன்னும் மற்ற லக்ஷியங்கள்.**—நார்வே (Norway). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—4—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்)—தொடர்ச்சி. | | | |
| | கப்பல்கள்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக் கருகாமையில், மூட்டப்பட்டன. | பெருந்திக்கள் | | |
| | ஜெர்மன் கப்பற்படை தளம்.-கீல்(Kiel). | | | |
| | விமான நிலய்ங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | மின்சார உற்பத்திசாலை.-கென்ட்(Ghent). | | 10 விமானங்கள். | 1 விமானம். |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விரோதி போக்குவரத்து வண்டிகள்.—டென்ஜிடர் (Tengeder), மார்டோபா (Martuba), டெர்ணு (Derpa) பிரதேசங்கள். | | 2 விமானங்கள். | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஹெராக்லியான் (Heraklion). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 14 விமானங்கள். | 48 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலயம்.—வெடிமருந்து கிடங்குகள்—லே (Lae). | | | 20 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமான நிலயங்கள்.-தெற்கு பர்மா (Burma). | | | |
| 29—4—42. (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—டன்கர்க் (Dunkirk). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | இரவில்.—நோமிலுள்ள (Gnome) விமான என்ஜின் செய்யும் தொழிற்சாலை, குட்ரிச்ரப்பர் தொழிற் சாலைகள்—பாரிஸுக் கருகாமையிலுள்ள கெனிவில் லேர்ஸ் (Gennevillers). | | | |
| | கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend). | | | |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | 6 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—4—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 11 விமானங்கள். | 31 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | தரையிலுள்ள கட்டடங்கள்.—ஸலாமுவா (Salamaua). | | | 3 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கோயபாங் (Koepang). | | | |
| 30—4—42. (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விரோதி பீரங்கி ஸ்தானங்கள் கிரிஸ் நஸ் (Grisnez) க்கு சுற்றிலும். | | | |
| | துறைமுகம்.—பிளஷிங் (Flushing) | | | |
| | இரவில்.-தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | விரோதி மோட்டார் போக்கு வரத்து வண்டிகள் கூட்டம்.—ஜடபாயா-பெங்காஸி, (Jadabaya)-(Benghazi) ரஸ்தாவில். | | | |
| | லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi), பெர்க்கா (Berka), மார்டோபா (Martuba). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | தகவல் தெரியவில்லை. | 53 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரோந்து—கினி (Guinea)வின் வடகரையில். | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சைனியங்கள்.—முன்னணிப் பிரதேசங்கள், | | | |
| 1—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—விரோதிக் கப்பல்கள், நார்வீஜியன் கடற்கரை. | ஒரு நாசகாரி தாக்குண்டது. | | |
| | விமான நிலயங்கள்—வட பிரான்ஸ் (France). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—5—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயம்—பார்ஸுக் (Barce) கருகாமையில். | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனேகா (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | **ரோட்ஸ் (Rhodes)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—மாரிட்ஸா (Maritza). | | | |
| | **லெரோ (Lero) தீவு**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | நீர்மூழ்கி கப்பலின் தளம்.—ஓலாகி (Olaki) துறைமுகம். | | | |
| | **இதாலி (Italy)**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமான நிலயம்.—மெண்டி (Mendi) ஆதேன்ஸுக் (Athens) கருகாமையில் | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும் | | 12 விமானங்கள். | 47 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்—ராபாலு (Rabaul)க் கருகாமையில். | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துலகி (Tulagi). | | | |
| 2—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு பெரிய ஜெர்மன் எண்ணெய்க் கப்பல் நார்வீஜியன் கடற்கரைக் கருகாமையில். | | | |
| | விரோதி கப்பல்கள்.—பிரான்ஸுக் கருகாமையில். | | | |
| | வெடிகண்ணிகள் பாவுவது.—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—டெர்ன (Derna), மெச்சிலி (Mechile) மார்டூபா (Martuba) பிரதேசங்கள். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விரோதி சாமான் கப்பல்.—மத்தியதரைக் கடல் (Mediterranean) கோரமாகத் தாக்கப்பட்டது. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—5—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போராங்கம் முழுவதிலும். | | 8 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு-டிமோர் (Timior) (Dutch)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கோயபாங் (Koepang). | | | |
| 3—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | காலையில்.— விமான எதிர்ப்புகள்.—கலே (Calais) பிரதேசத்தில. | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—டங்கர்க் (Dunkirk). | | 3 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | விமான நிலயம்.—அபிவில்லி (Abbeville). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், கப்பல் கட்டுமிடங்கள்—ஹாம்பர்க் (Hamburg). | பெருந் தீக்கள் மூட்டப் பட்டன. | | |
| | நீர்மூழ்கி தளம்.—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| | வெடிகண்ணிகள் பாவுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries), வட பிரான்ஸ் (France). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்—நார்வே (Norway) கடற்கரைக் கருகாமையில். | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.— நார்வே (Norway) கடற்கரைக்கருகாமையில். | | 5 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனேகா (Cyrenaica)வின் முன்னணிப்பிரதேசங்கள். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச்சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 12 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—நியூகினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமான நிலயம்—லே (Lae). | விரோதி விமானம் சேதமாயின. | | |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ், விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ராபால் (Rabaul). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**28—4—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

பகலில்.—இரண்டு ஜில்லாக்கள்.—தெற்கு இங்கிலாந்து (England).

இரவில்.—நார்விச் (Norwich).

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta). — 2 விமானங்கள்.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்).

லாஷியோ (Lashio).

**29—4—42.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

இரவில்—ஒரு பட்டணம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). — 8 ஜனங்கள் கொல்லப்பட்டனர்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்).

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**தூரக்கிழக்கு**-பிலிப்பைன்ஸ் (Philippines) **தீவுகள்**.-(ஜப்பானிய விமானங்களால்).

காரிஜிடார் (Corregidor).

**30—4—42.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்.)

இரவில்.—அநேக இடங்கள்.—இங்கிலாந்தின் (England) வடகிழக்குக் கடற்கரை. — சிலர் கொல்லப்பட்டனர். — 11 விமானங்கள்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta). — 3 விமானங்கள்.

**தூரக்கிழக்கு**—ஸாலமன் (Solomon)**தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்).

துலகி (Tulagi).

**தூரக்கிழக்கு—பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**-(ஜப்பானிய விமானங்களால்).

கரிஜிடார் (Corregidor).

**1—5—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

இரவில்.—சில இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரை.

**எகிப்து (Egypt)**—(ஜப்பான் விமானங்களால்).

ஸூயஸ் கால்வாய் (Swez canal) பிரதேசம்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta). — 2 விமானங்கள்.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**2—5—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

விரோதி விமான நடமாட்டமேயில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்).

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**3—5—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு-பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்).

கரிஜிடார் (Corregidor)

**தூரக்கிழக்கு**—ஸாலமன் (Solomon) **தீவுகள்**-(ஜப்பானிய விமானங்களால்).

துலகி (Tulagi).

**4—5—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). — 5 விமானங்கள்.

இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). — 5 விமானங்கள்.

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

**தூரக்கிழக்கு—பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**-(ஜப்பானிய விமானங்களால்).

கரிஜிடார் (Corregidor).

---

## யுத்த காலத்தில் பிரிடனின் பரித்தியாகங்கள்.

### சிக்கனத்தின் சில அம்சங்கள்.

யுத்த முயற்சிக்காக பிரிடன் எவ்வாறு சிக்கனமான முறைகள் கையாளுகிறது என்று "டேய்லி எக்ஸ்பிரஸ்" ஏப்ரல் 14-ம் தேதி பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. பிரிடன் செய்த தியாகங்களில் சிலவற்றை அதில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவை பின்வருமாறு:—

கிரேட் பிரிடனிலுள்ள ஆண், பெண் இருவகுப்பினர்களும் தங்கள், தங்கள், ஆவி, உடல், பொருள், ரொக்கம் வகையராவையும் அரசாங்கத்தார் வசத்திலேயே ஒப்புவித்தார்கள். அவர்களில் யாரேனும் ஒருவர் ஏதாவது காரியத்தை சாதிப்பதற்காக எந்த இடத்திற்கு வேண்டுமென்றாலும் அனுப்பப்படுவார். அரசாங்கத்தார் பாங்குகளின் வரவு செலவு திட்டங்களை மேல் பார்க்கவும், வியாபாரி

கள், இன்னும் இதரர்கள் அவைகளில் போட்டு வைத்திருந்த பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி திட்டம் போடவும் முதலிய சில அலுவல்கள் செய்கிறார்கள். பொதுமக்களின் சொத்துக்கள், நிலங்கள் யாவும், சாதாரணமாக எந்த உபயோகத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படும். முக்கியமாக சில சொத்துக்கள் அழிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவை அழிக்கப் பட்டுவிடும்.

முக்கியமான தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளிகள் கொள்ளையடிக்கப் படமாட்டார்கள். தொழில் இலாகா மந்திரிகள் அனுமதியன்னியில் அவர்கள் தங்கள் வேலைகளை மாற்றிக்கொள்ள முடியாது. 20 முதல் 31 வரை வயதுள்ள ஸ்திரீகள் எந்த விதமான வேலையில் அமரவோ அல்லது ஒரு வேலைக்கு பதிலாக வேறு வேலையில் அமரவோ தொழிலாளி இலாகா அனுமதியில்லாமல் முடியாது. தொழிலாளிகளின் வேலை நிற்பாட்டம் முதலியவைகள் தடைபட்டு விடும். மேலும் திறமை வாய்ந்த வேலைக்காரர்களுடன், அனுபவமில்லாத தொழிலாளி களையும் சேர்த்து அனுப்புவதற்கு தொழிலாளர் சங்கம் பெரும்பாலும் ஒப்புக் கொண்டது. அரசாங்கத்தாருக்கு இஷ்டமிருந்தால் கைதிகளும், குற்றவாளி களும் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். வேலைசெய்ய அசிரத்தையும் செய்கிறவர்களும், வேலைக்கு வராதவர்களும் அபராதத்துக்குட்படுவார்கள். மேலும் அவர்கள் காவலிலும் வைக்கப்படுவார்கள். வேலைத்திறமை வாய்ந்தவர் கள், விஞ்ஞான சாஸ்திரிகள், என்ஜினியர்கள் இவர்கள் கட்டாயம் தொழிற்சாலை களில் ஈடுபட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவ்விதம் சேரத் தவறினால் ஒவ்வொருவருக்கும் 100 பவுன் வீதம் அபராதம் விதிக்கப்படும். சாமர்த்தியமற்ற யுத்த நிர்வாகங்கள் மீண்டும் திருத்தி அமைக்கப்படும்.

யுத்தம் ஆரம்பித்தவுடனே எல்லா தங்க பாளங்களையும் கொண்டு வந்து மாற்றி அவைகளுக்குப் பதிலாக அயல்நாட்டு நாணயங்கள் சேமிக்கப்பட்டன. பணத்தை அயலாருக்கு அனுமதியன்னியில் ஏற்றியனுப்ப முடியாமல் போய் விட்டது. அதனால் ஒரு தேசத்திலிருந்து வேறொரு இடத்திற்கு ஒருவரும் 10 பவுனுக்கு மேல் கொண்டு செல்லமுடியாது. இதே தடையுத்தரவின் கீழ் நகைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பமுடியாது.

இதற்குமுன் ஒவ்வொரு இங்கிலீஷ்காரரின் வீடும் ஒரு கோட்டையைப் போல் பத்திரமாய் உள்ளவை என்று சொல்லலாம். ஆனால் இனிமேல் அவ்விதம் இருக்க முடியாது. ஏனென்றால் அவன் தன் வீட்டினில் மூற்றிலும் விளக்கணைப்பு திட்டத்தைக் கையாளவேண்டும். அல்லது அவனுடைய வீடு உடைக்கப்பட்டு அங்குள்ள மின்சார விளக்குகள் அணைக்கப்பட்டுவிடும். மேலும், அவன் ஏராளமாக உணவுப் பொருள்களையும் அல்லது பங்கு விகிதத்தில் கிடைக்கக்கூடிய பொருள்களையும் சேமித்து வைத்திருப்பதாக சந்தேகம் ஏற்பட்டால், அவனுடைய வீட்டில் உடனே பலவந்தமாக பரிசோதனை செய்யப்படும்.

நெருப்பு ஏற்படாமல் பாதுகாக்கவும், தற்காப்பு வேலைகளையும் கட்டாய மாகச் செய்யவேண்டி நிர்ப்பந்திக்கப்படுவார்கள். அகண்ட பிரதேசங்களில் உள்நாட்டு பாதுகாப்பு வேலையும் கட்டாயப்படுத்தப்படுகிறது. ரொட்டி, காய் கறிகள், மீன் முதலியவைகளை விட மற்றப்படி எல்லாவித உணவுப்பொருள்களும் பங்கிட்டு சுவுப்படி கொடுக்கப்படுகின்றன. இவ்விகிதத்தை மீறி உணவுப்பொருள் களைத் தாங்களே சொந்தமாக உற்பத்தி செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. குடியானவர்கள் நிலங்களில் எந்த பாகத்தையும் உழுது சாகுபடி செய்யலாம். ஆங்காங்குள்ள விவசாய சங்கங்கள் குறிப்பிட்ட பிரகாரம் தானியங்களை விளைவிக்கவேண்டும். அந்நிலங்களைக் குடியானவர்கள் சரியான படி உழுது, சாகுபடி செய்து போதிய அளவு வெள்ளாமை உற்பத்தி செய்ய முடியாமல் போனால், அவர்களைவிட்டு அந்நிலங்கள் எடுக்கப்படும்.

ரயில் பிரயாணம் பெரும்பாலும் நிறுத்தப்பட்டு விட்டது. ரயில் வண்டி களில் துருப்புகள் ஏற்றவும், வெடிமருந்து, யுத்த தளவாடங்கள் இவைகள் ஏற்றியனுப்ப வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. அங்கே சிற்றுண்டிகள் சாப்பிடு வதற்கான வண்டிகள் மிகவும் குறைவு. தங்குவதற்கான [illegible]



வண்டிகள் கிடையாது. முக்கியமாக தேசசேவைக்காகத்தான் ஜனங்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வார்கள். அதிலும் முக்கியமான விஷயங்கள்தான் முதலில் கவனிக்கப்படும். ஸீஸன் டிக்கட்டுகளை விட குறைந்த சார்ஜில் செல்வதற்கான டிக்கட்டுகள், தொழிலாளிகளுக்கான டிக்கட்டுகள், சமீப தூரமுள்ள இடங்களுக்கு தினசரி போய் வருவதற்கான டிக்கட்டுகள் இவை யாவும் எடுக்கப்பட்டுவிட்டன.

பல தேசங்களிலுள்ள விஸ்தாரமான இடங்களில் தற்காப்பு சாதனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு காரியமில்லாமல் ஒருவரும் செல்வதற்கு முடியாது. இன்னும் பொதுமக்கள் எக்காரணத்தை முன்னிட்டும் வரக்கூடாத பிரத்யேகமான சில இடங்களும் உண்டு. அவ்விடங்களில் வெகுகாலமாக இருந்து வந்த ஜனங்களும் வெளியேற்றப்படுவார்கள். பெட்ரோல் சிக்கனத்தால் பிரைவேட் மோட்டார்கள் செல்வதற்கு முடியவில்லை. மேலும் பெட்ரோல் [illegible]னால் மோட்டார்களில் உல்லாசப் பிரயாணங்கள் செய்யவே முடியாமல் போய்விட்டது.

வெகுதூரமாக சாமான்கள் வாங்குவதற்கெல்லாம் வரிகள் உண்டு. ஆகாராதி களுக்கு மட்டுமே வரி கிடையாது. பெரும்பாலும் சாமான்களின் மொத்த விலையில் மூன்றில் ஒரு பங்கு வரி செலுத்தவேண்டிவரும். இன்னும் சில சாமான் களுக்கு ஆறில் ஒரு பங்குதான் வரி. அவ்வித வரியும் அத்தியாவசியமில்லாத மற்ற செலவு மிகுந்த சாமான்களுக்கு மட்டில் போடப்பட்டதல்ல. இன்னும் மற்ற அவசியமான சாமான்கள், ஆடைகள், வீட்டு தட்டுமுட்டு சாமான்கள், இன்னும் வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் இவைகளை வாங்குவதற்கும் அவ்வித வரி போடப்படுகிறது. மூன்று வருஷத்திற்கு ஒருதரம் பழைய உடுப்புக்குப் புது உடுப்பு வீதம் உடுப்புகள் பங்கு விகிதத்தில் கொடுக்கப்படுகின்றன.

வருமான வரி பவுனுக்குப் பத்து ஷில்லிங் வீதம் போடப்பட்டிருக்கிறது. அதிக வருமானத்திற்கு பவுனுக்கு 19-ஷில்லிங் 6-பென்ஸ் வீதம் உயர்த்தப் பட்டிருக்கிறது.

கடைசியாக தற்காப்பு சட்ட விதிகளின்படி எல்லாவித குற்றங்களும் தண்டிக்கப்படும். இதை விட ரெகுலேஷன் 13-Bயில் கண்ட விதிகளின்படிக்கும் மனிதனுக்கு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரெகுலேஷன் பிரகாரம் யாரேனும் ஒருவன் எதிரிகளுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டதாக சந்தேகப்பட்டால் உள்நாட்டு மந்திரியின் உத்தரவுப்படி அவன் ஜெயிலில் அடைக் கப்படுவான். பகிரங்கமாக அவ்விதம் குற்றம் செய்யவில்லை என்று அவன் சொன்னால் மட்டில் ஜெயிலிலிருந்து தப்ப முடியாது. பிரத்யேகமாக நியமிக்கப் பட்ட மாஜிஸ்திரேட்டிடம் இதைக்குறித்து அப்பீல் செய்துகொள்ள உரிமையுண்டு.

---

## பிரான்ஸில் லவாலின் செல்வாக்கு.

## அவனைப் பொருத்துள்ள அநுகூல பிரதிகூலங்கள்.

("டெய்லி மெயில்" பத்திரிகையில் பெர்டினண்டு டூகி என்பவர் லவாலைப்பற்றி பின் வருமாறு எழுதியுள்ளார்.)

### தேசவலிமை.

சண்டை துவக்கி சுமார் இரண்டு வருஷங்கள் ஆகின்றன. அதற்குள் பிரான்ஸிலிருந்து ஏராளமான போர்வீரர்கள் அயல் நாடுகளுக்கு யுத்தத்திற்காக அனுப்பப்பட்டு, இப்பால் 13,00,000 பேர்கள் யுத்தக் கைதிகளாக இருக்கின்றனர். இவ்விஷயம் பிரெஞ்சு பொதுமக்களுக்கு மகத்தான மனக்கிலேசத்தை கிளப்பு கிறது. பிடேன் ஆதிக்கத்தில் பிரெஞ்சு யுத்தக் கைதிகளை விடுவித்து மீண்டும் பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டார்கள். அவரைக் காட்டிலும், லவால் காலத்தில் இன்னும் அதிகமான கைதிகள் விடுவிக்கப்பட்டு அனுப்பப்படுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் "பிரெஞ்சு மக்களே! நீங்கள் என்னுடன் ஒத்துழைப் பீர்கள். இந்நாட்டிலிருந்து சென்ற ஏராளமான யுத்தக் கைதிகள் விடுவிக்கப் பட்டு மீண்டும் நம் நாட்டிற்கும் அனுப்பப்படுவார்கள் என்று நான் உறுதியாய்ச் [illegible] சொல்லிவருகிறேன்.

[illegible] " என்று பிரெஞ்சு மக்களுக்கு [illegible]

சமீபகாலத்தில் அங்கு ஆக்கிரமித்ததின் செலவு தினசரி 40,00,00,000
பிரான்ஸிலிருந்து 30,00,00,000-க்குக் குறைந்துவிட்டது. இன்னும் அந்தத்
தொகை குறைந்து போகலாம்.

பாரிஸிலும், விஷியிலும் இரட்டை அரசாக்ஷி ஏற்படுவதால் அங்கு சில
கஷ்டங்கள் நேரிடலாம். பிரான்ஸ் பூராவும் லவால் மயமானுல் இந்தக் கஷ்டங்
கள் குறையும். மறுபடியும் "பிரான்ஸ் தேசத்தை யுத்தரங்கமாகச் செய்ய நான்
விரும்பவில்லை. மேலும் அந்நிய நாட்டினர் நம் நாட்டில் வந்திருந்து யுத்தரங்க
மாக்க நான் விரும்பவில்லை", என்று இம்மாதிரி லவால் வாதிப்பது பலருக்கு
சம்மதத்தைக் கொடுக்கலாம்.

குடியானவர்கள் உணவுப்பொருள்களைச் சேமித்து வைத்தோ, அல்லது
பிறருக்குத் தெரியாமல் ஒளித்துவைத்தோ இருக்கிறுர்கள். இதுதான்
பிடேன் மனக் கண்ணில் பட்டினி என்ற மாயா ரூபம் தோன்றும்படி
செய்தது. ஆனுல் நாஸிகள் உதவியைக் கொண்ட லவால் ஒளித்துவைத்திருப்
போர்களிடமிருந்து உணவுப்பொருள்களைப் பிடுங்கி தன் தோழர்களுக்கு முதன்
முதலில் பங்கிட்டுக் கொடுப்பான்.

இன்னும் பிரான்ஸில் கோடிக்கணக்கான பிரெஞ்சுக்காரர்களுக்கு ருஷ்யர்
களின் பேரில் வெறுப்பும், பயமும் இருக்கிறது. பிரெஞ்சு நாட்டில் பொது
வுடமைக் கொள்கைக்கு எதிரான கொள்கையுள்ளவர்களின் கக்ஷித்தலைவராக
இருக்கும் லவால் பிரெஞ்சுக்காரர்களின் மேற்கண்ட நிலைமையிலிருந்து லாபத்தைப்
பெறலாம்.

அச்சு நாடுகள் இந்த யுத்தத்தில் வெற்றியடைந்து விட்டன என்று லவால்
விசேஷமாக வாதிக்கிறுன். ஜப்பான் வெகு விரைவாக முன்னேறிவருவது
அவன் வாதத்திற்குப் பலத்தைக் கொடுப்பதாக அவன் சொல்லுகிறுன்.

## லவாலின் பலக்குறைவு.

கீழ்க்கண்ட குறிப்புகள் லவாலின் பலஹீனத்தைக் காட்டுகின்றன. அவன்
பேரிலுள்ள வெறுப்புக்கும், அதிருப்திக்கும் காரணம் அவனுடைய செய்கைகள்
தான்.

ஹிட்லருக்கு இந்த சமயத்தில் எவ்வளவு உதவி புரிந்தபோதிலும், கடைசி
யில் பிரெஞ்சு மக்கள் சரியாக சிக்ஷிக்கப்படுவார்கள் என்ற விஷயம் பிரெஞ்சு
மக்களுக்கு முற்றிலும் தெரிந்ததுதான். பிரெஞ்சுப் பூண்டே இல்லாமல் அழித்து
விடுவதாக "மெயின்காம்பு" என்ற புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும், பிரான்ஸுக்குமுள்ள பாந்தவ்யம் முறிவடைந்
தது. ஏராளமான பிரெஞ்சு மக்கள் அமெரிக்கா பாந்தவ்யம்தான் தங்களுக்கு உயிர்
பிச்சையளிக்குமென்று எதிர்பார்த்து வந்தார்கள்.

ஜெர்மனிக்கு-பிரெஞ்சுத் தலைவர் லவால் யுத்தத்திற்கு உதவி செய்வதாகச்
சொன்னதற்கு, பிரான்ஸுக்குச் சொந்தமான மார்ட்டினீக் என்ற பிரதேசத்தில்
சேமித்து வைக்கப்பட்டுள்ள தங்கத்தையும், அந்நிய நாடுகளில் பிரெஞ்சுக்குச்
சொந்தமான பிரதேசங்களையும் ஜெர்மனி கைப்பற்றிக்கொண்டது.

இதனுல் பிரான்ஸின் ஸ்வதந்திரக் கக்ஷியினருக்கு இங்கிலீஷ்காரர்களும்,
அமெரிக்கர்களும் ஒத்தாசை யளித்து பிரான்ஸை விடுவிக்கும் வரையில்
லவாலுக்கு எதிராக மறைமுகமாக சண்டைகள் நடந்தே தீரும்.

## லவாலின் நோக்கங்கள்.

லவால் ஹிட்லருக்காக யுத்த தளவாடங்களை ஏராளமாக உற்பத்தியை அதி
கரிக்கச் செய்வதற்கும், யுத்தத் தேவைக்குத் தக்கவாறு யுத்த தளவாடங்களைத்
தயாரித்துக் கொடுப்பதற்கும் முயற்சித்து வந்தான். அவனுடைய முக்கிய
நோக்கம், "பிரான்ஸைப் பாதுகாப்பதே" யாகும், என்று சொல்லுகிறுன்.
அதாவது நேசநாடுகள் சேர்ந்து படையெடுக்காமல் இருப்பதற்காக ருண்ட்
ஸ்டெட்டின் முறைகளை அனுசரித்து தன் சக்திக்குத் தக்கபடி ராணுவ பலத்தை
பெருக்க யத்தனிக்கிறுன்?

பிரெஞ்சுக் கப்பற்படையிலுள்ள ஒவ்வொரு கப்பலையும் ஜயிக்கவேண்டும்,
லவாலும் தன்வசம் ஒன்றுமில்லாமல் போரைத் தொடங்க எத்தனிக்கவில்லை.
கப்பற்படையில் ஏற்கனவே யுள்ளவர்களுக்குப் பதிலாக புதிதாக தன் சொந்தப்
படைகளை டார்லான் சேர்த்தார். முக்கியமாக லவாலின் நோக்கம் டி காலியை
அடியோடு அழித்துவிடுவதுதான்.

## லவாலின் முறைகள்.

அதிதுரிதமாக வேலை செய்யவேண்டும் என்று லவாலுக்குத் தெரியும்.
ஏனென்ருல் அதுதான் ஹிட்லரின் முறை. பின்னல் வரக்கூடிய விஷயங்களை எதிர்
பார்த்து மிகவும் தந்திரமாக திட்டங்கள்போடக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவன்.

பிடேன் லவாலுக்கு அடங்கினவர்தான். அவரை லவாலின் கைதியென்று
கூட சொல்லலாம். எப்படியிருந்தாலும் அவர் நடவடிக்கைகள் யாவும் கவனிக்கப்
பட்டுவருகின்றன. அதனுல் அவருடைய உண்மை பலம் என்னவென்பது
லவாலுக்குத்தான் தெரியும். லவால் ஒரு தடவையில் பிடேனுல் ஏமாற்றப்
பட்டான். விசேஷ சம்பவம் நிறைந்த 16 மாதங்களுக்குப் பிறகு பிடேன்
செய்த தந்திரத்தின் பயனுக லவால் மீண்டும் அதிகாரத்தைப் பெற்றுவருகிறுர்.
இனிமேல் அவர் பிடேனிடம் வியவகாரம் வைத்துக்கொள்ளமாட்டார். பிரெஞ்சு
ராஜீய கக்ஷி பிடேனிடம் கீழ்படிந்து நடப்பதாக சபதம் செய்திருக்கிறது.
அந்தக் கக்ஷியைச் சேர்ந்த பிடேனும் லவாலுக்கு முக்கியமான சிநேகிதன்.
அந்தக் கக்ஷியில் பல்லாயிரக்கணக்கான பாஸிஸ்டு கக்ஷியினர் இருந்தபோதிலும்,
சாதாரணமாக நடுத்திரம் வாய்ந்த பொதுமக்கள், வேலைசெய்து விலகின உத்தி
யோகஸ்தர்கள், வர்த்தகர்கள் இவர்கள் அதிக எண்ணிக்கைக்கொண்டிருக்கிறுர்கள்.
இவர்கள் தான் பெரும்பாலான கக்ஷியைச் சேர்ந்தவர்கள். பிரான்ஸ் பூராவிலும்
இவர்களின் எண்ணிக்கை 15 லக்ஷம் இருக்கும். ஒவ்வொரு கிராமம் நகரம் இவை
களில் இக்கக்ஷியினர் தான் முகான்மையாக இருக்கின்றனர். "மார்ஷல்
பிடேனிடமே நம்பிக்கை வைப்போம். அத்துடன் பிரிடிஷார் பக்கமாவது
அல்லது ஜெர்மானியர் பக்கமாவது சேரவேண்டாம். ஏனென்ருல் எந்தக் கக்ஷி
வலுக்குமென்று இப்பொழுது சொல்வதற்கில்லை. யுத்த காலம் வரை
நம்முடைய பிரதேசத்தில் நடுநிலைமையுடன் இருப்போம். யுத்தம் முடிந்ததும்
நாம் நம்முடைய உரிமையை ஸ்திரப்படுத்துவோம்." இதுதான் பிரெஞ்சு
மக்களின் மனோபாவம்.

## போலீஸ் அதிகாரம்.

லவால் மந்திரி சபையின் பூரண ஆதரவை விரும்புகிறுன். அது அவனுக்குக்
கிடைக்காமல் போனுல் போலீஸ் இலாகாவை அவன் கைப்பற்றிக்கொண்டிருப்பது
அவனுக்கு உதவியளிக்கும். பிரான்ஸில் பொதுமக்களை அடக்கி ஆளுவதற்காக
டார்லான் போலீஸ் படையை பெரிய பலமாகச் செய்துவிட்டான். அந்தப்
போலீஸாருக்கு ராணுவப் பயிற்சியுண்டு. அவர்களுக்குப் பூரண முஸ்தீப்பும்
இருக்கிறது. அவர்கள் பாஸிஸ்டு கொள்கையுள்ளவர்கள். பாஸிஸ்டு கக்ஷியின
ரிடம் பொறுப்பும் இருக்கிறது. இம்மூன்று படைகளுக்கும் பொது ஸ்தாபனம்
நியமிக்க லவாலுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவனும் டி காலி
படைக்கு எதிராக உடனே சண்டை செய்யும் இரண்டாவது பிரெஞ்சுப்
படையைச் சேகரிக்க எத்தனப்படுகிறுன்.

விஷி அரசாங்கம் வெளியிட்டபடி தரைப்படை, ஆகாயப்படை, கடற்படை
இம்மூன்றுக்கும் தலைமை வகிக்க டார்லான் ஒப்புக்கொண்டுவிட்டான். டார்லா
னுக்கு லவால்மீது இருக்கும் வெறுப்பினுல் பிரெஞ்சுக் கப்பற்படையை பிரிடனுக்கு
எதிராக உபயோகிக்கமாட்டானென்று எண்ணுவது பிசகு. பிரெஞ்சுக் கப்பற்
படையை எப்படி லவால் உபயோகப்படுத்தப்போகிறுன் என்பதற்குப் போட்டி
ருக்கும் திட்டம் ஏற்கனவே வெளியாகியிருக்கிறது. "பிரான்ஸையும், பிரெஞ்சுக்
சாம்ராஜ்ய நாடுகளையும் யார் எதிர்த்தாலும் பாதுகாப்பதற்காகத்தான், பிரெஞ்சுக்
கப்பற்படை பலம் உபயோகப்படுத்தப்படும்" என்பது அவனுடைய கொள்கை.
இதனுல் யுத்தக் கப்பல்களை லவால் அவன் நினைக்கும் இடத்திற்கு அனுப்பக்கூடும்.
கடல் யுத்தம் நேர்ந்தால் அவன் போர்செய்யத் தயாராகயிருக்கிறுன். கடல்
போர் வேண்டுமென்றும் அவன் விரும்புகிறுன்.

## ஆக்கிரமித்த ஐரோப்பா ஹிட்லருக்கு உதவி புரியுமா? ருஷ்யாவிற்கு எதிராக நடக்கும் யுத்தத்தில் அவைகளின் தன்மை.

## பிரிடிஷ் விமானத் தாக்குதல்களும், அதனால் பிரெஞ்சுக் காரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனப்பான்மையும்.

[விண்ட்லே பிரேசர் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது].

ஜெர்மன் ஆக்கிரமித்த பிரதேசங்களிலுள்ள பொதுமக்கள் ஹிட்லருடன் சேர்ந்து, கடைசித் தடவையாக பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு ஹிட்லர் மீண்டும் ருஷ்யாவின்பேரில் போர் துவக்கினால் அவருடன் சேர்ந்து கொள்ளுவார்களா என்பதுதான் பிரச்னை.

இதுதான் மிகவும் முக்கியமான அம்சம். ஹிட்லருக்கு இறுதியில் வெற்றி, தோல்வி என்பது இவ்விஷயத்தைப் பொருத்திருக்கிறது. ஏனென்றால் ஐரோப்பிய நாடுகள் யாவும் ஜெர்மனிக்கு உதவியாகயிருந்து ருஷ்யாவிலுள்ள பொதுவுடமைக் கக்ஷியை எதிர்த்து அந்நாட்டுடன் போர்புரிய முற்பட்டால், அப்பொழுதுதான் எதிரியின் கை வலுக்கும். இதுவரையில் இருந்திருந அவ்வளவு மகத்தான பலம் சேர்ந்திருக்க முடியும். 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் ஜெர்மனியின் யுத்த முயற்சிக்குச் சாதகமாக ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸெகோஸ்லோவாகியா இம்மூன்று நாடுகளின் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் யுத்த தளவாடங்களைத்தான் உபயோகப்படுத்தமுடிந்தது. ஆனால் ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஜெர்மனியுடன் சேர்ந்தால் அது மிக்க பலமுள்ள தேசமாய் விளங்கும்.

ஹிட்லரின் பிரசாரத்தினால் ஐரோப்பா முழுவதும் அவன் பக்ஷத்தில் சேர்ந்துவிடாமல் போனால் ஹிட்லர் நடத்திவரும் யுத்தம் நீடித்திருக்கவாவது அவனுக்கு அனுகூலம் கொடுக்கக் கூடியதாகவாவது இருக்கமாட்டாது. ஐரோப்பிய ஜனங்களுக்கு பொதுவுடமை ஆக்ஷியிலிருக்கும் பயத்தைக் காட்டிலும் தேசிய சம உரிமைக் கொள்கையில் இருக்கும் அருவெருப்பானது அதிகமாக இருந்தாலும், சென்ற 20 வருஷங்களாக ஐரோப்பிய ஜனங்களின் பெரும்பாலோர் இதனால் பாதிக்கப்படவில்லை. ஆகையால் இப்பொழுதுள்ள பிரச்னை என்னவென்றால், இந்த சந்தர்ப்பத்தில் ருஷ்யாவுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள பொதுமக்களின் தன்மை எவ்விதமாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால் ஜெர்மன் பொதுமக்கள் யுத்தத்தில் அருவருப்பும், மனத்தளர்ச்சியும் அடைந்திருந்தாலும் பெரும்பாலும் அவர்கள் ஹிட்லரின் இஷ்டத்திற்கு விரோதமில்லாமல்தான் நடந்துகொள்ளுவார்கள்.

இக்கோடைகாலம் முடிவதற்குள் ஜெர்மனியிலேயே யுத்தம் துவங்கும் என்பதில் சந்தேகமில்லை. தன்னுடைய மக்கள் தனக்குவேண்டிய உதவியளிக்க ஏற்பாடு செய்வார்கள் என்று ஹிட்லர் நம்பியிருக்கிறான். ஆனால் அவ்வித உதவியும் தாத்காலிகம்தான். ஏனென்றால் ஹிட்லர் இவ்யுத்தத்தில் சரியானபடி தோற்றுப்போய்விடும் வரையில்தான் ஜெர்மன்மக்கள் அவனுக்கு உதவி செய்வார்கள். பிற்பட்டு அவனுக்கு யாதொரு உதவியும் கிட்டாது.

### உணவுப் பொருள்கள் கொள்ளை.

அவன் முடிவான வெற்றியடைய வேண்டுமென்றால், ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளின் பூரண உதவியும் தேவையாயிருக்கும். அதாவது இதாலி, பிரான்ஸ், ஸ்காண்டிநேவியா, ஹாலந்து, பெல்ஜியம், ஸெகோஸ்லோவாகியா, ஹங்கேரி, பால்கன் நாடுகள் முதலிய இடங்களிலிருந்தும் உதவி வரவேண்டும். ஏற்கனவேயே இந்நாடுகளிலிருந்து மூன்று வழிகளில் அவன் உதவியடைந்து வருகிறான்.

அவர்கள் வசமுள்ள உணவுப் பொருள்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. அதுதான் முதலாவது வழி, அது முக்கியமான உதவிதான். அதுவும் வரவரக் குறைந்துகொண்டேவருகிறது. உணவுப் பிரச்னை விஷயமாக ஹிட்லருக்கு குறுகிய நோக்கம் இருந்துவந்திருக்கிறது. சமீபகாலம் வரை ஹிட்லர் குறுகிய கால யுத்த திட்டத்தையே போட்டிருந்தான். அவனுக்குத் தேவையான பொருள்கள் யாவையும் தான் ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளிலிருந்து வேண்டிய அளவு கைப்பற்றிக் கொண்டுவிட்டான். இப்பொழுது மீண்டும் அந்நாடுகளை உணவுப்பொருள்கள் ஸப்ளை செய்யும்படி நிர்ப்பந்திப்பதில் நிஷ்பிரயோஜனமாகத் தான் முடியும்.

அக்காரணத்தை முன்னிட்டுத்தான் ஜெர்மானியர்களுக்கு உணவுப் பொருள்கள் ஸப்ளை செய்யும் திட்டத்தைக் குறைத்துவிட்டான். ஜெர்மானியர்கள் உணவு திட்டத்தைக் குறைத்ததினால் வரும் கோடை காலத்திலாவது, சரத் காலத்திலாவது ஜெர்மானியர்களின் பலம் குறைவுபட்டுவிடும். அப்பொழுது ருஷ்யாவின் பேரில் இரண்டாவது தாக்குதலும் பயனற்றுப்போனது வெளிப்படையாகத் தெரியவரும்.

### முடிவான அம்சம்.

உணவுப்பொருள்களுக்காக மட்டில் ஹிட்லர் ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளின் உதவியை நாடவில்லை. மேலும் அங்குள்ள பல லக்ஷக்கணக்கான தொழிலாளிகளை ஜெர்மனியிலுள்ள ஆயுத தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் வேலைசெய்ய தூண்டி வருகிறான். இவர்களில் சிலர் உயர்ந்த சம்பளம் தருவதாகவும், மற்றபடி உயர்தர வாழ்கை நடத்துவதற்கான சாதனங்கள் அளிப்பதாகவும் ஆசை வார்த்தைகள் காட்டப்பட்டு ஜெர்மனிக்கு அழைத்துப்போகப் பட்டார்கள். இன்னும் அங்கு ஊரிலேயே தங்கினால் உணவில்லாமல், பட்டினியாகக் கிடைக்கவேண்டிவரும் என்ற பயத்தை ஊட்டி ஜெர்மனிக்கு வரும்படி செய்துவிட்டார்கள்.

ஹிட்லர் ஜயிப்பான் என்று அவர்களுக்கு உண்மையில் எவ்வாறு நம்பிக்கை ஏற்படுகிறதோ அதற்குத் தக்கவாறுதான் அவர்கள் இந்த யுத்தத்திற்கு உதவி செய்வார்கள். அல்லது ஹிட்லர் எவ்வளவு தூரம் ஜயமடைய வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களோ அதற்குத் தக்கபடி அவர்கள் உதவி செய்வார்கள்.

இப்பொழுது பிரெஞ்சு, பெல்ஜியன் தொழிற்சாலைகள் அல்லும் பகலுமாக வேலைசெய்து வருகின்றன. ஜெர்மன் சைனியத்திற்கும், விமானப் படைக்கும் தேவையான யுத்த தளவாடங்கள், பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள் யாவும் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. எப்பொழுது பார்த்தாலும், பிரெஞ்சு துறைமுகங்களில் ஜெர்மன் நீர்மூழ்கிகள் தயாரில் இருந்துவருகின்றன. டேனிஷ் மக்களும், பால்கன் நாடுகளிலுள்ளவர்களும், கோதுமை இன்னும்மற்ற தானியங்களையும் விளைவித்து ஏராளமாக ஜெர்மனிக்கு ஏற்றியனுப்புகிறார்கள்.

ஹிட்லருக்கும் அவனுடைய முக்கிய எதிரிகளுக்கும் முடிவான யுத்தம் ஆரம்பிக்கும் பொழுதுதான் ஜெர்மனிக்குப் பாடுபடும் பல நாட்டினர் வெளித்தோற்றத்திற்காக மட்டில் உதவி செய்துவருவதாகக் காட்டிக்கொள்வார்கள்.

### பிரெஞ்சு மக்களின் மனோபாவம்.

ருஷ்ய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மேற்சொல்லிய ஜனங்களின் மனோபாவம் என்ன? இக்கேள்விக்கு தக்கபதிலைத் தெரிந்துகொள்ளுவதற்கான சில அம்சங்கள் இருக்கின்றன. கொஞ்ச நாட்களுக்கு முன்பு தான் பாரிஸ் நகருக்கு வெளிப்பக்கத்திலுள்ள ரெனால்ட் தொழிற்சாலையை பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் பன்முறை படையெடுத்தன. அந்த தொழிற்சாலையிலிருந்துதான் டாங்கிகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு ஜெர்மன் சைனியங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

அப்படையெடுப்புகளின் பயனாக அத்தொழிற்சாலை தாத்காலிகமாக கொஞ்சகாலம் வரை வேலைசெய்ய லாயக்கில்லாமல் போய்விட்டது. படையெடுப்பைக் குறித்து பிரிடன் பேரில் அவதூறான வார்த்தைகளைச் சரமாரியாக ஜெர்மன் ரேடியோ ஒலிபரப்பிற்று, அதை ஒத்தே ஜெர்மன் ஆட்சிக்குட்பட்ட பிரான்ஸ் தேசத்திலுள்ள ரேடியோவும் ஒலிபரப்பிற்று.

ஆனல் ரெனல்ட் தொழிற்சாலையைப் படையெடுக்கும்படி அநேகமாக எல்லா பிரெஞ்சு மக்களும் விரும்பினர்கள். இப்படையெடுப்பில் அநேக பிரெஞ்சு மக்கள் உயிர் துறந்தனர். இருந்தாலும் நேசதேசப்படைகள் பிரெஞ்சுத் தொழிற்சாலையைச் சேதமாக்கி ஜெர்மனிக்கு யுத்த தளவாடங்கள் அனுப்ப முடியாமல் செய்ததற்காக அவர்களை பிரான்ஸில் பாராட்டினர்கள்.

அதற்கடுத்தபடியாக சமீப காலத்திற்குள் ஸெயிண்ட் நாஸேரில் விமானத் தாக்குதல் நேரிட்டன. அங்கு பிரிடிஷ் துருப்புகள் அநாகரீகமாக நடந்து கொண்டதைப் பார்த்து ஜெர்மானியர்கள் புகழ்ந்தார்கள். ஆனல் உண்மையில் பிரிடிஷ் விமானப்படை பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான பொருள்களை அழித்து, நாசமாக்கினலும் கூட, அவர்கள் பிரிடிஷ் விமானங்களின் வெற்றிகரமான செயல்களைக்கண்டு பாராட்டினர்கள் என்று இப்பால் தெரியவருகிறது.

## பெரிய ஸ்வதந்திர சைனியம்.

ஐரோப்பாவின் ஆக்கிரமித்த நாடுகளின் மனோநிலையைக் கவனிப்போம். யூகோஸ்லாவியா அச்சுநாட்டினர்களின் ஆதிக்கத்தில் வந்துவிட்டாலும், அங்கு ஆக்கிரமிப்புக்காரர்களை எதிர்த்து ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காக ஒரு சைனியம் தயாரில் இருந்துவருகிறது. ஜெர்மன், இதாலிய வீரர்கள் ஏராளமாக போர்முனையில் உயிர்துறந்தாலும், ருஷ்யப் போர்முனைக்கு ஜெர்மன் உதவிச் சைனியம் போய் சேராமல் அது தடுத்துவருகிறது. யூகோஸ்லாவியாவிலிருக்கும் பொதுமக்களிடம் நாஸிகளும், பாஸிஸ்டு கக்ஷியினரும் எவ்வளவு மிருகத்தன்மையுடன் நடந்து கொண்டாலும் கூட வெகு தைரியத்துடன் ஜெர்மன் தளகர்த்தர் மிக்கெயிலோ ரிட்சின் தலைமையின் கீழுள்ள மனிதர்களை விரட்டியடித்து வருகிருர்கள்.

கடைசியாக ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா இந்நாடுகளின் மனோபாவத்தைக் கவனிப்போம். இம் மூன்று தேசங்களும் ஹிட்லருடன் சேர்ந்துகொண்டன. அத்தேசத்தினர்கள் யாவரும் அச்சுநாட்டினர்கள் என்று சொல்லப்படுகிருர்கள். ஆனல் ஹிட்லர் நடத்திவரும் இந்த யுத்தத்தில் ஒரு தேசத்தினருக்காவது உற்சாகமே கிடையாது என்பது திண்ணம்.

---

# நாஸிகளின் இனிய சொற்களும், கொடிய செய்கைகளும்.

---

(ரெனிஸ்மித் என்பவரால்).

நாஸிகள் புகழ்ச்சியாகவும், தேனொழுகும் வார்த்தைகள் சொல்லும்பொழுது தான் நாம் உஜாராக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாஸிகள் மிகவும் கொடுமையாகயிருப்பார்கள். நாஸிகள் அனுஷ்டித்துவந்திருக்கும் முறைகளைக் கவனித்தாலும், தேசத்தாரை துரிதமாக அடியோடு அழித்துவிடும் வேலை செய்வதற்கு முன்னல் இம்மாதிரி வார்த்தைகளை பிரயோகிக்கிருர்கள்.

ஜெர்மனி ஆக்கிரமிப்பதற்கு முன்னல் ஒரு தேசத்தாரை ஜயிக்கவும், அவர்களுக்குள் அழிவு உண்டாக்கவும் செய்வதற்கு முன்னதாகவே ஜெர்மானியர்கள் செய்துவரும் பிரசாரத்திலிருந்து இன்ன விஷயத்தைக் குறித்து அவர்கள் அப்படிச் சொல்லிவருகிருர்கள் என்பதில் கொஞ்சம் வெளிப்படையாகத் தெரியும். அதிலிருந்து எந்தக் காரியத்திற்காக அவ்விதம் செய்கிருர்கள் என்பதை நாம் கண்டுகொள்ளலாம். ஜெர்மன் ரகசிய வேலையிலும், முதல்தர சிற்றுண்டி சாலைகளிலும், நல்ல நிலைமையில் இருப்பவர்களின் வீடுகளிலும், சாதாரணமாக வியாபார நடவடிக்கைகளிலும், சில எழுத்தாளர்களிடமும், பத்திராதிபர்களுடனும் ரகசிய ஏற்பாடுகள் செய்துகொண்டும், பேதக்கக்ஷிகளின் தலைவர்களிடமும், நாடுகளில் பொறுப்புவாய்ந்தவர்களில் அதிருப்தி அடைந்தவர்களிடமும் நாஸிகள் பிரசாரம் செய்து அவர்களை அடிமையாக்கப் பிரயத்தனப்படுகிருர்கள்.

## மறைமுகமான பிரசாரம்.

ஜெர்மனியில் வெளிப்படையாகப் பிரசாரம் செய்வது மிகவும் குறைவு. ஆனல் மறைமுகமாக பெரும்பாலும் தொடர்ந்தாற்போல் அங்கு பிரசாரம் செய்யப்படுகிறது. ராணுவ விஷயங்களில் பொய் சொல்லுவது ஒரு பிரமாத காரியமல்ல. "எவ்வளவுக்கெவ்வளவு ஜாஸ்தியான பொய்யைச் சொல்லுவதால் அதை ஜனங்கள் சந்தேகிக்காமல் நம்பிவிடுகிருர்கள்" என்று ஹிட்லர் 'மெயின்காம்பு' என்ற புஸ்தகத்தில் எழுதியுள்ளார். அதைப்போலவேதான் ஜெர்மனி முழுப் பொய்யான சமாசாரங்களையே மாமூலாகவே பிரசாரம் செய்துவருகிறது. காலம் சென்ற கிரேட் பிரிடனின் நெவில் சேம்பர்லின் மூனிச்சுக்குச் சென்றபொழுது, அவரை சமாதானத்தை விரும்பும் மனிதன் என்று வரவேற்றுப் பாராட்டினர்கள். அதற்குமுன் ரிப்பன்டிராப் சொல்படி ஜெர்மன் தூதர்களும், கபடமில்லாத அநேக இலாகாக்களிலிருந்தும் சமாதானங்களைக் குறித்துப் பேசப்பட்டுவந்தது. ஹிட்லரும் சமாதானத்தைக் குறித்து அப்பொழுது முடிவாகப் பேசினன்.

[illegible] தேனொழுகும் வார்த்தைகளைச் சொல்லி பிற்பாடு நேர்விரோதமாக கொடிய செயல்களைக் கையாளுவதே ஜெர்மனியின் வஞ்சகமான நோக்கம். உதாரணமாக ஜெர்மனி ஸெக்கோஸ்லோவாகியாவுக்கு ஸ்வதந்திரம் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டே திடீரென்று தாக்கி அதைக் கைப்பற்றிக்கொண்டது. அதேபோலவே ஷூஷ்னிக் என்பவருக்கு ஆசை வார்த்தைகள் சொல்லி, பெர்ச்சட்ஸ்காடன் என்ற இடத்திற்குத் தன்னைப் பார்க்க வரும்படி ஹிட்லர் தூண்டினன். அவ்விதம் ஹிட்லரின் வலையில் அவர் அகப்பட்டவுடன், திடீரென்று ஆஸ்திரியாவைத் தாக்கி அதையும் ஹிட்லர் கைப்பற்றிக்கொண்டான். இவ்விதமாகவே ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் ஆசை வார்த்தை காட்டியே ஒவ்வொன்றையும் மோசம் செய்து தன் வசமாக்கிக்கொண்டான். டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் இந்நாடுகளுடன் சமாதானமாகவும், சிநேகபாவத்துடனும் இருந்து வருவதாக ஜெர்மனி அடிக்கடி உறுதிமொழிகள் கொடுத்துவரவில்லையா? மேற் சொல்லிய சிறு தேசங்கள், ஜெர்மனிக்கு விரோதபாவத்துடன் அதற்கு எதிராக கிளம்பினதினல்தான், அந்நாடுகளைப் பாதுகாப்பதற்காகவே ஜெர்மனி பொறுப்பு எடுத்துக்கொள்ள நேரிட்டது என்று உத்தியோக முறையில் வெளிவந்த அறிக்கைகளில் முடிவான விஷயமாகச் சொல்லப்படவில்லையா? நார்வே தேசத்தினர்கள் குருடர்களாய் இல்லாமல்போனல், வெகு சாமர்த்தியமாகத் தயார்செய்யப்பட்ட நார்வே படையெடுப்பை ஜெர்மனி சிநேக முறையிலும், அமைதியைக் கோரியும், நார்வேக்கு ஸ்வதந்திரம் கொடுக்கவேண்டியும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை உண்மையானவை என்று எண்ணியிருப்பார்களா?

## எது கிடைத்தாலும் போதும்.

நாஸிகள் நல்லது, கெட்டது என்று பார்க்கமாட்டார்கள். குழப்பம் உண்டாக்கவும், ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியைக் குறைக்கவும், தேசத்தார்களின் ஒற்றுமையைக் குலைக்கவும் நாஸிகளுக்கு எது கிடைத்தாலும் போதும். எந்தப்பக்கத்திலிருந்தும், யாராயிருந்தாலும் இந்த சந்தர்ப்பங்களில் அவர்களுக்காக வேலை செய்தால் அவர்களுக்குத் திருப்திதான். லண்டனில் ஸ்வதந்திர பிரெஞ்சு கக்ஷித்தலைவர் டிகாலி அன்று பேசும்பொழுது, ஜெர்மானியர்கள் இனிய வார்த்தைகள் சொல்லி, தீயச்செயல்களைச் செய்வார்கள் என்பதை அவர் தெளிவுறச் சொல்ல நான் கேட்டேன். அந்த ஸ்வதந்திர பிரெஞ்சுக் கக்ஷியை சண்டை செய்வதற்கான பிரெஞ்சு இயக்கம் என்று சொன்னல் அவருக்கு ரொம்ப திருப்தி. 1933-ம் வருஷம் முதற்கொண்டு பிரான்ஸ் அழிந்துபோய், விஷி அரசாங்கம் ஏற்படும்வரை நடந்த நாஸி பிரசாரத்தை விவரித்துச் சொல்லுவது முடியாத காரியம். ஜெர்மனி உண்மையில் பிரான்ஸில் என்ன செய்தது என்பதையும், தனிப்பட்ட பிரெஞ்சு மக்கள், அந்த வார்த்தைகளுக்குத் தக்கபடி எப்படி நடந்துகொண்டார்கள் என்ற விஷயம் துப்பறியும் கதைகள், நாவல்கள் இவைகளில்கூட காணமுடியாது. நாஸிகள் பிரசாரத்தைப்போல் தேச சரித்திரத்தில் கேட்டதே இல்லை. ஜெர்மனியால் அழிக்கப்பட்ட தேசங்களில் இனிய வார்த்தைகளைக் கொண்டு மாத்திரம் வெற்றி கிடைக்கவில்லை. பிரான்ஸில் விஷி அரசாங்கம்

ஏற்பட்டபோதிலும், முன்னிருந்த அரசாங்க மந்திரிகளின் குற்றத்தை விசாரணை நடைபெற்றுவருகிறது. அதற்கு மாறாக பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த டிகாலி என்பவர் சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார். இவர்களுக்கிடையே பிரான்ஸ் தேசத்தினர் அடிமையாக்கப்படுகின்றனர்.

நாஜி நடவடிக்கைகளைப்பற்றி பின்வருமாறு டிகாலி எழுதியிருக்கிறார். சில குற்றங்கள் வெகுதந்திரமாக நடைபெறுகின்றன. அதைப்பார்த்து நியாயமாக நடக்கக்கூடிய மனிதர்களுக்குக்கூட வியப்பைக்கொடுக்கும். விஷி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் யாவும் நாஜிகளின் சூழ்ச்சிகளேயாகும். இதனால் ஹிட்லரின் சாமர்த்தியத்தைக் கண்டு புகழாதவர் ஒருவருமிருக்கமாட்டார்கள் என்று டிகாலி அபிப்பிராயப்படுகிறார். பிரான்ஸைக் காட்டிக்கொடுத்ததற்காக அது ஹிட்லரைப் பழிவாங்கவேண்டுமென்று இருக்கிறது. இதற்காக ஸ்வதந்திர பிரெஞ்சு மக்கள் இன்னும் விடாமல் யுத்தம் செய்துவருகிறார்கள். பிரெஞ்சு பிரதேசங்களில் சைனியங்களைத் திரட்டி, ஒவ்வொரு போர்முனையிலும் மிகவும் வீரத்துடன் போர்புரிந்துவருகிறார்கள். எதிரி மறுபடியும் தலைநகருக்கு வந்து விட்டால் வேறு வினைவேண்டியதில்லை. இதனால் விளையக்கூடிய பயனை ஒருவரும் தடுக்கமுடியாது. 1789-ம் வருஷத்தில் பிரெஞ்சு மக்களின் பெரிய கலகம் ஒன்று ஏற்பட்டது. 1942-லும் பிரான்ஸில் அம்மாதிரியான பெரிய கலகம் 'ஏற்படும் என்று டிகாலி குறிப்பிடுகிறார். மேலும் அவர் லண்டன் வாசிகளுக்குக் கூறியதாவது :—' அரசாட்சி செய்த வகுப்பினரும், அதிக உரிமைபெற்ற வகுப்பினர்களும் பிரான்ஸைக் காட்டிக்கொடுத்ததற்காக சரித்திரத்திலேயே கேட்டறியாத பெரிய கலகம் ஏற்படப்போகிறது. ஸ்வதந்திர மக்கள் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். இவ்வளவு குழப்பங்களுக்கு இடையில் வெளிக்குத் தெரியாமல் பிரான்ஸ் புதிய மாறுதலை அடையப்போகிறது. புதிய மனிதர்கள் தோன்றி நூதன பிரான்ஸை அமைக்க ஏற்பாடு செய்துவருகிறார்கள்'.

ஐரோப்பா கண்டத்தில் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில்தான் ஜெர்மனி நயவஞ்சகமான வார்த்தைகளைப்பேசி நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பொழுது இந்தியாவுக்கு ஏற்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஜப்பான் அடிக்கடி பேசுவதையும், புகழ்ச்சி செய்வதையும் மிகவும் நிதானித்து நிர்மாணிக்க வேண்டும்.

## ஜெனரல் ஸ்மட்ஸின் அபிப்பிராயம்.

ஜெனரல் ஸ்மட்ஸின் ஆராய்ச்சி இதே முடிவைக் குறிக்கிறது. அவர் திறமையுள்ள போர்வீரர் என்பதையும், ராஜீய நிபுணர் என்பதையும் அவர் சொன்ன வார்த்தையில் காட்டியிருக்கிறார். "இதுவரையில் யுத்தத்தின் பயனாக ஜீவாதாரமான விஷயம் ஒன்றும் கிடைக்கவில்லை" என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவிலும், இந்து மகா சமுத்திரத்திலும், ஆஸ்திரேலியாவிலும், நேசதேசத்தார்களின் முக்கியமான ஸ்தானங்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன. இந்தக் கோடைகாலத்தில் கிழக்கே ஜெர்மன் படையெடுப்பு ஏற்படுமென்று எதிர்பார்க்கிறார். ஜப்பானியரும் போரிலிருந்து ருஷ்யாவை விலக்கிவிடுவதற்காக ஜப்பானியர்களும் தாக்குவார்கள் என்றார். மத்தியக் கிழக்கில் தாக்குதல் ஏற்படுத்துவதற்கு முன்னாலாவது அல்லது அதே சமயத்திலாவது இந்தக் கோடைகாலத்தில் பிரமாண்ட தாக்குதல் ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை என்று ஜெனரல் ஸ்மட்ஸ் அறிவித்தார். முடிவாக இந்தக் கோடைகாலத் தாக்குதலில் ஜெர்மானியர்களுக்குத் தோல்வி ஏற்பட்டால் அவர்கள் முற்றிலும் ஈடெழும்பமாட்டார்கள். ஆனால் ஜெர்மனி ஜயித்தால் மத்தியக் கிழக்கிலிருந்து ராஜாங்கமாக இந்தியாவுக்கு வருவதற்கு அவர்கள் திட்டம்போட்டுவிடுவார்கள். ஜப்பானைப்பற்றி அவர்கள் சொன்னதாவது :—" தாத்காலியமாக ஜப்பான் ஆஸ்திரேலியா மீது பாயும்போல் போக்குக்காட்டுகிறது. ஆனால் உண்மையில் இந்தியாவும், சிலோனும் அதற்கு முக்கிய லக்ஷியங்கள்".

மனிதவர்க்கத்திற்கு வருங்காலத்தில் நேரிடக்கூடியவைகளை இந்த சமயத்தில் இவ்வளவு குறைந்த அவகாசத்திற்குள் எதிர்பார்ப்பது சாத்தியமில்லை. ஜயமடைவதுதான் நம்முடைய முடிவு. அதற்காக நம் எல்லோருடைய பிரயத்தனமும், எல்லோருடைய பரித்தியாகமும் தேவை.

## துருக்கி பேரில் பலாத்காரம்.

## துருக்கி—ஜெர்மன் வியாபாரத்தின் ஓய்வு.

## மத்தியக்கிழக்கு நாடுகளில் பிரிடிஷ் தயாரிப்புகள்.

மாரிகாலம் முடிந்து வசந்தகாலம் ஆரம்பமாகிவரும் இத்தருணத்தில் ஒவ்வொரு துருக்கியருக்கும் கவலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. சமீபத்தில் துருக்கிக்கு ஒருவித ஆபத்தும் இல்லாதபோதிலும் சென்ற வருஷத்தில் ஹிட்லர் போட்டிருந்த திட்டங்களையும் இவ்வருஷத்தில் அவன் திட்டத்தைப்பற்றிச் சொல்லும் பலவித உத்தேசங்களையும் கவனித்தால் கொஞ்சம் கவலையேற்படலாம். மார்ச்சு மாதம் 1-ம் தேதி ஹிட்லரின் படைகள் டான்யூப் நதியைக் கடந்தன. அம்மாதத்தின் மத்தியில் கிரீஸின் எல்லைப்புறத்தைக் கடந்ததோடு மட்டுமல்லாது துருக்கியின் எல்லையையும் தாண்டின. அந்த சமயத்தில் துருக்கிக்குச் சனியன் பிடித்ததென்றே யாவரும் பயந்தனர். ஆனால் கவலை நிவர்த்திக்கப்பட்டது. டார்னெல்ஸுக்கு நேசநாடுகள் போகாதபடி தடுக்கவே ஹிட்லர் கிரீட்டைக் கைப்பற்றிக்கொண்டானே தவிர மத்தியக்கிழக்கு நாடுகளைப் பிடிக்கும் எண்ணம் அந்த சமயம் அவனுக்கு இல்லை. மேலும் 1941-ல் ருஷ்யாவைப் படையெடுக்க திட்டம்போட்டிருப்பதும் பின்னடித்தான் தெரியவந்தது.

ஆகவே மார்ச்சு மாதம் பூரா யாவரும் சைனியங்களைப் புதிப்பித்துக்கொண்டு இங்குமங்கும் நகர்த்தப்பட்டிருந்தன. இவ்வித அச்சு நாட்டினரின் நடமாட்டங்களைத் துருக்கி கவனித்துக்கொண்டிருந்தது. துருக்கி அரசியல் அறிக்கைகளிலும், பொது பிரசுரங்களிலும், ஜனசபையிலும் அரசாங்கத்தார் "கவனம், முன்னேற்பாடு, தயாரிப்பு" முதலியவைகளிலீடுபட்டிருப்பதாக அறிவித்தனர்.

ஜெர்மானியர் செய்துவரும் சைனிய நடமாட்டங்களைப்பற்றியும், தயாரிப்புகளைப்பற்றியும் பலவிதமான அபிப்பிராயங்கள் வெளிவந்தன. ஆனால் பல்கேரிய எல்லைப்புறங்களில் செய்திகள் செல்லாதபடி கட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் உண்மை விவரங்கள் வெளிவரவில்லை. ஆகவே வரப்போகும் நிலைமையைப்பற்றி சரியான விவரத்தைக் கொடுக்க முடியவில்லை.

## ஜெர்மன் பிரசாரம்.

சென்ற வருஷத்தில் துருக்கியின் பேரில் ஜெர்மன் பலாத்காரம் பலதடவைகள் செய்யப்பட்டது. இதற்கு மூலகாரணமாகப் பிரசாரம்தான் செய்யப்படும். இவ்வித பலாத்காரம் முதலில் ஒவ்வொரு நாட்டின் பேரிலும் செய்யப்பட்டு, பிறகுதான் ஜெர்மனி படையெடுப்பது வழக்கம். ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கும் கொஞ்சம் வித்தியாசமிருக்கும். துருக்கியைப்பற்றி செய்யப்பட்ட பிரசாரங்களெல்லாம் துருக்கி பேரில் செய்யப்படும் சூழ்ச்சிகளே. துருக்கிக்கும் மற்ற நாடுகளுக்கும் இவ்விஷயத்தில் ஜெர்மனியால் காண்பிக்கப்பட்ட வித்தியாசத்தை கவனிப்போம். மற்ற நாடுகளைப்பற்றி ஜெர்மன் ரேடியோவும், பத்திரிகைகளும் சொல்லும்போது அந்த நாடுகளில் உள்நாட்டு நிலைமை சரியாக இல்லையென்றும், ஆக்கிரமண ஆசையிருப்பதாயும் சொல்லப்பட்டது. துருக்கியைப்பற்றி பிரசாரம் நடத்தும்போது அதன் உள்நாட்டிலுள்ள வியவகாரங்களையோ, அயல்நாட்டு திட்டங்களைப்பற்றியோ ஒன்றும் கூறாமல் அந்நியர்களின் தொந்தரவு துருக்கியில் அதிகமிருப்பதாக மட்டில் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தப் பிரசாரத்தினால் துருக்கியின் நடுநிலைமையைக் காப்பாற்றுவதேதான் நோக்கம். துருக்கியின் நடுநிலைமையைக் காப்பாற்றும் விஷயத்தில் துருக்கி அரசாங்கத்தைவிட கோயபல்ஸ் அதிக அக்கரை எடுத்துக்கொண்டான்.

தற்சமயத்தில் இதுதான் விசேஷம். ஏனென்றால் ஜெர்மன் செய்கைகளுக்கு துருக்கி முட்டுக்கட்டையாக இருந்தால், துருக்கியுடன் சண்டை செய்யாமலேயே, பயமுறுத்தல், சூழ்ச்சி, உபதேசம் முதலியவைகளால் வசப்படுத்தவே ஜெர்மனி நினைத்திருக்கிறது. இருந்தாலும் இதிலிருந்து நாம் ஒரு முடிவான அபிப்பிராயத்திற்கு வந்துவிடக்கூடாது. ஏனென்றால் இவ்வித முறையை

சென்ற வருஷத்திலும் ருஷ்ய யுத்தம் திட்டப்படி முடியாததாலும் முன்பு ஜெர்மனி கையாண்டுவந்தது. இந்த வசந்த காலத்தில் துருக்கியிலுள்ள நிலைமையைப் பார்த்தால் ஜெர்மனியின் பூரா சைனியமும், யுத்த சாமான்களும் ருஷ்ய யுத்தத்திற்காகச் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தடவை ருஷ்ய யுத்தத்தில் வெற்றிபெறுவதைப் பொறுத்துத்தான் நாஸிகளுடைய வருங்காலம் தீர்மானிக்கப்படவேண்டியிருக்கிறது. தோற்றால் ஜெர்மன் சாம்ராஜ்யம் அழிந்ததாகவே தீர்மானித்துவிடலாம். ஆகவே துருக்கியைப்பற்றி சிந்தனை ஹிட்லருக்கு எங்கே இருக்கப்போகிறது?

## சிருங்கலையான பிரச்னை.

காகஸஸை நோக்கி ஜெர்மனி முன்னேறினாலும், ஸூயஸ், பெர்ஸியன் குடா இவைகளை நோக்கி ஜெர்மன், இதாலியப் படைகள் முன்னேறினாலும் துருக்கி யுத்தத்தில் ஈடுபடவேண்டியிருக்குமென்று எல்லா ராணுவ, அரசியல் நிபுணர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜெர்மன் பின்லர் நடமாட்டங்களுக்கு துருக்கி ஒரு கேந்தரஸ்தானமாக இருக்கிறது. மத்தியதரைக்கடல் வழியாகப் போவதானாலும் அனடோலியப் பீடபூமி வழியாகப் போகவேண்டிவரும்.

ஆனால் இவ்வளவும் வாயால் சொல்லுவது சுலபம். காரியத்தில் செய்வது கடினம். அனடோலியப் பீடபூமியில் இயற்கைத் தடைகள் பல இருக்கின்றன. எங்கும் 2,000 அடி உயரம் இருக்கிறது. வடகிழக்கு எல்லைப்புறத்தில் 9,500 அடியும் இருக்கிறது. ஒரே இருப்புப்பாதைதான். வேறு ரஸ்தாக்கள் கிடையாது. இவ்வளவு சிரமங்களையும் தாண்டி ஜெர்மன் படைகள் முன்னேறினாலும் மற்ற இடங்களில் இருக்கும் ஜெர்மன் சைனியங்களின் நிலைமை கெட்டுவிடும். ஸப்ளைகளைக்கொண்டுவரவும் முடியாது. ஆனால் துருக்கியின் கிழக்கு எல்லையைக் கடந்துவிட்டால் இரான், இராக் பர்ஸியன் குடா முதலிய இடங்களிலுள்ள எண்ணெய் கிணறுகள் வரை வேகமாகச் செல்லலாம். ஏனென்றால் இங்கே மலை முதலியன கிடையாது. சமமான தரையாதலால் யந்திரப் படைகள் சுலபமாகச் செல்லும். இருந்தாலும் எந்த மார்க்கமாக வந்தாலும் ஜெர்மன் முஸ்தீப்பு சரியாக இருக்கவேண்டும். சைனியங்களும் அதிகக் கஷ்டப்படவேண்டியிருக்கும்.

எப்படியும் ஜெர்மனி நன்றாக முன்னால் யோசித்துக்கொண்டு ஒரு முடிவிற்கு வரவேண்டும். மற்றவர்களைக் காட்டிலும் ஹிட்லர் அதிகமான யோசனையுள்ளவனல்ல. துருக்கியைத் தாக்குவதென்று முடிவு செய்தால் பொருளாதாரம் அரசியல் முதலியவைகளில் ஜெர்மனிக்கு ஒரு சாதகமும் இல்லை.

சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் ஜெர்மன் துருக்கி வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதிலிருந்தே ஜெர்மன் பிரசாரம் பலித்ததென்று சொல்லலாம். ஆனால் கையெழுத்தானதுதான் மிச்சம். பிறகு ஆறு மாதங்களாகியும் ஒரு பயனும் ஏற்படவில்லை. உலகில் எல்லாப் பொருளாதார நிபுணர்களாலும் இப்படி நேருமென்று எதிர்பார்த்தார்கள். இதற்கு முன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகளின்படி இருநாடுகளுக்கும் பண்டம் மாற்றுதல் சரியாக நடந்துவராததாக இருந்தது. இந்த சந்தர்ப்பங்களில் 60 சதவிகிதம் கூட லாபிக்கப்பட்டதில்லை. யுத்த முயற்சியில் அதிகம் ஈடுபட்டிருந்ததால் ஜெர்மானியர் சாமான்களை ஸப்ளை செய்ய முடியவில்லை, ஆனால் ஜெர்மனியிலிருந்து திட்டப்படி சாமான் வந்தாலொழிய துருக்கி சாமான்களை அனுப்பாது. இது அந்த உடன்படிக்கையிலேயே அடங்கியிருக்கிறது. சிறிது சாமான்கள் எடுத்துச்செல்லப்பட்டது என்னமோ உண்மை. ஆனால் அது யாவும் திருட்டுத்தனமாக வந்தவையே. மத்திய ஐரோப்பாலிருந்து பல்கேரியத் துறைமுகங்கள் வழியாக கள்ளத்தனமாக துருக்கிக்கு வந்தது. 10,00,000 பவுன் பொருமானமிருக்கும். ஆகவே துருக்கியால் ஜெர்மனிக்கு பொருளாதார திட்டங்களில் ஒன்றும் சாதகமில்லை.

## ஆங்கிலேய-துருக்கி ஒற்றுமை.

துருக்கிப் பத்திரிகைகள் எந்த சந்தர்ப்பங்களிலாவது ஜெர்மனியையும் பிரிட்டனையும் குறிப்பிட்டால் ஜெர்மனியை சிநேகித முறையிலும், கிரேட் பிரிட்டனை 'துணை நேச நாடு' என்ற முறையிலும் சொல்லப்படுகிறது. இதுதான் ஜெர்மனிக்கும் துருக்கிக்கும் ஏற்பட்ட 10 வருஷ உடன்படிக்கையின் பயன். துருக்கிப் பத்திரிகைகளும் பிரிட்டனைப்பற்றி குறைசொல்லுவதுபோல் அச்சு நாடுகளைப்பற்றியும் இஷ்டப்படி நிந்தனையாகவே எழுதுகின்றன. ஆகவே அரசியல் துறையிலும் ஜெர்மனிக்கு துருக்கியினால் ஒரு நன்மையுமில்லை.



முடிந்தவரை ஹிட்லர் தனது படைகளை துருக்கியின் பாலாபக்கங்களிலும் நிறுத்திக்கொண்டு தனியே பிரித்துவிடலாம். இதனால் துருக்கியின் பிரதேசம் நிறுத்திக்கொண்டு தனியே பிரித்துவிடலாம். இதனால் துருக்கியின் பிரதேசங்களுக்குத் தீங்கு நேரலாம். ஸப்ளைகளும் வராது. அதனால்தான் லிபியா யுத்தத்தையும் ருஷ்ய யுத்தத்தையும் துருக்கி கவனித்துவருகிறது. ருஷ்யாவில் மாரிகாலம் வந்துவிட்டாலும் காகஸஸ், இரான் முதலிய நாடுகளில் தற்காப்பு முறைகள் திட்டப்படி நடத்தப்படவேண்டுமென்று ஜெனரல் வேவல் சொன்னதை யாவரும் உண்மையென்று உணர்ந்தனர். தற்சமயம் துருக்கியிலும் இவ்விஷயம் கவனிக்கப்பட்டுவருகிறது.

---

## துருக்கிக்கு எதிராக நாஸிகளின் சூழ்ச்சி.
## ஜெர்மனிக்கும், துருக்கிக்குமுள்ள பாந்தவ்யம்.
## மத்தியக் கிழக்கில் பிரிட்டனின் ராணுவ பலம்.

(லியோனார்டு கிர்ஷென் என்பவரால்.)

சாதாரணமான வழிப்போக்கனுக்குக்கூட ஆசியா மைனர், பர்ஸியன் குடாக் கடல், மத்தியக்கிழக்கிலுள்ள எண்ணெய் தளங்கள் இவற்றைக் கைப்பற்ற ஜெர்மானியர்கள் கொண்டிருக்கும் நோக்கங்களைத் தெரியக் கொடுக்க இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று மனிதன், மற்றொன்று சாமான். அந்த மனிதன் பெயர் பிரான்க்ஸ் வான் பேபன். அவர் கனவான். அத்துடன் துணிவாக காரியம் செய்யக்கூடியவன்; போர்வீரன்; அத்துடன் ராஜதந்திரி; ஜெர்மன் யூங்கர் விமான ஓட்டி. அத்துடன் பொய் பிரசாரம் செய்வதில் பழக்கமுள்ளவன். சாமான் என்பது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெர்லினுள்ள ஸீமன்ஸ் ஷுகர்ட் எலெக்டிரிக் கம்பெனியார் பெர்லினிலிருந்து பாக்தாதுக்கும், பர்ஸியன் குடாக்கடல் வழியாகப் போடப்பட்டிருக்கும் தந்திக் கம்பிகள்.

பிரசித்தி பெற்ற அனடோலு எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியில் அனடோலியா வழியாகப் பிரயாணம் செய்யும்பொழுது ரயில் வண்டி சக்கரங்களிலிருந்து வரும் சப்தத்தின் இடையிடையே கருப்பும், வெள்ளையும் தடவின இரும்பு தந்திக் கம்பங்கள் தோன்றி மறைகின்றன. இவை சுமார் 25 வருஷங்களுக்கு முன்னமேயே நாட்டப்பட்டன. பெர்லினுக்கு பேபன் போய்வர வேண்டிய அவசியமும், அங்கு நடந்த சம்பவங்களையும் இவைகள் ஞாபகப்படுத்துகின்றன.

## வான் பேபனின் செயல்கள்.

பிரான்க்ஸ் வான் பேபன் சாமர்த்தியசாலி. அவன் குணத்திற்குத் தக்கவாறு வேலை செய்வதற்கு சாதாரணமான சாமர்த்தியமாவது வேண்டியிருக்கும். சென்ற யுத்தத்தில் துருக்கிப் படைக்கு ஜெர்மன் தளகர்த்தன் லிமன்வான் ஸான்டேர்ஸ் என்பவனின் ஸ்தாபனத்தில் தலைவனாக இருந்தான். துருக்கி உத்தியோகஸ்தர்களில் அவன் துருக்கி உடையணிந்து பலபேர்களை சிநேகம் செய்துகொண்டிருக்கிறான். ஹிட்லருக்கு தெய்வ பலத்தில் நம்பிக்கையுண்டு. ஜெர்மன் ரகசியப் போலீஸிலிருந்து கொலை செய்யப்படாமல் வான்பேபன் இருமுறை தப்பினதை ஹிட்லர் பார்த்து அவனுடைய சாமர்த்தியங்களையும், துருக்கியில் அவனுக்குள்ள சிநேகிதர்களையும் எண்ணி கிழக்குப் பிரதேசத்தில் ஜெர்மனிக்கு செல்வாக்கு ஏற்படுத்த முயலும்படி அனுப்பினான். வான் பேபன் சாமர்த்தியசாலியானபடியால் ஆங்காராவுக்கு வந்ததும் ஜனங்கள் ஜெர்மனிக்கும், துருக்கிக்கு முள்ள சிநேகிதம் பேபன் துருக்கியிலிருக்கும் வரை நீடித்திருக்குமென்றும், பேபனை ஹிட்லர் ஜெர்மனிக்கு மீண்டும் வரவழைத்தால் துருக்கிக்கும், ஜெர்மனிக்கும் சண்டை நடத்த ஹிட்லர் எண்ணிவிட்டான் என்றும் நினைக்கிறார்கள். ஆகையால், பேபன் எப்பொழுதாவது பெர்லினுக்குச் சென்றால், துருக்கியிலுள்ள ஜெர்மானியர்கள் '[illegible] வருவாரோ' என்று கேட்க ஆரம்பிக்கிறார்கள்.

## ராஜீயப் போக்குகள்.

வான் பேபன் மறுபடியும் பெர்லினுக்குச் சென்றிருக்கிறான். அவன் திரும்பி வரலாம். துருக்கியைப் பற்றி அவன் போட்ட திட்டங்களுடன் அவன் சென்றிருக்கிறான். ஆனால் அவன் திட்டங்களைப் பரிசிலனை செய்வதற்கு முன் பால்கன் நாடுகளில் ராஜீய நிலைமை எப்படியிருக்கிறதென்பதை கவனிக்கவேண்டியது அவசியம். 1914-ம் வருஷத்திய மகா யுத்தத்திற்கு முன்னால் துருக்கி சாம்ராஜ்யம் இருந்தபொழுது மூன்று வல்லரசு நாடுகள் தேசங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டான். அவைகள் அப்படி செய்ததில் பால்கன் நாடுகளில் வெவ்வேறு விதமாக ராஜீயப் போக்குகள் உண்டாயிற்று.

முதலில் ஆஸ்திரியா-ஹங்கேரி சாம்ராஜ்யம். அது மத்தியதரைக் கடலையும், ஸலோனிகா துறைமுகத்தையும் கைப்பற்ற நோக்கங்கொண்டது. இரண்டாவது ஜெர்மன் சாம்ராஜ்யம். அது பிஸ்மார்க் காலமுதல் பி. எழுத்தில் ஆரம்பிக்கும் ஏழு நாடுகளைக் கைப்பற்ற எண்ணங்கொண்டது. அவையாவன:— பெர்லின், புடாபெஸ்ட், பெல்கிரேட், புகாரஸ்ட், பாஸ்போரஸ், பாக்தாத், பாஸ்ரா. கடைசியாக துருக்கி சாம்ராஜ்யம். அது வெகு நியாதியுடன் மேற்குப் புறத்திலுள்ள நாடுகளைக் கைப்பற்றிற்று. இந்த மூன்று தேசங்களும் ஐரோப்பா கண்டத்திலுள்ள பால்கன் நாடுகளைக் கைப்பற்றவே தங்கள் அதிகார ஆசையைக் காட்டின.

மகா யுத்தத்தின் முடிவு என்ன? அதன் சமாதான உடன்படிக்கைகளின் பயன் என்ன? யுத்தத்திற்குப் பிறகும், இப்பொழுது யுத்தம் ஆரம்பிக்கும்வரை இவைகளின் அதிகார ஆசை எப்படியாயிற்று? மேலே சொல்லப்பட்ட இரண்டு வல்லரசுகளும் ஜெர்மனியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அப்படிச் செய்ததில் ஜெர்மன் அரசாங்கத்திலுள்ளவர்கள் பண்டைகால ஜெர்மன் கொள்கையை அனுஷ்டிக்கிறார்கள். ஆனால் மும்முறை தலைமைப் பதிவியைப் பெற்ற ஹிட்லர் மட்டில் ஆஸ்திரியாவுக்கு அனுகூலமாகயிருக்கிறார். கமால் அடாடர்க் புதிதாக நாடுகளைக் கைப்பற்ற மறுத்த பிறகு பால்கன் நாடுகளை ஒன்று சேர்க்கவும் தற்காப்பு நிர்வாகத்தில் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்களினால் சிறிய தேசத்தார்கள் பாதிப்பு அடையாமல் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் துருக்கி சாம்ராஜ்யம் தன் ராஜீயப்போக்கை மாற்றிக்கொண்டது.

## இந்த நோக்கங்களின் முரண்பாடு.

மேல் பார்வையாக கவனித்தாலும்கூட இந்த இரண்டு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகயிருக்கின்றன. ஒரு புறத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா இரண்டும் சேர்ந்து பால்கன் நாடுகளையும், ஆசியா மைனரையும், மத்தியக் கிழக்குப் பிரதேசங்களையும் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டது தெரியவருகிறது. மறு புறத்தில் துருக்கி பால்கன் நாடுகளை தன்னரசு நாடுகளாகச் செய்து அவைகளுக்குள் ஐக்கியபத்தியம் ஏற்படுத்துவதற்கும் தான் ஸ்வதந்திரமாக இருக்கவும், மத்தியக் கிழக்குப் பிரதேசத்திலுள்ள அராபியர்களுக்கும், துருக்கியர்களுக்கும் ஸாயதாபாத் உடன்படிக்கைப்படி நடந்துகொண்டு வருவது தெரிகிறது.

இது காரணத்தினால் தான் எப்பொழுதாவது ஜெர்மனி துருக்கியுடன் ராஜீய வியவகாரத்தில் ஒத்துழைப்பும் ராணுவ சம்பந்தமும் ஏற்படுத்திக்கொள்வதாகச் சொன்னால், துருக்கி தற்காப்பை முன்னிட்டு மறந்துவிடுகிறது. இது தான் உண்மை. அப்படியானால் 1941-ம் வருஷம் ஜுன் 18-ல் துருக்கி ஜெர்மனியுடன் சிநேகித உடன்படிக்கை ஏன் செய்துகொள்ளவேண்டும்? ஏனென்றால் துருக்கியில் ஒரு கோடியே தொண்ணூறு லக்ஷம் ஜனங்கள் தான் இருக்கிறார்கள். சமாதான காலத்தில் பூராவும் ஆயுத முஸ்திப்புடனிருக்க அவர்களால் முடியாது. யுத்த காலத்தில் அதற்கு ஆயுதங்களும், யுத்தப்பொருள்களும் கிடைக்காது. ஆகையினால் துருக்கி பகிரங்கமாக எவரையும் விரோதமாகச் செய்துகொள்ள முடியாது என்பது தான் பதில். மேலும் துருக்கி நடுநிலைமையாக இருந்ததினால் அது பிரிடிஷ் சிறப்பில் யுத்தத்தில் சேருவதைக் காட்டிலும் பிரிடன் தந்திரத்திற்கு அதிக பயனைக்கொடுத்திருக்கிறது.

## துருக்கியின் மறுதளிப்பு.

சென்ற கோடை காலத்தில் தான் தென்கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனி துருக்கியுடன் ஒத்துழைப்பதாகக் கேட்டுக்கொண்டது. இதற்கு நிபந்தனையாக 'புதிய திட்டத்தை' ஸ்தாபிப்பதில் துருக்கியும் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று பிரதிக்ஞை செய்யவேண்டியிருந்தது. துருக்கி இதை மறுதளித்தது. பிறகு பால்கன் நாடுகளுடனும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்தால் துருக்கிக்கு பால்கன் நாடுகளில் ஆதிக்கம் பெறலாம் என்றும் ஜெர்மனி கேட்டுக்கொண்டது. இத்தகைய ஆதிக்கத்தை துருக்கி விரும்பாமல் மறுதளித்தது. வருஷாந்திர பிரசங்கத்தில் பிரதம மந்திரி டாக்டர் ரெய்பிக் ஸெய்தாம் என்பவர் பால்கன் நாடுகளில் மீண்டும் ஸ்வதந்திரம் கிடைக்கும்படி செய்ய துருக்கி அக்கரை கொண்டிருக்கிறதாகச் சொன்னார். இதற்குப் பிறகு ஜெர்மனியுடன் துருக்கி ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை.

## நாஜிகள் பலவந்தம்.

[illegible] செய்ததால் சரி. பால்கன் நாடுகளின் நிலைமை இப்பொழுது எப்படி? ருமேனியாவிலிருந்து மனிதர்களையும் உணவுப் பொருள்களையும் ஜெர்மானியர்கள் எடுத்துக்கொண்டார்கள். இப்பொழுது ட்ரான்ஸல்வேனியா, ஹங்கேரி இவைகளைக் கொடுக்கும்படி விரும்புகிறார்கள். ஆஸ்திரியாவுக்கு அருகிலுள்ள பெர்கன்லாந்திலிருக்கும் ஜெர்மானியர்கள் சிறு கக்ஷியினராக இருந்தபோதிலும் அவர்களுக்கு விசேஷ உரிமை கொடுக்கவில்லை என்று ஹிட்லர் அதிருப்தி கொண்டிருக்கிறான். போர்வீரர்களை அனுப்பும்படி அந்த நாட்டை நிர்ப்பந்தித்து வருகிறான். வசந்தகாலத் தாக்குதலுக்கு 6 லக்ஷம் பேர்களை அனுப்பும்படி ஹிட்லர் ஹங்கேரியை வேண்டுகிறான். க்ரோஷியா இதாலிக்கும், ஜெர்மனிக்கும் தகராறான நாடாக இருக்கிறது. ஸெர்பியாவில் சமாதானம் இல்லை. அதில் முஸ்லீம்கள் குறைவு. புதிய திட்டத்தில் அவர்களுக்கும் தேச உரிமை [illegible]. கிரீஸில் யுத்தத்தினால் உண்டான கஷ்டம் இன்னும் நீங்கவில்லை. தேசத்தார்கள் உணவில்லாமல் தவிக்கிறார்கள். பண்டைகாலத்து பிரக்யாதியெல்லாம் ஜெர்மானியர்களால் அழிந்து போய்விட்டது.

ஜெர்மானியர்கள் கிழக்கும் பிரதேசத்தில் ஜயமடைந்த தேசத்தார்களின் கேடான நிலைமை இப்படியிருக்கிறது. இதைக்கொண்டு அவர்கள் முன்னேறுகிறதாகச் சொல்லப்படுகிறது.

## பால்கன் நாடுகளின் அரசாங்கங்கள்.

இவ்வரசாங்கங்கள் லண்டனில் தங்கி வருங்காலத்தில் பால்கன் நாடுகளின் கூட்டுறவைப்பற்றிய கொள்கைகளை ஆதரித்துவந்தன. லண்டனில் அவர்கள் செய்யும் ஏற்பாடுகளை துருக்கியில் ராஜீய வட்டாரங்கள் அதிக பொறுப்புடன் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் பொது ஜனங்கள் அதிகமாக அவைகளைப்பற்றி விமர்சனம் செய்கிறதில்லை. வெகு ஜாக்ரதையாக அவற்றைப்பற்றி பிரஸ்தாபிக்கிறார்கள். துருக்கி நடுநிலைமையாக இருந்து கொண்டிருக்கும்பொழுது இந்தக்கொள்கைகளை உத்தியோக முறையில் ஆமோதிக்க முடியாது. அப்படிச் செய்தால் ஹிட்லருக்கு அவமதிப்பு உண்டாக்கினது போலாகும். ஆனால் பத்திரிகைகளிலிருந்து பால்கன் பிரச்னையை லண்டனில் செய்திருக்கும் தீர்மானத்தின்படி முடிவு செய்ய துருக்கியும் அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரியவரும்.

## பல்கேரியாவின் குழப்பம்.

பால்கன் நாடுகளில் பல்கேரியா வேண்டுமென்றே தனிமையாக விடப்பட்டிருக்கிறது. பிரிடனுடன் துரோகமாக நடந்துகொண்டதற்கு இந்நாடு கஷ்டத்தை அனுபவித்துவருகிறது. அச்சுநாடுகளுடன் பல்கேரியா சேர்ந்திருப்பதென்பது ஒரு கௌரவம் இல்லை. ஏனென்றால் பால்கன் நாடுகளில் யுத்தம் ஏற்பட்டபோது கிரீஸ், மாஸிடோனியா, ஸெர்பியா முதலிய இடங்களுக்கு பல்கேரியச் சைனியம் ஒன்று அனுப்பப்பட்டது. தற்சமயத்தில் ருஷ்யப் போர் முனைக்கு பத்துப் பகுதிகளடங்கிய பல்கேரியச் சைனியம் தேவையென்று ஹிட்லர் சொல்லுகிறான்.

## புதுப்பாட்டு.

அடுத்தபடியாக பல்கேரியாவிற்கு ஒரு சாதகம் காண்பிக்கப்படுமென்று பல்
கேரியா நினைத்துவருகிறது. அதாவது ஐரோப்பாவிலிருந்து ஓடிவந்து லண்ட
னில் இருக்கும் அரசாங்கத்தினர் தயாரித்திருக்கும் ஐரோப்பிய திட்டத்திற்கு
மாருக ஹிட்லர் ஒரு ஏற்பாடு செய்திருக்கிருன். அதாவது மாஸிடோனிய
ராஜ்யம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு பல்கேரியா தலைமை வகிக்குமாம்.
பல்கேரியா, ஸெர்பியா, கிரீஸ், மற்றும் மாஸிடோனியாவிற்கு சமீபத்திலுள்ள
நாடுகள் யாவும் இந்த திட்டத்திற்கு உட்படுத்தப்படும். ஒவ்வொரு நாட்டிலும்
ஒரு தேசிய கமிட்டி அரசாங்கத்தை நடத்தும். தலைமை கமிட்டி ஸோபயாவி
லிருக்கும். இதுதான் ஹிட்லர் திட்டம். ஆனால் இப்படி செய்து பால்கன் வாசி
களை ஏமாற்றும் ஹிட்லரின் ஏற்பாடுகளை கவனியுங்கள்.

இப்புதிய பால்கன் திட்டத்தைப்பற்றி துருக்கியிலும் நாஸிகள் பிரசாரம்
செய்துவருகின்றனர். துருக்கி இதில் சேர விரும்பாதபோனாலும் பால்கன் திட்டம்
முடிவடையுமாம். யூகோஸ்லாவியா ஆதிக்கம்பெற்று எல்லா நாடுகளையும்
கவருமல் இருப்பதற்காக இது செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால்
யூகோஸ்லாவிய மன்னரான இரண்டாவது அலெக்ஸாண்டர் என்பவனும், துருக்கித்
தலைவனை கெமால் அடாடர்க்கும்தான் இந்தத் திட்டங்களை ஸ்தாபிக்க முயன்
றது என்பதை நாஸிகள் மறந்துவிட்டனர். மேலும் இந்த ஏற்பாட்டில் பல்கேரியா
ஆதிக்கமடைவதை துருக்கி விரும்பாதென்பதையும் நாஸிகள் உணரவில்லை. இப்படி
யாக பல்கேரியாவிற்கு எதிராக இருக்கும் நாடுகளைத் தூண்டிவிடும் நாஸி முயற்சி
கள் எப்படி முடியுமென்று தெரியவில்லை.

## துருக்கி நிருபர்களின் அபிப்பிராயம்.

பால்கன் நிலைமையைப்பற்றி சில பத்திரிகை நிருபர்களின் அபிப்பிராயங்கள்
கொடுக்கப்பட்டிருக்கின்றன. இஸ்தான்புல்லில் வெளியாகும் "அக்ஷாம்"
என்ற பத்திரிகையில் ஒரு வியாசம் பிரசுரிக்கப்பட்டது. அதன் பத்திராசிரி
யரான பே நெம்ட்ஜாடின் ஸாடக் என்பவர்தான் இதை எழுதியது. இவர் அயல்
நாட்டு வியவகார சம்பந்தமான கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருப்பதால்,
எல்லா விஷயங்களும் இவருக்கு நன்ருகத் தெரியும். அவர் சொல்லுவ
தாவது:—"போரிஸ் பெர்லினுக்கு அழைக்கப்பட்டிருக்கிருர். சைனியங்களை
ருஷ்ய முனைக்கு அனுப்பாமலிருக்க பல்கேரியர்கள் பிரயத்தனப்படுகின்றனர்.
ஆனால் இதாலியர், ஹங்கேரியர், ருமேனியர், பல்கேரியர் யாவரும் உதவவேண்டு
மென்று நாஸிகள் விரும்புகின்றனர். இதில் இதாலியர் சொன்னபடி கேட்டார்
கள். ஆனால் அவர்களுக்கென்று ஒரு வெற்றியும் கிடைக்கவில்லை. மேலும் அவர்
களுடைய சாம்ராஜ்யமும் போய்விட்டது. ஜெர்மனி கேட்கும் சமயத்தில்
ஆட்களை அனுப்பிவிட்டு சும்மாயிருக்கவேண்டியதுதான்.

ஜெர்மன் சைனியங்களை பல்கேரியா மூலமாகச் செல்ல அனுமதித்துவிட்டு
சும்மாயிருந்தால் போதுமென்று பல்கேரியர்கள் நினைக்கின்றனர். ருஷ்யர்களின்
பேரில் விசுவாஸமாக இருப்பதால் சைனியத்தை அனுப்ப பல்கேரியர்களுக்கு
விருப்பமில்லை. சைனியத்திற்கு ஆட்களைச் சேகரித்து அனுப்பிவிட்டால் உழுது
பயிரிட ஆட்கள் இல்லாமல் போய்விடுமென்று பொய் காரணத்தைச் சொல்லி
வருகின்றனர். இந்த யுத்தத்தில் யார் ஜயிப்பார்களென்றும் தீர்மானித்துக்
கொள்ளாததால் வருங்காலத்தில் ஒரு பத்திரத்தை முன்விட்டு தங்களுடைய
சைனியங்களை அப்படியே வைத்துக்கொள்ளவும் நினைக்கின்றனர். எது எப்படி
யாலும் கப்பம் கட்ட வேண்டியது தான். துருக்கி தன்னைத்தாக்குமோ
வென்ற வீண் பயம்பெற்று ஜெர்மனியுடன் பல்கேரியா உறவு கொண்டாடி
வருகிறது.

"ருமேனியாவிற்கும் ஹங்கேரிக்கும் மறுபடி அவஸ்தை ஏற்பட்டிருக்கிறது.
டிரான்ஸல்வேனியாவைத் திரும்ப பிடிக்க வேண்டுமென்ற காரணத்தினால்
சைனியம் தேவையாக இருப்பதால் ருஷ்யப் போர்முனைக்கு புதிய சைனியத்தை
அனுப்பாமலிருக்கப் பார்க்கின்றனர். நாஸிகளின் புதிய திட்டத்தின் விவரங்கள்
இவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தாலும் பரஸ்பரம் மனஸ்தாபம் குறையவில்லை.
புதிய ராஜ்யங்களைப் பிடிக்கவேண்டுமென்ற ஆசையும், அரிதமாக நடத்தப்படும்

யுத்தத்தின் போக்கும் நிலைமைகளை சிருங்கலையாகச் செய்கின்றன. இதுவே
யுத்தத்தின் போக்கும் நிலைமைகளை சிக்கலையாகச் செய்கின்றன. இதுவே
சிறு நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட நிலை." இவ்வியாசம் "ஜெர்மனி
யுடன் சேர்ந்த நாடுகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கஷ்டங்கள்" என்ற
அங்கத்துடன் எழுதப்பட்டது.

## ஜெர்மன் பறந்து.

பெர்ஸியன் குடா, துருக்கி முதலியவைகளைத் தனியே விட்டு வைத்திருப்
பதால் நாஸி ஆட்சி ஒருக்கால் நன்மை செய்யலாமென்று யாவரும் நினைக்கலாம்.
ஆனால் ஹிட்லரின் முறைகள் அப்பேர்ப்பட்டவை. பழைய ரோம சாம்
ராஜ்யத்திலிருந்து தான் ஹிட்லர் தனது திட்டங்களை அமைத்துக்கொண்டிருக்
கிருன். முக்கியமாக பறந்து பக்ஷியை அடையாளமாகக்கொண்ட ரோம சாம்
ராஜ்யத்தின் தன்மை பூராவாகக் காணப்படவில்லை. கொள்ளைத் தொழிலும்,
சிறைப்படுத்துவதும் தான் மிச்சமாக இருக்கிறது.

## நாஸிக் கஷ்டங்கள்.

வான் பேபனின் நிலைமையென்னவென்று பார்ப்போம். துருக்கியைத் தாக்க
ஹிட்லர் தயங்குகிருன். ஏனென்ருல் ருஷ்ய முனையில் பல நாஸி சைனியப்
பகுதிகள் மாட்டிக் கொண்டிருக்கின்றன. இவைகளைப் பிரிப்பதானால், முன்
னேறிக்கொண்டேவரும் ருஷ்யர்கள் ஜெர்மன் அணிகளைப்பிளந்துவிடுவார்களோ
வென்ற பயமிருக்கிறது. இந்தக் காரணத்தினால் தான் மற்ற நாடுகள் சைனியங்
களைக் கொடுத்து உதவவேண்டுமென்று ஹிட்லர் சொல்லுகிருன்.

ஸைப்ரஸ், ஸிரியா மூலமாக மத்தியக்கிழக்கை நாஸிகள் தாக்கலாமா என்று
கேட்டால், துருக்கி மூலம் படையெடுப்பதற்கும் இதற்கும் வித்யாசமில்லையென்று
பிரிடிஷ் ராணுவ நிருபர்கள் சொல்லுகின்றனர். எப்படியும் ஜெர்மனிக்கு அதிக
சிரமமேற்படும்.

ராணுவத்தில் ஜெர்மனி பலக் குறைவடைந்தால் அரசியல் திட்டத்தில்
சமாளிக்கமுடியாது, முன்பு பிஸ்மார்க் என்பவன் செய்த திட்டத்தில் பாஸ்பரஸ்
என்பதற்குப் பதிலாக அங்காரா என்று மாற்றிக்கொள்ளவேண்டும். ஏனென்ருல்
தற்போதய துருக்கி முன்னேற்றமடைந்து வருகிறது. பாஸ்பரஸ் சாம்ராஜ்யம்
குலைந்துவிட்டது.

## பேபனின் திட்டம்.

சமாதானமாக ஜெர்மனியில் காலம் தள்ளமுடியாததால்தான் பேபன் துருக்கி
யிலேயே இருக்க விரும்புகிருன். துருக்கி நடுநிலைமை வகிக்கும்வரை துருக்கி
தாக்கப்படக்கூடாது ஆனால் துருக்கியைச் சூழ்ந்துகொள்ளலாமென்று பேபன்
நினைக்கிருன். ஜெர்மன் சைனியங்கள் காகஸஸ், ஸூயஸ் முதலிய இடங்களுக்குச்
சென்ருல் துருக்கிக்கு ஒரு சிரமநிலையேற்படலாம். ஆனால் சமாதானமாகவே நடந்து
கொள்ளலாம். மேலும் அது ருஷ்ய யுத்தத்தையும், மத்தியக்கிழக்கிலுள்ள
பிரிடிஷ் துருப்புக்களையும் பொறுத்திருக்கிறது. பிஸ்மார்க் தனது திட்டங்களை
சமாதானமாகவே சாதித்தான். ஹிட்லர் சண்டைகளை விருத்திசெய்கிருன்.

---

## பிரிடனில் தயாரிக்கப்பட்ட குடைப்படையினர்.
## குடைப்படையினருக்கு எவ்விதம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(வி. ரெய்மாண்டு என்பவர் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது.)

இங்கிலாந்தில் ஒரு தேசத்தில் ஒரு சந்து வழியாக ராணுவ உத்தியோகஸ்
தர்களை ஏற்றிக்கொண்டு ஒரு கார் அவசரமாக வந்துகொண்டிருந்தது. அதில்
நார்வே தேசத்துக் கொடி பறந்துகொண்டிருந்தது. அதில் இரண்டுபேர்கள்தான்
ஏறியிருந்தார்கள். முன்பக்கத்தில் டிரைவரும், பின்பக்கத்தில் நார்வே இளவர
சன் ஒலப் (Olaf) என்பவரும் ஏறிச்சென்ருர்கள்.

எங்கும் போலிச்சண்டைகள் போட்டுப்பழகிக்கொண்டிருந்தார்கள். அவை
களைப் பார்வையிடுவதற்கு இளவரசர் அழைக்கப்பட்டிருந்தார். படைகளின்
தலைமை வாஸஸ்தலத்திற்கு அவர் அப்பொழுது போய்க்கொண்டிருந்தார்.

கார் ரோடில் ஒரு வளைவான இடத்தில் திரும்பிற்று. டிரைவர் அதன் பிரேக்கை அமிழ்த்தி நிறுத்தினன். அந்த சமயத்தில் இரண்டு பெருமனுன சிப்பாய்கள் மோட்டாரைப்போகவிடாமல் அதைக் குறுக்கே மறித்தார்கள். கார் நிற்கும் பொழுது டிரைவர்பேரிலும், அதிலுள்ள பிரயாணி பேரிலும் துப் பாக்கிகளை நீட்டினர்கள்.

பிரிடிஷ் சிப்பாய்கள் அணிந்திருககும் உடைகள் மாதிரிதான் ூவர்களும் உடைகளை அணிந்து நல்ல முஸ்தீப்புடனிருந்தார்கள். ஆனல் தகரக்தொப்பி களுக்குப் பதிலாக சிறுமெத்தையுள்ள தொப்பிகளை அணிந்திருநதார்கள். முழுஙகால் வரையிலும் தொஙகக்கூடிய நீண்ட அங்கி தரித்திருந்தார்கள். ஒவ் வொருவருடைய வலதுகை சட்டையிலும் பிரிடிஷ் குடைப்படை சின்னம் இருந்தது. அச்சின்னமானது நீல நிறமுள்ள இறக்கைகளுக்கிடையே வெள்ளைக் குடை அடையாளம் இருந்தது.

அவர்களில் ஒருவர் மோட்டார் ஓட்டியிடம்போய் "நீங்கள் காரைவிட்டு இறங்குங்கள். இந்தக் கார் எங்கள் உபயோகத்திற்கு வேண்டும்," என்று சொன்னன்.

மோட்டார் ஓட்டி தலையை வெளியே நீட்டி, "மடத்தனமாகப் பேசாதே! இந்த தேசத்து இளவரசர் காரில் இருக்கிறர்," என்று ரகசியமாக அவன் காதில் தெரிவித்தான்.

"யாராய் இருந்தாலும் அவசியமில்லை. நாங்கள் இந்த மோட்டாரைக் கைப்பற்றியாய்விட்டது. நீஙகள் இருவரும் இறஙகத்தான் வேண்டும்," என்று அந்தக் குடைப்படை வீரன் சொன்ஞன்.

"அவன் சொல்வது சரி, அவர்கள் நம்முடைய காரைக்கைப்பற்றிவிட்டார்கள். அதனல் இதை அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டியதுதான்," என்று [illegible] வரசர் காரை விட்டு இறங்கிக்கொண்டே தன் டிரைவருக்குச் சொன்ஞர்.

"மஹா ராஜாவே! வந்தனம்," என்று அந்தக் குடைப்படை வீரன் சொல்லி விட்டு தனனுடைய கூட்டாளியுடன் காரில் தாவி ஏறிக்கொண்டான். பிறகு அவர்கள பிரயாணமாஞர்கள். எதிரியின் முன்னணிக்குப் பின்ஞல் சென்று படை வீரர்களின் மனதைக் கலைத்து, ராஜத்துரோகம் செய்யும்படி பிரசாரம் செய்ய முற்பட்டார்கள். இளவரசரும், மோட்டார் டிரைவரும் கால்நடையாகவே சென்ருர்கள்.

குடைப்படைத் துருப்புகளைத் தயாரிப்பதற்கு பிரிடனில் இம்மாதிரி முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அதாவது இப்படையில் சேர்ந்தவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது அவர்கள் தஙகளுக்குத் தோன்றிய எந்த தந்திரத் தையோ, சூழ்ச்சியையோ பிரயோகிக்கலாம். ஆனல் அவர்களைத் தடுப்பதற்கு ஒரு வரும் அனுமதிக்கப்படவில்லை.

## சாமர்த்தியமும், தேகவலிமையும் அவசியம்.

பிரிடனின் குடைப்படைக்கு "விசேஷ ஆகாயவிமானப்படை" என்று உத்தி யோக முறையில் சொல்லப்படுகிறது. அப்படையைச் சேர்ந்த யாவரும் சுதா வாக யாதொரு நிர்ப்பந்தமும் அன்னியில் வந்து சேர்ந்தவர்களே. பிரிடிஷ் சாம ராஜ்யப் பட்டாளஙகளிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறர்கள். ஒவ்வொரு பயிற்சி பெற்ற சிப்பாயும் இப்படையில் சேர்ந்து கொள்ளலாம்; ஆனல் தேக பரிசைஷயிலும் ஞாபகசக்திப் பரிசைஷயிலும் கடுமையாக சோதனை செய்யப்பட்டு அதன் மேல்தான் பொருக்கி எடுக்கப்படுவார்கள். இப்படையில் சேர்ந்து வேலை செய்வது மிகவும் கஷ்டம், ஆபத்தும் உண்டு. அதில் சேர்ந்த வீரர்களுக்கு உபரியாக சம்பளம் கொடுக்கப்படும். அதை "அபாயப்பணம்" என்றும் சொல்வதுண்டு.

விசேஷ ஆகாயப்படைக்கு முரடனுக இருந்தால் மட்டில் போதாது. தன் யுக்திப்படிக்கு நடப்பவர்களும், புத்திசாதுர்யமாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பவர்களும்தான் அந்த வேலைக்குத் தகுதியானவர்கள். தேக

இந்த யுத்த முறைகளுக்கு அவர்களுக்கு விசேஷ அறிவும் வேண்டும். தேசப் படத்தின் விவரங்கள் பூராவும் தெரிந்திருக்கவேண்டும். மேலும் எதிரிப்படை வரிசைக்குப்பின் சாதாரணமாக சாமர்த்தியமில்லாத முரட்டு வீரனை இறக்கி விட்டால் மட்டில் போதாது.

இப்படையில் சேருவதற்கு வயதுக் கிரமம் கிடையாது. கனடாவிலிருந்து வந்த ஒருவர் இப்படைப்பகுதியில் சேர்ந்திருக்கிறர். அவருக்கு வயது 55. அவரின் வேலைத் திறமையைக் கண்டு குடையில் இறங்குவதற்குக் கற்றுக் கொடுக்கும் போதகர் மிகவும் மெச்சினர். ஆனல் அநேகமாக 20 வயதிலிருந்து 35 வயதுக்குள்பட்டவர்கள்தான் இதில் சேர்ந்திருக்கிறர்கள். முக்கியமான குணுதிசயங்கள் வேண்டியதென்னவென்றல் அவர்கள் கடின மனதுடனும், துணிந்து [illegible] தன்மையுடனும், தைரியமாகவும் இருக்கவேண்டும். உயரம் மட்டும் ஒரு [illegible] ஆகமாட்டாது. விமானத்தின் அடிபாகத்தி லுள்ள [illegible] அவர்கள் உட்கார்ந்துகொள்ளுகிறர்கள். பச்சை [illegible] தான் அவர்கள் கீழே இறங்குவதற்கான அறிகுறி. அவ்வெளிச்சம் போடப்படுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறர்கள். ஆகையால் அவர்கள் உயரமாக இருந்தாலும் இருக்கலாம், குட்டையாகவும் இருக்கலாம். ஆனல் சாதுர்யமாகவும், கடினமான மனதுடனும், கூரிய புத்தியுடனும் ஏகோபித்து உழைக்கக்கூடியவர்களாகவே இருக்கவேண்டும்.

## இப்படையில் ஏராளமான வீரர்கள் சேர்ந்திருக்கிறர்கள்.

குடைப்படை வீரர்கள் விமானப்படையிலும், சைனியத்திலும் பயிற்சி பெறுகிறர்கள். ஆனல் அவர்கள் சைனியத்தில் சேர்ந்தவர்கள்தான். அவர் களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் தேவையான விமானங்களை பிரிடிஷ் விமானப் படை லப்ளை செய்கிறது. குண்டுகள் போடுவதற்குப் பதிலாக குடைப்படை யினரை [illegible] கீழே இறக்குவதற்கு விமானிகளுக்கும் அவ்விமானப் படை பயிற்சி அளிக்கிறது. சைனியம்தான் இப்படைக்கு லாயக்கான ஆட்களைத் [illegible] இப்படையில் சேருவதற்கு ஆட்கள் ஏராளமாக முன் வருகிறர்கள். [illegible] வேண்டிய ஆயுதங்களை சைனியம்தான் லப்ளை செய்கிறது. தரையில் திறமையுடன் சண்டைசெய்வதற்கு லாயக்காக அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும்.

இவர்களுக்கு அளிக்கப்படும் ஆரம்பப் பயிற்சி தரைப்படை வீரர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியைப்போலிருக்கிறது. உண்மையில் இந்தக் குடைப்படை வீரர்களும் தரைப்படை வீரர்களைப்போல் பிரிடிஷ் சைனியத்தில் உயர்தர வீரர்கள் என்ற பெயரையும் பெற்றிருக்கிறர்கள். தரைப்பயிற்சி மிகவும் கடின மாகவும், விடா முயற்சியுடனும் செய்யவேண்டியதாக இருக்கிறது. அநேக மாதங்கள்வரை செவ்வையாகத் தரைப்பயிற்சி பெருதவர்கள் விமானங்களில் ஏறிச்செல்ல அநுமதிக்கப்படமாட்டார்கள்.

இவர்களுக்கு அளிக்கும் பயிற்சியில் முதல்படி மிகவும் கடுமையான பாட மாக இருக்கிறது. பிற்பட்டு ஆயுதமில்லாமல் கொஞ்சகாலம்வரை குஸ்திபோடும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வித பயிற்சியில் விதி விலக்கில்லாமல், ஒருவர் மற்றொருவரை கொலைசெய்யவேண்டிய எண்ணத்துடன் போடப்படுவதாக ஒருவர் விவரித்தார்.

பூரண முஸ்தீப்புடன் அதிவேகமாக அணிவகுப்பில் போகும்படி நிர்ப்பந்திக் கப்படுகிறர்கள். முஸ்தீப்பில் அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு துப்பாக்கி, சிறு பீரங்கிகளுக்குப்போடும் வெடிமருந்து, தரைவிரிப்பு, ஜலம் வைத்துக்கொள்ள ஒரு போத்தல், சாப்பாட்டுத் தட்டு, கத்தி, கரண்டி, இடுக்கி, க்ஷவரம் செய்வ தற்கான ஆயுதம் இன்னும் மற்றவைகளும் எடுத்துச் செல்லவேண்டும். அவர் களின் தலையில் போட்டிருக்கும் குல்லாய்கள் மிருதுவாக இருக்கச் செய்திருப்ப தால் அவர்கள் கீழிறங்கும்போது தரையில் மோதுண்டால் யாதொரு கெடுதி யும் ஏற்படாது. மேலும் அவர்கள் ஜோடுகளின் அடிபாகம் பூராவும் கிரேப் ரப்பரால் செய்யப்பட்டிருக்கிறது. அதனல் கீழே குதிக்கும்போது ஏற்படும் அதிர்ச்சியைத் தாக்கிக்கொள்ளும். அவர்கள் கீழிறங்கும்போது ஆயுதங்கள் ஒன்றும் விமானத்தில் பிடித்துக்கொள்ளாமலிருப்பதற்காக மேலே அவைகளை

மூடுவதற்காக ஒரு நீளமான அங்கியைத் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேல் குடையின் கயிறுகளையும் அவர்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

## இராக்காலங்களில் அணிவகுப்பில் செல்வதற்கான பயிற்சி.

இரவில் அப்படையினர் மேற்சொல்லியபடி ஆயுதங்களுடனும், கனமான முஸ்தீப்புடனும் நீண்ட தூரம்வரை அணிவகுப்பில் செல்லுகையில் அவர்கள் ஓட்டமும், நடையுமாக மாறி மாறி செல்லுகிறார்கள். அவர்கள் இவ்விதம் நடந்து பழகி சிலவாரங்களுக்குப் பிறகு மூன்று மணி அவகாசத்திற்குள் 20 மைல் தூரம் நடந்து செல்லும் சக்தி அவர்களுக்குத் தானாக ஏற்பட்டுவிடுகிறது. இம்மாதிரி அவர்கள் தேகம் கடினமாக ஆவதற்குள் அவர்கள் நெடுநேரம் வரை ஆகாரமில்லாமலும், எல்லாவித தோஷ்ண நிலையிலும், தரைவிரிப்பை மட்டில் போட்டுக் கொண்டு தூங்க வேண்டியிருக்கிறது. இவையெல்லாம் அவர்களைக் கண்டிப்பாக இடப்படுத்தச் செய்கிறது.

சைனியத்தில் சிறு உத்தியோகஸ்தர் ஒருவர் எனக்குப் பரிச்சயமுண்டு. இதற்குமுன் அவர் லண்டன் ராணுவ இலாகாஸ்டோரில் உதவி மானேஜராக இருந்திருக்கிறார். அக்காலங்களில் சுமார் வருஷம் ஒன்றுக்கு 2,000 பவுன் சம்பாதித்து வந்தார். செல்வமிருந்திருப்பதால் வாழ்க்கையை மேன்மையாக நடத்தலாம். ஆனால் அது என்ன? சோம்பேரி வாழ்க்கையே தான். அன்றொரு நாள் பந்தயத்திற்காக ஒருவாரம் வரை சாப்பிடாமல் பட்டினி கிடந்தார். பிற்பட்டு தேகப்பயிற்சி போதகருடன் தமாஷாக குத்துச் சண்டை போட்டார். அதில் விசேஷமென்னவென்றால் அவரைத் தோற்கடித்துவிட்டார்.

இவ்வித ஆரம்பப் பயிற்சியில் அவர்கள் தேசப்படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுகிறார்கள். இன்னும் அயல்நாட்டு பாஷைகளையும், முக்கியமாக ஜெர்மன், இதாலிய பாஷைகளை அவர்கள் கற்றுக் கொள்ளுகிறார்கள். மேலும் எதிரிகளின் ஆயுதங்களையும், யந்திரவண்டிகளையும் உபயோகிக்க அவர்கள் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஏனென்றால் எதிரிகளுக்குச் சொந்தமான வண்டிகளையோ, ஆயுதங்களையோ அவர்கள் கைப்பற்றிக்கொண்டால் அவைகளைத் தங்களுக்கு சாதகமாக உபயோகப்படுத்துவதற்காக அதைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ராஜத் துரோகம் செய்யும்படி தூண்டவும் அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. பெரிய கட்டடங்கள், பாலங்கள் அவைகளைத் தகர்ப்பதற்காக பெரிய வெடிகள், இன்னும் அதைப்போல சக்தி வாய்ந்த மற்றவைகளையும் உபயோகிக்கக் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இவ்விதம் மிகவும் கஷ்டப்பட்டு அதிகமாக தரைப் பயிற்சிபெற்ற பிறகு தான், குடைகளைக்கொண்டு விமானத்திலிருந்து இறங்குவதற்குத் தயாராகிறார்கள்.

முதல் பயிற்சியில் அவர்கள் 10 அடி உயர சுவற்றிலிருந்து குதிக்கிறார்கள். ஏனென்றால் குடையை வைத்துக்கொண்டு இறங்குவது 10 அடி சுவற்றிலிருந்து குதிப்பது போலாகும். இந்தப் பயிற்சி அளிக்கிறவர்கள் முந்தி தேகப்பயிற்சி பெற்றவர்களும், குஸ்தி போடுகிறவர்களும் தான். அவர்கள் கீழே விழுந்தால் காயமடையாமல் இருப்பதற்கான வழியைப்பற்றி சிந்தனைசெய்து காலங்கழித்து வந்திருக்கிறார்கள்.

## உயரத்திலிருந்து குதிக்கக் கற்றுக் கொள்ளுதல்.

தேகப்பயிற்சிசாலையில் உயரத்தாவுவதற்கு இப்படையில் சேர்ந்த ஒவ்வொருவரும் பல வாரங்கள் வரை பழகிக் கொள்ளவேண்டும். இவ்விதம் பயிலுவதற்கு ஆரம்பித்து அநேக மாதங்கள் கழித்துத்தான் விமானத்தில் ஏறிச் செல்லுகிறார்கள். முதன் முதலில் அவர்கள் விரிக்கப்பட்ட குடையை வைத்துக் கொண்டு இதற்காக அமைக்கப்பட்ட கோபுரத்திலிருந்து கீழே குதிப்பதற்கு வேண்டிய விஷயங்கள் யாவும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதாவது விரியும் குடையிலுள்ள கயிறுகளை இழுப்பதுமுதல், கீழே இறங்க தாவிக் குதிக்கும் வரையில் எல்லாவற்றையும் நன்றாகப் பழகிக் கொள்ள கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆகையால் மணிக்கு 250 மைல் வீதம் பறக்கும் விமானத்திலிருந்து கீழே இறக்கப்பட்டவுடன், குடையில் கட்டப்பட்டுள்ள கயிறுகளின் விதானங்

களை அறிந்துகொண்டு குடைகளின் உதவியால் கீழே குதிப்பதற்கு அவர்களுக்குத் தைரியம் உண்டாகிவிடுகிறது.

உயரமான கோபுரத்திலிருந்து குடையை வைத்துக்கொண்டு குதிப்பதைப் பயிற்சி பெற்றுக்கொள்ளும்போழுது ஒவ்வொரு குடைப்படை வீரனும், அந்தக் குடையை நிதானப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டிய தந்திரம் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளுகிறான். அவையாவன:—குடையின் கயிறுகளைத் தோது போல் பார்த்து இழுத்துக்கொள்ளுவது, குடையில் இருக்கும் காற்றை வெளியே போகச்செய்ய சுருக்கமில்லாமல் கயிறுகளைப் பிடித்திழுப்பது, தரையில் வந்த வுடன் பலத்த காற்றின் வேகத்தினால், தரை நெடுக அவனை இழுத்துப் போக விடாமல் தடுத்துக்கொள்ளுவது, குடையைத் தன்பேரில் பூட்டப்பட்டிருக்கும் கயிறுகளிலிருந்து க்ஷணநேரத்தில் விடுவித்துக்கொள்ளுவது இன்னும் இவை போன்றவைகள் தான். கோபுரத்திலிருந்து குடையைக்கொண்டு கீழே இறங்கும் போது, கீழேயிருந்து போதகாசிரியர்கள் அவர்கள் வசமுள்ள உரத்துப் பேசும் கருவியைக்கொண்டு அவர்கள் செய்யவேண்டிய முறைகளைச் சொல்லுவார்கள்.

## பச்சை வெளிச்சம் அறிகுறி.

வீரர்களுக்கு பறந்து செல்லும் விமானத்திலிருந்து முதன் முதலில் குதிப்பது பெரிய திகிலை உண்டாக்கும். வீரர்கள் தங்கள் சகாக்களுடன் விமானத்தில் ஏறி உட்கார்ந்துகொள்ளுகிறார்கள். விமானம் உயரப்பறந்தவுடன் விமானத்தின் அடிபாகத்தில் இருக்கும் ஒரு பெரிய துவாரத்தைச் சுற்றிலும் வட்டமாக உட்கார்ந்துகொள்ளுகிறார்கள். கால்களை கீழே தொங்கவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். விமானத்தில் தோன்றும் சிவப்பு வெளிச்சத்தையே கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவ்வெளிச்சம் மாறி பச்சை வெளிச்சம் தோன்றினால், அவர்கள் கீழே குதிப்பதற்கான சமயம் வந்துவிட்டது என்பதற்கு ஒரு அடையாளம். மேலும் இவ்விதம் சரியான சமயத்தில் வெளிச்சத்தை மாற்றிப்போடுவதற்கு விமானிக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதாக விமானி தெரிந்துகொண்டு, அவன் பச்சை வெளிச்சத்தை அடிப்பான். [illegible] ஒன்றன்பின் ஒன்றாக வெளியே குதிக்கிறார்கள். அவர்கள் குறித்த இடத்திற்கு அருகாமையிலும், அவர்கள் சிதறி இறங்காமல் கூடுமான வரையில் சேகரமாக ஒரே இடத்திலும் இறங்கினால், குடைப்படை வீரர்களை இறங்கச் செய்வது பயனளிக்கும். அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு விநாடிக்கு ஒருவராக கீழே குதித்துவிடுகிறார்கள். விமானத்தில் உள்பாகத்திலிருக்கும் சூத்திரக் கயிறு அவர்களின் குடைகளைத் தானாகவே விரித்துக் கொடுக்கும்.

இன்னும் அவர்களுக்கு வேண்டிய மற்ற முஸ்தீப்புகளைத் தனித்தனியாக பல நிறமுள்ள குடை விமானங்களில் கட்டி கீழே போடப்படுகின்றன. அவர்கள் தரைக்குவந்த பிறகும், அவர்கள் சாமான்களும் வந்தபிறகும் வெகு ஜல்தியில் யுத்தத்திற்கு லாயக்காக அணிவகுத்துக்கொள்ளுகிறார்கள். அந்த சமயத்தில் தான் அவர்கள் தோற்கடிக்கப்படும் நிலைமையில் இருப்பார்கள்.

## குடையிலிறங்கும் பயிற்சி ருஷ்யர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

கிரேட் பிரிடனில் குடைப் படையினரை உபயோகப்படுத்துவதைப்பற்றி அதிகமான பிரஸ்தாபம் கிடையாது. வட பிரான்ஸில் நடந்த சம்பவத்தில் பிரிடனின் குடைப் படையினர் உபயோகப்படுத்தப்பட்டதாக சமீபத்தில் வெளிவந்த சமாசாரத்தில் தெரியவந்தது. ஆனால் ருஷ்யக் குடைப்படைகளும், ஜெர்மன் குடைப்படைகளும் அதிக வேலைகள் செய்திருப்பதாகப் பிரஸ்தாபம் வந்திருக்கிறது.

ருஷ்யர்கள் இப்பயிற்சியை பத்து வருஷங்களுக்குமுன் ஆரம்பித்தார்கள். அப்பொழுது குடைப்படை வீரர்களின் படங்களை உலகம் பூராவிலும் காட்டப்பட்டது. அப்படங்களில் நூற்றுக்கணக்கான ருஷ்யத் துருப்புகள் குதிப்பதும், இதற்காகக் கட்டப்பட்டிருக்கும் கோபுரங்களிலிருந்து பொதுமக்கள் குடைகளை வைத்துக்கொண்டு குதிப்பதில் பயிற்சி பெறுவதும் தெரிந்தது. ஆனால்,

# விளம்பரம்.

---

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

## உதவிப்படை

என்ற ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

69405

பொன்னமராவதி வலம்புரி டாக்கியில்

மே மீ 15௳ முதல் 18௳ முடிய காண்பிக்கப்படும்.

இப்படத்தை

புதுக்கோட்டை

யுத்த அறிக்கை நிலயம்

பொது ஜனங்களுக்கு சேபார்த

செய்கிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—11-5-42.